# ஹர்ஷர் காலத்து வட இந்தியா

ந. க. மங்கள முருகேசன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—758

# ஹர்ஷர் காலத்து வட இந்தியா

(மேல் பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்
ந. க. மங்கள முருகேசன், எம்.ஏ.,
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

Lக்: 303 — 329

First Edition—August, 1977
Number of Copies—1,000

T.N.T.B.S. (C.P.) No. 758

© Government of Tamilnadu

**NORTH INDIA IN THE AGE OF HARSHA**

N. K. MANGALA MURUGESAN

Price Rs. 14-60

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*
Giridhar Art Printers
17 & 19, Badrian St.,
Madras-600 001.

# பதிப்புரை

ஹர்ஷர் காலத்து வட இந்தியா என்ற இந் நூல், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் 758ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 793 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக-நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப் படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வரலாற்று ஆதாரங்கள் | .... | 1 |
| 2. | அரசியல் பின்னணியும் குப்தர்களின் வீழ்ச்சியும் | | 26 |
| 3. | ஹர்ஷரின் முன்னோர்கள் | .... | 81 |
| 4. | ஹர்ஷரின் பிறப்பும், இளமைக் கால வாழ்க்கையும் | | 102 |
| 5. | ஹர்ஷ வர்த்தனரின் சகாப்தம் | .... | 127 |
| 6. | ஹர்ஷரின் படையெடுப்புகள் | .... | 143 |
| 7 | ஹர்ஷப் பேரரசின் பரப்பு | .... | 180 |
| 8. | சீன தேசத்துடன் ஹர்ஷரின் உறவு | .... | 205 |
| 9. | ஹர்ஷரின் ஆட்சி முறை | .... | 211 |
| 10. | இலக்கியப் பணிகளில் ஹர்ஷரின் பங்கு | .... | 266 |
| 11. | சமூக வாழ்க்கையும் பொருளாதார வாழ்க்கையும் | | 288 |
| 12. | கல்வி, மொழி, இலக்கியம் | .... | 339 |
| 13. | ஹர்ஷரின் காலக் கலை | .... | 360 |
| 14. | சமயமும் கோட்பாடும் | .... | 366 |
| 15. | ஹர்ஷர்-ஒரு மதிப்பீடு | .... | 399 |
| | ஹர்ஷர் ஆட்சிக்காலச் சிறப்பு நிகழ்ச்சிகள் | .... | 403 |
| | மேற்கோள் நூற்பட்டியல் | .... | 404 |
| | கலைச்சொற்கள் | .... | 408 |

# 1. வரலாற்று ஆதாரங்கள்

ஒரு நாட்டினுடைய வரலாற்றை மட்டுமன்றிப் பேரரசர் ஹர்ஷர் முதலானேரின் வரலாற்றையும் அறிந்துகொள்ள ஆதாரங்கள் மிக இன்றியமையாதன. அவற்றிலிருந்துதாம் நாம் வரலாற்றை உருவாக்குகிறேம். ஆம், வரலாற்றை எழுதவில்லை; உருவாக்குகிறேம். ஆகவே, அந்த ஆதாரங்கள் யாவை எனத் தெரிந்துகொள்வதற்கு முன்னர்ச் சில அடிப்படை உண்மைகளை மனத்தில் கொள்ளவேண்டும். எந்த ஒரு வரலாறும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டதே. எனினும், மேலைநாட்டு வரலாற்றுக்கு உதவும் ஆதாரங்களுக்கும், இந்திய வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்களுக்கும் அடிப்படை வேறுபாடு உள்ளது.

இந்திய வரலாற்று ஆதாரங்களின் அடிப்படை நோக்கம் வரலாற்றுக் கண்ணேட்டம் அன்று. ஆனல், மேலைநாட்டு ஆதாரங்கள் வரலாற்றுக் கண்ணேட்டத்துடன் வரலாற்றை அறிவிக்கும் வகையில் அமைக்கப்பட்டவை. மேற்கூறப்பட்ட காரணத்தினல்தான் இந்திய வரலாற்றிற்கு உதவும் எந்த ஆதாரத்தையும் நாம் முழுமையாக நம்புவதில்லை. வரலாற்று ஆதாரங்களை ஆராய்ந்தோர், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மாறுபாடு கொண்டனர். எதனையும் முடிந்த தீர்க்கமான முடிவு என்று கருத முடியாது.

ஹர்ஷர் காலத்து வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்களை இலக்கியச் சான்றுகள், தொல்பொருள் ஆய்வு, அயல் நாட்டவரின் குறிப்புகள் என்ற தலைப்புகளில் பகுத்துக் காணலாம். ஹர்ஷர் காலத்து வரலாற்றுச் சான்றுகள் ஏற்கத் தகுந்தனவாதலாலும், அவை அளவில் அதிகமாக இருப்பதாலும் ஹர்ஷரின் வரலாற்றை அறிய முடிகிறது.

## இலக்கியச் சான்றுகள்

ஹர்ஷரின் வரலாற்றை நன்கு அறியப் பெரிதும் நமக்குத் துணையிருப்பவை இலக்கியச் சான்றுகளே. ஹர்ஷரின் காலத்துக்கு முற்பட்ட குப்தர்களின் காலத்தில் ஏற்பட்டிருந்த

இலக்கிய வளர்ச்சி நிலை ஹர்ஷரின் காலத்திலும் தொடர்ந்தது. இலக்கியப் பயிர் செழித்து வளர்ந்தது, ஓரளவிற்கு வரலாற்றுச் சான்றுக்கு உதவியது.

இலக்கியப் படைப்புகளின் நோக்கம் வரலாற்றை விளக்குவதன்று. எனினும், அவை கதைப்போக்கில் வரலாற்று உண்மைகளைத் தெளிவாக எடுத்துரைக்காவிடினும், எப்படியும் அறியச் செய்துவிடுகின்றன. இலக்கியச் சான்றுகளிலிருந்து வரலாற்றுக்கு இன்றியமையாத பயனுள்ள செய்திகளை நாம் அறிகிறோம். ஆகவே, அவற்றை நமக்கு உதவும் சான்றுகளாகக் கொள்வோம்.

ஹர்ஷரின் காலத்திற்கு முன் குப்தர்களின் காலத்தில் வெளியான இலக்கியப் படைப்புகள் ஹர்ஷவர்த்தனரின் அரசியல் வரலாற்றுக்கு மட்டுமன்றிச் சமய, பொருளாதார வரலாற்றுக்கும் துணைபுரிகின்றன.

இலக்கியச் சான்றுகளை வரலாற்றுக்கு அடிப்படையாகக் கொள்வதில் இடையூறு ஒன்றும் உள்ளது. இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளவற்றை நன்கு அலசி ஆராய்ந்து, வடிகட்டி உண்மையைச் சலித்து எடுக்க வேண்டும். எது கற்பனை? எது வரலாறு, என்று கண்டறிதல் கடினமான செயலாகும். இலக்கிய வர்ணனைகளில் மிகையான புகழ்ச்சி உரைகளும் காணப்படும். அவை உண்மையான புகழ்ச்சி உரையா, மிகையானவையா என்று கண்டறியவேண்டும். இலக்கிய ஆதாரங்களுக்கு உண்மையான வரலாற்றுச் சிறப்புத் தன்மை உண்டா, இல்லையா, என்பதற்கு இவ்வளவு பீடிகையினை நாம் போடுவதற்குக் காரணம், ஹர்ஷரின் கால இலக்கியங்களே அவரைப் பற்றிய பெரும்பாலான வரலாற்றுச் செய்திகளை நமக்கு அளிப்பதுதான்.

தண்டின் என்பவர் எழுதிய **தசகுமார சரிதம்** என்ற நூல் குறிப்பிடத்தக்க ஒன்று. ஹர்ஷருடைய ஆட்சிக் காலத்திற்குச் சில ஆண்டுகளுக்கு முன் இது எழுதப்பட்டது. பாணர், **ஹர்ஷ சரிதம்** என்ற ஹர்ஷரின் வரலாற்றை விளக்கும் நூலையும், **காதம்பரி** என்ற மற்றொரு நூலையும் படைத்தார். அவற்றைத் தவிரச் **சாண்டி சாதகா, பார்வதி பரிணயம்** முதலானவற்றையும் படைத்தவர் அவரே என்று கருதப்படுகிறார். **'வடமொழி வித்தகர்'** எனப் பாணர் புகழ்ந்துரைக்கப்படுகிறார். பாணரின் ஹர்ஷ சரிதத்தைப் படிப்போரே அவருடைய புலமையை அறிந்து உரைத்திட இயலும்.

ஹர்ஷரின் இலக்கியப் பணி என்ற தலைப்பில் பாணருடைய பங்கு என்ன என்பதைக் காண இருக்கிறோம். இருப்பினும், வரலாற்றுக்கு ஆதாரம் என்ற வகையில் அவர்தம் நூல்கள் எந்த அளவிற்கு உதவக்கூடியன என்பதையும் அறிதல் வேண்டும். பாணருடைய நூல்களில் எதையும் ஆராய்ந்து உற்றுநோக்கு கின்ற திறனாய்வுப் பார்வையும், மக்களுடன் கலந்து உறவாடும் ஆர்வமும் காணப்படுகின்றன. அவை மூலமாகத்தான் அவர் செய்திகளைத் திரட்டியிருக்க வேண்டும். அரசவைப் பிரதிநிதி களின் உரையாடல்களிலிருந்தும் அவர் தமக்கு வேண்டிய வற்றைப் பெற்றுக்கொண்டார்.

ஹர்ஷர் பாணரை ஆதரித்துப் போற்றியவர். ஹர்ஷரின் அவையில் பாணர் பதவி வகித்துவந்தபோதிலும் அறிவாற்றலை யும், அஞ்சாமையையும் அவர் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். பாணருடைய குலம் வாத்சாயண குலம் எனப்படுகிறது. அவருடைய குல முன்னோரான வத்சா என்பவரால் அவ்வாறு அழைக்கப்படுகிறது. பாணர் பிராமண வகுப்பில் பிறந்தவர். இளமையில் பெற்றோரை இழந்தார். பதினான்கு வயதுவரை யிலும் அவருடைய தந்தை உயிருடன் இருந்தமையால் மகனுக்குக் குருகுலமுறைக் கல்வியைப் பெற வழிகாட்டினார். அதன்பின் வேளாண்மைத் தொழில் பாணரைக் கவர்ந்தது.

பாணர் அதனால் பலதரப்பட்டவர்களுடன் பழகிக் களித்தார். அன்றைய நாளில் இருந்த மண்டலங்கள், கோஷ்டங்கள் பாணருடைய அறிவுப் பசிக்குத் தீனியாக விளங்கின. அவற்றைப் பின்னர்க் காணுவோம். அவற்றில் அறிவு விசாரணை நடைபெற்றது; இலக்கிய விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன. பாணர் பிராமண குலத்தவராகப் பிறந்திருந்தபோதிலும், கவிஞர்கள், கருமான், முரசறைவோர், செப்பேடு எழுதுவோர், பணியாள்கள் ஆகியோரின் நட்பினையும், பிராமண இளைஞர்கள், கற்றறிந்தோர், அரசப்பிரதிநிதிகள், அரசர் ஆகியோருடன் பழகும் வாய்ப்பினை யும் பெற்றிருந்தமையால் அவருக்கு அறிவுத்தெளிவு ஏற்பட்டது.

ஹர்ஷரின் வரலாற்றுக்குப் பாணர் எந்த அளவிற்கு உதவினார் என்று ஆராய்கின்ற நமக்கு மேலே காணப்பட்ட குறிப்புகள் நாம் கொண்டுள்ள கருத்து ஒன்றினை மெய்ப்பிக்க உதவுகின்றன. பாணரின் வர்ணனைகள் படிக்கப் படிக்கச் சுவை கூட்டுவன. அக்கால வழக்கப்படி அலங்காரமாகச் சொற்களை அடுக்கி, அழகிய

இலக்கியமாக மட்டுமன்றி வரலாற்றுக் காவியமாகவும் அதனை உருவாக்கியுள்ளார். ஹர்ஷரின் உருவ அழகு பல பக்கங்களில் விளக்கி எழுதப்பட்டுள்ளபோதிலும், அவருடைய உருவ அமைப்பைப் புரிந்துகொள்ள இயலுமா என்பது ஐயத்திற்குரியதே. பாணர் வாழ்ந்த காலத்தில் இலக்கியத்தில் அத்தகைய போக்குக் காணப்பட்டமையாலேதான், பாணரும் அதையொட்டி மிகையாகக் கூறினர். எனினும், அரசரின் உடை, அன்றாடப் பழக்கங்கள் முதலான செய்திகள் நம்பத் தகுந்தவையே யாகும். அரசரைப் பற்றி மட்டுமல்லாமல் அரசு அலுவலர்களான 'நிர்கதா' முதலானவர்களின் தோற்றம், உடை முதலியவற்றையும் அவர் எடுத்துக்காட்டுகிறார்.

ஹர்ஷ சரிதத்தின் பெரும்பகுதியில் ஷர்ஷரின் இளமைக்கால வாழ்க்கை, அவர் அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட சூழ்நிலை முதலானவை விளக்கப்படுகின்றன. அவற்றைக் குறித்த செய்திகளைப் பாணர் விளக்கியபோதிலும் உண்மை ஒன்றை இங்கே எடுத்துக் கூற வேண்டும். ஹர்ஷர் அக் காலத்தில் பாணருடன் தொடர்புகொண்டிருக்கவில்லை. அப்படியானால் அவர் எப்படி எழுதினர்? இளமையில் அவர் பல்லோருடனும் பழகியபோது கிடைத்த அனுபவங்கள்தாம் அவருக்கு உதவின. அரசவைப் பிரதிநிதிகள் வாயிலாக ஹர்ஷவர்த்தனரின் பதவியேற்பு, காமரூபத் தொடர்பு, தங்கையைத் தேடிச் சென்றது முதலான செய்திகளைத் (பின்னர் விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன) தெரிந்துகொண்டார்.

ஹர்ஷ சரிதத்தில் ஹர்ஷரின் குணநலன்கள், சாதனைகள், சமுதாய வாழ்க்கை ஆகியவை குறித்த தெளிவான விளக்கத்தினைப்பெறுகிறோம். பாணர் தாம் சொல்லுவனவற்றைச் சுவைபடக் கூறுகிறார். அவர் 'சொல்வல்லாராக' விளங்குகிறார்எனினும், தம்மைப் போற்றிய ஹர்ஷர் தவறாகக் கொள்ளாத வகையில் சொல்லவேண்டிய செய்திகளைச் சொல்கிறார். 'ஹர்ஷரைச் செல்வத் தேவதை அணைத்துக்கொண்டாள். எனவே, ஹர்ஷர் அரியணையினை ஏற்கும்படி வற்புறுத்தப்பட்டார்' எனக் கன்னேசி அரசவைப் பிரதிநிதிகளிடம் பண்டி ஹர்ஷரை அரசராக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிய நிகழ்ச்சியைத் தெளிவுபடுத்துகிறார். காமரூப அரசருடைய நட்பு எந்த அளவிற்கு ஹர்ஷருக்கு உதவிற்று என்பதனை எடுத்துக்காட்ட, ஹர்ஷ சரிதம் துணைபுரிகிறது. அவ் விருவருக்கிடையே நட்பு ஏற்பட்ட சூழ்நிலையினை ஹர்ஷரின் பெருமைக்கு இழிவு ஏற்பட்டுவிடாதவாறு எடுத்துக் காட்டுகிறார்.

பாணரின் 'ஹர்ஷ சரிதம்' ஹர்ஷரின் கால அரசியல் வரலாற்றிற்கு மட்டுமல்லாது, சமுதாய, பொருளாதார, சமய, கல்வி வரலாற்றை அறியவும் உதவுகிறது. அரண்மனே, அரசரின் முகாம்கள், விந்தியமலைப் பகுதி வாழ்க்கை, வனப்புற மக்களின் வாழ்க்கை முதலானவற்றை விளக்கவும் அவர் முயன்றுள்ளார். பாணரின் குறிப்புகளில் ஊடும் பாவுமாக நகைச்சுவை இழையோடுவதைக் காணலாம். அக் கால அன்றாட வாழ்க்கை நடைமுறைகளை அவர் எடுத்துக்காட்டுகிறார். குடிமக்கள் அரசரைக் கண்டித்து 'அரசர் எங்கே?', 'அரசராக இருக்க அவருக்கு என்ன தகுதி?' என்று கேட்ட செய்தியையும் அவர் மறைக்கவில்லை. அதே நேரத்தில் 'அரசரைத் தர்மத்தின் மறு பிறப்பு' என்ற செய்தியையும் உரைக்காமல் விடவில்லை. அஞ்சாமை, துணிவுடைமை நிலனுள்பவருக்கு மட்டுமன்றிப் புலவர்க்கும் வேண்டுமென்பதற்குப் பாணர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறார்.

பாணருடைய காதம்பரி சமுதாய வாழ்வினை எடுத்துக் காட்டும் நூல் எனலாம். முகுடதாடிதகா, பார்வதி பரிணயம் ஆகியவையும் வரலாற்றுக்கு உதவுகின்றன. அவற்றின் வாயிலாக ஹர்ஷரின் காலக் கல்வி நிலை, சமுதாய வாழ்வுமுறை முதலியனவும் வெளிப்படுகின்றன. அந்தந்தத் தலைப்புகளில் அவை அளிக்கின்ற செய்திகளைப் பின்னர் வரும் நூற்பகுதியில் காண்போம்.

பாணரின் ஹர்ஷ சரிதம் மட்டுமன்றி, ஹர்ஷருடைய நாடகங்களான இரத்னவளி, பிரியதர்சிகா, நாகானந்தம் முதலியனவும் குறிப்பிடத்தக்கவை. அவற்றில் முதல் இரண்டும் அரசியலை விளக்கும் நூல்களாகும். ஹர்ஷர் தாமே அவற்றை எழுதினரா, இல்லையா என்ற விவாதம் நன்கு ஆராயப்பட்டு விடை காணப்பட்டுள்ளது.[1] ஹர்ஷர் அந்த நாடகங்களில் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கச் செய்துள்ளார். நாகானந்தம் பௌத்தக் கருத்துகளை விளக்குவதற்காகப் படைக்கப்பட்ட நூலாகும். முதல் இரண்டு நாடகங்களில் காணப்படாத பௌத்தத்தைச் சிறப்பிக்கும் நிலை, ஹர்ஷர் பௌத்த சமயத்தவராக மாறினர் என்பதை எடுத்துக்காட்ட வல்ல ஆதாரமாகும். பௌத்த விஹாரங்களைப் பற்றியும், அவற்றில் காணப்பட்ட வாழ்க்கை நிலையையும் அந் நூலில் காணலாம்.

[1] இந்நூலில் 'இலக்கியப் பணிகளில் ஹர்ஷரின் பங்கு'

'இந்திய மரபு' என்ற மரபுவழிநிலையானது சமய வாழ்விலும், சமுதாய வாழ்விலும் தொடர்ந்தது. ஸ்மிருதி, ஸ்ருதி நூல்களும், அர்த்த சாஸ்திரமும் ஹர்ஷ வர்த்தனர் காலத்திலும் பின்பற்றப் பட்டன. கி. பி. 400-லிருந்து கி.பி. 800 வரையுள்ள காலத்தில் தோன்றிய **காமாந்தக நீதி சாரம்**, காத்யாயனர், தேவலா ஆகியோரின் உரைகள், நாரத ஸ்மிருதியின் அசஹாயாவின் உரையும் அக் காலத்திய சமுதாய, அரசியல் வாழ்வினை விளக்கு கின்ற சிறப்பு மிக்க நூல்களாகும்.

ஆறும் நூற்றுண்டின் பிற்பகுதியில் நிலவிய அரசியல் சூழ் நிலைகளை அறியப் பல்வேறு இலக்கிய ஆதாரங்களைத் துணைக் கொள்கிறேம். **மஞ்சு ஸ்ரீ மூலகல்பா** என்னும் நூலில் வங்க அரசன் சசாங்கனின் வாழ்க்கைபற்றிய விளக்கங்களும், கௌடாவில் நாகராஜா என்பவரின் ஆட்சிபற்றிய குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அந் நூலில் சசாங்கனின் இறப்பிற்குப் பின் கௌடா பிரிக்கப்பட்டு ஆற்றல் இழந்த நிலையும் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவில், இராஜ்யவர்த்தனர் (ஹர்ஷரின் அண்ணன்) சசாங்கனைப் போன்று ஆற்றல் மிக்கவர் எனக் குறிப்பிடப்படுகிறர். அந் நூலில் சசாங்கன் 'சோமா' எனவும், இராஜ்யவர்த்தனர் 'ரா' எனவும், ஹர்ஷர் 'ஹா' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பாணருடைய ஹர்ஷ சரிதத்தினை ஒப்பிட்டு நோக்குவதற்கு மஞ்சு ஸ்ரீ மூலகல்பா உதவுகின்றது. ஹர்ஷ சரிதத்தின் கடைசிப் பகுதிகளில் பாணர், ஹர்ஷவர்த்தனர் படைகளை நடத்திச்செல்வதை விளக்குகையில் காணப்படும் உவமைகள் அப்பொழுதுதான் ஹர்ஷர் ஒரு பெரும்போரில் ஈடுபட்டு, வெற்றி பெற்றதை மறைமுகமாகக் குறிப்பிட்டன. 'ஹர்ஷரால் வெல்லப்பட்ட சோமா தம் நாடான கௌடாவை விட்டு, வெளியேற முடியாதபடி தடுக்கப்பட்டார் என மஞ்சு ஸ்ரீ மூல கல்பாவிலும் குறிப்பிட்டிருப்பது, பாணரின் ஹர்ஷ சரிதம் வலு மிக்க வரலாற்று ஆதாரங்களைக் கொண்டது என்பதை மெய்ப்பிக்கிறது.

சசாங்கன் மகதத்தைத் திரும்பக் கைப்பற்றியதையும், ஒரு மாதத்திற்கு மேலாகக் கடுமையான நோயினால் அவதியுற்று இறந்ததையும், புண்டர வர்த்தனருடன் சசாங்கன் கொண்டிருந்த தொடர்பினையும் அந் நூல் எடுத்துக்காட்டுகிறது. யுவாங் சுவாங் கின் குறிப்புகளோடு மேலே குறித்துள்ள நூலின் செய்திகளை ஒப்பிடும்போது அந் நூல் வரலாற்றுக்கு எத்துணை உதவியான து

என்பது தெளிவாகிறது. சசாங்கனின் ஆட்சி பதினேழு ஆண்டுகளும், சில வாரங்களும் நீடித்தது எனக் குறிப்பிடப்பட்டிருப்பதும் வரலாற்றுக்கு உதவுவதே ஆகும்.

சசாங்கனின் வாழ்க்கை ஹர்ஷவர்த்தனருடன் தொடர்பு உடையது. அத் தொடர்பினை நமக்கு எடுத்துக்காட்டும் ஆதாரமாக மஞ்சு ஸ்ரீ மூல கல்பா என்ற நூல் விளங்குகிறது. **கௌமுதி மகோத்சவம்** என்ற இலக்கியமும் நாம் காணுகின்ற வரலாற்றுக் காலத்திற்கு அடிப்படையான செய்திகளை அளிக்கின்றது. ஆக, அனைத்து நூல்களையும் பட்டியல் போட்டுக் காட்டுவது இயலாதாகையால் குறிப்பிட்ட சில இங்கே சுட்டிக்காட்டப்பட்டன.

## தொல்பொருள் ஆய்வுகள்

தொல்பொருள் ஆய்வுகளை மூன்று வகையினவாகப் பிரிக்கலாம். அவை முறையே (1) நினைவுச் சின்னங்கள், (2) பட்டயங்கள், (3) காசுகள் என்பன ஆகும். தொல் பொருள் ஆய்வு மிகத் தொன்மையான வரலாற்றுக்கான வரலாற்று ஆதாரங்களை எடுத்துக்காட்டுகின்றது. இலக்கியங்களில் காணப்படும் வரலாற்று உண்மை மெய்ப்பிக்கப்படத் தொல்பொருள் ஆய்வு இன்றியமையாத ஒன்று.

### நினைவுச் சின்னங்கள்

ஹர்ஷரின் காலத்திய கலைப்படைப்புகளைத் தொல்பொருள் ஆய்வாளர் அரிதின் முயன்று கண்டுள்ளனர். நினைவுச் சின்னங்கள் பெரும்பாலும் அன்றைய நாளில் இருந்த நிலையில் கிடைத்து விடுவதில்லை. காலம் செல்லச் செல்ல இயற்கையின் வலிமையினால் அழிந்து சிதைந்துபோய்விடுகின்றன. இருப்பினும், சில தப்பிப் பிழைத்து வரலாறு உருவாவதற்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றன. நாளந்தாவில் காணப்படும் கட்டடச் சான்று ஒன்று ஹர்ஷரின் காலக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. ஆனால், அவற்றில் எப் பகுதி ஹர்ஷரால் அமைக்கப்பட்டது என்று தெரியவில்லை. நாளந்தாவை நேரில் கண்ட யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளவற்றின் அடிப்படையிலேயே அம் முடிவிற்கு வரவேண்டியுள்ளது. பிரயாகையில் ஹர்ஷரின் பேரவை கூடிய இடம் இன்றும் அனைவராலும் காணப்படுகிறது. அவ் விடத்தில்தான் கும்பமேளா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

**செப்பேடுகளும் முத்திரைகளும்**

ஹர்ஷவர்த்தனரின் ஆட்சி முறையினை அறியச் செப்பேடுகளும் முத்திரைகளும் துணைபுரிகின்றன. செப்பேடுகளில் கொடைகள் பற்றிய ஆணைகள், நில வரியைத் தள்ளுபடி செய்யும் ஆணைகள் முதலானவற்றைக் காண்கிறோம். பட்டய ஆதாரங்களும் முத்திரைகளும் இலக்கியங்களைவிட வலுவான ஆதாரங்களாகும். அவற்றை ஹர்ஷரே அளித்துள்ளார். அவற்றில் நான்கு கிடைத்துள்ளன.



படம் 1.

ஹர்ஷரின் பன்ஸ்கேராச் செப்பேடு.

பன்ஸ்கேராச் செப்பேடு, மதுபென் செப்பேடு, நாளந்தா முத்திரைகள், சோனுபட் முத்திரைகள் ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கன. அந்தப் பட்டயங்களும் முத்திரைகளும் ஹர்ஷருடையவை. ஹர்ஷரின் காலப் பிற மரபு அரசர்களின் வரலாற்றை அறியப் பல செப்பேடுகளும் பட்டயங்களும் உள்ளன. அவற்றில் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுதல் வேண்டும்.

குப்தர் காலத்திய வரலாற்றிற்கு உதவக்கூடியதும் கி. பி. 543-544 ஆம் ஆண்டுக்குரியதுமான தாமோதர்ப்பூர் ஐந்தாவது செப்பேட்டுப் பட்டயம், சுமந்தலா என்ற கிராமத்தில்



படம் 2.

ஹர்ஷரின் மதுபென் செப்பேடு.

கண்டெடுக்கப்பட்ட பட்டயம், கயாவில் கண்டெடுக்கப்பட்ட குமார அமாத்யா மகாராஜா நந்தரின் கி. பி. 551-52 ஆம் ஆண்டுக் குறிப்பிட்ட பட்டயம் முதலியன மகதம் குப்தர்களின் கீழ் இல்லை என்று காட்ட உதவுகின்றன. அப்ஸாடு (Appsad) பட்டயம் பிற்காலக் குப்தர்களின் அரச பரம்பரையினைக் குறித்துக் கூறுகிறது. பீஹார் மாநிலத்தின் ஷஹபாடுப் பகுதியினை மௌகாரிகள், குப்தர்கள் தவிர வேறு யாரும் ஆட்சி செலுத்தி யிருக்க முடியாது என்பதனைத் 'தியோபார்ணுக்' பட்டயம் சான்று காட்டுகிறது.

வங்காளத்தில் சிறப்புடன் ஆட்சி செலுத்திய ஜெயநாகர் என்ற சசாங்கனின் முன்னோரைப் பற்றி அறிய கர்ண சுவர்ண வப்பகோஷ வாதா ஆணை துணைபுரிகிறது. சங்கரகாணுவின் கி.பி. 565-566-க்குரிய அப்ஹோரணுச் செப்பேடு, கி.பி. 608 ஆம் ஆண்டின் வாட்நர் செப்பேடு ஆகியவையும் வரலாற்றுக்குத் துணைபுரிபவையே.

மௌகாரிகள் பற்றிக் கிடைத்த முதல் வரலாற்றுச் சான்றான களிமண் முத்திரை குறிப்பிடத்தக்கது. மௌகாரிகளின் மூன்று பட்டயங்களைக் கோட்டா மாநிலத்தில் அடில்கார் கண்டறிந்தார். ஈசான வர்மனின் ஹராஹாப் பட்டயம், நாளந்தா முத்திரை, ஈஸ்வர வர்மனின் ஜான்பூர் பட்டயம், அசிர்கார் முத்திரை,



படம் 3.

ஹர்ஷரின் சோனபட் செப்பு முத்திரை.

சிர்பூர்க் கல்வெட்டு, சர்வ வர்மனின் அசிர்கார் (நிமாடு) முத்திரை ஆகியவை மௌகாரிகளின் ஆதிக்கப் பரப்பிற்குச் சான்று காட்டுகின்றன.



படம் 4. ஹர்ஷரின் களிமண் முத்திரை



படம் 5. சர்வவர்மனின் மௌகாரியின் முத்திரை

ரோட்டஸ்கார் மலைக்கோட்டையின் கல்லில் வெட்டப் பட்டுள்ள மகா சாமந்தா சசாங்கனின் முத்திரைச் சின்னம் குறிப் பிடத்தக்கது. காமரூபத்தின் சு - பிரதிஷ்தித வர்மன், பாஸ்கர



படம் 6.
மகாசாமந்தா சசாங்கதேவாவின் கல் முத்திரை அச்சு.

வர்மன் ஆகிய இரு இளவரசர்கள் கௌடா அரசரின் தாக்குதலை எதிர்த்துப் போரிட்டதைத் தூபிச் செப்பேடுகள் காட்டுகின்றன. சசாங்கனின் மிட்னுபூர்ச் செப்பேடுகள், பாலாசோர் மாவட்டத் தில் உள்ள சோரோவில் கண்டெடுக்கப்பட்ட செப்பேடுகள், செயில் ஒத்பவா வமிசத்தைச் சேர்ந்த இரண்டாவது மாதவ ராஜாவின் கஞ்சம் செப்பேடுகள் ஆகியன நாம் காணும் கால வரலாற்றிற்கு உதவுவன ஆகும். அவை கௌட அரசன் சசாங் கனுடன் தொடர்புடையவை.

வலபியின் மைத்ரேகர்களுடைய வரலாற்றுச் செய்திகளை அறிய மாண்டசோர் செப்பேடுகள் உதவுகின்றன. குக சேனு என்ற தாரபட்டாவின் மகனுடைய ஆணை ஒன்றும் மைத்ரேகர்கள் வரலாற்றை அறிய உதவுகின்றன. சாளுக்கிய அரசனுன இரண்டாம் புலிகேசியின் லோனர், ஐஹோல் பட்ட யங்கள் சாளுக்கியர்களின் போர் ஆற்றலை, ஹர்ஷரைப் புலிகேசி வென்றுர் என்ற கருத்தைக் கூறப் பயன்படுகின்றன.

ஹர்ஷருடைய வலபிப் படையெடுப்பினை நாம் அறிந்து கொள்ள கி. பி. 640ஆம் ஆண்டிற்குப்பின் இரண்டாவது துருவ சேனனின் வாரிசான நான்காம் தாரசேனனின் நொகாவாப் பட்டயங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கி.பி. 645-6-ல் நான்காவது தாரசேன தம்மைச் சக்கரவர்த்தி என அழைத்துக் கொண்டதையும் பட்டயங்கள் காட்டுகின்றன.

மைத்ரேக வமிசத்தின் பன்னிரண்டாவது அரசரான நான்காம் தாரசேன, பரம பக்தாரக, மகா ராஜாதிராஜ, பரமேஸ்வர முதலான பட்டங்களை முதன்முதலில் பெற்றார் என்பதிலிருந்து ஹர்ஷருடைய பேரரசின் தளர்ச்சியை எடுத்துக் காட்ட அப் பட்டயங்களே உதவுகின்றன. எனவே, பட்டயங்கள் நிலக்கொடை (Land grants) குறித்த செய்திகளை அறிவித்தாலும், அவை கிடைத்துள்ள இடம், அதில் காணப்படும் குறிப்பு, அவற்றின் காலம் முதலியவற்றைக்கொண்டு ஹர்ஷரின் ஆட்சிப் பரப்பு, செல்வாக்கு நிலை முதலானவற்றை அறிகிறோம்.

ஹர்ஷரின் காசுகள்



படம் 7.

முன்பக்கம்: அரசரின் தலை: பிறை வடிவம் ஒன்று; முடியில் ஏதோ காணப்படுகிறது. 'சா' என்ற எழுத்தும் கால எண் 1-ம் ?

பின்பக்கம்: அரசரின் தலையைப்பார்த்தபடி இறகுகளை விரித்து மயில் ஒன்று. 'நி-ர்-அவ – நி - ப – தி - ஸ்ரீ – ச – லா' என்ற வாசகம்.



படம் 8.

முன்பக்கம்: படம் எண் 7 போலவே தலைக்கு அருகில் பிறை; 'சா' என்ற எழுத்தும், கால எண் 6-ம் ?

பின்பக்கம்: படம் எண் 7 போலவே. ஜி - வி - தா – வா – நி - ர் - அவ - னி - பாதி - ஸ்ரீ - ச - லா - த - த்யா - தி - வம் - ஜெ - யா - தி.

### காசுகள்

ஹர்ஷரின் வரலாற்றை அறியக் காசுகள் பெரிதும் துணை புரிகின்றன. அவை பற்றிய விளக்கமான ஆய்வினைக் காண்போம்.



படம் 9.

முன்பக்கம்: படம் எண் 7 போலவே, பிறை தலை முடியில் - காலம் தெளிவில்லை,
பின்பக்கம்: படம் எண் 7 போலவே வாசகம் வி - ஜி - தா - வாணி - ர் - ஹ - ர்-ஷா ?

(கி. பி. 1894-ல் கன்னிங்ஹாம் ‘ இடைக்கால இந்தியக் காசுகள் ’ என்னும் நூலினை வெளியிட்டார். அந் நூலில் ஒரு பக்கம் குதிரை வீரனும், மறுபக்கம் அமர்ந்த தேவியின் உருவமும் காணப்பட்ட காசு ஒன்றை ஹர்ஷருக்கு உரியதாக அவர் கருதினர். ஹர்ஷ வர்த்தனரின் பட்டத்து அரசி வசந்தலேகா ஷாஹி வமிசத்தவர் ஆதலால், ஷாஹி இனத்தவரின் தொடர்பின் விளைவால் அத்தகைய காசுகள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்றும் கன்னிங்ஹாம் கருதினர்). ஆனல், ஹோயான்லே (Hoernle) இக் காசு ஹர்ஷ தேவர் என்றும் குறிக்கப்பட்ட கன்னேசி அரசர் ஹர்ஷருக்கு உரியதேயன்றி, காஷ்மீர அரசரான ஹர்ஷ வர்த்தனருக்கு உரியதன்று என்றார். ஆனல், இவர் கருத்து ஏற்கப்படவில்லை. ரிச்சர்டு பர்ன், ஹோயர்ன்லேயின் கூற்றுச் சரியன்று என்று மறுத்துரைத்தார்.

கி. பி. 1904-ல் மண்பானை ஒன்றிலிருந்து ஒரு பொற்காசும், 522 வெள்ளிக்காசுகளும், எட்டுச் செப்புக்காசுகளும் அயோத்தியில் பிதாவுரா என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டன. கி.பி. 1906-ல் பர்ன் (Burn) ‘மௌகாரிகள், தானேசுவர வமிசத்துச் சில காசுகள்’ என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வரைந்தார். கண்டெடுக்கப்பட்ட காசுகளில் 248 காசுகள் ஸ்ரீ சலதத (ஸ்ரீ சீலாதித்யா) என்பதையும், ஒன்பது காசுகள் ஸ்ரீ பிரதாப சீலர் (Sri Pratapasila) என்பதையும் கொண்டிருந்தன. மீதமுள்ளவற்றில் 32 காசுகள் மௌகாரி அரசர்களுடையவை. அவ்வரசர்களில் ஒருவர் ஹர்சா என அழைக்கப்பட்டுள்ளார். ஆனல், ஹர்ஷா என அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்

தக்கது. 192 காசுகளில் அரசர்களின பெயரும், காலமும் மறைந்துவிட்டன. கண்டெடுக்கப்பட்ட ஒரே ஒரு பொற்காசு காஷ்மீரின் இரண்டாம் பிரதாப ஆதித்தியருக்குரியது. மீதியுள்ள நான்கு வெள்ளிக் காசுகளில் மூன்று வராஹ திரம்மாக் காசுகள் ஆகும். ஒன்று இன்னதென்று தெரியவில்லை.

518 வெள்ளிக் காசுகள் குப்தர்களின் வெள்ளிக் காசு மாதிரியானவை. அவற்றில் பெரிய தலையுடன் ஆண்டு ஒரு பக்கமும் தோகை விரித்த நிலையில் மயில் மறுபக்கமும் உள்ளன. குப்தர் காசுகளைப் போல, சில காசுகளில் தலை வலப்பக்கமும் மற்ற வற்றில் இடப்பக்கமும் அமைந்துள்ளன. ஹர்ஷர் கன்னேசியில் அரியணையேறுகையில் சீலாதித்தியர் என்ற பட்டம் கொண்டதாகச் சீன ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால், நம் நாட்டு ஆதாரங்கள் ஹர்ஷரைச் சீலாதித்தியர் என்று குறிப்பிடவில்லை. ஆனால், பிரபாகர வர்த்தனரைப் பிருட பிரதாப சீலர் என்றுரைக்கின்றன. ஹர்ஷர் தம் பட்டயங்களில் தம் தந்தையின் பிருடா என்ற பட்டத்தைப் பயன்படுத்தினர் என்பதைக் கொண்டு, அலுவல் காரியங்களிலும் அதனைப் பயன்படுத்தினர் என்று கொள்ளலாம். பர்ன் (Burn) மேலே குறிப்பிட்டுள்ள காசுகளில் காணப்படும் பிரதாபசீலர் என்பதைப் பிரபாகர வர்த்தனருக்கும், சீலாதித்தியா என்பதை ஹர்ஷருக்கும் உரிய பட்டமாகக் கொள்கிறார். அவர் அவ்வாறு கொண்டதனை அரைகுறையாகவே அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். தேவஹூட்டி (Devahuti), பிதௌரா காசுகள் பிரபாகர வர்த்தனருக்கே உரியன என்று கருதுகிறார்.

பிரபாகர வர்த்தனர் தாம் மகாராஜ் ஆதிராஜா என்ற பட்டம் பெற்றதன் விளைவாகப் புதிய சகாப்தம் ஒன்றினை உருவாக்கினர் எனவும், ஹர்ஷரும் அவ்வாறே புதிய சகாப்தம் உருவாக்கினர் எனவும் கருதுவர். எனவே, அந்நிலையில் ஹர்ஷர் சீலாதித்தியர் என்ற பட்டத்தைத் தம் காசுகளில் பொறித்தார் என்பர். சீலாதித்தியரின் காசுகளில் காணப்படும் 33 என்ற எண் ஹர்ஷரின் ஆட்சியைக் குறிக்கிறது எனவும், கி. பி. 606 முதல் கி. பி. 647 வரை அவருடைய ஆட்சி நீடித்தது எனவும் கருதப்படுகிறது. இக் காசுகளிலிருந்து ஓர் உண்மையினை அறிகிறோம். மௌகாரிகள், சீலாதித்தியர், பிரதாப சீலர் முதலானோரின் காசுகளை ஒப்பிடுகையில் இந்த இரு மரபினரும் பொதுவாகக் காசுகள் வெளியிடுவதில் குப்தர் பாணியைப் பின்பற்றினாலும் காசுகளில் ஆண்டுகள் குறிப்பிடுவதைத் தொடர்ச்சியாகக் கொள்ளாமல் தம் வழியில் மேற்கொண்டனர் என்பதே அது. பிரதாபசீலர், சீலா

தித்தியர் ஆகிய இருவரின் காசுகளும் ஒன்ருகக் கிடைத்துள்ள மையைக் கொண்டு அவை பிரபாகர வர்த்தனர், ஹர்ஷர் காசுகள் என யூகிக்க வாய்ப்பு உள்ளது.

சிலாதித்தியரின் காசுகளை ஹர்ஷருடையன எனப் பர்ன் கருதுவதை, ஹோயர்ன்லே ஏற்கவில்லை. அவர் அதிகார பூர்வமாக இந்தப் பட்டத்தைக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டார். பாணரோ, மற்ற இந்திய ஆதாரங்களோ ஹர்ஷருடைய இப் பட்டத்தைக் குறிப்பிடவில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டினுர். யுவாங் சுவாங்தாம் அவ்வாறு ஹர்ஷரைக் குறிப் பிட்டவர் என்றும், பௌத்தத் துறவிகள் இடையேதான் சிலாதித்தியர் என்ற பெயர் வழங்கியிருக்க வேண்டும் எனவும் ஹோயர்ன்லே குறிப்பிட்டார். எனவே, இக் கருத்தை விவாதிப் பவர்கள், பௌத்தத் துறவிகளிடையேதான் இப் பெயர் (சிலா தித்தியர்) வழங்கிற்று; எனவே, பாணரோ மற்றப் பிராமணரோ அறிந்திருக்க முடியாது என்றும் ஹோயர்ன்லே குறிப்பிட்டதை ஆராய்ந்தனர்.

ஹோயர்ன்லேயின் கருத்துகளை மறுத்துரைத்துச் சான்று களை அவர்கள் அளித்தனர். சிலாதித்தியர் என ஹர்ஷர் பௌத்தத் துறவிகளால் மட்டுமன்றி, சீனப் பேரரசரின் தூதர்களாலும் அவ்வாறு அழைக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டினர். பிதௌரா புதையல்களே நமக்கு ஹர்ஷர் சிலாதித்தியர் என்ற பட்டப்பெயரைத் தம் தந்தை வழியில் கொண்டார் என்று விளக்கப் பயன்படும் உள்நாட்டு ஆதாரங்கள் ஆகும்.

பிரதாபசிலர், சிலாதித்தியர் ஆகிய இரு பட்டங்களையும் ஒரே அரசர் கொண்டிருந்தார் என்று ஹோயர்ன்லே வாதிட்டார். அதற்கு ஆதாரமாகக் கல்ஹணரின் இராஜ தரங்கிணியை அவர் எடுத்துக்காட்டினுர். கல்ஹணர், பிரவரசேனுவைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'விக்கிரமாதித்யரின் மகனை பிரதாபசிலரை, அதாவது சிலாதித்தியர் என்று அழைக்கப்பட்டவரை மாற்றினுர்', என்று குறிப்பிடுவதே அக் குறிப்பு ஆகும். அந்த விக்கிரமாதித்தியர் மாளவ யசோதர்மன் எனக் கண்டறியப் பட்டுள்ளது. அவரே மாண்டசோர் பட்டயங்களில் இமயமலை வரை வென்றவர் என்று குறிப்பிடப்பட்டவர் ஆவார். ஹோ யர்ன்லே, பிதாபுரா புதையலில் காணப்படும் சிலாதித்தியரின் காசுகள் ஹர்ஷருக்கு உரியன அல்ல என்று கூறும் கருத்துகள் வலுவுள்ளவையாகப் படவில்லை.

பிரதாப சீலர், சிலாதித்தியர் ஆகியோரின் காசுகளைக் குறித்த விளக்கத்தினைப் பர்ன், ஜர்னல் ஆப் இராயல் ஏஷியாட்டிக் சொசைட்டியில் (1906) விளக்கமாக அளித்துள்ளார். நாம் சிறிது சுருக்கமாக அவற்றைக் காண்போம்.

**பிரதாப சீலர் :** ஒன்பது காசுகளிலும் மயிலின் தலை இடப் பக்கம் சாய்ந்துள்ளது. அரசனின் தலைமேல் உள்ள பிறை உச்சியில் மையத்தில் உள்ளது.

**சீலாதித்தியர் :** பெயர் பொதுவாக 'ஸ்ரீ சாலதாத' என்று காணப்படுகிறது. சில காசுகளில் இறுதி எழுத்து 'தீயா' எனத் தெளிவாகக் காணப்படுகிறது. காசுகள் பலவற்றில் உள்ள தேதிகள் வேறுபட்டனவாகவும், சிக்கலானவையாகவும் அமைந்துள்ளன. சிலாதித்தியரின் ஆறு காசுகள் பிரிட்டன் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளன. இக் காசுகளைக் கொண்டு அவை கிடைத்த பகுதிகள் ஹர்ஷரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன என்று உறுதியாகக் கூற இயலாது. காசுகள் மிக எளிதாக இடம் விட்டு இடம் மாற்றத் தக்கவை என்பதே இதற்குக் காரணம் ஆகும்.

ஹர்ஷரின் காசுகள் தவிரக் குப்தர்கள், பிற்காலக் குப்தர்கள், மௌகாரிகள் முதலானவர்களின் காசுகளும் வரலாற்றுக்கு உதவுகின்றன. பிற்காலக் குப்த அரசனான ஜெய நாகரின் காசுகளையும், ஈசான வர்மன், சர்வ வர்மன், அவந்தி வர்மன் ஆகியோரின் காசுகளையும் குறிப்பிடலாம். அதைப் போலவே சசாங்கனின் காலத்திற்குமுன் ஆட்சி செலுத்திய சமாச்சார தேவரின் காசுகளும் வரலாற்றுக்கு உதவுகின்றன. சசாங்கனின் காசுகளில் 'சசாங்கன்' என்ற அவருடைய பெயரே குறிப்பிடப் பட்டிருக்கிறது. நாணயங்களின் எடைக் குறைவினைக் கொண்டு அவை பிற்காலத்தில் ஆட்சி புரிந்தவர்களுடையவை என்று கண்டறிகின்றனர். காசுகளும், அவை வரலாற்றுக்கு உதவு தனியே விளத்தக்க அளவுக்கு உள்ள பொருள் ஆகும்.

யுவாங் சுவாங் அல்லது ஹியூங் சாங் என்ற பெயர் ஆங்கிலத்தில் எப்படியெல்லாம் அறிஞர்களால் உச்சரிக்கப்பட்டது என்பதைப் பட்டியலில் காண்போம்.

1. ஸ்டானிஸ்லாஸ் ஜூலியன் (Stanislas Julien) — ஹியூயென் சாங் (Hiouen Thsang)
2. மேயர்ஸ் (Mayers) — ஹியூவான் ச்வாங் — (Huan Chwang)

| | | |
|---|---|---|
| 3. வைலி (Wylie) | — | யூயென் ச்வாங் (Yuen Chwang) |
| 4. பீல் (Beal) | — | ஹியூன் சியாங் (Hiuen Tsiang) |
| 5. லெக்கி (Legge) | — | சுவான் ச்வாங் (Hsuan Chwang) |
| 6. புண்யியூ நாஞ்சியோ | — | ஹியூயென் குவான் (Hhuen Kwan) |
| 7. பிரெஞ்சு மொழியில் | — | 'Hiouen thsang' |
| 8. ஜப்பான் மொழியில் கென் ஜோ (Genjo) | — | 'Youan thsang' |
| 9. திபெத் நூல்களில் | — | தாங்-சென்-சாங் (Tang Ssen tsang) |

பிரெஞ்சு மொழியில் 'h' என்ற ஆங்கில உச்சரிப்பு இல்லை. பிரெஞ்சு மொழியில் 'ch' என்ற ஆங்கில உச்சரிப்பு இல்லை யாதலால் ths என்ற சொற்களைப் பயன்படுத்தினர். ரைஸ் டேவிஸ் 'யுவாங் ச்வாங்' (யுவான் சுவாங்) (Yuan chwang) என உச்சரிக்கிறார்.

## வெளிநாட்டவரின் குறிப்புகள்
## (Foreigners' Accounts)

வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளை முழுமையாக அப்படியே நம்பிவிடுவதற்கில்லை. ஆனால், அவற்றை முழுமை யாகப் பிழையானவை என்றும் ஒதுக்கிவிடுவதற்கில்லை. வெளி நாட்டவர் தாம் கண்டு கேட்டவற்றை உண்மையா என ஆராய்ந்து பார்க்காது தம் குறிப்புகளில் அவற்றைச் சேர்த்து விடுகின்றனர். அவர்களுடைய தங்கும் காலம் மிகக் குறை வானது. அவர்கள் தொடர்பு கொண்ட மக்களைமட்டுமே அடிப் படையாக வைத்துப், பொதுவான கருத்து ஒன்றினைக் கொள் கின்றனர். அன்றைய நாளில் இந்திய மக்களிடையே நெருக்க மான தொடர்பு இல்லை. எனவே, பழக்க வழக்கங்கள் இடத் துக்கு இடம் வேறுபட்டிருந்தன. இவ்வாறான பல குறைபாடு கள் காணப்பட்டபோதிலும் அவர்களின் கூற்றில் பெரும் பாலும் உண்மையின் அடிப்படையினைக் காணலாம். அதனைப் பகுத்து அறிதல் வரலாற்றாய்வாளரின் கடமை.

ஹர்ஷ வர்த்தனரின் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்த அயல்நாட்டுப் பயணிகளில் யுவாங் சுவாங் குறிப்பிடத் தகுந்தவர். ஹர்ஷருக்குப் பின் வந்த இட்சிங் என்ற சீனப் பயணி ஹர்ஷருக்குப் பின் காணப்பட்ட நிலையினை எடுத்துக்காட்டுகிறார். பௌத்த சமயத்தவரான சீனத்துப் பயணி பௌத்த சமய ஈடுபாட்டினால் இந்திய நாட்டில் பௌத்தர்களின் சமய இடங்களையும், புனிதத் தலங்களையும் கண்டு தரிசிக்க விழைந்தார். அவர் தாம் இந்தியாவில் பெற்ற அனுபவங்களைத் தொகுத்தளித்தார்.[1] அவருடைய சி-யூ-சி. (Hsi-yu-Chi) என்ற நூலின் மொழிபெயர்ப்பான 'மேலைநாடுகளின் குறிப்புகள்'('The Records of the Western World) என்னும் நூலும், ஹியூ-லி (Hui - Li) என்ற துறவி எழுதியுள்ள 'தலை சிறந்த சட்ட அறிஞரின் வாழ்க்கை' (The Life of the Master of the Law) என்னும் நூலும் வரலாற்றுக்கு இன்றியமையாத சான்றுகளாய் அமைந்துள்ளன. ஹியூலியின் நூலுக்கு யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்புகளும் மற்றவையும் அடிப்படையாகும்.

யுவாங் சுவாங் ஹர்ஷரால் ஆதரிக்கப்பட்டவர். ஹர்ஷரின் பேரவைத் தலைவராகவும் பங்குபெற்றவர். அப்படிப்பட்டவருடைய வாழ்க்கை, அவர் அளிகின்ற செய்திகள், விளக்கங்கள் முதலியவற்றைத் தொகுத்துக் காணுவோம். இங்கு மேற்கூறப்பட்ட இரு நூல்களுக்கிடையேயான வேறுபாடுகளை முதலில் காண்போம்.

யுவாங் சுவாங் தம் பயணக் குறிப்புகளைச் சீனுவில் தொகுத்து எழுதினர். அவர்தம் முயற்சிக்கு சீனப் பேரரசர் அளித்திட்ட ஆதரவு குறிப்பிடத்தக்கது. இத்திய அரசர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு அஞ்சாமல் அவர் வரலாற்றை எழுதக்கூடிய நிலையில் இருந்தார். யுவாங் சுவாங் ஹர்ஷரை மிகவும் மதித்துப் போற்றியவர் எனினும், இந்திய அரசர்களையும் மக்களையும் உயர்வாகக் கூறவேண்டும் என்ற கட்டுபாடு ஏதும் அவருக்கு இல்லை. அல்லது இந்திய அரசர்களை மகிழ்வடையச் செய்யவேண்டும் என்ற நோக்கம் ஏதும் அவருக்குக் கிடையாது. அவருடைய எண்ணமும், கவனமுமெல்லாம் பௌத்தச் சார்புடையன.

இந்தியாவில் அவருக்குப் பெருத்த ஆதரவு ஏதும் இருந்ததில்லை. இந்தியாவில் அவர் தங்கியிருந்தபோது பல தடவைகள்

[1] நூலின் முழுப்பெயர் தா-தாங்-சி-யூ சி (Ta-Tang-Hsi-Yu-Chi)



படம் 10. துங் ஹாங் பட்டுத்துணியில் தீட்டிய யுவாங் சுவாங் ஓவியம்.



படம் 11, யுவாங் சுவாங்.

அரசர்களைச் சந்திப்பதற்கு மறுக்கப்பட்டும் தாமதப்படுத்தப்பட்டும், அவர்களுடைய கோபத்திற்கு ஆளாகியிருக்கிறார். அவர்கள் விரும்பியவண்ணம் நீண்ட காலம் இந்தியவில் தங்கி இருப்பதற்கும் மறுத்திருக்கிறார். இந்தியாவுக்கு வரும்போது தூர்பானில் தடுத்து நிறுத்தப்பட்டார். இந்தியாவிற்குச் செல்லக் கூடாது என்ற ஆணையைச் சீன அரசர் திரும்பப் பெற்று இந்தியா செல்லத் தமக்கு இசைவு அளிக்க வேண்டும் என்று விரும்பினார். அம் முடிவினை வலியுறுத்த அவர் மூன்று நாள்கள் தொடர்ந்து உணவு உண்ண மறுத்தார். தம் பணிகளைச் செவ்வனே முடிக்க வேண்டும் என்பதன் பொருட்டு ஹர்ஷரின் வேண்டுகோளை மறுத்த அவர் ஹர்ஷரின் இரண்டாவது வேண்டுகோளுக்கு இணங்கியே அவரைச் சந்தித்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

யுவாங் சுவாங் தம் மேலை நாடுகளின் குறிப்புகள் என்ற நூலில் குறித்திருக்கும் விளக்கங்கள் அனைத்தையும், தம் துணைவர்களின் உதவியுடன் தாமே முன்னின்று தொகுத்தார். அவ்வாறு அவருக்கு உதவியவர்களுள் பியன்சி (Pienchi) என்ற துறவி குறிப்பிடத் தக்கவர். யுவாங் சுவாங்கின் மாணவகளுள் விரியூ லியும் ஒருவர். 'மேலைநாடுகளின் குறிப்புகள்' என்ற நூலுக்கு அவருடைய மாணவர்கள் ஹியூ லியும், 'என் சங்'கும் விளக்கங்களை அளித்தனர். 'வாழ்க்கை' நூல் யுவாங் சுவாங்கின் குறிப்புகள் பலவற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளதோடு புதிய செய்திகளையும் அளிப்பதால், மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

அந் நூலில் ஆறுமுதல் பத்து வரை உள்ள பகுதிகள் யுவாங் சுவாங் இந்தியாவிலிருந்து சீனாவிற்குத் திரும்பியபின் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. முதல் ஐந்து அத்தியாயங்களைக் கி. பி. 648—649-ல் எழுதி முடித்த ஹியூ லி கி. பி. 670-ல் மறைந்தபின், என்சங் கி. பி. 688-ல் அதன் பத்து அத்தியாயங்களையும் வெளியிட்டார். யுவாங் சுவாங்கின் நூலை விட அந் நூல் சற்று மாற்றுக் குறைந்தது எனக் கருதுகின்றனர்.

யுவாங் சுவாங்கின் வாழ்க்கை வரலாற்றினை அறிந்து கொள்ள அந் நூல் பெரிதும் பயன்படுவதோடு, இந்தியச் செய்திகளையும் அறிவிக்கிறது. யுவாங் சுவாங்கின் நூல் எந்த அளவிற்கு உதவிற்று என்பதற்கான படப்பிடிப்பின் மேலோட்டமான

குறிப்புகளை இங்குக் காணவேண்டும். சமுதாயம், அரசியல், ஆட்சி முறை ஆகிய தலைப்புகளை ஆராயும்போது பின்னர் விளக்கமாக அவற்றைக் காண்போம்.[1]

யுவாங் சுவாங் 657 வடமொழி (சமஸ்கிருதம்) நூல்களை, அதாவது தாம் கொண்டு சென்றவற்றைச் சீன மொழியில் மொழி பெயர்த்தார் என்று கூறப்படுகிறது. இது இயலக்கூடியதா? ஒரு தனி மனிதனால் அப் பணியினைச் செய்யவே இயலாது. அவ்வாறு பல்லாண்டுகளாகக் கூறப்பட்டுவருவது தவறான கருத்தின் அடிப்படையிலானதே. வாட்டர்ஸ், யுவாங் சுவாங் 74 நூல்களை மொழி பெயர்த்தார் என்றும், நாஞ்சியோ (Nanjio) 75 நூல்களை மொழி பெயர்த்தார் என்றும் குறிப்பிட்டனர்.

யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்புகளிலும், 'வாழ்க்கை' நூலில் பல்வேறு பதிப்புகளிலும் காணப்படுபவற்றைக்கொண்டு நோக்கும்போது அதில் அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை தவறெனப்படுகிறது. எனினும், 657 என்ற எண் எப்படிக் கணிக்கப்படுகிறது எனக் காண்போம்.

| | | |
|---|---|---|
| மஹாயான சூத்திரங்கள் | .... | 224 |
| மஹாயான சாஸ்திரங்கள் | .... | 192 |
| ஸ்தவீர சூத்திரங்கள், சாஸ்திரங்கள் | .... | 14 |
| வினய | .... | 15 |
| மஹா சங்கிகா | .... | 22 |
| மஹிசாசகா | .... | 15 |
| சம்மிதியா | .... | 17 |
| காஸ்யபியா தர்ம குப்த சூத்திரங்கள், வினய, சாஸ்திரங்கள். | .... | 42 |
| சர்வஸ்திவாதின் சூத்திரங்கள், வினய, சாஸ்திரங்கள். | .... | 67 |
| யின் லுன் | .... | 36 |
| ஷெங் லுன் | .... | 13 |
| | | 657 |

யுவாங் சுவாங் பயணம் செய்வதில் ஈடுபாடும், விருப்பமும் உடையவர்களான 'சென்' என்ற பழைமையான சீனக் குடும்பத்தில் பிறந்தார். கியூசி-டி, என்று இன்று அழைக்கப்படும் மாவட்டத்தில் அவர் முன்னோர் வாழ்ந்தனர். அக் குடும்பத்தின்

1 பார்க்க இந் நூலின் உள்ளே—அத்தியாங்கள் 9, 11, 12, 14.

ஓ-பு, சௌ வமிசத்தின் முதல் அரசர் ஊவாங்கின் கீழ்ப் பணி புரிந்தார். ஓ-பு வின் மகன் ஹு - குங் - கியூ - மேன் அரசர் ஊவாங்கின் மகளை மணந்தார். சென் குடும்பம் ஹான் வமிசத்தின் ஆட்சிக் காலத்தில் கி. மு. மூன்றும் நூற்றாண்டில் சிறப்பும் புகழும் பெற்றது.

அக் குடும்ப யுவாங் சுவாங்கின் கொள்ளுத்தாத்தா சின் (Chin) ஆவார். யுவாங் சுவாங்சின் தாத்தா காங் (Kang) கல்வியில் சிறந்து, கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். யுவாங் சுவாங்கின் தந்தை ஹுய் (Hui) கன்பூஷியசின் கொள்கைகளைக் கடைப்பிடித்தவர். நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டபோது தற்போது என் - ஷி என்று அழைக்கப்படும் பகுதியில் இருந்த கிராமத்தில் அவர் வாழ்ந்தார். யுவாங் சுவாங் கி. பி. 600-ல் தம் தந்தை வாழ்ந்த கோ - ஷி நகரின் அருகில் பிறந்ததால் கோஷிமான் என அழைக்கப்பட்டார்.

யுவாங் சுவாங் பௌத்த சமயப் பற்று மிக்கவராக விளங்கினார். புத்தர் வந்த திசைக்குச் செல்ல வேண்டும், புண்ணிய பாரதத்தைக் காண வேண்டும் என்ற வேட்கை கொண்டிருந்தார். கி. பி. 629 - ல் தலைநகரான சாங் - ஆன் நோக்கிப் புறப்பட்டார். யுவாங் சுவாங்கின் பயணம் கி.பி. 645 - ல் முடிந்தது. அதாவது பதினாறு ஆண்டுகளுக்குப் பின் தாங் - தாய் - சாங் பேரரசர் சீனாவை ஆண்டுவந்தபோது தாயகம் திரும்பினார். அப்போது யுவாங் சுவாங்கிற்குச் சிறப்புமிக்க வரவேற்பு அளிக்கப்பட்டது. மக்கள் யாராலும் செய்யமுடியாத செயலைச் செய்தவராக அவரைக் கருதினர். அவர் கொண்டுவந்த புத்தரின் வாழ்க்கையோடு தொடர்புடைய நூற்றைம்பது புனிதப் பொருள்களையும், பரிசுப் பொருள்களையும் இருபது குதிரைகள் சுமந்து வந்த கோலாகலம் மிக்க திருவிழாவை நினைவூட்டிய அக் காட்சியினைக் கண்டு பேரரசர் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார்.

யுவாங் சுவாங் மேற்கு நாட்டில் பயணம் செய்து கண்டு கேட்டவற்றை அரசர் அலுக்காமல் கேட்டு மகிழ்ந்தார். அரசாங்கத்தில் பெரும் பொறுப்பு ஒன்றினை ஏற்றுக்கொள்ள வற்புறுத்தியும் அதனை ஏற்காது தாம் கொண்டுவந்துள்ள அரிய இலக்கியச் செல்வங்களை இந்திய மொழிகளிலிருந்து சீனத்திற்கு மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட அவர் விரும்பினார். பேரரசர் அப் பணி இனிதே நிறைவேற வேண்டிய உதவியாளர்களைக் கொடுத்தார். தம்முடைய பயண நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து சு - யு - கி என்ற நூலைத் தொகுத்து

அதில் ஒரு பிரதியைச் சீனப் பேரரசருக்கு அளித்தார். யுவாங் சுவாங் அமைதியாக, அதே நேரத்தில் சுறுசுறுப்பான வாழ்வு வாழ்ந்து மனநிறைவு கொண்டு கி. பி. 664–ல் இறந்தார்.

யுவாங் சுவாங் இறந்தபின் அவருடைய மாணவர்களுக்கு அவர் அதிசயமாக இரவில் காட்சி அளித்தார்' என்பது போன்ற கதைகள் வழங்கலாயின. அவருடைய வாழ்க்கைக் காலத்திலேயே யுவாங் சுவாங் 'சாக்ய முனி' (Sakyamuni) என்று கௌரவிக்கப்பட்டார். சில பௌத்த கோயில்களில் யுவாங் சுவாங்கைத் தெய்வமாக வணங்கும் நிலையும் தோன்றியது.

யுவாங் சுவாங் ஹர்ஷரின் வரலாற்றினை அறியப் பல குறிப்புகளை அளிப்பதைப் போலவே சமுதாய வரலாற்றிற்கும் சில செய்திகளைத் தருகின்றார். அவருடைய பயணக் குறிப்புகளிலிருந்து இந்தியாவிற்கு இன் – டு, டின் – சு, ஷென் – டு, சியென்தௌ எனவும் பல பெயர்கள் வழங்கப்பட்டன என்பதை அறிகிறோம். யுவாங் சுவாங்கின் குறிப்புகளில் இந்தியச் சமூகம், சமயம், பொருளாதாரம் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகளும், நீட்டல் அளவு, கால அளவு, பருவ காலங்கள், நகர் அமைப்பு, கட்டடக் கலை, மக்களின் உடை, உணவு, கல்வி, சாதிமுறை, இறப்பு ஆகியவை தொடர்பான செய்திகளையும் அறிகிறோம்.

மேலே கூறப்பட்டுள்ள தலைப்புகளில் காணப்படும் யுவாங் சுவாங்கின் கருத்துகளை அரசியல் சமுதாயம், பொருளாதாரம் சமயம் ஆகிய தலைப்புகளில் விரிவாக எடுத்துரைக்க இருப்பதால் அவற்றை இங்குக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதில்லை, யுவாங் சுவாங்கின் குறிப்புகளை முழுமையாக அப்படியே ஏற்றுக் கொள்ளாது, பிற சான்றுகளையும் துணையாகக்கொண்டு ஓர் ஒப்பீட்டினைச் செய்வதன் வாயிலாக உண்மையான வரலாற்றுச் செய்திகளை அறிய முடிகிறது. இந்திய வரலாற்றுக்கு உதவுவதில் அவருடைய இரண்டு பெரும் வரலாற்று ஆதாரங்களின் குறைபாடுகளை ஒதுக்கிவிட்டு அவற்றைத் தந்து உதவியவரின் சிந்தனைச் சிறப்பையும், பின்னணிச் சூழ்நிலைகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது அவை பயனுள்ளவையாகவும், நம்பிக்கை மிகுந்த சான்றுகளாகவும் விளங்குகின்றன என்பதனை நன்கு உணரலாம்.

ஹர்ஷரின் வரலாற்றை அறிய மரபு வழி இலக்கியங்கள், நாடோடிப் பாடல்கள், முதலான மற்றச் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை.

# 2. அரசியல் பின்னணியும் குப்தர்களின் வீழ்ச்சியும்

முதலாவதாகக் குப்தப் பேரரசின் வீழ்ச்சி, அழிவு குறித்தும், அதன் விளைவாகப் பல்வேறு வமிசங்களும், அரசுகளும் தோன்றியமை குறித்தும் காண்போம். இந்திய அரசியல் வானில் ஹர்ஷர் என்ற நிலவு தோன்றுவதற்கு முன் காணப்பட்ட சூழ்நிலைகளை அறிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். முதலாம் குமார குப்தர் கி பி. 415 முதல் 455 வரை அமைதியான வளம் மிக்க ஆட்சியைச் செலுத்தினர். அவருடைய 40 ஆண்டுக் கால ஆட்சியில் குப்தப் பேரரசு உச்ச நிலையை எய்திற்று என்றாலும் அவருடைய வாழ்வின் இறுதிக் காலம் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் கழிந்ததா என்றால் இல்லை என்றுதான் பதில் கூறவேண்டும். வயது முதிர்ந்தவரான பேரரசருக்கு வாழ்வின் இறுதியில் சோதனைகள் மிஞ்சின. அவருடைய எதிரிகள் யாவர் என்று கண்டறிவது வரலாற்றாசிரியகளின் முன்னுள்ள பிரச்சினையாகும். அதைப்பற்றி நாம் ஏதும் இங்கு அறிய வேண்டியது இல்லை.

எதிரிகளின் அறைகூவலைச் சந்திக்க அவர் தம் இளைய மகன் ஸ்கந்த குப்தர் முன்வந்தார்; எதிரிகளை வென்றார். ஆனால், வெற்றிச் சிறப்போடு மீண்டுவரும் மகனை எதிர்கொள்ளத் தந்தையின் உயிர் நிலைக்கவில்லை.

**ஸ்கந்த குப்தர் :** (Skanda Gupta) :

கி. பி. 455-ல் அரசு கட்டில் ஏறிய ஸ்கந்த குப்தரின் வாழ்க்கை முழுமையும் போராட்டக் காவியமாகவே அமைந்தது. ஹூணர்கள், (Huns) மிலேச்சர்கள், (Melechas) முதலான மற்றைய எதிரிகளை வென்று அடிபணியச் செய்ததே அவருடைய ஆட்சியின் சிறப்பாகும். சுருக்கமாகச் சொல்வோமானால் பேரரசைக் காத்தவர் ஸ்கந்த குப்தராவார். ஸ்கந்த குப்தர் தம்முடைய வமிசத்திற்காகப் பேரரசைக் காத்தது மட்டுமல்லாமல் எதிரிகளிடமிருந்து நாட்டையும் காத்தார். கி.பி. 467-8-ல்

ஏற்பட்ட ஸ்கந்த குப்தரின் மறைவு பேரரசின் அழிவிற்கும், வீழ்ச்சிக்கும் வழிகோலியது. ஸ்கந்த குப்தரின் மறைவு புயலிலும், மழையிலும் கப்பலைக் காத்து ஓட்டிச்சென்ற மாலுமியை இழந்தது போல் ஆயிற்று. குப்தர்களின் பண்டைய பெருமை மெல்ல மறைந்தது.

புரு குப்தா (Puru Gupta):

முதலாம் குமார குப்தருக்குப் பின் யார் அவருடைய வாரிசு என்பது விவாதத்திற்கு உரியதாகும். சிலர் குமார குப்தரைத் தொடர்ந்தவர் ஸ்கந்த குப்தர் என்றும், சிலர் புரு குப்தர் என்றும் விவாதிக்கையில் சிலர் இருவரும் ஒருவரே என்பர். அடிப்படை ஆதாரங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தால் முதலாம் குமார குப்தருக்குப்பின் ஸ்கந்த குப்தரும், முதலாம் குமார குப்தரின் மூத்த அரசியான ஆனந்த தேவியின் மகன் மகாராஜாதிராஜ புரு குப்தர் ஸ்கந்த குப்தருக்குப் பின்னும், வயது முதிர்ந்த நிலையில் அரியணையேறினர். இவருடைய ஆட்சி கி.பி. 473 வரை நீடித்தது. புரு குப்தரின் அரசி சந்திரதேவியின் மூலமாகப் பிறந்தவர்கள் மூவர். இவர்கள் இரண்டாம் குமர குப்தர், புத்த குப்தர், நரசிம்ம குப்தர் ஆகியோர் ஆவர். அவர்களுடைய காலம், வாரிசுமுறை ஆகியவை குறித்துக் கூறுதல் கடினமே. ஆனால், சாரநாத் பட்டயம் மூலமாக இரண்டாம் குமார குப்தரே புரு குப்தருக்குப்பின் அரசரானவர் எனத் தெரிகிறது. இரண்டாம் குமார குப்தருக்குப் பின் புத்த குப்தர் ஆட்சிக்கு வந்தார். மாளவத்திலிருந்து வடக்கு வங்கம்வரை அவருடைய ஆட்சி பரவியிருந்தது. ஆனால், அதே நேரத்தில் பிரிவினைச் சக்திகள் அடுத்த பக்கத்தில் தீவிரமாக இருந்தன. அவர்கள் சேனாபதிகள் என அறியப்பட்டனர். துரோண சிம்மர் தம்முடைய முன்னோர்களைப் போலச் 'சேனாபதி' என்று தம்மை அழைத்துக்கொள்ளாமல் 'மகாராஜா' என்ற பட்டத்தைக் கொண்டார். அதைப் போல மோ-ல-போ வின் (Mo-la-po மாளவம்) மைத்திரர்களும், விந்தியமலைப் பகுதிகளில் உட்புகுந்தனர்.

மைத்திரர்களைப் போலப் பண்டேல் கண்டின் அரசன் ஜெய நாகாவும் பேரரசுக் குப்தர்களின் கீழ் இல்லாது முழுமையும் சுயேச்சையான அரசரானார். பாண்டு வமிசத்தின் அரசன் உதயணர், நாக பாலர், அவர் மகன் பாரத பாலர் ஆகிய மற்றொரு பாண்டு வமிசத்தவரும் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டனர். மகாராஜா லஷ்மணர், மகாராஜா சுபந்து ஆகிய இருவரும் சுயேச்சை நிலையினைப் பெற்றதாகத் தெரிகிறது. முதலா

மவர் ரேவாவிற்கும் அலகாபாத்திற்கும் இடைபட்ட பகுதியையும், இரண்டாமவர் மகிஸ்மதிப் பகுதியையும் ஆட்சி செலுத்தினர். மற்ெறாரு மாறுதலும் உள்ளது. மாநில ஆளுநர்கள் தம்மை மகாராஜா என அழைத்துக்கொண்டனர் என்பதே அது. எடுத்துக்காட்டாக வடக்கு வங்காளம், யமுனை நர்மதை ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதி ஆகியவற்றின் ஆளுநர்களைக் காட்டலாம். குப்தர்களுக்கு வலுவான ஆற்றல் சக்தியாக விளங்கிய வாகாடகர்கள் நட்புடன் திகழவில்லை. வாகாடக அரசன் நரேந்திரசேனன் கோசலம், மேகலா, மாளவம் ஆகியவற்றின் மீது மேலாண்மை செலுத்தினான்.

இவ்வாறாகப் புதிய சுயேட்சை அரசுகள், அரைகுறைச் சுயேட்சை அரசுகள், மாநில ஆளுநர்கள் மிகுந்த அதிகாரம் பெற்றது ஆகியவையெல்லாம் குப்தப் பேரரசர்களின் வலிமை குன்றியது என்பதனைத் தெளிவாக்குகின்றன. கி.பி. 495-ல் புத்த குப்தர் மறைந்ததும் வாரிசுரிமைப் போராட்டங்களும் ஹூணர்களின் முற்றுகைகளும் தொடர்ந்தன. புத்த குப்தரின் வாரிசாக விளங்கியவர் அவருடைய உடன் பிறப்பு நரசிம்ம குப்த பாலாதித்தியர் ஆவார். அவருடைய காலத்தில் ஏற்பட்ட ஹூணர் படையெடுப்பு, சுயேட்சை அதிகார வேட்கை, ஆளுநர்களின் அதிகாரப் பற்று, குடும்பக் குழப்பம் ஆகியவையெல்லாம் சேர்ந்து ஸ்கந்த குப்தருக்குப் பின் வீழ்ச்சியுற்ற நிலையிலிருந்த குப்தப் பேரரசைப் படுகுழியில் மேலும் தள்ளின. மத்திய ஆசியாவின் நாடோடிகளான ஹூணர்களின் முதல் ஹூணத் தலைவன் 'தோரமானர்' (Toramana) அவர் மகன் மிகிரகுலர் (Mihirakula) ஆகியோரின் படையெடுப்பும் கடுந்தாக்குதலும் குப்தப் பேரரசுக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தின. ஹூணர்களுக்குப் பின் வாகாடகர் ஹரிசேனரின் தலைமையில் மாளவம், குஜராத் ஆகியவற்றின்மீது ஆதிக்கம் செலுத்தியதால் அரசியல் சிறப்புத்தன்மை வாய்ந்த வளமான மாளவ மாநிலம் குப்தப் பேரரசினின்றும் பிரிந்தது. மாண்டசோரின் அரசர் யாசோ தர்மனும் குப்த ஆதிக்கத்தை உதறினார்.

இந் நிலையில் அரச குடும்பத்திடையே பிளவு காணப்பட்டது. பிளவுபட்ட குடும்பம் எதிரிகளை வா என அழைக்கும் மணி ஓசை அன்றோ ? புத்த குப்தருக்குப் பின் நரசிம்ம குப்தரும் அதன்பின் மூன்றாம் குமார குப்தரும் அவர் மகன் விஷ்ணு குப்தரும் ஆட்சிக்கு வந்தனர். மகதத்தில் கூட விஷ்ணு குப்தரின் ஆட்சி செல்லுபடியாகாத நிலை ஏற்படுவதைக் காண்கிறோம். பெயரள

விலான குப்த ஆதிக்கம் வடக்கு வங்காளம், ஒரிஸ்ஸா, வலபி ஆகியவற்றில் இருந்தது. சில திறையரசர்கள் மட்டும் நன்றி உணர்வுடன் தொடர்ந்து விளங்கினர். கடைசிக் குப்த அரசர் யார் எனத் தெரியவில்லை. வாள்களின் மோதல் ஒலியோடு பேரரசுக் குப்தர் (Imperial Guptas) ஆட்சி முடிவுற்றது.

குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழி வகுத்த சக்திகள் யாவை என்று கண்டோம். குப்தப் பேரரசு துண்டு துண்டாக உடைந்து சிறு சிறு அரசுகள் அந்த உடைசல்களிலிருந்து மலர்ந்தன. அவற்றுள் கீழ்கண்டவை குறிப்பிடத் தக்கவை.

1. வலபியின் மைத்ரர்கள்.
2. பிற்காலக் குப்தர்கள்.
3. ஸ்தானேஸ்வர புஷ்ப பூதிகள்.
4. கன்யாகுப்ஜ மௌகாரிகள்.
5. கூர்ஜரர்கள்.
6. வங்க, கௌட அரசுகள்.
7. கலிங்கம்.
8. காமரூபம்.
9. காஷ்மீர்.
10. நேபாளம்.

## குப்தப் பேரரசின் அழிவில் புதிய சக்திகளின் எழுச்சி :

குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் அரை நூற்றாண்டுக் காலம் வட இந்தியவின் வரலாற்றில் அரசியல் உறுதியற்ற நிலை காணப்பட்டது. பேரரசின் விழ்ச்சியினால் சிற்றரசுகள் ஆதிக்க உணர்வுடன் தமக்குள் மாறுபட்டுக்கொண்டு போரிட்டதோடு ஒன்றையொன்று விஞ்ச முயன்றன. அவைகளெல்லாம் குப்தப் பேரரசின் நிழலில் வேரூன்றி நின்றவை. அவற்றின் வரலாற்றினை அறிந்துகொள்வது ஹர்ஷரின் கால வரலாற்றினை அளிக்கப் பெரிதும் இன்றியமையாததாகும். ஹர்ஷரின் கால வட இந்தியாவை அவை நிழற்படம் போல் காட்டுவன

### வலபி

குப்தப் பேரரசின் அழிவில் எழுந்த அரசுகளில் வலபி அரசே மிகவும் உறுதி வாய்ந்ததாக விளங்கியது. கி. பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மைத்ரக வமிசத்தைச் சார்ந்த சௌராஷ்டிரம் அல்லது கத்தியவார் தீபகற்ப ஆளுநராக விளங்கிய குப்தர்களின் தளபதி படார்காவின் வாரிசுகள் வலிமை பெற்றவர்கள் ஆயினர். வலபி அரசர்களின் பட்டயங்களின் பொருளைத் தவறாக மொழிபெயர்த்தவர்கள் இந்தப் படார்கா

## வலபியின் மைத்ரேகர்கள்




[1] இரண்டாம் சீலாதித்தியர் முதல் ஆரும் சீலாதித்தியர் வரை உள்ளவர்கள் பிளீட் (Fleet) என்னும் அறிஞரால் மூன்ரும் சீலாதித்தியர் என்று தொடங்கி ஏழாம் சீலாத்தியர் என அழைக்கப்பட்டுள்ளனர். நாம் மேலே குறிப்பிட்டுள்ள சீலாத்தியர் இரண்டாம் சீலாத்தியர் எனப்பட்டுள்ளார்.

மைத்ரரர்களை எதிர்த்துப் போரிட்டார் என்று கூறிவந்தனர். பின்னர், அதனை முறைப்பட ஆராய்ந்து அறிஞர் ஹல்ட்ச் (Hultch), மைத்ரக வமிசத்தவரே படார்கா என்று எடுத்துக் காட்டினார். இக் கருத்தே பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

வலபி மரபின் முதல் இரு அரசர்களான படார்காவும் அவர் மகன் தாரசேனரும் தம்மைச் 'சேனாபதி' என்றே அழைத்துக் கொண்டனர். ஆனால், அவர்களின் வாரிசுகள் தம்மை மகாராஜா அல்லது மஹா சாமந்த மஹாராஜா என அழைத்துக்கொண் டனர். தாரசேனரின் இளைய தம்பியும், இம் மரபின் மூன்றாவது அரசனுமான துரோண சிம்மன், மகாராஜா என்ற பட்டத்தைக் குப்த அரசர் புத்த குப்தரிடமிருந்து பெற்றார் எனத் தெரிகிறது. துரோண சிம்மரும், அவருடைய வாரிசுகளாக விளங்கிய துருவ சேனரும், சுயேச்சை அரசர்களைப் போன்று நிலக்கொடைகளை வழங்கினர் எனினும் அவர்கள் குப்தர்களின் பிடியிலிருந்து முழுமையாக விடுபடவில்லை.

வலபி அரசு எப்போது உருவாயிற்று என்பதனை உறுதியாக உரைத்தல் எளிதன்று. கி. பி. 502-ல் மகாராஜா துரோண சிம்மரால் வெளியிடப்பட்ட நிலக்கொடைப் பட்டயமே காலத்தில் முந்தியது ஆகும். நிலக்கொடைகள் எல்லாம் வலபி யிலிருந்து வெளியிடப்பட்டுள்ளமையால் அதுவே தலைநகராக விளங்கியிருக்கக் கூடும். வலபி அரசின் பரப்பும் உறுதியாகத் தெரியவில்லை.

வலபி அரசர்களின் பட்டயங்கள் ஏராளமாகக் கிடைத் துள்ளபோதிலும், அவ் வரசர்களின் அரசியல் வரலாற்றைத் தொகுக்க அவை உதவவில்லை. முதலாம் துருவசேனரின் பட்டயங்கள் 16-க்கு மேல் கிடைத்துள்ளபோதிலும் வரலாற் றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி எதனையும் அவை குறிப்பிடவில்லை.

கி. பி. 525ஆம் ஆண்டிற்குரிய முதலாம் துருவசேனரின் பட்டயத்தில் அவர் அரியணையைப் போர்வல்லமையால் கைப் பற்றியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கொண்டு அரியணை ஏறுவதில் குடும்பத்தில் குழப்பம் நிலவியதாகக் கருதப்படுகிறது. அக் கருத்துத் தவறு எனவும், மைத்திரேயர்களின் அதிகாரத்தை நிலைநாட்டுவதில் அவர் வெற்றி பெற்றார் என்பதே அதன் பொருள் என்றும் கூறுவர். முதலாம் துருவசேனர் மகாபிரதிகாரா, மகா தண்ட நாயகா, மகா கார்த்திகா முதலான பட்டங்களைப்

பெற்றிருந்தார் எனப் பட்டயங்களின் வாயிலாக அறிகிறோம். மைத்திரேயர்கள் அவர்தம் காலத்தில் மேலும் செல்வாக்குப் பெற்றனர். காருலகா அரசர், கிர்ஹரின் இரண்டாவது வராஹதாசர் ஆகியோர் முதலாம் துருவசேனருக்கு அடிபணிந்து அரசோச்சினர். அவர் குறைந்தது 25 ஆண்டுகளேனும் ஆட்சி செலுத்தியிருக்கக்கூடும்.

முதலாம் துருவசேனருக்குப் பின் அவருடைய உடன்பிறப்பான தாரபட்டர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். தாரபட்டர் சிறிது காலமே ஆட்சி செலுத்தியிருக்க வேண்டும். தாரபட்டரின் மகன் குகசேனரின் கி. பி. 559ஆம் ஆண்டின் ஆணை ஒன்று முதலாம் துருவசேனரின் கடைசி ஆணையின் காலத்திற்குப் பத்து ஆண்டுகளுக்குப் பின் காணப்படுவதால் அவ்வாறு கருதப்படுகிறது. தாரபட்டரின் பேரன் இரண்டாம் தாரசேனரின் குறிப்புகளில் தாரபட்டர் மகாராஜா என்று அவர் குறிப்பிடப்பட்டிருப்பினும் குக சேனரின் ஆணைகளில் அவருடைய பெயர் குறிப்பிடப்படவில்லை என்பதைக் கொண்டு, தாரபட்டர் வலபி அரியணை ஏறவில்லை என்று கூறப்படும் கருத்தும் உள்ளது.

குகசேனர் சுமார் பத்து ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார் என்று கருத வேண்டியுள்ளது. 'மகாராஜா' என்ற பட்டத்தை மட்டுமே கொண்டிருந்த குகசேனர் சமயப் பொறையுணர்வு மிக்கவராய்த் திகழ்ந்தார். அவர் சைவம், பௌத்தம் ஆகிய இரு சமயங்களிலும் ஆழ்ந்த பற்றும், பக்தியும் கொண்டிருந்தார். முதலாம் துருவசேனர் கொண்டிருந்த 'பரம பட்டாரகா - பாதானுத்யாதா' என்ற பட்டத்தைக் கைவிட்டுவிட்டார்.

குகசேனரின் மகன் இரண்டாம் தாரசேனர் அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றார். இரண்டாவது தாரசேனர் சுமார் 30 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கக்கூடும். அவருடைய பட்டயங்களில் 'சாமந்தா' என்ற எளிய பட்டமும், மகாராஜா மகாசாமந்தா, மகாராஜாதிராஜா முதலிய பட்டங்களும் காணப்படுகின்றன.

இரண்டாவது தாரசேனர் கி. பி. 590ஆம் ஆண்டு மறைந்த பின் அவர் மகன் முதலாவது சிலாதித்திய தர்மாதித்தியர் அரசு கட்டில் ஏறினர். யுவாங் சுவாங் தம்முடைய குறிப்புகளில் மோ - ல - போ வின் (Mo - la - po) அரசர் சிலாதித்தியர் என்று குறிப்பிட்டுள்ளார். சிலாதித்தியரின் ஆட்சி ஏறக்குறைய

25 ஆண்டுகள் நடைபெற்றது. சீலாதித்தியரும், அவர் தம் சகோதரர் முதலாவது காரகிரகரும் இணைந்து ஆட்சி நடத்தினர். இதனை அக் காலப் பட்டயங்கள், யுவாங் சுவாங்கின் குறிப்புகள் ஆகியவற்றினுல் அறிகிறோம்.

மோ-ல-போ வினை விளக்குகையில் சீலாதித்தியரைக் குறிப்பிட்டுத், தம் காலத்திற்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் அவர் அதனை ஆட்சி செலுத்தியதாக யுவாங் சுவாங் குறிப்பிடுகிருர். எனவே, சீலாதித்தியர் கி. பி. 580-ல் ஆட்சி செலுத்தியிருக்கக்கூடும். சீலாதித்தியருக்குப் பின் அவரது சகோதரர் முதலாவது காரகிரகர் ஆட்சி செலுத்திஞர். மூன்ருவது துருவ சேனுவின் காலத்திற்குப் பின் வெளியிடப்பட்ட செப்பேட்டுக் குறிப்புகள் அனைத்தும் முதலாவது சீலாதித்தியருக்குச் 'சாயா விற்கும்' விந்திய மலைக்கும் இடையே உள்ள பகுதிகளின் தலைவன் என அழைக்கப்பட்ட மகன் ஒருவன் இருந்ததாகவும், அவன் தன் தந்தையின் காலத்திலேயே அப் பகுதிகளை வென்றதாகவும் தெரிவிக்கின்றன.

யுவாங் சுவாங் மோ-ல-போ நாட்டினைத் தெற்கு 'லே' எனவும், வடக்கு 'லோ' எனவும் இரு பிரிவுகளாகப் பிரித்துக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து அரசு புரிந்த குடும்பப் பிரிவினர்கள் நாட்டைப் பிரித்து ஆண்டிருக்கவேண்டும் என அறியப்படுகிறது. சீலாதித்தியரின் சகோதரர் காரகிரகர் தனி உரிமை பெறவேண்டிச் சில பகுதிகளுக்குத் தம்மை அரசராக அறிவித்துக் கி.பி. 610 ஆம் ஆண்டுவரை முழுக் கட்டுப்பாடின்றி ஆட்சி புரிந்திருக்கவேண்டும் என்பர். முதலாம் சீலாதித்தியர் ஹர்ஷர் அரசோச்சிய முதல் ஏழு ஆண்டுகள்வரை வாழ்ந்தார்.

சீலாதித்தியருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற காரகிரகரின் ஆட்சிக் காலத்திலேயே மைத்ரேகர்களின் ஆட்சிச் சிறப்பும், ஆற்றலும் தொடர்ந்து நீடித்தன. ஹர்ஷர் மைத்திரேயர்களைக் கருதி நோக்கத் தொடங்கியது காரகிரகரின் காலம் முதலேதான். காரகிரகரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர் இரண்டாவது துருவசேனு பாலாதித்தியர். அவர் புலிகேசி சாளுக்கிய நாட்டை ஆண்டபோது வலபியை ஆண்டார். மூன்ருவது தாரசேனு கிடாகாவிலிருந்து ஆட்சி நடத்தியிருக்க வேண்டும் என்பதனை அவரது ஆட்சியைப்பற்றி நமக்குக் கிடைத்துள்ள கி.பி. 623-ஆம் ஆண்டுச் செப்பேட்டின் வாயிலாக அறிகிறோம். மாளவப் பகுதிகள் அனைத்தும் அவரது காலத்தில் இழக்கப்பட்டன.

மூன்றாவது தாரசேனாவிற்குப் பின்னர் இரண்டாவது துருவசேனர் பாலாதித்தியர் அரசு கட்டிலில் அமர்ந்தார். இரண்டாவது துருவசேனர் ஹர்ஷரின் சம காலத்தவர் ஆவார். 'து - லு - போ - போ - ட' என யுவாங் சுவாங் வலபியின் பயணக் குறிப்புகளில் குறிப்பிடுவது அவரைத்தான்.

இரண்டாவது துருவசேனர் ஹர்ஷரின் மேலாதிக்கத்தை ஏற்று அவருக்கு அடிபணிந்த சிற்றரசராகவே விளங்கினார். கி.பி. 643-ல் ஹர்ஷப் பேரரசர் பிரயாகையில் பேரவை ஒன்றினைக் கூட்டியபோது அப் பேரவையில் அவர் பங்கு கொண்டார். பிரயாகைப் பேரவையின் மேற்கே அமைந்திருந்த கொடைப் பகுதியின் காப்பாளராகவும் அவர் விளங்கினார். துருவசேனர் சமயப் பொறையுணர்வுடன் நடந்துகொண்டார். இந்து, பௌத்தம் ஆகிய இரு சமயங்களையும் ஒன்றேபோல் நடத்தினர். ஆனால், சிவபக்தர் என்ற பொருள் தரும்படியான பரம மகேசுவரர் என்ற சிறப்புப் பெயரை மட்டும் கொண்டிருந்தார்.

**ஹர்ஷர் வலபி உறவு :**

வலபி அரசரான இரண்டாம் துருவசேனர் ஹர்ஷரால் வெல்லப்பட்டார் என்று அறியக் கூர்ஜரக் குறிப்புகள் துணைபுரிகின்றன. ஆனால், இது யூகமே ஆகும். 'அவ்வாறு தோல்வி அடைந்தபின் தத்தா எனும் அரசரிடம் துருவசேனர் சரண் அடைந்தார். ஹர்ஷர் வலபியைத் தாக்கியதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உண்டு. தெற்குப் படையெடுப்பிற்கு வசதியாக உள்பகுதியைக் கைப்பற்றுவதும், கடற்கரையோரப் பகுதியில் வாணிக வளம் பெருக்கிப் பொருளாதார ஆதிக்கம் பெறுவதும் அக் காரணங்கள் ஆகும்.

நாம் ஏற்கனவே வலபி அரசு ஹர்ஷராலும் சாளுக்கியராலும் ஆற்றல் இழந்தது என்று கண்டோம். ஹர்ஷரோ பேரரசர். அவரை எதிர்த்த வலபிச் சிற்றரசர் ஹர்ஷரைவிட ஆற்றல் வாய்ந்த அரசர் ஒருவரிடத்துச் சரண் புகுந்திருந்தால் பொருளுண்டு. ஆனால், அவர் மற்றொரு சிற்றரசரான இரண்டாம் தத்தா என்பவரிடம் சரண் புகுந்திருந்தார் எனில், அதற்குக் காரணம் என்னவென்று ஆராயப்புகுந்த வரலாற்றறிஞர்கள் வலபியின் அரசர் சாளுக்கிய மேலாண்மையை ஏற்றுக் கூர்ஜரத்தின் சிற்றரசரான இரண்டாவது தத்தாவின் மூலமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார் என்பதே இதன் காரணம் என்பர். மற்றுமொரு காரணத்தையும் அதனை அடிப்படையாகக் கொண்டு நாம்

கூறலாம். கூர்ஜர அரசின் உதவிகொண்டு சாளுக்கியரின் உதவியைப் பெற்று ஹர்ஷரை வாளாவிருக்கச் செய்யலாம் என்ற எண்ணமும் இருக்கலாம்.

Women
Courtallam 602.

ஆனால், வலபியின் அரசர் எதிர்பார்த்தபடி சாளுக்கியரின் உதவி கிட்டவில்லை. மேலும், குறுகிய காலமே அவர் கூர்ஜர அரசில் தங்கியிருந்தார். சாளுக்கியர்களிடமிருந்து எதிர்பார்ப்பதைவிட உறுதியான அதிக அரசியல் உரிமையை ஹர்ஷரிடமிருந்து எதிர்பார்க்க முடியும் எனத் துருவசேனர் எண்ணினார்.

அதனால், ஹர்ஷருக்கும், மைத்ரேக ஹர்ஷருக்கும் பேச்சு வார்த்தைகள் கூர்ஜர அரசு வழியே தொடங்கின. ஹர்ஷர், மைத்திரேய அரசின் உறவு, திருமணத் தொடர்பு ஏற்பட வழி வகுத்தது. இவ்வாறு ஹர்ஷர் மண உறவை மேற்கொண்டது அவருடைய அரசியல் நுணுக்க அறிவைக் காட்டுகிறது. இரண்டாவது துருவசேனருக்கும், ஹர்ஷரின் மகளுக்கும் கி.பி. 632-ல் திருமணம் நடைபெற்றது. இது சேனருக்கும் பயன் தருவதாகவே அமைந்தது. ஹர்ஷர் மைத்திரேயர்களின் முழுமையான ஒத்துழைப்பையும், விசுவாசத்தையும் துருவசேனரின் ஆட்சிக் காலம் முழுமையும் பெற்றார். மேற்குப் படைபெடுப்பை மேற்கொண்டு, மாளவத்தின் பகுதிகளைக் கைப்பற்றி அதனை ஹர்ஷர் இரண்டாவது துருவசேனருக்கு அளித்தார். மாளவத்தை அன்றைய சூழ்நிலையில் துருவசேனர் தாமே கைப்பற்றுவது என்பது எளிதன்று. ஏனெனில், தேவ குப்தரின் இறப்பிற்குப் பின் சாளுக்கியரின் கட்டுப்பாட்டின் கீழேயே மாளவம் இருந்து வந்தது. ஹர்ஷர் மாளவப் பகுதிகளைத் துருவசேனருக்கு அளித்ததன் மூலமாகச் சாளுக்கியர்களுக்கும், மைத்ரேகர்களுக்கும், பிரச்சினைக்குரிய பகுதியைத் தோற்றுவித்து, இழந்த பகுதிகளைத் திரும்பப் பெறவேண்டும் என்ற துருவசேனரின் ஆவலை நிறைவேற்றினார். ஹர்ஷரும், துருவசேனரும் ஒன்றுசேர்ந்தமை அரசரின் ஆற்றலைப் பெருக்கிட உதவியது.

ஹர்ஷர் போரிட்டதும், இரண்டாம் தத்தாவிடம் வலபி அரசர் தஞ்சம் புகுந்ததும் வரலாற்று அறிஞர்களிடையே பிரச்சினைக்குரியனவாக விளங்கிவருகின்றன. ஆர். சி. மஜூம்தார், (R. C. Majumdar) கி.பி. 644ஆம் ஆண்டு வலபியின் அரசு பொறுப்பை நான்காவது தாரசேனா பெற்றார் என்றும், சக்கரவர்த்தி என்ற பட்டத்துடன் தம்மை அழைத்துக்கொண்டார் என்றும் குறிப்பிட்டார். அவ்வாறு அவர் தம்மை அழைத்துக்

கொண்டது ஹர்ஷரின் பகைக்குக் காரணமாகும். பின் ஹர்ஷரின் ஆற்றலுக்கு அஞ்சி நந்திபுரியின் இரண்டாவது தத்தாவிடம் அவர் தஞ்சம் புகநேர்ந்திருக்கக்கூடும்; இதுபற்றி உறுதியாகக் கூறுவதற்கும் இல்லை என்றும் கூறி, ஹர்ஷர் வலபிப் படையெடுப்பைக் கி.பி. 640ஆம் ஆண்டிற்குப் பின், அதாவது இரண்டாவது துருவசேனருக்குப் பின் ஆட்சிக்கு வந்த நான்காவது தாரசேனரின் காலத்திலேயே மேற்கொண்டிருக்க வேண்டும் என முடிவு செய்யத் தூண்டுகின்றன என்று குறிப்பிடுகிறார். நான்காவது துருவசேனரின் காலத்தில்தான் படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கருதுவோர், யுவாங் சுவாங் தமது பயணக் குறிப்புகளில் இரண்டாவது துருவசேனருக்கும், ஹர்ஷருக்கும் பகை ஏற்பட்டிருப்பின் உறுதியாக அதைக் குறிப்பிட்டிருப்பார் என வாதிட்டனர். இதற்குப் பதிலளிப்பவர்கள் பௌத்த சமயத்தைச் சார்ந்த இரு அரசர்களிடையே நிகழ்ந்த ஒரு கவலை மிக்க நிகழ்ச்சியை யுவாங் சுவாங் தம் பயணக் குறிப்புகளில் முக்கியத்துவம் அளித்துக் குறித்திருக்கமாட்டார் என்று பதில் கூறினர். இரண்டாவது துருவசேனர் தஞ்சம் அடைந்ததாகக் கருதப்படும் இரண்டாவது தத்தாவின் கடைசிப் பட்டயத்தின் (கி.பி. 641ஆம் ஆண்டு) வாயிலாக இரண்டாவது தத்தாவிடம் தஞ்சம் புகுந்தவர் இரண்டாவது துருவசேனரின் மகன் நான்காவது தாரசேனர் என்பதைவிட இரண்டாவது துருவசேனரே என்று அறியலாம். அதனை மூன்று அரசர்களின் முக்கிய நிகழ்ச்சிகளின் காலத்தைக் கொண்டு உறுதி செய்யலாம்.

இரண்டாவது துருவசேனர், இரண்டாவது தத்தா ஆகிய இரு அரசர்களின் நிலக் கொடை ஆணைகள் முறையே கி. பி. 640, 641, காலத்தைச் சேர்ந்தவை. ஆனால், நான்காவது தாரசேனர் தம்மைச் சக்கரவர்த்தி என அழைத்துக்கொண்ட முதல் குறிப்பின் காலம் கி. பி. 645-6 ஆகும். இரண்டாவது துருவசேனர் பிரயாகைப் பேரவையில் வலபியின் பிரதிநிதியாகக் கி. பி. 643-ல் பங்கேற்றமையால் நான்காவது தாரசேனர் கி.பி. 644-ல் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது.

கி. பி. 645-6-ல் தாரசேனர் தம்மைச் சக்கரவர்த்தி என அழைத்துக்கொண்டமையாலும், கி. பி. 649-ல் புரோச்சைக் கைப்பற்றி அங்கிருந்து இரு ஆணைகளை வெளியிட்டிருப்பதாலும், கூர்ஜர அரசர் இரண்டாம் தத்தரிடம் சரண் புகுந்தவர் நான்காவது தாரசேனர் அல்லர் எனலாம். எனவே, அவர் இரண்டாவது துருவசேனரே ஆவார்.

இரண்டாவது துருவசேனருக்குப் பின் மைத்ரேக வமிசத்தின் பன்னிரண்டாவது அரசர் நான்காவது தாரசேனர் ஆவார். அவர் காலத்தில் மைத்மதிரேய வமிசத்தின் ஆற்றல் பெருகியது. மைத்ரேகர்களின் வரலாற்றில் பரம பக்தாரகா, மகா ராஜாதிராஜா, பரமேஸ்வர சக்கரவர்த்தி முதலான பட்டங்களை அவரே பெற்றார். இவ்வாறு அவர் பட்டம் பெற்றது ஹர்ஷரின் ஆற்றலும், சாளுக்கிய அரசின் ஆற்றலும் குன்றியிருந்தன என்பதைக் காட்டுகின்றது.

கே. பி. ஜெயஸ்வால் (**K. P.** Jayaswal) நான்காவது தாரசேனர் ஹர்ஷரின் பேரர் ஆகையால்தான் பேரரசு பட்டங்களைக் கொண்டார் என்று குறிப்பிடுகிறார். ஆனால், இக் கருத்துப் பொருத்தமில்லை. துருவசேனு ஹர்ஷரின் மகளுக்கு மணம் நடைபெற்றது கி. பி. 632-ல். ஆனால், துருவசேனரின் மகன் தாரசேனர் அரியணை ஏறியது கி. பி. 644-ல். எனவே, அவர் அப்போது பன்னிரண்டு வயதுச் சிறுவன். தாரசேனர் பெற்றதாகக் கூறப்படும் சிறப்புகள் வயதுக் கேற்றவை அல்ல. எனவே, துருவசேனரின் மூத்த தாரத்தின் மகனே தாரசேனர் என்று கருதப்படுகிறது. கி. பி. 650-ல் அவர் இறந்தார்.

**இராஜபுதனத்துக் கூர்ஜரர்கள்**

கி. பி. ஆறும் நூற்றாண்டின் அரை இறுதிப் பகுதியிலே தான் கூர்ஜரர்கள் சிறப்புப் பெறத் தலைப்பட்டனர். குப்தர்களின் பேரரசு வீழ்ச்சி பெற்றதை அவர்கள் தமது அரசியல் ஆதிக்கத்தைப் பெருக்கச் சாதகமாக்கிக்கொண்டனர். அவர்களுடைய குறிப்பிடத்தகுந்த அரசு, ஜோத்பூருக்கு அருகில் இராஜபுதனத்தின் மையப் பகுதியில் நிறுவப்பட்டது. இப் பகுதி 'கூர்ஜரத்ரா' என அழைக்கப்பட்டது. இன்றைய குஜராத் பகுதியுடன் இரண்டு இன்றியமையாத பகுதிகளும் கூர்ஜரர்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன. குஜ்ரான்வாலா, குஜர்ஷான் முதலியன எடுத்துக்காட்டுகளாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் சஹாரன்பூர் மாவட்டம் குஜராத் என்றே அழைக்கப்பட்டது. இன்றுங்கூடக் குவாலியரின் வடக்கு மாவட்டங்களிலொன்று 'குஜர்கார்' என்று அழைக்கப்படுகிறது.

இந்த இடங்களின் பெயர்கள் கூர்ஜரர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தனர் என்பதனைக் காட்டுகின்றன. மேற்கு இமாலயத்திலும், பஞ்சாபிலும், உத்தரப்பிரதேசத்

திலும் மேற்கு இராஜபுதனத்திலும், சிந்துவைக் கடந்த குன்றுப் பகுதிகளிலும் பழைய கூர்ஜரர்களின் மரபினர் வாழ்ந்துவருகின்றனர்.

கூர்ஜரர்களின் தோற்றம் பெரிதும் விவாதத்திற்குரியதாக இருந்துவருகிறது. கூர்ஜரர்கள், ஹூணர்களுடன் இந்தியாவிற்கு வந்த அயலவர்கள் எனப் பெரும்பாலான அறிஞர்கள் கருதுகின்றனர். இக் கருத்தினை மறுத்துரைப்போர் கூர்ஜரம் என்பது இடப்பெயர் எனவும், அங்கு வசித்தவர்கள் கூர்ஜரர்கள் எனவும் குறிப்பிடுகின்றனர். கூர்ஜரர்கள் ஓரின மக்கள் என்பதைத் தவிர அவர்கள் அயலவர்கள், ஹூணர்களின் படையெடுப்பின்போது வந்தவர்கள் என்பனவற்றிக்கு உறுதியான சான்று ஏதும் இல்லை. தக்க சான்று கிடைக்கும்வரை இப் பிரச்சினை முடிவில்லாதது எனலாம்.

கூர்ஜரர்களின் பண்டைய அரசினை இராஜபுதனத்தில் இக் கால ஜோத்பூருக்கு அருகில் கி. பி. 6ஆம் நூற்றுண்டின் மையப் பகுதியில் நிறுவியவர் ஹரிச்சந்திரர் ஆவார். ஹரிச்சந்திரர் பிராமண குலத்தவர் என்பர். அவருக்கு இரு மனைவியர் எனவும், பிராமண மனைவிக்குப் பிறந்தவர்கள் பிரதிஹார பிராமணர்கள் என அழைக்கப்பட்டனர் எனவும் கூறுவர். ஹரிச்சந்திரரின் க்ஷத்திரிய மனைவியே அரசி என அழைக்கப்பட்டார். போக பட்டா, கக்கா, இரஜ்லா, தட்டா என்ற நான்கு மக்கள் இருந்தனர் இந் நால்வரும் தனித்தனிப் பகுதிகளை ஆட்சி செலுத்தினர். அவர்களுள் முதல் இருவரைப்பற்றி ஏதும் தெரியவில்லை, மூன்றுவது மகன் இரஜ்ல மாண்டவியபுரத்தில் ஆட்சி செலுத்தினுர். அவருக்குப்பின் நரபட்டாவும் மேதாந்தகாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தினுர். ஹரிச்சந்திராவும் மேலே குறிப்பிடப்பட்ட அவருடைய மூன்று வாரிசுகளும் கி.பி. 550 முதல் 640 வரை ஆட்சி செலுத்தினர். பத்து அரசர்களைக் கொண்ட எட்டுத் தலைமுறையினர் சுமார் இருநூறு ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செலுத்தினர் ஹரிச்சந்திரரும் அவருடைய மூன்று வாரிசுகளும் ஹர்ஷரின் காலத்தில் ஆட்சி செலுத்தியவர்கள் ஆதலால் அவர்களைப்பற்றி ஈண்டுக் குறிப்பிட வேண்டியதாயிற்று.

**நந்தி புரியின் கூர்ஜரர்கள்**

கி. பி. 629 முதல் 641 வரை வெளியிடப்பட்ட பட்டயங்கள் முதலாம் தத்தாவின் பேரனும் முதலாம் வீட்டராக ஜெயப்பட்டாவின் மகனுமான இரண்டாம் தத்தா பிரசாந்தராக என்னும்

அரசனுல் வெளியிடப்பட்டன. இராஜபுதனத்தின் மற்ருெரு பகுதியான புரோச் கூர்ஜரத் தலைவர்களால் ஆளப்பட்டுவந்தது. இரண்டாம் தத்தாவின் அரசு வடக்கில் மாகி ஆற்றிலிருந்து தெற்கில் கிம் வரையிலும், மேற்கில் துறைமுகத்திலிருந்து கிழக்கில் மாளவம், காண்டேஷ் வரையிலும் பரவியிருந்தது.

எல்லாக் கொடைகளும் நந்திபுரியிலிருந்து வெளியிடப்பட்டமையால் அதுவே தலைநகராக விளங்கியிருக்கக் கூடும். பியூசிலர் புரோச்சையும், பகவன்லால் ராஜ்பிள்ளா மாநிலத்தில் கர்ஜன் ஆற்றுக்கரையில் அமைந்துள்ள நான்தோடு என்னுமிடத்தையும் நந்திபுரி என்று கருதுகின்றனர்.

கூர்ஜர அரசர்களின் குலத்தில் பிறந்துள்ளமையாலும் கி. பி. ஆரும் நூற்ருண்டின் முதல் காலப்பகுதியைச் சேர்ந்திருந்தமையாலும் முதலாம் தத்தா ஹரிச்சந்திராவின் இளைய மகன் என்று கருதப்படுகிருர். புரோச் அரசுடன் மாளவத்தில் அவந்தியைத் தலைநகராகக் கொண்ட மற்ருெரு கூர்ஜர அரசைப் பற்றிக் கேள்விப்படுகிருேம். அவர்கள் பிரதிஹாரர்கள் என்று அழைக்கப்படுவதால் அவர்கள் ஹரிச்சந்திராவின் மக்களுள் ஒருவர் என்று கருதப்படுகிறது.

முதலாம் தத்தா புரோச்வரை முன்னேறிஞரா என்பது தெரியவில்லை. காலசூரிகளின் ஆதிக்க வீழ்ச்சிக்குப் பின் தெற்கு இராஜபுதனத்தில் முதலாம் தத்தா அரசு ஒன்றை நிறுவிஞர். காலசூரிகளை வெற்றிகொள்ளக் கூர்ஜரர்கள் புலிகேசியின் உதவியை நாடினர். இம் முறையினுல் குஜராத்தில் கூர்ஜரர்கள் தங்கள் பகுதிகளைக் கைப்பற்றினர். இவ்வாருகவே மாளவம் அல்லது அதன் பெரும்பகுதி அவர்கள் கைவசம் வந்திருக்கக் கூடும்.

முதலாம் தத்தாவும் அவர்தம் வாரிசுகளும் சாமந்தாக்கள் அல்லது திறையரசர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் அரச பட்டம் எதனையும் தங்கள் பதிவுகளில் கொண்டிருக்கவில்லை. ஆனுல், வல்லமை மிக்க வேறு அரசுகளுக்கு அடிபணிந்ததாகவும் பதிவுகளில் சான்று இல்லை. எனவே, இராஜபுதனத்தில் ஆட்சி செலுத்திய தலையாய கூர்ஜர குலத்தவருக்கோ சாளுக்கியருக்கோ அவர் பணிந்து செயல்பட்டிருக்கக்கூடும்.

**மௌகாரிகள்**

மௌகாரி என்ற பெயர் இந்தியாவின் பண்டைய குலம் அல்லது இனத்தைக் குறிக்கும். மௌகாரிகள் பற்றிக் கிடைத்த

முதல் வரலாற்றுச் சான்ருன களிமண் முத்திரை ஒன்றினை கன்னிங்காம் (Cunningham) கயாவில் கண்டெடுத்தார். அதில் பிராகிருதப் பழங்குறிப்பு மோகரினம் மௌரிய பிராமிய முறையில் எழுதப்பட்டுள்ளது. இக் களிமண் முத்திரை கயாவில் கிடைத்ததைக் கொண்டு அங்கு ஒரு மௌகாரி இனத்தவர் வாழ்ந்தனர் எனத் தெரியவருகிறது. மௌகாரிகள் பற்றிய மூன்று சிறிய பட்டயங்களை, அல்டேகர் (Altekar) கோட்டா மாநிலத்தில் கண்டெடுத்தார். இப் பட்டயக் குறிப்பின் காலம் கி. பி. 239 ஆகும். மௌகாரி தளபதியின் பெயர் அதில் குறிப் பிடப்பட்டுள்ளது.

**மௌகாரிகள்**

மகாராஜா ஹரிவர்மன்
|
மகாராஜா ஆதித்திய வர்மன்
|
மகாராஜா ஈஸ்வர வர்மன்
|
மகாராஜாதி இராஜா ஈசானவர்மன்
|
மகாராஜாதிராஜ சர்வ வர்மன் — சூரிய வர்மன்
|
மகாராஜாதிராஜ அவந்தி வர்மன்
|
கிரக வர்மன்-இராஜ்ய ஸ்ரீ — சுவா....(சுச்சா)

பாணினியின் இலக்கண முறையை விளக்கிச் சிறப்புப் பெற்ற இடைக்கால உரை ஆசிரியர்களான வாமனரும் கையாட் டாவும் மௌகாரியரை எடுத்துக்காட்டாகக் கொண்டு சில சொற்களின் அமைப்பு முறைகளை விளக்குகின்றனர். அச் சொல் 'முன்னோரிடமிருந்து பெறுதல்' என்பதைக் குறிக்கும் எனக் கூறுகிறார்கள்.

மௌகாரி இனத்தின் முன்னோர்களில் ஒருவர் 'மௌகாரர்' அல்லது 'தலைவர்' என்ற பெயரால் சிறப்பிக்கப்பட்டார் எனவும், அவ் வழிவந்தவர்கள் மௌகாரிகள் என அழைக்கப்பட்டனர்

எனவும் ஹிரானந்த சாஸ்திரி குறிப்பிட்டார். பாணர் 'மௌகாரர்' என்பது கிரக வர்மனின் குடும்ப முன்னோர்களைக் குறிக்கும் எனக் கருதுகிறார். யஞ்ன வர்மன், சார்தூல வர்மன், ஆனந்த வர்மன் என்ற மூன்று மௌகாரி அரசர்களைக் குறித்துப் பராபரிலும், கயாவிற்கு அருகிலுள்ள நாகார்ஜுன மலைக்குகையிலும் மூன்று மௌகாரிப் பட்டயங்கள் கிடைத்துள்ளன. அவை யஞ்ன வர்மனைக் காட்டுவதோடு, யஞ்ன வர்மனின் மகன் சார்தூல வர்மன் என்றும், சார்தூல வர்மனின் மகன் ஆனந்த வர்மன் எனறும் காட்டுகின்றன. இம் மூவருமே குப்தர்களின் திறை அரசர்களாக விளங்கினர். இந்த மூன்று பட்டயங்களும் ஆனந்த வர்மன் காலத்தில் செதுக்கப்பட்டன. இவர் குப்தப் பேரரசு வீழ்ச்சியின்போது செல்வாக்குடன் திகழ்ந்தார். இந்தப் பட்டயங்கள் அவருடைய பாட்டனுரைத் திறை அரசராகக் குறிப்பிடுகின்றவே அன்றிப் பேரரசராகக் குறிப்பிடவில்லை.

பியூஹிலர் (Buhler) இந்திரஜித் கில்ஹார்ன், (Kielhorn) மஜும்தார் முதலிய வரலாற்றறிஞர்கள் மேலே குறிப்பிட்ட மூவருடைய ஆட்சிக்காலம் குப்தர்களுக்குப் பின்னும், ஹர்ஷர் காலத்திற்கு முன்னும் உள்ள காலமாகக் கருதுகின்றனர். கௌமுடி மகோத்சவம் என்ற இலக்கிய ஆதாரம் கொண்டு மகதம் குப்தர்களினுல் ஆளப்படுமுன் மௌகாரிகளால் ஆளப்பட்டிருக்க வேண்டும் என ஈ. ஏ. பயர்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார். ஆனால், அவர் தம் கருத்தை நிலைநாட்ட எடுத்துக்கொண்ட ஆதாரம் தெளிவில்லாத ஒன்று. கௌமுடி மகோத்சவத்தில் குறிப்பிடப் படும் ஆண்டுகளும் நிகழ்ச்சிகளும் வரலாற்றிற்குப் பொருந்துவன ஆகா. அந் நூலில் காணப்படும் 'சந்தசேரு' என்ற பெயர் சந்திர குப்தரைக் குறிப்பிடும் என்பது பொருந்தவில்லை. அதைப் போலவே சுந்தர வர்மன், கல்யாண வர்மன் ஆகிய இருவரையும் மௌகாரிகள் என்று குறிப்பிடுவதும் சரியாகப் படவில்லை. எனவே, பயர்ஸ் கூறிய கருத்து ஏற்புடையதாக இல்லை.

ஹர்ஷ சரிதத்தில் பாணர் 'க்ஷத்திர வர்மன்' என்ற பெயரைக் குறிப்பிட்டாலும் அப் பெயர் யாரைக் குறிப்பிடுகிறது என்பது தெரியவில்லை. பயர்ஸ், பாணர் குறிப்பிட்டுள்ள க்ஷத்திரியவர்மர் தாம் சந்திரவல்லிப் பட்டயத்திலுள்ள தொடக்க காலக் கடம்ப அரசனை மயூரசர்மனுல் தோற்கடிக்கப்பட்ட மௌகாரிக அரசன் என்று கூறுகிறார். ஆனால், சந்திரவல்லிப் பதிவில் க்ஷத்திர வர்மன் பெயர் குறிப்பிடாது 'மோகாரி' என்ற சொல் மட்டுமே காணப்படுகிறது. சேலட்டூர் (Saletore) என்ற அறிஞர் சந்திர

வல்லிப் பதிவில், மோகாரி என்ற சொல்லுக்கு முன் கர்நாடகா, புனடா என்ற சொற்கள் காணப்படுவதால், கர்நாடகத்தில் ஒரு மௌகாரி குலம் வாழ்ந்தது என்பதை இக் குறிப்பு மெய்ப்பிக்கிறது என்றும் கருதுகிறார். மௌகாரிகளின் நான்கு தூண் வேள்விப் பட்டயங்கள் அவர்கள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் இராஜபுதனப் பகுதியில் வாழ்ந்தனர் என்பதனைக் காட்டுகின்றன. அவர்கள் பிற்காலத்தில் ஆற்றல் மிக்கவர்களாக ஆன பின்னர் மத்திய பஞ்சாப்பைச் சேர்ந்த மத்திராவின் அரசன் அஸ்வபதியின் வழிவந்தோர் எனத் தம்மைக் கருதிக் கூறினர். இந்த அஸ்வபதி மகாபாரதத்தில் வரும் ஒரு பாத்திரம் ஆவார்.

மிகவும் வல்லமை பெற்றவர்களான மற்றொரு மௌகாரிப் பிரிவினர் குறித்துப் பல்வேறு முத்திரைகளிலிருந்தும், பட்டயங்களிலிருந்தும் அறிகிறோம். அரச முத்திரை கீழ்க்கண்ட மரபு வழியை அளிக்கிறது.

(1) மகாராஜ ஹரி வர்மன்=ஜெயஸ்வாமினி
(2) மகாராஜ ஆதித்திய வர்மன்=ஹர்ஷ குப்தா
(3) மகாராஜ ஈஸ்வர வர்மன்=உப குப்தா
(4) மகாராஜாதிராஜா ஈஸான வர்மன்=லக்ஷ்மிவதி
(5) மகாராஜாதிராஜ சர்வ வர்மன்=இந்திர பட்டாரிகா
(6) மகாராஜாதிராஜ அவந்திவர்மன்
(7) மகாராஜாதிராஜா சு (வா) (சா)

இதில் மூன்று அரசர்களின் பட்டயங்களும், மற்றைய அரசர்களின் பட்டயங்களும் மாறுபட்டிருப்பதைக் கொண்டு ஈஸான வர்மனின் காலத்தில்தான் இக் குலம் சிறப்பும் வலிவும் பெற்றது எனத் தெரியவருகிறது. ஈசான வர்மனின் ஹராஹா பட்டயம் ஈசான வர்மனுக்குச் சூரிய வர்மன் மௌகாரி என்ற மற்றொரு மகன் இருந்ததாகக் காட்டுகிறது. நாளந்தா முத்திரை ஒன்றில் அவந்தி வர்மனின் மகன் பெயரின் முதல் எழுத்து 'சு' எனத் தெளிவாகவும், அடுத்த எழுத்து 'வா' அல்லது 'சா' எனத் தெளிவின்றியும் காட்டப்பட்டுள்ளது. மகாராஜாதிராஜா 'சு' என்று குறிப்பிடப்பட்டவரே, ஹர்ஷரின் தங்கை ராஜ்யஸ்ரீயின் கணவர் மகாராஜாதிராஜா கிரகவர்மன் என அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

மௌகாரிகளின் சிறிய முத்திரைகள், காசுகள் தவிர்த்த எல்லாப் பட்டயங்களும் இக்கால உ. பி.-யின் எல்லைக்குள் காணப்பட்டதால் அப் பகுதியே அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட

பகுதியாக விளங்கியிருக்க வேண்டும். மகாராஜா ஹரி வர்மன், ஆதித்திய வர்மன், ஈஸ்வர வர்மன் ஆகிய மூன்று மௌகாரி அரசர்களும் குப்தர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக விளங்கினர். ஆதித்திய வர்மனின் மனைவியின் பெயரும், பிற்காலக் குப்தர்களின் இரண்டாவது அரசரின் பெயரும் ஒரே மாதிரியாக காணப்படுகின்றன. எனவே, இருவரும் உடன் பிறந்தவர்கள் என்று கருத இடமுள்ளது.

ஈஸ்வர வர்மனின் ஜான்பூர் பட்டயத்திலிருந்து அவர் ஆந்திரப் பகுதியின் அரசர்களுடன் போரிட்டார் என அறிகிறோம். அப் போரில் ஈஸ்வர வர்மன் குறிப்பிடத்தக்க வெற்றி ஏதும் பெறவில்லை என்பதனை அவர் கொண்டுள்ள மகாராஜா என்ற பட்டமே காட்டுகின்றது. ஈசான வர்மனின் காலம்வரையில் மௌகாரிகளைக் குறித்துத் தெளிவான வரலாற்றினை நாம் அறிய இயலவில்லை. புத்த குப்தர் காலம்முதல் தெற்குப் பீஹாரிலும் உ.பி.-யிலும் மௌகாரி குலத்தவர் திறை அரசர் களாக ஆட்சி செலுத்தினர்.

பேரரசு குப்தர்கள் (Imperial Guptas) கி. பி. ஆறும் நூற்றுண்டின் தொடக்கத்தில் வீழ்ச்சியடைந்தமையால் மௌகாரிகள் எழுச்சி பெற்றனர். மௌகாரி குலத்தவரில் மகாராஜாதிராஜா என்ற பட்டத்தை முதன்முதலில் கொண்டவர் ஈசானவர்மரே ஆவார். அது மட்டுமன்றிக் காசுகளும் அவர் வெளியிட்டமையால் தனித்த அரசு ஒன்றினைச், சுயேச்சை அரசு ஒன்றினை அமைத்தவர் அவரே என்று கருதப்படுகிறார். அவருடைய காலம் கி. பி. 554 என அறியப்படுவதால் குப்தப் பேரரசின் வீழ்ச்சியின் காரணமாகவே அவர் அரச பதவிக்கு வந்திருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

ஈசான வர்மனின் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. ஹராஹாப் பட்டயத்திலிருந்து அவர் ஆந்திர அரசர்களையும், சூலிக்கர்களையும் வென்றார் என் பதை அறிகிறோம். ஈசான வர்மன் கௌடா அரசரின் ஆதிக் கத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான படையெடுப்பை மேற் கொண்டதாலேயே பிற்காலக் குப்தரான குமார குப்தருடன் மோத வேண்டியதாயிற்று. ஈசான வர்மனின் இம் முயற்சியைக் குமார குப்தர் விரும்பவில்லை. குமார குப்தரின் அரசு கௌடாவை ஒட்டி அமைந்திருந்ததும், குமார குப்தரின் தந்தை ஜீவித குப்தர் கௌடாவைத் தாக்கிக் கைப்பற்றும் முயற்சியை மேற்

கொண்டதும் இதற்குக் காரணமாகும். ஈசான வர்மன் குமார குப்தரிடம் தோற்க நேரிட்டது. எனினும், இத் தோல்வியினுல் அவருக்குப் பேரிழப்பு ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. ஆட்சிப் பகுதியினைப் பெருக்கிடவில்லை என்றாலும் ஈசான வர்மன் தமக்கெனத் தனிச் சிறப்புப் பெற்ருர்.

விஷ்ணு குந்தின் வமிச அரசரான முதலாவது மாதவ வர்மன் ஈசான வர்மனல் தோற்கடிக்கப்பட்ட ஆந்திர அரசர் ஆவர். ஈசான வர்மனிடம் தோற்ற சூலிங்கர்கள் யார் என அடையாளம் காண இயலவில்லை. கலிங்கர்கள் சாளுக்கியர் கள் எனவும், முதலாக்கர்கள், சோழர்கள் ஆந்திராவின் சுற்றுப் பகுதியில் அரசு புரிந்தவர்கள், தென்கிழக்குக் கரையோரக் கலிங்கம், விதர்ப்பம் சேபி மக்கள் எனவும் முறையே இராய் சௌத்திரி, டி. ஜி. ஆராவமுதன், ஹீராஸ், எஸ். கே. சாஸ்திரி, ஹிரானந்த சாஸ்திரி முதலானவர்கள் குறிப்பிட்டனர். சாளுக்கியர் கள் என்பதே சூலிங்கர் என மருவி வழங்கப்படுகிறது என்பர்.

ஈசான வர்மனின் மகன் சூரிய வர்மன் அரசு பொறுப்பு ஏற்றதாக வறலாற்றில் குறிப்பிடப்படாமையால், அவர் தம் தந்தைக்கு முன் இறந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. அசிர்கார், நாளந்தா முத்திரைகளிலும் சூரிய வர்மனின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

ஈசான வர்மனுக்குப் பின் அவருடைய இரண்டாவது மகன் சர்வ வர்மன் மகாராஜாதி ராஜா என்ற பட்டத்துடன் அரசுரி மை பெற்ருர். ஈசான வர்மன் அல்லது அவருடைய மகன் சர்வ வர்மன் ஹூணர்களுடன் போரிட்டு அவர்களைத் தோல் வியடையச் செய்திருக்கக் கூடும். சர்வ வர்மனும் அவர் மகன் அவந்தி வர்மனும் வல்லமை பெற்ற அரசர்கள் என்பதில் ஐய மில்லை.

பிற்காலக் குப்த அரசரான மகாசேன குப்தரும், சர்வ வர்மனும் சமகாலத்தவர்கள். சாளுக்கிய திபெத்தியப் படை யெடுப்புகள் மகதத்திலிருந்து ஓய்ந்தபின் சர்வ வர்மன் மகதத் தைக் கைப்பற்றிக்கொண்டார். மௌகாரிகளின் ஆட்சி மத்திய தேசத்தில் ஏற்பட்டது. அதற்குக் கன்னேசி தலைநகராக விளங்கியது.

சர்வ வர்மனை எல்லாச் சிறப்புப் பட்டங்களுடனும் சேர்த்துத் தியோபார்னுப் பட்டயங்களும், நாளந்தா முத்திரை களும் குறிப்பிட்டுள்ளன. அசிர்காரில் உள்ள நிமாடில் சர்வ

வர்மனின் முத்திரை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மௌகாரிகளின் ஆதிக்கம் இதனுல் பர்ஹான்பூர்வரை பரவி யிருக்க வேண்டும் என வரலாற்ருசிரியர் சிலர் கருதுகின்றனர். இக் கூற்றும் சரியெனப் படவில்லை.

சர்வ வர்மன் ஆந்திர அரசர்களுடனும், சாளுக்கியர் களுடனும் தற்காப்பிற்காகவே போரிட்டிருக்க வேண்டும். ஆந்திராவில் விஷ்னு குந்தின் வமிசத்தைச் சேர்ந்த முதலாவது மாதவ வர்மன் தம் நாட்டை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன. துப்ராய் (Dubraie) அவர் கிழக்குப் பகுதிகளை வெல்லும் ஆர்வத்தால் கோதாவரி ஆற்றைக் கடந்து படையெடுப்புகளை மேற்கொண்டார் என்று கருதுகிருர். மேலும், சர்வ வர்மனின் மூத்த சகோதரர் சூரிய வர்மன் மகா கோசல அரசுடன் திருமணத் தொடர்பு கொண்டிருந்தமையால் சூரிய வர்மனின் மகன் பாஸ்கர வர்மனுக்கு மௌகாரி அரசின் மீதுள்ள உரிமையைச் சர்வ வர்மன் மறுத்து, அவந்தி வர்மனை அரசராக்கியதால், மௌகாரி-மகாகோசலா குடும்பங்களிடையே உள்ள உறவு சுமுகமாக இருந்திருக்கும் எனக் கொள்ள முடியாது. எனவே, மௌகாரிகள் நிமாடு மாவட்டத்தின் பகுதிகளைத் தங்களுடன் இணைத்துக்கொண்டிருக்க முடியாது. மாளவம், மகாகோசலா இரண்டிற்கும் இடையேயுள்ள மலைப்பாங்கான பிரதேசத்தைக் கடந்துதான் நிமாடுப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமாதலால் அத்தகைய அபாயம் மிக்க ஒரு முயற்சியைச் சர்வ வர்மன் துணிவுடன் மேற்கொண்டிருக்க முடியாது.

சர்வ வர்மனின் ஆட்சி பண்டல்கண்டு வரையிலும் பரவி யிருக்கலாம். போஜதேவரின் ஷராஹாச் செப்பேடு பரமேஸ் வர சர்வ வர்ம தேவர் காலிஞ்சரா மண்டலத்தில் உடும்பராவில் விஷயாவில் ஒரு சிறு பகுதியைக் கொடையளித்ததாகக் குறிப்பிடு கிறது. இந்தப் பரமேஸ்வர சர்வ வர்ம தேவர் யார் ? ஹிரானந்த சாஸ்திரி, மாரசர்வா எனவும், 'பண்டார்க்கர்' மகாராஜ சர்வா. எனவும் கூறுகின்றனர், ஆனுல், பி. பி. சின்ஹா என்ற அறிஞர் பராஹாக் குறிப்பில் உள்ள பரமேஸ்வர சர்வ வர்ம தேவர் என்ற பெயர் தியோபார்ஞக் குறிப்பில் உள்ள மௌகாரி அரசரான சர்வ வர்மரையே குறிக்கும் என்று குறிப்பிடுகிருர்.

மகாராஜா சமுத்திர சேனரின் நிர்மாண்ட் பட்டயம் மகாராஜா சர்வவர்மனுல் அளிக்கப்பட்ட நிலக்கொடை ஆணை சமுத்திர சேனரால் புதுப்பிக்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடு கிறது. நிர்மாண்ட் பட்டயம் குறிப்பிடும் மௌகாரி அரசர் சர்வ

வர்மனே என்பதும், சர்வ வர்மன் ஒரு சிறிது காலமாவது பஞ்சாபில் மௌகாரிகளின் ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பதும் ஏற்கக்கூடியதே. வர்த்தனர்கள் இக் காலத்தில் அத்துணை வல்லமை பெற்றிருக்கவில்லை என்பதாலும், ஆதித்திய வர்த்தனர் தமக்குள்ள குறைந்த அளவு படைவசதிகளுடன் ஹூணர்களை ஒடுக்கியிருக்க முடியாது என்பதாலும் மேலே சொன்ன கூற்றுப் பொருத்தமாகிறது.

ஆதித்திய வர்த்தனர், சர்வ வர்மனுக்கு ஹூணப் படையெடுப்பு முயற்சிகளில் உதவியிருக்கக்கூடும். மௌகாரிகள் வர்த்தனர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ளவே விழைந்தனர். பக்கத்து நாடான வர்த்தனர்களின் தானேஸ்வரத்துடன் நல்லுறவை வளர்த்து ஹூணர்களுக்கும், தங்களுக்கும் இடையே ஓர் இடைப்பட்ட பகுதியைத் தோற்றுவித்துத் தங்களைக் காத்துக்கொண்டனர்.

அவந்தி வர்மன் காலத்தில் மௌகாரி அரசின் தலைநகராகக் கன்னோசி விளங்கியிருக்க வேண்டும் என்றாலும், இதனை மெய்ப்பிக்க உறுதியான சான்று இல்லை. இராஜ்ய ஸ்ரீ பற்றிய பாணரின் கதை கன்னோசி அவருடைய தலைநகரம் அன்று என்று காட்டுகிறது. யுவாங் சுவாங் காட்டும் ஹர்ஷ வர்த்தனரின் வரலாற்றிலிருந்தும் இம் முடிவிற்கே வரவேண்டியுள்ளது.

சர்வ வர்மனுக்குப் பின் அவந்திவர்மன் அரச பதவிக்கு வந்தார். நாளாந்தா முத்திரையில் கண்டவாறு அவந்தி வர்மன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதால் மௌகாரி அரசர்களின் வரிசை முழுவதுமாக நிலைபெற்றுவிட்டது. அவந்தி வர்மன் பல சிறப்புப் பட்டங்களைக் கொண்டார். அவந்தி வர்மன் ஏராளமான காசுகளை வெளியிட்டார். ஈசான வர்மன், சர்வ வர்மன், அவந்தி வர்மன் ஆகியோரின் காசுகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. ஆனல். அவற்றிலிருந்து எந்த விதமான உறுதியான முடிவிற்கும் வர இயலாது. அறிஞர்கள் சிலர் ஈசான வர்மன், சர்வ வர்மன், அவந்தி வர்மன் ஆகியோரின் காலம் முறையே கி. பி. 257, 234, 250 எனவும் 257, 258, 260 எனவும் குறித்தனர்.

பின்னல் குறிப்பிட்டுள்ள கால வரிசையே சரியெனக் கொண்டு குப்தர் ஊழியின்படி பார்த்தால் ஈசான வர்மனின் காலம் கி. பி. 576-7 எனவும், சர்வ வர்மனின் காலம் கி. பி. 577-8 எனவும், அவந்தி வர்மனின் காலம் கி. பி. 579-80 எனவும் முடிவு

செய்யலாம். கடைசி இரண்டு காலங்களைச் சரியெனக் கொள்ள லாம். கி. பி. 606-ல் அவந்தி வர்மன் இறந்து அவர் மகன் கிரக வர்மன் அரியணை ஏறினர் என ஹர்ஷ சரிதத்திலிருந்து அறிகிறோம். கி. பி. 576ஐ ஈசான வர்மனுக்குரியதெனக் கொண்டால், அவர் கி. பி. 550 முதல் 576 வரையிலும், சர்வ வர்மன் கி. பி 576 முதல் 580 வரையிலும் ஆட்சி செலுத்தியிருக்கக்கூடும். எனவே ஆர். ஸி. மஜும்தாரின் கீழ்க்கண்ட காலப் பகுப்பை ஏற்க வேண்டியுள்ளது.

ஈசான வர்மன் கி. பி. 550 முதல் கி. பி. 576 வரை.
சர்வ வர்மன் கி. பி. 576 முதல் கி. பி. 580 வரை.
அவந்தி வர்மன் - கி. பி. 580 முதல் கி. பி. 600 வரை.

அவந்தி வர்மனின் ஆட்சி அவருடைய தந்தையின் காலத்தைப் போன்று குறிப்பிடத் தகுந்த ஒன்ருக விளங்கவில்லை. ஹர்ஷ சரிதத்தில் அவந்தி வர்மனின் மகன் கிரகவர்மனைப் பற்றிப் பல குறிப்புகள் காணப்பட்டபோதிலும் அவந்தி வர்மனின் வாரிசு யார் என்பது குறித்துக் கருத்தொற்றுமையின்மை நிலவுகிறது' பாணரின் ஹர்ஷ சரிதத்தில் பிரபாகர வர்த்தனர் தமது அரசியிடம், அவந்தி வர்மனின் மூத்த மகன் தம் மகளை மணம் செய்ய விருப்பம் தெரிவித்ததாகக் குறிப்பிடும் பகுதி ஒன்று காணப் படுகிறது. மௌகாரிகள் மற்ற அரச குடும்பத்தினரைவிடச் சிறந்து விளங்கினர். உலகமே சிவனுடைய அடிச் சுவட்டை வணங்குவதுபோல மற்றவர்கள் மௌகாரிகளைப் போற்றினர் எனப் பாணர் குறிப்பிட்டார்.

சர்வ வர்மனின் ஆட்சிக்காலம் கி. பி. 576 முதல் 580 வரை என்று குறிப்பிட்டோம். மௌகாரி அரசின் மூன்று திசைகளிலும் நாட்டை விரிவுபடுத்தியதும் அவரது அசிர்கார் முத்திரையும், காசுகளும், அவரைப்பற்றிய மற்ற அரசர்களின் குறிப்புகளும் சர்வ வர்மன் சற்று அதிக காலம் ஆட்சி செலுத் தியிருக்க வேண்டும் என்று கருதச் செய்கின்றன. எனவே, ஈசான வர்மன் கி. பி. 550 முதல் 560–5 வரையிலும் சர்வ வர்மன் கி. பி. 560–5 முதல் 585 வரையிலும், அவந்தி வர்மன் கி.பி. 585 முதல் 600 வரையிலும் ஆட்சி செலுத்தியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

அவந்தி வர்மனின் மூத்த மகன் கிரக வர்மனுக்கும் இராஜ்ய ஸ்ரீக்கும் கி. பி. 603-4-ல் திருமணம் நடைபெற்றதாக ஹர்ஷ சரிதத்தில் பாணர் குறிப்பிடுகிறார். பாணரின் ராஜ்ய ஸ்ரீ

திருமண விழா பற்றிய குறிப்புகளில் அவந்தி வர்மனைக் குறிப்பிடாமையால், திருமணத்திற்கு முன்பே அவந்தி வர்மன் இறந்திருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது.

கிரக வர்மன் கி. பி. 600–ல் கன்னோசி அரசரானார். நாளந்தா முத்திரையிலிருந்து மகதமும், கன்னோசியும், ஒரே மௌகாரி அரசரால் ஆளப்பட்டுவந்ததைப்போன்று காணப்பட்ட போதிலும், அவந்தி வர்மன் இறக்கும்தறுவாயில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. நாளந்தா முத்திரையி பரம மகேஸ்வரா (மகாரா) ஜாதிராஜ, மௌகாரி அவந்தி வர்மனின் மகன் பர ......ராஜா (தி) ராஜஸ்ரீ சுவா அல்லது சுசா' எனக் குறிப்பிட்டுள்ளது. கிரக வர்மன் அவந்தி வர்மனின் மூத்த மகன் எனக் கருதுவதால், சுவா அல்லது சுசா அவரது இளைய மகன்களில் ஒருவனாக இருத்தல் வேண்டும். நாளந்தா முத்திரையின்படி அவந்தி வர்மனின் வாரிசு நிச்சயமாகக் கிரக வர்மன் இல்லை எனலாம். ஆனால், இதைக்கொண்டு கிரக வர்மன் ஆட்சி செலுத்தவில்லை என்றும் கூற முடியாது.

கிரக வர்மனுக்கும் அவர் இளைய சகோதரர் சுவாவிற்கும் இடையே அமைதியான சூழ்நிலை காணப்படவில்லை. சுவா அவந்தி வர்மனின் காலத்திலேயே மகதத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், தம் தந்தை இறந்தவுடன் தம்மை உரிமை பெற்ற அரசராக அவர் அறிவித்துக்கொண்டார் எனவும் கருதப்படுகிறது. மௌகாரிகளுடையே ஏற்பட்ட பிரிவினை உணர்வு அவர்தம் சிறப்பும் ஆற்றலும் அழிய வழி வகுத்தது. கிரக வர்மனுக்கு முன்பே சுவா இறந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

மிகக் குறுகிய காலமே கிரகவர்மன் ஆட்சி செலுத்தி யிருக்க வேண்டும். மகதத்தில் அவர் தனி உரிமை பெற்றவராக ஆட்சி செலுத்தினார் என்று கண்டோம். சசாங்கனின் முத்திரையில் அவர் கௌடாவில் உரிமை பெறுமுன்பே மகதத்தின் மீது உரிமை கொண்டிருந்தார் என்று காட்டுவதால் மகதம் மௌகாரிகளின் கையைவிட்டுப் போய்விட்டது என்று தெரிகிறது.

மௌகாரிகளின் வரலாற்றினைக்கிரக வர்மன் இராஜ்ய ஸ்ரீயின் திருமணத்துடன் நிறுத்திக் கொள்வோம். இரண்டு சிறப்பு மிக்க குலத்தின் இணைப்பிற்கு இத் திருமணம் வழி வகுத்தது. ஆனால்,

இந்த மண உறவின் விளைவுகளை அன்றைய நாளில் யாரும் எண்ணிப் பார்க்கவில்லை என்பதனைப் பின்நிகழ்வுகள் காட்டுகின்றன.

பிற்காலக் குப்தர்களின் இளவரசரான மாளவத்தின் அரசரும் சசாங்கனும் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்களது இரு நாடுகளுக்கும் இடையில் அமைந்திருந்த கன்னோசியையும், தானேஸ்வரத்தையும் கைப்பற்ற எண்ணினர். பிரபாகர வர்த்தனர், ராஜ்யஸ்ரீக்கும் கிரக வர்மனுக்கும் திருமணம் நடைபெற்றபின், தம் மூத்த மகன் இராஜ்ய வர்த்தனனிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்து நோய்வாய்ப்பட்டு இறந்த வேளையில் தம் குறிக்கோளை நிறைவேற்ற முடிவு செய்தார். மாளவ அரசன் கன்னோசிமீது படை யெடுத்துக் கிரக வர்மனைக் கொன்ற செய்தி தானேஸ்வரத்திற்குக் கிடைத்தது. இவ்வாறு மௌகாரி அரசனின் குறுகிய ஆட்சிக் காலம் துயர நிகழ்ச்சியுடன் முடிவடைந்தது.

## பிற்காலக் குப்தர்கள்

பிற்காலக் குப்தர்களின் வரலாறு பல்வேறு வகைகளிலும் மௌகாரிகளுடையதைப் போன்றதாகவே அமைந்துள்ளது. குப்தப் பேரரசின் திறை அரசர்களாகவே அவர்களும்விளங்கினர். மௌகாரிகள் சிறப்பும் தனியாட்சியும் கொண்ட நேரத்திலே தான் அவர்களும் அந் நிலை எய்தினர். கயாவிற்கு அருகில் அப்சாடு என்னுமிடத்தில் கிடைத்த பட்டயம் ஒன்று இம் மரபின் தொடக்ககால அரசர்களின் பட்டியலை அளிக்கிறது.

(1) கிருஷ்ண குப்தர்.
(2) ஹர்ஷ குப்தர்
(3) ஜீவித குப்தர்
(4) குமார குப்தர்
(5) தாமோதர குப்தர்
(6) மகாசேன குப்தர்
(7) மாதவ குப்தர்
(8) ஆதித்திய குப்தர்

இவர்கள் யாருமே அரசு பட்டங்களைக் கொண்டிருக்கவில்லை எனினும், கிருஷ்ண குப்தர் அரசன் என்ற பொருளைத் தரும் 'நிருபா' எனப் பட்டம் கொண்டிருந்தார் என்றும், பிற்காலக் குப்தர்கள் மாளவத்திலிருந்து தோன்றியவர்கள் என்றும், பிற்காலக் குப்தர்கள் மகதத்துடனும் மாளவத்துடனும் தொடர்புடையவர்கள் என்றும் கருதப்படுகிறது.

## பிற்காலக் குப்தர்கள் மரபு வழி

- கிருஷ்ண குப்தர்
  - ஹர்ஷ குப்தர்
    - முதலாம் ஜீவித குப்தர்
      - குமார குப்தர்
        - தாமோதர குப்தர்
          - மகாசேன குப்தர்
            - குமார குப்தர்
            - மாதவ குப்தர்
              - ஆதித்திய சேனர்
                - தேவ குப்தர்
                  - விஷ்ணு குப்தர்
                    - இரண்டாவது ஜீவித குப்தர்
          - தேவ குப்தர்

ஹர்ஷ சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதவ குப்தரும் அப்ஸாடுப் பட்டயத்தில் உள்ள மாதவ குப்தரும் ஒருவரே என எண்ணப்பட்டது. மாதவ குப்தரை மாளவ அரசனின் மகன் எனப் பாணர் குறிப்பிட்டுள்ளார். மாளவப் பகுதியில் குப்தர்கள் அல்லது மௌகாரிகள் தவிர வேறு யாரும் உரிமை கொண்டாடிருக்க முடியாது என்று கருத இரண்டாவது ஜீவித குப்தரின் தியோபர்ணுக் ஆணை துணைபுரிகிறது. அது பாலாதித்தியனுக்குப்பின் சர்வ வர்மன், அவந்தி வர்மன் ஆகிய இரு மௌகாரி அரசர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பீகார் மாநிலம் ஷஹபாடு மாவட்டத்திலுள்ள வருணிகா என்ற ஊரைக் கொடையாக வழங்கியதைக் குறிப்பிடுகிறது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் மகதத்தில் பயணம் செய்த யுவாங் சுவாங் தமது குறிப்புகளில் மகதம் பற்றியவற்றில் பூர்ண வர்மன், சசாங்கன் ஆகிய இரண்டு அரசர்களின் பெயர்களை மட்டும் குறிப்பிடுகிறாரே அன்றி மாதவ குப்தரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மாதவ குப்தரைபற்றி வேறு சந்தர்ப்பங்களில் தாம் குறித்துள்ளார். குப்தர்களுக்குப்பின் மகதத்தின் அரசு

பொறுப்பை மௌகாரிகள் ஏற்றனர் எனப் பயர்ஸ் கருதுகிறார். அவர் குப்தரின் காலத்திற்கு முன்னும் மகதம் மௌரியர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது எனவும், முதலாம் சந்திர குப்தர் மௌகாரிகளிடமிருந்து மகதத்தைக் கைப்பற்றினார் எனவும் கருதுகிறார்.

எனவே, இதுவரை பார்த்தவற்றிலிருந்து கி. பி. 562 வரை அதாவது மகாசேன குப்தர் ஆட்சியின் ஆரம்ப காலம்வரை பிற்காலக் குப்தர்கள் மகதத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தனர் என்பதைத் தவறு என மெய்ப்பிக்கவில்லை. மாளவமே அவர்கள் தோன்றிய இடம் என்ற கருத்துக் கொண்டவர்களும் மகாசேன குப்தர் காமரூபத்தின் அரசரை லௌஹித்யா அல்லது பிரமபுத்திரா நதிக்கரையில் நடைபெற்ற போரில் வென்றமை குறித்து ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கம் அளிக்கவில்லை. இராய் சௌத்திரி, மாளவத்தின் யசோதர்மன் வெற்றி பெற்றதைப் போலவே மகாசேன குப்தரும் அவ்வெற்றியைப் பெற்றிருக்க வேண்டும் எனக் கருதுகிறார்.

பாணர் ஹர்ஷரின் குறுநில மன்னர்களைப் பற்றிக் குறிக்கப் பயன்படுத்தும் பல சொற்களில் ஒன்றான, க்ஷித்திபாலா என்ற சொல்லும், ஜீவித குப்தரின் சிறப்புப் பெயரான 'க்ஷித்திச' என்ற சொல்லும் ஒரே பொருளைத் தருபவை. பிற்காலக் குப்தர்களுக்கும் குப்தப் பேரரசர்களுக்குமிடையே எவ்வித உறவும் இருந்ததாக வேறு எந்தக் குறிப்பும் தெரிவிக்கவில்லை. பிற்காலக் குப்தர்களைக் குப்தப் பேரரசு விட்டுச்சென்ற சொத்து என மஜும்தார் கருதுகிறார். கிருஷ்ண குப்தரின் வமிசத்தை அதாவது பிற்காலக் குப்தர்களை மகதத்தின் பிற்காலக் குப்தர்கள் என ஃபிளீட் (Fleet) கூறுகிறார். குப்தர் என முடிவதைக் கொண்டு பிற்கால குப்தர்கள், குப்தப் பேரரசர்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தவறாக எண்ணிவிடக் கூடாது.

பன்னெடுங் காலமாகக் குப்தர்களின் தோற்றம் குறித்து அறிஞர்களிடையே பல்வேறுபட்ட கருத்துகள் நிலவிவருகின்றன. ஹோயர்னல் குப்தர்களின் குடும்பத்தைச் சார்ந்த கிழக்கு மாளவப் பகுதிகளில் ஆட்சி செய்தவர்களே பிற்காலக் குப்தர்கள் எனக் குறிப்பிட்டார். இராய் சௌத்திரியும் அதே கருத்தினையே கொண்டுள்ளார். பிற்காலக் குப்தர்கள் மகதத்திலிருந்து தோன்றியவர்களே என்ற கருத்தும் நிலவுகிறது. குப்தர்கள் தொடக்க காலத்தில் மட்டும் மாளவத்துடன் தொடர்பு கொண்டவர்கள் ஆவர். தேவ ஹரொட்டி என்ற வரலாற்று

ஆசிரியர் பிற்காலக் குப்தர்கள் தொடக்க காலத்திலேயே மகதத்தில் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டினர் என்று குறிப்பிட்டார். அப்ஸாடுப் பட்டயத்திலிருந்து பிற்காலக் குப்தர்களின் அரசபரம்பரையைத் தோற்றுவித்த கிருஷ்ண குப்தர் சிறந்த அரச பரம்பரையான சத் வமிசத்தில் தோன்றியவர் எனவும், நிருபா, ஸ்ரீ முதலிய எளிய பட்டங்களைக் கொண்டிருந்தார் எனவும் அறியப்படுகிறது.

பிற்காலக் குப்தர்களின் முதல் அரசர் கிருஷ்ண குப்தர் ஏறக்குறைய கி. பி. 500ஆம் ஆண்டு ஆட்சி செய்திருக்க வேண்டும். அவருடைய வழித்தோன்றல்கள் அனைவருடைய பெயரும் அப்ஸாடுப்பட்டயத்தில் காணப்படுகின்றன. அப்ஸாடுப் பட்டயம் பொதுவாக மரபுவழியில் முதல் மூன்று அரசர்களின் படை வெற்றிச் சிறப்புகளைக் குறிப்பிடுகிறது. மூன்றாவது அரசர் ஜீவ குப்தர் இமயம்வரையும், கடல்வரையும் படையெடுத்துச் சென்றதாகக் குறிப்பிடப்படுகிறார். ஆனால், இந்தப் படையெடுப்புகள் எல்லாம் திறை அரசர்களாக மேலாண்மை அரசரின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டவையோ அல்லது தனி உரிமை பெற்ற அரசர்களாகச் - சுயேச்சை அரசர்களாக மேற்கொள்ளப்பட்டவையோ தெரியவில்லை. திறை அரசாகளாக விளங்கிய போது மேற்கொள்ளப்பட்டவை என்பதே பொருத்தமாகும்.

குமார குப்தரைக் குறித்து ஏராளமான செய்திகள் கிடைத்துள்ளன. அரசர்களில் நிலவுபோல விளங்கிய மௌகாரி அரசன் ஈசான வர்மனை அவர் தோற்கடித்தார். குமார குப்தரின் வெற்றி அவர்தம் குலத்தின் எதிர்கால நலனுக்கு வழி வகுத்தது. குமார குப்தரின் வெற்றி நிலையானதாகவும், சிறப்பானதாகவும் அமைந்தது. இதற்கு எடுத்துக்காட்டு அப்ஸாடுப் பட்டயமே ஆகும். அதில் குமார குப்தரின் வெற்றி புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. 'பிரயாகைக்குச் சென்று' என்ற வரிகள் அதில் காணப்படுவதைக் கொண்டு பிரயாகைவரை குமார குப்தரின் ஆதிக்கம் பரவியிருந்தது என்று கருதப்படுகிறது. அப்ஸாடுப் பட்டயம் குமார குப்தர் ஈசான வர்மனை வென்றதைச் சற்று மிகைப்படுத்தியே கூறுகிறது.

குமார குப்தர் பிரயாகையில் இறந்தார். பிரயாகைக்குச் சென்று மலர்களை அணிந்து எருக்களால் மூடப்பட்ட நெருப்பில் நீரில் குதிப்பதைப்போன்று குதித்தார் என அப்ஸாடுப் பட்டயம் குறிப்பிடுவது விவாதத்திற்குரிய ஒன்றாக அமைந்துள்ளது. ஃபிளீட், குமார குப்தர் உயிருடன் இருக்கும்போதே பிரயாகை

நெருப்பில் விழுந்திருக்க வேண்டும் எனக் கருதத் தேவையில்லை என இதற்கு விளக்கம் அளித்தார். குமார குப்தர் தம் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு குறிக்கோளை அடைய எண்ணி அக் குறிக்கோள் நிறைவேறாவிடில் உயிரை விட்டுவிடுவதாகச் சூளுரைத்திருக்க வேண்டும் என்று மற்றொரு கருத்து கூறப்படுகிறது. குமார குப்தர் எந்த அளவிற்கு வெற்றி பெற்றிருந்தபோதிலும் அவருடைய குறிக்கோள் நிறைவேறவில்லை என்பதைத் தான் மேற்கொண்ட சூளுரையை நிறைவேற்ற எண்ணித் தம் உயிரை மாய்த்துக்கொள்ள முடிவு செய்தது குறிக்கிறது என்றும் கூறுவர். புனித நகரான பிரயாகையில் இறப்பவர்கள் சொர்க்கத்தை அடைவார்கள் என்ற அக் கால நம்பிக்கையே அவ்விடத்தை உயிர் துறக்கக் குமார குப்தர் தேர்ந்தெடுத்தற்கான காரணம் என்றும் கூறுவர்.

குமார குப்தர் பெற்ற வெற்றி சிறப்பு மிகுந்ததுதான். இதற்கு மற்றுமொரு சான்று மௌகாரிப் பதிவுகளில் உண்டு. அவர்கள் தம் எதிரிகளை வென்றதாக யாண்டும் குறிப்பிடவில்லை. தாமோதர குப்தர் என்ற குமார குப்தரின் மகன் மீண்டும் மௌகாரிகளைத் தோற்கடித்தார். இப் போரில் தாமோதர குப்தர் மௌகாரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்து அவருக்குப் பெரிய சேதத்தை ஏற்படுத்தினார். அம் முயற்சியில் தம் உயிரை அவர் இழந்தார் என்ற ஃபிளீட்டின் மொழி பெயர்ப்பே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் கே. ஸீ. சட்டோபாத்யாயா, தாமோதர குப்தர் இறந்ததாக அப் பகுதி குறிக்கவில்லை எனவும், அவர் மயங்கி வீழ்ந்தார் என்றே குறிப்பதாகவும் குறிப்பிட்டார். தாமோதர குப்தரின் வெற்றியையே அப் பகுதி குறிப்பிடுகிறது எனவும், டாக்டர் 'பஸக்' குறிப்பிட்டதுபோல் அவர் தோல்வியுறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தாமோதர குப்தரால் தோல்வியுறச் செய்யப்பட்டவர் மௌகாரிய அரசர் ஈசான வர்மரா, அவர்தம் மகனா என்று கூறுதல் கடினமே. பிற்காலக் குப்தர்கள் மிகவும் உறுதியாக நிலைபெற்றுவிட்டனர். ஏனென்றால், தாமோதர குப்தரின் மகன் பிரம்மபுத்திரா வரை படை கொண்டு சென்று காமரூபாவின் அரசன் சுஸ்திஸ்த வர்மனைத் தோற்கடித்தார். ஆற்றல் மிக்க மௌகாரிகளின் அரசு மாளவத்திற்கும் காமரூபத்திற்கும் இடையே அமைந்துள்ளது. ஆகவே, மகாசேன குப்தர், சுசிஸ்த வர்மனை எளிதாக வெல்ல முடிந்ததற்கு, அவருடைய அரசு காம

ரூபத்திற்கு மிக அருகில் அமைந்திருந்ததே முக்கியக் காரணம் எனலாம். யுவாங் சுவாங் தாம் பயணம் செய்த பகுதிகளில் மகதத்தின் நிலை பற்றியும், அப் பகுதியில் அரசு புரிந்து பௌத்த மதத்திற்குத் துணை புரிந்த பக்தி மிக்க அரசர்களைப் பற்றியும் மட்டுமே சிறப்புத் தந்து குறிப்பிட்டிருக்கிறார். மகதம் பற்றிய விளக்கத்தில் மாதவ குப்தரின் பெயரைக் குறிப்பிட வில்லை சர்வ வர்மன் காலத்திலிருந்து மகதம் மௌகாரிகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மாதவ குப்தர், குமார குப்தர் ஆகிய இருவரும் மாளவ அரசரின் பிள்ளைகள் எனப் பாணர் ஹர்ஷ சரித்திரத்தில் குறிப்பிட்டிருப்பது மகாசேன குப்தர் தம் இரு மக்களையும் பிரபாகர வர்த்தனரின் அரண்மனைக்கு அனுப்பும் சமயத்தில் மாளவத்தை ஆண்டுவந்தார் என்பதை உணர்த்து கிறது.

தாமோதர குப்தருக்குப்பின் மகாசேன குப்தர் ஆட்சிக்கு வந்தார். மகாசேன குப்தர் தம்முடைய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றார். ஹர்ஷருடைய வர்த்தன வமிசத்துடன் மண உறவு கொண்டார். தம் சகோதரி மகாசேன குப்த தேவியை ஹர்ஷரின் தாத்தா ஆதித்திய வர்த்தன ருக்கு மணம் செய்துவைத்தார். இம் மண உறவு மௌகாரி களுக்கு இடையூறாக அமைந்தது. வங்காளத்தில் கி. பி. 575 - ல் நிலவிய குழப்பமான சூழ்நிலை, வலுவற்ற ஆட்சி ஆகியவற்றால் அதன்மீது படையெடுத்தார். முன்னர் அவர் பெற்ற வெற்றியை, ஈசான வர்மனின் சிறப்பான படையை நெருங்க முடியாத பாற் கடலுடன் ஒப்பிட்டு அதைக் கடந்து அல்லது மௌகாரி களுக்குச் சொந்தமான யானைப்படையை முறியடித்து முன்னேறிப் பெருமை பெற்றார் என்று குறிப்பிட்டதைப் போல் அல்லாமல் அப்ஸாடுப் பட்டயம் ஸ்ரீ சுஸ்தித வர்மனைப் போரில் வென்று பெருமை பெற்றார் என நேரடியாகக் குறிப்பிடுகிறது.

சுஸ்தித வர்மன் என்று பெயர் முடிவதால் அவரை மௌகாரி அரசர் எனத் தவறாக எண்ணுதல் கூடாது. க்ஷத்திரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 'வர்மன்' எனச் சாதாரணமாகச் சேர்த்துக்கொள்வது வழக்கம். சுஸ்தித வர்மனை எதிர்த்து வென்ற பின்னர் மகாசேன குப்தர் நல்ல சூழ்நிலை யைப் பெற்றிருக்கவில்லை. பிற்காலத்துக் குப்தர்கள் பகைவர் களின் தாக்குதலால் மகதத்தை விட்டு வெளியேற நேரிட்டது. சாளுக்கிய அரசரான கீர்த்தி வர்மன் தம் நாட்டின் எல்லையைத் தென்பகுதியில் விரிவுபடுத்தினார். அவர் அங்கம், வங்கம், கலிங்கம், மகதம் ஆகியவற்றை வென்றதாக மகாக்கூடர்ப்

பட்டயம் கூறுகிறது. திபெத்தை ஆட்சி செலுத்திய ஸ்புரால் ஸ்டான் ஸ்காம்போ என்ற திபெத் அரசர் இந்தியப் படையெடுப்பை மேற்கொண்டு பீகார், உ. பி. பகுதிகளில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றார். இப் படையெடுப்பும் மகாசேனரின் நிலையை மேலும் பலவீனப்படுத்தியது.

இவ்வாறு மகாசேனரின் நிலை சோதனைக்குள்ளாகியமையால் மௌகாரிகள் மகாசேன குப்தரைத் தாக்கத் தொடங்கினர். சர்வ வர்மன் மகாசேன குப்தரின் அரசை அகற்றித் தம்முடைய அதிகாரத்தை நிலைநிறுத்தினர். இவ்வாறு தோல்விமேல் தோல்வி அடைந்த மகாசேன குப்தர் மாளவம் சென்றார். அங்கும் சிக்கல்கள் தோன்றின. காலசூரி அரசர் மகாசேன குப்தரை எதிர்த்தார். இங்கும் தோல்வி முகம் கண்ட அவர் கிழக்குப் பகுதியிலிருந்த விதிசாவை நோக்கிச் சென்றார். கி. பி. 601 வரை அங்கேதான் இருந்தார்.

மகாசேன குப்தரின் ஆட்சிக்குட்பட்ட மாளவப் பகுதிகள் எவை? 5ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வாத்ஸ்யாயனரின் காமசூத்திர விளக்க உரைக்குறிப்பில் மாளவம் என்ற பெயர் கிழக்கு மாளவத்தையே குறிக்கும். ஆர். எஸ். திரிபாதி, டி.சி. சர்க்கார் முதலானவர்கள் இன்றைய டிலிசா மாவட்டமே, பாணரால் மாளவம் என்று குறிக்கப்பட்டது என்பர். எச். சி. இராய் சௌத்திரி (H. C. Roy Chaudury) மகாசேன குப்தர் ஏறக்குறைய கிழக்கு மாளவம் எனப்பட்ட இன்றைய உ. பி. யின் சில பகுதிகளுடன் மகதத்தையும் சேர்த்து ஆண்டார் எனக் கருதுகிறார். பி.சி. லாவும் (B. C. Law) இதே கருத்துக் கொண்டவர்தாம்.

ஹர்ஷ சரிதத்திலும், காதம்பரியிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாளவம் குறிக்கப்படுகிறது. லதாக்கள், மாளவம், கூர்ஜரம் ஆகியவைகளைப் பொதுவாகச் சேர்த்தே ஹர்ஷ சரிதத்தில் குறிப்பிடப்படுவதால் அவை புவியியல் அடிப்படையில் அடுத்தடுத்து அமைந்திருக்கவேண்டும். மகாசேனரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மாளவ அரசின் கிழக்கு எல்லை இன்றைய இரேன் (Eran) எனவும், பண்டேல்கண்டிலுள்ள ஜாஜ்ஹோட்டி (Jajhoti) சுமார் 1000 வீ தூரம் உடையது என யுவாங் சுவாங் குறித்திருக்கவேண்டும் எனவும் பி. பி. சின்ஹா கருதுகிறார். கி. பி. 601-ல் இறக்கும் தறுவாயில் தம் மக்களைத் தானேஸ்வரத்திற்கு அனுப்பிவைத்தார்.

பிற்காலக் குப்தர்களின் அரசியல் சிறப்பு குன்றியமைக்கு ஹர்ஷரும் காரணமாவார். கௌடாவில் இதே நேரத்தில் மகா சேன குப்தரின் திறை அரசரான சசாங்கன் தன்னாட்சி பெற்றார். மகா சேனரின் முடிவு குறித்துத் தெரியவில்லை. அவருடைய இரு மக்களான குமார குப்தரும் மாதவ குப்தருமே தானேஸ்வரம் அனுப்பப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் பிரபாகரின் மக்களான இராஜ்ய வர்தனருக்கும் ஹர்ஷ வர்த்தனருக்கும் பணியாளர் ஆயினர்.

மகாசேன குப்தரின் பேரன் ஆதித்திய சேனர் பின்னாளில் தம் முன்னோர்களைப்போல மகதத்தை ஆண்டார். ஆதித்திய சேனரின் அப்ஸாடுப் பட்டயம் அவ் வமிசத்தின் வமிசாவளி முழுமையையும் எடுத்துக் காட்டுகிறது. ஹர்ஷர் தம் ஆட்சியின் பிற்காலத்தில் மகதத்தின் அரசு பொறுப்பை மாதவ குப்தரிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஹர்ஷர் மகதத்தின் ஆட்சிப் பொறுப்பை மாதவ குப்தரிடம் ஒப்படைத்திருந்தார் என்று பாணரோ யுவாங் சுவாங்கோ ஏதும் குறிப்பிடவில்லை. ஹர்ஷரின் இறப்பிற்குப் பின் மாதவ குப்தரின் மகன் ஆதித்த சேனர் மகத அரசு பொறுப்பைக் கைப்பற்றியது ஹர்ஷரின் காலத்திலேயே மாதவ குப்தர் மகதத்துடன் தொடர்பு கொண்டிருந்ததற்கு எடுத்துக்காட்டு ஆகும். ஹர்ஷர் மறைந்த பின்னரே ஆதித்திய சேனர் மகதத்தைக்கைப்பற்றிப் பிற்காலக் குப்தர்களின் அரசை நிறுவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வங்காளம்**

வங்காளத்தில் குப்தப் பேரரசு வீழ்ச்சியினால் இரண்டு தனி அரசுகள் எழுந்தன. தெற்கு, கிழக்கு, மேற்கு வங்காளத்தின் ஒரு பகுதி ஆகியவை அடங்கிய அரசு கி.பி. ஆறாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் நிறுவப்பட்டது. கோபச்சந்திரா, தர்மாதித்யா, சமாச்சார தேவர் ஆகிய இம் மூன்று மரபு அரசர்களின் பெயர்களை ஆறு செப்பேட்டுப் பட்டயங்களும் கொண்டுள்ளன. ஆனால், அவைகளைக் குறித்து ஏதும் அறிய இயலவில்லை. மகாராஜாதிராஜா என்ற பட்டத்தை அனைவரும் கொண்டிருந்தனர். சமாச்சார தேவர் பொற்காசுகளை வெளியிட்டார். அவைகளில் ஒருவகைக் காசுகள் கடைசிக் குப்தப் பேரரசு காசுகளை ஒத்துள்ளன.

வினய குப்தா, கோபச்சந்திரா ஆகியோரின் கொடைப் பட்டயங்களில் மகாராஜா விஜயசேனா என்பவர் செல்வாக்குள்ள திறையரசராகவும் உயர் அதிகாரியாகவும் விளங்கினார் எனக்

குறிப்பிடப்பட்டுள்ளது. வினய குப்தாவிற்குப் பின் கீழ்வங்கத்தில் குப்தர் ஆட்சி முடிவுற்றுக் கி. பி. 507-க்குப் பின் சுயேச்சை அரசு ஒன்று கோபச்சந்திராவால் ஏற்படுத்தப்பட்டது.

பேரரசு குப்தர்கள் வடவங்கத்தில் கி. பி. 543 வரை ஆதிக்கம் செலுத்தினர். அவர்கள் கீழ்வங்காளத்தைக் கைப்பற்ற முயற்சி ஏதும் மேற்கொண்டனரா ன்பது உறுதியாகத் தெரியவில்லை. பிற்காலக் குப்த அரசரான ஜீவித குப்தரின் கடற்கரைப் பகுதி மக்களுக்கு எதிரான போரும், 'கௌடர்களைக் கடலில் சரண்புகச் செய்தேன்' என்ற ஈசான வர்மனின் பெருமைமிகு உரையும் குறிப்பிடத்தக்கன. அவை பெயரளவிலேனும் பேரரசின் சார்பில் அவர்களின் மாநிலத்தைப் பேரரசின் கீழ்க் கொண்டுவரச் செய்யப்பட்ட முயற்சியாகும். ஏனென்றால், உண்மையான அதிகாரம் மௌகாரிகளிடமோ பிற்காலக் குப்தர்களிடமோ இருந்திருக்கக்கூடும். கோபச்சந்திரா குப்தர்களின் ஆட்சி வீழ்ந்த சமயத்தில் கி. பி. 525-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றார் எனலாம்.

குப்தர்களின் மாதிரியிலான எண்ணிறந்த பொற்காசுகள் கிழக்கு வங்கத்தின் பல பகுதிகளிலும் கிடைத்துள்ளன. அவற்றின் வாயிலாகப் பின்னர் இப் பகுதியில் பிற அரசர் ஆட்சி செலுத்தினர் என அறியமுடிகிறது. இக் காசுகளை வெளியிட்ட அரசர்களில் இருவருடைய பெயரை மட்டுமே உறுதியாகக் குறிப்பிட இயலும். அவர்கள் பிருதுவீரா, அதன்யாதித்யா ஆகிய இருவருமே ஆவர். அனைவரும் கி.பி. 6,7 ஆம் நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், அவர்கள் பழைய அரச மரபுடன் தொடர்புடையவர்களா என்பது தெரியவில்லை. சாளுக்கிய அரசன் கீர்த்தி வர்மன், திபெத்திய அரசன் ஸ்ரோன்ஸ்டான் ஆகியோரின் படையெடுப்புகளால் பாதிக்கப்பட்டனரா என்பது தெரியவில்லை.

புதிய அரசு வங்கம் எனப்பட்டிருக்கலாம். ஏனென்றால் இக் காலம் முதல்தான் கௌடாவும், வங்கமும் வங்காளத்தில் இரு சிறப்பான அரசியல் பிரிவுகளாக விளங்கத் தலைப்பட்டன. கௌடா என்பது வடக்கு, மேற்கு வங்காளப் பகுதிகளையும், வங்கம் என்பது தெற்கு, கிழக்கு வங்காளப் பகுதிகளையும் குறிப்பிடுகின்றன. இவற்றின் எல்லைகள் பல்வேறு காலங்களில் மாறுபட்டிருந்தன. கிழக்கு வங்கத்தைக் குறிப்பிடும் 'சாமதாதா' என்ற பழைய பெயரும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. நாளந்தா

வின் தலைவர் சிலபத்ராவைக் குறிப்பிடுகையில் அவரை யுவாங் சுவாங் சாமாத்ராவின் பிராமண அரச குலத்தவர் என்று குறிப்பிடு கிறார். இந்த அரச குலத்தவர் மேலே குறிப்பிட்டுள்ள அரசர் களுடன் தொடர்புடையவர்களா என்பது தெரியவில்லை.

குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் உடனடிதோன்றிய கௌடாவின் அரசியல் நிலை குறித்து ஒன்றும் தெரியவில்லை. ஈசான வர்மனின் ஹராஹாப் பட்டயத்தில்தான் கௌடா என்பது முதன்முறையாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வட மேற்கு வங்காளம் கௌடா என யுவாங் சுவாங் காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கௌடா சசாங்கனின் எழுச்சிக்குப் பின் முக்கியத்துவம் பெற்றது. கௌடா மக்கள் தென்பகுதியி லும் காணப்படுவதைக் கொண்டு அவர்கள் மற்றப் பகுதிகளுக்குச் சென்று குடியேறியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. மௌகாரி அரசர்கள், பிற்காலக் குப்தர்கள் ஆகியோரின் பட்டயங்கள் கௌடா கடல் பகுதியை ஒட்டி அமைந்திருந்தது என்பதைக் காட்டுகின்றன.

ஆனால், புதிதாக அமைக்கப்பட்ட அரசு தன்னுடைய சுயேச்சைத் தன்மையைக் கொண்டு விளங்கியது. கோபச்சந்திரா குறைந்தது 18 ஆண்டுகள் ஆட்சி செலுத்தியிருக்க வேண்டும். அதன் பின்னர் தர்மாதித்தியாவும், சமாச்சார தேவாவும் ஆட்சி செலுத்தியிருக்க வேண்டும். ஆனால், அவர்களுடைய உறவு, ஆட்சிக்காலம், வாரிசு முறை ஆகியவை குறித்து ஒன்றும் தெரிய வில்லை. 14 ஆண்டுகள் ஆட்சி நடத்திய சமாச்சார தேவர் குப்த மரபினை ஒட்டி நரேந்திர தேவர் என்ற பட்டத்தைக் கொண்டார் என்பதை அவரது காசுகளால் அறியலாம். இந்த மூன்று அரசர் களும் கி. பி. 525-575 காலத்தில் ஆட்சி செலுத்தியிருக்கக்கூடும்

சமாச்சார தேவாவின் காசுகளில் அம்பு எய்வது போன்ற ஓர் உருவமும், எருதுக் கொடியும் காணப்படுகின்றன. அதன் எடை 148·2 மணிகள். நாணயத்தின் முன்புறம் இடப் பக்கத்தில் அரசர் தம் இடக்கையில் வில்லும், வலக் கையில் அம்பும் கொண்டு நிற்கிறார். அதற்குப் பக்கத்தில் நந்தியின் வடிவம் காணப்படுகிறது. கீழே ஷஹசா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்புறம் இலக்குமி தாமரையில் அமர்ந்திருப்பதைப் போன்று சித்திரிக்கப்பட்டுள்ளது. இலக்குமி தன் இடக்கையில் தாமரை யுடனும், வலக்கையில் அணிகலனுடனும், அடுத்து ஸ்ரீ நரேந்திரன் மயூஸ் கதையுடனும் வீற்றிருப்பது காணப்படுகிறது என்பதனை டாக்டர் ஸ்மித் எடுத்துக்காட்டினார். என். கே. பட்டாச்

சாரியும் இதைச் சமாச்சார தேவரின் நாணயம் என்று குறிப் பிடுகிறார். நரேந்திர ஆதித்தியர் என்ற பெயரையும் கொண்ட சமாச்சார தேவரின் நாணயங்களை ஜெயா, சசாங்கன் முதலான வர்களின் நாணயங்களுடன் ஒப்பிட்டுக் காணும்போது கௌடா வை ஆண்ட அடுத்த இரு அரசர்கள் ஜெயாவும், சசாங்கனும் என அறிகிறோம். இந்த நாணயத்துடன் வங்கத்தில் கண்டெடுக் கப்பட்ட ஜெயாவின் மற்ற நாணயங்களை ஒப்பிட்டுக் கர்ண சுவர்ண வப்ப கோஷ வாத ஆணையில் 'மகாராஜாதிராஜ ஜெயநாக' எனக் குறிக்கப்பட்டவர் 'ஜெயாவே' என அடையாளம் காண்கிறோம்.

இந்த இரண்டு அரசர்களில் சசாங்கன் முதலில் பொறுப் பேற்றவரா, ஜெய நாகா முதலில் பொறுப்பேற்றவரா என்பது விவாதத்திற்குரியதாக உள்ளது. ஜெய நாகா, சசாங்கன் ஆகிய இருவரும் உறவினர் அல்லர். மேலே குறிப்பிட்ட மூன்று அரசர் களுடைய உறவினர்களாகவும் தெரியவில்லை.

ஜெய நாகாவின் காலம் சசாங்கனின் காலத்திற்கு முந்தியது என்றே கருத வேண்டியுள்ளது. இதற்கான சான்றுகள் குறைவாகவே உள்ளன. சசாங்கனுக்குப்பின் ஜெய நாகா பொறுப்பேற்றிருக்க வேண்டும் என வரலாற்றாசிரியார் சிலர் கருதுகின்றனர். அக் கருத்தினையும் ஆராய்வோம். இவ்வாறு கருதப்பட்டதற்குக் காரணம் யாது?

மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவில் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தின் வரிசையே அக் கருத்துக்கு அடிப்படை எனலாம். அதில் முதலிலேயே சசாங்கனின் வாழ்க்கைபற்றிய விளக்கங்களும், பின்னால் கௌடாவில் நாக ராஜா என்பவரின் ஆட்சி பற்றியும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நாக ராஜாதான் ஜெய நாகா என்று கொண்டு மேலே சொன்ன முடிவிற்கு வந்தனர். இதற்கு விளக்கம் அளிக்க அறிஞர் கே. பி. ஜெயஸ் வால் நாக ராஜாவை ஜெய நாகா எனக் கொள்வது மிகத் தவறாகும் என்று கூறிப், பாரசிவர்களுக்கு உட்பட்ட நாகர் களின் ஆட்சியையே மஞ்சு ஸ்ரீ மூலகல்பா குறிக்கும் எனக் கருத்துத் தெரிவித்தார்.

மஞ்சு ஸ்ரீ மூலகல்பா தான் விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட பாத்திரங்களின் உண்மையான குணநலன்களைப் பல பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்தி மறைத்துவிடுகிறது. பின்வரும் வரிகளுடன் நாணயச் சான்றுகளை இணைத்து ஆராயும்போது

'ஜெயா' என்ற நாகம் (ஜெயநாகா) தென்கிழக்குப் பகுதி மக்களை வென்றது. கேசரியும் (சிங்கம்) சோமா (சசாங்கன்) என்ற பெய ருடையவரும் அரசராயினர். இதனால், கௌடா அரசு பிரிந்தது. எனவே, அவை மறைமுக உவமைகளால் ஜெய நாகாவையும், சசாங்கனையும் குறிப்பிடுகின்றன எனலாம்.

சசாங்கனுக்கு ஜெயா பிந்தியவர் என்பதற்காகப் பட்டசாலி காட்டும் காரணம் இது. ஜெயாவின் நாணயங்கள் சசாங்கனின் நாணயங்களைவிடத் தரத்திலும் எடையிலும் குறைந்து காணப்படுகின்றன. சசாங்கனின் நாணயங்கள் சராசரி 145.8 மணி எடையும், ஜெயாவின் நாணயங்கள் 136 மணி எடையும் கொண்டுள்ளன. நாணயங்களில் காணப்படும் எடைக்குறைவு பிற்காலத்தில் ஆட்சி புரிந்தவருடையவை என்பதைக் குறிக்கும் எனப் பொதுவாகக் கருதப்படுவதால் சசாங்கனுக்கு ஜெயா பிந்தியவர் எனலாம். ஆனால், ஹர்ஷரின் அதிகாரம் பெருகிக்கொண்டிருந்த வேளை அது. அதனால், சசாங்கனின் இறப்பிற்குப் பின் வேறு ஒரு கௌடா அரசர் குறுகிய காலத் திற்குக்கூட அரசோச்ச அனுமதித்திருக்கமாட்டார் என்பதே பொருத்தமாகப் படுகிறது.

ஜெய நாகா தென் கிழக்கு வங்காளம் அல்லது கிழக்கு வங்காளப் பகுதிகளை வென்று தம் ஆட்சிக் காலத்தைத் தொடங்கியிருக்க வேண்டும். தென்கிழக்கு வங்காளம் ஆரும் நூற்ருண்டின் தொடக்கத்திலாவது கௌடாக்களின் தாயகமாக இருந்திருக்க வேண்டும். ஜெய நாகா தெற்கு வங்காளத்தை வென்றதன் காரணமாகவே சமாச்சார தேவாவிற்குப் பின் கௌடாவின் அரசு பொறுப்பேற்றூர். ஜெய நாகாவின் வப்ப கோஷவாதப் பட்டயம் அவர் 'மகாராஜாதிராஜ' என்ற விருது கொண்டிருந்ததைக் குறிக்கிறது. அவர் கர்ன சுவர்ண வமிச பரம்பரையைச் சேர்ந்தவர் எனவும் அது குறிப்பிடுகிறது.

ஜெய நாகாவின் ஆட்சி காமரூபத்திலும் பரவியிருந்தது. காமரூபத்தின் அரசர் சுஸ்தித வர்மன் இறந்தவுடன் கௌடா வின் அரசர் காமரூபத்தின் சு பிரதிஷ்தித வர்மன், பாஸ்கர வர்மன் ஆகிய இரு இளவரசர்கள் கௌடாக்களுக்கு எதிராகப் போரிட்டனர் என்ற செய்தியினைத் தூபிச் செப்பேடுகள் வாயி லாக அறிகிறோம். அச் செப்பேடுகளை ஆராய்ந்த பி. டி. சௌத்திரி காமரூப இளவரசர்கள், கௌடா அரசரின் தாக்குதலை மூறியடித்து வென்றனர் எனக் குறிப்பிடுகின்ருர்.

ஆனால், டி. சி. சர்க்கார் இக் கூற்றை மறுத்துக் கௌடா அரசை எதிர்த்துப் போரிட்ட சு பிரதிஷ்தித வர்மனும், பாஸ்கர வர்மனும் தீரத்துடன் போரிட்டாலும், பகைவரால் கைது செய்யப்பட்டுக் கௌடாவிற்கு அழைத்துச்செல்லப்பட்டனர் எனவும், பிற்காலத்தில் தங்களுடைய சிறப்பான குணநலன் களால் இந்த அரசை மீண்டும் பெற்றனர் எனவும் கூறுகிறார். மாளவத்தின் அரசர் என்பதைவிடக் கௌடாவின் அரசர் எனக் கருதப்பட்ட மகாசேன குப்தர் கௌடாவின் படைகளை நடத்திச் சென்றதை தூபிச் செப்பேடுகள் உணர்த்துகின்றன என மஜூம்தார், சௌத்ரி ஆகிய வரலாற்றறிஞர்கள் கருதுகின் றனர். சசாங்கன் காமரூபத்தின்மீது படையெடுத்ததையே அது குறிக்கிறது எனப் பி. பி. சின்ஹா கூறுகிறார்.

மகாசேன குப்தரும், சசாங்கனும் காமரூபத்தின்மீது படை யெடுப்பை மேற்கொண்டிருக்க முடியாது. அவர்கள் இருவருக் கும் இடைப்பட்ட காலத்தில் வங்காளத்தை ஆண்ட ஜெய நாகாவே காமரூபப் படையெடுப்பை மேற்கொண்டிருக்க வேண்டும். இதனை ஆராய்வோர் மகாசேன குப்தா மகதத்தை ஆண்ட காலத்தில் பல தொல்லைகளாலும், வெளி நாட்டுப் படையெடுப்புகளாலும் துன்பம் அடைந்துகொண்டிருந்தார்; எனவேதான் அந் நிலையில் அவர் ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கை யினை மேற்கொண்டிருக்க முடியாது என்று கூறுகின்றனர். ‘காமரூபத்தின்மீது படையெடுத்து அவர் வெற்றிச் சாதனை நிகழ்த்தியிருப்பின் அது ஆதித்திய சேனரின் அப்ஸாடுப் பட்டயத்தில் மிகச் சிறப்பித்துப் புகழப்பட்டிருக்கும். மகாசேன குப்தரைக் ‘கௌடா’ எனக் கருதமுடியாது; ஆனால், மகாசேன குப்தாரின் ‘மகத, வங்காள அரசைப் பெற்ற சசாங்கன் ‘கௌடா’ என அழைக்கப்படுவதால், மகாசேன குப்தரும் கௌடா என அழைக்கப்படலாம்’, என்ற மஜூம் தாரின் வாதம் பொருத்தமாகப் படவில்லை. மகதத்திற்கும் கௌடாவிற்கும் அரசராக உள்ள ஒருவர் முந்தியதையே பெரு மைய அரசாகக் கொண்டு மகதத்தின் அரசர் எனக் குறிப்பிடு வதையே விரும்புவார். அவரால் வெல்லப்படும் அரசர்களும் கூட மகத மன்னரிடம் வீழ்ந்ததையே ஒப்புக் கொள்வார் களேயல்லாமல், கௌடா அரசரிடம் தோல்வியடைந்ததாகக் கருதமாட்டார்கள். இதற்கு எடுத்துக்காட்டு, சிர்பூர்த் தூண் பட்டயம் ஆகும். அதில் ‘மௌகாரிகள் மகதத்தை ஆண்டதால் பெருமை பெற்றனர்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, காமரூபப் படையெடுப்பை மேற்கொண்டவர் மகாசேன குப்தராக இருக்க முடியாது என்பது தெளிவாகிறது.

இனிக் காமரூபப் படையெடுப்பை மேற்கொண்டவர் சசாங்களுக இருக்க முடியாது என்பதனை மெய்ப்பிக்கும் சான்று களைக் காண்போம். சசாங்கன் காமரூபத்தின்மீது படையெடுத் தவர் என்று கூறும் சின்ஹாவின் கருத்துப் பொருத்தமுடைய தாக இல்லை. தூபிப் பட்டயத்தில் காணப்படும் படையெடுப்பு நிகழ்ச்சி சசாங்கன் வங்காளத்தின்மீது உரிமை பெறுவதற்கு முன்னதாகவே நடைபெற்றதாகும். தூபிப் பட்டயத்தில் காணப்படும் போரர் சுஸ்தித வர்மனின் இறப்பிற்குப் பின், அதாவது கி. பி. 590-'95-ல் நடைபெற்றது. அத் தருணத்தில் மகாசேன குப்தரின் மகத ஆட்சி முடிந்துவிட்டது. சசாங்கன் கி. பி. 600-ல் சுவா இறக்கும்வரையில் தனி உரிமை பெற்ற அரசராக மாறவில்லை. மௌகாரிகளுக்குட்பட்ட சிற்றரசராகவே ரோட்டாஸ்கார் மாவட்டத்தை ஆண்டுவந்தார். சசாங்கன் மகதத்தைச் சுவாவின் இறப்பிற்குப் பின்னும், கௌடாவை ஜெகநாதாவின் இறப்பிற்குப் பின்னும் கைப்பற்றினர். எனவே, கி. பி. 604-5-க்கு முன் சசாங்கன் காமரூபத்தைத் தாக்குவது என்பது நடைபெற்றிருக்க முடியாதாகையால் ஜெயநாகாவின் காலத்திலேயே இப் படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும் எனலாம்.

பாணர்தம் ஹர்ஷ சரிதமும், மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவும் காமரூபத்தின்மீது படையெடுத்த நிகழ்ச்சிபற்றிக் குறிப் பிடவில்லை என்றும் சசாங்கன் காமரூபத்தைப் படையெடுத்து வென்றார் என்ற கூற்றுத் தவறு என்றும் காட்டுகின்றன. ஆக, ஜெய நாகாவே தூபிப் பட்டயத்தில் கண்டுள்ள படை யெடுப்பை மேற்கொண்டார் என்பது நிச்சயமாகிறது.

கி. பி. ஆரும் நூற்றுண்டின் இறுதியில், கௌடாவின் அரசராக விளங்கியபோது, காமரூபத்தின் அரசர் இறந்த செய்தி எட்டியவுடன் அதன்மீது படையெடுத்துத் தம் ஆதிக்கத் தைப் பரப்ப விரும்பினர். காமரூபத்தை வென்றார் எனவும், பின்னர் அதனைக் காமரூப இளவரசர்கள் கைப்பற்றினர் எனவும் கண்டோம். ஜெய நாகாவின் படை ஆற்றல் குறைந்தது என் பதையும், காமரூபம் அளவில் பெரியதாக விளங்கிற்று என் பதையும் அது காட்டுகிறது.

ஜெய நாகாவின் நாணயங்களைக் கீழ்க் கண்டவாறு விளக்க லாம். முன்புற இடப்பக்கத்தில் அரசர் இடக்கையில் வில்லும், கையில் அம்பும் கொண்டு தெய்வீகக் குறிப்புகளுடன் காணப்படு கிறார். வலப்பக்கம் சக்கரக் கொடியும், இடப்பக்கம் சற்றுக் கீழே

"ஜெய' என்ற எழுத்துகளும் காணப்படுகின்றன. பின்புறம் இலக்குமி உருவம் தாமரையில் அமர்ந்த நிலையில் இடக்கையில் தாமரையையும், வலக்கையில் அணிகலன்களையும் கொண்டு காணப்படுகிறது. அதற்கு மேலே சற்று இடப்பக்கம் யானை துதிக்கையைத் தூக்கி நீர் தெளிக்கும் நிலையும் ஸ்ரீ பிரகாந்த்யஷா என்ற தெளிவில்லா எழுத்துகளும் காணப்படுகின்றன. ஜெய நாகாவின் வப்பகோஷ வாத ஆணையில் ஒரு யானை அல்லது இரண்டு யானைகள் இலக்குமிமீது நீர் தெளிக்கும் தெளிவற்ற உருவம் காணப்படுகிறது.

சமாச்சார தேவ நரேந்திராதித்தியா, ஜெயா பிரகாந்தயஷா நாணயங்களுக்கிடையே காணப்படும் ஒரே வேற்றுமை என்ன வென்றால் சமாச்சார தேவரின் நாணயங்களில் நந்தியும், ஜெயா வின் நாணயங்களில் சக்கரக் கொடியும் காணப்படுவதே. சமாச் சார தேவரின் நாணயங்கள் ஜெயாவின் நாணயங்களைவிடப் பழைமையானவை.

ஜெயா. சசாங்கன் ஆகியோர் நாணயங்களின் பின்புறம் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றது. ஆனால், சசாங்கன் நாணயத்தின் பின்புறத்தில் நந்தியும், சந்திரனும் காணப்படு கின்றன. பாணர் சசாங்கனைப்பற்றி விளக்கும் இடங்களில் அவ் விரண்டும் உவமையாகத் தவறாது காணப்படுகின்றன. பின்புறம் நரேந்திராதித்தியா எனக் குறிப்பிடப்பட்டுள்ள நாண யங்கள் சசாங்கனின் நாணயங்களுக்கு முந்தியவை என அலென் கருதுகிறார்

**சசாங்கன் :**

காமரூபப் படையெடுப்பிற்குப் பின் ஜெயநாகா அதிக காலம் வாழவில்லை. கி. பி. 602-3-ல் அவர் இறந்திருக்கவேண்டும். இவ்வாறு நாம கருதக் காரணம் இதுதான். கி. பி. 606-ல் ஹர்ஷர் அரசராகப் பொறுப்பேற்ற சமயம் சசாங்கன் கௌடா வில் தம் அதிகாரத்தை நன்கு நிலைநாட்டியிருந்ததே. ஹர்ஷரின் சகோதரர் இராஜ்ய வர்த்தனருக்கு முன்பே சசாங்கனின் வாழ்க்கை மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவில் விளக்கப்பட்டுள்ளது.

சசாங்கனின் இளமைக்கால வாழ்க்கை குறித்தும், எச் சூழ்நிலையில் அவர் கௌடா அரியணை ஏறினார் என்பது குறித்தும் உறுதியான தகவல்கள் இல்லை. தென்மேற்குப் பீகாரில் உள்ள

ரோட்டஸ்கார் மலைக்கோட்டைக் கல்வெட்டுகளில் ஸ்ரீ மக சாமந்தா சசாங்கா [சிறப்பு வாய்ந்த திறை அரசு தலைவர் சசாங்கா] என்ற பெயர் காணப்படுகிறது. மகாசேன குப்தரின் கீழ் இவர் திறையரசராக வாழ்க்கையைத் தொடங்கினர் என்று டாக்டர் மஜூம்தார் 'வங்க வரலாறு' என்னும் நூலில் குறிப்பிடுகிறார். இதுவே பொருத்தமானதாகப் படுகிறது என டி. சி. சர்க்கார் உரைக்கிறார். குப்தர்கள், சசாங்கனின் காசுகளுக்கு இடையே ஒற்றுமை காணப்படுவதாலும், நரேந்திர குப்தர் என்ற மற்றொரு பெயரும் சசாங்கனுக்கு இருந்ததாக ஹர்ஷ சரிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், பியூஹிலர், ஆர். டி. பானர்ஜி முதலிய வரலாற்றாசிரியர்கள் சசாங்கன் குப்தப் பேரரசர்கள் அல்லது பிற்காலக் குப்தர்களின் பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். இது பொருத்தமானதாகப் படவில்லை. பிறப்பில் குப்தராக அமையாவிடினும் குப்தர்களின் செயல்திறம் கொண்டு திகழ்ந்தார்; மௌகாரிகளின் திறை அரசன் எனக் கருதப்பட்டார்; என்னும் கருத்துகளையும் நிறுவப் போதுமான வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

பாணபட்டராலும், யுவாங் சுவாங்கினாலும் சசாங்கன் கௌடா அரசன் எனக் குறிப்பிடப்படுகின்றார். அவருடைய தலைநகரான கர்ண சுவர்ண எது என உறுதியுடன் கண்டறிந்து கூற இயலவில்லை. (மூர்ஷிதாபாத் மாவட்டத்தில் பெர்ஹாம்பூருக்குத் தென்மேற்கில் பத்துக் கி.மீ தூரத்தில் இராங்காமதியில் அழிந்து காணப்படும் இடமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.) சசாங்கனுக்கு முன்னர் மிட்னாப்பூருக்கும், கயா மாவட்டங்களுக்கும் இடையில் சிலர் ஓர் அரசை அமைத்தனர். நாளடைவில் அந்த வமிசத்தினர் ஓரிஸ்ஸா வரையிலும் அதனை விரிவுபடுத்தினர். அக் குலத்தில் தலைவன் அல்லது அரசன் சம்புயாஸஸ் ஓரிஸ்ஸாவை கி. பி. 580-ல் ஆட்சி செலுத்தி வந்தான். கி. பி. 603-லும் அவ் வரசனே ஆட்சி செலுத்தியிருக்க வேண்டும்.

சசாங்கன் அந்தச் சம்புயாஸஸ்ஸையோ அவரின் வாரிசையோ தோல்வியடையச் செய்து தண்டபுத்தி, உத்கல், கொங்கோட (மிட்னபூர், வடக்கு, தெற்கு ஒரிஸ்ஸா) ஆகியவற்றைத் தமது ஆட்சிக்கு உட்படுத்தினர் எனலாம். சசாங்கனின் இப் பகுதியில் ஆட்சி செலுத்திய அலுவலர்கள், திறைத் தலைவர்கள் ஆகியோரின் பதிவுகள் அதனை எடுத்துக்காட்டு

கின்றன. கொங்கோட அல்லது தெற்கு ஒரிஸ்ஸாவை ஆட்சி செலுத்திய சைலோத்பவ மரபினர் கி. பி. 619 வரையிலாவது சசாங்கனின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

சசாங்கன் மகா சேன குப்தருக்கு உட்பட்ட திறை அரசராக அரசியல் வாழ்வினைத் தொடங்கியிருக்க வேண்டும் எனக் கருதியவர்கள் கே. எல். பருவாவும், ஆர். ஸி. மஜூம்தாரும் என்று கண்டோம். சசாங்கனின் நாணயங்கள் மற்றொரு கௌடா அரசரான ஜெயா அல்லது ஜெய நாகாவின் நாணயங்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன என்று குறிப்பிட்ட ஜே. அலென் சசாங்கன் மகதத்தின் குப்த வமிசத்தைச் சேர்ந்தவர் என்று கருத்துக் கொண்டிருந்தார் என ஆர். டி. பானர்சி (R.D.Banerjee) கூறுகிறார். சசாங்கன் மகா சேன குப்தரின் மகன் என்ற கருத்தைக் கூறியவர் வித்ய விநோதர். சசாங்கன் ஜெய நாகாவிற்குக் கட்டுப்பட்ட சிற்றரசர் என்று கூறியவர் பி. பி. சின்ஹா.

ஜெய நாகா வங்காளத்தைக் கட்டுப்படுத்தினார் என்பதற்குச் சான்றுகள் இல்லையாதலால் சசாங்கன் ஜெய நாகாவிற்கு உட்பட்ட சிற்றரசராக விளங்கியிருக்க வாய்ப்புகள் இல்லை. பி. சி. சென், சசாங்கன் அவந்தி வர்மனுக்கு உட்பட்ட மகதத்தில் மகாசாமந்தா பட்டம் பெற்ற சிற்றரசர் எனவும், கயாவிலுள்ள வர்மனுக்கு உட்பட்ட மகதத்தில் மகா சாமந்தப் பட்டம் பெற்ற சிற்றரசர் எனவும், கயாவிலுள்ள வர்மன் இனத்தவர்களைக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும் எனவும், மௌகாரி அரசர்களான அவந்தி வர்மன், கிரக வர்மன் முதலானவர்கள் மகதத்தை ஆண்டபோது சசாங்கன் ஓர் உயர் சிற்றரசராக விளங்கினார் எனவும் டி. ஸி. கங்கூலி கருதுகிறார்.

சசாங்கன் மௌகாரிக்கு உட்பட்ட சிற்றரசனாக விளங்கினார் எனவும், மகதத்தை முதலில் வென்று கௌடாவைக் கைப்பற்றினார் எனவும் குறிப்பிடப்படும் கருத்து ஏற்புடையதே. ஆனால், சசாங்கன் மகதத்தைச் சேர்ந்தவர் என்ற கங்கூலியின் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஹர்ஷ சரிதம் யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்புகள், மஞ்சு ஸ்ரீ மூலகல்பா ஆகியவற்றில் சசாங்கன் கௌடாவின் அரசர், கௌடாவைச் சார்ந்தவர் எனப் பலமுறை தெளிவாக விளக்கப்பட்டுள்ளதால் அதனை நாம் ஏற்கவில்லை.

மகதத்தை ஆட்சி செலுத்துவது, உயர் அதிகாரத்தை, வல்லமையைக் குறிப்பதாக அக் கால அரசர்களால் கருதப் பட்டது. ஹர்ஷர் தானேஸ்வரம், கன்னேசி அரசர் என்ற சிறப்பைப் பெற்றிருப்பினும், மகதத்தின் அரசர் எனச் சீனக் குறிப்புகளில் காட்டப்பட்டிருக்கிறார். இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் சசாங்கன் மகதத்துடன் கொண்டிருந்த உறவுகள் சிறப்பானவையாக இருந்திருப்பின் அல்லது சில வரலாற்றறிஞர்கள் கருதுவதுபோல் இறக்கும்வரையிலும் மகதத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்பு நீடித்திருப்பின் சசாங்கனின் சொந்தக் குறிப்புகளிலோ அக் காலத்தைச் சேர்ந்த மற்றக் குறிப்புகளிலோ அது விளக்கப்பட்டிருக்கும்.

சசாங்கன் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிய வரலாற்றை அறிய உதவும் சான்றுகளாகக் காசுகளும் உதவுகின்றன. ஜெயபிரகாந்தயஷா எனக் குறிக்கப்பட்டுள்ள நாணயமும், சசாங்கனின் ஸ்ரீ சாஜெயா எனக் குறிக்கப்பட்ட நாணயத்திற்கு முந்தியதாக இருக்க வேண்டும். சசாங்கனின் நாணயத்தில் ஜெயா என்று காணப்படுவதன் காரணம் யாது? ஜெயா வின் பாரம்பரியத்தைச் சசாங்கன் உரிய வாரிசு உரிமையின்றிப் போர் வலிமையினால் அபகரித்துக்கொண்டு, தம் நாணயங் களில் முன் அரசர்களுடன் நல்லுறவு கொண்டிருந்ததைக் காட்டிக்கொள்வதன்மூலம் தம்முடைய உரிமையை நிலைநாட்டிக் கொள்ள விரும்பியிருக்க வேண்டும் என்று கருதலாம்.

சசாங்கன் காசி, குசி நகரம், கயா, பாடலிபுத்திரம் ஆகிய வற்றை வென்று மகதத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றிய பின்னர்த் தமது கவனத்தைக் கௌடாவின்மீது திரும்பினன். ஜெய நாகாவின் மறைவு கௌடாவைக் கைப்பற்ற எளிதான சூழலை உருவாக்கியது. அப்போது இராஜ்ய வர்த் தனரும், பிரபாகர வர்த்தனரும் இறந்திருந்த வேளை. பாணர் ஹர்ஷ சரிதத்தில் இச் சூழ்நிலை 'சூழும் இருளுடன்' ஒப்பிடப் பட்டுள்ளது. பிரபாகர வர்த்தனர் இறந்த நிலையில் வர்த்தன அரசு குடும்பத்தின் எதிர்காலம் இருண்டு காணப்பட்டது. இராஜ்ய வர்த்தனர், ஹர்ஷர் ஆகிய இருவரில் யார் அரசு பொறுப்பை ஏற்பது என்று முடிவு காணப்படவில்லை.

இக் குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்த எதிரிகள் முடிவு செய்தனர். கன்னேசி அரசு பொறுப்பு முதிர்ச்சி அடையாத அரசரிடம் இருந்தகாலும், அதற்குத் துணை நின்ற பிரபாகர வர்த்தனர் இறந்துபோனதாலும் ஒரே சமயத்தில்

கன்னோசி, தானேஸ்வரம் ஆகிய இரு அரசர்களையும் வீழ்த்த மாளவம், கௌடா அரசர்கள் திட்டமிட்டனர் என்பதனை ஏற்கெனவே கண்டோம். மாளவத்தின் அரசருக்கும் கிரக வர்மனுக்கும் நடைபெற்ற போரில் மௌகாரி அரசர் கொல்லப்பட்டார். அவரது மனைவி ராஜ்ய ஸ்ரீ கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். தம் தங்கையின் கணவனைக் கொன்றவர்களைப் பழி வாங்கப் புறப்பட்ட இராஜ்ய வர்த்தனர் சசாங்கனால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டார். ஹர்ஷர் படை நடத்திச் சென்று சசாங்கனைத் தம் நாடான கௌடாவை விட்டு வெளியேற முடியாதவாறு தடுத்தார் என மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் குறிப்பு, சசாங்கன் இறக்கும்வரை மகதத்தின்மீது ஆட்சி உரிமை கொண்டிருந்தார் என்ற கூற்றுத் தவறு என மெய்ப்பிக்கின்றது.

யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்புகளிலிருந்து சசாங்கன் சமயப் பொறை உணர்வு அற்றவர் என்று அறிகிறோம். பௌத்த மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளைச் சசாங்கன் மேற்கொண்டார் என ஐந்து இடங்களில் தம் பயணக் குறிப்புகளில் யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.

மகதத்தில் இயங்கிக்கொண்டிருந்த பௌத்த மடாலயங்களைத் தாக்கி அவர் அழித்ததாகக் கூறப்படுகிறது. சசாங்கன் கன்னோசி அரசைத் தாக்கி மாளவத்து அரசருடன் சேர்ந்து கொள்ளச் சென்ற சமயம் பௌத்த மதத்திற்கு எதிரான கொள்கைகளைப் பின்பற்றியிருக்கவேண்டும். ஹர்ஷர் பதவி ஏற்பதற்கு முன்பே சசாங்கன் பௌத்தர்களுக்கு எதிரான கொள்கையினைப் பின்பற்றியிருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. ஹர்ஷர் கன்னோசி அரசு பொறுப்பு ஏற்பதற்கு முன் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட அவலோகி தீஸ்வரா போதி சத்துவரின் அறிவுரையை நாடிச் சென்றதாகவும், பௌத்த மதத்திற்குத் தீங்கிழைத்த சசாங்கனைத் தண்டிக்கும் நல்ல கர்மத்தைப் புத்தரின் வாக்குப்படி நிறைவேற்றவே கன்னோசியின் அரசு பொறுப்பை ஒப்புக் கொண்டதாகவும் யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் தெளிவாகக் காணப்படுகிறது. இவையெல்லாம் கி.பி. 606-க்கு முன்னரே பௌத்த மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார் என்பதனைத் தெளிவாகக் குறிக்கின்றன.

சசாங்கன் குசி நகரத்தில் வாழ்ந்த பௌத்தர்களைத் துன்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. இதற்கான சான்றுகளைக் காண்போம்.

'உடனே சசாங்க ராஜா பௌத்தக் கோட்பாடுகளை அழித்தார். துறவிகள் துணையற்றுப் போயினர்; ஆண்டுகளும், திங்கள்களும் விரைவாகக் கடந்தன.

'அசோகர் அரியணை ஏறிய சமயம் அடிக்கடி நேரில் சென்று புனிதக் கல்லை வழிபட்டார். அதற்குப் பின் பல்வேறு நாட்டு அரசர்களும் அதைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் செல்லவிரும்பினார்கள். ஆனால், அதை அவர்கள் அவ்விடத்திலிருந்து அசைக்கவே முடியவில்லை.

'பின்னால் சசாங்க ராஜா பௌத்தக் கோட்பாடுகளை அழிக்க முற்பட்ட சமயம் கல்லை வெட்டி எடுத்து, அதன் புனித அடையாளங்களை அழித்து அதைக் கங்கையில் எறிந்தார்.

'சசாங்கன் புனித போதியை வெட்டி வீழ்த்திய பின் புத்தரின் சிலையையும் அழிக்க முயன்றார். ஆனால், அதன் அழகையும் சிறப்பையும் கண்டபின் அவருடைய மனம் அமைதியும் முடிவும் இன்றித் துன்பமுற்றுப் பின் தமது நாட்டிற்குத் திரும்பினார்'. பின்னர் சசாங்கன் தம் அதிகாரிகளில் ஒருவரை அழைத்துப் புத்தரின் சிலையை அகற்றி அவ்விடத்தில் சிவனின் சிலை ஒன்றை அமைக்கும்படி கட்டளையிட்டார். அந்த அதிகாரி புத்தரின் சிலையை மறைத்துச் சுவர் எழுப்பிவிட்டுக் கட்டளை நிறைவேற்றப்பட்டது எனச் சசாங்கனிடம் தெரிவித்தாராம். இவையெல்லாம் சசாங்கனின் சமயப் பொறையின்மைக்கு எடுத்துக்காட்டுகள்.

யுவாங் சுவாங்கின் குறிப்புப்படி சசாங்கன் மேற்கு வங்காளத்தில் உள்ள கர்ண சுவர்ணவைத் தலைநகராகக் கொண்டிருந்தார். சசாங்கன் ஹர்ஷருடன் மோதும் முன்னரே வங்காளத்தின் தெற்குப் பகுதியையும் கட்டுப்படுத்தியிருந்தார். கிழக்கு வங்காளம் அவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது ஐயத்திற்கு உரியதாகவே உள்ளது. சசாங்கனின் அரசு ஒரிஸ்ஸாவிலுள்ள கஞ்சம் மாவட்டம் வரை பிற்காலத்தில் பரவியிருந்தது. கௌடாவை விட்டு வெளியேறாது சசாங்கன் ஹர்ஷரால் தடுக்கப்பட்டார் என்று கண்டோம். மேற்குப் பகுதியில் நாட்டை விரிவுபடுத்தும் முயற்சியில் தோல்வியடைந்தாலும், மகதத்தை இழக்க நேர்ந்தாலும் நாட்டை விரிவுபடுத்த வேண்டும் என்ற அவர்தம் ஆர்வம் குறையவில்லை. சசாங்கன் தம் கவனத்தை எளிதாக வெற்றி பெறக்கூடிய ஒரிஸ்ஸா அரசின் மீது செலுத்தினார்.

ஒரிஸ்ஸாவின் வடக்குப் பகுதியும், நடுப்பகுதியும் மான அரசர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஒரிஸாவின் நடு வடக்குப் பகுதி முழுவதும், தென்பகுதியில் கஞ்சம் மாவட்டம் வரை யிலும் சசாங்கனல் கைப்பற்றப்பட்டது. தண்டபுத்தியும், உத்கலாவும் சசாங்கனுக்கு உட்பட்டிருந்தன என்பதை மிட்னு பூரில் கண்டெடுக்கப்பட்ட செப்பேடுகளிலிருந்து அறியலாம். கி. பி. 616 ஆம் ஆண்டிற்குள் சசாங்கன் தண்டபுத்தி, உத்கலா ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் அரசராக விளங்கினர். சசாங்கன் இன்றைய பாலாசோர், மிட்னபூர் மாவட்டங்களாகிய உத்தரா தொசாலியையும் கி. பி. 608 ஆம் ஆண்டே கைப்பற்றி ஆட்சி புரிந்தார் என அறிகிறோம்.

மஞ்சு ஸ்ரீ மூலகல்பா சசாங்கனின் ஆட்சி பதினேழு ஆண்டு களும், சில வாரங்களும் நீடித்தது எனக் குறிப்பிடுகிறது. எனவே, சசாங்கனின் ஆட்சி கி. பி. 603 முதல் 620 வரை நீடித் திருக்க வேண்டும் என முடிவுகட்டலாம்.

இனிச் சசாங்கனின் மறைவு குறித்த யுவாங் சுவாங்கின் குறிப்புகளைக் காண்போம்.

சசாங்கன் புத்தரின் சிலையை அகற்றிவிட்டுச் சிவனின் சிலையை அவ் விடத்தில் அமைக்கும்படி ஆணையிட்டார். அவ் வாணை நிறைவேற்றப்பட்டது எனவும், அந் நிலையில் சசாங்கன் தெய்வத்தால் தண்டிக்கப்பட்டு நோயுற்று இறந்தார் எனவும் யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளார். புத்தரின் சிலைக்கு ஊறு விளைவித்தவுடனே சசாங்கன் நோயுற்று இறந்தார் என யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை. யுவாங் சுவாங் தம் நம்பிக்கையைப் புலப்படுத்தக் கவனத்தை ஈர்க்கும் நிகழ்ச்சியாக இதனைக் கூறியிருக்கக்கூடும்.

இத்தகைய கதை சுங்க அரசரான பௌத்தர்களைக் கொலை செய்வித்த புஷ்ய மித்திர சுங்காவிற்கும் கூறப்படுவதுண்டு. புஷ்ய மித்திரா மக்கள் கொண்டுவரும் ஒவ்வொரு பௌத்தத் துறவியின் வெட்டப்பட்ட தலைக்கும் 100 தினராக்கள் (Dinara) அளிக்கப்படும் என்ற சாகலாச் சட்டத்தைப் பறை சாற்றிய வுடன் புஷ்யமித்திர சுங்கா தம் படையுடன் நிலைகுலைந்தார் என்ற அக் கதை முற்றிலும் தவறு என்பது போலவே சசாங்கனைப் பற்றிக்கூறும் யுவாங் சுவாங்கின் கதையும் உண்மைக்கு மாருக இருக்கக்கூடும். யுவாங் சுவாங் புஷ்யமித்திர சுங்காவின் கதையை மனத்தில் கொண்டு அது போன்ற சாபக் கேட்டை ஏற்படுத்த இந் நிகழ்ச்சியை எழுதியிருக்கக் கூடும்.

மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவில் சசாங்கன் ஒரு மாதம் கடுமையான காய்ச்சலினால் அவதியுற்று இறந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சசாங்கன் கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டு இறந்ததை யுவாங் சுவாங் அம் மன்னவரின் பௌத்த சமய நம்பிக்கைக்குப் புறம்பான செய்கைகளுடன் தொடர்புபடுத்தியிருக்கவேண்டும்.

சசாங்கனின் இறப்பிற்குப் பின் கௌடாவின் அரசராக மணவாவை (Manava) ஹர்ஷர் நியமித்திருக்கக் கூடும். மணவா இறந்த பின் அல்லது அவரை ஆட்சியிலிருந்து இறக்கிய பின் ஹர்ஷர் கௌடா மாநிலத்தை மைய அரசின் நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார். மஞ்சு ஸ்ரீ மூலகல்பா சசாங்கனின் இறப்பிற்குப்பின் நிலவிய சூழ்நிலையைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

சசாங்கனின் இறப்பிற்குப் பின் கௌடா அரசியலில் ஒருவருக்கொருவர் பொறாமையும், நம்பிக்கையின்றிப் போர் செய்ய முயல்வதும் காணப்பட்டன. ஒரு வாரத்திற்கு ஓர் அரசர்; ஒரு மாதத்திற்கு ஓர் அரசர்; பின் ஒரு குடியரசு அரசியல் நிலை; இவை கங்கைக்கரையில் அமைந்திருந்த நாட்டில் அன்றாடச் சூழ்நிலையாக இருந்தன. அதன் பின் சோமாவின் மகன் மணவாவின் ஆட்சி எட்டு மாதங்களுக்கு நீடித்தது.

சசாங்கனின் பௌத்த சமய வெறுப்புணர்வை அறிந்து கொள்ளும் நாம் சசங்கனின் மன இயல்புகளின் மதிப்பீட்டையோ வெற்றிச் சிறப்புகளையோ குறிப்பிட இயலவில்லை. ஆயினும், வங்காளத்தின் முதல் சிறந்த அரசர் அவர் என்பதில் ஐயமில்லை. கௌடாவைச் சுயேச்சை நாடாக மாற்றியது மட்டுமன்றித் தெற்குப் பீகாரிலும், ஒரிஸ்ஸா முழுமையிலும் தமது அதிகாரத்தைப் பரப்பினார். வட இந்தியாவில் பேரரசு ஒன்றை ஏற்படுத்தும் துணிகர முயற்சியைக்கூட மேற்கொண்டார். அத்தகைய கொள்கையின் அடிப்படையில்தான் பாலர்கள் பிற்காலத்தில் பரந்த பேரரசு ஒன்றை அமைத்தனர். நட்புரிமையுடன் கூடிய பாணர், யுவாங் சுவாங் முதலான வாழ்க்கைக் குறிப்புகளை எழுதுவோர் இருந்திருந்தால் ஹர்ஷவர்த்தனரைப் போலச் சிறப்புடன் வரலாற்றில் குறிப்பிடப்பட்டிருக்கக் கூடும். ஆனால், அவருக்குரிய தக்க பெயரும் புகழும் மறைந்ததோடு இராஜ்ய வர்த்தனரைக் கொலை செய்தவராகவும் வரலாறு காட்டிவிட்டது.

**நேபாளம்**

காஷ்மீரத்தைப் போலவே கடந்த பல்லாண்டுக் கால வரலாற்றை அறிய உதவுகின்ற பல தலக் குறிப்புகளை நேபாளம் கொண்டுள்ளது. இத் தலக் குறிப்புகள் வம்சாவளிகள் எனப் படுகின்றன. அவை அரசர்களின் பெயர்கள், ஆட்சி ஆண்டுகள் முதலியவை குறித்த செய்திகளை மஞ்சு ஸ்ரீ என்ற கடவுள் ஒரு பெரிய ஏரியை நேபாளம் ஆக்கிய காலம் முதலாகத் தொகுத்து அளிக்கின்றன. அதன் பின் கற்பனைக் கதைகளாக உள்ளனவே அன்றி வரலாற்றுச் செய்திகளாக அமையவில்லை.

வம்சாவளியின் குறிப்புகளின்படி மான தேவா என்பவரே இருபதாவது லிச்சவி அரசராவார். லிச்சவி அரசு கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருக்கக் கூடும். லிச்சவி அரசு நேபாளத்தில் அரசியல் சக்தியாக மானதேவாவிற்கு முன் விளங்கியது. முதலாம் சந்திர குப்தரின் காலத்தில் லிச்சவி அரசுக்கும், அவருக்கு மிடையே திருமண உறவு நிகழ்ந்த செய்தி அறிந்த ஒன்றே. சமுத்திர குப்தரின் மேலாண்மையை லிச்சவிகள் ஏற்றுக்கொண்டனர் போலும். எவ்வளவு காலம் குப்தர்கள் நேபாளத்தில் செல்வாக் குடன் திகழ்ந்தனர் என்று தெரியவில்லை. குப்தப் பேரரசுக்குப் பின்னரே நேபாள லிச்சவிகள் சிறப்புடன் திகழ்ந்தனர் என அறிகிறோம். அவர்கள் குப்தர்களுக்கு அடங்கியவர்களாக விளங்கிக், குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு முன்னர் நேபாளம் முழுமைக்கும் ஆட்சியாளர்களாக மாறினர்.

இம் முயற்சியினைத் தொடங்கியவர் தர்ம தேவா ஆவார். அதனை அவருடைய மகனும் வாரிசுமான மான தேவா தொடர்ந்து மேற்கொண்டார். பிராமணிய சமயமும், வடமொழி இலக்கியமும் குப்தர்களின் காலத்தில் பெற்ற ஏற்றம் மான தேவாவின் பட்டயங்களிலிருந்தும் அவர்தம் வாரிசுகளின் பட்டயங்களிலிருந்தும் அறியப்படுகிறது.

மான தேவா விஹாரம் ஒன்றையும், அரண்மனை ஒன்றையும் அமைத்தார். இவ் விஹாரம் 'மானவிஹாரம்', எனவும் அரண்மனை 'மான கிரஹம்' எனவும் அவர் பெயரால் அழைக்க பட்டன. மானுங்கா என்ற காசும், மானேஸ்வரி என்ற கடவுள் வழிபாடும் இவர்தம் பெயருடன் தொடர்புடையன. தாக்குரி வம்சத்தவர்களிடையே மான என்ற அவர்தம் பெயர் காணப் படுகிறது.

மான தேவாவின் மகன் மஹிதேவன் அதன்பின் ஆட்சி உரிமையைப் பெற்றார். அவரைப்பற்றிய தகவல்கள் ஏதுமில்லை. மஹி தேவாவின் வாரிசும் மகனுமான வசந்த தேவா என அழைக்கப்பட்ட வசந்த சேனா கி. பி. 513-ல் நிலக்கொடை வழங்கினார். வசந்த சேனா குழப்பம் நிறைந்த சூழ்நிலையில் இறந்திருக்க வேண்டும்.

வம்சாவளி ஒன்றின்படி வசந்த சேனாவின் வாரிசு அபிராக்களால் தோற்கடிக்கப்பட்டார் எனத் தெரிகிறது. அதன்பின் மூன்று அபிராக்கள் ஆட்சி செலுத்தினர். லிச்சவி அரசர் சிவ தேவா அவர்களைத் துரத்திவிட்டுத் தன் தந்தையின் அரசைக் கைக்கொண்டார்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்க காலப் பட்டயங்களிலிருந்து சமீப காலம்வரை நேபாளத்தில் ஒருவகையான இரட்டை ஆட்சி நிலவிவந்தது எனத் தெரிகிறது. லிச்சவி அரசர் சிவ தேவா பெயரளவிலேயே அரசராக விளங்கினார். அரசியல் அதிகாரம் முழுவதும் அம்சு வர்மன் என்ற மஹா சாமந்தனின் கைக்கு மாறியது. ஆறாம் நூற்றாண்டில் அபிராக்களைத் துரத்துவதில் அம்ச வர்மன் முக்கியப் பங்கு வகித்திருக்கக்கூடும். அம்ச வர்மனின் ஆற்றலுக்கு எதிரிகள் எதிர்நிற்க மாட்டாத தன்மையே பட்டயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, உண்மையிலே அவர் ஆட்சியாளராக விளங்கினார். லிச்சவி அரசனின் மகளை மணந்ததன் மூலமாகத் தன் நிலையை வலுப்படுத்தி யிருக்கவேண்டும். கைலாசக்கூடத்தைத் தமக்கு அரசு இருப்பிடமாகக் கொண்டிருந்தார். மானகிரஹம் லிச்சவி அரசரின் இருப்பிடமாக விளங்கிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அம்ச வர்வன், சிவ தேவா உறவு குறித்துப் பல்வேறு கருத்துகளை லிவி அளிக்கிறார். யுவாங் சுவாங் அம்ச வர்மனை நேபாளத்தின் சிறப்புமிக்க கற்றறிந்த ஆட்சியாளராகக் குறிப்பிடுகிறார்.

அம்ச வர்மனின் ஆட்சிக்குமுன் நேபாளத்தை விக்கிரமாதித்தியா வெற்றிகொண்டு தம் ஊழியை அறிமுகப்படுத்தினார் என வம்சாவளிகள் குறிப்பிடுகின்றன. அம்ச வர்மன் கி. பி. 638 முதல் கி. பி. 647 வரை அல்லது 651 வரையில் ஆட்சி செலுத்தியிருக்க வேண்டும். ஹர்ஷ வர்த்தனர் நேபாளத்தை வென்றதாகக் கூறப்படுகிறது. எனினும், இதனை உறுதிப்படுதும் உறுதியான சான்று ஏதுமில்லை. யுவாங் சுவாங் குறிப்புகளிலிருந்து கி. பி. 642-3-ல் அம்ச வர்மன் இறந்திருக்க வேண்டும் எனத்

தெரிகிறது. கி.பி. 643-ல் சீனத் தூதுக்குழு ஒன்று நேபாளத்திற்கு வருகைபுரிந்தபோது நரேந்திர தேவா என்ற அரசர் ஆட்சி செலுத்துவதைக் கண்டறிந்தனர். அம்ச வர்மனுக்கும் நரேந்திர தேவாவிற்கும் இடையில் ஓர் அரசரேனும் ஆட்சி செலுத்தியிருக்கவேண்டும்.

அம்ச வர்மனின் பத்திரங்களில் காணப்படும் தேதி குறித்து விளக்கமளித்த லிவி திபெத்திய அடிப்படையிலான சகாப்தம் ஒன்று கி. பி. 595-ல் தொடங்கியிருக்கலாம் என்று குறிப்பிட்டார். இக் காலத்தில் நேபாளம் திபெத்தின் கட்டுப்பாட்டினுள் வந்திருக்கக்கூடும் என்பதை விளக்கமாக லிவி எடுத்துக்காட்டினர். ஆனல், டாக்டர் பஸக் நேபாளம் திபெதத்திற்குக் கட்டுப்பட்டிருந்தது என்பதை ஏற்கவில்லை.

கி. பி. 580 முதல் கி. பி. 600-க்குள் பிரிந்திருந்த நேபாள வமிசத்தினரை க்னும்-ரி ஸ்ரோன் சான் (Gnam-ri-sron-btsan) ஒன்றுபடுத்தினர். அப் பகுதியை ஒன்றுபடுத்தி இந்தியாவரை விரிவுபடுத்தினர்.

ஸ்ரான் - ஸான்-கன்-போ (Sron - btsan - sgan - po) என்ற அவருடைய மகன் இந்திய நாகரீகத்தைத் திபெத்தினுள் அறிமுகப்படுத்தினர். அவரே அஸ்ஸாம், நேபாளம், இந்தியா முதலியவற்றைக் கைப்பற்றியராவார். அவர் அம்ச வர்மனின் மகளை விரும்பிக் கேட்டு மணம்புரிந்துகொண்டார். 641-ல் திபெத்திய அரசன் சீனவின்மீது படையெடுத்துச் செக்குவான் (Szechyan) வரையில் சென்றார். சீன அரசனின் மகளை மணமுடித்துத் தரும்படி வேண்ட வேறு வழி இன்றிச் சீன அரசரும் மணமுடித்துத் தரவேண்டியதாயிற்று.

இவ்வாறாகத் திபெத் நாடானது சீன, இந்தியாவின் பண்பாட்டு வலையில் சிக்கியது. ஆயினும், அம்ச வர்மன் திபெத்திய அரசனின் கட்டுப்பாட்டினுள்ளேயே இருந்தார். இதனல், ஹர்ஷ வர்த்தனரின் ஆதிக்கம் அம்ச வர்மனின்மேல் காணப்படவில்லை என்பதையும், ஹர்ஷரின் ஊழி (Harsha Era) நேபாளத்தில் பயன்பட வில்லை என்பதையும் அறியலாம் என ஆர். ஸி. மஜூம்தார் குறிப்பிடுகிறார்.

காமரூபம்

கி. பி. 350 முதல் 650 வரை அஸ்ஸாமில் பிரம்மபுத்திரா சமவெளியில் காமரூப அரசு தனி ஒரு வமிசத்தினரால் ஆளப்

பட்டுவந்தது. விஷ்ணுவின் மகன் எனப் புராணங்களும், காப்பியங்களும் குறிப்பிடும் நாகாவின் வழிவந்தோர் என இம் மரபினர் கூறிக்கொண்டனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காணப்பட்ட மரபு நாகாவும் அவர் மகன் பாக தத்தாவும், அந்தக் குலத்தின் மற்ற அரசர்களும் புஷ்ய வர்மன் ஆட்சிக்கு வருவதற்கு முன் 3000 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர் என்று குறிப்பிடப்படுகிறது.

நாகாவின் வழிவந்தோர் என்பது அவர்கள் ஆரியரல்லாத குலத்தவர் என்பதனைக் காட்டுகிறது. அவர்கள் தம்மைப் பிராமணிய சமயத்திற்கு மாற்றிக்கொண்டனர். 'இல்ஜிப்' குன்றுப் பகுதியை ஆட்சி செலுத்திய ஹாஜி அரசர்கள் பாக தத்தா என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். பாக தத்தா புராண நாகாவின் மகனாக ஒருவேளை இருக்கக்கூடும். ஆனால், ஆட்சி செலுத்தும் காமரூப வமிசத்திற்கும், ஷாஜி அரசர்களுக்கும் இடையே ஏதேனும் தொடர்பு உண்டா என்று நாம் அறிய முடியவில்லை.

கல்வெட்டுகளும், இலக்கிய ஆதாரங்களும் புஷ்ய வர்மன் அவருடைய பன்னிரு பின்தோன்றல்கள் குறித்த வமிசாவளி அட்டவணையை அளிக்கின்றன.

1. புஷ்ய வர்மன்
2. சமுத்திர வர்மன் = தத்த தேவி (தத்தவதீ)
3. பல வர்மன் = இரத்னவதி
4. கல்யாண வர்மன் = காந்தர்வவதீ
5. கணபதி வர்மன் = யக்ஞாவதீ
6. மகேந்திர வர்மன் = சுவ்ரதா
7. நாராயண வர்மன் = தேவவதி
8. யூதி வர்மன் (மகாபூதி வர்மன்) = விஞ்ஞானவதீ
9. சந்திரமுக வர்மன் = போகவதீ
10. ஸ்தீத வர்மன் (ஸ்திதி வர்மன்) = நாராயண தேவி (நாயண சேபா)
11. சுஸ்திக வர்மன் (சுஸ்திர வர்மன்) = ஸ்யாமா தேவி (துருவ லக்ஷ்மி)

12. சுப்ரதீந்தித வர்மன் 13. பாஸ்கர வர்மன்.

கி. பி. 4,5, நூற்றாண்டுகளில் காமரூபம் குப்தப் பேரரசின் திறை அரசாக விளங்கிற்று. முதல் ஆறு அரசர்களின் பெயரைத் தவிர வேறு ஏதும் நாம் அறிய இயலவில்லை. ஆனால், அரச முத்திரையிலிருந்து ஏழாவது அரசன் நாராயண வர்மன் அல்லது மகேந்திர வர்மன் இரண்டு அஸ்வமேத வேள்விகளை நிகழ்த்தியதாக அறிகிறோம். அஸ்வமேத வேள்விகளை நிகழ்த்தினர் என்ற குறிப்பு அவர்களுடைய வலிமை அதிகரித்துள்ளது என்று காட்டுகிறது. அவர் கி. பி. 6 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் குப்தர்களின் அரசிலிருந்து விடுபட்டிருக்கக் கூடும்.

அடுத்த அரசன் பூதி வர்மன் காலத்தில் காமரூபம் அதிக வல்லமையுடையதாயிற்று. பழைய தவாகா அரசு மட்டுமன்றிச் சும்மாப் பள்ளத்தாக்கும் இவ் வரசில் இணைக்கப்பட்டது. கபிளப் பள்ளத்தாக்கிலுள்ள பாறைக் கல்வெட்டிலிருந்து மகாராஜாதி ராஜா பூதி வர்மன் அஸ்வமேத வேள்வி நிகழ்த்தியதாக அறிகிறோம். அவர் கி. பி. ஆறும் நூற்றாண்டின் மையப் பகுதியில் வாழ்ந்திருக்கக்கூடும். பூதி வர்மனே இவ் வமிசத்தின் சிறப்புக்குக் காரணமானவர் எனவும் யூகிக்க இடமுள்ளது.

இந்த அட்டவணையில் இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாஸ்கர வர்மன் ஹர்ஷ வர்த்தனரின் காலத்தவர் ஆவார். அவருடைய ஆட்சி கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முதல் அரைப் பகுதிவரை நீடித்தது. பூதி வர்மன் என்ற எட்டாவது அரசர் கி. பி. ஆறும் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆட்சி செலுத்தினர். எனவே, கி பி. 350 அல்லது அதற்குச் சற்று முன்பு புஷ்ய வர்மன் அரியணை ஏறியிருக்கக்கூடும்.

காமரூபம் சமுத்திர குப்தரின்கீழ்த் திறை அரசாக விளங்கி வந்தது. நாளந்தாவில் கண்டெடுக்கப்பட்ட அரச முத்திரை ஒன்றிலிருந்து புஷ்ய வர்மன் பிராக்ஜ்யோதிஷாவின் தலைவர் என அழைக்கப்பட்டார் என்பதையும், முதல் மூன்று அரசர்களுக்கு மகாராஜாதி ராஜா என்ற பட்டம் இருந்தது என்பதையும் அறிகிறோம். அந்த அரசர்களெல்லாம் குப்தப் பேரரசர்களின் காலத்தவர்கள். ஆதலால், அவர்களுடைய மகாராஜாதி ராஜா என்ற பட்டத்திற்குத் தனி மதிப்பு ஏதும் இருந்ததாகக் கருத வேண்டியதில்லை. குப்தர்களின் நாணயங்கள் அப் பகுதிகளில் ஐந்து நூற்றாண்டுகள் வழக்கில் இருந்தமையால் குப்தர்கள் செல்வாக்குப் பெற்றிருந்ததை நன்கு அறியலாம்.

குப்தப் பேரரசின் அழிவின் விளைவால் சுயேச்சையான வல்லமை மிக்க காமரூப அரசு எழுந்தது. பூதி வர்மனின் மகனைக் குறித்து ஒன்றும் அறிய இயலவில்லை. ஆனால், அவருடைய பேரன் சுஸ்தித வர்மன் இரண்டு அஸ்வமேத வேள்விகளை நிகழ்த்தினர் என அறிகிறோம். ஹர்ஷ சரிதத்தில் அடுத்த அரசன் சுஸ்தித வர்மன் மிகவும் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளார். பூதி வர்மனைக்கூட "மகாராஜா" என்றே குறிப்பிடும் பாணர் சுஸ்தித வர்மனை 'மகாராஜாதி ராஜா' என அழைக்கிறார். மகாசேன குப்தாவுடன் அவர் போரிட்டபொழுது அவரால் தோற்கடிக்கப்பட்டார் என்பதைத் தவிர சுஸ்தித வர்மனைக் குறித்து ஒன்றும் அறிய இயலவில்லை. இப் போருக்கான காரணம் என்ன என்று தெரியவில்லை. பேரரசு குப்தர்களின் ஆட்சிப் பகுதியைக் கைப்பற்றுவதில் மகாசேன குப்தாவிற்கும், சுஸ்தித வர்மனுக்கும் இடையே யானைப் போட்டியே காரணம் எனலாம்.

மகாசேன குப்தா பிரம்மபுத்திராவரை முன்னேறி இப் போரில் வெற்றி பெற்றார். இதனுடைய விளைவு நிலையானதாக அமைந்தது. அஸ்தி வர்மனைத் தொடர்ந்து அவர் மகன் சுப்ரதிஸ்தித வர்மன் ஆட்சிக்கு வந்தார். சுப்ரதிஸ்தித வர்மனும், அவருடைய இளவல் பாஸ்கர வர்மனும் கௌடாவின் படைகளைத் தம் தந்தையின் மறைவிற்குப் பின் இளமைக் காலத்திலேயே தோல்வி அடையச் செய்தனர். அவ்வாறு தோல்வியடைந்த கௌட அரசர் மகாசேன குப்தாவே இவ்வாறுகச் சுபரதிஸ்தித வர்மன் தம் வமிசத்தின் இழந்த புகழை மீட்டார். இதனைத் தூபிச் செப்பேடுகள் வாயிலாக அறிகிறோம்.

சுப்ரதிஸ்தித வர்மனுக்குப் பின் அவருடைய இளவல் பாஸ்கர வர்மன் அரியணையேறினர். காமரூபத்தை ஆட்சி செலுத்திய அரசர்களுள் நன்கு அறியப்பட்ட அரசர் இவர். இவர் ஹர்ஷ வர்த்தனருடன் இராஜ தந்திர உறவினைக் கொண்டார். அவ் வுறவினைக் குறித்துப் பின்னர்க் காண்போம். அவ்வாறு ஹர்ஷரும், பாஸ்கர வர்மனும் உறவு கொண்டமைக்கு அவர்கள் இருவரின் பொது எதிரியான சசாங்கனே காரணம் எனலாம். ஆனால், சசாங்கன்தான் அப்போது எதிரி என்றும் உறுதியாகக் கூற இயலாது. இவ் வுடன்படிக்கையின் விளைவு என்ன என்பது தெரியவில்லை. பாஸ்கர வர்மன் ஹர்ஷ வர்த்தனருக்குப் படையுதவி ஏதும் அளித்தாரா என்பதும் தெரியவில்லை. ஆனால், இவ் வுடன்படிக்கை சசாங்கனின் மறைவிற்குப்

பின்னர்ப் பாஸ்கர வர்மனுக்குப் பின்னால் பெரிதும் உதவியாக அமைந்தது எனத் தெரிகிறது. இதனை யுவாங் சுவாங்கின் குறிப்பிலிருந்து அறிகிறோம்.

நாளந்தாவில் யுவாங் சுவாங் தங்கியிருந்தபோது பாஸ்கர வர்மன் நாளந்தாவின் சமயத் தலைவர் சீலபத்திராவிடம் தூதுவர் ஒருவரை அனுப்பிச், சீன தேசத்துப் பெருந்துறவி ஒருவரை அனுப்பும்படி வேண்டினார். ஆனால், சீலபத்திரர் அதனை ஏற்கவில்லை. இரண்டாவது முறை வேண்டியும் அவர் ஏற்காததால் கோபமுற்றுச், சீலபத்திரா சீனத்துறவியை அனுப்பவில்லை யென்றால் படையைத் திரட்டி யானைகளால் நாளந்தாவைத் தூளாக்கிவிடுவதாகச் சொல்லியனுப்பினார். இந்தப் பயமுறுத்தல் தக்க பலன் அளித்தது. யுவாங் சுவாங் காமரூபத்திற்கு வருகைபுரிந்து அங்கு ஒருமாதம் தங்கினார்.

ஆனால், ஹார்ஷ வர்த்தனர் சீனத் துறவியை அனுப்பி வைக்கும்படி பாஸ்கர வர்மனுக்குத் தூது அனுப்பினார். பாஸ்கர வர்மன் பதில் அனுப்புகையில், 'அவர் என்னுடைய தலையை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாமே தவிர ச் சீனத் துறவியை எடுத்துக்கொள்ள முடியாது' என்று பதிலளித்தார். மிகவும் கோபம் அடைந்த ஹார்ஷ வர்த்தனர், 'உடனடியாகத் தலையை என்னுடைய தூதுவர் மூலமாக அனுப்பிவை' என்று செய்தி அனுப்பினார். பாஸ்கர வர்மன் துணுக்குற்றுத் தன்னுடைய 20,000 யானைகளையும், 30,000 கப்பல்களையும் ஆயத்தமாக்கினார். பின்னர் யுவாங் சுவாங்குடன் ஹார்ஷர் தங்கியிருந்த கஜங்காலாவிற்கு வந்தார். இந்தப் பணிவான போக்கு ஹார்ஷரின் கோபத்தைத் தணித்தது. இருவரும் சமரசமாயினர். பாஸ்கர வர்மன் ஹார்ஷருடன் கன்னோசிக்கு வந்து அங்கு நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டார்; பிரயாகையில் நடைபெற்ற பேரவையிலும் கலந்துகொண்டார்.

இத் தகவல்களை யுவாங் சிவாங்கின் மூலம் அறிகிறோம். இவ்விருவருக்குமிடையேயான உறவு சமமான இருவருக்கிடையேயான நட்புறவு அன்று. ஆனால், அதே சமயத்தில் ஹார்ஷருடைய திறை அரசராகவும், அடிபணிந்தவராகவும் பாஸ்கர வர்மன் விளங்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. பாஸ்கர வர்மன் அனாவசியமான பகையைத் தவிர்க்க விரும்பினார் என்றே கருத வேண்டியுள்ளது. அவர் அரசியல் சுயேச்சைத் தன்மையைச் சிறிதளவேனும் இழந்துவிட்டார் என்றோ, ஹார்ஷர் அவர்மீது மேலாதிக்கம் செலுத்த விரும்பினார் என்றோ கூறுதற்கில்லை.

யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து வங்காளத்தின்மீது பாஸ்கர வர்மன் கொண்டிருந்த அரசியல் பிடிப்பினைத் தெரிந்து கொள்கிறோம். ஆனால், நாளந்தாவைப் பொடியாக்கிவிடுவேன் என்ற குறிப்பும், கங்கைவழியே மேற்கொண்ட பயணமும் விளக்க முடியாதனவாகும். அவர் சசாங்கனின் பழைய தலைநகரிலிருந்து கொண்டு நிலக்கொடைகளை வழங்கினர் எனத் தெரிகிறது. பாஸ்கர வர்மன் ஹர்ஷ வர்த்தனரின் மறைவிற்குப் பின்னர் தான் வங்காளத்தைக் கைக்கொண்டார் என்று வாதிக்கக் கூடும். ஆனால், மற்றைய இரு நிகழ்ச்சிகள் ஹர்ஷரின் காலத்தில் நடை பெற்றவையாதலால், பாஸ்கர வர்மன் ஹர்ஷரின் மறைவிற்கு முன்னரே கைப்பற்றியிருக்க வேண்டும். ஹர்ஷரும் பாஸ்கர வர்மனும் சசாங்கனின் பேரரசைப் பங்கிட்டுக்கொண்டிருக்க வேண்டும். ஹர்ஷர் மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா கொங்கோட முதலியவற்றையும், பாஸ்கர வர்மன் வங்காளத்தின் மற்றைய பகுதிகளையும் வைத்துக்கொண்டிருக்கக் கூடும் என்று கருதின லும் உறுதியாக ஏதும் கூறுதற்கில்லை.

புஷ்ய வர்மனின் வமிசம் முந்நூறு ஆண்டுகளுக்குப்பின் பாஸ்கர வர்மனுடன் முடிவிற்கு வந்தது. காமரூபத்தை சாலஸ் தம்பா என்ற மிலேச்ச ஆட்சியாளர் கைப்பற்றினர். இந்த வமிசத்தின் வீழ்ச்சிக்குத் திபேத்திய படையெடுப்பே காரணம் எனலாம். மொத்தத்தில் பாஸ்கர வர்மனுக்குப் பின்னர்க் காமரூபத்தின் வரலாற்றில் இருண்ட காலம் ஒன்றையே காண்கிறோம்.

### ஒரிஸ்ஸா (கலிங்கம்)

குப்தர் காலத்தில் ஒரிஸ்ஸாவை ஆட்சி செலுத்தியவர்கள் யார் என்று தெரியவில்லை ஒரிஸ்ஸாவில் கள்ளிக்கோடே என்னு மிடத்திற்கு அருகில் சுமந்தலா என்னுமிடத்தில் கண்டெடுக்கப் பட்ட பட்டயம் ஒன்றிலிருந்து கி. பி. 569-70-ல் பிருத்வி விக்ரகா என்பவர் ஆட்சி செலுத்தினர் எனவும், அவருக்குக்கீழ் மகாராஜா தர்மராஜா என்பவர் பத்மகோலி என்னுமிடத்தில் தம்முடைய தலைமையிடத்தைக் கொண்டிருந்தார் எனவும் அறிகிறோம். குப்தர்களின் வீழ்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருந்த வேளையிலும் ஒரிஸ்ஸா குப்தருக்குக் கட்டுப்பட்டே இருந்துவந்தது.

பிருத்வீ விக்கரகாவைப் பற்றியோ அவரது குடும்பத்தினர் களைப் பற்றியோ நமக்கு ஏதும் தெரியவில்லை. வடக்கு, தெற்கு மாநிலங்களை ஆறும் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மான

சைலோத்பவ குடும்பத்தவர் ஆட்சி செலுத்தினர். ஹஸாரிபா மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட பட்டயம் ஒன்று மான குலத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகிறது.

உதய மானு, ஸ்ரீ கௌத மானு, அஜித மானு ஆகிய மூன்று சகோதரர்கள் அயோத்தியாவிருந்து தாம்ரலிப்திக்கு வாணிபத்தின் பொருட்டுச் சென்றனர். பெரும்பொருள் ஈட்டிக்கொண்டு திரும்பி வரும் வழியில் ஒரு கிராமத்தில் தங்கினர். மகத அரசன் ஆதி சிம்மனின் கட்டுப்பாட்டினுள் அக் கிராமம் இருந்தது. அவ்வரசனின் அன்பைப் பெற்றதால் சகோதரர்களில் உதய மானுவை அக் கிராமத்திற்கும், மற்ற இரு சகோதரர்களையும் அருகிலிருந்த இரு கிராமங்களுக்கும் ஆட்சியாளராக நியமித்தார்.

இவ்வாறாகக் கயாவிற்கும், மிட்னப்பூர் மாவட்டத்திற்கும் இடைப்பட்ட இப் பகுதி சிறிய அரசாக மாறியது. அவ்வரசு எப்போது தோன்றியது எனத் தெரியவில்லை. சம்புயாஸாஸ் என்பவர் கி. பி. 580 முதல் 603 வரை பாலசோரிலிருந்து, பூரி மாவட்டம் வரை கொண்ட ஒரிஸ்ஸா முழுவதும் ஆட்சி செலுத்தினர். ஆனால், அவர் மான வமிசத்தைத் சேர்ந்தவரா எனத் தெரியவில்லை.

மான வமிசத்தவர் ஒரிஸ்ஸாவின் பெரும்பகுதியை ஆட்சி செலுத்திய வேளையில் கஞ்சம் மாவட்டத்தில் மகேந்திர கிரி மலையிலிருந்து, சில்கா ஏரி வரை இருந்த கொங்கோடப் பகுதியைச் சைலோத்பவாக்கள் ஆட்சி செலுத்தினர். பல்வேறு பதிவுகளிலிருந்து சைலோத்பவாக்களின் வரலாற்றை அறிகிறோம்.

இராணபீடா அல்லது அரணபீடா என்பவரே இவ்வமிசத்தை உருவாக்கியவர். குப்தப் பேரரசின் அழிவைப் பயன்படுத்தி இவர் இந்த அரசை உருவாக்கினர். அவருக்குப்பின் சைன்ய பீடா I மாதவராஜா, அபாஸோபீடா, சைன்யபீடா II மாதவ ராஜா II முதலானோர் ஆட்சிக்கு வந்தனர். இரண்டாம் மாதவ ராஜா கி. பி. 619-ல் அரியணையேறினர். மான வமிசத்துடன் இவ் வரசர்களின் உறவு எப்படியிருந்தது என்பது தெரியவில்லை.

இவ் விரண்டு அரசுகளும் கௌடா அரசன் சசாங்கனிடம் வந்தன. சசாங்கனின் மறைவிற்குப் பின் சசாங்கனின் பேரரசு குலைந்தது. ஒரிஸ்ஸா சுயேச்சை அரசாயிற்று. இதனால் சைலோத்பவாக்கள் சுயேச்சை அரசர்கள் ஆனதோடு அருகிலிருந்த பகுதிகளிலும் தம் ஆதிக்கத்தைப் பரப்பினர்.

கி. பி. 619ஆம் ஆண்டின் பட்டயம் சசாங்கனை மேலாண்மை அரசர் எனக் காட்டுகிறது. சசாங்கனின் மறைவிற்குப் பின் ஹர்ஷ வர்த்தனர் கிழக்குப் பகுதியில் படை யெடுப்பு முயற்சியினைத் தொடங்கிக் கி. பி. 643-இல் இவ் விரண்டு அரசு களையும் வெற்றிகொண்டார்.

**வர்த்தனர்கள்**

புஷ்ப பூதி
|
மகாராஜா நர வர்த்தனர் = வஜ்ரிணி தேவி
|
மகாராஜா இராஜ்ய வர்த்தனர் = அப்ஸரா தேவி
|
மகாராஜா ஆதித்திய வர்த்தனர் = மகாசேன குப்த தேவி
|
பரம பக்தாரக மகாராஜாதிராஜ பிரபாகர வர்த்தனர்=யசோமதி

| | | |
|---|---|---|
| பரம பக்தாரக மகாராஜாதிராஜ இராஜ்ய வர்த்தனர் | பரமபக்தாரக மகாராஜாதிராஜ ஹர்ஷ வர்த்தனர் | இராஜ்ய ஸ்ரீ = மௌகாரியின் கிரக வர்மனை மணந்தவள் |

|
மகள்=வலபியின் இரண்டாவது துருவசேனரை மணந்தவள்.

———

# 3. ஹர்ஷரின் முன்னோர்கள்

பஞ்சாப் மாநிலத்தில் அம்பாலா மாவட்டத்திலுள்ள சிறிய நகர்ப்புறமான தானேஸ்வரம் பழமை மிக்கது. இதனை இஸ்தானேஸ்வரம் என்றும், இஸ்தானிஸ்வரம் என்றும், இஸ்தான்விஸ்வாரா என்றும் பலவகையாக அழைத்தனர். தானேஸ்வரத்தைக் கண்டறிவது இப்போது எளிதாகிவிட்டது. 'பாண்டுக்களுடன் கொண்ட தொடர்பினால் இது பழமையும் சிறப்பும் வாய்ந்த இந்தியாவின் பகுதிகளில் ஒன்று என்று சி - யூ - கி, (Si-yu-ki) குறிப்பிடுகிறது. அல்பருனி தானேஸ்வரம் மதுராவிற்கு 288 கி. மீ. வடமேற்கில் உள்ளது எனவும், சீனப் பயணி யுவாங் சுவாங் மதுராவிற்கு 160 கி. மீ. வடகிழக்கில் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவின் அரசியல், பண்பாடு, சமயம் ஆகிய வரலாற்றில் மனித இனத்தின் தொடக்க காலம் முதலே தொடர்பு கொண்டு அந் நகரம் விளங்கிற்று. நாட்டின் அரசியல் பண்பாட்டுச் சிறப்பு மிக்க நகரமாக இது திகழ்ந்தது என்பதனை மேலே காணப்பட்ட சி. யூ. கி. யின் (SI-yu-ki) குறிப்புக் காட்டுகிறது. தானேஸ்வரம் அல்லது இஸ்தானேஸ்வரம் முதலான பெயர்கள் 'ஸ்தனு அல்லது சிவன் அல்லது மகாதேவரின் இருப்பிடம் என்ற சொல்லினடியாகத் தோன்றியவை. டாக்டர் வின்சென்ட் ஸ்மித், ஸ்தனு என்று சிவனைக் குறித்த சொல்லும், 'கடவுள்' என்ற (ஈஸ்வரர் என்ற) சொல்லும் இணைந்து தானேஸ்வரம் என்ற பெயராகி வழங்குவதாகக் கருதுகிறார்.

மகாபாரதத்தில் 'ஸ்தானு தீர்த்தம்' என்ற பெயர் காணப்படுகிறது. 'ஸ்தானு வாசிரம மகாத்மியம்' என்னும் வடமொழி நூல் ஒன்றும் உள்ளது. சிவ லிங்கத்தின் பெயர் 'பாமன புராண இஸ்தான்விஸ்வரா' ஆகும். அந்த லிங்க வழிபாடு முதலில் ஏற்பட்டது என்ற அடிப்படையில் பாணர் தானேஸ்வரத்தை 'இஸ்தான்விஸ்வரா' என்று அழைக்கிறார். தானேஸ்வரத்தை ஜனபாதாவிசேஷா எனவும் பாணர் குறிப்பிடுகிறார். மோனியர் வில்லியம்ஸ் (Monier Williams) என்னும் வரலாற்றாசிரியர் ஒரு சமூகம், தேசம், மக்கள், பேரரசு, மக்கள் வாழும் நாடு

என 'ஜனபாதா'விற்குப் பொருள் தந்தபோதும் "ஜனபாதா விசேஷா" என்ற முழுத்தொடருக்குப் பொருள் ஏதும் குறிப்பிட வில்லை. எனவே 'விசேஷம்' என்பதற்குச் சிறப்பு எனப் பொருள் கொண்டு 'ஸ்ரீ காந்த ஜனபாதாவிசேஷா' என்றால், ஸ்ரீ காந்தாவின் சிறப்பான நாடு என்றுபொருள் காணலாம்.

தானேஸ்வரம் பண்பாடு, சமயம், தத்துவம் ஆகியவற்றில் சிறப்பு நிலை பெற்றிருந்தபோதிலும் ஒரு நகரம் என்ற அளவில் பாணரின் ஹர்ஷ சரிதத்திற்கு முன்னர் அதைப் பற்றிய குறிப்பு இல்லை. பாணரின் ஹர்ஷ சரிதம் தானேஸ்வரம் சரஸ்வதி ஆற்றங்கரையில் அமைந்திருந்தது என்று குறிப்பிடுகின்றது. பாணர் தம்முடைய ஹர்ஷ சரிதத்தில் அப் பகுதியின் சிறப்பை நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். அதனைப் பின்னர்க் காண்போம்.

தானேஸ்வரத்தைப் பற்றிய மிகப் பழமையான குறிப்பு தாலமியின் நூலில் காணப்படுகிறது. தூய மார்ட்டின் (St. Martin) என்பவர் ஆஸ்தோ பலசரா (Osto Balasara) என்பதனை இஸ்தானீஸ்வரம் என்று கருதுகிறார். யுவாங் சுவாங் தானேஸ்வரத்தைச் சா - த - நி - ஸ்சு - ப - லோ (Sa-ta-ni-ssu-fa - lo) என்று குறிப்பிடுகிறார். அவர் அப் பகுதியையும் தலைநகரையும் சேர்த்தே அவ்வாறு குறிப்பிட்டார். அவருடைய கருத்துப்படி தானேஸ்வர அரசு ஏழாயிரம் லி[1] சுற்றளவு உடையது. தலைநகர் 20 லி சுற்றளவு கொண்டது. தர்ம க்ஷேத்திரம் என்ற 200 லி சுற்றளவுள்ள புனிதமான மாவட்டத்தின் நடுவில் தலைநகர் அமைந்திருந்தது. தர்ம க்ஷேத்திரம் மகாபாரதப்போர் நடைபெற்ற இடமாகும். யுவாங் சுவாங்கின் கருத்துகளைப் பாணர் உறுதி செய்கிறார்.

புஷ்ய பூதிகளின் கீழ்ச் சிறப்பு நிலை அடையுமுன்னர் தானேஸ்வரமும், அதைச் சூழ்ந்துள்ள சரஸ்வதி, திருஸ்தவதி நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியும் மிகவும் தூய்மையான (புனிதமான) நாடு என்று கருதப்பட்ட குருக்ஷேத்திரம் என்று அறியப்பட்டது. மகாபாரதத்தில் குருக்ஷேத்திரத்தில் வாழ்பவர்கள் சொர்க்கத்தில் வாழ்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குருக்ஷேத்திரத்தின் எல்லைகளாகச் சரஸ்வதி, திருஸ்தவதி ஆகிய நதிகள் தொன்றுதொட்டுக் குறிப்பிடப்படுகின்றன. பௌத்த சமண நூல்கள் குருக்ஷேத்திரத்தைச் சோலாஸா மகாஜனபதாஸ்

[1] 5 லி தூரம் ஒரு மைலுக்கு, அல்லது கிலோமீட்டரில் சொல்வதாயின் 1·6 கி.மீ.க்குச் சமம்.

(Solasa Mahajanapathas) என்று 16 நாடுகளில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றன. மக்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும இங்கு வந்தனர். பாணர் ஸ்ரீ காந்த ஜனபாதாவைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஸ்ரீ காந்த என்ற நாக அரசனின் பெயர் அப்பகுதிக்கு வழங்கப்பட்டது என்று குறிப்பிடுகிறார்.

பாணர் ஸ்ரீ காந்த ஜனபாதாவின் சிறப்பினை விளக்கமாக எடுத்துக் கூறுகின்றார். அந் நாடு நல்ல மக்களைக் கொண்டிருந்தது. சட்டமும், ஒழுங்கும் நல்ல நிலையில் காணப்பட்டன. கிருத யுக நிலை நீடித்தது. அப் பகுதியில் செழிப்பும் இயற்கை வளமும் காணப்பட்டன. அங்குப் பாலும், பழங்களும் ஏராளமாகக் காணப்பட்டன. நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து காணப்பட்டன. அதைப் போலவே கோதுமை, மொச்சை, மூலிகை வகைகள் முதலானவையும் அதிகமாக வளர்ந்தன. தென்னை, வாழை, திராட்சை, குங்குமப்பூ, எலுமிச்சை, மாதுளை, முதலியவைகளும் காணப்பட்டன.

அப் பகுதியைப் போலவே தலைநகரும் பாணரால் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. பத்மாசனத்தில் வீற்றிருந்த பிரம்ம ரிஷிகள் வாழ்ந்திருந்த நகரம் இது. வீடுகள் வரிசையாகக் கட்டப்பட்டிருந்தன. சுவர்களில் சாந்து பூசப்பட்டிருந்தது. அந் நகரம் குபேரனின் நகரம் போலச் செல்வச் சிறப்புடன் திகழ்ந்தது. நிலவளம் பொருந்தியதாகப் பயிர்கள் ஏராளமாகக்காணப்பட்டன. பாணரின் குறிப்புகளுக்கும், யுவாங் சுவாங்கின் விளக்கத்திற்கும் இடையேபல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. மக்கள் ஆடம்பரத்தில் ஈடுபாடு கொண்டதையும், சகிப்புத் தன்மை இன்றிக் குறுகிய மனப்பான்மை கொண்டு விளங்கியதையும் பாணர் குறிப்பிடுகிறார். ஆனால், அவருடைய குறிப்புகளில் இப் பகுதியின் பொளாதாரச் சிறப்புக் குறித்து ஏதும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

பாணர் நாட்டின் பல்வேறு பண்பாடுகளையும் குறிப்பிடுகிறார். அந் நகரம் முனிவர்களின் தபோவனமாகவும், காமாந்தகர்களின் களிப்பிடமாகவும், நடிகர்களின் சங்கீத சாலையாகவும், எதிரிகளின் மரணக் கூடமாகவும், செல்வம் தேடுவோர்க்குச் சிந்தாமணிப் பூமியாகவும் (தொட்டதெல்லாம் அளிப்பது), போர் மறவர்களுக்கு வீர க்ஷேத்திரமாகவும், கற்றறிந்தோர்க்குக் கல்விச் சாலையாகவும், பாடுவோர்க்குக் காந்தர்வ நகரமாகவும் அறிவியலாளர்களுக்கு விஸ்வகர்மாவின் கோவிலாகவும், வணிகர்

களுக்கு இலாப பூமியாகவும், அடைக்கலம் புகுவோர்க்கு அடைக்கலம் அளிப்பதாகவும், நல்ல மனிதர்களுக்கு நல்லோர் அவையாகவும், வழிப்போக்கருக்குத் தங்குமிடமாகவும், புதையல் வேண்டுவோர்க்குச் சுரங்கமாகவும், அமைதி வேண்டுவோர்க்குப் பௌத்த விகாரமாகவும், காதலர்களுக்கு அப்சரஸ் நகரமாகவும் விளங்கிற்று. பல உளிகளை கொண்டு எவ்வாறு கற்களை உடைத்துச் சீர் செய்து கோவில்கள் அமைக்கப்படுகின்றனவோ அதுபோலத் தீமைகளை உடைத்தெறிந்து குல தர்மங்கள் குழப்பமற்ற முறையில் பின்பற்றப்பட்டன என்றும் பாணர் கூறுகிறார்.

யுவாங் சுவாங் தானேஸ்வரத்தின் சமய நிலையைப் பற்றிக் குறிப்பிடுகையில் சிறிது மகிழ்ச்சி குன்றியவராகவே காணப் படுகிறார். பெரும்பான்மை மக்கள் பௌத்த சமயத்தைத் தழுவாதவர்கள் என்றும், தானேஸ்வரத்தில் இருந்த மூன்று பௌத்த மடங்களில் 700 ஹீனயான பௌத்தர்களே காணப்பட்டனர் என்றும் அவர் கூறுகிறார். நூற்றுக்கும் அதிகமாக இந்துக் கோயில்கள் காணப்பட்டன என்றும் குறிப்பிடுகிறார்.

## அரசர் புஷ்ப பூதி

அங் நாட்டில் புஷ்ப பூதி என்ற பெயர் கொண்ட அரசர் தோன்றினார். அவர் இந்திரனின் மறுபிறப்பு. எல்லா வருணத் தவரையும் ஆதரிக்கும் வில் போன்றவர் அவர். தங்கமான இயல்பினாலே மேருவைப் போன்றவர்; தகுந்த எல்லைகளைக் கொண்ட கடல் போன்றவர்; கலைகளை ஏற்பதில் சந்திரனுக்கு ஒப்பானவர்; எல்லா மனிதர்களையும் ஆதரிப்பதில் நிலத்துக்கு ஒப்பானவர்; உண்மையான பேச்சில் வேதத்திற்கு ஒப்பானவர்; அரசர்களின் தீய எண்ணங்களை அடித்துச்செல்வதில் காற்றுக்கு ஒப்பானவர்; உரைப்பதில் குருவுக்கும், அறிவில் விசாலத்திற்கும் (போதிச் சத்துவர் ஒருவரின் பெயர்), தவத்தில் ஜனகருக்கும், தேஜசில் சுயாத்ராவுக்கும், நிலைபெறுவதில் புத்தருக்கும், இரகசியம் காப்பதில் சுமந்திரருக்கும், ஆற்றலில் அர்ச்சுனனுக்கும், வில்லில் பீஷ்மருக்கும்,[1] போர்க்களத்தில் சத்துருக்கனருக்கும் ஒப்பானவர். இவ்வாறும் இன்னும் பலவகையாகவும் புஷ்ப பூதி பெருமையாகக் குறிப்பிடப்படு கிறார்.

[1] அப் பெயர்கள் அனைத்தும் புராணத் தொடர்புடையவை.

**அரசியல் வெற்றிகள் :**

பாணரின் குறிப்புகளிலிருந்து புஷ்ப பூதியின் அரசியல் வெற்றிகளைக் குறித்து எவ்விதமான முடிந்த முடிவிற்கும் வர இயலாது. பாணரின் விளக்கத்தினைச் சற்று ஆராய்ந்தே கொள்ள வேண்டும். ஏன் எனில் அவருடைய குறிப்புகள் மிகைப்படுத்தப் பட்டனவாக உள்ளன. எனினும், அவருடைய சில விளக்கங் கள் பொருள் படைத்தனவாக உள்ளன. லட்சுமியைக் கவர்வதில் மந்தாராவைப் போன்றவர் என்ற குறிப்பு எவ்வளவு சிறிய பகுதி யாக இருந்தாலும் அதனை ஆண்டார் என்பதைக் காட்டுகிறது. 'எல்லா அரசர்களின் தீமையையும் காற்றுப்போல் அடித்துச் சென்றூர்' என்பது தமக்கெனத் தனி வமிசம் ஒன்றை ஏற்படுத் துவதில் ஏற்பட்ட இடையூறுகளை அவர் வென்றதைக் காட்டுகிறது. போர்க்களத்தில் சத்துருக்கனர் என்பது அவரது போர்வன்மையை மெய்ப்பிக்கும்.

சூர சேனர்களை அடக்குவதில் அவர் சூரர் என்று ஹர்ஷ சரிதத்தைப் பதிப்பித்த ஆசிரியர்கள் பொருள் குறிப்பீடாது அக் கூற்றில் ஐயம் கொண்டு சூரர்களின் படைகளை வென்றவர் என்று குறிப்பிட்டனர். ஆனால், அடிக் குறிப்பில் சூரசேனர்களை வென்றவர்களென்றும் கருதலாம் என்று குறிப்பிட்டனர். சூரசேன என்பது மதுராவைச் சுற்றிய பகுதி அல்லது மக்களைக் குறிக்கக்கூடியது என்பது பஞ்சராத்ராவின் கருத்து ஆகும். காவியங்களும், புரணங்களும் அவ்வாறே குறிப்பிடு கின்றன.

குரு, மத்சய பாஞ்சாலப் பகுதிகளின் சிறப்பு மிக்க போர் வீரர்களுடன் சூர சேன மக்களையும் ஒன்ருக வைத்து மனு கருதுகிரூர். கிரேக்கர்களும் சூர சேனர்களை அறிந்திருந்தனர். அவர்கள் அவர்களைச் 'சௌரசேன' என்றும் அவர்களின் தலைநகரம் மதுரா என்றும் குறிப்பிட்டனர். தம்முடைய 'அஷ்டாத்யாயில்', அந்தகர்களையும், விருந்தினர்களையும் பற்றிக் குறிப்பிடும் பாணினி சூரசேன பற்றிக் குறிப்பிடாமையால் பாணினி காலத்தில் சூரசேன தோன்றவில்லை யென்று முடிவு கட்ட வேண்டியுள்ளது. மதுராவைச் சுற்றியுள்ள பகுதிகள் சூரசேன என அறியப்பட்டன என்பதனை மகாபாரதம், போன்ற புராணங்களில்ள் காணப்படும் பல்வேறு குறிப்புகள் தெளிவுபடுத்துகின்றன. பாணர் சிறந்த கல்வியறிவு மிக்கவர் ஆதலால் அவர் பல்வேறு வடமொழி நூல்களின் புலமை கொண்டு இக் கருத்தைக் கூறியிருக்கலாம். ஆனல், நாடும் அதன்

நிலவியலும் மொத்தத்தில் அவர் அறிந்திடாதவை. எனவே, ஸ்ரீகாந்த ஜனபாதாவையும், ஸ்தானீஸ்வரத்தையும், மற்றைய பகுதிகளையும், நகரங்களையும் நன்கு அறிந்த பாணர் சூரசேனரை அறிந்திருக்க முடியாது என்பது நம்ப இயலாத ஒன்று. எனவே, சூரசேனரை வென்ற சூரர் என்று பாணர் குறிப்பிடும் குறிப்பினை அடிப்படையில்லாதது என்று ஒட்டு மொத்தமாக ஒதுக்க இயலாது.

பாணரின் குறிப்புகள் குப்தப் பேரரசின் தொடக்க காலத்தில் புஷ்ப பூதி ஆட்சி புரிந்தார் என்று காட்டுகின்றன. ஸ்ரீ காந்தா என்ற நாக அரசனின் காசுகள் நான்காம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளைச் சார்ந்தவை என்று கருதப்படுபவை மதுராவில் கண்டெடுக்கப்பட்டன. நாகர்கள் 'சூரசேன' என்று பாணரால் சிறப்பித்துக் கூறப்பட்ட புஷ்ப பூதியைவிடச் சிறப்பானதோர் ஆட்சி நடத்தினர். ஸ்ரீ காந்தாவைப் புஷ்ப பூதி மற்போரில் தோற்கடித்தாகப் பாணர் குறிப்பிடுகிறார். மதுராவின் நாக அரசர்களுக்கும், வர்த்தனர்களுக்கும் இடையே பகை நீடித்தது என்பதையும், வர்த்தனர்கள் மதுராவைக் கைப்பற்ற முயன்றனர் என்பதையும் இதன் வாயிலாக அறியலாம்.

**யுவாங் சுவாங்கின் குறிப்பு :**

யுவாங் சுவாங் தாம் முதலில் மதுராவிற்குச் சென்றதாகக் குறிப்பிடுகிறார். அவருடைய விளக்கத்திலிருந்து மதுரா தலைநகராகவும், நாடாகவும் விளங்கிற்று என அறிகிறோம். மதுரா 8000 கி. மீ. சுற்றளவும், அதன் தலைநகரம் 6 கி. மீ. சுற்றளவும் கொண்டது. மதுராவிலிருந்து வடகிழக்கில் 160 கி. மீ. பயணம் செய்து ஸ்தானேஸ்வரத்தை அடைந்ததாக அவர் குறிப்பிடுகிறார். வாட்டர்ஸ் என்னும் ஆசிரியர் மதுராவிற்கும், ஸ்தானேஸ்வரத்திற்கும் இடையே யுவாங் சுவாங் குறிப்பிடும் தூரமும், திசையும் சரியானதே என்று கருதுகிறார். சூரசேனாவின் தலைநகர் மதுரா, புஷ்ப பூதியின் தலைநகருக்கு 160 கி. மீ. தொலைவில் இருந்தது. ஓர் அரசை உருவாக்கும்போது சூர சேனர்களுடன் புஷ்ப பூதி மோதிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம்.

புஷ்ப பூதி அன்புடையவராகவும், தயாள குணம் கொண்டவராகவும் விளங்கினார்; அனைவராலும் மதிக்கப்பட்டார். புஷ்ப பூதி கொண்டிருந்த இராஜா, பூபாலா முதலான பட்டங்கள் அவர் சுயேச்சை அரசர் அல்லர் என்று காட்டுகின்றன.

கி. பி. 455-ல் முதலாம் குமார குப்தரின் மறைவிற்குப் பின் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு புஷ்ப பூதி ஓர் அரசை உருவாக்க முயற்சிகள் மேற்கொண்டிருக்கலாம். புஷ்ய மித்திரர்கள், ஹூணர்கள், மிலேச்சர்கள் முதலானவர்கள் குப்தப் பேரரசை ஆட்டம் காணச் செய்தனர் என்பதையும், ஸ்கந்த குப்தரின் காலத்தில் மீண்டும் அரசியல் உறுதிநிலை ஏற்பட்டது என்பதையும் முன்னரே கண்டோம். இதனால், புஷ்ப பூதியும் அவருக்குப் பின் வந்த 2,3 அரசர்களும் நரவர்த்தனரின் காலம்வரை தங்கள் நிலையை வலுப்படுத்திக்கொள்ளும் முயற்சியில் வெற்றி பெற முடியாமல் போயிற்று.

## புஷ்ப பூதியின் காலம்

ஹர்ஷர் கி. பி. 606 முதல் கி. பி. 647 வரை ஆட்சி செய்தார் என்ற பொதுவான கருத்தே இன்றும் நிலவுகிறது. ஹர்ஷரின் சகாப்தம் குறித்துத் தனி அத்தியாயத்தில் காண்போம். ஹர்ஷ சரிதத்திலிருந்து திருமணம் முடிந்து பல்லாண்டுகள் கழிந்த பின்னரே பிரபாகர வர்த்தனர் தந்தை நிலையை அடைந்தார் என்று அறிகிறோம். முதலில் பிரபாகர வர்த்தனரின் ஆட்சிக் காலத்தை முடிவு செய்ய முயல்வோம். ஹூணர்களுக்கு எதிராக இராஜ்ய வர்த்தனர் மேற்கொண்ட படையெடுப்பு, பிரபாகர வர்த்தனரின் சிறப்பு, இராஜ்ய வர்த்தனர் பதவிக்கு வருதலும் மறைவும் ஆகியவையெல்லாம் கி. பி. 605 – 6-க்கும் இடையில் நிகழ்வுற்றிருக்க வேண்டும் என்று ஆர். கே. முகர்ஜி கருதுகிறார். ஹர்ஷர் கி. பி. 590-ல் பிறந்திருக்க வேண்டும் என்றும் முடிவு செய்தார் அவர். சி. வி. வைத்தியா என்னும் ஆசிரியர் கி. பி. 590 ஜூன் மாதம் 4 ஆம் தேதி ஹர்ஷர் பிறந்தார் என்று கூறினார். இராஜ்ய வர்த்தனர் கி.பி. 586-ல் பிறந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட முகர்ஜி, யசோவதியைக் கி. பி. 585-க்கு முன்னர்ப் பிரபாகர வர்த்தனர் மணந்திருக்க முடியாது என்று கூறினார். பதவியேற்ற பின்னரே அவர் மணம் செய்தார். எனவே, அவர் பதவியேற்றது கி.பி. 583-ல். முகர்ஜியின் கணக்குப்படி பிரபாகர வர்த்தனர் கி.பி. 583 முதல் 606 வரை ஆட்சி செலுத்தினர். டாக்டர் சின்காவும் அதே அடிப்படையில் கணக்கிட்டார். டாக்டர் பைஜநாத் சர்மா பிரபாகர வர்த்தனர் கி. பி. 585-ல் யசோவதியை மணந்தார் என்பதையும், இராஜ்ய வர்த்தனர் கி. பி. 586-ல் பிறந்தார் என்பதையும் தவறாகக் கணிக்கப்பட்ட கூற்று என்று எழுதுகிறார்.

பிரபாகர வர்த்தனரின் திருமணத்திற்கும் இராஜ்ய வர்த்தனரின் பிறப்பிற்கும் இடையே சிறிது கால இடைவெளி

இருந்தது என்பதனைப் பாணரின் ஹர்ஷ சரிதம் கொண்டு அவர் எடுத்துக் காட்டுகிறார். 'இயற்கையிலேயே இந்த அரசர் சூரிய பக்தர். ஒவ்வொரு நாளும் சூரிய உதயத்தின்போது எழுந்து வெள்ளைப்பட்டுடுத்தி, வெள்ளைத் துணியைத் தலையில் சுற்றிக்கொண்டு கிழக்குப் பக்கம் தரையில் முழங்காலிட்டுக் கொண்டு, குங்குமத்தாலான வட்டத்தில் அமர்ந்துகொண்டு, விலை மதிப்பில்லா வைரப் பேழையில் தாமரை மலர்களை வைத்து வணங்கினர். காலையிலும், மதியத்திலும், மாலையிலும் சூரியனை மையமாகக் கொண்ட பாடலைப் பக்தியுடன் தியானித்தார் என்றார் பாணர். பின்னர், யசோவதி தான் கண்ட கனவு ஒன்றைக் குறிப்பிட்டபோது அரசர் நம் எண்ணங்கள் நிறைவேறின ; நம் குலக் கடவுள் உன்னை ஏற்றுக்கொண்டார். அவருடைய அருளால், உன்னை மகிழ்விப்பார். விரைவில் மூன்று உயர் மக்களை அளிப்பார்' என்று கூறினர் என்பதாகப் பாணர் குறிப்பிடுகிறார். பிரபாகர வர்த்தனர் சூரியனை வழிபட்டவர் என்பது பட்டயச் சான்றுகளால் உறுதியாகிறது. பட்டயங்களில் 'பரமாதித்திய பக்தர்' என்று அவர் குறிப்பிடப் பட்டுள்ளார்.

பிரபாகர வர்த்தனர் பிள்ளைகளைப் பல்லாண்டுகள் ஆவலோடு எதிர்பார்த்தார். பின்னர்த் தொடர்ந்த சூரிய வழிபாட்டின் பயனாய் அப் பேற்றை அடைந்தார். மணமானவுடனேயே இத் தகைய வேண்டுகோள் வழிபாட்டை அவர் தொடங்கியிருக்க முடியாது. திருமணமான சில ஆண்டுகளேனும் மகவு இல்லா மலிருந்து, பின்னர்ச் சூரியக் கடவுள் மகிழக்கூடியவை என்று கருதப்படும் வழிபாடுகளை அவர்கள் செய்திருக்கலாம்.

பிள்ளைகள் பிறக்கும் முன்னரே பிரபாகர வர்த்தனர் தம் நிலையை வலுப்படுத்திக்கொண்டார் எனப் பாணர் தெளிவு படுத்துகிறார். ஹூணர்கள் சிந்து, குஜராத், காந்தாரா, லாதா, மாளவம் முதலிய நாட்டு அரசர்களுடன் போரிட்டது பற்றிய குறிப்புகள் உள்ளன. இப் போர்களைக் குறித்துப் பின்னர்க் காண் போம். பிரபாகர வர்த்தனர் தந்தையாகும் முன்னரே இப் பகுதி களை வென்றார். ஆனல், அவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே இப் போர்கள் நடைபெற்றன என்று காட்ட நம்மிடம் தகவல் ஏதுமில்லை. ஆட்சிக்கு வந்ததும் வலுவான அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். படையெடுப்பு முயற்சிகள் முடிவடைந்ததும் அமைதியாக ஆளத் தலைப்பட்டார். அதன் பின் இந்து அரசர்களின் மரபு வழியிலான அடிப்படையில் தந்தையாக விரும்பி வழிபாட்டில் இறங்கினர்.

பிரபாகர வர்த்தனர் கி. பி. 585-ல் மணம் செய்து கொண்டார் என்று டாக்டர் முகர்ஜி குறிப்பிடும் கூற்றினை ஏற்றுக்கொண்டால், அவருக்கு வயது இருபத்தைந்தேனும் இருக்கக் கூடும். ஏனெனில், அக் காலத் திருமண வயது அது. அப்படியானால் கி. பி. 605-ல் ஹூணர்கள் மீண்டும் படையெடுத்தபோது அவர் 45 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க முடியாது. அப்படியானால் 45 வயதான தந்தை நீண்ட நெடுங்காலம் வழிபாடு நடத்திப் பெற்ற பிள்ளையைப் போருக்கு வயது வராத நிலையில் அனுப்பிவைப்பாரா என்ற கேள்வி எழுகிறது. நாட்டைக் காக்கும் பொறுப்பு இளவரசர்களிடத்து விடப்படும் என்று வாதிடப்படலாம். அப்படியேயானாலும்கூட அரசர்களுடனே தான் நாட்டைக் காக்கும் பொறுப்பில் ஈடுபட்டனர். அல்லது அரசர்கள் ஆயுதமேந்த இயலா அளவிற்கு முதுமையுற்ற போது அத்தகைய படையெடுப்புகளில் இளவரசர்களுக்குத் தனித்த பொறுப்பு விடப்படுவதுண்டு. ஸ்கந்த குப்தர் தம் தந்தையின் காலத்தில் எதிரிகளுடன் போரிட்டதையும், குமார குப்தர் மிகவும் வயதானவர் என்பதையும் நாம் அறிவோம். எனவே, பிரபாகர வர்த்தனர் ஹூணர்கள் மீண்டும் படையெடுப்பினைத் தொடர்ந்தபோது மிகவும் முதியவர்; வயது முதிர்ச்சியால் நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலா நிலையில் படையினை ஆளும் பொறுப்பைத் தம் மூத்த மகனிடம் அளித்தார் எனலாம்.

கடுமையான நோய் வாய்ப்பட்டுப் பிரபாகர வர்த்தனர் இறந்தார். இதுவும் அவர் இறக்கும்போது முதியவர் என்று காட்டுகிறது. அவர் இறக்கும்போது 60 அல்லது 70 வயதினராக இருக்கலாம். எனவே பிரபாகர வர்த்தனர் கி. பி. 540-க்கு முன் பிறந்திருக்கவேண்டும் என்றும், கி. பி. 565-ல் பதவிக்கு வந்தார் என்றும் கருதவேண்டியுள்ளது.

இம் முடிவிற்கு அடிப்படையாக மற்றொரு சான்று உள்ளது. முதலாம் இராஜ்ய வர்த்தனரின் மகனும், பிரபாகர வர்த்தனரின் தந்தையுமான ஆதித்திய வர்த்தனர் தாமோதர குப்தரின் மகள் மகாசேன குப்தாவை மணந்தார். பிரபாகர வர்த்தனரின் அன்னை மகாசேன குப்தா என்று எல்லா ஆதாரங்களும் காட்டுகின்றன. ஆனால், பெயரில் குப்தா என்று முடிவதைக்கொண்டே பிற்காலக் குப்தர்களுடன் மகாசேன குப்தா அம்மையார் தொடர்புபடுத்தப்படுகிறார். இதற்கு நேரடியான ஆதாரம் ஏதுமில்லை. சி. பி. வைத்யா அத்தகைய மணவுறவு இருந்தது என்பதனை ஏற்கிறார். இராஜ்ய சௌத்திரியும் அவ்வாறே ஏற்கிறார்.

ஹார்ஷ குப்தா, ஹார்ஷ குப்தரின் சகோதரியாதலால் மகாசேன குப்தா, மகாசேன குப்தரின் சகோதரி என்றூர் டாக்டர் சின்ஹா. (The D·cline of Kingdom of Magatha p. 175) ஆனால், மஜூம் தார் இது வெறும் அனுமானமேயன்றி ஆதாரம் அற்றது. என்று கூறினர். இத் திருமணம் நடைபெற்றதாகவே கொண்ட அறிஞர்கள் மகாசேன குப்தா, தம் சகோதரரால் ஆதித்திய வர்மனுக்கு மணம் முடித்துத் தரப்பட்டார் என்று கூறுகின்றனர். ஆனால், தாமோதர குப்தரின் காலத்திலேயே இம் மணம் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதும், கி. பி. 540-க்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றிருக்கவேண்டும் என்பதும் டாக்டர் பை. சர்மாவின் கருத்து. கி. பி. 540-ல் பிரபாகர வர்த்தனர் பிறந்தார் என்று சர்மா முடிவுகட்டுகிறூர்.

இவ்வாறாக மணம் கி.பி. 538-ல் நடைபெற்றிருக்க வேண்டும். பிரபாகர வர்த்தனர் கி. பி. 540-ல் பிறந்து கி. பி. 565-ல் ஆட்சிக்கு வந்து, 40 ஆண்டுகள் ஆட்சி செலுத்திக் கி.பி. 605-ல் அவருடைய ஆட்சி முடிவிற்கு வந்திருக்கவேண்டும். ஆனால், டாக்டர் சின்ஹாவால் காட்டப்படும் பிற்காலக் குப்தர்களின் கால வரிசையோடு இது பொருந்தவில்லை.

நரவர்த்தனர் காலம் முதல் பிரபாகர வர்த்தனர் காலம் வரை தானேஸ்வர அரசினை மூன்று தலை முறையினர் ஆட்சி செய் துள்ளனர். இதனைப் பட்டயச் சான்றுகள் வாயிலாக அறியலாம். ஒவ்வொருவருக்கும் சுமாராக இருபது ஆண்டுகள் என்று கொண் டால் புஷ்ப பூதிகளின் கீழ்க்கண்ட கால வரிசை கிடைக்கும்.

1. நரவர்த்தனர் (கி. பி. 505 முதல் 525 வரை)
   (மனைவி வஜ்ரினி தேவி)
2. முதல் இராஜ்ய வர்த்தனர் (கி. பி. 525 முதல் 545வரை)
   (அப்சரோ தேவி)
3. ஆதித்திய வர்த்தனர் (கி. பி. 545 முதல் 565 வரை)
   (மகாசேன குப்த தேவி)
4. பிரபாகர வர்த்தனர் (கி. பி. 565 முதல் 685 வரை)
   (யசோமதி)
5. இரண்டாம் இராஜ்யவர்த்தனர் (கி. பி. 685 முதல்606 வரை)
6. ஹார்ஷ வர்த்தனர் (கி. பி. 606 முதல் 647 வரை)

இவ் வம்சத்தை நிறுவியவரான புஷ்ப பூதிக்கும், (கி.பி. 455-475) நரவர்த்தனருக்கும் (கி. பி. 505-525) மிடையே சுமார் 40

அல்லது 50 ஆண்டுகள் இடைவெளி இருப்பதனை இது காட்டுகிறது. இந்த இடைவெளியில் இரண்டு மூன்று பேர் ஆட்சி செலுத்தியிருக்கக்கூடும். நாம் கி. பி. 455-க்குப் பின்னர்ப் புஷ்ப பூதியின் ஆட்சியைக் கொண்டுசெல்ல முடியாது. ஏனென்றால் குப்தப் பேரரசர்களான முதலாம் குமார குப்தரோ, இரண்டாம் சந்திரகுப்தர், சமுத்திர குப்தர் முதலானவர்களோ ஆற்றல் மிக்கவர்கள். குமார குப்தருக்குப்பின் ஸ்கந்த குப்தர் எதிர்ப்புச் சக்திகளை அடக்கி ஒடுக்கியவர். ஆகையால் புஷ்ப பூதியும், அவர் தம் இரண்டு மூன்று பின் தோன்றல்களும் சுயேச்சையாக மாறவோ, ஆட்சி எல்லையை விரிவுபடுத்தவோ முடியாது. அவர்கள் குறிப்பிடத்தக்க வகையில் நிலைபெறுமையால்தான் இலக்கிய மரபுகளிலோ, குடும்பப் பதிவுகளிலோ இடம் பெறாமல் போய்விட்டனர்.

## புஷ்ப பூதிகளின் தோற்றம்

டாக்டர் பியூ ஹிலர் புஷ்ப பூதி என்ற பெயர் நல்ல பொருள் எதனையும் கொண்டது அன்று என்று குறிப்பிட்டார். அது நட்சத்திரம் ஒன்றின் பெயர். அதன் பொருள்' 'புஷ்யா'வளத்தை அளிக்கக் கூடியவன் எவனோ அவன் என்பதாகும். இதைப் போன்ற பல பண்டைய பெயர்கள் உள்ளன. அவை ஆஷாட பூதி, சோமபூதி, இந்திர பூதி முதலியன' என்ற பியூஹிலரின் கருத்துச் சரியன்று. ஏனென்றால், இக் கருத்து அடிப்படையில்லாத ஒன்று. ஹர்ஷரின் குடும்பத்தை நன்கு அறிந்தவரான பாணர் தெள்ளத் தெளிவாக முதல் அரசர் புஷ்ப பூதி என்று காட்டுகிறார். எல்லாப் பட்டயங்களும் புஷ்ப பூதி என்று குறிப்பிடுகின்றன. புஷ்ப பூதியன்று, புஷ்யபூதியே என்று பியூஹிலர் குறிப்பிடுவதும், அதனை டாக்டர் இராய் சௌத்திரி ஆதரிப்பதும் பொருத்தமாகப் படவில்லை.

பாணரின் குறிப்புப்படி புஷ்ப பூதிகள் சோம வம்ச க்ஷத்திரியர்கள். ஆனால், வைசிய சாதியைச் சார்ந்தவர் ஹர்ஷ வர்த்தனர் என்று யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். ஆனால், டாக்டர் திரிபாதி புஷ்பபூதி என்பதன் விகுதியான பூதி என்பது புஷ்ப பூதி வைசியர் என்று காட்டுகிறது எனக் கருதுகிறார். மௌகாரிகள் க்ஷத்திரியர்களாவர். புஷ்ப பூதிகளும், மௌகாரிகளும் சந்திர சூரியருக்கு ஒப்பிடப்படுகின்றனர். பாணர், யுவாங் சுவாங் ஆகிய இரு சமகாலத்தவர்களின் குறிப்புகளிடையே முரண்பாடு காணப்படுகிறது. கன்னிங்காம் யுவாங் சுவாங்கின் குறிப்புத் தவறானது என்கிறார். கன்னிங்காமின் குறிப்புச் சரியாக இருக்கலாம் என்பது

வாட்டர்ஸின் கருத்து. பாணரை நம்புவதா? யுவாங் சுவாங்கின் கூற்றை நம்புவதா? புஷ்ப பூதிகள் சூரிய வழிபாட்டினர் என்பதைக்கொண்டு அவர்கள் சூரிய மரபினர் என்றும் கூறுவர். ஆனால், சமய நம்பிக்கைகளுக்கும், குடும்பத்தின் தோற்றத்திற்கும் தொடர்பேதும் இல்லையாகையாலும், பாணர் சந்திர மரபினர் என்று கூறுவதாலும் மேலே சொன்ன கருத்து சரியெனப் படவில்லை.

ஹர்ஷரை வைசிய சாதி என்று கூறுவது தவறான கருத்து என்பதனைப் பியூஹிலரும் ஏற்றுக் கொள்கிறார். பியூஹிலர் ஹர்ஷ குடும்பத்தவரை இக் கால இராஜ புத்திரர்களுடன் தொடர்பு படுத்திப் பேசுகிறார். மேலும், அவர் தம்முடைய கூற்றுக்கு ஆதாரமாக வைசா என்ற நாட்டையும், அந் நாட்டில் வாழ்ந்தவர்கள் வைசியர்கள் எனப்பட்டதையும் பாணினியின் குறிப்பிலிருந்து காட்டுகிறார். டாக்டர் கே. பி. ஜெயஸ்வால் ஆர்ய மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவின் சில பத்திகளைக் கொண்டு தானேஸ்வரத்தின் விஷ்ணு வர்த்தன யசோதர்மனே புஷ்ப பூதிகளின் மரபினை உருவாக்கியவர் என்று குறிப்பிட்டார். அந் நூலிலிருந்து குறிப்பிடப்படும் பகுதிகள் பிழையானவை. இலக்கணப் படி தவறானவை. எனவே, புஷ்ப பூதிகளை வைசியர்கள் என்று ஆரிய மஞ்சு ஸ்ரீ கல்பாவில் குறிப்பிடப்படும் சான்றினை வரலாற்றுச் சான்றாகக் கொள்ள முடியாது. இதே பதிலையே யுவாங் சுவாங்கின் குறிப்பிற்கும் அளிக்க வேண்டியுள்ளது.

புஷ்ப பூதிகள் வைசியர்கள் அல்லர் என்பதற்கு அவ் வமிசத்தவர்களின் மண உறவுகள் சான்றாகக் காட்டப் படுகின்றன. பிரபாகர வர்த்தனரின் மனைவி குப்த இளவரசி எனத் தோன்றுகிறது. மௌகாரி வமிசத்து அரசரான அவந்தி வர்மனின் மகன் கிரக வர்மன் பிரபாகர வர்த்தனரின் மகளை மணந்தார். வலபி அரசர் இரண்டாம் துருவ சேனரும் அவ் வாறே மண உறவினை ஹர்ஷரின் குடும்பத்துடன் கொண்டார். பாணரின் கருத்தினை ஏற்றுச் சந்திர வமிசத்து க்ஷத்திரியர்களே புஷ்ப பூதிகள் என்ற முடிவிற்கு நாம் வருகிறோம். மௌகாரிகளும் புஷ்ப பூதிகளும் இணைந்து பொது எதிரியான ஹூணர்களை எதிர்த்துள்ளனர்.

### வமிச நிறுவனர்

புஷ்ப பூதி சிவ பக்தர். பரமனைக் கனவிலேனும் கண்டு வழிபடாமல் உணவு உண்ணமாட்டார். பாணரால் பரம

மகேஸ்வரர் என இவர் அழைக்கப்பட்டார். சிவனை மறவாச் சிந்தையர் அவர். சிவனடியார் என்ற காரணத்தாலேயே சரஸ்வதி நதிக்கரையில் பைரவச்சாரியார் என்ற முனிவரைச் சென்று கண்டார். புஷ்ப பூதியின் சிவபக்தியினைக் குறித்த கதை ஒன்றினைப் பாணர் அளிக்கிறார். வரலாற்றுக்குத் தொடர்பில்லாத அக் கதையினை இங்கு அறியவேண்டுவதில்லை.

புஷ்ப பூதிக்கு அடுத்த ஆட்சியாளர் யார் என ஹர்ஷ சரித்தில் பாணர் குறிப்பிடவில்லை. ஆனால், புஷ்ப பூதிக்கும், பிரபாகர வர்த்தனருக்கும் இடைப்பட்ட அரசர்களின் சிறப்பினை அவர்களுடைய பெயர் குறிப்பிடாது மொத்தமாகக் குறிப்பிடுவதால் எவ்வளவு தூரம் வரலாற்று உண்மை உள்ளது என்று கண்டறிவது கடினமாக உள்ளது. புஷ்ப பூதி, பிரபாகர வர்த்தனர், ஹர்ஷர் ஆகியோரைக் குறித்த விளக்கமான செய்திகளைக் குறிப்பிட்டுவிட்டுப் புஷ்ப பூதிக்கும் பிரபாகர வர்த்தனருக்கும் இடைப்பட்ட அரசர்களுடைய பெயரைச் சிறந்த அறிஞரான பாணர் கூடக் குறிப்பிடாது விட்டுவிட்டது வியப்பை அளிக்கிறது. ஆனாலும், பட்டயச் சான்றுகள் பாணரால் விடப்பட்ட இடைவெளியை நிரப்புகின்றன. பிரபாகர வர்த்தனருக்கு முற்பட்ட அரசர்களின் பட்டியலை கி. பி. 628-29, கி. பி. 631-32ஐச் சார்ந்த ஹர்ஷரின் பான்ஸ்கேரா, மதுபான் பட்டயங்களும், சோனுபட், நாளந்தா முத்திரைகளும் காட்டுகின்றன. ஆனால், இந்த வரலாற்றுச் சான்றுகள் நரவர்த்தனருக்கு முற்பட்டவர் எனக் கருதப்படும் புஷ்ப பூதியையோ நரவர்த்தனருக்குச் சற்று முன்னதாக ஆண்ட அரசர்களையோ குறிப்பிடவில்லை.

## முந்தைய புஷ்ப பூதி வமிச அரசர்கள்

### 1. நரவர்த்தனர்

நரவர்த்தனருடைய அரசியின் பெயர் வஜ்ரிணி தேவி என்பதாகும். அவரே இவ் வமிசத்தின் சிறப்பை முதலில் சிறிது உயர்த்தியவர். பாணர் புஷ்ப பூதியை இராஜா' எனவும், மற்றைய பதிவுகள் நரவர்த்தனரை மகாராஜா எனவும் அழைப்பதிலிருந்து இதனை அறியலாம். அவர் புஷ்ப பூதியைவிடவும், அவருக்கும் தமக்கும் இடைப்பட்ட அரசர்களை விடவும் அரசியல் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தார். ஆனால், மகாராஜா என்ற பட்டம் கொண்டிருந்ததைக் கொண்டு சுயேச்சை அரசராக விளங்கினார் என்ற தவறான முடிவிற்கும் வந்துவிடக்கூடாது. 'மகாராஜா' என்ற சிறப்புப் பட்டம் அதற்குரிய தன்மையினை அக்காலத்திலே

இழந்துவிட்டதே அதற்கான காரணம் எனலாம். ஆனாலும், புஷ்ப பூதியைவிட மிகுந்த அரசியல் செல்வாக்குப் பெற்றிருந் தார் என்பதனை மறுப்பதற்கில்லை.

## 2. முதல் இராஜ்ய வர்த்தனர்

முதல் இராஜ்ய வர்த்தனர் வஜ்ரிணி தேவியின் வாயிலாகப் பிறந்த நரவர்த்தனரின் மகன். இவர் 'சூரிய பக்தர்' என்பதனைப் 'பரமாதித்திய பக்தர்' என்ற பட்டம் காட்டும். அவரும் மகா ராஜா என்ற பட்டம் கொண்டிருந்தார். பிற்காலக் குப்தர் களுடன் மண உறவு கொண்டிருந்தார் என்பதனை அப்ஸரா தேவியை மணந்தது காட்டுகிறது. அவரும் திறை அரசராகவே வாழ்ந்தார் என்று தோன்றுகிறது.

## 3. ஆதித்திய வாத்தனர்

முதல் இராஜ்ய வர்த்தனர், அப்ஸரா தேவி ஆகிய இரு வருக்கும் பிறந்த ஆதித்திய வர்த்தனர் மகாசேன குப்த தேவியை மணந்தார். 'குப்த' என்று முடிவதைக் கொண்டு மகாசேன குப்த தேவிக்கும், குப்த வமிசத்திற்கும் இடையே தொடர்பு படுத்தினர். அது உண்மையாயின் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இத் திருமணம் இராஜ்ய வர்த்தனர் காலத்தில் நிகழ்வுற்றதா அவர்தம் தந்தை காலத்தில் நிகழ்வுற்றதா எனத் தெரியவில்லை. இத் திருமண உறவு எப்போது நடைபெற்றிருப்பினும் சரி. ஒன்று மட்டும் உறுதி. புஷ்ப பூதிகளின் செல்வாக்கு உயர்விற்கு இது வழி வகுத்தது என்ற உண்மையே அது. 'பரமாதித்திய பக்தர்' என்ற பட்டத்தை அவரும் கொண்டிருந்தமையால் அவரும் சூரிய பக்தரே. 'மகாராஜா' என்ற பட்டத்தை நரவர்த்தனர், இராஜ்ய வர்த்தனர், ஆதித்திய வர்த்தனர் ஆகிய மூவரும் கொண்டிருந்த போதிலும், 'அவர்களுடைய வல்லமை பெரிதாக விளங்கிய போதிலும், அவர்கள் சுயேச்சை பெற்ற அரசர்களாக விளங்கி னார்களா என்பது ஐயத்திற்குரியது என்று பியூஹிலர் குறிப் பிடுகிறார்.

## 4. பிரபாகர வர்த்தனர்

பாணர், பிரபாகர வர்த்தனரை அறிமுகப்படுத்தும் முறை இது. 'புஷ்ப பூதியின் பரம்பரையில் புகழ் மிக்க அரசர்களை தோன்றினர் ... அவர்கள் சிறப்புடன் ஆட்சி புரியப் பிறந்

தவர்கள் ... படை வலிமையினால் நாட்டைக் காப்பர் ... உலகையே வெல்லும் ஆற்றல் படைத்தவர்கள் ... அந்த வரிசையில் காலப்போக்கில் அரசருக்கு அரசரான பிரபாகர வர்த்தனர் என்ற பெயருடையவர் தோன்றினர் ...' பிரபாகர வர்த்தனர் (பிரதாபரனுமா) பிரதாப சீலர் என்ற பெயரிலே நன்கு அறியப்பட்டவர் என்று பாணர் குறிப்பிடுகிறார்.

பிரபாகர வர்த்தனரே முழு உரிமை பெற்ற அரசராகக் கருதப் படுகிறார். 'மகாராஜாதி ராஜா' என்ற சிறப்புப் பட்டம் அவர் கொண்டிருந்ததற்குப் பட்டயங்களும், இலக்கியங்களும் சான்று பகர்கின்றன. பாணர், அவரை அரசருக்கு அரசர் என்ற பொருளில் 'இராஜாதி ராஜா' என்று அழைக்கிறார். ஹர்ஷரின் பதிவுகளிலும் 'பரம பட்டாரகர்', 'மகாராஜாதிராஜா' முதலான பட்டங்கள் அவருக்கு அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவர் சுயேச்சையான, ஆற்றல் மிகுந்த அரசாரக விளங்கியிருக்க வேண்டும் என்று பியூஹிலர் குறிப்பிடுகிறார். அவருடைய புகழ் நான்கு கடல்களுக்கு அப்பாலும் பரவி யிருந்தது என்பதனைச் 'சதுஸ் ஸமுத்திர திக்ராந்த கீர்த்தி' என்பது காட்டுகிறது. ஆனால், அதனை அப்படியே உண்மை யெனக் கொள்ள முடியாது.

### போர்கள்

பாணர் தம் கவித்திறனைப் பிழிந்தெடுத்துப் பிரபாகர வர்த்தனரை வெகுவாகப் புகழ்கிறார். நாம் புகழுரைகளைக் கவன மாக ஆராய்ந்தே முடிவு கட்டவேண்டியுள்ளது. 'ஹூணமான் களுக்குச் சிங்கம், சிந்து அரசருக்குக் கடுமையான காய்ச்சல், கூர்ஜர அரசருக்கு உறக்கத்தைக் கெடுக்கும் கொடிய கனவு, யானை போன்ற காந்தார அரசருக்குக் கொடிய நோய், லாதாக் களின் ஒழுங்கின்மையை ஒடுக்குபவர், மாளவ அரசர்களின் அதிர்ஷ்டக் கொடியைக் கத்திரிக்கும் கோடரி' என்று பாணர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு பாணர் குறிப்பிடும் குறிப்பு உண்மையானதா என்று ஆராய வேண்டியுள்ளது. அது உண்மையோ, பொய்யோ, தமது அரசைப் பெரியதாகவும், ஆற்றல் மிக்கதாகவும் ஆக்க வேண்டும் என்ற அவருடைய விருப்பத்தைக் காட்டுகிறது எனலாம். 'எல்லாத் திசைகளிலும் படையெடுப்பை மேற்கொண் டார். மலை, காடு, குகைகளைக் கடந்து வென்றார்.

**ஹூணர்களுடன் போர்**

மிஹிரகுலர் கி.பி. 533-ல் ஜனேந்திர யசோதர்மனல் தோற்கடிக்கப்பட்டார். ஆனல், அறிஞர்கள் சிலர் ஹூணர்களின் அழிவைச் செய்தவர் யசோதர்மன் அல்லர், நரசிம்ம குப்த பாலாதித்தியரே என்று குறிப்பிடுகின்றனர்.[1] மிஹிரகுலருக்குப் பின்னர்ப், பெரும் ஹூணர் யாரைக் குறித்தும் தெரியவில்லை. ஆனாலும் அவர்கள் முழுமையாக அழிக்கப்படவில்லை. ஹர்ஷரின் பட்டயங்களில் காணப்படும் சூலிகர்கள் சட்டோபாத்யாயா முதலிய அறிஞர்களால் ஹூணர்களே எனவும், ஈசான வர்மனும், அவர் மகன் சர்வ வர்மனும் ஹூணர்களுக்குத் தோல்வியை அளித்தவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டனர். அப்ஸாடுப்பட்டயத்திலும் ஹூணர்களைப் பற்றிய குறிப்பினைக் காண்கிறோம். மிஹிரகுலரின் தோல்விக்குப் பின்னரும் ஹூணர்கள் இந்திய அரசியல் வானில் தொல்லை தரும் மின்னலாக விளங்கினர் என்பதனைப் பட்டய, நாணயச் சான்றுகள் உறுதியாக மெய்ப்பிக்கின்றன.

டாக்டர் ஆர். கே. முகர்ஜீ, டாக்டர் பணிக்கர், சி. வி. வைத்யா முதலானவர்கள், காந்தாரா, பெஷாவர், சியால் கோட் முதலிய பகுதிகளில் அரசுகளைக் கொண்டிருந்திருந்த ஹூணர்களைப் பிரபாகர வர்த்தனர் தோல்வியடையச் செய்து அடிபணிய வைத்தார் என்கின்றனர். ஆனல், டாக்டர் திரிபாதி இத்தகைய முடிவினை ஏற்க உடன்படவில்லை. ஹூணர்கள் அடிபணிந்தனர் என்பதனை ஏற்காதவர்களில் டாக்டர் மஜூம்தாரும் ஒருவர். அவர் தம் மறைவிற்கு முன்னர் மூத்த மகனை உத்தர பாதாவிற்கு எதிராகப் படை நடத்திச் செல்லச்செய்ததை இதற்குச் சான்றாக்க் காட்டுகிருர். ஆனல், அப் படையெடுப்பின் முடிவு தெரியவில்லை. பிரபாகர வர்த்தனரின் திடீர் நோயினல் இராஜ்ய வர்த்தனர் திருப்பி அழைக்கப்பட்டதால் போர் ஏதும் நடைபெருலும் போயிருக்கக் கூடும்.

பிரபாகர வர்த்தனரின் கால இறுதியில் ஏற்பட்ட ஹூணப் படையெடுப்பை டாக்டர் திரிபாதியும், மஜூம்தாரும் காட்டுகின்றனர். ஆனல், இராஜ்ய வர்த்தனர் தலைமை வகித்து நடத்திச் சென்ற பிரபாகர வர்த்தனரின் படைக்கு வெற்றிச் சிறப்பு எதையும் அவர்கள் இருவரும் அளிக்க உடன்படவில்லை. படையெடுத்து வந்த ஏதாவது ஒரு சக்தி மீண்டும் படையெடுத்து வராது என்று

[1] பார்க்க Journal of the Bihar Research Society, Patna, Vol XXI.

யார்தாம் கூற முடியும்? அதைப் போலவே அந்தச் சக்தியை வென்றதால் மீண்டும் அச் சக்தி தலைதூக்காது என்று யார்தாம் கூற முடியும்? அப்படி வராது என்றால் ஸ்கந்த குப்தரால் தோல்வியடைந்ததோடு ஹூணர்கள் படையெடுப்பே வரலாற்றில் பின்னர் ஏற்படாமல் போயிருக்க வேண்டும். ஆனால், பின்னரும் படையெடுப்புகள் நடைபெற்றன.

இரண்டாவதாக முதல் பிரபாகர வர்த்தனரின் ஹூணப் போருக்கும், இரண்டாவது இராஜ்ய வர்த்தனரின் ஹூணப் படையெடுப்புக்கும் இடையே நீண்ட இடைவெளி உள்ளது. ஹூணர்கள் வயது முதிர்ந்த பிரபாகர வர்த்தனரால் தம்மை வெல்ல முடியாது என்று கருதி முதல் தோல்விக்குப் பழிவாங்க மீண்டும் படையெடுத்திருக்க வேண்டும். பாணரின் கருத்துரைகளை ஏற்பதால் இக் கூற்றை டாக்டர் மஜூம்தார் ஏற்கவில்லை. டாக்டர் மஜூம்தார் குறிப்பிடும் 'போர் ஒன்றும் நடைபெற்றிருக்காது' என்ற குறிப்பு அடிப்படை இல்லாததாகவும், நம்ப முடியாததாகவும் உள்ளது. இராஜ்ய வர்த்தனரின் ஹூணர்களுக்கு எதிரான போரினைப் பற்றிக் குறிப்பிட்ட பாணர் அவர் அம்புக் காயங்களால் உடல் முழுவதும் கட்டுப் போட்டிருந்ததையும், கால் எலும்பு முறிந்து கிடந்ததையும் குறிப்பிடுவதைக் கொண்டு ஹூணர்கள் கடுமையாகப் போரிட்டதையும், அதற்குப் பதிலடியைச் சரியாக இராஜ்ய வர்த்தனர் வழங்கினர் என்பதையும் பாணரின் குறிப்புக் காட்டுகிறது எனலாம். இராஜ்ய வர்த்தனரின் முயற்சி வெற்றி பெற்றது என்பதையும், அவருடைய சிறப்பு அதிகரித்தது என்பதையும் ஹூணர் படையெடுப்பு மீண்டும் நடைபெறாமை காட்டுகிறது.

பிரபாகர வர்த்தனரின் மற்றைய போர்களைக் குறித்துக் குறிப்பிடுகையில் ஸ்மித் 'அவை வெற்றியை அளித்தன' எனவும், 'அவற்றால் பிரபாகர வர்த்தனரின் நிலையும், சிறப்பும் குறிபிடத்தக்க அளவு உயர்ந்தன' எனவும் குறிப்பிட்டார். பிரபாகர வர்த்தனர் 'ஐயத்திற்கிடமில்லாமல் வட இந்தியாவின் சிறப்பு மிக்க அரசர் தாம்' என்றார் சி. வி. வைத்யா. டாக்டர் முகர்ஜி 'பேரரசர் நிலைக்கு அவர் நெருங்கி விட்டார்' என்றார். டாக்டர் திரிபாதி முழுமையாக அத்தகைய எண்ணம் கொள்ளவில்லை. டாக்டர் மஜூம்தாரும், சட்டோபாத்யாயாவும் அவ் வெற்றிகளைக் கவிஞர் பாணரின் மிகைப்படுத்தப்பட்ட குறிப்பெனக் கருதினர்.

பிரபாகர வர்த்தனரின் மற்றைய வெற்றிகள் அறிஞர்களின் கவனத்திற்கு வராமல் போய்விட்டனபோல் தோன்றுகிறது.

யசோவதியை ஹர்ஷ சரிதத்தில் ஹர்ஷ வர்த்தனர் நெருப்பில் வீழ்ந்து உயிர்விட வேண்டாமென்று தடுத்தபோது யசோவதி தான் ஒரு சிங்கத்தின் மனைவியென்றும், 100 போர்க்களத்தில் வென்றது அச் சிங்கமென்றும் குறிப்பிடுவதோடு பல வெற்றிச் சிறப்புகளையும் குறிப்பிடுகிறார். பிரபாகர வர்த்தனர் சிறந்த போர் வீரர் என்றும், அவர்தம் போர் ஆற்றலுக்கு அவரே காரணமென்றும் பாணரின் குறிப்பிலிருந்து அறியமுடிகிறது. பாணருடைய குறிப்பில் 'நூறு போர்க்களங்கள்', 'எண்ணிறந்த திறை அரசர்கள்', 'எதிரிகளின் கைப்பற்றப்பட்ட மனைவிகள்' முதலான குறிப்புகள் எதிரிகளுக்கு அவர் அளித்த தோல்வியைக் காட்டுகின்றன. அவர் தம் முன்னோரெல்லாம் மகாராஜா என அழைக்கப்பட அவர் 'மகாராஜாதிராஜா' என்று அழைக்கப் பட்டது அவர் பெற்றிருந்த குறிப்பிடத் தகுந்த அரசியல் வல்லமையையும், திறை அரசர்கள் பலரைக் கொண்ட சுயேச்சை அரசர் அவர் என்பதையும் காட்டுகின்றது. அவர் பல்வேறு போர்களில் வெற்றி பெற்ற பின்னரே மகா ராஜாதிராஜா என்ற பட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். எண்ணிறந்த திறை அரசர்கள் அவர்தம் முடிசூட்டு விழாவில் பங்கு கொண்டனர் என்ற குறிப்பும் இதற்கு சான்று எனலாம்.

### மாளவப் படையெடுப்பு

அக் காலத்தில் மாளவத்தை ஆட்சி செலுத்திய அரசர் யார் என்பது தெரியவில்லை. மகாசேன குப்தாவின் குடும்பத்தைச் சேர்ந்த தேவ குப்தாவே மாளவத்தின் அரசர் என்று கருதப் படுகிறது. டாக்டர் முகர்ஜி பிரபாகர வர்த்தனரின் எதிரியான மாளவ அரசர் யசோதர்மனின் மகனான சீலாதித்தியர் என்று கருதுகிறார். ஹர்ஷ வர்த்தனரின் குறிப்புகள் மாளவத்தின் அரசரான தேவ குப்தரை மாளவத்தின் தீய தலைவர் என்று இகழ்ந்து உரைக்கின்றன. டாக்டர் முகர்ஜியின் கூற்றினை டாக்டர் சர்மா ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால், கன்னோசியின் மௌகாரிகள், தானேஸ்வரத்தின் வர்த்தனர்கள், கிழக்கு மாளவத்தின் குப்தர்கள் ஆகிய கூட்டிணைவின் தலைவராகப் பிரபாகர வர்த்தனர் மாளவ அரசனை எதிர்த்தார் என்றும் அவர் கூறுவதே. மேலும் பிரபாகர வர்த்தனருக்கும் சீலாதித்தியருக்கும் இடையேயான போரினை டாக்டர் முகர்ஜி மாளவ அரசர் யசோதர்மனுக்கும் அவர்தம் மருமகன் பிரபாகர வர்த்தனருக்கும் இடையேயான போர் எனக் கருதுகிறார். ஏனென்றால், யசோவதி சீலாதித்தியரின் சகோதரியும், யசோதர்மனின் மகளும் ஆவார். ஆனால், டாக்டர் முகர்ஜி

குறிப்பிடும் யசோதர்மனின் மகள் மருமகன் போராட்டம் என்ற கூற்று ஏற்கப்படவில்லை. கோயர் எல், ஆர். கே. முகர்ஜி ஆகிய இருவரும் மாளவத்தின் அரசரான யசோதர்மனின் மகள் எனப் பிரபாகர வர்த்தனரின் மனைவி யசோமதியைக் கருதுகின்றனர். அவ்வாறு அவர்கள் கருதும் கருத்துத் தவறானது என்பதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். மாளவத்தின் அரசர் யசோதர்மன் கி. பி. 533-க்குப் பிறகு அரசியலில் காணப்படவில்லை யென்பதும், ஹர்ஷ சரிதத்தில் யசோமதியின் தாய் தந்தையர் நீண்ட காலம் வாழ்ந்திருந்தனர் என்று கூறப்படுவதுமாகும்.

**கூர்ஜரப் போர்**

பிரபாகர வர்த்தனர் (இன்றைய இராஜஸ்தானத்தில் உள்ள) கூர்ஜரம் என்ற பகுதியினருடன் போரிட்டார். பிரபாகர வர்த்தனரால் கூர்ஜரர்களின் உறக்கத்திற்குத் தொல்லை விளைந்தது என்று பாணர் குறிப்பிடுகிறார். கூர்ஜரர்கள் இன்றைய குஜராத், குஜார்த்தான் அல்லது குஜரன் வாலா என வழங்கும் பகுதிகளிலும் அவற்றின் சுற்றுப் புறங்களிலும் வாழ்ந்தவர்கள் என்று கே. எம். முன்ஷி குறிப்பிடுகின்றார். கூர்ஜரர்களின் தோற்றம் பற்றியும், அவர்கள் யார் என்பது பற்றியும் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அவற்றை ஈண்டு அறிய வேண்டுவதில்லை. அவர்களைப் பற்றிய கருத்து வேறுபாடுகளை எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படும் வரலாற்றுச் சான்றுகள் தாம் விளக்கவேண்டும் என்று டாக்டர் மஜூம்தார் குறிப்பிடும் கருத்துச் சரியே எனலாம்.

பிரபாகர வர்த்தனர் ஹரிச்சந்திரா என்பவரால் நிறுவப்பட்ட கூர்ஜர அரசரான ரஜிலா (Rajjila) என்பவருடன் அல்லது அவருடைய இறப்பிற்குப் பின் கி.பி. 590-ல் கூர்ஜர நாட்டைத் தாக்கியிருக்க வேண்டும்.

**காந்தாரம் :**

சிந்து ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்திருந்த காந்தாரம் பிரபாகர வர்த்தனரின் மற்றொரு பகை நாடு. காந்தாரத்தை யுவாங் சுவாங் கான்-தோ-லோ (Kan-To-Lo) எனக் குறித்துள்ளார். இன்று பெஷாவர் என வழங்கப்படும் புருஷபுரம் அதன் தலைநகராகும். பாணர் காந்தாரம் பற்றிய தகவல்களை விருப்புடன் தரவில்லை. ஆனால், யுவாங் சுவாங்

Ms. V. INDRA BHAVANI, M...
Sri ...



கின் பயணக் காலத்தில் காஷ்மீருக்குக் காந்தாரம் உட்பட்டிருந்தது. கி. பி. 606-ல் கார்க்கோட வமிசத்தைச் சேர்ந்த துர்லப வர்த்தனர் என்பவர் அரியணையேறிய பின்னரே காஷ்மீரத்தின் ஆற்றல் வளர்ந்தது. யுவாங் சுவாங்கின் காலத்தில் காஷ்மீர் அரசின் ஒரு பகுதியாக விளங்கிய காந்தாரம் முன்னர்க் கடிசாவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. காந்தார அரசருக்கு உடல் நலிவைத் தரும் நோயாகப் பிரபாகர வர்த்தனர் விளங்கினார் என்று பாணர் குறிப்பிடுகிறார்.

**சிந்து :**

யுவாங் சுவாங் சட்லெஜ், சிந்து நதிகளுக்குக் கீழே கடல்வரை உள்ள பகுதிகள் முழுவதையும் அரசியல் வழக்கில் சிந்து எனக் குறிக்கப்படும் நாடு என்றார். யுவாங் சுவாங் சின்-து (Sin - Tu) என்கிறார். சிந்து 3,200 கி.மீ. சுற்றளவு கொண்டது எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

பிரபாகர வர்த்தனருக்கும், சிந்து தேச அரசருக்கும் இடையில் பல சச்சரவுகள் தோன்றின. பிரபாகர வர்த்தனரை எதிர்த்துப் போரிட்ட சிந்து அரசர் ராய் அரச வமிசத்தைச் சேர்ந்த ராய் சகாசியின் (Rai Sahasi) மகன் இரண்டாம் ராய் சிராஸ் ஆவார். அவரைக் கி. பி. 640-ல் அப் பகுதியைச் சுற்றிப் பயணம் செய்த யுவாங் சுவாங் ஒரு சூத்திர வமிசத்தவர் என்று குறிப்பிடுகிறார்.

**லாதாக்கல் :**

பிரபாகர வர்த்தனரின் அடுத்த படையெடுப்பு லாதாக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பாகும். பிரபாகர வர்த்தனர் லாதாக்களின் திறனை அழித்தவர் என்று பாணரால் புகழப்படுகிறார். பிரபாகர வர்த்தனரின் காலத்தில் காலசூரிகள் லாதா என்று குறிக்கப்படும் மாஹி, தப்தி நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியினைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டிருந்தனர். காலசூரிகளின் செல்வாக்கு ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ந்தது. கி.பி. 595 ஆம் ஆண்டில் இரண்டாவது காலசூரி அரசரான சங்கா கானு என்பவரைப் பற்றி அப்கோனு ஏடு அறிவிக்கிறது. பிற்காலக் குப்தரான மகாசேன குப்தரைக் காலசூரிகள் வென்று உஜ்ஜயினியைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தனர்.

காலசூரிகள் மகாசேன குப்தரை வென்றமையால் மகாசேன குப்தர் தம் தங்கை மகனை பிரபாகர வர்த்தனரின் உதவியைப் பெற்றார். பிரபாகர வர்த்தனர் லாதாக்களுக்கு எதிராக அனுப்பிய படைப் பிரிவினைப் பாணர் புகழ்ந்துரைக்கின்றார்.

இவ்வாருகப் புஷ்ப பூதி வமிசத்தில் முதல் அரசராகப் பிரபாகர வர்த்தனர் சிறப்புடன் விளங்கினார். அவரே இந்த வமிசத்தை நிறுவியவர் எனவும், முழு சுயேச்சை நிலையை இவ்வரசுக்கு அளித்தவர் எனவும் கூறலாம். ஹூணர், சிந்து அரசர், கூர்ஜரர், காந்தாரத் தலைவர், லாதாக்கள், மாளவர்கள் ஆகியோரை வென்றதாகக் குறிப்பிடப்படும் குறிப்பு வெறும் புகழுரை அன்று; அவ் வெற்றிகளினால் டாக்டர் முகர்ஜி குறிப்பிடுவது போலப் பேரரசர் நிலைக்கு உயர்ந்தார்; உறுதியான அடித்தளமுடைய பேரரசை ஹர்ஷருக்கு விட்டுச்சென்றார்.

# 4. ஹர்ஷரின் பிறப்பும், இளமைக் கால வாழ்க்கையும்.

பிரபாகர வர்த்தனருக்கு மனைவியர் பலர் இருந்தனர். யசோவதியே அரசி என்ற மதிப்பினைப் பெற்றிருந்தாள். பாணர் அரசியின் பெயரை யசோவதி என்று குறிப்பிடுகிறார். ஆனால், பன்ஸ்கேரா, மதுபென் பட்டயங்களிலும், சோனுபெட் முத்திரைகளிலும் யசோமதி தேவி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஹர்ஷர் தம்முடைய பதிவுகளில் அரசியை யசோமதி என்றே குறிப்பிட்டுள்ளார். எனவே, யசோவதி, யசோமதி ஆகிய இரண்டுமே சரியெனக் கொள்ளலாம். யசோமதி பாணரின் சிறப்பான புகழுரைக்கு ஆளாகவில்லை என்பதைக் கொண்டு அவர் சிறப்புடைய அரச குடும்பத்தைச் சார்ந்தவர் இல்லை என்றும் கருதுகின்றனர். பிரபாகர வர்த்தனரும், யசோவதியும் மகிழ்ச்சியான இல்லற வாழ்வினை நடத்திவந்தனர். ஆதர்ஸ தம்பதிகளாக விளங்கிய அவ் விருவரும், சிவனும் பார்வதியும், திருமாலும் இலக்குமியும், சந்திரனும் ரோகிணியும், பிரஜாவதியும் புத்தியும், வசிஷ்டரும் அருந்ததியும் போன்றவர் என்று புகழ்ந்து உரைக்கப்படுகின்றனர்.

யசோமதியின்பால் பிரபாகர வர்த்தனர் ஆழ்ந்த காதல் கொண்டிருந்தார். அருமை மனைவியின் வாயிலாக மழலைச் செல்வங்கள் பிறந்து தவழ வழிபாடுகள் நிகழ்த்தினர். பல்லாண்டுகள் இறைவனை வேண்டிநின்றார். குல தெய்வமான சிவபிரானைத் தொழுதேத்தினர். அதைப் போலவே 'சூரிய உதயத்திலும், நடுப் பகலிலும், அந்திப் பொழுதிலும்' சூரியனை வழிபட்டார். வழிபாடு பலன் அளித்தது என்றுதான் சொல்ல வேண்டும். சூரியக் கதிர்களிலிருந்து இரு இளைஞர்கள் குதித்து வருவதுபோல் அரசி தாம் கண்ட கனவை அரசரிடம் சொல்ல, ஆண்டவன் மகவுகளை அளித்துத் தம்மை ஆசிர்வதித்தன் அடையாளம் இதுவென்று அரசர் மகிழ்ந்தார். சிறிது காலம் சென்றது. மூத்த மகன் ராஜ்ய வர்த்தனர் கி. பி. 576 ஆம் ஆண்டின் இறுதியில் பிறந்தார். ராஜ்ய வர்த்தனர் ஆறு வயதை நெருங்கும்போது

கி. பி. 590ஆம் ஆண்டு ஹர்ஷர் பிறந்தார். (4¾ வயதை அடைந்ததுமே குழந்தை ஆறு வயதை நெருங்குகிறது எனக் கூறுவது இந்தியாவின் பழைய வழக்கமாகும்).

**ஹர்ஷர் பிறப்பு**

ஹர்ஷரின் பிறப்பினைக் குறித்து விளக்கமாகப் பாணர் கூறுவதால் அவருக்கு நாம் மிகவும் நன்றி செலுத்தலாம். ஹர்ஷரின் பிறப்பைக் குறித்து எல்லா நுணுக்கமான செய்திகளை யும் அவர் அளிக்கின்றார். ஆனால், பிறந்த ஆண்டை மட்டும் குறிப்பிடவில்லை. ஹர்ஷர் ஸரவண மாதத்தில் அன்னையின் வயிற்றில் புகுந்தார் எனவும், ஜெயஸ்த மாதத்தில் பன்னிரண் டாம் நாள் பிறந்தார் எனவும் குறிப்பிடப்படுகிறது. யசோமதி யின் தாதியின் மகள் அரசரிடம் சென்று இரண்டாவது மகன் பிறந்திருக்கின்ற நல்ல செய்தியைத் தெரிவித்தாளாம். பாணர் கிரகங்கள், நிலை, காலம் முதலியவற்றைக் குறிப்பிட்டுவிட்டுப் பிறந்த நாளையும், ஆண்டையும் குறிப்பிடாதது குழப்பத்தை ஏற்படுத்துகிறது. பாணர் குறிப்பிடும் ஜெயஸ்த மாதம் பன்னிரண்டாம் நாள், நிலவு புறப்படும் நேரம் முதலியவற்றைக் கொண்டு பிரதோஷ காலம் எனப்படும் இரவு பத்து மணிக்குப் பிறந்தார் எனக் கருதலாம். சி. வி. வைத்யா, பேராசிரியர் ஆப்தே முதலானவர்கள் ஹர்ஷர் சாக வருஷம் 512-ல் ஜெயஸ்த மாதம் பன்னிரண்டாம் நாள் பிறந்தார் என்று குறித்தனர். இந்த ஜெயஸ்த மாதம் பன்னிரண்டாம் நாள் சாக வருஷம் 512 என்பது ஆங்கில நாள்காட்டிப்படி பார்த்தால் ஞாயிற்றுக்கிழமை கி. பி. 590 ஜூன் மாதம் 4 ஆம் தேதியில் பிறந்தார் என்று தெரியவரு கிறது. கிரகங்களின் நிலைபற்றி ஒரு குழப்பத்தையும் பாணர் ஏற் படுத்திவிட்டார். ஹர்ஷரின் பிறப்பைப் புகழ்ந்து உரைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் அவ்வாறு எழுதியிருக்க வேண்டும்.

'ஹர்ஷரின் பிறப்பு மிகவும் கோலாகலமாகச் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. பிராமணர்கள் வேதம் ஓதி வாழ்த்தினர். கைதிகள் விடுவிக்கப்பட்டனர். கடைகளில் உள்ள பொருள்களை மக்கள் மகிழ்ச்சியினால் கவர்ந்துசென்றனர். முதியவர், இளையவர் என்றில்லாது, தலைவன் பணியாள் என்றில்லாது, வேறுபாடு கருதாமல் தலைநகரின் மக்கள் அனைவரும் மகிழ்ச்சி யால் நடனமாடினர்' என்றெல்லாம் பாணர் குறிப்பிடுகிறார்.

பாணரின் குறிப்பிலிருந்து இராஜ்ய வர்த்தனருக்கும், ஹர்ஷ ருக்கும் மிடையே ஐந்து ஆண்டு வயது வேறுபாடு இருந்தது

என்பது தெரியவரும். இராஜ்ய வர்த்தனர் ஆறுவயதை அடைந்த போது ஹர்ஷ வர்த்தனர் தாதியின் கையைப் பற்றி ஓரிரு அடிகள் எடுத்துவைத்தார். இந்த நேரத்தில் யசோமதி இராஜ்ய ஸ்ரீயை வயிற்றில் சுமந்துகொண்டிருந்தார். இவ்வாருக ஹர்ஷருக்கும் அவர் தங்கைக்கும் இடையே இரண்டு அல்லது இரண்டு ஆண்டு களுக்கு ஓரிரு மாதங்கள் குறைந்த வயது வேறுபாடு காணப் பட்டது. யசோமதியின் உடன்பிறப்பின் மகளான பண்டியை இளைய அரசிக்கும், இளவரசுகளுக்கும் உதவ அனுப்பினர். இந்தப் பண்டிதான் பின்னாளில் இளவரசிக்குத் துயர் காலத்தில் அன்புடன் உதவியாக நின்றவர்.

**ஹர்ஷரின் இளமைக் காலமும் கல்வியும்.**

பாணர் ஹர்ஷரின் இளமைக் காலத்தையும், கல்வியையும் தனியாகக் குறிப்பிடாது, இராஜ்ய வர்த்தனரைக் குறிப்பிடுகை யில் ஹர்ஷர், இராஜ்ய ஸ்ரீ, பண்டி ஆகியோரையும் சேர்த்தே குறிப்பிடுகிருர். பண்டியைப் பிரபாகர வர்த்தனர் தம் பிள்ளை களைப் போலவே நடத்தினர். மூவருக்குமே கல்வி, போர்ப்பயிற்சி முதலியன ஒன்ருக அளிக்கப்பட்டன. பண்டி அரண்மனையில் தம் தன்னலமற்ற பணியினுலும், தம் திறமையினுலும், நன்றி உணர்வு மிக்க பணியினுலும் மிக இன்றியமையாத சிறப்பினைப் பெற்ருர். பண்டி பிற்காலத்தில் ஹூணப் படையெடுப்பின் போதும், ஹர்ஷரின் இமயமலைச்சாரல் வேட்டையின்போதும், இராஜ்ய வர்த்தனரின் மாளவப் படையெடுப்பின்போதும் உடனிருந்தார்.

பாணரின் குறிப்புகளிலிருந்து ஹர்ஷரின் கல்வி ஆறு அல்லது ஏழு வயதில் தொடங்கிப் பதினன்கு வயதுவரை தொடர்ந் திருக்க வேண்டும் என்று தெரிகிறது. பாணர் 14 வயதிற்குள் ஸ்ருதி, ஸ்மிருதி முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்திருந்தார். அரசர் களுக்கெல்லாம் இது பொருந்தும். சந்திர பீடன் என்ற அரசன் ஆறு வயதில் பள்ளிக்குச் சென்று பத்து ஆண்டுகள் பயின்று பதினுறு வயதில் பள்ளியை விட்டு நீங்கினன். யுவாங் சுவாங்கின் குறிப்புகளும் இக் கருத்தினுக்கு ஆதாரமாக அமைகின்றன. குழந்தைகள் ஏழு வயதை அடைந்தபோது ஐந்து அறிவியல்களில் கல்வி அளிக்கப்பட்டது என அவர் குறிப்பிடுகிருர்.

ஹர்ஷர் 16 வயதினை அடைந்தபோது ஆட்சியின் முழுப் பொறுப்பினை ஏற்ருர். ஹர்ஷர் இராஜ்ய வர்த்தனர் இருவருக்கும்

படைத்துறைப் பயிற்சி அளிக்கப்பட்டது. குதிரையேற்றம், உடற்பயிற்சி முதலிய பயிற்சிகளைப் பெற்றனர். சிறந்த யானை களின்மீது ஏறிச் சென்றனர். கத்திச் சண்டை, வில், அம்புப் போர் ஆகியவற்றையும் கற்றனர். சந்திர பீடனுக்கு அளித்த கல்வி என்ன என்பதைக் கொண்டு ஹர்ஷர் பெற்ற கல்வியினை அறியலாம். எல்லாத் துறைகளிலும் ஹர்ஷர் பயிற்சி பெற்றார்.

சந்திர பீடன் சொற்கள், வாக்கியங்கள், அளவையியல், தர்ம சாத்திரம், இராஜ நீதி, உடற்பயிற்சி, வில் வித்தை, யானையேற்றம் குதிரையேற்றம், தேர் ஓட்டம், இசைக்கருவிகளை இயக்குதல், நடனச்சட்டங்கள், இசைக்கலை ஆகியற்றை அறிந்ததோடு, யானைகளைப் பழக்குதலையும், குதிரைகளைப் பற்றியும் புருஷ இலட்சணமும் அறிந்திருந்தார். ஓவியம் வரைதல், பறவை களின் ஒலிக் குறிப்பினை அறிதல், சூதாட்டங்கள் பற்றி அறிதல் முதலியவைகளிலும் நன்கு பயிற்றுவிக்கப்பட்டார். இரத்தினங் களைப் பரிசோதித்து அறிதலும், தச்சு வேலையும், தந்த வேலையும், ஆயுர் வேதமும். கட்டடக் கலையும், யந்திரப் பிரயோகமும், சுரங்க அறிவும், இந்திரஜாலமும், நீச்சலும், கதைகளும், நாடகங்களும், காவியங்களும், பயிற்றுவிக்கப்பட்டன. மகாபாரதம், இராமா யணம், புராணங்கள், வரலாறு முதலியவற்றைக் கற்றார். எல்லா நாட்டு மொழிகளையும், எல்லா வகை எழுத்துகளையும் பல்வேறு கலைகளையும் கற்றார். அவ்வாறு பாணர் அளிக்கும் பட்டியல் நீளமாய் இருப்பதோடு, மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என்றும் கருதவேண்டியுள்ளது. வாழ்க்கை முழுவதும் முயன்றால் கூட ஒருவர் இத்தனை வகை அறிவு பெற்றுத் திகழ முடியாது.

ஹர்ஷர் பெரும் பொறுப்பை ஏற்கவேண்டியிருந்ததால் இவற்றில் சிலவற்றையேனும் கற்றிருக்க வேண்டும். பிரபாகர வர்த்தனர் கடமையுணர்ந்த தந்தை. எனவே, தம் மகள் இராஜ்ய ஸ்ரீக்கும் கல்வி அளித்தார். ஹர்ஷர் உருவாக்கிய நூல்களே அவருடைய கல்வித் திறமைக்குச் சான்றுகள் ஆகும். பிரபாகர வர்த்தனர் ஆட்சித்துறையில் தம் மக்களுக்குத் தக்க பயிற்சியினை அளித்திருந்தார். அவர்கள் தம் தந்தையின் மறைவிற்குப் பின் ஏற்பட்ட நிலைமையைச் சமாளித்ததிலிருந்தே அவர்கள் பெற்ற ஆட்சித் துறைப் பயிற்சிகளை அறியலாம்.

பண்டைக் காலத்தில் இளவரசரசர்கள் தம் தந்தையுடன் படைமுயற்சிகளில் ஈடுபட்டனர். அரியணை ஏறுமுன்னர் போரில் கலந்துகொண்டு வெற்றிச் சிறப்புடன் வந்த அரசர்கள் பலர்.

அத்தகைய எடுத்துக்காட்டுகளை ஏராளமாகக் காட்டலாம். ஆனால், ஹர்ஷரைப் பொறுத்தமட்டில் அத்தகைய படையெடுப்பில் கலந்துகொண்டார் என்று காட்ட நாம் ஏதும் செய்திகளைக் கொண்டிருக்கவில்லை. பிரபாகர வர்த்தனர் ஒரு நாள் இராஜ்ய வர்த்தனரை அழைத்து ஹூணர்களுக்கு எதிராகப் படை நடத்திச் செல்லப் பணித்தார் எனவும், அவர் தலைமையில் பெரும் படையொன்று அனுப்பப்பட்டது எனவும், இராஜ்ய வர்த்தனருடன் ஹர்ஷரும் சென்றார் எனவும், காட்டு விலங்குகளை வேட்டையாடினார் எனவும், விலங்குகளே அவர்தம் வேட்டையினால் காட்டில் இல்லாதுபோயின எனவும் கூறப்படும் பாணரின் குறிப்புத் தவிர ஹர்ஷரின் இளமைக் காலப் படை நடவடிக்கைகளைக் குறித்து ஏதும் அறியமுடியவில்லை. ஹர்ஷர் போருக்கான பயிற்சி பெற்றார் என்பதையும், செயல்முறைப் பயிற்சிக்காகப் போர்க்களம் சென்றார் என்பதையும் இது காட்டுகிறது.

படை முகாம்களில் பல்வேறு நாள்களை ஹர்ஷர் கழித்தார். இராஜ்ய வர்த்தனர் முனைந்து போரிட்டுக்கொண்டிருந்தபோது ஹர்ஷர் பின்பகுதிப் படையைக் காத்தார். இப் போர் கடும் போராக விளங்கிற்று. இராஜ்ய வர்த்தனர் ஹூணர்களுக்கு எதிராகப் போரிட்டு உடலில் விழுப்புண் ஏந்தினார். இத்தகைய கடுமையான போரில் இராஜ்ய வர்த்தனர் கலந்துகொண்டிருந்தபோது, ஹர்ஷ வர்த்தனர் படையின் பின்பகுதியைத் தக்க முறையில் காத்துநின்றார்.

இராஜ்ய வர்த்தனரைவிட ஹர்ஷர்மீது பிரபாகர வர்த்தனர் சற்று மிகுந்த அன்பு செலுத்தினார் என்று ஹர்ஷ சரிதத்தின் வாயிலாக அறியலாம். தனி ஆள் ஒருவர் குரங்கசா என்பவர், பிரபாகர வர்த்தனரின் உடல் நலிவுச் செய்தியை முதலில் ஹர்ஷரிடம் கூறினார் எனப் பாணர் குறிப்பிடுகிறார். இராஜ்ய வர்த்தனரிடம் இச் செய்தியைச் சகோதரர் ஹர்ஷர் குறிப்பிடாததால் இச் செய்தி ஹர்ஷருக்கு மட்டும் அளிக்கப்பட்ட ஒன்று என்று யூகிக்கப்படுகிறது. அதைப் போலவே நோயுற்ற தந்தையிடம் சேர்ந்தபோது மிகுந்த அன்புடன் தந்தை வரவேற்றதால் ஹர்ஷர் தந்தையின் மிகுந்த அன்பைப் பெற்றவராக விளங்கினார் என்றும் முடிவுகட்டவேண்டியுள்ளது.

தந்தையை மகன் சந்தித்த காட்சியைப் பாணர் அழகுற அமைத்துள்ளார். 'எலும்புகள் எலும்புகளுடன் இணைந்தன; கன்னத்தோடு கன்னம் சேர்ந்தது; கண்களில் நீர் சொரியத் தம் காய்ச்சலையும் மறந்து நீண்ட நேரம் தம் மகனை அணைத்துக்

கொண்டார். ஒடுங்குகின்ற கைகளால் மகனை மீண்டும் மீண்டும் வருடினார்.' இந்தக் குறிப்புகளெல்லாம் தந்தை மகனிடையே காணப்பட்ட ஆழ்ந்த அன்புணர்வை வெளிப்படுத்துவன.

பிரபாகர வர்த்தனர் ஹர்ஷரின் பிறப்பினால் அவர் எண்ணியதை அடைந்துவிட்டதாகவும், வாழ விரும்பும் ஆசை அற்றுவிட்டதாகவும் குறிப்பிட்டார். மருத்துவர்களின் வற்புறுத்தலினாலேயே மருந்து உண்பதாகவும் கூறினார். பிரபாகர வர்த்தனரின் நோயினால் துயருற்ற அரசி யசோமதி நெருப்பில் வீழ்ந்து தன் கணவருக்கு முன்னரே உயிர் துறக்க விரும்பினார். அவ்வாறு விரும்பியதோடல்லாமல் சரஸ்வதி நதிக் கரையில் நெருப்பில் வீழ்ந்து மறைந்தார். அன்னையின் மறைவும் ஹர்ஷரின் துயர வெள்ளத்தைப் பெருகச் செய்தன. எனவே, விம்மி அழுதார் அவர். விம்மி அழும் மகனைத் தந்தை ஆறுதல் கூறித் தேற்றினார். அவ்வாறு மகனைத் தேற்றும்போது அவர் ஆற்றிய அறிவுரை நிச்சயமாக இராஜ்ய வர்த்தனரைவிட ஹர்ஷர்பால் மிகுந்த அன்பு கொண்டிருந்தார் என்று காட்டுகிறது.

'நீ இவ்வாறு இருக்கக்கூடாது. உன்னையொத்த மனிதர்கள் உறுதியற்ற இதயம் கொண்டிருக்கக் கூடாது' என்று தொடங்கி 'இந்தப் பூமி உன்னுடையது என்று கூறுவது ஏற்கெனவே கூறியதைத் திரும்பக் கூறுவது போல ஆகும்' எனவும், 'புகழ் பெறவேண்டிய உன்னை என் செல்வங்களை ஏற்றுக்கொள் என்பது உனக்கு அளிக்கின்ற சிறிய சேவை' எனவும், 'மூன்று உலகங்களை ஆளக் கற்றவனை அரசச் சுமையைத் தாங்கிக்கொள் என்று கூறுவது குறைவானது' எனவும் ஹர்ஷரைப் பலவகைகளிலும் புகழ்ந்துரைக்கிறார்.[1]

நாம் இதுவரை பார்த்த கருத்துகளை வரிசையாகத் தொகுத்துக் காண்போம்.

பிரபாகர வர்த்தனரின் உடல் நலிவுச் செய்தி ஹர்ஷருக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டது. இராஜ்ய வர்த்தனரைப் பற்றிய குறிப்பு ஏதும் அச் செய்தியில் இல்லை.

ஹர்ஷர் திரும்பி வந்தபோது இன்றியமையாத, ஹூணர்களுக்கு எதிரான படையெடுப்பினை நடத்திச் சென்ற இராஜ்ய வர்த்தனரைக் குறித்து ஏதும் விசாரித்ததாகக் குறிப்பில்லை.

[1] பார்க்க 'ஹர்ஷ சரிதம்', கவெல் தாமஸ், பக்கம் 155—166

பேரரசரை ஒத்த பிரபாகர வர்த்தனர் நாட்டின் அரசை நடத்திச் செல்லுமாறு தெளிவாகக் கூறுகிறார்.

பிரபாகர வர்த்தனர் ஹர்ஷர்மீது அதிக அன்பு செலுத்தினர் என்ற கருத்துக்கு ஆதாரமாகக் கொள்ளக் கூடிய செய்தி ஒன்றை டாக்டர் ஸ்மித் அளிக்கிறார். அரண்மனையில் ஒரு சாரார் இளவரசர் அரியணையேறுவதையே விரும்பினர் என்ற செய்தியே அது. ஆனால், இராஜ்ய வர்த்தனர் விரைந்து திரும்பியதால் அத்தகைய முயற்சி எடுபடவில்லை என்று ஸ்மித் கூறுவது சரியெனப் படவில்லை. ஏனெனில், ஹர்ஷர் தலைநகர் வந்ததும், தந்தையின் உடல்நலம் குன்றிய செய்தியறிந்ததும் 'பணியாள் களையும், ஒட்டக ஓட்டிகளையும் ஒருவர் பின் ஒருவராகத் தம் சகோதரரை அழைத்துவரப் பணித்தார்' என்று பாணர் கூறுவதே.

இராஜ்ய வர்த்தனரோ அரண்மனைக்குத் தொலைவில் போரிட்டுக்கொண்டிருந்தார். பிரபாகர வர்த்தனர் தமது முடிவு உறுதி என்று எண்ணிவிட்டார். எனவே, இந் நிலையில் இராஜ்ய வர்த்தனர் வரத் தாமதமாகிப் பிரபாகர வர்த்தனரும் இறந்துவிட்டால் குழப்பமான நிலை உருவாகிவிடக்கூடும் என்று எண்ணியே பிரபாகர வர்த்தனர் அத்தகைய முடிவிற்கு வந்தார் என்றும் கூறிவிடுதற்கில்லை. ஏனென்றால், இராஜ்யவர்த் தனரைக் குறித்த நேரடியான அல்லது மறைமுகமான குறிப்பு ஏதும் இல்லை. அந்தச் சூழ்நிலைகள் இராஜ்ய வர்த்தனரை விட ஹர்ஷரையே பிரபாகர வர்த்தனர் ஆதரித்தார் என்று முடிவுகட்டச் செய்கின்றன.

அரசவையினர் அரசருடைய மன விருப்பத்தை அறிந்து ஹர்ஷருக்கு மட்டும் உடல் நலமற்ற செய்தியை அறிவித்தனர் என்றும், எதிர்பாராத போட்டி ஏதும் ஏற்படாமல் தடுத்தற் பொருட்டே இராஜ்ய வர்த்தனருக்கு இச் செய்தியை அறிவிக்க வில்லை என்றும் கருதப்படுகிறது. இதில் ஹர்ஷரின் பங்கு ஏதும் உண்டா என்று ஆராய்ந்தால் அவர் ஒன்றுமறியாதவர் என முடிவுகட்டவேண்டியுள்ளது. தம் சகோதரருக்கு அரியணையை அளிக்க அவர் மேற்கொண்ட முயற்சியே இதற்கு எடுத்துக் காட்டு. அவர் வந்து சேர்ந்தவுடன் செய்தி அறிவித்து இராஜ்ய வர்த்தனர் விரைந்து வர வேண்டியவற்றைச் செய்தார் என்று கண்டோம்.

'நான், எனது மகிழ்ச்சி, ஆட்சி, வாரிசுரிமை, வாழ்வு, மக்கள் அனைத்தும் உனக்கு உரியன. நான்கு கடலுக்கும் நீயே அரசன். நாட்டைக் காக்கும் பொறுப்பு உன்னுடையது' எனவும், 'அரச

சுமையை ஏற்று மக்களைக் காப்பாற்று' எனவும் பிரபாகர வர்த்தனர் ஹர்ஷரைக் கேட்டுக்கொண்டார் என்று கண்டோம். ஹர்ஷர், 'கடவுளே, என் சகோதரர் தந்தை இறந்த செய்தியைக் கேட்டவுடன் காவி உடை அணியாதிருக்கவேண்டுமே. உலகை வெறுத்துத் துறவு மேற்கொள்ளாதிருக்கவேண்டுமே' என எண்ணினார் எனப் பாணர் கூறுவதைக் கொண்டு, ஸ்மித் 'அரசப் பிரதிநிதிகளின் நம்பிக்கையையும், ஒப்புதலையும் பெற்றுவிட்ட காரணத்தால் தாமே அரசு உரிமையை ஏற்கவெண்டும் என்ற எண்ணம் ஹர்ஷருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும், இராஜ்ய வர்த்தனர் அரசு உரிமையை ஏற்றார் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன' என்றும் கூறும் கூற்று பொறுத்தமாகப் படவில்லை. இராஜ்ய வர்த்தனர் தலைநகர் வந்தவுடன் அவரை ஹர்ஷர் வரவேற்றதும், இராஜ்ய வர்த்தனரின் பதில் நடவடிக்கைகளும் இதற்கு எடுத்துக்காட்டு. இதனை அடுத்த பிரிவில் காண்போம்.

## ஹர்ஷர் அரியணையேறுதல்

பிரபாகர வர்த்தனர் என்ற சிங்கத்தின் பலத்தைச் சோதிக்க ஹூணர்கள் படையெடுத்து வந்தனர். எனவே, இராஜ்ய வர்த்தனரையும் ஹர்ஷரையும் ஹூணர்களை அடக்க அரசர் அனுப்பிவைத்தார். அரசர் மேற்கொண்ட முயற்சி பெரும் வெற்றியாய் அமைந்தது. வெற்றிக்கொடி ஏந்தி வீரனாக வந்த மகன் இராஜ்ய வர்த்தனரை வரவேற்று வாழ்த்தி ஆசி வழங்கத் தந்தை உயிருடன் இல்லை. அண்ணனின் வரவிற்காக ஹர்ஷர் முன்னரே வந்திருந்ததால் காத்திருந்தார். காலம்தான் எந்தத் துயர வெள்ளத்திற்கும் சரியானதோர் அணை. அரசரின் இறப்புத் துயரத்தால் எழுந்த ஓலம் நாளடைவில் மெல்ல அடங்கி ஒடுங்கியது.

இராஜ்ய வர்த்தனர் தலைநகரை வந்தடைந்தார். ஹர்ஷர் தம் உடன்பிறப்பை மிகுந்த பாசத்தோடும் பரிவோடும் வரவேற்றார். அதைப்போல மூத்தவரான இராஜ்ய வர்த்தனரும் இளவலை அன்புடன் போற்றினார். இராஜ்ய வர்த்தனர் அனைத்து அரசர்கள் முன்னிலையில் தாம் அரசப் பொறுப்பை ஏற்க அஞ்சுவதாகவும், அந் நினைவு கலக்கத்தைத் தருவதாகவும் தெரிவித்ததோடு மன அமைதி பெறத் தனிமையை நாடும் விருப்பத்தையும் தெரிவித்தார். அதோடு தான் இனிமேல் வாள் ஏந்திப் போர் புரியப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

'ஹர்ஷர் இதற்கு மறுப்புத் தெரிவிக்கவே இல்லை; வழக்க மாக அரசு உரிமையை ஏற்கும் முறைக்கு மாறுபட்டது இது என்பதை உணர்ந்து கவலை தெரிவிக்கவும் இல்லை' என்று தவருகச் சில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சகோதரர் உரைத்த சொல் ஹர்ஷருக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது. ஹர்ஷரும் தம் சகோதரருடன் துறவறம் மேற்கொள்ள முடிவு செய்தார்.[1] இராஜ்ய வர்த்தனர் தாம் சொன்ன சொல் தவருமல் நடந்துகொண்டார் என்றே கூறவேண்டும். உடனே மரவுரி தரித்தார். இச் செய்தி தலைநகரத்தையே கலக்கத்திற் குள்ளாக்கியது. அரண்மனைப் பெண்டிர், பிராமணர்கள், மக்கள் குழுவினர், அவையோர், உறவினர், திறையரசர்கள் இச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்து பேச்சற்று அனைவரும் ஊமையாய் நின்றனர்.

இத்தகைய குழப்பமான வேளையில் உடன் பிறப்புகள் இருவரும் துறவு மேற்கொண்டு தபோவனம் செல்லத் திட்ட மிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது கண்கள் துயர வெள்ளத் தினல் கண்ணீரைச் சொரிய, இராஜ்ய ஸ்ரீயின் உதவியாள் சம்வாதகா என்பவர் நுழைந்தார். அவர் இராஜ்ய ஸ்ரீயின் கணவர் கிரகவர்மன் மாளவத்தின் தீய அரசரால் கொல்லப் பட்டதையும், இராஜ்ய ஸ்ரீ இரும்புச் சங்கிலிகள் காலில் பூட்டப் பட்டுக் கைதியாகக் கன்யா குப்ஜத்தில் சிறைக் கம்பிகளின் பின்னே தள்ளப்பட்ட செய்தியையும் கூறினர். அதுமட்டு மல்லாது மாளவ அரசன் தானேசுவரத்தின்மீது படையெடுத்து வரவிருப்பதாகச் செய்தி கேள்விப்பட்டதாகவும் கூறினர்.

இந்தத் துயரச் செய்தி அப்போது அங்கு நிலவிய சூழ்நிலையில் மாறுதலைத் தோற்றுவித்தது. இந்த எதிர்பாராததும் நம்பமுடி யாததுமான திடீர்த் துயரம், தந்தையின் மறைவுத் துயரத்தில் ஆட்சியைத் துறக்கவிருந்த துயரத்தை அடித்துச் சென்று விட்டது. கொலுசு அணிந்து அழகு நடை நடந்த தங்கையின் கால்களில் விலங்குகள் என்றால், கைவளை குலுங்க வளைந்தசைந்த தங்கையின் கைகள் சிறைக் கம்பிகளின் பின்னே என்றால் எந்த அண்ணன் தான் துயர் வேதனைப் படாமல் துறவறம் மேற்கொள்ள முடியும். கோபக் கனல் கொந்தளித்தது. உடலெல்லாம் செங்குருதி புதுவேகத்துடன் பாய இராஜ்ய வர்த்தனர் அனைவர் முன்னிலையிலேயும் கொதித் தெழுந்தார்.

1. Harsh chanta, English Translation, by E. B. Cowell la F. W. Thomas, London 1897, pp 173—ff

'கோபக் கனலில் புருவம் வளைந்து, கன்னம் சிவந்து, வெறி கொண்டு படையெடுக்க முனைந்தார்' என்கிறார் பாணர். அவர் ஹர்ஷரிடம் சிற்றரசர்களும் யானைப் படையும் உன்னுடன் இருக்கட்டும்; 10,000 குதிரைவீரர் படையுடன் பண்டி என்னைத் தொடரட்டும், போர் முரசு (பிரயாணப் படாஹம்) தொடர்ந்து ஒலிக்கட்டும்' என்று கூறினார். ஹர்ஷர், மாளவத்தின் தீய அரசனை ஒழிக்கத் தாமும் உடன் வர விரும்பினார். ஹர்ஷர், "நான் உன்னுடன் வந்து உனக்கு உதவுவதால் என்ன தீமை ஏற்படும். படையின் பின்பகுதியைக் காக்குமாறு பணித்தா யேயானால், உன் படையின் பின்பகுதி ஆற்றல் வாய்ந்ததாக அமையும் அல்லவா? நான் படைபெடுத்து வந்து விட்டால் நாட்டின் திறை அரசர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று கூறுவாயேயானால், அவர்கள் உன் ஆற்ற லுக்குப் பணிந்தவர்கள் அல்லவா? பெரும் சிறப்புடையவர்கள் தம்முடன் துணைவர்களை அழைத்துச் செல்லக்கூடாது என்று கூறுவாயேயானால், உன்னிலிருந்து வேறுபட்டவனாக எண்ணிக் கொள் ... இருவர் செல்வது துரதிருஷ்டமானது என்று எண்ணு வாயேயாகில் என் பொறுப்பில் இதனை விட்டுவிடு எனவே...என் னையும் அழைத்துச் செல்'' என்று இறைஞ்சினார்.

இராஜ்ய வர்த்தனர் ஹர்ஷரைத் தேற்றிப் பகைவர்மீதுள்ள கோபத்தைப் பகிர்ந்து கொள்ளாததற்கு மன்னிக்குமாறு வேண்டினார். 'மிகச் சாதாரணப் பகைவனுக்கு அத்தகைய முயற்சி தேவையில்லை. அது நம் ஆற்றலுக்குக் குறைவை ஏற்படுத்தும். மானை வீழ்த்தச் சிங்கங்களா? அடக்க முடியாத கோபத்தினால் உன்னுடன் இதனைப் பகிர்ந்து கொள்ளவில்லை' என்று கூறினார். ஹர்ஷ வர்த்தனர் தம் பதிவுகளில் இராஜ்ய வர்த்தனரைப் 'பரம பட்டாரக மகாராஜாதிராஜா' என்று முழு அரசுரிமைப் பட்டத்தினால் குறிப்பிடுவதைக் கொண்டு இராஜ்ய வர்த்தனர் அரியணையேறினார் என அறிகிறோம். ஆனால், பாணர் இராஜ்ய வர்த்தனர் அரியணையை ஏற்றுக்கொண்டதைக் குறித்து ஏதும் குறிப்பிடவில்லை.

**இராஜ்ய வர்த்தனரின் மறைவு**

இராஜ்ய வர்த்தனரின் படையெடுப்பு வெற்றியைத்தேடித் தந்தபோதிலும், அதைத் தொடர்ந்து பெரும் இழப்பு ஒன்று இருந்தது. 'அறுவைச் சிகிச்சை வெற்றி, ஆனால் நோயாளி உயிர் துறந்தார்' என்பது போன்றதே அது. சி. வி. வைத்யா, தேவ குப்தர் போர்க்களத்தில் இராஜ்ய வர்த்தனரால் கொல்லப்பட்

டிருக்கவேண்டும் என்று குறிப்பிடும் குறிப்பிற்கு மதுபன், பன்ஸ் கேராப் பதிவுகளும், ஹர்ஷ சரிதமும் சான்று பகர்கின்றன. இப் படையெடுப்பிற்குப் பின் கௌடாவின் தலைவருக்கு எதிரான ஹர்ஷரின் வீர உரைகளை மட்டுமே குறிப்பிடுவதாலும், மாளவ அரசன் தேவ குப்தரைக் குறித்து ஏதும் குறிப்பிடாததாலும், இராஜ்ய வர்த்தனரால் போர்க்களத்தில் தேவ குப்தர் கொல்லப் பட்டார் என்ற முடிவு உறுதிப்படுகிறது. இராஜ்ய வர்த்தனர் இப்போரில் பெற்றவெற்றி கடுமையான போர் முயற்சிக்குப்பின் பெற்ற வெற்றி. இராஜ்ய வர்த்தனருடன் போர்க்களம் புகுந்த பண்டி எதிரிகளின் அம்புமுனைகளால் தாக்கப்பட்டு விழுப் புண்களுடன் ஹர்ஷரைச் சந்தித்தார்.

தேவ குப்தரையும் மற்றவர்களையும் அடங்காத குதிரை களுக்கும், இராஜ்ய வர்த்தனரை சாட்டையைச் சுண்டி அவற்றைச் அடங்க வைப்பவருக்கும் ஒப்பிட்டு ஹர்ஷரின் பதிவு கள் குறிப்பிடுகின்றன. 'கொடுத்த வாக்கை நிறைவேற்றும் முயற்சியில் எதிரியின் மாளிகையில் தம் உயிரைக் கொடுத்தார் என்றும் ஹர்ஷரின் பதிவுகள் குறிப்பிடுகின்றன. குதிரைப் படையின் தலைமை அலுவலரான குண்டலா என்பவர் ஹர்ஷர் அவையில் இருந்தபோது, இராஜ்ய வர்த்தனர் தாம் மேற் கொண்ட படையெடுப்பில் வென்று மாளவப் படைகளைச் சிதறி ஓடச் செய்தபோதிலும், கௌடா அரசரின் பொய்யான நடத்தை களை நம்பி,அவர் வலையில் வீழ்ந்து, ஆயுதம் ஏதுமின்றித் தனியே அவரைச் சந்திக்க முற்பட்டார் எனக் கூறியதாகப் பாணரின் ஹர்ஷ சரிதத்தில் குறிப்பிடப்படுகிறது. சசாங்கனும் அவரு டைய அமைச்சர்களும் இராஜ்ய வர்த்தனரைப் பேசுவதற்கு அழைத்துச் சென்றனர் என்று யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். எனவே, இராஜ்ய வர்த்தனர் போர்க்களத்தில் வீழ்த்தப்பட வில்லை;வெற்றியே பெற்றிருக்கிறார்.

தந்தையின் மறைவுத் துயரினால் வருந்தி வேதனைப்பட்டுக் கொண்டிருந்த ஹர்ஷ வர்த்தனருக்கு அடுக்கடுக்காக அதிர்ச்சிகள் வந்து சேர்ந்துகொண்டிருந்தன. ஒன்றன் பின் ஒன்றாக அவை அவரை வாட்டின. தந்தை மறைந்தார் என்றிருந்த வேளையில் தாயும் தற்கொலை செய்து கொண்டு மறைந்தார். அதுமட்டு மல் லாது தங்கையின் கணவர் கிரக வர்மன் கொலை செய்யப்பட்டார். அதையடுத்துச் சகோதரியைச் சிறைக்கூடத்தில் கைதியாக்கினர். அம்மட்டோ! அருமைச் சகோதரனும் மறைந்தார் என்ற செய்தி விதி தன் விளையாட்டைத் தாராளமாகவே விளையாடிவிட்டது என்று காட்டுகிறது.

இச் செய்தியைக் கேட்டவுடன் ஹர்ஷரின் கண்கள் சிவந்தன. இந்தச் சாவிற்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று வேகம் ஹர்ஷருக்குப் பிறந்தது. இந்த இழி செயலைக் கௌட அரசரன்றி வேறு யாரும் செய்திருக்க முடியாது. இத் தீயவனின் பெயரைச் சொன்னதால் என் நா பாவச் சேற்றில் அழுந்திவிட்டது. விலை மதிப்பில்லா மாணிக்கத்தின் மதிப்பை அழித்த இத் தீயவனை யார்தான் அழிக்காது விட்டுவிடுவர் என்று இடி முழக்கம் போல் முழக்கமிட்டார்.

நாம் மேற்கொண்டு தொடருமுன், முழு நிலைமையையும் அலசி ஆராய வேண்டும். இராஜ்ய ஸ்ரீயின் பணியாள் சம்வாதகா, கிரக வர்மன் மாளவ அரசனால் கொல்லப்பட்ட செய்தியினைக் கூற, அதற்குப் பழி வாங்கி மாளவ அரசினை அழிக்க இராஜ்ய வர்த்தனர் தானேஸ்வரத்திலிருந்து புறப் பட்டார். இதனால், மாளவ அரசன் கிரக வர்மனை வஞ்சகமாகக் கொலை செய்தது தெளிவாகிறது. மாளவ அரசன் தேவ குப்தாவே என மதுபன், பன்ஸ்கேராப் பதிவுகளிலிருந்து அறிகிறோம். ஆனால், இந்தப் பட்டயங்கள் எந்த எதிரியின் மாளிகையில் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் முயற்சியில் தம் உயிரைக் கொடுத்தார் என்று குறிப்பிடவில்லை.

ஹர்ஷ சரிதம் கௌடாவின் தலைவர்தான் அந்த எதிரி என்று குறிப்பிடுகிறது. மாளவ அரசன் கௌடாவின் நட்பு அரசன். இராஜ்ய வர்மன் தன் மைத்துனன் கொலைக்குத் தேவ குப்தரை யும், மற்றவர்களையும் கொன்று பழிதீர்த்தார். இதன் பின் கௌட அரசன் வஞ்சகமாக இராஜ்ய வர்த்தனரைக் கொலை செய்தான். ஹர்ஷர் படை நடத்திச் செல்லும் வழியில் இராஜ்ய வர்த்த னரின் படையினால் வெற்றி கொள்ளப்பட்ட மாளவ அரசனின் பெரும் படையுடன் இருந்த பண்டியைச் சந்தித்தார். மாளவ அரசனிடமிருந்து கைப்பற்றப்பட்ட 'ஆயிரக் கணக்கான யானை களையும்' அலங்கரிக்கப்பட்ட குதிரைகளையும், அணிகலன்களை யும், அழகு மிகு முத்து மாலைகளையும், தங்கப் பூண் கொண்ட வெண்கொற்றக் குடையையும், அழகு மங்கையரையும், சிம்மாசனத்தையும், பல்லக்குகளையும், செல்வப் பேழைகளை யும் பார்வையிட்டார்.

நம்முன் உள்ள சிக்கல்கள் இரண்டு. ஒன்று: மாளவத்தின் தேவ குப்தர் யார் என்பது. இரண்டு: கௌடாவின் அரசன் யார் என்பது. மாளவத்தின் இருப்பிடத்தையும், அதே சமயத்தில் மாளவத்தின் பூவியல் அமைப்பையும் அறிய வேண்டும்.

முதல் சிக்கல்

மகதத்திலிருந்து மாளவத்திற்கு மகாசேன குப்தர் தன் இருப்பிடத்தை மாற்றிக்கொண்டார். அவருடைய தோல்விக்குப் பின்னர் குமார குப்தர், மாதவ குப்தர் ஆகிய இரு மைந்தர்களும் பிரபாகர வர்த்தனரிடம் அடைக்கலம் புகுந்தனர். இக்காலத்திய எல்லா வரலாற்று ஆதாரங்களும் தேவ குப்தரின் குடும்பத்தைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை என்பதோடு தேவ குப்தரே தம்மைப் பற்றி எவ்விதப் பதிவினையும் விட்டுச் செல்லவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. மதுபன் பதிவு பான்ஸ்கேராப் பதிவு ஆகியவற்றில் குறிப்பிடப்படும் தேவ குப்தர் என்ற அரசர் பாணர் குறிப்பிடுகின்ற மாளவ அரசரே ஆவார். அவர் பிற்காலக் குப்தர்களின் குடும்பத்தவர் என்று தோன்றுகிறது. தேவ குப்தரை மகாசேன குப்தரின் மகன் என்றும் கூறுவர். ஆனால், அவ்வாறு குறிப்பிட்ட டாக்டர் ஹேரயர்ன்லேயின் கருத்துக்கு உறுதியான ஆதாரமின்மையால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மகாசேன குப்தரின் மக்களான குமார குப்தர். மாதவ குப்தர் ஆகிய இருவரும் தானேஸ்வரத்தை அடைந்தார்கள் என்பதைத் தவிர வேறு செய்திகள் இல்லை. கால சூரி அரசன் சங்காகான என்பவரால் பதவியில் மீண்டும் அமர்த்தப்பட்டவர் தேவ குப்தர் என்றும், பதவியிலிருந்து விரட்டப்பட்டவர் மகாசேன குப்தர் என்றும் கருதப்படுகிறது. இவ்வாறு நயவஞ்சகமாக நடந்துகொண்டதால் பிற்காலக் குப்தர்களின் குடும்பப் பதிவுகளில் தேவ குப்தரின் பெயர் இடம் பெறாமல் போயிருக்கலாம். மாதவ குப்தர் குமார குப்தரின் சகோதரர் என்று ஹேரயர்ன்லே கருதுவது பொருத்தமாகப் படுகிறது எனச் சி வி. வைத்யா கருதுகிறார். மேலும், அவர் மகாசேன குப்தரின் மற்றொரு மனைவியின் மக்களே குமார குப்தரும், மாதவ குப்தரும் ஆவர் என்று கருத்துத் தெரிவிக்கிறார். மாளவ அரசன் சிலாதித்தியன் என்றும், பிரபாகர வர்த்தனர், கிரக வர்மன், ராஜ்ய வர்த்தனர் ஆகியோர் சிலாதித்தியனுக்கு எதிராகப் போரிட்டனர் என்றும் தெரிகிறது.

கிழக்கு மாளவத்தின் தேவ குப்தரும், சசாங்கனும் அவருடைய நண்பர்களாவர். மேலே கூறப்பட்ட கருத்துக் குறித்து நாம் ஏதும் கூறுவதற்கில்லை. லெவி என்பவர் வலபியின் இரண்டாம் தாரசேனரின் மகனே சிலாதித்தியர் என்று கண்டறிந்து கூறியதை டாக்டர் ஸ்மித்தும் மற்றைய அறிஞர்களும் ஏற்றுக்கொண்டனர். ஹர்ஷரின் சொந்தப் பதிவுகளின் படி இராஜ்ய வர்த்தனரும், ஹர்ஷரும் தேவ குப்தரின் காலத்தவர்

ஆவர். எனவே, ஹோயர்ன்லேயின் கருத்துகளைக் கால வரிசைப்படி மறுத்து உரைக்கலாம்.

பஞ்சாப்பில் தானேஸ்வரத்திற்கு அருகில் மற்றொரு மாளவம் இருந்தது எனப் பியூஹிலர் குறிப்பிடுகிறார். மதுபென், பன்ஸ் கேரா்ப் பதிவுகளிலும், ஹர்ஷ சரிதத்திலும் குறிப்பிடப்படும் மாளவம் மத்திய இந்தியாவின் மாளவமே ஆகும். கௌட அரசனும், மாளவ அரசனும் நட்புரிமை கொண்டவர்கள் என்று கண்டோம். மாளவத்திற்கும் பஞ்சாபிற்கும் மிகுந்த தூரம் உள்ளது. எனவே, மத்திய இந்தியாவின் மாளவத்திற்கும், கௌடாவின் அரசனுக்கும் இடையே உடன்பாடு ஏற்படுதல் இயலக்கூடியதே.

இந்த மாளவப் பிரச்சினை வரலாற்றாசிரியர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. மத்திய இந்தியாவிலும் பஞ்சாப்பிலும் மட்டுமன்றி வேறுபல இடங்களிலும் மாளவம் உள்ளது. இராஜ்ய வர்த்தனர்க்கும், தேவ குப்தர்க்கும் இடையே போர் நடந்த இடம் மாளவம் அன்று. அது கன்னோசி அல்லது அதற்கு அண்மையில் உள்ள இடமாகும். பிரபாகர வர்த்தனரின் தாக்குதலுக்கு உள்ளான மாளவம் மத்திய இந்தியாவிலுள்ள பகுதியே. ஆனால், மத்திய இந்தியாவிலுள்ள மாளவத்தை ராஜ்ய வர்த்தனர் அடையவில்லை. அது பஞ்சாப்பிலுள்ள மாளவமும் அன்று. பாணரின் ஹர்ஷ சரிதையில் ராஜ்ய வர்த்தனரின் மறைவுச் செய்தியினைக் கொண்டுவந்த குண்டலாவின் முகத்தில் நீண்ட பயணத்தினால் முடி வளர்ந்திருந்தது என்ற குறிப்பு தானேஸ்வரத்தை அடைய குண்டலாவிற்கு நீண்ட நாள்கள் ஆயின என்பதையும், அது பஞ்சாபிலுள்ள மாளவம் அன்று என்பதையும் காட்டுகிறது. எனவே, தேவ குப்தர் மாளவத்தின் ஆட்சியாளர் என்றும், இந்த மாளவம் மத்திய இந்தியாவிலிருந்த மாளவமே என்றும் கருத வேண்டியுள்ளது.

### இரண்டாவது சிக்கல்

இனி, இரண்டாவது சிக்கலை ஆராய்வோம். தேவ குப்தரின் நண்பர் யார்? மதுபன், பன்ஸ்கேராப் பதிவுகள் அவரைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாது தேவ குப்தரையும், மற்றவர்களையுமே குறிப்பிடுகின்றன. ஹர்ஷ சரிதம் 'மற்றவர்கள்' என்று செப்பேடுகளில் குறிப்பிட்டிருப்பதைக் கௌட அரசன் (கௌடாதிபா) என்று அறிவிக்கிறது. பியூஹிலர் ஹர்ஷ

சரிதக் கதையேடு ஒன்றின்படி கௌடாவின் அரசன் நரேந்திர குப்தர் எனவும், இராஜ்ய வர்த்தனரைக் கொன்ற கௌடா அரசன் நரேந்திர குப்தனே எனவும், சசாங்கன் அல்லன் எனவும் வாதிட்டார். சீனப் பயணி யுவாங் சுவாங்கின் சசாங்கனைப் பற்றிய தெளிவான குறிப்பிலிருந்து இராஜ்ய வர்த்தனரைக் கொலை செய்தவன் கர்ண சுவர்ணவின் அரசனான சசாங்கனே ஆவான் என்று தெரிகிறது. சசாங்கன் இராஜ்ய வர்த்தனருக்குத் தம் மகளை மணம் முடித்துத் தருவதாக ஒற்றர் மூலம் செய்தி அனுப்பித் தம் இருப்பிடத்திற்கு வரச்செய்து, அரசர் தம் அவைப் பிரதிநிதிகளுடன் விருந்தில் அவர் கலந்துகொண்டிருந்தபோது, மாறுவேடத்தில் அவரைக் கொலைசெய்ததாகக் கூறப்படுகிறது. சசாங்கனின் இச் செயல் இழிவானது என்பதில் ஐயமில்லை. ஆனாலும், சசாங்கனை இகழ்வது சரியன்று என்ற கருத்தும் ஒருபால் உள்ளது. ஏனென்றால் அன்றைய நாளில் எதிரியைக் கொல்வதற்குச் சதிசெய்தல் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகவே காணப்படுவதோடு நினைத்ததை முடிக்கும் சசாங்கனின் ஆற்றலைக் காட்டுவதாகவும் அது அமைந்துள்ளது. இராஜ்ய வர்த்தனரை வெல்வது சசாங்கனால் முடியாத ஒன்று. எனவே, காலத்தின் தேவையை உணர்ந்து சதி நடவடிக்கையைச் சசாங்கன் மேற்கொண்டது சரி என்றும் வாதிடப்படுகிறது.

ஆனால், இராஜ்ய வர்த்தனரின் மறைவிற்குப் பின் ஹர்ஷ வர்த்தனர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் சகோதரரின் இறப்பிற்குக் காரணமான பகைவர்களைப் பழிவாங்கப் படையெடுப்பை மேற்கொண்டார். நான்கு திசைகளிலும் வெற்றி பெற வேண்டித் திக்விஜயம் என அதை அறிவித்தார். இவ்வாறு இப் படையெடுப்பு திக்விஜயம் என்று அழைக்கப்பட்டது. ஏன்? சாதாரணப் படையெடுப்பும் சற்று மிகைப்படுத்தப்பட்டுத் திக்விஜயம் என அழைக்கப்படும் நிலை ஹர்ஷர் காலத்தில் தோன்றிவிட்டது. ஹர்ஷரின் வட இந்தியப் படையெடுப்பைப் பாணர் திக்விஜயம் என்று குறிப்பிடுகிறார். ஹர்ஷருடைய இப் படையெடுப்பிற்குச் சிம்மநாபர் என்ற தலை சிறந்த வயதில் முதிர்ந்த தானேஸ்வரத்தின் அரசியல் வல்லுநர் உதவிவந்தார். சிம்மநாபர் 'கௌடா அரசரை வீழ்த்துவதில் மட்டுமன்றி, வேறு எவரும் பின்பற்ற இயலாத அளவிற்குத் திட்டங்கள் தீட்ட ஊக்கமளித்தலும் செய்தார். வேற்று நாட்டு அரசர்கள் ஹர்ஷருக்குப் பணியும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது. யானைப் படையின் தளபதி ஸ்கந்த குப்தா என்பவன் படையை விரைவாகத் திரட்டும்படி ஆணையிடப்பட்டான். இராஜ்ய வர்த்தனரின் இறப்

பும், சசாங்கனின் கௌரவம் முற்றிலும் அழிந்திருந்த நிலையும் ஹர்ஷருக்கு உதவின. வான நூல் வல்லுநரின் ஏற்புடன் நாள் குறித்துத் தலைநகர் அருகிலிருந்த கோவிலிலிருந்து படை புறப்பட முடிவுசெய்யப்பட்டது.

குடைப்பரிசு :

சசாங்கனின் அண்டை நாட்டவரான காமரூப அரசர் பாஸ்கர வர்மன் தூதுவர்களை அனுப்பி ஹர்ஷருடன் இந்த வேளையில் தொடர்புகொண்டது பெரும் உதவியாக அமைந்தது. ஷர்ஷருக்கும், குமாரர் என்று அழைக்கப்பட்ட அஸ்ஸாம் (பிராக்ஜ்யோதிசா) அரசன் பாஸ்கர வர்மனுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடு குறித்தும் பாணர் விளக்குகிறார். ஹர்ஷர் முகாமில் இருந்தபோது பாஸ்கர வர்மனுடைய தூதர் ஹம்சவேகா பல்வேறு பரிசுப் பொருள் களுடன் வந்து ஹர்ஷரைச் சந்தித்தார்; அபோகா என்ற பெயருடைய மதிப்பு வாய்ந்த குடையை அப்போது அளித்தார். இக் குடையை வருணனிடமிருந்து பெற்றதாக ஒரு புராணக் கதையைப் பாணர் குறிப்பிடுகிறார்.

பாஸ்கர வர்மன் இதுவரை சிவனுடைய பாதங்களில் பணிந்து நின்றதைத் தவிர வேறு யாருக்கும் பணிந்ததில்லை என்று தூதர் ஹம்சவேகா குறிப்பிட்டார். தாம் தலைவனிடம் சென்று என்ன பதில் கூறுவது என்று தூதர் வினவியதும், ஹர்ஷர் ஓர் உயர்ந்த ஆத்மா அன்பைப் பொழிகையில், தன்னை ஒத்த ஒருவனின் மனம், கனவில் கூட அதை எங்ஙனம் வெறுக்க முடியும்? அரசனின் நடவடிக்கை உயர்ந்தது, என்று பதில் அளித்தார். ஹர்ஷர் இந்த நட்பை ஏற்றுக்கொண்டதோடு, உண்மையிலேயே இந்த உறவை உறுதிப்படுத்தவும் விழைந்தார்.

சசாங்கன் பாஸ்கர வர்மனுக்கு எவ்வளவு பெரிய அபாயமாக விளங்கியிருக்கவேண்டும் என்பதும், அதனைச் சமாளிக்க ஹர்ஷரின் நட்பு எத்துணை இன்றியமையாதது என்பதும் பாஸ்கர வர்மனின் நடவடிக்கைகளால் தெரியவருகிறது. ஹர்ஷ சரிதத்தின் ஏழாவது பகுதி வர்த்தனரின் கிழக்குப் படை யெடுப்பை விளக்குகிறது. காமரூபத்தின் தூதுவர் ஹர்ஷரைச் சந்தித்த நிகழ்ச்சியும் குறிக்கப்பட்டுள்ளது. அதற்குக் 'குடைப் பரிசு' என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. பாஸ்கர வர்மன் எப்போது ஹர்ஷருக்குப் பணிந்தார் என்பது பற்றி மாறுபட்ட

கருத்துகள் நிலவுகின்றன. சசாங்கனைத் தம் நாட்டிற்குத் திரும்பும்படி கட்டாயப்படுத்திய ஹர்ஷரின் கிழக்குப் படையெடுப்பு வெற்றிக்குப் பின் இது நடைபெற்றிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஹர்ஷர் பாஸ்கர வர்மனை இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு காமரூபத்தின் அரசராக முறைப்படி அரியணையில் அமர்த்தினர். காமரூபத்தின் அரசரைச் சிற்றரசர் நிலையை ஏற்கச் செய்தது ஹர்ஷரின் சாதனைகளில் சிறப்புடையது என்று பாணர் குறிப்பிடுகிறார். ஆர். சி. மஜூம்தாரும், ஆர். எஸ். திரிபாதியும் பாஸ்கர வர்மன் அத் தருணத்தில் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்கவில்லை எனக் கருதுகின்றனர். பாஸ்கர வர்மன் பிராமண குலத்தவர் எனவும், ஆயிரம் தலைமுறைகளுக்கு மேலாக அரசு உரிமை வகித்துவந்த பெருமையினை அவர்தம் குடும்பம் கொண்டிருந்தது எனவும் யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம்.

தாமாக வலிய விசுவாசத்துடன் இருக்க உடன்பட்டார் என்பது ஒரு சுயேச்சை அரசருக்குப் பொருத்தமானதா என ஆர். எஸ். திரிபாதி வினவுகிறார். பாணர் இவ் விடத்தில் குறிப்பிடுவது மாதவ குப்தரையே எனவும், அப்ஸாடுப் பட்டயத்தினை அதற்குச் சான்றாகக் கொள்ளலாம் எனவும், பிற்காலத்தில்தான் காமரூபத்தின் அரசர் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டார் எனவும் தம்முடைய 'History of Kanauj' என்னும் நூலில் குறிப்பிடுகிறார். ஹர்ஷர் தானேஸ்வரத்திலிருந்து கன்னோசிக்குச் செல்லும் வழியில் இராஜ்ய வர்த்தனரால் கைப்பற்றப்பட்ட மாளவ அரசரின் படைகளுடனும், செல்வங்களுடனும் திரும்பிக் கொண்டிருந்த பண்டியைச் சந்தித்தார். இராஜ்ய வர்த்தனரின் படையெடுப்பிலிருந்து தொடங்கி, அதன் பின்னர் நடந்த அனைத்தையும் ஹர்ஷருக்குப் பண்டி விளக்கிக் கூறினர்.

இராஜ்ய வர்த்தனர் சொர்க்கத்தை அடைந்தார். குப்தா என்ற பெயர் கொண்ட மனிதர் கன்யா குப்ஜத்தைக் கைப்பற்றினர். இராஜ்ய ஸ்ரீ சிறையிலிருந்து தப்பித் தோழிகளுடன் விந்தியக் காடுகளில் நுழைந்தார். ஆனல், அவரைத் தேடி அனுப்பப்பட்ட எண்ணிறந்தோர் திரும்பி வரவில்லை என்றார் பண்டி. உடனே ஹர்ஷர் படைத்தலைமைப் பொறுப்பைப் பண்டியிடம் ஒப்படைத்துக் கௌடாவிற்கு எதிராக முன்னேறும்படி ஆணையிட்டார். இராஜ்ய ஸ்ரீ குப்தர் என்பவரால் தப்புவிக்கப்பட்டிருக்கக்கூடும். இந்தக் குப்தர் என்று குறிக்கப்படுபவர் கன்னோசி அரசர் குடும்பத்து உயர் குடியினருள்

ஒருவராகவோ சசாங்கனுடன் இருந்த நல்லிதயம் கொண்ட உயர் குடியாளராகவோ இருக்கவேண்டும். இராஜ்ய வர்த்தனரைக் கொலை செய்வித்துக் கன்னோசி நகரைக் கைப்பற்றிய சசாங்கன் ஹர்ஷரின் கவனத்தை வேறு திசையில் திருப்ப வேண்டியே இராஜ்ய ஸ்ரீயை விடுதலை செய்திருக்க வேண்டும் எனத் திரிபாதி கருதுகிறார். ஹர்ஷர் தம் தங்கையைத் தேடும் முயற்சியைத் தாமே மேற்கொண்டார். அரசியல் தேவைகள், மனிதாபிமானம் மிக்க குடும்பப் பொறுப்பு முதலிய காரணங்களாலேயே இவ்வாறு செய்தார்.

இராஜ்ய ஸ்ரீயைத் தேடி விந்தியக் காடுகளை நோக்கி ஹர்ஷர் புறப்பட்டார். வழக்கமாக விந்தியக் காட்டுப் பகுதியை ஒருவர் சென்று அடைவதற்கு எடுத்துக்கொள்ளும் நாள்களைவிடக் குறைவான நாள்களில் அப்பகுதியை அடைந்தார். சரபகேது என்ற திறையரசனின் மகன் வியாக்கிர கேதுவையும், புகம்பா என்ற விந்தியமலைத் தலைவனின் மகன் நிர்க்கதா என்பவனையும் சந்தித்தார். திவாகர மித்திரர் என்ற பௌத்தத் துறவியினிடத்து ஹர்ஷரை அவர்கள் அழைத்துச் சென்றனர். இந்தத் திவாகர மித்திரர் என்பவர் கிரக வர்மனின் இளமைக் கால நண்பனான மைத்ரயானி சாகாவின் (Maitrayani Sakha) சீடராவார். இவர் பிராமண ஆசிரியராக விளங்கினும் பௌத்தக் கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்டு காவி உடை தரித்தவர். இவர் பௌத்தத் துறவியாக இருப்பினும் பல சமயத்தவர்களும் அவருடைய சீடராக விளங்கினர். அவருடைய மடத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து வந்த பல்வேறு மதப் பிரிவினரும் காணப்பட்டனர்.

இந்த மடத்தில் திவாகர மித்திரரின் சீடர் ஒருவர் வாயிலாக வாழ்க்கையில் நேர்ந்த துயரங்களைப் பொறுத்துக் கொள்ளாத நிலையில் இளம்பெண் ஒருத்தி தீயில் குதித்து உயிரை விட மேற்கொள்ளவிருந்த செய்தியினை அறிந்து, மேலும் தீர விசாரித்து அவ் விளம்பெண் தம்முடைய சகோதரியே என்றுணர்ந்தார். உடனே தீக் குளியல் நடைபெறவிருந்த இடத்திற்குச் சென்று மயக்கமுற்றிருந்த இராஜ்ய ஸ்ரீயின் உயிரைக் காத்தார். இராஜ்ய ஸ்ரீ பௌத்தத் துறவியாக மாற விரும்பினாள். ஹர்ஷர் அவளைத் தேற்றினார். ஹர்ஷருக்காகத் திவாகர மித்திரரும் இராஜ்ய ஸ்ரீயைத் தேற்றி அறிவுரை வழங்கினார். ஹர்ஷரின் வேண்டுகோளை ஏற்று நாட்டுக்குத் திரும்புமாறு கேட்டுக்கொண்டார். தாம் எண்ணிய குறிக்கோள் முடிந்தவுடன் சகோதரியுடன் தாமும் காவியுடுத்துத் துறவியாவதாக ஹர்ஷர் உறுதி

கூறினர். அன்றிரவு அம் மடத்தில் தங்கிவிட்டுத் தம் சகோதரி யுடனும், திவாகரருடனும் கங்கைக் கரையில் இருந்த முகாமிற்குச் சென்றார். இந்த இடத்தில் யாரும் எதிர்பாராத வகையில் பாணர் தாம் கூறிவந்த இந் நிகழ்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பல சிறப்புடைய செய்திகளை நமக்கு அளிக்கவில்லை.

ஹர்ஷரும் சசாங்கனும் :

பாணரின் ஹர்ஷ சரிதத்திலும், யுவாங் சுவாங்கின் பதிவுகளிலும் சசாங்கனுக்கு எதிரான படையெடுப்புப் பற்றிய குறிப்பு ஏதுமில்லை. ஹர்ஷ சரிதத்தைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்கள் அந் நூலில் பக்கம் 168-ல் ஒரு குறிப்பினைக் காட்டுகின்றனர். அவர்களால் உவமையாகப் பல செய்திகள் கூறப்படுகின்றன. ஹர்ஷரின் உடனடிக் கவனம் சசாங்கனைத் தண்டிக்க வேண்டும் என்பதாக இருந்தபோதிலும், தம் தங்கையைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை வந்துவிட்டது. சி. வி. வைத்யா, ஹர்ஷர் பௌத்த சமயத்தவராதலால் மன்னிப்பை அளித்தார் என்றார். ஆனால், திவாகர மித்திரரைச் சந்தித்தபோது அவரிடம் தாம் முடிக்கவேண்டிய கடமை ஒன்று உண்டு என்று ஹர்ஷர் கூறினர்.

எனவே, சசாங்கனை மன்னிக்க எவ்வித எண்ணமும் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. சசாங்கன் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டதாகவும், திறை அரசராக ஆள அனுமதிக்கப்பட்டதாகவும் பணிக்கர் குறிப்பிடுகிறார். சசாங்கன் சில பகுதிகளை ஒப்படைத்ததாகக் குறிப்பிடும் என். ரே என்பவர் அப்படியில்லையானால் கௌடாவின் அரசனாக நீடித்திருக்க முடியாது என்று கூறுகிறார். டாக்டர் திரிபாதியே பொருத்தமான விளக்கத்தினை அளித்திருப்பதாகச் சர்மா கருதுகிறார். ஹர்ஷர் சசாங்கன் படைகள் எவ்வித மோதலையும் செய்யவில்லை எனவும், ஹர்ஷருடன் மோதுவதற்குப் பதில் கன்னோசியிலிருந்து பின்வாங்குதலே சிறந்தது என்று எண்ணி அதன்படி நடந்துக் கொண்டதெனவும் குறிப்பிடுகிறார் திரிபாதி. ஆனால், மஜூம்தார் டாக்டர் ஸ்மித், வைத்யா, ஆகியோர் திரிபாதியின் கருத்துகளை ஏற்காது, சசாங்கன் பின்வாங்கினன் என்பதனை வெறும் யூகம் எனத் தள்ளுகிறார்கள். ஆனால், பெரும் வீரரான சசாங்கன் ஏன் போர்க் களத்தில் ஹர்ஷரைச் சந்திக்கவில்லை என்பதற்கு அவர்கள் விளக்கமேதும் அளிக்கவில்லை.

காசுகளின் அடிப்படையில் ஆராய்ந்த பசாகா என்பவர் சசாங்கன் ஹர்ஷரால் தோற்கடிக்கப்பட்டார் என்று கூறுகிறார். சசாங்கனைத் துரத்திவிட்டு, ஹர்ஷர் கன்னோசி அரியணை ஏறினார் என்று மஜூம்தார் கூறுகிறார். இது அப்படியாயின் சசாங்கனின் வலுவற்ற நிலையைக் காட்டவில்லையா? ஏன் சசாங்கன் எதிர்த்து நிற்கவில்லை? என்ற கேள்விக்கு மஜூம்தார் விடையளிக்கவில்லை. ஹர்ஷரைக் கன்னோசி அரியணை ஏறவைத்த சூழ்நிலை, ஹர்ஷரின் வருகையின்போது கன்னோசி அரியணையில் யாரும் இல்லை என்பதையும், ஹர்ஷரின் வருகையை எதிர்பார்த்துக் கன்னோசியிலிருந்து சசாங்கன் விரைந்தோடிவிட்டார் என்பதையும் காட்டுகிறது.

சசாங்கனுக்கு எதிரான படையெடுப்பு விளைவுகளை விளக்கக்கூடிய நூல் ஆரிய மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவே ஆகும். ஹர்ஷர், சசாங்கனைத் தோற்கடித்ததை அந்நூல் கூறுகிறது. அறிஞர் சிலர் இதனையும் அடிப்படையில்லாதது என்று கூறும்போது டாக்டர் ஜெயஸ்வால் அதனை உண்மையெனக் கூறுகிறார். டாக்டர் சர்க்காரும் வங்காளம் முழுவதும் ஹர்ஷரின் காலடியில் வீழ்ந்தது என உரைக்கிறார். யுவாங் சுவாங்கின் குறிப்புகளும் மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவின் கருத்துகளுக்குச் சான்றாக அமைகின்றன. அவை பௌத்த சமய ஆதாரங்கள். எனவே, அவற்றை ஏற்றுக்கொள்ள இயலாது என்று முழுமையாக ஒதுக்கிவிடுவதற்கில்லை. சசாங்கன், ஹர்ஷரால் முழுமையாகத் தோற்கடிக்கப்படவில்லை என டாக்டர் சின்ஹா கூறுகிறார்.[1] சசாங்கன் ஹர்ஷரின் படைகளைக் கன்னோசியில் சந்திக்கவில்லை; திரிபாதி கூறுவதுபோல், போரிடாமல் விலகினார் என்றே கருத அதிக வாய்ப்புள்ளது. ஹர்ஷர் தம் நிலையைப் பலப்படுத்திக்கொண்டு சசாங்கனின் மீது படையெடுத்தார். கி. பி. 619-620-ல் கலிங்க அரசன் என்ற அளவிலேயே சசாங்கன் நிறைவு கொண்டார். ஆரிய மஞ்சு ஸ்ரீ மூலகல்பா சசாங்கன் 17 ஆண்டு ஒரு மாதம் ஏழு நாள் ஆண்டதாகக் குறிப்பிடுகிறது.

சசாங்கனின் இறப்பு கி. பி. 619-620-க்குப் பின்னர் நிகழ்வுற்றிருக்க வேண்டும். கி. பி. 619 620-ல் மாதவ ராஜா தமது மேலாண்மை அரசராகச் சசாங்கனைக் குறிப்பிடாததால் அந்த முடிவிற்கு வருகிறோம். கி. பி. 603-604-ல் அரயணை ஏறினார் என்று கொண்டால், ஆரிய மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவினை ஏற்றுக் கொள்வோமாயின், கி. பி. 621-622-ல் அவர் இறந்திருக்க வேண்டும்.

[1] The Decline of the kingdom of Magadha, Dr. B. Sinha, p. 257.

சசாங்கனின் மறைவிற்குப் பின் அரசியல் குழப்பம் நிலவியது. சசாங்கன் தம் பெயர் நிலைபெற ஆட்சித்துறை முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளவில்லை. அதனால், அவர்தம் மறைவுடன் அரசியல் வெற்றிகளும் மறைந்தன. வங்காளம் என்ற மலர் ஹர்ஷர் என்ற மன்னரின் காலடியில் குவிந்தது.

**கன்னோசி அரியணை**

பாணர் தம்முடைய விளக்கத்தை ஒரு நிலையில் நிறுத்தி விட்டார் என்று கண்டோம். பாணர் அரசியலில் முக்கிய நிலைக்களனாகவும், அக் காலத்தில் வர்த்தகத்திலும், வணிபத்தி லும் சிறந்த இடமாகவும் விளங்கிய கன்யாகுப்ஜத்தைக் குறித்து ஏதும் குறிப்பிடாதது வியப்பாயிருக்கிறது.[1]

இதற்கு இரண்டு காரணங்களை எடுத்துக் காட்டலாம். முதலாவதாகப் பாணரால் இராஜ்ய ஸ்ரீயின் மீட்பு வரையில் மட்டுமே எழுத முடிந்திருக்கவேண்டும். அல்லது காதம்பரி என்ற அவருடைய மற்றொரு படைப்பினைப்போல் இதனையும் முடிக்க இயலாமல் போயிருக்க வேண்டும். முடிக்காமல் விடப்பட்ட காதம்பரியை மட்டும் அவர் மகன் எடுத்துவைத்து முடித்து விட்டு, ஹர்ஷ சரிதத்தை அப்படியே விட்டுவைத்திருக்க வேண்டும்.

இரண்டாவதாகத், தம் தங்கைக்கு உரியதான கன்னோசி அரசினைத் தம்மை ஆதரித்த தலைவனான ஹர்ஷர் எடுத்துக் கொண்டதை மற்றவர்களைப் போலப் பாணரும் விரும்பாமல்

[1] கன்யா குப்ஜம் என்பது கன்னோசியே ஆகும். இசீனா யுவாங் சுவாங் கனோ-கு-ஷி (Kano ku she) எனப் பெயரிட்டு அழைக்கிறார். கன்னோசி நகரம் 20 லி (4 மைல்) நீளமும் 5 லி (1 மைல்) அகலமும் கொண்டது: கன்னோசி நகருக்குக் கன்யா குப்ஜா என்ற பெயரே சரியானது என்ற கருத்துக் கொண்டிருந்த யுவாங் சுவாங் க-ே னவ-யீ என்ற பெயரே சரியானது என்று கூறுகிறார் கன்யா குபஜம் என்ற சொல்லுக்குக் கூன் விழுந்த பெண்களின் நகரம் என்பது பொருள்.

இதைக் குறித்த கதை இது. கங்கைக்கரையில் மர ரிஷி என்ற ஒரு பெரிய ரிஷி தவம் செய்துவந்தார் அவர்மீது பறவை எச்சத்தினால் விழுந்த ஆலமர விதை முளைத்து மரமாகியும் தவம் செய்ததால் அவருக்கு அப் பெயர் வந்தது. தவம் முடிந்து விழித்த அவர் தாம் தவம் செய்து விழித்தபோது கண்ட நதிக் கரையில் ஓடி விளையாடிக்கொண்டிருந்த அரசருடைய பெண்களில் ஒருத்தியை மணமுடித்துத் தருமாறு அரசரை வேண்டினார். அரசருக்கு நூறு பெண்கள். அவர்களில் ஒருவரும் இதற்குச் சம்மதிக்கவில்லை. கடைசியில் இளவரசிகளில் ஒருத்தி ரிஷியை மணக்க உடன் பட்டாள். செய்தி அறிந்து தம் பெருமையை அவர்கள் உணராத நிலை உணர்ந்து சாபமிட்டதால் மீதி உள்ள 99 பேரும் கூனர்கள் ஆயினர்.

கன்னோசி நகரம் அழகிய தோட்டங்களையும், தூய நீர் ஏரிகளையும் கொண்டது. கனி வகைகளும், பூ வகைகளும் மிகுந்து வளங்கிற்று. கலைச்சிறப்புடைய நகரம் அது. கன்னோசி நகரம் குறித்த குறிப்புகளை யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் காணலாம்.

இருந்திருக்க வேண்டும். எனவே, மேற்கொண்டு தொடர்வதில் விருப்பம் இல்லாமல் இதுவே முடித்துக்கொள்ளத் தக்க தருணம் என்று எண்ணி விட்டிருக்கக்கூடும்.

மூன்ருவது காரணம் ஒன்றினையும் காட்டலாம். பாணரால் அதனை முடிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம். அல்லது முடிப்பதற்கு முன்னர் உயிர் துறந்திருக்கலாம் என்பதே அது. எனவே, அவர் மகன் பூசணன் ஹர்ஷ சரிதத்தை விடக் காதம்பரியை முடித்தலையே இன்றியமையாததாகக் கருதியிருக்கலாம்.

நாம் மேலே குறிப்பிடும் மூன்று காரணங்களும் வெறும் யூகங்கள் தாம். இவற்றிற்கு ஆதாரமோ, அடிப்படையோ இல்லை.

ஹர்ஷரின் பிற்கால வாழ்க்கையைக் குறிப்பிடுகின்ற யுவாங் சுவாங் அவரைத் தானேஸ்வரத்துடன் அதிகமாகத் தொடர்பு படுத்தவில்லை. அவர் கன்ளேசியைப் பற்றியே எழுதுகிருர். அவர் வருகைபுரிந்தபோது கன்ளேசியை ஹர்ஷர் ஆட்சி செய்ததால் அவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம். யுவாங் சுவாங் கன்ளேசி அரசரைப் பற்றி அளித்திடும் விளக்கமாகும் இது.

'கன்ளேசி அரசர் ஹர்ஷ வர்த்தனர் வைசிய சாதியைச் சார்ந்தவர். பிரபாகர வர்த்தனர் மறைந்ததும் இராஜ்ய வர்த்தனர் அரசராஞர். கர்ண சுவர்ண அரசர் சசாங்கஞல் வஞ்சகமாகக் கொல்லப்பட்டார். முக்கிய மனிதரான பாணி (அல்லது வாணி) இறந்த அரசரின் இளைய சகோதரர் ஹர்ஷ வர்த்தனரை அரசராகும்படி அழைத்தார். ஆஞல், இளவரசர் பணிவுடன் மன்னிப்பு வேண்டி, வேண்டுகோளை ஏற்க இயலாதவராகத் தோன்றிஞர். மறுபடியும் அரசர் பொறுப்பினை ஏற்கும்படி அமைச்சர்கள் வலியுறுத்தவே, ஹர்ஷர் போதி சத்துவ அவலோகி தீஸ்வரரின் அறிவுரையைப் பெற எண்ணிஞர்'

'தகுந்த விரதத்திற்கும், நோன்பிற்கும் பின்னர்த் தம்முடைய பிரச்சனையைப் போதி சத்துவரிடம் எடுத்துரைத்தார். கன்ளேசியின் அரசராதல் 'நல்ல கர்மம்' என்ற பதில் கிடைத்தது. கர்ண சுவர்ண அரசரால் நலிவுறும் பௌத்தத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் எனவும், அதன் பொருட்டு அரசர் பொறுப்பை ஏற்கும்படியும் பதில் கிட்டியது. போதி சத்துவர் இரகசிய உதவியினை அளிப்பதாகக் கூறிஞர். ஆஞல், உண்மையான அரியணையில் ஏறக்கூடாது எனவும்,

மகாராஜா என்ற பட்டத்தைச் சூடக்கூடாது எனவும் எச்சரித்தார். எனவே, இராஜபுத்திரர் என்ற பட்டத்துடன் ஹர்ஷர் கன்னோசியின் அரசராகி, சிலாதித்தியர் என்று பெயர் கொண்டார்.'

இதுவரை நாம் கண்ட யுவாங் சுவாங்கின் குறிப்புகளை C. V. வைத்யா ஆராய்ந்து, இக் குறிப்புகள் கன்னோசியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் காட்டுகின்றனவேயல்லாமல், ஏற்கெனவே தானேஸ்வரத்தில் நடைபெற்றவற்றைக் குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டார். வைத்யா குறிப்பிடும் கருத்தே சரியெனக் கருத வேண்டிய ஆதாரங்கள் உள்ளன. தானேஸ்வர அரியணையைப் பொறுத்தமட்டில் ஹர்ஷர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதையும், நாட்டு விவகாரங்களைச் சகோதரர் இருவரும் எவ்வாறு கவனித்தனர் என்பதனையும் ஏற்கெனவே கண்டோம். உண்மையில் இருவருமே மரவுரி தரித்து மறையவர்களாகக் காடு ஏக விழைந்தனர். ஆனால், உடனடியாக ஏற்பட்ட சூழ்நிலையின் விளைவாக இராஜ்ய வர்த்தனரும் ஹர்ஷ வர்த்தனரும் போருக்கு ஆயுதமேந்திப் புறப்பட்டுவிட்டனர்.

இராஜ்ய வர்த்தனர் தானேஸ்வரத்தின் அரசராக முழு அரசப் பட்டங்களைக் கொண்டார் என்பதைக் கண்டோம். அவர்தம் மறைவிற்குப்பின் ஹர்ஷர் அரசரானார். ஹர்ஷ சரிதம் இராஜ்ய வர்த்தனரின் திருமணம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. எனவே, இராஜ்ய வர்த்தனர் அதுவரையில் திருமணமாகாதவர். நடைபெற்ற நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த விதம் அவர் மணமாகாதவரே என்பதை உறுதிப்படுத்துகின்றன. வேறு ஆட்சி உரிமை வேண்டக்கூடியவர் யாரும் இல்லை என்பதனை ஹர்ஷர் திவாகரமித்திரருடன் கொண்டிருந்த உரையாடலின் வாயிலாக அறியலாம். ஹர்ஷர் அப்போது 'தங்கை ஒருத்திமட்டுமே இருக்கிறாள், அவளே வாழ்க்கைக்கான ஒரே தொடர்பு' என்று குறிப்பிடுவது ஈண்டு நோக்கத் தக்கது.

பாணி அல்லது வாணி ஹர்ஷரை அரசராகும்படி அழைத்தார். ஆனால், வேண்டுகோளை ஏற்று அரசராகும் எண்ணம் ஹர்ஷருக்கு இல்லை என்பது கன்னோசி அரசைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். பாணி என்று குறிப்பது பண்டியே என்றார் ஹோயர்ன்லே. டாக்டர் முகர்ஜியும் அதனை ஏற்றாலும், அவ்வாறு ஏற்றதற்கு எவ்விதக் காரணமும் இல்லை என்று டாக்டர் திரிபாதி குறிப்பிட்டுக், கன்னோசி அரசப் பிரதிநிதிதான் பாணி என்றார். பாணி தானேஸ்வர அரசராகும்படி ஹர்ஷரைக் கேட்கவேண்டு

வதில்லை. இராஜ்ய வர்த்தனர் இறந்ததும் வேறு வாரிசுகள் இல்லாமையால் அந்த உரிமை தானே வந்துவிடுகிறது. ஆகவே, வேண்டுகோளை மறுக்க வேண்டிய சூழ்நிலையும் இல்லை. அதைப் போன்றே ஹர்ஷரைப் புதிய அரசராக ஏற்றுக்கொள்ளும்படி தானேஸ்வரப் பிரதிநிதிகளைப் பண்டி கேட்டுக்கொள்ள வேண்டிய இன்றியமையாமையும் இல்லை எப்பதை நோக்கும்போது, பண்டி கன்னோசி அரசவைப் பிரதிநிதிகளைத்தான் அவ்வாறு கேட்டுக்கொண்டார் என முடிவுசெய்ய வேண்டியுள்ளது.

கன்னோசி மௌகாரிகளுக்கு உரியது. எனவே, மௌகாரி களுக்கு உரிய அரசினை ஏற்க ஹர்ஷர் நியாயமான தயக்கம் காட்டினார். அதனால்தான் அவர்கள் போதி சத்துவரின் அறிவு ரையைப் பெற்று இராஜ்ய ஸ்ரீயின் சார்பில் ஆட்சி செலுத்தினர். ஹர்ஷர் அரியணையில் அமர்த்தப்பட்டதோடு முழுப் பட்டாபிஷேக சடங்குகளும் செய்யப்பட்டன. எனவே, யுவாங் சுவாங்கின் விளக்கம் தானேஸ்வரத்திற்கு உரியது அன்று; கன்னோசி அரசைக் குறிப்பிடுவதே என்று உறுதியாகக் கூறலாம்.

யுவாங் சுவாங் வர்த்தனர்களைக் கன்னோசி அரச குடும் பத்தவர் என்று எண்ணிவிட்டதே அவருடைய குறிப்புகளுக்கும், மேலே பார்த்தவற்றிற்கும் இடையே உள்ள குழப்பத்திற்குக் காரணம் எனலாம். ஹர்ஷர் கன்னோசி வாரிசுச் சிக்கலில் திறமையாக நடந்துகொண்டார். இராஜ்ய ஸ்ரீக்கும், ஹர்ஷருக்கு மிடையேயான அன்புப் பிணைப்பும், சமய உணர்வுமே சிக்கலின்றி இப் பிரச்சனை முடிந்ததற்குக் காரணமாகும்.

ஹர்ஷர் தம் தந்தையின் மறைவினால் கவலை கொண்டுள்ள மக்களுக்கு ஆறுதல் அளித்து, நல்லாட்சியை அமைக்க எண்ணம் கொண்டார். வழக்கமான அரசப் பொறுப்புகளை நிறைவேற்றுவதுடன், தம் தங்கை இராஜ்ய ஸ்ரீயும் உடனுறைய வேண்டுமென விழைந்தார். ஹர்ஷர் தம் தங்கை பௌத்தத் துறவியாக மாறுவதைத் தடுக்க வேண்டும் என்ற உணர்ச்சி வசப்பட்ட நிலையால் மட்டுமன்றி, எதிர்காலத் தேவையையும் ஓரளவிற்கு உணர்ந்தே தங்கையைத் தம்முடன் அழைத்துவர எண்ணியிருக்க வேண்டும். தங்கைக்கு ஆறுதல் அளிக்க அவர் விரும்பினர். பௌத்தக் கருத்துகளைத் தங்கை விரும்பிக் கற்கட்டும் என வேண்டிக்கொண்டார். ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்குப் பின் கஜன்கலாவில் ஹர்ஷர் தங்கியிருந்தபோது, ஒரு நாள் யுவாங் சுவாங் பௌத்தக் கருத்துகளை விளக்கிக் கொண்டிருந்தார் எனவும், இராஜ்ய ஸ்ரீ ஹர்ஷருக்குப் பின்னால்

அமர்ந்திருந்தாள் எனவும் யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். ஹர்ஷர் அரசின் நிர்வாகப் பொறுப்புகளைத் தம் தங்கையுடன் இணைந்து நிறைவேற்றினார் எனப் பாங்-ஷி (Fang-Chih) குறிப்பிடுகிறது. யுவாங் சுவாங்கின் வாழ்க்கைக் குறிப்புகளிலோ அத்தகைய செய்தி ஏதும் இல்லையென வாட்டர்ஸ் குறிப்பிடுகிறார். ஹர்ஷர் இராஜ்ய ஸ்ரீயின் காப்பாளராக விளங்கினார் என்று நம்புவோர் இதை ஏற்றாலும், டாக்டர் மஜூம்தார் இது குழப்பமானதும் அபத்தமானதும் ஆகும் என்கிறார்.

எது எப்படியிருப்பினும் ஹர்ஷர் கன்னோசி அரசரானதிலிருந்து அடிப்படை உண்மை ஒன்றினை அறிகிறோம். தானேஸ்வரம், கன்னோசி ஆகிய இரு வல்லமைமிக்க அரசுகளின் இணைப்பினால் ஹர்ஷர் வட இந்தியாவின் வல்லமை மிக்க அரசராக மாறினார். அவ்வாறு வல்லமை பெற்றதால், படை நடத்திச் சென்று மேலும் பல வெற்றிகளைக் குவித்தார்.

---

# 5. ஹர்ஷ வர்த்தனரின் சகாப்தம்

அறிஞர் பெருமக்கள் ஹர்ஷ வர்த்தனர் கி. பி. 606-ல் அரியணையேறினர் எனவும், அக் காலம் முதலே ஹர்ஷரின் ஊழி (சகாப்தம்) தொடங்கிற்று எனவும் பொதுவான கருத்து ஒன்றினைக் கொண்டுள்ளனர். கன்னிங்ஹாம், தம்முடைய 'B ok of Eras' என்னும் நூலில் ஹர்ஷர் கி. பி. 607-ல் அரியணை ஏறினர் என்று காட்டுகிறர். ஓர் ஊழி அல்லது ஓர் அரசரின் காலம் குறித்து அறிஞர் பெருமக்கள் ஒருசேர ஒற்றுமையான கருத்துக் கொண்டிருப்பது அரிது ஆயினும், ஹர்ஷரின் காலம் பற்றி ஒரே கருத்துக் கொண்டிருப்பது வியப்பிற்குரியது. ஆனல், ஆர். சி. மஜூம்தார் 'Indian Historical Quarterly' என்னும் பருவ இதழின் (Journal) 27 ஆம் தொகுதியில் முதன் முறையாக இதனை ஏற்பதில் ஐயப்பாடு உள்ளது எனச் சுட்டிக் காட்டினர்.[1]

இத்தகைய முடிவிற்கு அவர் வந்ததற்கான காரணங்களைத் தொகுத்துக் காணுதல் இன்றியாமையாததாகும். பட்டயச் சான்றுகள் ஏதும் ஹர்ஷரின் ஊழிக் குறித்து குறிப்பிடாதது போலவே பாணரின் ஹர்ஷ சரிதத்திலும், யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலும் அத்தகைய கருத்து சிறிதளவும் நேராகவோ, மறைமுகமாகவோ எடுத்துரைக்கப்படவில்லை. பாணரின் ஹர்ஷ சரிதம் அத்தியாயம் மூன்றில் ஹர்ஷரின் பல்வேறு வெற்றிச் சிறப்புகளைக் குறிப்பிடுகையில் ஹர்ஷர் ஏற்படுத்திய ஊழியினைக் குறித்து எளிதாகக் குறிப்பிட்டிருக்கலாம். அவ்வாறு பாணர் குறிப்பிடாததும், ஹர்ஷரின் கால அரசியல் சூழ்நிலையும், அத்தகைய ஊழி ஏதும் நிறுவப்பட்டிருக்க முடியாது என்பதனை மெய்பிக்கின்றன. ஓர் அரசரின் ஊழி என்பதனைப் பின்வரும் சந்ததியார் தொடர்ந்து கொள்வர். அவ் வரசரின் அரசு நீண்ட நாள் நிலைபெறவில்லையெனில் அதுவும் இல்லாத ஒன்ருகி விடும்.

சாளுக்கிய அரசன் ஆரும் விக்கிரமாதித்தியர் தொடங்கிய 'சாளுக்கிய விக்கிரம வருடம்' அவ் வரசனின் வீழ்ச்சிக்குப்

[1] R.C. Mazumdar, *The Harsha Era*, *IHQ*, (1951) Vol XXVII p. 183 1907.

பின்னர் வீழ்ந்து வழக்கொழிந்துவிட்டது. அதுபோலவே ஹர்ஷரின் வமிசமும், பேரரசும் அவருக்குப் பின் வீழ்ந்துவிட்டமையால் பின்னர்க் குழப்பமும், கொடுங்கோன்மையும் தொடங்கின. அவ்வாறு ஏற்பட்டமையால் ஹர்ஷரின் ஊழி ஏற்பட வழியின்றிப் போயிற்று. தகுந்த வலுவுள்ள ஆதாரமின்றி ஹர்ஷரின் ஊழி இருந்தது என மெய்பிக்க வழியே இல்லை. அத்தகைய கருத்தினைக் கூறத்தக்க ஆதாரம் ஏதுமில்லை எனவும் மஜூம்தார் தமது கருத்தினை எடுத்துவைத்தார்.

'ஹர்ஷரின் ஊழி' இருந்தது என்போரால் காட்டப்படும் ஒரே ஆதாரம் அல்பெருணியின் குறிப்புகளாகும். கன்னிங்ஹாம், ஸ்ரீ ஹர்ஷரின் காலம் அல்லது ' ஸ்ரீ ஹர்ஷரின் ஊழி அபு ரீஹான் (Abu Rihan) மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறும் கருத்து பொதுவாக அறிஞர் பெரு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றாலும் அக் கருத்து உண்மையின் வழி நிற்பது ஆகாது. அல்பெருனியின் கருத்துகள் யாவை என்பதனை முதலில் கண்டு பிறகு வாதங்களைக் காணலாம்.

'ஸ்ரீ ஹர்ஷருக்கும், விக்கிரமாதித்தியருக்கும் இடையே 400 ஆண்டுகள் இடைவெளி இருந்தன என மதுரா, கன்னோஜ் ஆகிய பகுதிகளின் மக்கள் குறிப்பிட்டனர்' எனவும், 'காஷ்மீரிய நாள்காட்டியில் விக்கிரமாதித்தியரைவிட 664 ஆண்டுகள் ஹர்ஷர் பிற்பட்டவர்' எனத் தாம் வாசித்ததாகவும் அவர் குறிப்பிடுகிறார். பிஹார் ஓரியண்டல் ரிசர்ச் ஜர்னலில் 400 ஆண்டுகள் விக்கிரமாதித்தியருக்கும் ஹர்ஷருக்கும் இடையேயான இடைவெளி கி. மு. 467 எனக் குறிப்பிட்டுள்ள ஆண்டு சரியாகவோ, தவறாகவோ நந்த அரசர்களைக் குறிப்பிடுகிறது என்பது அனைவரும் அறிந்ததே. அல்பெருணி குறிப்பிடும் விக்கிரமாதித்தியரைவிட (கி. மு. 58) ஹர்ஷர் (கி. பி. 606) 664 ஆண்டுகள் பிற்பட்டவர் (58 + 606 = 664) என்று காஷ்மீர் நாள்காட்டியில் காணப்பட்டதாகக் கருதப்படும் வழக்கு முடிவிற்கு வர இயலாத பிரச்சனை இது என்பதனை எடுத்துக் காட்டுகிறது. அல்பெருணியின் குறிப்புகளில் காணப்படும் உண்மை என்னவெனில் கி. பி. 606-ல் ஹர்ஷரின் ஊழி தொடங்கிற்று என்று அவர் நேராகவோ மறைமுகமாகவோ குறிப்பிடவே இல்லை. அல் பெருணியின் குறிப்புகளைப் பாகுபாடற்ற முறையில் ஆராய்வோர் ஹர்ஷரின் ஊழியினை அவர் குறிப்பிடவே இல்லை என்பதனைத் தெள்ளிதின் உணர்வர். சிறப்புப் பெற்ற அறிஞர்கள் கூட அல்பெருணி குறிப்பிடாததை அவர் குறிப்பிட்டதாகக் கொண்டதுதான் வியப்பாக உள்ளது.

ஹர்ஷரின் சகாப்தத் தொடக்கம் அப்படியாயின் கி.பி. 606-ல் என்று கொள்ளச் செய்த ஆதாரங்கள் யாவை என முதலில் கண்டறிய வேண்டும். பிரதிஹாரர்களின் பதிவுகளிலிருந்தும் இம் முடிவிற்கு வருவது உண்டு. அப் பதிவுகளைக் கவனமின்றித் தவறாக ஆராய்ந்ததன் விளைவே அம் முடிவு என மஜூம்தார் கருதுகிறார். அதைப்போலவே அம்சவர்மனின் நேபாளப் பதிவு களையும் அவர் கருதினர். ஆனால், கீழ்க்கண்ட பட்டயங்களை, ஹர்ஷரின் ஊழியிலிருந்து தொடங்கப்பட்டவை எனக் கருதப் படுபவைகளை ஆராய்வது பயன்தரத் தக்கது என்பது மஜூம் தாரின் கருத்தாகும்.

அவையாவன :

(1) ஆதித்திய சேனரின் ஷாபூர்ப்பட்டயம்.
(2) போஜ தேவரின் காலபெஹிவாப்பட்டயம்.
(3) அஹர்ப்பட்டயங்கள்.
(4) கார மரபின் பட்டயங்கள்.
(5) பஞ்சாப், மத்திய இந்தியா, இராஜபுதனப் பட்டயங்கள்.
(6) சாமன் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கற் பட்டயங்களின் ஏழு தேதிகள்.
(7) ஹாண்ட் என்னுமிடத்துப் பட்டயங்கள்.

ஒன்றுமுதல் மூன்றுவரையிலான பட்டயங்களில் காணப் படும் தேதிகள் ஹர்ஷரின் ஊழி அல்லது காலம் கி. பி. 606-க்கு 25 ஆண்டுகள் நெருக்கமாக உள்ளன. ஆனால், மற்றவற்றில் உறுதியாகக் கால வரையறை கொள்ள இயலவில்லை. எனவே, முதல் மூன்று பட்டயங்களின் மூலம்மட்டும் ஹர்ஷரின் ஊழியை நிர்ணயிப்பது என்பது வலுவற்ற அடிப்படையிலானது என்பதும் தெளிவு. ஆனால், இந்தப் பட்டயங்களின் காலம் வேறு ஊழிகளின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட்டி ருக்கலாம்.

ஹர்ஷரின் ஊழி எனக் கருதப்படும் கி. பி. 606-ஆம் ஆண்டுக் காலத்தில் சிந்துவிலும், மேற்கு இந்தியாவிலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊழிகள் வழக்கில் இருந்தன என்பதனை அல் பெருணி யின் குறிப்பு வாயிலாகவும், ஜெய்சல்மர் பதிவுகள் வாயிலாகவும் ஆர். ஸி. மஜூம்தார் எடுத்துக் காட்டினர். எனவே அவர் கி. பி. 606-ல் ஹர்ஷ வர்த்தனர் பதவியேற்றதைக் குறிப்பிடும் வகையில் ஊழி ஒன்று ஏற்படுத்தப்பட்டது என்று கருதுவது அறிவுடைமையாகாது என்று குறிப்பிட்டார்.

காஷ்மீரத்து நாள்காட்டியின் அடிப்படையிலேயே ஹர்ஷர் கி. பி. 606-ல் அரியணை ஏறினர் என்ற கருத்து கொள்ளப் படுகிறது. இதனை அறிஞர் பெருமக்கள் ஆராய்ச்சி என்னும் சல்லடையில் சலித்து எடுக்காது அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஏனெனில், ஹர்ஷர் நேரடியாகக் காஷ்மீருடன் தொடர்பில்லாதவர். காஷ்மீர வரலாற்றை எழுதிய கல்ஹணர் தம் இராஜ தரங்கிணியில் இது குறித்து ஏதும் குறிப்பிடவில்லை. காஷ்மீரத்து வரலாறு எழுதிய அவர் ஏழாம் நூற்றாண்டு ஆதாரங்களை நன்கு அறிந்து தெளிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் இருந்த அவர் ஏதும் குறிப்பிடவில்லை என்பது நாம் மேற்கொண்டுள்ள கருத்துக்கு வலுவூட்டுகிறது.

சீன தேசத்துப் பயணியான யுவாங் சுவாங் ஹர்ஷரைக் காஷ்மீரத்துடன் தொடர்புபடுத்திக் கூறுகிறார். ஆனால், கல்ஹணர் மத்திய இந்தியப் புகழ்மிக்க அரசர்களைக் குறிப்பிட்ட போதிலும் ஒருமுறைகூட ஹர்ஷரைக் குறித்துக் கூறவில்லை, அவ்வரசர்கள் ஹர்ஷருக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்புவாழ்ந்தவர்கள். எனவே, இந்த அடிப்படையில் பார்க்கின்றபோது பதினோராம் நூற்றாண்டில் அல்பெருனியியால் குறிப்பிடப்படும் நாள்காட்டி ஹர்ஷர் அரியணையேறியது குறித்துச் சரியான ஆண்டைக் கூறுகிறது என்று கூற முடியாது.

சீன தேசத்து வரலாற்று ஆதாரங்கள் தாங் கோசு (Tang Kao Tsu) என்பவரின் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட குழப்பங்களுக்குப் பின் சிலாதித்தியரின் ஆட்சி ஏற்பட்டது என்று குறிப்பிடுகின்றன. தாங் கோசுவின் காலம் கி. பி. 618 முதல் 627 வரையாகும்.

கி. பி. 606 என்ற காலம் யுவாங் சுவாங்கின் கருத்துக்களோடு பொருந்தவில்லை. சிலாதித்தியர் யுவாங் சுவாங்குடன் உரையாடுகையில் தாம் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அரசராக இருப்பதாகக் கூறியதைக் கொண்டு கி.பி. 612-ல் ஹர்ஷர் அரியணையேறியதாக வாட்டர்ஸ் குறிப்பிடுகின்றார். யுவாங் சுவாங்கின் கருத்துகளின் அடிப்படையில் சிலாதித்தியர் பதவிக்கு வந்தது அவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது.

கி. பி. 643-ல் பிரயாகையில் கூடிய பேரவையின்போது யுவாங் சுவாங்கிடம் ஹர்ஷர் தாம் இந்தியாவின் அரசராக முப்பது ஆண்டுகள் இருந்துவருவதாகவும், ஐந்து பேரவைகளை

அதுவரைக் கூட்டியதாகவும் ஆருவது பேரவையைக் கூட்ட விருப்பதாகவும் கூறினர் என பீல் (Beal) குறிப்பிடுகிருர். ஒவ்வோர் அவையும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்றது. எனவே, 643-க்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் அதாவது கி.பி. 612 அல்லது 613-ல் ஹர்ஷர் அரியணையேறியிருக்கக்கூடும் என்பது மஜூம்தார் அளித்த கருத்து.

வாட்டர்ஸூம் யுவாங் சுவாங்கின் கருத்தின் அடிப்படையில் சீலாதித்தியரின் ஆட்சி முப்பத்தாறு ஆண்டுகள் நடைபெற்றது எனவும், சீனரின் குறிப்புகளின் அடிப்படையில் அதாவது ஹர்ஷரின் இறந்த ஆண்டாகக் கருதப்படும். கி.பி. 648-லிருந்து இந்த முப்பத்தாறு ஆண்டுகளைக் கழித்து, கி.பி. 612-ல் அரியணையேறினர் எனவும் குறிப்பிடுகிருர்.

'லைஃப் ஆப் யுவாங் சுவாங்' என்னும் நூலின் அடிப்படையில் ஹர்ஷர் கி.பி. 655-ல் இறந்தார் என்று வாட்டர்ஸ் குறிப்பிட்டுக் காட்டுகிருர். எனவே, அவர் கி. பி. 655-ல் இறந்தார் எனில் அவர் ஆட்சி செலுத்திய முப்பத்தாறு ஆண்டுகளைக் கழித்து கி. பி. 619-ல் அரியணையேறினர் என்றும் கூறுகிருர். ஆனல், இக் குறிப்பு தவருன கணக்கின் அடிப்படையிலானதுபோல் தோன்றுகிறது. யுவாங் சுவாங் யஸ்திவன ஜெய சேனருடன் தங்கியிருந்தபோது மஞ்சு ஸ்ரீ போதி சத்துவர் ஒருநாள் கனவில் தோன்றிப் பத்து ஆண்டுகளுக்குப் பின் சீலாதித்திய இராஜா இறந்துவிடுவார் என்று குறிப்பிட்டதாகக் கூறுகிருர். இதைக் குறிப்பிட்ட யுவாங் சுவாங் இயங் ஹவேய் கால (கி.பி. 654-5) இறுதியில் சீலாதித்திய இராஜா இறந்ததாகக் குறிப்பிடுகிருர். எனவே, யங் ஹ்வேய் காலத்தில் இறந்தார் என்ற குறிப்பானது கனவில் கேட்ட வாக்கை மெய்ப்பிக்கிறது. யஸ்தி வனத்தில் மகதப் பயணத்தின்போது கி.பி. 636-7-ல் ஜெயசேனரைச் சந்தித்தார் எனலாம். லைஃப் நூலின்படி ஜெயசேனர் முதலாவதாகவும் கடைசியாகவும் இரண்டு ஆண்டுகள் இருந்தார். எனவே, அவர் தங்கியிருந்த காலம் கி. பி. 637 அல்லது 638-க்குள் இருக்க கூடும். இந்தக் காலத்திலிருந்து பத்து ஆண்டுகளைக் கணக்கிடும்போது ஹர்ஷர் கி. பி. 648-ல் இறந்ததாகக் கணக்கிடப் படுகிறது. எனவே, 654-5 என்பது தவறு என்பது வெளிப்படை. ஏனென்ருல், ஹுமாயூன் அதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவை விட்டுச் சென்றுவிட்டார்.

கி. பி. 606-ல் ஹர்ஷர் அரியணையேறினர் என்பது ஐயத்திற்கிடமின்றி நிருபிக்கப்பட்டாலொழிய யுவாங் சுவாங் குறிப்

பின் அடிப்படையான செய்திகள் தவறாகமாட்டா. இப்போது நம்முன் உள்ள பிரச்சனை சீனச் சான்றுகளால் அளிக்கப் படும் காலத்தை ஏற்பதா, கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காஷ்மீர நாள்காட்டியின் உறுதிப்படுத்தப்படாத ஆதாரத்தை ஏற்பதா என்பதே. எனவே, ஹர்ஷ சீலாதித்தியர் கி.பி. 606-ல் பதவிக்கு வந்தார் என்பதும், இதன் நினைவாக ஊழி ஒன்று ஏற்படுத்தப்பட்டது என்பதும் நம்ப இயலாத உறுதியற்ற ஆதாரங்களின் அடிப்படையிலானவை என்பது தெளிவு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள டாக்டர் மஜூம்தாரின் முடிவு கி. பி. 606-ல் ஹர்ஷர் பதவியேற்றார் என்பதையோ, அதன் தொடர்ச்சியாகப் புதிய ஊழி ஒன்று ஏற்படுத்தப்பட்டது என் பதையோ ஏற்பதற்கு இல்லை என்பதற்காக மேற்கொள்ளப் பட்டதன்று. இங்கு இதனை எடுத்துக் காட்டுவது தற்சமயம் வலுவுள்ள போதிய ஆதாரங்கள் இல்லை என்று காட்டுவதற்கே யாகும்.

ஹர்ஷர் கி. பி. 606-ல் அரியணையேறினார் என்ற கருத்தினை ஆதரித்து 'இண்டியன் ஹிஸ்டாரிகல் குவார்டர்'லியின் 27 ஆம் தொகுதி எண் ஒன்றில் டி. சி. சர்க்கார் எழுதினார் என்றபோதி லும் பொருத்தமான தக்க ஆதாரங்களை எடுத்துக் காட்டாது அவர் யுவாங் சுவாங்கின் உரைகளுக்கு மாறுபட்ட விளக்கம் அளித்தார்.[1]

ஹர்ஷ ஊழி என்பதனைப் பாணரோ, யுவாங் சுவாங்கோ குறிப்பிடவில்லையே ஏன் என்ற கேள்விக்குப் பதில் அளிக்கை யில் ஒருவரும் ஆட்சி ஆண்டை 'ஊழி' யென எடுத்தவுடனேயே எடுத்துரைப்பதில்லை; அது தானே உருவாவது என்று அவர் கூறினார். ஹர்ஷருக்குப் பின் அவர்தம் வாரிசுகள் வலுவற்ற வர்களாய் விளங்கியதால் அவர்கள் ஹர்ஷ ஊழி குறித்து வழங்கும் நிலையில் இல்லை எனச் சர்க்கார் குறிப்பிட் டார். ஆனால், யுவாங் சுவாங் தமது நண்பரின் காலத்தைப் பற்றி எழுதவில்லை. யுவாங் சுவாங்கிற்கு ஹர்ஷர் அப்போது வாழ்ந்தாரா இல்லையா என்று தெரியாது எழுதியிருப்பாரெனக் கருதிக்கொள்வது பொருத்தமில்லை. சீனப் பயணி எதையும் சரிபார்க்காது ஏற்றுக்கொள்பவர்; சிறந்த உற்று நோக்காளர்

[1] **D.C. Simcar, *Harsha's Accession and the Harsha Era*, xxvi IHQ (1951) p. 321.**

அல்லர்: சரியான முறையில் ஆய்வுசெய்யாதவர்; திருப்திகரமாகப் பதிவு செய்யாதவர் என்றெல்லாம் குறை கூறப்பட்டவர் ஆவார். கி. பி. 643-க்குப் பின் அரசரைப் பற்றி அவருக்கு எதுவுமே தெரியாபோது ஹர்ஷர் 648-ல் வாழ்ந்தார் என்று குறிப்பிடுவது இயற்கைக்கு மாறுபாடானது. சிங்போ என்பவரின் குறிப்புகள், சி-யு-கி அல்லது யுவாங் சுவாங்கின் பதிவுகள் அவர் எழுதிவைத்த வற்றின் சுருக்கம் என்று காட்டுகின்றன. யுவாங் சுவாங்கின் குறிப்புகள் பியன்சி என்பவரால் தொடர்ந்த விளக்கங்களாகத் தொகுக்கப்பட்டவை என்றும் தம் வாதங்களைச் சர்க்கார் எடுத்துவைத்தார்.

மஜூம்தாரின் கருத்துகளுக்கு மறுப்பு அளிக்கும் வகையில் சர்க்கார் தமது கருத்துகளைத் தொகுத்து அளித்தார். அவர் தமது மறுப்புரைக்கு யுவாங் சுவாங்கின் பதிவுகளையே மேற்கோளாகக் காட்டினார். சீலாதித்தியர் அரசர் ஆனவுடன் பெரும் படையைப் பெற்றார். தம் உடன்பிறப்பின் கொலைக்குப் பழி வாங்கவும், அண்டை நாடுகளைத் தன் வயப்படுத்தவும் முயன்றார். கிழக்கில் அடிபணிய மறுத்த நாடுகளுக்கு எதிராகச் சென்று ஆறு ஆண்டுகள் தொடர்ந்து போர் செய்து ஐந்து இந்தியப் பகுதிகளை வென்றார் இவ்வாறாகத் தம் ஆட்சிப் பகுதியை விரிவுபடுத்தித் தம் படை பலத்தைப் பெருக்கினார். யானைப்படையின் எண்ணிக்கை 60,000 ஆகவும், குதிரைப் படையின் எண்ணிக்கை 100,000 ஆகவும் ஆக்கிக்கொண்டு போர் செய்யாமலேயே அமைதியாக முப்பது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார்' என்ற யுவாங் சுவாங்கின் குறிப்பினை விளக்கிய வாட்டர்ஸ் அதற்குக் கீழ்க்கண்ட விளக்கத்தை அளிக்கிறார்.

'சீலாதித்தியரின் மறைவு தொடர்பாக இரு ஆண்டுகளை நாம் காண்கிறோம். சீன வரலாறு கி.பி. 648 எனவும், ஹூய்லி எழுதிய (Hui Li) யுவாங் சுவாங்கின் வாழ்க்கை என்னும் நூல் கி.பி. 655 எனவும் காட்டுகின்றன. முப்பது ஆண்டுகள் ஹர்ஷர் ஆட்சி செலுத்தினார் என்பதைக் கொண்டு கி. பி. 612 அல்லது 619 ஆம் ஆண்டில் அவர் பதவிக்கு வந்ததாக முடிவுகட்டுகிறோம். பின்னால் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு சீன தேசத்துக் குறிப்பு ஒன்றுடன் பொருந்துகிறது. சீலாதித்தியரின் ஆட்சி தாங் கோசூவின் ஆட்சிக்காலத்தில் (கி. பி. 618 முதல் 627 வரை) நடைபெற்றது. ஆனால் 648 அல்லது 647 ஆம் ஆண்டே சரியானதாக இருக்கவேண்டும். 641-ல் அல்லது 642-ல் சீனப் பயணியான யுவாங் சுவாங்குடன் உரையாடுகையில் சீலாதித்தியர் தாம் முப்பது ஆண்டுகள் ஆட்சியாளராக இருந்துவருவதாகக் குறிப்

[9] வாட்டர்ஸ் ஆன் யுவாங் சுவாங்ஸ் டிராவல்ஸ் இன் இண்டியா, பக்கம் 14—16.

பிட்டிருக்கவேண்டும். இதுவும் கி.பி. 612-ல் அவர் பதவியேற்றார் என்பதனையும், போர் நடத்திய ஆறு ஆண்டுகளை முப்பதுடன் கூட்டிக்கொண்டால் கி. பி. 648-ல் அவர் இறந்திருக்க வேண்டும் என்பதையும் காட்டுகிறது. ஆனால், கி. பி. 648-ன் தொடக்கக் காலத்தில் இந்தியாவிற்கு வருகைபுரிந்த சீனத் தூதுவர் அரசர் இறந்து வேறொருவர் பதவியைக் கைப்பற்றியதைக் கண்டுள்ளார். மேலும், கி. பி. 648-ல்தான் யுவாங் சுவாங் தம் பதிவுகளைத் தாய் சங்கிடம் (Tai Tsong) அளித்தார். இந்தப் பயணிகளின் குறிப்பு இப்போதைய வடிவம் அடைவதற்கு முன் சீலாதித்தியர் இறந்திருக்க வேண்டும்' என வாட்டர்ஸ் விளக்கம் அளிக்கிறார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் சர்க்கார் மேற்கொண்டுள்ள முடிவுகளைக் காண்போம். சீனப் பேரரசரிடம் கி.பி. 648-ல் தம் பதிவுகளை யுவாங் சுவாங் அளித்த போது அவர் ஹர்ஷரின் மறைவை அறிந்திருக்கமுடியாது எனவும், சீனத் தூதுவர் 'வாங் யுவாங் சே' (Wang Hieun Tse) தூதுக் குழு சீனு திரும்பிவரும்வரையில் சீனுவில் யாரும் ஹர்ஷரின் மறைவு குறித்து அறிந்திருக்க முடியாது எனவும் சர்க்கார் குறிப்பிட்டார். எனவே, யுவாங் சுவாங்கினுல் குறிப்பிடப்பட்ட முப்பத்தாறு ஆண்டுக் காலமானது ஹர்ஷர் அரியணையேறிய கி. பி. 606 முதல், சீனப் பயணி யுவாங் சுவாங் சந்தித்த கி. பி. 642 வரையில் உள்ள காலமே அன்றி ஹர்ஷர் பதவியேற்றது முதல் இறப்பு வரையிலான காலமாகாது என்று அவர் குறிப்பிட்டு ஹர்ஷர் கி.பி. 642க்கு முப்பத்தாறு ஆண்டுக்கு முன் கி.பி. 606-ல் பதவி ஏற்றார் என்கிறார்.

அல்பெருணியின் குறிப்புகளைச் சர்க்கார் எடுத்துக் காட்டினார். அல்பெருணி குறிப்பிடுவது என்ன? 'மதுராவிலும், கன்னேசியிலும் ஹர்ஷ சகாப்தம் பயன்படுகிறது. ஸ்ரீ ஹர்ஷருக்கும் (அதாவது ஹர்ஷ சகாப்தத்திற்கும்) விக்கிரமாதித்தியருக்கும் (அதாவது விக்கிரமாதித்திய சகாப்தத்திற்கும்) இடையே 400 ஆண்டுகள் இடைவெளி இருப்பதாக அப்பகுதியில் வாழ்வோர் குறிப்பிட்டனர். இருப்பினும் காஷ்மீரத்து நாள்காட்டியில் ஸ்ரீ ஹர்ஷ (அதாவது ஹர்ஷசகாப்தர்) விக்கிரமாதித்தியரைவிட (விக்கிரமாதித்திய சகாப்தத்தைவிட) 664 ஆண்டுகள் பிற்பட்டது என நான் வாசித்தேன். இந்த மாறுபாடுகளினுல் நான் எந்த உறுதியான ஆதாரங்களின் அடிப்படையிலும் இப் பிரசினையில் தெளிவு பெறவில்லை.'

இப் பகுதியில் விக்கிரம சகாப்தத்தின் தொடக்கத்திற்கு 400 ஆண்டுகளுக்கு முன் அல்பெருணி ஒரு ஹர்ஷ சகாப்தத்தையும்,

விக்ரெ சகாப்தம் 684 ஆம் ஆண்டிற்குப் பின் இன்னொரு ஹர்ஷ சகாப்தத்தையும் கேள்விப்பட்டதாகக் குறிப்பிடுகிறார் அன்றி மஜும்தார் குறிப்பிட்டதுபோல் கி.பி. 457 ஆம் ஆண்டு ஹர்ஷ சகாப்தத்தை மட்டும் குறிப்பிடுவதோ, கி.பி. 606ஐக் குறிப்பிடாமல் இருப்பதோ செய்யவில்லை என்று சர்க்கார் பதில் அளித்தார். தற்காலிகமாகவே கி.பி. 606ஐ அல்பெருணி ஏற்க வில்லை என்றும் சர்க்கார் குறிப்பட்டுவிட்டு ஹர்ஷர் சாளுக்கிய புலிகேசியின் காலத்தவர்; (கி.பி. 609-42) சீனப் பயணி இந்தியாவில் 629-645-ல் சுற்றுப்பயணம் செய்தார்; ஹர்ஷர் கி.பி. 606-ல் பதவிபெற்றார்; அக் காலம் முதலே ஹர்ஷ சகாப்தம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்கிறார்.

கி.பி. 643-ல் யுவாங் சுவாங்கிடம் ஹர்ஷர் தாம் இந்தியாவின் பேரரசராக முப்பது ஆண்டுகளுக்குமேல் ஆட்சி செலுத்திய தாகவும், ஐந்து அவைகளைக் கூட்டியதாகவும் கூறிய குறிப்பினை யும் மறுத்துச் சர்க்கார் உரைத்தார். இராஜ்ய வர்த்தனரின் இறப்பின்போது ஹர்ஷர் தானேஸ்வரம் என்னும் சிறிய பகுதி யின் அரசர். உத்தரப் பிரதேசம், பீஹார் ஆகியவற்றின் சிறப் புப் பகுதிகள் மாளவ அரசர்களின் கீழ் இருந்தன. மாளவ அரசர்களை வெல்ல ஆறு ஆண்டுகளாவது ஆகியிருக்கவேண்டும். கி.பி. 606-ல் தானேஸ்வரத்தைப் பெற்றபின் கி.பி. 612-ல் அதா வது ஆறு ஆண்டுகளுக்குப் பின் பேரரசு பட்டத்தைப் பெற்றார். ஹர்ஷர் பேரரசராகக் கி. பி. 643-ல் முப்பது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். கி. பி. 643-ல் ஆறாவது பேரவை பிரயாகையில் கூடியது. இப் பிரயாகை கி.பி. 612 வரையில் உத்தரப்பிரதேசம் பீகார்ப் பகுதியில் அதாவது மௌகாரி மரபின்கீழ் இருந்து வந்தது. எனவே, 612-ல் அதனை வென்ற பின்னரே முதல் பேரவையைக் கூட்டியிருக்க முடியும். தானேஸ்வரம் என்னும் சிறிய பகுதிக்கு அரசராக விளங்கிக்கொண்டிருந்த வேளையில் அலகாபாத் பகுதியுடன் எவ்விதத் தொடர்பும கொண்டிருக்க முடியாது என்பதும் சர்க்காரின் கருத்தாகும். எனவே, கி. பி. 606-ல் ஹர்ஷர் பதவியேற்றார் என்பதை மறுப்பதற்கில்லை என்று அவர் கூறுகிறார்.

இதற்குப் பதில் விளக்கம் அளித்து மஜும்தார் தமது கருத் துகளைத் தொகுத்து அளித்தார். டாக்டர் சர்க்கார் கூறுவதை அதாவது ஹர்ஷரின் மறைவு யுவாங் சுவாங்கிற்கு அவர் சீனப் பேரரசரிடம் பதிவுகளை அளித்தபோது தெரியாது என்பதை முழுமையாக மறுத்துள்ளார். ஆகையால், அவர் உயிருடன் இருப்பதாக நம்பினர் என்பதே பொருத்தமாகப் படுகிறது.

எனவே, கி. பி. 648-ல் பதிவுகள் அளிக்கப்பட்டபோது ஹர்ஷர் முப்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர் என்று குறிப்பிடுவது கி.பி. 648ஐத்தான் குறிக்கும். ஒருவர் தாம் உயிருடன் வாழும் நண்பர் என்று கருதும் ஒருவரைக் குறித்தும், அவர் வயதைக் குறித்தும் எழுதுகையில் தாம் எழுதுகின்ற காலம் வரையில் எழுதுவாரேயல்லாமல் தாம் கடைசியில் சந்தித்த காலம் வரையில் கருதமாட்டார். எனவே, டாக்டர் சர்க்கார், யுவாங் சுவாங் குறிப்பிடும் ஹர்ஷரின் ஆட்சிக் காலம் என்பது ஹர்ஷர் பதவிபெற்றது முதல் சீனப் பயணி தங்கியிருந்த காலமான கி. பி. 642 வரையில்தான்; அவர் அரியணையேறியது முதல் இறப்பு வரையிலான காலமன்று என்று குறிப்பிடுவது பொருத்தமில்லை.

சர்க்கார் யுவாங் சுவாங்கின் பதிவுகளுக்கு அளித்த விளக்கத்தையும், யுவாங் சுவாங்கின் வாழ்க்கைக் குறிப்புகளையும் ஏற்காதது பொருத்தமற்றது என்று மஜூம்தார் காட்டினர். ஹர்ஷர் ஒருபோதும் இந்தியாவின் தலைவரல்லர் என்று சுட்டிக் காட்டிய மஜூம்தார் கி.பி. 612-ல் கூட மகதமும், கௌடாவும் ஒரு பக்கமும், பஞ்சாப், காஷ்மீர் மற்றொரு பக்கமும் அவருடைய ஆட்சிக்கு வெளியிலிருந்தன என்றும், எனவே 'இந்தியாவின் தலைவர்' என்ற இலக்கியக் குறிப்பு கி. பி. 612-ம் பொருந்தாது என்றும், எல்லாச் சிறு அரசர்களையும் கூடப் பொதுவாக மண்டலத்தின் தலைவர் என்று குறிப்பிடுவது வழக்கம் என்றும் குறிப்பிடுகிறார்.

யுவாங் சுவாங்கிடம் ஐந்து அவைகளைக் கூட்டியதாகவும் ஆறாவது அவையைக் கூட்டவிருப்பதாகவும் ஹர்ஷர் அறிவித்தார் என்ற யுவாங் சுவாங் வாழ்க்கைக் குறிப்புகளுக்குக் கீழ்கண்டவாறு டாக்டர் சர்க்கார் விளக்கம் அளித்தார்.

'பிரயாகையைத் தன்னகத்தே கொண்டு இதுவரை மௌகாரி அரசின் கீழிருந்த உத்திரப் பிரதேசம், பீகார் பகுதிகளின் அரசராக ஆன பின்னர்தான் ஹர்ஷர் ஆறாவது அவையைக் கி. பி. 643-ல் கூட்டினர். பஞ்சாப்பின் கிழக்குப் பகுதியான தானேஸ்வரத்தின் அரசராக விளங்கியவரை அலகாபாத் பகுதிக்கும், அவருக்கும் தொடர்பு இல்லை.'

இதனை மறுத்து டாக்டர் மஜூம்தார் ஆதாரம் ஒன்றைக் காட்டினர். அது யுவாங் சுவாங்கின் குறிப்பே ஆகும். அக்குறிப்பில் 'தம் முன்னோர்களின் வழியில் சீலதித்தியர் அவையைக் கூட்டினர்' என்று குறிப்பிட்டிருப்பது சர்க்காரின் கருத்துத் தவறு என்று காட்டும். அதாவது 643-ல் அவரது முப்பதாண்டுக் கால ஆட்சி முடிவுற்றிருந்தது என்பது கி. பி. 606-ல் அவர் பதவி

யேற்கவில்லை என்பதனை மெய்ப்பிக்கிறது. இந்த உறுதியான ஆதாரங்களுக்கு எதிரான குறிப்பு காஷ்மீரத்தில் அவர் கேள்விப்பட்டதாகக் குறிப்பிடும் காஷ்மீர நாள்காட்டி பற்றிய அல்பெருணியின் குறிப்பே ஆகும். எனவே, பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்காக இச் சந்தர்ப்பத்தில் இதனை ஏற்க இயலுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

அல்பெருணி ஹர்ஷ ஊழியினை அறிந்திருந்தார் என்று டாக்டர் சர்க்கார் குறிப்பிட்டு நிரூபிக்க முயல்வது நம்பக்கூடியதாயில்லை. டாக்டர் சர்க்கார் அல்பெருணியின் கருத்துகளை எடுத்துக்காட்டுகையில் ஸ்ரீ ஹர்ஷர் என்பதற்குப் பின் "ஹர்ஷ ஊழி' என அடைப்புக்குள் குறிப்பிடுகிறார். எனவே, விவாதத்திற்குரிய ஒன்றை, அவை மூலத்தில் இல்லாதபோது அவற்றை அடைப்புக்குள் இட்டுக் காட்டுவது பெரிதும் கண்டிக்கத் தக்கது. ஆகையால் அல்பெருணியால் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளதாகச் சர்க்கார் எடுத்துக்காட்டுவது தெளிவாக ஹர்ஷ ஊழியைக் கூறவில்லை என்பது தெளிவாகிறது. டாக்டர் சர்க்கார் அல்பெருணி ஆகியோர் ஒன்றை மட்டும் கூறியபோது இரண்டு ஹர்ஷ ஊழிகளை அறிந்திருந்தார் என்பதும் நம்ப முடியவில்லை. அல்பெருணி ஹர்ஷரைப் பற்றிய மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தார் என்பதை எடுத்துக்காட்டு கிறாரேயல்லாமல் ஹர்ஷ ஊழியின் மாறுபட்ட கருத்துகளை எடுத்துக்காட்டவில்லை.

டாக்டர் மஜூம்தாரின் கருத்துகளை மறுக்கையில் ஒன்றுக்கொன்று முரணான இரண்டு அறிக்கைகள் அளிக்கப்படுகின்றன. 'அவருடைய வாரிசுகளால் ஆட்சி ஆண்டு பயன்படுத்தப் பட்டிருப்பதாகத் தோன்றுவதிலிருந்து பாணரோ, யுவாங் சுவாங்கோ அதைக் குறிப்பிட வேண்டுமென்பதில்லை' என்று கூறுகின்ற அவர் அடுத்த வரியிலேயே 'அப்படி ஹர்ஷர் தக்க வாரிசுகளை விட்டுச் செல்லவில்லையெனினும் அவருடைய கூட்டாளர்களாக விளங்கிய பின்னர்த் தனி அரசர்களானவர்கள் அவருடைய ஆட்சி ஆண்டைத் தொடர்ந்து ஊழியாகப் பயன் படுத்தியிருக்கலாம்' என்று கூறுவது முரண்பட்ட கருத்து என்பது வெளிப்படை.

ஹர்ஷர் சகாப்தம் குறித்த முழுமையான இறுதியான ஆதாரம் எதையும் அளிக்கவில்லை என்றபோதிலும் தகுந்த நிறைவு செய்யக்கூடிய ஆதாரங்களை அளிக்க வேண்டியது

டாக்டர் சர்க்கார் முதலானவர்களின் கடமையே என்று டாக்டர் மஜூம்தார் குறிப்பிட்டார்.

டாக்டர் சர்க்கார் புகழ்மிக்க விக்கிரமாதித்தியரைப் போல ஹர்ஷ வர்த்தனரும் ஓர் ஊழியை ஏற்படுத்தியவர் என இந்திய மரபுகள் குறிப்பிடுவதுபோல் தோன்றுகிறது என்றார். விக்கிர மாதித்தியரின் ஊழியை எடுத்துக்காட்ட உறுதியான ஆதாரங்கள் உள்ளன. ஆனால் ஹர்ஷரை, அவர்தம் ஊழியை எடுத்துக்காட்ட வலுமிக்க உறுதியான தகவல்கள் இல்லை.

எனவே, வலுவுள்ள நல்ல அடிப்படையான ஆதாரங்கள் கிடைக்கப்பெறாத நிலையில் கி. பி. 606 ஐ ஏற்பது பொருத்த மில்லைதான்.

இனி, டாக்டர் சர்க்கார் இதற்கு மறுப்பாகக் கூறுவது என்ன என்று காண்போம்.

'ஆனால், யுவாங் சுவாங் தமது நண்பரின் காலத்தைக் குறித்து எழுதவில்லை. யுவாங் சுவாங்கிற்கு ஹர்ஷர் உயிருடன் அப்போது வாழ்ந்தாரா இல்லையா என்பது தெரிந்ததா, தெரிய வில்லையா என்று நமக்குத் தெரியாதபோது ஹர்ஷர் அப்போது உயிருடன் வாழ்ந்தார் என்று கருதிக்கொள்வது பொருத்த மில்லை. சீனப் பயணி எதையும் சரிபார்க்காது ஏற்றுக் கொள்பவர்; சிறந்த உற்று நோக்காளர் அல்லர்; சரியான முறையில் ஆய்வு செய்யாதவர்; நிறைவான வகையில் பதிவு செய்யாதவர் என்றெல்லாம் குறை கூறப்பட்டவர் எனக் கண்டோம். (வாட்டர்ஸ், ஆன் யுவாங் சுவாங் டிராவல்ஸ் இன் இண்டியா, I பக்கம் 14-15) அப்படிப்பட்டவர்கூடக் கி.பி. 643-ன் தொடக்கத்தில் ஹர்ஷரைப் பற்றியோ ஒன்றும் அறியாதபோது ஹர்ஷர் கி. பி. 648-ல் உயிருடன் இருந்தார் எனக் கருதியிருப்பார் என்று எண்ணுவது இயற்கைக்கு மாறானது. சிங்போ என்பவ ரின் குறிப்புகள் சி-யு-கி அல்லது யுவாங் சுவாங்கின் பதிவுகள் அவர் எழுதி வைத்தவற்றின் சுருக்கம் என்று காட்டுகின்றன. யுவாங் சுவாங்கின் குறிப்புகள் பியன்சி என்பவரால் தொடர்ந்த விளக்கமாகத் தொகுக்கப்பட்டவை. இந் நூலின் முதல் தொகுப்பு கி. பி. 646-ல் சீனப் பேரரசரிடம் அளிக்கப்பட்டது எனவும், நாம் இப்போது கொண்டுள்ள நூல் உண்மையிலேயே கி. பி. 648 வரை முடிவுபெறவில்லை எனவும் அறிகிறோம். இந்தச் சூழ்நிலையில் ஹர்ஷர் ஆறு ஆண்டுகள் போர் செய்தார்; அமைதி யாக முப்பது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர் என்பனவற்றைக் கி. பி. 642-643-ல் அல்லது கி. பி. 643-ன் தொடக்கத்தில்

அதாவது முப்பதாண்டு ஆட்சிக் காலத்தை ஹர்ஷர் முடித் திருந்தார் என்று குறிப்பிடுவது அவர் பேரரசராகாது ஆறு ஆண்டுகள் கழிந்ததிலிருந்து, அதாவது 606+6=612 முதல் தொடங்குகிறது என்று சர்க்கார் கருதினர். சில ஆண்டுகள் அவர் அரசர் என்ற பட்டத்தைப் பெறவில்லை என்று சி-யூ-கி-சி வரலாற்றுச் செய்தியை அறிவிக்கிறார்.

அடுத்துத் தம் முன்னோர்களின் வழியில் ஹர்ஷர் அவை யைக் கூட்டினர் என்ற கூற்றைச் சர்க்கார் ஏற்கவில்லை. ஹர்ஷரின் முன்னோர்கள் கிழக்குப் பஞ்சாப்பின் சிறு ஆட்சி யாளர்களாக விளங்கினர்கள் என்றும் அவ் வரசு பிரயாகைக்குத் தொலை தூரத்தில் விளங்கிற்று என்றும், எனவே, 'தம் முன்னோர் களின் வழியில்' என்று மொழி பெயர்க்கப்பட்டது தவறு என் றும், சீன மொழி அறிஞரான டாக்டர் பி. சி. பகச்சி என்பவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் அவர் காட்டினர். யுவாங் சுவாங்கின் சீனமொழிக் குறிப்பு 'முன்னோர் நிறுவனங்கள், வமிசங்கள் அல்லது மரபுகள்' என்று குறிப்பிட்டிருக்கிறது. அது 'பண்டைய கால அரசர்கள் ஏற்படுத்திய மரபு வழியில்' என்று பொருள்படுமே அன்றி 'ஹர்ஷரின் முன்னோர்கள்' என்று பொருள் படாது என்று சர்க்கார் குறிப்பிட்டார்.

காஷ்மீரத்து நாள்காட்டி வானஇயலின் அடிப்படையில் உருவானது. அது தவறான தகவலை அளிக்க முடியாது. இரண்டு அரசர்களின் ஊழியை குறிப்பிடும் அது தவறாக இருக்கமுடியாது என்று டாக்டர் சர்க்கார் குறிப்பிடுகிறார்.

அல்பெருணி கி. பி. 606-ல் ஹர்ஷரைப்பற்றி மட்டும் குறிப் பிட்டாரேயன்றி ஹர்ஷ ஊழியைக் குறிப்பிடவில்லையெனில், தாம் பெற்ற செய்திகளில் மாறுபாடு காணப்படுகிறது என அவர் ஏன் உரைக்க வேண்டும்? டாக்டர் சார்க்கார் அல்பெருணியின் அடிப்படையில் கி. பி. 606 என்பதே பொறுத்தமானதாகப் படு கிறது. எனவே, சம காலத்துக் குறிப்புகளான யுவாங் சுவாங்கின் சி-யு-கியும், யுவாங் சுவாங்கின் வாழ்க்கைக் குறிப்புகளும் பயனற்றவை என்று கருதுகிறார்.

மகதாவில் ஹர்ஷருக்குப் பின் ஆட்சி செலுத்தியவர் ஆதித்திய சேனர். அவர் ஹர்ஷரின் வமிசத்தைவர் அல்லர். எனினும், அவர் ஹர்ஷரின் சகாப்தத்தைப் பயன்படுத்தினர். இவ்வாறு தல ஆட்சியாளர்கள் பயன்படுத்துவது வழக்கமே. இவ்வாறு அவர் பயன்படுத்தினர் என்று அறிய உதவுவது ஷாபூர்ப் பட்டயம். இப் பட்டயம் தனிப்பட்டவர் பட்டயம். ஆதலால், அதில் ஹர்ஷரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றார்

டாக்டர் சர்க்கார். ஆதித்தியசேனர் ஏன் அதனைத் தெளிவாக குறிப்பிடவில்லை என்று டாக்டர் மஜும்தார் கேட்டதற்கே இவ்வாறு அவர் பதிலளித்தார். அது தனிப்பட்டவர் பதிவன்றி, அரசின் பதிவாயிருப்பினும்கூட ஹர்ஷரின் பெயர் குறிப்பிடப் படும் என்று எதிர்பார்க்க முடியாது என்றும் டாக்டர் சர்க்கார் குறிப்பிட்டார்.

விக்கிரமாதித்தியர் கி. பி. 58-ல் சகாப்தம் ஒன்றை ஏற்படுத்தினர் என்று நம்ப வாய்ப்பு இருப்பதையே ஏற்றுக்கொள்ளாதோர் கி. பி. 606-ல் ஹர்ஷ சகாப்தத்தை ஏற்றுக்கொள்வது வியப்பாயுள்ளது என்றார் டாக்டர் மஜும்தார். அதனை மறுத்த சர்க்கார் கி. பி. நான்காம் நூற்றாண்டுக்கு முன் ஆதித்திய என்று முடியும் பெயர் கொண்ட ஆட்சியாளரே கிடையாது என்றும், டாக்டர் மஜும்தார் விக்கிரம சகாப்தம் குறித்த போலியான வரலாற்று ஆதாரங்களை நம்புவதாகவும் குறைகூறி, அறிவியல் அடிப்படையிலான காஷ்மீர நாள்காட்டியை நம்பாமல் இருப்பது குறித்து வியப்புத் தெரிவித்தார். எனவே, டாக்டர் சர்க்கார் ஹர்ஷர் கி. பி. 606-ல் அரியணை ஏறினர் என்பதும், ஒரு சகாப்தத்தை உருவாக்கினர் என்பதும் தவறன்று என்று கருதினர்.

ஹர்ஷ வர்த்தனரின் காலம், ஊழி குறித்த பிரச்சனை 1952 டிசம்பரில் நடைபெற்ற இண்டியன் ஹிஸ்டரி காங்கிரஸிலும் (குவாலியர்) எழுந்தது. ஹர்ஷ வர்த்தனரின் ஊழி குறித்து அறிய உதவும் ஒரே ஆதாரம் அல்பெருணியின் கருத்துகள் ஆகும்.

'ஹர்ஷர் பூமிக்கடியில் ஏதேனும் செல்வம் புதைந்துள்ளதா என்று அறிய ஏழாவது பூமிவரைத் தோண்டினர் எனவும் உண்மையில் அவ்வாறு அவருக்குக் கிடைத்தது எனவும், அதனால் வரி முதலியவற்றால் மக்களைக் கொடுமைப் படுத்தாமலேயே ஆட்சி நடத்த முடிந்தது எனவும் இந்துக்கள் நம்பினர். அவருடைய சகாப்தம் மதுராவிலும், கன்னோஜியிலும் பயன் படுத்தப்பட்டது. ஹர்ஷருக்கும், விக்கிரமாதித்தியருக்கும் இடையே 400 ஆண்டு இடைவெளி உள்ளது என அப் பகுதியில் வாழும் சிலர் என்னிடம் தெரிவித்தனர். எப்படியிருப்பினும் காஷ்மீர நாள்காட்டியில் ஸ்ரீ ஹர்ஷர் விக்கிரமாதித்தியருக்கு 664 ஆண்டுகள் பிற்பட்டவர் என்று படித்திருந்தேன். இந்த மாறுபாட்டினால் என்னால் எதனையும் உறுதியாகக் கொள்ள முடியவில்லை. நம்பத் தகுந்த ஆதாரத்தினால் இன்றுவரை இது தெளிவாக இல்லை.'

யஜ்தாகிர் டின் 400 ஆண்டுகளுக்குச் சமமானவற்றைக் குறிப்பிடுகையில் அவர் கி. மு. 457-458 ஆம் ஆண்டையே குறிப்பிடுகிறார். கி. மு. 457-ல் ஹர்ஷர் என்ற பெயரில அரசர் யாரும் இல்லை என்பது நாம் அறிந்த ஒன்றேயாகும்.

இந்திய மரபில் விக்கிரமாதித்தியனையும் ஹர்ஷர் என்றே அழைக்கிறோம். கல்ஹணரின் இராஜதரங்கிணி உஜ்ஜயினியின் விக்கிரமாதித்தியரும் ஹர்ஷர் என அழைக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றது. புத்த பிரகாஷ் 'The Problem of the Harsa Era' என்ற கட்டுரையில்[1] இரண்டாம் சந்திர குப்தரே ஹர்ஷர் என அல்பெருணியால் குறிப்பிடப்பட்டவர் என்று கருதுகிறார். அவர் சாகர்களுக்கு எதிராகப் பெற்ற வெற்றியின் விளைவாகச் சகாப்தம் ஒன்று உருவாகக்கப்பட்டது. அந்தச் சகாப்தமே ஹர்ஷர் காலம் அல்லது ஹர்ஷ ஊழி என அறியப்பட்டது. அல்பெருணிக்கு இதனை மக்கள் தவறாக அறிவித்தபடியால் கி. மு. 457-60 என்று குறித்தார்.

புத்த பிரகாஷ் காட்டிய மேலே காணப்பட்ட விளக்கம், மஜூம்தார் எடுத்துக்காட்டிய விளக்கம் ஒன்றினைப் போன்றதே. ஹர்ஷ சகாப்தம் அல்லது ஊழி குறித்த சிக்கலுக்குப் புத்த பிரகாஷ் அளித்த விளக்கம் ஏற்கெனவே இருந்த சிக்கலில் மேலும் ஒரு சிக்கலை ஏற்படுத்தியது எனலாம். புத்த பிரகாஷ் புதிய ஒன்றைக் காட்டியுள்ளார். 'ஹர்ஷ சகாப்தம்' என்று குறிப்பிடப்பட்டிருப்பது இரண்டாம் சந்திரகுப்தரால் உருவாக்கப்பட்டது என்ற அவர்தம் குறிப்புகள் ஒரு புதிய கோணத்தில் பிரச்சனையைத் திருப்பியுள்ளன. ஆனால், அவர் ஏற்கெனவே கட்டப்பட்டிருந்த கட்டடத்தில் மாறுதல்களைக் குறிப்பிடாமல் அதாவது கி. பி. 606 அல்லது கி. பி. 612 அல்லது வேறு ஏதோ ஓர் ஆண்டைச் சுட்டிக்காட்டாது அடிப்படையையே தகர்க்க வழி வகுத்துவிட்டார். கட்டடமே அவருடைய கருத்துகளினால் ஆட்டம் கண்டுவிட்டது.

எனினும், இந்த நிலையில் நாம் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். ஹர்ஷர் சகாப்தம் ஒன்றை உருவாக்கினரோ இல்லையோ; கி. பி. 606-ல் ஒரு சகாப்தம் ஹர்ஷரால் உருவாக்கப்பட்டது என்ற கருத்து எப்படியோ நன்கு வேரூன்றிவிட்டது. ஆர். ஸி. மஜூம்தார் தாம் கொண்டிருந்த கருத்துகளை சரி எனவும், தாம் கொண்டுள்ள முறையிலே விளக்கம் காண்பது

[1] Buddha Prakash, *The Problem of the Harsa Era* IHQ (1956) Vol. xxxii.

பொருத்தம் எனவும் கருதினர். அதைப்போலவே டி. சி. சர்க்காரும் தம் வழியில் தமது விளக்கங்களை அளித்து அதுவே சரியானது என வாதப் பிரதிவாதங்களை எடுத்து அடுக்கினர்.

இந்திய வரலாற்றில் தீர்க்க முடியாத எத்தனையோ சிக்கல்கள் உள்ளன. அது போன்ற சிக்கல்களில் ஒன்றாகவே இச் சிக்கல் அமைந்துவிட்டது. இச் சிக்கலுக்கு விடை காண அதன் பின்னர் அறிஞர் பெருமக்கள் யாரும் முன்வந்ததாகத் தெரியவில்லை. மஜும்தாரோ, சர்க்காரோ ஏதேனும் புதிய பட்டயங்களின் அடிப்படையிலோ, புதிய சான்றுகளின் அடிப்படையிலோ தங்கள் வாதங்களை எடுத்துவைக்கவில்லை என்பதுபோலவே புத்தப் பிரகாஷ் என்ற அறிஞரும் தம் கருத்தை எடுத்துக்காட்டியுள்ளார். ஆக, இச் சிக்கல் ஏற்கெனவே உள்ள சான்றினை விளக்கம் காண்பதில், பொருள் கூறுவதில் சிக்கல் கொண்டதாகவே அமைந்துள்ளது என்பது வெளிப்படை.

இனி, ஒரு கேள்வி எழலாம். அப்படியாயின் இதில் எந்தக் கூற்றைத் தள்ளுவது, எந்தக் கூற்றைக் கொள்வது என்ற கேள்விதான் அது. ஏற்கெனவே வழக்கில் உள்ள கி. பி. 606-ல் ஹர்ஷர் ஊழி தொடங்கிற்று என்ற கருத்தினையே தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு மேற்கொள்கையில் எச்சரிக்கை ஒன்றினையும் மனத்தில் கொள்ள வேண்டும். இதுவே ஆராய்ச்சி வடிகட்டியில் வடிகட்டி எடுக்கப்பட்ட முடிவு என்று கருதிவிடக்கூடாது. கி. பி. 606 ஐத் தற்காலிகமாகக் கொள்வதனால் அறிஞர் ஆர். ஸி. மஜும்தாரின் ஆராய்ச்சியின் அடிப்படையில் எழுந்த விளக்கங்களைத் தவறு என்று தள்ளிவிட்டோம் என்றோ, அறிஞர் சர்க்காரின் விளக்கங்களைப் பூர்ணமாக ஏற்றுக் கொண்டோம் என்றோ பொருளாகாது. எதிர் காலத்தில் தகுந்த வரலாற்று ஆதாரங்கள் கிடைக்குமேயானால் கி. பி. 606-ல் ஹர்ஷ சகாப்தம் தொடங்கியது என்ற கூற்று சரியானது என்றோ தவறு என்றோ மெய்ப்பிக்கலாம்.

# 6. ஹர்ஷரின் படையெடுப்புகள்

ஹர்ஷரின் பல்வேறு போர்களையும் வெற்றிகளையும் குறிப்பிடக்கூடிய சான்றுகள் மிகக் குறைவே. அதனால் நன்கு வரையறுக்கப்பட்ட காலவரிசை முறைப்படி உறுதியாக அவருடைய அரசியல் படை வெற்றிகளைக் கூறுதல் மிகவும் கடினமாக உள்ளது. பாணர் ஹர்ஷ சரிதத்தை அரைகுறையாக முடித்து விட்டார். யுவாங் சுவாங்கின் குறிப்புகள் குழப்பங்களைக் கொண்டனவாகவும், தவறான விளக்கங்கள் பலவற்றை அளிப்பனவாகவும் அமைந்துள்ளன. ஹர்ஷரின் பதிவுகளோ, அவர் காலத்தியப் பதிவுகளோ அரசியல் வரலாற்றை அறியச் சிறிதளவும் உதவவில்லை. நாம் வேறு வழியில்லாமையால் ஹர்ஷர் காலப் படை நடவடிக்கைகளைக் கூடியவரை இந்த ஆதாரங்களை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து அறிவோம். ஹர்ஷர் தம் எதிரிகளுக்கு எதிராக மேற்கொண்ட படையெடுப்பிற்கான ஏற்பாடுகளை விளக்கமாகக் குறிப்பிடுகிறார். ஆனால், திக்குவிஜயத்திற்கான ஹர்ஷரின் திட்டங்களைக் குறித்துப் போதிய செய்திகளை அளிக்கவில்லை. ஹர்ஷ சரிதத்தை அரைகுறையாக முடித்தமையால் மேலும் விளக்கம் பெற முடியாமல் போய் விட்டது என்றபோதிலும் ஹர்ஷ சரிதத்தில் உள்ள பகுதி ஒன்று ஹர்ஷரின் அரசியல் வெற்றிகளைக் காட்டக்கூடியது.

நாம் அந்தக் குறிப்பினையும், அப் பகுதியின் சூழ்நிலையையும் கண்டால் அவை குறிப்பிடத் தக்கனவாக விளங்குகின்றன. ஹர்ஷ சரிதத்தின் ஒரு பகுதியில் ஹர்ஷரின் வெற்றிகள் சாதாரண மனிதர்கள் அறிந்த ஒன்று என்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஹர்ஷரின் அவைக்குச் சென்று வந்த பாணரை வரவேற்க உறவினர்களும், நண்பர்களும் கூடினர். ஹர்ஷரின் அவைக்குச் சென்று வந்தது பற்றிய செய்திகளை அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ள அவர்கள் அவாக் கொண்டிருந்தனர்.

**ஹர்ஷ சரிதம் கூறும் விளக்கம்**

'ஸ்ரீ ஹர்ஷர், அரசருக்கு அரசர்; நான்கு கடல்களின் தலைவர். பிற அரசர்களின் முத்திரை இரத்தினங்கள் அவர்தம்

கால்விரல்களை அலங்கரித்தன. எல்லாப் பேரரசர்களுக்கும் தலைவர் என்று பாணர் ஹர்ஷரை அறிமுகப்படுத்துகிறார். புஷ்ப பூதி வமிசத்தினை நிறுவிய புஷ்ப பூதி, 'பெரும் வமிசம் ஒன்றினை நிறுவியவர் ஆவாய்' என்று கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டார் எனவும், அந்த வமிசத்தில் 'எல்லாக் கண்டங்களிலும் ஹரிச்சந்திரனை ஒத்த ஆளுநர் உலகை வெல்வதில் இரண்டாம் மான்தாத்ரியை ஒத்த ஹர்ஷர் என்ற பேரரசர் தோன்றுவார்' எனவும் பாணரின் குறிப்புக் கூறுகிறது.

பாணர் ஹர்ஷரைச் சிறப்பித்துக் கூறுவதைத் தாம் நேரடியாகச் செய்யாமல் உறவினர்களில் ஒருவனான சியாமளன் பாணரிடம் கூறுவதுபோல் அமைத்துள்ளார். 'அரசரும் எல்லாத் தீவுகளின் தலைமை அரசருமான ஹர்ஷரின் அரசைத் தவிர வேறு எந்த அரசும் குறைபாடற்றது அன்று' என்று குறிப்பிடும் அவர் உடனே 'அவரைக் குறித்த பல்வேறு வியத்தகு சிறப்புகள் குறிப்பிடப்படுகின்றன' என்று குறிப்பிட்டு விட்டு அந்தச் சிறப்புகளையும் குறிப்பிடுகிறார்.

ஹர்ஷரின் வியத்தகு சிறப்புகளைப் பற்றிய முழு விவரங்களையும், சியாமளன் வாயிலாகப் பாணர் வெளிப்படுத்துகிறார். மக்கள் அனைவரும் பொதுவாக அவ் வெற்றிகளை அறிந்திருந்தனராம். அந்த வியத்தகு சிறப்புகளின் அரசியல் சிறப்புத் தன்மை குறித்து ஒன்றன்பின் ஒன்றாகக் காண்போம்.

ஹர்ஷர், வலிமையால் வெற்றி பெற்றவர் எனவும், பல்வேறு அரசர்களையும், அவர்களின் நண்பர்களையும், ஆதரவாளர்களையும் செயலற்றவர்கள் ஆக்கினார் எனவும் கூறப்படுகிறது. பாணர் சிறந்த சம்ஸ்கிருத அறிஞர் ஆகையால் அவருடைய படைப்பு முழுவதிலும் 'பொடி' வைத்து அதாவது உட்பொருள் வைத்துப் பேசப்படும் திறமையைக் காண்கிறோம். 'இறக்கையுடைய மலைகளை இருப்பிடத்தில் இருக்கச் செய்த இந்திரர்' என்று ஹர்ஷரின் படை வெற்றிகளையும், எதிரிகளை அடக்கி வென்றதையும் குறிப்பிடுகிறார். பல்வேறு அரசர்களுடன் கொண்ட ஹர்ஷரின் போரும், அவற்றை அடக்குவதில் அவருடைய வெற்றியும் நன்கு அறியப்பட்டிருந்தன. இது பண்டைய இந்திய அரசியல் முறைக்கு ஒத்ததே.

'எல்லா அரசர்களையும், தலைவர்களையும் மக்கள் அனைவருக்கும் தலைவர் என மன்னித்து ஆட்சி செலுத்த அவர் அனுமதித்தார்' இக் கூற்று ஹர்ஷருக்குப் பொருந்துவதே. ஹர்ஷரின்

அரசியல் கோட்பாடுகளுக்கு இது ஒத்ததே. சமுத்திர குப்தரைப் போலத் தோற்ற அரசர்கள் மேலாண்மையை ஏற்றுக்கொண்டதும் அவர்களிடத்து அத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடித்தார். பண்டைய இந்திய வரலாற்றில் அத்தகைய சான்றுகளைக் காணலாம். திரு. சாட்டர்ஜி, இரகு அரசனின் எடுத்துக்காட்டைக் காட்டுகிறார்[1].

'உயர்ந்த மனிதரான அவர், சிந்து அரசரை வென்ற பின்னர் அவ்வரசனின் செல்வத்தைத் தம்முடையதாக ஆக்கிக் கொண்டார்.'

'உடலைச் சுட்டெரிக்கும் காய்ச்சலாகச் சிந்து அரசருக்குப் பிரபாகர வர்த்தனர் விளங்கினார்' என்று பாணர் குறிப்பிட்டதை முன்னர்க் கண்டோம். பிரபாகர வர்த்தனரின் மறைவிற்குப் பின் ஹர்ஷர் சிந்து அரசரை வெற்றி கொண்டதோடு பெரும் செல்வத்தை போர் இறையாகப் பெற்றார்.

சிறந்த உடல் வலிமை உடையவர் என்றும், அரசரை (குமாரரை) யானையின் துதிக்கையிலிருந்து விடுவித்ததும் அந்த யானையையும் விட்டுவிட்டார் என்றும் ஹர்ஷ சரித உரைகாரர் ஒரு கதையினை விளக்குகிறார். ஹர்ஷரின் பட்டத்து யானையான தர்ஸபாதாவிடம் குமார ராஜா ஒரு முறை சிக்கிக்கொண்டார் எனவும், யானை அவ்வரசரைத் தன் துதிக்கையால் வளைத்துக் கொண்டது எனவும், அப்போது தம் பெரும் உடல் வலிமையைக் காட்டி அவரை விடுவித்தார் எனவும், பின்னர் அந்த யானையைக் காட்டினுள் விட்டுவிட்டார் எனவும் பாணர் கருத்துக்கு உரையளிக்கப்படுகிறது. பாணரைச் சந்திக்கக் குமாரர் வந்தபோது இந் நிகழ்ச்சி நடைபெற்றிருக்கலாம். தர்ஸபாதாவினைக் குறித்த விளக்கமான குறிப்பினை அளிக்கும் பாணர் இச் சம்பவம் குறித்துக் குறிப்பிடவில்லை. எனவே, ஹர்ஷரின் முகாமிற்கு வருகை புரிந்துவிட்டுப் பாணர் சென்றபின் இந் நிகழ்ச்சி நடைபெற்றிருக்கலாம்.

'பேரரசர் குமாரரை அரசராக ஆக்கினார்' ஹர்ஷரால் பேரரசராக்கப்பட்டவர் அஸ்ஸாமின் குமார ராஜாவாக இருக்க வேண்டும் எனவும், அவரே ஹர்ஷரிடம் முதன் முதல் நட்புப் பூண்டவராதலால், முடி சூட்டி அவரை அந் நிலைக்கு உயர்த்தியிருக்கவேண்டும் எனவும் வைத்யா கூறுகிறார். சசாங்கனிடமிருந்து கைப்பற்றிய அரசினையும் அவர் குமாரருக்கு அளித்திருக்கலாம்

[1] கௌரிசங்கர் சாட்டர்ஜியின் 'ஹர்ஷ வர்த்தன' பக்கம் 101

என வைத்யா குறிப்பிடுவது, ஹர்ஷர் - குமாரர் உறவு ஏற்பட்ட சூழ்நிலையை நோக்கினால் மிகவும் பொருத்தமாகப் படுகிறது. இருவருக்கும் பொது எதிரி சசாங்கனே. எனவே, சசாங்கனை வென்றபின் கௌடாவின் ஆட்சியினைக் குமாரருக்கு (பாஸ்கர வர்மனுக்கு) வழங்கியிருக்கவேண்டும்.

குமாரர், என்று குறிப்பிட்டது போர்க்கடவுளைக் குறிப்பிடக் கூடியதாகவோ, ஹர்ஷரின் இளைய மகனைக் குறிப்பதாகவோ கருத இடமுண்டு என்று ஹர்ஷ சரிதத்தின் பதிப்பாசிரியர்கள் கூறினர். போர்க்கடவுளைக் குறிப்பிடக்கூடியது என்று கருதினால், ஹர்ஷரின் தொடர்ந்த போர் குறித்த சான்றுகளைப் பெறுகிறோம். ஆனால், ஹர்ஷர் தம் மகனுக்கு முடிசூட்டியதாக ஆதாரம் ஏதுமில்லை.

'ஒரே தாக்குதலில் எதிரியைக் கீழே வீழ்த்தித் தம் வல்லமையை அவர் வெளிப்படுத்தினர்.' இது ஹர்ஷரைக் குறித்த பொதுவான பாராட்டுரையேயாகும். ஹர்ஷரின் எந்தப் படையெடுப்பை, எந்தப் பொது எதிரியை இது குறிப்பிடுகிறது எனத் தெரியவில்லை. ஹர்ஷர் பல போர்களில் தாமே வென்றுள்ளார். இது பெருமைக்கு எடுத்துக் கூறப்பட்டது அன்று என்று மட்டும் உறுதியாகக் கூறலாம்.

'சிங்கம் போன்ற மனிதரான அவர், தம் கரங்களினாலேயே எதிரியை வெட்டி வீழ்த்தித் தம் வன்மையைக் காட்டினர்.' முன்னால் காணப்பட்ட குறிப்பைப் போல இதுவும் பொதுவான பாராட்டுரையேயாகும். ஆனால், இது ஆதாரமற்ற சிறப்புரை அன்று. ஹர்ஷர் தாமே படைநடத்திச் சென்றார் என்பதையோ, ஹர்ஷர் தம் கைகளால் எதிரிகளை வீழ்த்தினர் என்பதையோ நம்பாமல் இருக்க வாய்ப்பு ஏதும் இல்லை. பல்வேறு படையெடுப்புகளில் ஒன்றில் தம் கைகளினாலேயே எதிரிகளை வீழ்த்தியிருக்கக் கூடும் எனலாம்.

'நெருங்க முடியாத பனி படர்ந்த மலைகளின் (இமயமலை) ஆட்சியாளர்களிடமிருந்து, அவர் திறை பெற்றார். டாக்டர் முகர்ஜியின் கருத்துப்படி இது காஷ்மீரைக் குறிப்பிடுவதாகும். காஷ்மீர் அல்லது நேபாளத்தைக் குறிக்கலாம் என்று வைத்யா கருதுகிறார். இக் காலக் கார்வால் பகுதியே என்று சாட்டர்ஜி கருதுகிறார்.

'மக்களைக் காப்பவரான அவர், காப்பாளர்களையும், மக்களின் ஆளுநர்களையும் பல்வேறு பகுதிகளிலும், திசைகளிலும் நியமித்தார். ஆளுநர்களையும், அரச பிரதிநிதிகளையும் நியமித்

தார் என்ற குறிப்புக் குறிப்பிடத் தருந்தது. பல்வேறு பகுதிகளி லும் அதிகாரிகளைத் திறை வசூலிக்கவும், சட்ட ஒழுங்கைக் காக்கவும் நியமித்தார் என்று கருதலாம்.

இதுவரை நாம் கண்ட பாணரின் குறிப்புகள் ஹர்ஷரின் படையெடுப்புகளையும், வெற்றிகளையும் நேரடியாகக் குறிப்பிட வில்லை. சசாங்கனுக்கு எதிரான படையெடுப்பினைக் குறித்த நல்ல விளக்கத்தினைப் பெற்ற நாம், ஹர்ஷரின் மற்றப் படை யெடுப்புகளைக் குறித்து அறியவில்லை. இதுவரை கண்ட குறிப்பு கள் எந்த அரசரின் பெயரையும், போர் எந்த ஆண்டில் நடை பெற்றது என்ற செய்தியையும் எடுத்துக்காட்டவில்லை. பாணரின் குறிப்புகளிலிருந்து அத்தகைய விளக்கத்தைப் பெற முடியாத நாம் யுவாங் சுவாங்கின் குறிப்புகளின் வாயிலேனும் பெறமுடியுமா என்று காண்போம்.

யுவாங் சுவாங் காட்டும் வெற்றிகள்

ஹர்ஷரின் போர்களையும், படை நடவடிக்கைகளையும் பாணரைப் போலப் பொதுப்படையாகவே யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். ஆனால், சில நேரங்களில் பெருங்குழப்பம் ஏற்படும் வகையில் செய்துவிடுகிறார். 'சிலாதித்தியர் அரச ரானதும் பெரும்படையினைப் பெற்றார். அதன் பின் தம் சகோதரரின் கொலைக்குப் பழிக்குப் பழி வாங்கப் புறப் பட்டார். அண்டை நாடுகளையும் அடிமைகொள்ள முயன்றார். கிழக்கில் படையெடுத்து, உடன்படிக்கைக்கு வர மறுத்த நாடு களுடன் ஆறு ஆண்டுகள் இடைவிடாது போர் நிகழ்த்தி ஐந்து இந்தியாவையும் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார். தம் ஆட்சிப் பகுதியை விரிவுபடுத்திப் படைப்பலத்தைப் பெருக்கினார். யானைப்படையின் எண்ணிக்கையை 60,000 ஆக வும், குதிரைப்படையை 1,00,000 ஆகவும் பெருக்கி வாளைச் சிறிதும் உயர்த்தாது 30 ஆண்டுகள் அமைதியாக ஆட்சி செலுத்தினார்' என அறிகிறோம். ஹர்ஷரின் போர்களைக் குறித்து அறிய இந்தப் பகுதி சிறிதளவும் உதவவில்லை. மற்றைய ஆதாரங்கள் அவ்வளவு உதவுவனவாக அமையவில்லை. ஹர்ஷரின் நாடகங்களை டாக்டர் முகர்ஜீ, சாட்டர்ஜி முதலான வர்கள் ஆராய்ந்து, அக் காலத்திய அரசியல் நிலையினை அவற்றின் வாயிலாக எடுத்துக்காட்டினர். கோசல, கௌசாம்பி அரசுகளுக்கு இடையேயான போர் ஒன்றினை இரத்னாவளி என்ற நாடகமும், கௌசாம்பிக்கும் கலிங்கத்திற்கும் இடையேயான போரையும், கௌசாம்பி அரசருக்கும் விந்திய அரசருக்கும்

இடையேயான போரையும் பற்றிப் பிரியதர்சிகாவும் குறிப்பிடு கின்றன. இந்த நாடகத்தின் தலைவன் வத்ச அரசனான உதயனை என்ற போதிலும், ஹர்ஷவர்த்தனர் தம்முடைய சொந்த வெற்றி யையே உதயனனின் வெற்றியாக ஏற்றிக் கூறியிருக்கலாம். இந்த நாடகத்தில் குறிப்பிடப்படும் இடங்கள் எல்லாம் ஹர்ஷரின் கீழ் இருந்தவை. இந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டும், பிற ஆதாரங்களைக் கொண்டும் நாம் ஹர்ஷரின் போர்களைக் குறித்த ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். அந்த ஆதாரங்கள் எந்த அளவிற்குப் பாணர், யுவாங் சுவாங்கின் குறிப்புகளோடு பொருந்துகின்றன என்பதனை ஆராய்தல் வேண்டும்.

## ஹர்ஷரின் திக்கு விஜயம்

ஹர்ஷர் மகாராஜாதிராஜா என்ற பட்டத்திற்குத் தமமை உரியவராகப் பல படையெடுப்புகளையும் மேற்கொண்டு வெற்றி பெறுவதன் மூலமாகப் பெறமுடியும் என்று எண்ணினார். ஹர்ஷர் மிலேச்சர் நாட்டின் பெருமைகளைப் பெற்றுத் திரும்பினார் என ஆரிய மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவில் குறிக்கப் பட்டுள்ளது. ஹர்ஷர் போர் செய்து வெற்றி பெற வேண்டிய தன் தேவை ஏற்பட்டது. ஹர்ஷர் போர்க்களத்தில் போரிட்டது பௌத்தக் கருத்துகளுக்கு முரண்பட்டது. அன்பு கொண்ட உள்ளத்துடன் மத நீதிகளுக்குக் கட்டுபட்டுக் கற்றுத் தேர்ந்த வராக இருப்பினும் க்ஷத்திரியர்களுக்கே உரிய கடமையைச் செய்வது, தமக்கு இழைக்கப்பட்ட தீங்கினால் கோபமடைந்து ஆக்கிரமிப்புச் செய்யும் அற்பப் பிராணிகளைக் கொல்வது ஆகியவை புனிதமான கடமையை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகக் கருதப்படும் என்று மஞ்சு ஸ்ரீ மூலகல்பா குறிப்பிடுகின்றது. யுவாங் சுவாங்கினால் குறிக்கப்பட்டிருக்கும் ஹர்ஷரின் ஆரம்ப காலப் படையெடுப்பு நிகழ்ச்சிகளும் வெற்றி களும் பாணர் எழுதியிருப்பவையும், மஞ்சு ஸ்ரீ மூலகல்பாவில் காணப்படுபவையும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகக் காணப்படு கின்றன. ஹர்ஷரின் திக்கு விஜயப் படையெடுப்பில் முதல் கட்டம் கௌடாவின் மீது படையெடுத்ததேயாகும்.

யுவாங் சுவாங் குறைந்தது மூன்று முறை கன்னோசி மராத்திய நாட்டுப் பொதுவான விளக்கத்திலும், இந்தியாவைப் பற்றிய குறிப்பிலும், 'ஐந்து இந்தியா' என்று இந்தியாவின் பகுதிகளைக் கூறுகிறார். யுவாங் சுவாங் 'ஐந்து இந்தியா' என்ற சொல்லை ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு உட்படுத்திப் பயன் படுத்தாமையால் சற்றுக் குழப்பம் ஏற்படுகிறது. இந்தியாவைப்

பற்றிய பொதுவான குறிப்புகளில் ஐந்து இந்தியா என்ற சொல்லே இந்தியத் துணைக் கண்டத்தை விளக்க யுவாங் சுவாங் பயன்படுத்தியுள்ளார். இந்தியாவைப் பற்றிய பொதுவான விளக்கத்தில் இந்து என்ற சொல் குறிக்கும் நாடுகள் பொதுவாக ஐந்து இந்தியா என்று கூறப்படுகின்றன. அந்நாட்டின் மூன்று பகுதிகளும் கடலால் சூழப்பட்டிருக்கின்றன. வடபகுதியில் பனிபடர்ந்த மலை அதற்கு எல்லையாக விளங்குகிறது என யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். ஆனால், மகாராட்டிரம், கன்னோசி நாட்டு விளக்கக் குறிப்புகளில் ஹர்ஷரின் கட்டுப்பாட்டிலிருந்த இந்தியத் துணைக்கண்டத்தின் வடபகுதிகள் மட்டும் ஐந்து இந்தியா என்று உரைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவை யுவாங் சுவாங் குறித்துள்ளதைப் போலவே பிற சீனத்துப் பயணிகளும் ஐந்து சிறப்பான பகுதிகளாகப் பிரித்துக் கண்டனர் என வாட்டர்ஸ் கூறுகிறார். இட்சிங் இந்தியாவை மேற்கு, இந்தியாவின் ஐந்து நாடுகள், ஆரிய தேசம், மத்திய தேசம், பிரம்ம ராஷ்டிரம் எனப் பிரித்துள்ளார். இந்திய நாட்டின் புராணங்களிலும், ஆதாரங்களிலும் இந்தியா புவன கோசா மத்தியதேசம், யுதிச்யா, பிரச்சியா, தட்சிணபாதம் , அப்ரந்தா என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இராஜ்ய சேகராவின் காவிய மீமாம்சாவில், பூர்வ தேசம், தட்சிண பாதம், பாசத் தேசம், உத்திர பாதம் முதலிய பிரிவுகள் காணப்படுகின்றன. சக்தி சங்கமா என்ற 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தந்திரக் கதை நூல் இந்தியாவை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கின்றது. ஆனால், யுவாங்-சுவாங் இந்தியா முழுவதையும் ஐந்து இந்தியா என்று குறிப்பிடுகிறார். ஆனால், அவர் ஐந்து இந்தியாவும் ஹர்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்று குறிப்பிடுகையில் அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்று விளங்கவில்லை. யுவாங் சுவாங் அலங்காரச் சொல்வழக்கைப் பின்பற்றி அவ்வாறு குறித்திருக்கக்கூடும். அல்லது குறிப்புகளை எழுதத் துணைபுரிந்தவரின் எழுத்துப் பிழையாக இருக்கக்கூடும். கன்னோசி அரச பொறுப்பை ஏற்ற ஆறு ஆண்டுகளுக்குள் அவர் ஐந்து இந்தியாவையும் தம் படை ஆற்றலால் வென்றார். மகாராஷ்டிர, கன்னோசிக் குறிப்புகளில் உள்ளபடி ஐந்து இந்தியா என்றே நாம் எடுத்துக் கொண்டால் அதை கற்பனைச் சொல் என்றும் அலங்காரத் தொடர் என்றும் முடிவு செய்யலாம். சக்கரவர்த்தி என விளக்குவதற்கு ஹர்ஷரை அவர் அப்படிக் கூறியிருக்கவேண்டும் அல்லது யுவாங் சுவாங் ஐந்து இந்தியா என்பதன் பொருளை

நன்றாக அறிந்திருந்தாலும் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஹர்ஷருக்கு உட்பட்டிருந்தது என்ற பெருமையைக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக அவ்வாறு கூறி யிருக்கலாம்.

கௌரி சங்கர் சட்டர்ஜி தம்முடைய ஹர்ஷ வர்த்தன என்ற நூலில் ஐந்து இந்தியா என்பதற்கு மாறாக 'ஐந்து கௌடா' என ஒரு சீன மூல நூல் குறிப்பிடுவதாகக் குறிப்பிட்டுள்ளார். விந்திய மலைக்குத் தெற்கே உள்ள பகுதிகளாகிய தட்சிணபாதம் என்ற பகுதியைக் குறிக்கத் திராவிடம் என்ற சொல் வழங்குவதைப் போன்று, வடக்கே உத்தரபாதம் என்ற பகுதியைக் குறிக்க கௌடா என்ற சொல் வழங்கிற்று என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. 'சப்த கல்பத் ரூமர்' என்ற நூலில் வடக்கு இந்தியப் பகுதிகளில் இருந்துவந்த ஐந்து பிரிவுப் பிராமணர் களைப் 'பஞ்ச கௌடர்' என்றும், தெற்கு இந்தியப் பகுதிகளில் இருந்துவந்த ஐந்து பிரிவுப் பிராமணர்களை 'பஞ்ச திராவிடர்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

பஞ்ச கௌடா என்று குறிக்கப்பட்ட ஐந்து பிரிவுகள் 'சரஸ்வதா', 'கன்யாகுப்ஜா', 'கௌடா,' 'மிதிலா', 'உத்கலா' ஆகியன ஆகும். கி. பி. 926ஆம் ஆண்டுக் குறிப்பு ஒன்றில் ஒரு பஞ்ச கௌடா சமூகத்தைப்பற்றிய வழக்கம் காணப்படுகின்றது. கி. பி. 11ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மாளவத்தின் அரசரான போஜரின் ஆட்சிக்குக் கௌடாவும், தட்சிணபாதமும் உட்பட்டிருந்தன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குக் கௌடா என்பது வட இந்தியா முழுவதும் என்ற பொருளை உணர்த்தும் நோக்கத்தில் குறிக்கப்படுகிறது. ஹர்ஷரை உத்தரபாதம் முழுவதற்கும் அரசர் எனப் புலிகேசி குறிப் பிட்டுள்ளதால் அப்படி ஒரு பெரிய அரசர் தம்மை வெல்ல முடிய வில்லை என்பதை உணர்த்தப் பயன்படுவதுடன் தம்மைத் தென் குலத் தலைவன் என அறிவித்துக்கொண்டதைப் போன்று காணப்படுகின்றது.

சசாங்கனால் இராஜ்ய வர்த்தனர் கொலை செய்யப்பட்ட தற்குப் பழி வாங்க ஹர்ஷர் மேற்கொண்ட கிழக்குப் படை யெடுப்பின்போது வென்ற பகுதிகளின் பெயர்களை யுவாங் சுவாங் குறிப்பிடவில்லை. யுவாங் சுவாங் கன்னோசி நகரிலிருந்து வங்காளத்திற்குப் பயணம் செய்தபோது சென்ற நாடுகளாவன அயோத்தியா, ஹயமுகா, பிரயாகை, கௌசாம்பி, விசோகா

சிரவஸ்தி, கபிலவஸ்து, இராமக்கிராமம், ஹிரிநகரம், வாரணாசி, சாஞ்ச்சு, வைசாலி, விர்ஜ்ஜி, மகதம், சம்பா, இராண பர்வதம், கஜங்கலா முதலிய நாடுகளை ஹர்ஷர் வென்றிருக்க வேண்டும். இப் பகுதிகளை ஆண்ட அரசர்களின் பெயர்கள் கொடுக்கப்படாத நிலையில் அப் பகுதிகள் ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டிருந்தன எனவும், பெயர் கொடுக்கபட்டிருந்த இடங்கள் மறைமுகமாக ஹர்ஷருக்குக் கட்டுப்பட்டிருந்தன எனவும் கருத வாய்ப்புள்ளது.

### ஹர்ஷரின் வலபி வெற்றி

வலபி அரசு பட்டாரகா என்பவரால் நிறுவப்பட்டு முதலாம் தாரசேனர், துரோண சிம்ஹர், முதலாம் துருவசேனர், முதலாம் சீலாதித்தியர் முதலியவர்களால் ஆளப்பட்டது. முதலாம் சீலாதித்தியரே ஹர்ஷர் கால அரசராவார். இவர் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்கு மாளவம் வரையிலான பெரும் பரப்பை ஆட்சி செலுத்தினர் என்று கருதப்படுகின்றது. எனவே, இவரே ஹர்ஷருக்கு மிக அண்மையில் அரசினை கொண்டிருந்தவராவார். முதலாம் சீலாதித்தியரும், அவருடைய வாரிசு முதலாம் காராக் கிரகரும் ஹர்ஷரால் தொடக்கத்தில் தொல்லை ஏதும் பெறவில்லை. ஆனால், ஹர்ஷர் தம் கவனத்தை மேற்கு இந்தியாவின்பால் திரும்பியபோதுதான் தொல்லை விளைந்தது. நௌசாரிச் செப்பேடுகள் [Nausari Copper Plates] ஸ்ரீ ஹர்ஷதேவரால் வலபி அரசர் வெற்றி கொள்ளப்பட்டார் எனவும், தத்தா என்ற அரசரிடத்து அவர் தஞ்சம் புகுந்தார் எனவும் குறிப்பிடுகின்றன.

தத்தாவிடம் தஞ்சம் புகுந்த வலபித் தலைவர் யார் என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு யுவாங் சுவாங்கின் குறிப்புகள் தக்க விடை பகர்கின்றன. 'ப-ல-பி(வலபி)யின் ஆளும் அரசர் க்ஷத்திரிய குலத்தவர் என்றும், சீலாதித்தியரின் உறவினர் என்றும் மாளவத்தின் முன்னாள் அரசரும் சீலாதித்தியரின் மருமகனும், கன்யாகுப்ஜத்தில் ஆட்சி நடத்தினர் என்றும் யுவாங் சுவாங் குறிப்பிட்டார். அவ் வரசரின் பெயர் 'து-லோ-போ-போ-தா' என்று யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளதைக் கொண்டு அவர் பெயர் துருவ பட்டா என அறிகிறோம். வலபி அரசருக்கு அடைக்கலம் அளித்ததால் ஹர்ஷரின் தாக்குதலுக்கு ஆற்றாது ஓடிய இரண்டாம் தத்தா கி. பி. 650 வரை ஆட்சி செலுத்தினர். எனவே, வலபிக்கும் கன்யாகுப்ஜத்திற்கும் இடையேயான போர்

இக் காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். இதிலிருந்து இரண்டாம் துருவ சேனருக்கும், ஹர்ஷருக்கும் இடையே போர் நடைபெற்றிருக்கலாம் என்பது தெளிவாகிறது.

ஆனால், இரண்டாம் துருவ சேனரின் மூத்த சகோதரர் மூன்றாம் தாரசேனருக்கும், ஹர்ஷருக்குமிடையே போர் நடைபெற்றிருக்கலாம் என்ற வைத்யாவின் கருத்தினையும் மறுப்பதற்கில்லை. மூன்றாம் தாரசேனருக்கும், இரண்டாம் துருவ சேனருக்கும், நான்காம் தாரசேனருக்கும் சம காலத்தவராக இரண்டாம் தத்தா கருதப்படுகிறார். இரண்டாம் தத்தாவைப் போலவே நான்காம் தாரசேனர் ஹர்ஷரின் காலத்தவராதலால் ஹர்ஷருக்கும், தாரசேனருக்கும் இடையே போர் நடைபெற்றிருக்க வாய்ப்புள்ளது. அடிப்படையான ஆதாரங்கள் எவ்விதமான உறுதியான முடிவிற்கும் வர உதவவில்லை. டாக்டர் விர்ஜ்ஜி இரண்டாம் துருவ சேனரின் காலத்திலேயே இப் போர் நடைபெற்றிருக்கவேண்டும் என்றும், இப் போர் கி. பி. 632-ல் நடைபெற்றது என்றும் கூறுகிறார்.

இப் போரில் இரண்டாம் துருவசேனர் தோற்றார். இரண்டாம் துருவ சேனர் அமைதி உடன்படிக்கையை மேற்கொண்டு, ஹர்ஷரின் மகளை மணந்துகொண்டு, திறையரசராக விளங்கினர் என டாக்டர் ஸ்மித் கருதுகிறார். இக் கருத்தினை டாக்டர் முகர்ஜி ஏற்றுக்கொள்கிறார். ஹர்ஷரின் திறைபரசரே வலபி அரசர் என டாக்டர் சர்க்கார் குறிப்பிட்டார். இக் கருத்தினை ஏற்காதவர் டாக்டர் மஜும்தார். சிறிய கூர்ஜர நாட்டின் அரசர் எப்படி வலபி அரசரைக் காத்திருக்கமுடியும் என்று வினவினர் அவர். துருவசேனர் புரோச்சிற்குத் தப்பிச்சென்று தஞ்சமடைந்த இடத்திலிருந்து ஹர்ஷரிடம் அமைதி உடன்படிக்கை மேற்கொண்டார் என்றும், திறையரசராக ஆள அனுமதிக்கப் பட்டார் என்றும் கருதலாம் என பியூஹிலர் கருத்துத் தெரிவிக்கிறார். மற்ற இடங்களில் நடைபெற்றதுபோல இதிலும் திருமண உறவினால் அமைதி வலுப்படுத்தப்பட்டது என்று கூறும் பியூஹிலரின் அனுமானத்தினால், தத்தாவின் சிறப்புக் குறைகிறது. எட்டிங் ஹரசனுக்கும் சிறிய அரசு வலபி அரசனுக்கும் அடைக்கலம் அளிக்கப்பட்டது என்ற எண்ணம் வியப்பை அளித்தது.

வலபி அரசன் ஹர்ஷரால் தோற்கடிக்கப்பட்ட பின்னர்ச் சாவிலிருந்து தப்பிக்க இருந்த ஒரே வழி உடன்படிக்கையோடு அருகிலிருக்கும் இடத்தில் அடைக்கலம் புகுதலே ஆகும். எனவே,

தத்தாவின் அவையே அருகில் இருந்த இடமாகும். கன்னோசிக்கும் வலபி அரசுக்கும் இடையே போருக்கான காரணம் என்ன என்று தெரியவில்லை. மாளவமே இதற்குக் காரணமாக விளங்கியிருக்கக் கூடும். மாளவம் பிரபாகர வர்த்தனர் அல்லது இராஜ்ய வர்த்தன ரால் வெற்றி கொள்ளப்பட்டு, இராஜ்ய வர்த்தனரின் கொலைக்குப் பின் ஏற்பட்ட குழப்பநிலையினால் வலபி அரசர்களால் கைப்பற்றப் பட்டிருக்கக்கூடும். எனவே, இழந்த பகுதியை மீண்டும் கைப்பற்றக் கிழக்கில் ஏற்பட்ட தொல்லைகளிலிருந்து விடுபட்ட வுடன் ஹர்ஷர் முயற்சி செய்திருக்கவேண்டும். குஜராத்திலும், மாளவத்திலும் தங்கள் பேரரசு கொள்கையினைப் பரப்புவதில் ஏற்பட்ட போட்டியே இப் போருக்குக் காரணம் என அல்டேகர் கருதுகிறார்.

வலபி அரசனை வென்றதன் வாயிலாக ஹர்ஷரின் புகழ் உயர்ந்தது. வலபி அரசனுடன் கொண்ட மணஉறவு ஹர்ஷரின் இராஜ தந்திரத்தைக் காட்டுகிறது என்று கருதும் டாக்டர் திரிபாதி, வலபி அரசர் திறைபரசர் நிலைக்குத் தள்ளப்பட்டார் என்ற கூற்றினை ஏற்கவில்லை. யுவாங் சுவாங்கின் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு, துருவ பட்டா சுயேச்சை அரசர் ஆனார் என்று அவர் கூறுகிறார். வலபி அரசர் ஹர்ஷரால் வெல்லப் பட்டார் என்பதற்கும், ஹர்சருக்குத் திறைபரசர் ஆனார் என்பதற்கும் அடிப்படை இல்லை. ஹர்ஷர் முதலில் சில வெற்றிகளைப் பெற்றார். வலபி அரசர் இரண்டாம் தத்தா மற்ற நண்பர்களின் உதவியுடன் நிலைமையைச் சமாளித்தார் என்று டாக்டர் மஜும்தார் கூறுகிறார். ஆனால், டாக்டர் பைசர்மா மேலே கூறப்பட்ட மஜும்தாரின் கருத்து ஏற்கக்கூடியதாகவும் தகுந்ததாகவும் அமையவில்லை என்றே கருதுகிறார்.[1]

## மகதம்

மகதத்தை ஆட்சிபுரிந்துவந்தவர் பூர்ண வர்மர் என்ற மௌகாரிக் குடும்பத்தைச் சேர்ந்த அரசராவார். 'அசோக ராஜாவின் கடைசி வழித்தோன்றலான மகதத் தின் அரசர் பூர்ண வர்மர், போதி மரத்தின் அடியைப் புனித நீராட்டி, நட்டு மறுபடியும் தழைக்கச் செய்தார்' என யுவாங் சுவாங் குறிப்பிடுவதைக் கொண்டு மௌரிய வழித்தோன்றல் என்று அவர் கருதப்பட்டார் எனினும் மௌகாரிக் குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதே பொருத்தமாகப் படுகிறது. அசோகர் காலத்

[1] Dr. B. Sharma, *Harsa and His times*, p. 173

தில் அவர் போதி மரத்தைத் தழைத்திடச் செய்து வழிபாடு செய் வித்தார். அப்படிப் போதிமரத்தைப் போற்றியவர்கள் வரிசை யில் யுவாங் சுவாங் கடைசியாகப் பூர்ண வர்மனைக் கருதியிருக்கக் கூடும். பூர்ண வர்மர் மௌகாரி குடும்பத்தைச் சார்ந்தவர் எனக் கூறப்பட்டதை மௌரியர் என அவர் புரிந்துகொண்டிருக்க வேண்டும். இவ்வாறு நாம் கருதுவதற்குக் காரணம் ஒன்று உள்ளது. அக் காலப் பேச்சு வழக்கில் மௌகாரிகா என்ற பெயரின் கடைசியில் உள்ள 'கா'வித் தக்கொடுக்கும் அழுத்தத்தைக் குறித்து மொகாரிகா எனக் குறிப்பிட்டனர் என்பதாலும், அங்கு வாழ்ந்தவர்களை மொகாரி எனக் குறித்தனர் என்பதாலும் அவ் வாறு கருதவேண்டியுள்ளது. பல சீனத் தூதர்கள் சிலாதித் தியரை மகதத்தின் அரசர் எனக் குறிப்பிட்டிருப்பதால் ஹர்ஷர் தம் ஆட்சியின் இறுதியில் தாமே ஏற்றுக்கொண்டார் எனக் கருத இயலாது. ஹர்ஷர் மகதத்தைக் கடந்து சென்றுதான் சசாங் கனைப் புந்ரவர்த்தன என்ற இடத்தில் போரிட்டு வென்றதாக மஞ்சுஸ்ரீ மூலகல்ப கூறுவதால் திக்கு விஜயத்தின் சமயம் மகதம் ஹர்ஷருக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

ஹர்ஷரின் திக்கு விஜயத்தின் முதல் கட்டம் புந்ரவர்த்தன போரில் கிடைத்த வெற்றியுடன் முடிவடைந்தது. இப் போரில் ஹர்ஷர் வெற்றி பெற்றதால் வட இந்தியாவின் ஆற்றல் மிக்க அரசராக விளங்கினர். ஹர்ஷர் அப் படையெடுப்பில் சசாங்கனை வென்றதோடு மட்டுமின்றி, அவர் சென்ற வழியில் அமைந்திருந்த நாடுகளை ஆண்ட பல சிற்றரசர்களையும் வென்றூர். கிழக்குக் கங்கைச்சமவெளியின் ஆட்சிப்பொறுப்பு சசாங்கனிட மிருந்து ஹர்ஷரிடம் வந்துசேர்ந்தது. அடுத்து, ஹர்ஷர் கன்னேசி அரசுக்கு மேற்கே அமைந்துள்ள பகுதிகளை வெல்வதற்குரிய முயற்சியை மேற்கொண்டார். யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்பில் கன்னேசிக்கு மேற்கே அமைந்திருந்த அரசுகளின் பட்டியல் காணப்படுகிறது. அவை கபிதா (இன்றைய சங்கிசா), பிலோஷன்ன (இன்றைய அட்ரான்ஜிகேரா) அகித்சத்திரா (இன்றைய கிழக்கு ரோஹில்கண்டு), காசிப்பூருக்கு அருகிலுள்ள கோவிஸன, ஹரித்துவாரத்திற்கு வடகிழக்கு மலைப் பகுதியி லுள்ள பிரம்மபுரா, மதிப்புரா (இன்றைய மடவார்) ஸ்ருக்ன (இன்றைய சுஹ்தனேஸ்வரம்), பாரியாத்ரா (வடக்கு ஜெய்ப்பூர்) சதத்ரு (இன்றைய சர்ஹிந்த்), குலுதா (இன்றைய குல்லு), கிழக்குப் பஞ்சாபிலுள்ள ஜலந்தரா, மேற்குப் பஞ்சாபின் சுக்கா முதலியனவாகும். சீனப் பயணி குறிப்பிட்டுள்ள இப் பகுதிகளை ஹர்ஷர் வென்று தம் ஆட்சியை நிலைநிறுத்தினர். மேற்குப் பகுதியில் ஹர்ஷர் மேற்கொண்ட ஆய்வுப் படையெடுப்பு

வர்த்தனுக்களின் அதிகாரத்தை நிலைநிறுத்த உதவியது. ஹர்ஷர் புதிய படையெடுப்புகளை மேற்கொண்டு நான்கு பகுதிகளையும் வெல்வது என்ற திக்கு விஜயம் முடிந்தது எனக் கருதலாம். ஹர்ஷர் ஐந்து இந்தியாவை வெல்லும் முயற்சியில் இடைவிடாது போர் செய்தார் எனக் கிழக்கு, மேற்குப் படையெடுப்புகளை மனத்திற் கொண்டு யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளார். கி. பி. 612ஆம் ஆண்டிற்குள் கிழக்கில் வடமேற்கு வங்காளத்திலிருந்து மேற்கே பியாஸ் நதிவரையில் உள்ள பகுதிகளை இணைத்துத் தமது ஆட்சிக்கு உட்படுத்தியபின் ஹர்ஷர் வென்ற பகுதிகளை ஒருங்கிணைத்து நிலை நிறுத்தி நிர்வாகத்தைச் சீரமைத்துப் பேரரசாக்கும் பணியில் முனைந்தார்.

பாணர் ஹர்ஷ சரிதத்தில் சிந்து அரசரை வெற்றி பெற்றது குறித்துச் சிலேடையாகக் குறித்துள்ளார். பஞ்சாபிலுள்ள ஆறுகள் இணையும் பகுதிவரை பரவியுள்ள சிந்து அரசு ஹர்ஷப் பேரரசுக்கு அண்மையில் அமைந்திருந்ததால் அதன்மீது படையெடுப்பு மேற்கொள்வது ஹர்ஷருக்குக் கடினமான தன்று. சிந்துவைத் தம் மேலாண்மைக்கு உட்படுத்தியபின் பேரரசின் எல்லையை விரிவுபடுத்தும் முயற்சியை ஹர்ஷர் மேற்கொண்டார். இவ் வெற்றிகளுக்குப் பின்னரே சாளுக்கிய அரசரான இரண்டாம் புலிகேசியுடன் போரிட ஹர்ஷர் முடிவுசெய்தார் எனக் கருதப்படுகிறது.

## புலிகேசியுடன் ஹர்ஷரின் போர்

ஹர்ஷரின் போர்களில் சாளுக்கிய அரசரான இரண்டாம் புலிகேசியுடன் மேற்கொண்ட போர் குறிப்பிடத் தகுந்த ஒன்று என்பதில் ஐயமில்லை. கி. பி. 610-ல் வாதாபியின் அரசுரிமையை இரண்டாம் புலிகேசி ஏற்றார். அதற்கு முன் நடைபெற்ற உள் நாட்டுப் போரில் புலிகேசி வெற்றி பெற்றார். அவருடைய சிற்றப்பா மங்களேசர் தம் மகனைச் சாளுக்கிய அரசராக்க விரும்பினார். மங்களேசரை வென்று புலிகேசி ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். புலிகேசி உள்நாட்டுப் போரினால் நாட்டில் தோன்றியிருந்த குழப்பமான அரசியல் நிலையைத் திறமையாகச் சமாளித்துத் தம் அதிகாரத்தை நிலைநிறுத்தினார். அதன் பின்னர்ப் புதிய பகுதிகளைக் கைப்பற்றும் முயற்சியை மேற்கொண்டார். புலிகேசி தெற்கில் கடம்பர்கள், கங்கர்கள், அலூபர்கள், கொங்கண மௌரியர்கள் முதலியவர்களின் அரசுகளையும், வடக்கில், லாதா, மாளவம், கூர்ஜரம் முதலிய அரசுகளையும் வென்றதாக ஐஹோலே (ஐஹோல்) கல்வெட்டுக் கூறுகிறது.

### வாதாபிச் சாளுக்கியர்கள்




வடக்கில் புலிகேசி பெற்ற வெற்றிகள் ஹர்ஷருக்குப் பெரும் இடையூறுகளாய் அமைந்தன. வடபகுதியின் பேரரசரான ஹர்ஷ வர்த்தனரால், தென்பகுதியில ஆட்சி செலுத்திய சாளுக்கிய மன்னர் புலிக்கேசியின் ஆற்றல் வளர்ச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

வலபி அரசருக்கு எதிரான ஹர்ஷரின் வெற்றி பெரும் சிறப்பு வாய்ந்த ஒன்று. இதுவே ஹர்ஷருக்கும், புலிகேசிக்கும் இடையே போர் ஏற்பட்டதற்கான உடனடிக் காரணமாகும். லாதாக்கள், மாளவர்கள், கூர்ஜரர்கள் ஆகியோர் புலிகேசிக்கு அடிபணிந்தனர். பிரபாகர வர்த்தனர் இந்த அரசுகளுக்குத் தொடர்ந்து தொல்லையாக அமைந்தார். பிரபாகர வர்த்தனர் இறந்ததும் தங்கள் சுயேச்சை உரிமையைப் பெறவும் பிரபாகர வர்த்தனரின் உறவினர்களது தாக்குதலிருந்து தப்பித்துக் கொள்ளவும் அவர்கள் இரண்டாம் புலிகேசியிடம் சரண் புகுந்தனர். இதுவே ஹர்ஷருக்கும், இந்த அரசுகளுக்குமிடையேயான பகை உணர்விற்கு

அடிப்படையாகும். இரண்டாம் துருவ சேனருக்கு இரண்டாம் தத்தா தஞ்சம் அளித்தது சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கியது. 'லாதாக்கள், மாளவர்கள், கூர்ஜரர்கள் ஆகிய பொது எதிரிக்கு எதிரான பொதுக் காரணத்தைக் கொண்டிருக்கலாம் அல்லது ஹர்ஷருக்கும், புலிகேசிக்கும் இடையே இடுக்கடை நாடாக (buffer state) விளங்கிய அவற்றிற்கு எதிராக வெற்றி பெறவும், அவ்வரசுகளை வெல்லவும் ஹர்ஷர் எண்ணியிருக்கலாம்' என்று ஹர்ஷர் கூறுவது பொருத்தமாகப்படுகிறது. ஆனால் 'ஹர்ஷருக்கும், இரண்டாம் தத்தாவிற்கு இடையேயான பகையே, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, ஹர்ஷ வர்த்தனர் போரைத் தோற்றுவித்தது என்ற மஜூம்தாரின் கூற்றுச் சரியெனப் படவில்லை.

மஜூம்தாரின் கூற்றை நாம் யுவாங் சுவாங் குறிப்பின் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கையில், இரண்டாம் புலிகேசிக்கு எதிராகத் திட்டமிட்ட போர் ஒன்றினை நிகழ்த்தினார் என்று தெரிகிறது. 'கிழக்கிலும், மேற்கிலும் படையெடுத்த போது, அருகிலும், தூரத்திலும் உள்ள நாடுகள் பணிந்தன. ஆனால், மகாராட்டிரம் (மொ-ஹ-ல-சா) பணிய மறுத்தது. அம்மக்கள் பெருமையுடையவர்களாயும், போர் ஆர்வம் மிக்கவர்களாயும், தவறுகளுக்குப் பழிவாங்கும் இயல்புடையவர்களாயும் தம்மை இழிவுபடுத்தியவர்களைக் கொலை செய்யத் தயங்காதவர்களாயும் விளங்கினர்' என்று யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார்.

ஆற்றல் மிக்க யானைப்படை ஒன்றைப் புலிகேசி நிருவகித்து வந்தார். போர்க்களத்திற்குச் செல்லும்முன் யானைகளுக்கு மதுவையூட்டி, மூர்க்கத்துடன் போர்புரியச் செய்யும் வழக்கத்தையும், சீனப் பயணியின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். ஹர்ஷரின் படையில் யானைப்பிரிவு மிகவும் ஆற்றல் மிக்கது என்பதனைப் பாணரின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். ஐஹோல் குறிப்புகளும் ஹர்ஷரின் சிறப்பான யானைப் படையைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன.

ஹர்ஷர் ஆற்றல் வாய்ந்தவரான புலிகேசியை எதிர்த்து நிற்கத் தேவையான படைகளைத் திரட்டிக்கொண்டார்; பெரும் படையொன்றினைத் திரட்டினார் என்றே கூறவேண்டும். ஐந்து இந்தியாவிலிருந்தும் படைகளைத் திரட்டினார். எல்லா நாடுகளிலிருந்தும் சிறந்த தளபதிகளைத் திரட்டினார். யுவாங் சுவாங் போருக்கான பல்வேறு ஏற்பாடுகளையும், விளக்கங்களையும் அளித்த போதிலும், ஹர்ஷர் - புலிகேசிப் போரின் முடிவினைக்

குறித்து ஏதும் தெரிவிக்கவில்லை. ஆனால், யுவாங் சுவாங்கின் குறிப்புகளின் வாயிலாக ஹர்ஷரே ஆக்கிரமிப்பாளர் என்றும் போரைத் தொடங்கியவர் என்றும் தெரிகிறது. ஹர்ஷர் எதிரியை வெல்லுவதில் முழுமையான வெற்றி பெறவில்லை. ஆனால், போரில் ஹர்ஷரின் தோல்வி குறித்து யுவாங் சுவாங் எவ்விதக் குறிப்பும் அளிக்கவில்லை.

இப் போருக்குப் பின் கிடைத்த சான்றுகளிலிருந்து ஹர்ஷர்–புலிகேசிப் போர் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சியாக விளங்கிற்று என்பது நிச்சயமாகத் தெரிகிறது. பல்வேறு அறிஞர்களின் கவனத்தை இப் பிரச்சினை கவர்ந்துள்ளது. புலிகேசி, 'பரமேஸ்வரர்' அல்லது 'உயர்ந்த அரசர்' என்று புலிகேசியின் வாரிசுகளால் அழைக்கப்பட்டார் என்று பல்வேறு பதிவுகள் காட்டுகின்றன. இரண்டாம் புலிகேசியின் வாரிசுகள் தம் வமிசத்தின் தலைவராக விளங்கிய இரண்டாம் புலிகேசியின் படை வெற்றிகளைக் குறித்துத் தம்முள் பெருமித உணர்வு கொண்டிருந்தன. இதனால், இரண்டாம் புலிகேசியால் தோற் கடிக்கப்பட்டார் என்று முடிவு கட்டினர்.

'அவருடைய நீண்ட வெற்றிவாழ்க்கையில் தோல்வி ஒன்று ஏற்பட்டது. இரண்டாம் புலிகேசி தம்முடைய வெற்றிகளில் ஹர்ஷருடன் போட்டியிட்டார். இரண்டாம் புலிகேசியை வென்று தூக்கியெறிய ஹர்ஷர் தாமே முன்னின்று படையெடுப்பினை நடத்தியபோதிலும் அவருடைய முயற்சி வெற்றி பெறவில்லை. தக்காண அரசர் மிகத் திறமையுடன் நர்மதைக் கணவாய்களைக் காத்து நின்றமையால் அந்த ஆற்றினைத் தம் எல்லையாகக் கொண்டு ஹர்ஷர் திரும்ப வேண்டிய தாயிற்று' என்று ஸ்மித் கூறுகிறார்

முகர்ஜியும் அந்நகையை குறிப்பினையே அளிக்கின்றார் டாக்டர் முகர்ஜி இரண்டாம் புலிகேசியின் படைவெற்றியினை அவருடைய மக்களின் இயல்பிற்கும் ஆட்சிக்கும் எடுத்துக் கொள்கிறார்.

டாக்டர் திரிபாதி 'வடக்கு அரசரைத் தெற்கு அரசர் வென்ற முதல் சிறந்த படைவெற்றி' என்று குறிப்பிடுகின்றார். மேலும், அவர் இவ் வெற்றிக்கு மராத்தியர்களின் பெருமித உணர்வும், போர் ஆவல் இயல்பும், புலிகேசியின் மிகச் சிறந்த படைகள் குதிரைகள், யானைகள் ஆகியவற்றைக் கொண்டிருந்த நிலையும்

காரணம் என்று குறிப்பிடுகின்றார். வலபி அரசரான இரண்டாம் துருவசேனர், புரோச்சின் இரண்டாம் தத்தா, சாளுக்கிய அரசர் புலிகேசி ஆகியவர்களுடன் மேற்கொண்ட ஹர்ஷரின் போர்கள், அவை தெற்குப் படையெடுப்பாயினும் சரி, வேறு படையெடுப்பு களாயினும் சரி தோல்வியில் முடிந்தன என்ற மஜூம்தாரின் கருத்துகளை டாக்டர் அல்டேகர், ஸ்ரீ கௌரி சங்கர் சாட்டர்ஜி, டாக்டர் விர்ஜ்ஜி முதலானோர் கொண்டுள்ளனர்.

ஹர்ஷரைப்பற்றி எதிர்ப்பு உணர்வு கொண்டுள்ள டாக்டர் மஜூம்தார்கூடப் புலிகேசியும் அவர்தம் வாரிசுகளும் இப் போரின் முடிவினை வெகு உயர்வாகக் கூறிவிட்டனர் என்ப தோடு சாளுக்கிய அரசன் ஹர்ஷரைப் படுதோல்வி அடைய செய் தான் என்றே இக் கால வரலாற்றறிஞர்களும் கூறினர் என்று குறிப்பிட்டார். இரண்டாம் புலிகேசியின் ஆதரவாளரான இரவி கீர்த்தி என்பவர் ஜீனேந்திர ஆலயத்தில் உள்ள ஐஹோல் பட்டயத்தில் அத்தகைய முடிவினைச் செதுக்கி வைத்துள்ளார். இப் பட்டயத்தைப் பதிப்பித்த கீல்ஹான் என்பவர் இரவி கீர்த்தி அரசவைப்புலவர்கள், பிரஸஸ்தி எழுதுபவர்கள் ஆகியவர் களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் என்று கூறலாம் என உரைக்கிறார். ஆனால், புலிகேசியின் வாரிசுகளைப் போலப் பல்வேறு இக் கால வரலாற்றறிஞர்களும் அவரைச் சிறந்த வரலாற்றறிஞர் எனவும், உண்மைகளை எடுத்து விளம்புவோர் எனவும் கருதுகின்றனர். அலங்கார சாஸ்திரக் கலையில் இரவி கீர்த்தி மிகவும் தேர்ந்தவராவர். இப் பட்டயத்தில் காணப்படும் பல்வேறு பகுதிகள் இரகு வம்சம் கிராதார்ஜுனியம் ஆகிய வற்றை ஒத்திருக்கின்றன. இரவிகீர்த்தி இரகு வம்சத்தின் நான்காம் பகுதியில் காணப்படும் இரகு செய்த திக்கு விஜயத்தை மாதிரியாகக் கொண்டு எழுதியுள்ளார் என்று தெரிகிறது.

எனவே, புலிகேசியின் வெற்றிச் சிறப்புகளிலும் பல்வேறு போர்களைக் குறிக்கின்ற பகுதிகளை உற்று நோக்குகின்றபோது புலிகேசிக்கு உரியன எனக் கீல்ஹானின் குறிப்பிடுபவை சரியான வையே என்பதை காட்டுகின்றன. இரவி கீர்த்தியைப் பாகு பாடற்ற முறையில் வரலாற்று உண்மைகளை எடுத்துக் காட்டு பவர் என்றும் கூற முடியாது. இரண்டாவதாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும். வடமொழி இலக்கியத்தில் அத்தகைய போக்குக் காணப்படுகிறது. பாணரின் ஹர்ஷ சரிதத்திலும் இத் தகைய முறையில் எழுதப்பட்டிருப்பதை ஏற்க மறுக்கின்ற வரலாற்றாசிரியர்கள் இரவி கீர்த்தியின் பிரஸஸ்தியை வரலாற்றுச்

சான்ருகக் கொள்வது தமக்கு வியப்பை அளிப்பதாக டாக்டர் சர்மா கூறுகின்ருர்.

ஹர்ஷரைப் பற்றி ஐஹோல் கல்வெட்டில் குறிப்பிடப் பட்டிருப்பதைக் காணுகின்ற ஒருவர், எப்படி ஹர்ஷர் தோல்வி யடைந்தார் என்ற முடிவிற்கு வந்தனர் என்று வியப்படையாமல் இருக்க முடியாது எனவும் டாக்டர் சர்மா கூறுகிருர். இரவி கீர்த்தியின் பிரஸஸ்தியில் ஹர்ஷரின் யானைகள் வீழ்ந்ததை எண்ணி ஹர்ஷர் வருந்திஞர் என்ற பொருளிலேயே கூறப் பட்டுள்ளது எனச் சர்மா கூறுகிருர். இரவி கீர்த்தி ஹர்ஷர் தோற்கடிக்கப்பட்டார் என்று வெளிப்படையாகத் தெளிவாகக் கூறவில்லை. அதே நேரத்தில் புலிகேசியுடன் ஹர்ஷர் மேற் கொண்ட போரில் ஹர்ஷர் தோல்வியடைந்ததாகக் குறிப்பிட வில்லை. எனவே, புலிகேசியின் வாரிசுகளும் இக் கால அறிஞர் களுமே அவ்வாறு கூறினர். இரண்டாம் புலிகேசி ஹர்ஷரைத் தோற்கடித்துப் பரமேஸ்வரா என்ற பட்டத்தைக் கொண்டார் என்ருல் அதனை இரவி கீர்த்தி ஏன் தெளிவாக எடுத்துரைக்க வில்லை? புலிகேசியின் வாரிசுகள் தம்முடையசுய விளம்பரத்திற் காகவே அவ்வாறு கூறினரேயன்றி எவ்வித ஆதாரமும் கொண்டு கூறவில்லை என்று டாக்டர் சர்மா கூறுகிருர்.

'புலிகேசியின் வாரிசுகள் அவரைப் புகழ்ந்து எழுதுகிருர்கள் என்ருல் அதில் பொருள் இருக்கிறது. ஆனல், இக் கால வரலாற்ருசிரியர்களும் அவ்வாறு கூறுவது ஏன்?' என்ற விஞவினை எழுப்பி டாக்டர் சர்மா ஹர்ஷர் புலிகேசியை முழுமை யாகத் தாக்கவில்லை எனவும், புலிகேசி தென்பகுதியில் செல் வாக்குடன் திகழ்ந்தார் எனவும் இரவிகீர்த்தி குறிப்பிட்டதைப் போல இப் போரில் ஹர்ஷர் சில யானைகளை இழந்து வருந்தி யிருக்கலாம் எனவும், இப் போருக்குப் பின் அவர் தொடர்ந்து போரினை நடத்தாமல் போயிருக்கக்கூடும் எனவும் டாக்டர் சர்மா குறிப்பிடுகிருர்.

டாக்டர் சர்மா ஜபல்பூருக்கு அருகில் உள்ள இராம நகரம் என்னுமிடத்தில் வழங்கிவரும் மரபுச் செய்தி ஒன்றினைக் கூறுகிருர். இந்த மரபுச் செய்திகளில், நர்மதைக்கு அருகில் ஜபல்பூருக்கு ஐந்து கல் தொலைவில் திலவாராகாதா என்னு மிடத்தில் ஹர்ஷருக்கும் புலிகேசிக்கும் போர் நடைபெற்றதாக காணப்படுகிறது. இருவரும் நீண்ட நாள்கள் வெற்றி தோல்வி காணுது போரிட்டுக்கொண்டிருந்தனர். இறுதியில் இருவரும்

களைப்புற்று உடன்பாட்டிற்கு வந்தனர். நர்மதைக்குத் தெற்கே தெற்குப் பகுதிகளின் வெற்றியின் அடையாளமாக அந்தக் கிராமத்தில் ஆலயம் ஒன்று ஹர்ஷர் அமைக்கப் புலிகேசி உடன் பட்டார் எனக் கூறப்படுகிறது. புலிகேசியின் பகுதியில் நர்மதைக்குத் தெற்கே ஹர்ஷர் ஆலயம் ஒன்று அமைத்தார். இச் செய்தியினை அளிக்கும் தலக் குறிப்புகள் நம் கவனத்தை ஈர்க்கின்றன. இதற்குக் காரணம் இரவி கீர்த்தியின் பிரசஸ்தி யையும், நர்மதையையும், விந்திய மலையையும் குறிப்பிடு வதுதான்.

டாக்டர் முகர்ஜி ஐஹோல் பட்டயத்தின் அடிப்படையில் புலிகேசி-ஹர்ஷர் போர் விந்தியமலைக்கருகில் நடைபெற்றிருக்க வேண்டும் எனவும், புலிகேசியின் வடக்கு எல்லையென ரேவா எனப்பட்ட நர்மதை விளங்கிற்று எனவும் குறிப்பிடுகிறார். இரவி கீர்த்தியின் குறிப்புகள், விந்தியமும், ரேவாவும் புலிகேசி யினிடத்து இல்லை என்பதனைத் தெளிவாகக் காட்டுகின்றன. நர்மதையின் தெற்குக் கரையில் புலிகேசியின் படைகள் முகா மிட்டிருந்தன என்று தோன்றுகிறது. இரவி கீர்த்தி ரேவாவின் மணற்பாங்கான கரைகளைக் கூறுவதனைத் தல மரபுகளின்படி ஒப்பிட்டுப் பார்த்தால் சரியாகப் பொருந்துகிறது. மலைப் பாங்கான அப் பகுதி முழுமையும், இராம நகரத்திற்கு மூன்று கிலோ மீட்டர் அருகிலுள்ள திலவராகதாவும் அதைச் சுற்றி யுள்ள பகுதிகளும் உள்ள இடத்தில் நர்மதையின் கரை மணற் பாங்காக உள்ளது. இந்த இராம நகரத்தில்தான் தெற்குப் பகுதியின் தலைவரான புலிகேசியை வென்றதன் அடையாளமாக ஹர்ஷர் கட்டிவைத்ததாகக் கூறப்படுகின்ற ஆலயம் அமைந் திருந்தது. விந்திய மலைப்பகுதியின் நீண்ட மலைப்பகுதியை இந்த இடத்தில்தான் எளிதில் கடக்கலாம். ஹர்ஷர் நர்மதையை இவ் விடத்தில்தான் கடக்க எண்ணியிருக்க வேண்டும்.

டாக்டர் ஸ்மித்தின் கருத்தினை டாக்டர் மஜூம்தார் ஏற்க வில்லை. பாணரின் குறிப்புகளிலிருந்து அறியப்படும் செய்தியினை ஒப்பிட்டுப் பார்த்தால் டாக்டர் மஜூம்தார் குறிப்பிடுகின்ற 'உண்மையான போர் வடக்கில் சற்றுத் தள்ளி நடை பெற்றிருக்கவேண்டும்' என்ற கருத்து பொருத்தமாய் இல்லை என டாக்டர் சர்மா கூறுகிறார். பாணர் விந்திய மலைப் பகுதி முழுமையும், ஹர்ஷருக்குக் கட்டுப்பட்ட தலத் தலைவர்களால், ஆளப்பட்டது என்று கூறுகிறார். ஆகையால், டாக்டர் மஜூம்தார்

ஹர்ஷரின் காலத்தில் பண்டேல் கண்டில் பல்வேறு சுயேச்சை அரசுகள் இருந்தன என்று கூறுவதை ஒப்புக்கொள்ள இயலாது.

விந்திய மலைப்பகுதி முழுமையும் தம் சகோதரியைத் தேடினர் என்ற ஹர்ஷ சரிதத்தின் குறிப்பினால் ஹர்ஷரின் நேரடிக் கட்டுப் பாட்டினுள் இருந்தது என்று கருதவேண்டியுள்ளது. அங்கே ஹர்ஷர் சரபர்களின் தளபதியும் புகம்பாவின் சகோதரி மகனு மான நிர்கதாவைச் சந்தித்தார். அந்த நிர்கதா ஹர்ஷரிடம் ஆணைப்படி தினமும் சிறந்த ஆள்கள் வாயிலாகத் தேடி வருவதாகக் குறிப்பிட்டார் எனப் பாணரின் ஹர்ஷ சரிதம் கூறுகிறது. எனவே, விந்திய மலைப்பகுதி ஹர்ஷரின் கட்டுப் பாட்டின் கீழ் இல்லாவிட்டால், ஹர்ஷரின் ஆணை அத்துணை உண்மையாகப் பின்பற்றப்பட்டிருக்காது.

ஆக, நாம் ஹர்ஷர்-புலிகேசி போரில் இரண்டு வகையான கருத்துகளைப் பெறுகிறோம். முதலாவது கருத்து: புலிகேசி ஹர்ஷரை வென்று பரமேஸ்வரா என்ற பட்டத்தைக் கொண்டார் என்பது. இதற்கு ஆதாரம் 'ஹர்ஷரின் அளவற்ற அதிகாரமும், மகிழ்ச்சியும் புலிகேசயின் அச்சத்தால் கரைந்து போயிற்று' என்ற ஐஹோல் குறிப்பு ஆகும். இரண்டாவது: புலிகேசியின் சிறப்பான வெற்றியைக் குறிப்பிடும் நிர்பான், கர்நூல், தொகர்சிடுக் குறிப்புகள். அவை ஹர்ஷரைக் குறிப் பிடும் சமயத்தில் 'வடபகுதி முழுவதற்கும் அரசர்' (சகல ஒட்டார பாதேஸ்வரா) எனச் சிறப்பித்துக் கூறுகின்றன.

இரண்டாவது இப்போது ஆராய்ச்சியின் அடிப்படையில் புதிதாக எடுத்துக் காட்டப்பெறும் ஹர்ஷரைப் புலிகேசி வெல்லவில்லை என்பது. இதற்கான விவாதங்கங்களைத் தம் முடைய ஆராய்ச்சி நூலில் டாக்டர் சர்மா[1] எடுத்து விளக்கி யிருப்பதை முன்னர்க் கண்டோம். இதற்கு அடிப்படை நேரடி யாக ஹர்ஷரின் தோல்வி குறிப்பிடப்படாததும், புலிகேசிக்குப் பின் வந்தவர்கள் தாமாகவே கற்பித்துக் கொண்டனர் என்பதும் ஆகும். இப்போது புதியதாகக் கூறப்படுகின்ற, இதுவரையில் ஹர்ஷர் தோற்றார் என்ற பழைய கருத்துக்கு எதிரான இக் கருத்தினை வரலாற்றாசிரியர்கள் மேலும் நன்கு ஆராய்வதன் மூலமாகப் புதிய செய்திகள் பெறப்படலாம்.

[1] Sharma, Dr. B., *Harsa and Times*, pp. 17 -184

### ஹர்ஷ-புலிகேசி போர்க்காலம்

யுவாங் சுவாங் தமது குறிப்புகளில் ஹர்ஷரின் ஆறு ஆண்டு இடைவிடாத போர்களினால் ஐந்து இந்தியாவும் இவருக்குக் கட்டுப்பட்டன என்று குறிப்பிட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு டாக்டர் முகர்ஜி, ஹர்ஷரின் படையெடுப்புகள் அனைத்தும் கி. பி 612-க்குள் அதாவது ஹர்ஷர் அரியணையேறிய கி. பி. 606 முதல் கி. பி. 612-க்குள் நடைபெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.[1] எனவே, புலிகேசியுடனான போரும், கி. பி 612-ல் நடைபெற்றிருக்கவேண்டும் என்று அவர் கருத்துக் கொண்டிருந்தார். டாக்டர் முகர்ஜியின் கருத்துத் தவறானதே.

யுவாங் சுவாங் குறிப்பிடும் ஆறு ஆண்டு கி. பி. 606-லிருந்துதான் கணக்கிடப்பட்டிருக்கும் என்று நிச்சயமாகக் கூற முடியாது என்பது முதலாவது மறுப்புரை. இரண்டாவதாக 'ஐந்து இந்தியா' எது எனச் சரிவர நிர்ணயிக்க இயலாமை. கி. பி. 609-ல்தான் உள்நாட்டுப் போரில் தம் நிலையை வலுப்படுத்திய புலிகேசி இரண்டு ஆண்டுகளுக்குள் வடஇந்தியா முழுமைக்குமான அரசராக விளங்கிய ஹர்ஷரை வெல்லக்கூடிய படையினை ஏற்படுத்திக்கொண்டிருக்க முடியாது.

கி. பி. 612 ஆம் ஆண்டு ஹைதராபாத் ஆணையில், புலிகேசி பகை அரசர்களை வென்று பரமேஸ்வரா என்ற பட்டத்தைப் பெற்றார் என்று குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில் ஃபிலீட் புலிகேசி கி. பி. 612-ல் ஹர்ஷரை வென்றிருக்க வேண்டும் என்றார். கி. பி. 612-ல் புலிகேசி வென்ற பகையரசர்களில் ஹர்ஷரும் இருக்கமாட்டார் என்று கருத வேண்டியுள்ளது. ஏனெனில், ஹர்ஷரை ஒத்த புகழ் வாய்ந்த அரசரை வென்ற நிலையில் அவர் பெயரைக் குறிப்பிடாமல் இருந்திருக்க முடியாது. ஆனால், ஹைதராபாத் ஆணையில் நாம் காண்பதென்ன? ஹர்ஷரின் பெயரே அதில் குறிப்பிடப்படவில்லையே! ஆக, கி. பி. 612-ல் போர் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லாததால் ஃபிலீட்டின் கருத்து சரியெனப் படவில்லை. ஹைதராபாத் பட்டயத்தில் குறிப்பிடப்படும் புலிகேசியின் பரமேஸ்வரா பட்டம் அக்காலத்தில் சாதாரணமாகப் பின்பற்றப்பட்ட வழக்கத்தையே குறிக்கிறது. இதற்குச் சான்றாக மௌகாரி அரசர்கள் சர்வவர்மன், அவந்தி வர்மன், வலபியின் தாரசேனர் முதலியோர்

[1] முகர்ஜி, ஆர். கே. ஹர்ஷா, பக்கம் 86

'பரமேஸ்வரா' என்று அழைக்கப்பட்டதைக் காட்டலாம். பாதாமி அரசின் அதிகாரத்தைக் கைப்பற்றி நிலைநிறுத்திய வேளையில் வெற்றிச் சிறப்புகளுக்கான பட்டம் ஹர்சரை வென்ற பின்னர்தான் சிறப்புப் பெற்றது என்றும் கூறுவர்.

'ஹர்ஷர் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது முப்பது ஆண்டுகள் அமைதியாக ஆட்சி புரிந்தார்' என யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளதாக வாட்டர்ஸ் மொழிபெயர்த்ததாகக் கூறப்படும் கருத்துச் சரியாகத் தோன்றவில்லை. வாட்டர்ஸின் விளக்கத்தை நாம் ஏற்றுக்கொள்வோமேயாயின் கி. பி. 643-ல் ஹர்ஷர் கொங்கோடப் படையெடுப்பினை மேற்கொண்டமைக்கு என்ன பதில் அளிக்க முடியும்? தாம் இந்தியாவில் பயணம் செய்தபோது காணப்பட்ட அமைதியைக் குறித்தே யுவாங் சுவாங் அவ்வாறு குறிப்பிட்டிருக்க வேண்டும்.

டாக்டர் திரிபாதி தம்முடைய நூலில்[1] ஹர்ஷருக்கும் புலிகேசிக்கும் இடையே நடைபெற்ற மோதல் கி. பி. 630 அல்லது. 633 ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறார். அவர் அவ்வாறு கருதுவது ஏன் எனில் அரசுப் பொறுப்பை ஏற்ற சில ஆண்டுகளுக்குள் ஹர்ஷரை வெல்லும் வலிமையை புலிகேசி பெற்றிருக்க முடியாது. ஹர்ஷர் கி. பி. 606-லிருந்து 612 வரை கன்னோசி அரசுப் பொறுப்புகளை உறுதிப் படுத்தித் திக்கு விஜயம் மேற்கொண்டு ஐந்து கௌடாக்களைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். கி. பி. 623-ல் லாதா, மாளவம், கூர்ஜரம் ஆகிய நாடுகளின்மீது படை யெடுப்புகளை மேற்கொண்டு, கி. பி. 623-ல்தான் ஹர்ஷர் வலபியின் மீது படையெடுத்தார். ஹர்ஷர் பெற்ற வலபியின் வெற்றியால் துருவசேனரைச் சாளுக்கியக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கினர். அவ்வாறு நீக்கிய பின்னரே ஹர்ஷர் புலிகேசியைத் தாக்க முற்பட்டார் என்பதைக் கருத்தில் கொண்டு கி. பி. 630 அல்லது கி. பி. 632 ஆம் ஆண்டு ஹர்ஷர்-புலிகேசி மோதல் நடைபெற்றிருக்கவேண்டும் என்று முடிவு செய்கிறோம். இவ் வத்தியாயத்தின் இறுதியில் மேலும் பல போர்களின் காலத்தை ஆராய்வோம்.

### ஹர்ஷரின் தெற்குப் படையெடுப்பு

ஹர்ஷர் தெற்குப் பகுதியில் மேலும் சில படையெடுப்புகளை மேற்கொண்டு வெற்றி பெற்றார் என வரலாற்றாசிரியர்கள் சிலர்

[1] Tripathi, R. S. *History of Kanauj*, p 129

குறிப்பிடுகின்றனர். மைசூரில் சிமோகா மாவட்டத்திற்கு அருகில் கடெமெனே (Gaddemane) என்ற கிராமத்திற்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட பழைய கன்னட மொழியில் தொகுக்கப் பட்டிருக்கும் குறிப்பு ஒன்றினைச் சான்றாக கருதுகின்றனர். அது இறந்துபட்ட போர்வீரன் ஒருவனின் நினைவாக எடுக்கப்பட்ட நடுகல் அல்லது வீரக்கல் ஆகும். ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என அதனைக் கருதுகின்றனர். ஒளிமிக்க ஆற்றல் கொண்ட வீரம் மிக்கவர்களுக்குத் தொல்லையை தருகின்ற ஸ்ரீ சீலாதித்தியர் அரியணையேறினார். பெத்தானி இஸ்தியாங்கா என்ற போர் வீரர் பெத்தார ராயாவின் துணையுடன் கடும் போரில் ஈடுபட்டுப் பகைவர்களைக் கொன்று மகேந்திரரைக் கலக்கத்தில் ஆழ்த்திவிட்டுச் சொர்க்கத்தை அடைந்தார் என்று அந்த வீரக்கல்லில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக் கல்வெட்டில் சீலாதித்தியர் என்ற பெயர் எழுத்துப்பிழையுடன் காணப் படுகிறது.

ஹர்ஷர் தெற்குப் பகுதியில் படையெடுத்து வென்றார் என்பதை ஏற்றுக்கொள்ளும் வரலாற்றாசிரியர்கள் அப் பட்டயத்தில் சீலாதித்தியர் என்று குறிப்பிடப்பட்டிருப்பது ஹர்ஷ வர்த்தனர் சீலாதித்தியரே எனவும், மகேந்திரர் என்பதனை புலிகேசியின் காலத்தில் தொண்டை மண்டலத்தில் ஆட்சி செலுத்திய பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மனே என்றும் கருதுகின்றனர். R. C. மஜூம்தாரும், R. S. திரிபாதியும் தென் மாநிலங்களின்மீது ஹர்ஷர் படையெடுத்தார் என்பதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 'சீலாதித்தியர் தெற்கில் படை யெடுத்தபோது' என்று குறிப்பிட்டிருக்கும் டாக்டர் திரிபாதியின் கூற்றுக்குப் பொருள் ஏதும் இல்லை என்பது தேவஹூட்டி அறிஞரின் கருத்து

ஹர்ஷர் தெற்கில் படையெடுத்தார் என்பதனை நிலைநிறுத்து வதற்காக ஹர்ஷரின் அரசவையில் இருந்த பாணரின் மாமனார் என்று கருதப்படும் மயூரா என்பவரின் சமஸ்கிருதக் கவிதையை மேற்கோளாகக் காட்டுகின்றனர். அக் கவிதையினைத் திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்களும் எடுத்துக்காட்டி யுள்ளார். நாட்டின் பல பகுதிகளை ஹர்ஷர் வென்ற நிகழ்ச்சி களைப் பூமியை அரசருடன் இணைத்துக் காட்டும் வழக்கமான உவமையுடன் சிலேடையாக மயூரா அதில் விளக்கியுள்ளார். அவர் குண்டலம், காஞ்சி, சோழர்களின் அரசு ஆகியவையும் ஹர்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன எனக் குறிப்பிட்டுள்ளார். குண்டலம் சாளுக்கியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. சோழ அரசர்கள் சாளுக்கியர்களுடன் நட்புக் கொண்டிருந்தனர்.

காஞ்சியில் பல்லவர்களின் ஆட்சி நிலவியது. பல்வேறு அறிஞர்கள் அதனை வழக்கமான மிகைப்படுத்தப்பட்ட கலைஞரின் கூற்றேயன்றி வரலாற்று உண்மையன்று என்று கருதினர்.

ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் மயூரா வாழ்ந்தவராதலால் அவருடைய பாடல் சிறியதாக இருப்பினும் உயர்ந்த பொருளைத் தருவதாகவே கொள்ள வேண்டும். கெடமானே பட்டயத்துடன் ஒப்பிடுகின்றபோது இதனை அவ்வளவு எளிதாக ஒதுக்கி விடுவதற்கில்லை. டாக்டர் மஜூம்தார் சீலாதித்தியரை இரண்டாம் புலிகேசியின் மகன் யுவராஜா ஸ்ரீ யஸ்ராயா சீலாதித்தியா எனவும், மகேந்திராவை இரண்டாம் மகேந்திர வர்மன் எனவும் குறிப்பிட்டுவிட்டு மயூராவின் குறிப்பிற்கும் நிலவியல் அல்லது வரலாற்றிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் குறிப்பிட்டு விடுகிறார். மயூராவினுடைய பாடல் என்று குறிப்பிடப்பட்டு மேலே நாம் கண்ட பாடல் மயூராவினுடையதுதான் என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. இலக்கிய மரபுகள் மயூராவை ஹர்ஷரின் அவைக்களப் புலவரும் பாணரின் மாமனும் ஆவார் என்று குறிப்பிடுகின்றன. டாக்டர் கீத் தம்முடைய சம்ஸ்கிருத இலக்கிய வரலாறு (History of Sanskrit Literature) என்னும் நூலில் அவ் விருவருக்கிடையே அத்தகைய உறவுமுறை ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், டாக்டர் சாட்டர்ஜி மயூரா என்ற குறிப்பு இரண்டாம் புலிகேசிக்குப் பொருந்துகிறதேயல்லாமல் ஹர்ஷருக்குப் பொருந்தவில்லை என்று குறிப்பிடுகிறார். சேலட்டூர் (Saletor) சீலாதித்தியா என்ற குறிப்பு வலபியின் சிலாத்தியரையே குறிப்பிடுவதாகக் கருதுகிறார்.

இவ்வாறாகக் குறிப்பிடப்படும் குறிப்புகளெல்லாம் வரலாற்று அடிப்படையில் கூறப்படாமல் வெறும் யூகத்தின் அடிப்படையில் கூறப்பட்டவையே. ஹர்ஷரின் காலத்தில் தென்னகத்தில் ஆட்சி புரிந்த மூன்று சிறப்புமிக்க அரசர்களைக் குறிப்பிட்டு ஹர்ஷர் அவர்களையும் வென்று அப் பகுதிகளையும் தம் ஆட்சிக்கு உட்படுத்தக் கூடியவர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அப் புலவர் ஹர்ஷரைப் புகழ்ந்து பாடியிருக்க வேண்டும். வெற்றிகளைப் பெறுவதற்கு முன்னர் ஹர்ஷரைச் சிற்றரசர்கள் சிறப்பித்துக் கூறிய நிகழ்ச்சியைப் பாணர் குறிப்பிட்டுள்ளார். 'வீரத்தால் தக்காணத்தை எளிதாக வெல்லலாம்; மலைய மலையையும்...தார்துரா மலையையும்...மகேந்திராவையும் கூட...' என ஹர்ஷ சரிதம் கூறுகிறது. மயூராவின் பாடல் வரிகள்

ஹர்ஷர் புலிகேசியை வெல்வதற்குப் படையெடுத்துச் சென்ற சமயத்திற்குச் சற்று முன் ஹர்ஷர் தாம் சாதிக்க நினைத்திருந்த வெற்றிகளை மனத்தில் கொண்டு எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம். ஆகவே, ஹர்ஷர் தென்பகுதிகளின்மீது படையெடுத்தார் என்பதை மெய்ப்பிக்கும் மயூராவின் பாடலைச் சான்றாகக் கொள்வது அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. ஆக, ஹர்ஷர் தென்னகத்தின்மீது படையெடுத்தார் என்பதனை உறுதியாக நிரூபிக்கக்கூடியதும், நம்பத் தகுந்ததுமான நிறைவு தரும் சான்று எதுவும் இல்லை.

### பல்லவர்கள்

- சிம்ம வர்மன்
  - சிம்ம விஷ்ணு
    - முதலாம் மகேந்திர வர்மன்
      - முதலாம் நரசிம்ம வர்மன்
        - இரண்டாம் மகேந்திர வர்மன்
          - முதலாம் பரமேஸ்வர வர்மன்
            - இரண்டாம் நரசிம்ம வர்மன்
              - இரண்டாம் பரமேஸ்வர வர்மன்
              - மூன்றாம் மகேந்திரன்
  - பீம வர்மன்
    - புத்த வர்மன்
      - ஆதித்திய வர்மன்
        - கோவிந்த வர்மன்
          - இரணிய வர்மன்
            - இரண்டாம் நந்தி வர்மன்
              - தந்தி வர்மன்
                - மூன்றாம் நந்தி வர்மன்
                  - நிருபதுங்கன் அபராஜிதன்

தேவஹூட்டி கடோமனே நடுகல்லில் குறிப்பிடப்பட்டிருப்பது கடைசி 30 ஆண்டுகளில் சாளுக்கியத்தை ஆட்சி செய்த சீலாதித்தியருக்கும் இரண்டாவது மகேந்திர வர்ம பல்லவருக்கும் நடைபெற்ற போர் என்று கருதுகிறார். ஹர்ஷரின் அரசியல் நிகழ்ச்சிகளையும், ஹர்ஷர் பதவியேற்றதற்கு முன்னர் ஹர்ஷர் பதவி

யேற்றதற்குப் பின்னர் ஆகிய காலங்களில் தக்கணப் பகுதியில் இருந்த அரசியல் வரலாற்றையும் மனத்திலே கொண்டு ஆராயும் சமயத்தில் புலிகேசியுடன் போர் செய்வதற்கு முன்போ பின்போ ஹர்ஷர் இப் பகுதிகளில் படையெடுப்பினை மேற்கொண்டு தாக்குதலை நிகழ்த்தியிருக்க முடியாது என உறுதியாகக் கூறலாம். கடெமனே குறிப்பில் சிலாதித்தியர் தளபதிகளான பெத்தானி சத்தியங்காவும், பெத்ரா ராயாவும் சீலாதித்தியர் அரியணையேறிய போது மகேந்திரரின் படைகளைத் தோற்கடித்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

ஹர்ஷர் கி. பி. 606-ல் அரியணையேறியபோது பல சிக்கல்கள் இருந்தன. 'ஐந்து இந்தியாவை வெல்வதற்கு ஹர்ஷருக்கு ஆறு ஆண்டுகள் பிடித்தன. ஆகவே, அச் சமயத்தில் இப் பகுதிகள் அனைத்தும் சாளுக்கியரின் ஆற்றலுக்கு உட்பட்டிருந்தன. சாளுக்கியத்தின் அரசர் பொறுப்பை ஏற்ற இரண்டாம் புலிகேசி, தெற்கு மைசூரைச் சேர்ந்த காங்கா, அல்லுப்பா, கொங்கணத்தின் மௌரியர் முதலிய அரசுகளை வென்றார். கி. பி. 620-க்குள் இவற்றையெல்லாம் வென்று லாதா, மாளவம், கூர்ஜரம் முதலியற்றையும் வென்றார். எனவே, அச் சமயத்தில் இப் படையெடுப்பு ஹர்ஷர் மேற்கொண்டிருக்க முடியாது.

ஹர்ஷர் புலிகேசியிடம் தோல்வி கண்ட நிலையில் குண்டல அரசரையும் காஞ்சி அரசரையும், கடம்பர்களையும், சோழ அரசர்களையும் தாக்கியிருக்கக்கூடும் என்றால் அக் காலத் தென்னிந்திய வரலாற்று நிகழ்ச்சிகளும் உண்மைகளும் அதற்கு முரணாக உள்ளன. கடெமெனே குறிப்பில் உள்ள மகேந்திரர், முதலாம் மகேந்திர பல்லவர் என்று கொண்டால், அவர் கி.பி. 630 வரை ஆட்சி புரிந்தமையால் அக் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சி கி. பி. 633 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டதாக இருக்க முடியாது.

வெற்றிச் சிறப்புடன் விளங்கிய இரண்டாம் புலிகேசியை வென்று அவருடைய ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தவர் நரசிம்ம வர்ம பல்லவனே ஆவார். கி. பி. 654 வரை தென்னகத்தில் பல்லவர்களுடைய கை ஓங்கி இருந்தமையால் ஹர்ஷர் தக்காணப் படையெடுப்பை மேற்கொண்டு புலவர் மயூராவால் குறிப்பிட்ட அரசுகளைத் தாக்கியிருக்க முடியாது எனலாம். ஹர்ஷர் பல்லவர்களை அவர்களுடைய சிறப்பு மிகுந்த காஞ்சி மாநகர்வரைச் சென்று தாக்க வாய்ப்பு இல்லையாதலால் மயூராவின் பாடலும், கடெமெனே பட்டயமும் காட்டுகின்ற சிலாதித்திய

மகேந்திரர் தென்னகத்தில் சிறப்புடன் ஆட்சி நடத்திய சாளுக்கிய பல்லவரே ஆவார். D. H. மொரைஸ், கடெமெனே பட்டயத்தில் உள்ள மகேந்திரர் இரண்டாவது மகேந்திர வர்மரே என்று கூறும் கருத்து நாம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும். K. J. விர்ஜி விந்திய மலையை ஒட்டிய வலபியின் அரசரான சீலாதித்தியர் என்பவரே வீரக்கல் குறிப்பிடும் சீலாதித்தியர் என்று கருதுகிறார். வலபியைப் பிற்காலத்தில் ஆண்ட அரசர்களின் குறிப்புகளில் தேரபட்டா, அவருடைய மகன் சீலாதித்தியர் ஆகியோர் பெற்றதாகக் குறிக்கப்பட்டுள்ள வெற்றிகள் மிகைப்படுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளன என்று கருதப்படுகிறது. கடெமெனே வீரக்கல் குறிப்பிலுள்ள மகேந்திரர், இரண்டாவது மகேந்திர வர்மர் எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். சீலாதித்தியர் யார் என்பது குறித்து விளக்கமான செய்தியைத் தேவஹூட்டி தம்முடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கடெமெனே பட்டயம் மகேந்திர வர்மர் தோல்வியடைந்தது ஸ்ரீ சீலாதித்தியர் அரியணையேறிய சமையமாகும் எனக் குறிப்பிடுகிறது. இரண்டாவது மகேந்திரனின் ஆட்சி கி. பி. 668-ஆம் ஆண்டு ஆரம்பமாயிற்று. சாளுக்கிய இளவரசரான சரயரசிரய்ய சீலாதித்தியர் ஸ்ரீ என்ற எளிய பட்டத்தை மட்டும் கொண்டிருக்கிறார். யுவராஜாவாக இருந்த அவருக்குப் பொருத்தமானதாக அப் பட்டம் காணப்படுகிறது. ஆனால், அந்த எளிய பட்டம் ஹர்ஷருக்குப் பொருந்தாது.

உறுதியான நிறைவு தரக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கின்ற வரை ஹர்ஷருடைய தென்னகப் படையெடுப்பினை முடிந்த முடிபாகக் கொள்வதற்கு இல்லை.

## ஹர்ஷரின் மற்றப் படையெடுப்புகள்

ஏற்கெனவே குறிப்பிட்டபடி ஹர்ஷரின் பல்வேறு பகுதிகளின் வெற்றி குறித்து விளக்கமான குறிப்பு எதையும் பெற இயலவில்லை. ஆனால், டாக்டர் ஸ்மித், 'கங்கைச் சமவெளி முழுமையையும் (நேபாளம் உட்பட) இமய மலையிலிருந்து மாளவம், குஜராத் சௌராட்டிரம் முதலிய பிரச்சினைக்குரிய பகுதிகள் தவிர்த்து நர்மதை வரை உள்ள பகுதிகளையும் அவருடைய ஆட்சி கொண்டிருந்தது என்று குறிப்பிட்டார். டாக்டர் ஸ்மித்தின் மேலே கூறப்பட்டுள்ள கருத்தினை ஆராய்ந்து அவர்தம் குறிப்புச் சரியா, தவறா எனக் காண்போம்.

**நேபாளம்**

ஹர்ஷ வர்த்தனரின் ஆட்சிக்கு உட்பட்டதாக நேபாளம் விளங்கிற்று என்று பகவன் லால் இந்திராஜீயும், பியூஹிலரும் குறிப்பிட்டனர். ஆனால், சில்வைன் லெவி, எட்டிங் ஹாசன் முதலானவர்கள் அக் கருத்தினை மறுத்துரைத்தபோதிலும் டாக்டர் ஃபிளீட்டும், ஸ்மித்தும் முதன்முதலில் குறித்த இருவருடைய கருத்துகளுக்கு ஆதரவாக வாதாடினர். நேபாளத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் யுவாங் சுவாங், நீர்-போ-ல (Ni-po-'o) என்று அழைக்கிறார். நேபாளம் பனிபடர்ந்த மலைப்பகுதியில் அமைந்திருப்பதாகவும், 4000 லி சுற்றளவு உள்ளதாகவும், குன்றுகளும், பள்ளத்தாக்குகளும் கொண்டு விளங்குவதாகவும் குறிப்பிட்டுள்ள அவர் அதனை க்ஷத்திரிய லிச்சவிய அரசர்கள் ஆட்சிசெலுத்தினர் என்றார். மேலும், அவர் நேபாள அரசர்கள் பௌத்தக் கருத்துகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்றும் அங்கு ஷீ-பா-மா அல்லது அம்ச வர்மன் என்ற நேபாள அரசன் தாக்ரெனப் புதிய வரலாற்றை குறிக்கும் முறையை மேற்கொண்டார் என்றும் குறிப்பிட்டார். நேபாளத்தை யுவாங் சுவாங் சென்று காணவில்லையெனவும், செவி வழியாகக் கிடைத்த செய்திகளின் அடிப்படையிலேயே அதைக் குறிப்பிட்டார் எனவும் சிலர் கூறுகின்றனர்.

நேபாளத்தைப்பற்றி யுவாங் சுவாங் குறிப்பிடுகையில் அம்ச வர்மன் இறந்து உதயதேவர் என்ற லிச்சவி அரசரால் ஆளப்பட்டது எனக் குறிப்பிடுகிறார். நேபாளம் பொறுத்த மட்டில் பாணரின் ஹர்ஷ சரிதமும், யுவாங் சுவாங்கின் குறிப்புகளும் பொருந்துகின்றன. 'எளிதில் செல்ல முடியாத பனி படர்ந்த மலைப்பகுதி அரசரிடமிருந்து திறை பெற்றார்' எனப் பாணர் குறிப்பிடுவது நேபாளத்தைத்தான் எனக் கூறப்படுகிறது. அம்ச வர்மன் நேபாளத்தில் பின்பற்றியுள்ள சகாப்தம் அல்லது ஹர்ஷ யாது என்பதைக் கண்டறிவதில் சிக்கல்கள் உள்ளன. நேபாளத்தில் பின்பற்றப்பட்டுவந்த இரட்டை அரசு முறையே இதற்குக் காரணமாகும். மானகிரகர் என்பவர் நேபாளத்தை ஆண்ட சட்ட பூர்வமான அரசர் ஆவார். ஆனால், நேபாளத்தை உண்மையிலேயே ஆட்சி புரிந்து வந்தவர் மகாசாமந்தா அல்லது சாமந்தா பதவி வகித்த அம்ச தேவர் ஆவார்.

கி. பி. 576ஆம் ஆண்டில் மானதேவர் என்பவர் அம்ச வர்மனால் பதவியில் அமர்த்தப்பட்டார். மான தேவருக்குப் பிறகு குனகாமதேவரும், அவருக்குப் பின் சிவ தேவரும் ஆட்சிப்

பொறுப்பை மேற்கொண்டனர். கி. பி. 606-ல் அம்ச வர்மன் சிவ தேவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அல்லது அவர் இறந்த பின் சட்டப்பூர்வ அரசரானார். அம்ச வர்மன் அதிலிருந்து தம் சகாப்தத்தைக் குறிப்பதற்காகத் தாம் உண்மையிலேயே அதிகாரத்தைக் கைப்பற்றிய கி. பி. 576-லிருந்து குறிக்க விரும்பி கி. பி. 606 என்பதை 30 எனக் குறிப்பிட்டார். அவருடைய அடுத்தடுத்த குறிப்புகள் 32, (கி.பி.608), 34(கி.பி.610), 39 (கி.பி. 615), 45 (கி.பி. 621) ஆண்டுகளில் குறிக்கப்பட்டன. முதல் மூன்றிலும் அம்ச வர்மன் ஸ்ரீ மகா சாமந்தா என்றே குறிப்பிடப்பட்டுள்ளார்.

அம்ச வர்மருக்குப் பின் நேபாளத்தை ஆட்சி செலுத்தியவர் உதய தேவர். அவருக்குப் பின் மேலும் இரண்டு அரசர்கள் பதவி ஏற்று ஆட்சி செலுத்திய பின்னரே அம்ச வர்மனின் மகன் நரேந்திர தேவர் அரியணையைக் கைப்பற்றினர். நரேந்திர தேவரின் 69 (கி. பி. 645), 82 (கி. பி. 658) ஆண்டுக் குறிப்புகள் யுவாங் சுவாங் நேபாளத்திற்குச் சென்ற ஆண்டைக் கணிக்க உதவுகின்றன. ஆகவே, ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தை அந்த ஆண்டுகளைப் பின்பற்றிக் குறிப்பதாக இருப்பின் சிக்கல்கள் தோன்றுவதால், நேபாள அரசர்கள் தமக்கென ஒரு சகாப்தத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

அம்ச வர்மர் தனி ஒரு சகாப்தத்தைப் பின்பற்றியுள்ளார் என உறுதியாகக் கூறலாம். அம்ச வர்மன் கலி ஆண்டு 3000-ல் பதவியேற்றதாக வம்சாவளி கூறுகிறது. அதாவது கி. மு. 101-ல் அம்ச வர்மர் பதவியேற்றார். யுவாங் சுவாங் குறிப்புகளுக்கும் மற்றுமுள்ள சான்றுகளுக்கும் இது முரண்பட்டது என்பதில் ஐயமில்லை. அம்ச வர்மனின் ஏழாவது தலைமுறையைச் சேர்ந்த வீரதேவர் கலியாண்டு 3623-ல் (கி. பி. 522-ல்) ஆட்சி புரிந்ததாக வம்சாவளி கூறுகிறது. அம்ச வர்மருக்கும் ஏழாவது தலைமுறைக்கும் இடையே நீண்ட காலம் அதாவது ஏறக்குறைய 600 ஆண்டுகள் குறுக்கிடுகின்றன. ஆகையால் வம்சாவளியில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி வரலாற்றுப் பூர்வமாக ஆதாரமற்றது என்று கொள்ளவேண்டும். வம்சாவளி ஆசிரியர்கள் விக்ரமாதித்தியர் நேபாளம் சென்று தம்முடைய சகாப்தத்தை ஏற்படுத்தினர் என்று கூறுவதால் வம்சாவளியின் செய்திகள் பொருத்தமற்றவை என்று காட்டவே இதனை எடுத்துக் காட்ட வேண்டியதாயிற்று. ஹர்ஷரை விக்கிரமாதித்தியர் என்று வம்சாவளி ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், ஹர்ஷர் விக்கிரமாதித்யர் என எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

பாணர் ஓரிடத்தில்கூடப் பட்டத்துடன் ஹர்ஷரைக் குறிப்பிட வில்லை.

நேபாளத்தில் பைஸ் ராஜபுத்திரர்கள் எனப்பட்டோர் இருந்தனர். அவர்கள் ஹர்ஷரின் குடும்பத்துடன் தொடர்புடையவர்களாதலால்தான் அப் பகுதியை வென்றபோது அவர்களுக்கு அங்கு அவர் நிலம் வழங்கியிருக்கவேண்டும் எனக் கன்னிங்ஹாம் குறிப்பிட்டார். யுவாங் சுவாங் ஹர்ஷரைப் பைஷி எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, பைஸ் ராஜபுத்திர அரசர் என ஹர்ஷரைக் கன்னிங்ஹாம் கருதுகிறார். பைஸ் ராஜ புத்திரர்கள் நேபாளத்தில் காணப்படுவதைக் கொண்டு நேபாளம் ஹர்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது எனக் கொள்வது தவறாகும் எனத் திரிபாதியும், வலுவற்ற வாதம் எனத் தேவகூட்டியும் குறிப்பிடுகிறார்கள்.

டாக்டர் மஜூம்தார் இமயமலையின் அடிவாரத்தில் சில பகுதிகளை ஹர்ஷர் வென்றிருக்கலாம் என்று கருதுகிறார். பனி படர்ந்த மலை என்று ஹர்ஷ சரிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது நேபாளத்தை அன்று; துக்காராவையே என எட்டிங் ஹாசன் கருதுகிறார். ஹர்ஷர் பனிபடர்ந்த மலைப்பகுதியில் வாழ்கின்ற ஆற்றல் மிக்க துர்க்கா இன இளவரசியை மணந்த நிகழ்ச்சியை அது குறிப்பிடுகிறது எனத் திரிபாதி கருதுகிறார். சான்றுகள் ஒரு முடிவிற்கு வரத் தூண்டுகையில் கவனமாக இருக்க வேண்டுவது இன்றியமையாதது என்றாலும், முடிவிற்கு வரத் தயங்குவது சரியில்லை என்று குறிப்பிட்டு, டாக்டர் ஷேர்மா, ஹர்ஷரின் பேரரசில் நேபாளமும் அடங்கியிருந்தது என்று கருதுவது தவறாகாது என்று குறிப்பிடுகிறார்.

### ஒரிஸ்ஸா

சசாங்கனுடன் போரிட்டபோது ஹர்ஷரின் கிழக்குப் படையெடுப்பினைக் குறித்துக் கண்டோம். 'கன்னோசி அரசரால் ஒட்ரா (ஆ-டு) அல்லது ஒரிஸ்ஸா. கொங்கோடா அல்லது கஞ்சம் பகுதிகள் தாக்கப்பட்டு அடிபணிந்தன' என்று யுவாங் சுவாங் குறிப்பிட்டார். ஹர்ஷர் ஒரிஸ்ஸாப் படையெடுப்பினை மாதவ குப்தர் இறந்ததும் மேற்கொண்டார். கலிங்கத்தை வென்ற மாதவ ராஜா குர்தாப் பட்டயத்தை வெளியிட்டார். இதில் ஆண்டு குறிக்கப்படவில்லை. ஆயினும், மாதவ ராஜாவின் கி. பி. 623ஆம் ஆண்டுப் பூரிப்பட்டயத்திற்கும், புலிகேசியின்

கி. பி. 635 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கலிங்கப் படையெடுப்பிற்கும் இடைப்பட்டது அப் பட்டயம் என்று கணிக்கப் பட்டுள்ளது.

இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் பட்டயத்தில் கோசலமும் கலிங்கமும் குறிக்கப்பட்டுள்ளன. இப் பட்டயம் கி. பி. 634 ஆம் ஆண்டிற்கு உரியது. தோல்வியுற்ற சில ஆண்டுகளில் மாதவ ராஜா மறைந்திருக்க வேண்டும். ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இப் பகுதியின் ஆட்சி உரிமையைக் கீழைச் சாளுக்கியர்களே கொண்டிருந்தனர். இனி, யுவாங் சுவாங்கினால் குறிக்கப் பட்ட ஒட்ரா, கொங்கோடா யாவை எனக் காண்போம். இன்றைய மிட்னபூர், பாலாசோர், கட்டாக் மாவட்டங்களே ஒட்ரா ஆகும். சத்தார்பூரர் கஞ்சம் பகுதிகள் கொங்கோடா எனக் குறிப்பிடப்பட்டன. இவ் விரண்டும் முறையே 7,000 லி. 1,000 லி சுற்றளவு உள்ளவை எனக் குறிக்கப் பட்டுள்ளன.

தென்கிழக்கு மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளையும், அதன் சிறப்பான கடல் பகுதிகளையும் ஹர்ஷர் கைப்பற்றித் தம் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தார். நான்கு இடங்களில் ஒரிஸ்ஸாப் படையெடுப்பினைப் பற்றி யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளார். ஜெயசேனு என்ற பௌத்தத் துறவிக்கு எண்பது பெரிய கிராமங்களை அளித்தார் என்பதும், கொங்கோடாவை வென்று ஒட்ரா வழியாகத் திரும்பியதும், ஒட்ராவில் பௌத்தத் துறவிகளிடம் ஹர்ஷர் கருத்துப் பரிமாற்றம் கொண்டதும் ஆகிய நான்கு இடங்களே அவை. ஹர்ஷர் ஒரிஸ்ஸாவின்மீது படையெடுத்து வென்றதால்தான் ஜெயசேனுவிற்கு நிலக்கொடை அளித்தார். ஆனால், ஒட்ராவை வென்றபின் ஹர்ஷர் கி. பி. 637-8-ல் பிரயாகைப் பேரவைக்கு வந்தார். அப்போது ஜெயசேனு ஹர்ஷர் அளித்த நிலக் கொடையைப் பெற மறுத்துவிட்டார். ஹர்ஷர் நிலக்கொடை அளித்த நிகழ்ச்சி அவர் ஒரிஸ்ஸாமீது கொண்டிருந்த ஆளுமையைக் குறிக்காது என ஆர். டி. பானர்ஜி தெரிவிக்கிறார்.[1]

ஹர்ஷ ஊழியில் குறிப்பிடப்பட்டுள்ள கஞ்சம் பட்டயத்திலிருந்து ஹர்ஷ ஊழி கலிங்கத்தில் வழக்கிலிருந்ததால், அப்பகுதியினை ஹர்ஷர் இணைத்துக்கொண்டார் என்று கருதுகிறோம்.

[1] Banerjee, R. D., *History of Orissa*, p 129-30.

சசாங்களின் இறப்பிற்குப் பின் ஹர்ஷரே கிழக்கு இந்தியா முழுமைக்கும் தலைவன் ஆனார். டாக்டர் மஜும்தார் உத்கலாவும், கொங்கோடாவும் ஹர்ஷரால் வெற்றிகொள்ளப்பட்டன என்று உரைக்கிறார். கிழக்கிலிருந்து வரும் அபாயங்களை எதிர்கொண்டு வெல்ல ஹர்ஷர் சிறந்த படைகளை இப்பகுதியில் நிறுத்தியிருந்தார் எனத் திரிபாதி கூறுகிறார்.

காஷ்மீர்

காஷ்மீரத்தைக் குறித்து எதுவும் உறுதியாகக் கூறுவதற்கில்லை என்பதனை முதலில் குறிப்பிட்டாகவேண்டும். யுவாங் சுவாங் காஷ்மீர் சென்றபோது, காஷ்மீர் அரசர் மிகவும் அன்புடன் உபசரித்தார் எனவும், இருபது எழுத்தர்களையும், ஐந்து பணியாள்களையும் தந்து உதவினார் எனவும் குறிப்பிடுகிறார். ஆனால், இதில் வேடிக்கை இரண்டு ஆண்டுகள் யாருடைய ஆதரவில் இருந்தாரோ, யார் அவருக்கு வேண்டிய உதவிகள் செய்தாரோ அவருடைய பெயரை யுவாங் சுவாங் குறிப்பிடவில்லை என்பதுதான்.

கி. பி. 631 முதல் கி. பி. 633 வரை ஹர்ஷர் காஷ்மீரில் தங்கியிருந்தார். யுவாங் சுவாங் அந்த அரசரின் பெயரைக் குறிப்பிடவில்லையெனினும் பிற்காலத்திய நூலான கல்ஹனரின் இராஜதரங்கிணியின் வாயிலாகக் காஷ்மீர அரசர் துர்லாப வர்த்தனர் என அறிகிறோம். டாக்டர் முகர்ஜி, வைத்யா முதலானவர்கள் ஹர்ஷரின் ஆட்சி காஷ்மீர்வரை பரவியிருந்தது என்று கருதினர்[1] யுவாங் சுவாங்கின் குறிப்புகள், காஷ்மீரில் புத்தரின் புனித பல் போற்றிப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியினை சிலாதித்திய ராஜா கேள்விப்பட்டார்: உடனே இந்நாட்டின் எல்லையை அடைந்து, காஷ்மீர் அரசரிடம் அதைக் கண்டு வணங்க இசைவு வேண்டினார் என்கின்றன.

ஒன்றரை அங்குல நீளமுள்ள மஞ்சள் கலந்தவெள்ளை நிறப் புத்தரின் புனிதப் பல் போற்றிப் பாதுகாத்துவைக்கப்பட்டிருந்தது' அது எப்போதும் பிரகாசமான ஒளிசிந்தியது என யுவாங் சுவாங் குறிப்பிட்டார்.

புனிதப் பல்லைக் குறித்தோ, அதைப் பற்றி யுவாங் சுவாங் குறிப்பிடும் விளக்கங்களோ நமக்கு வேண்டுவதில்லை.

[1] Mukerjee R. K., *Harsha* p. 40 & C. V. Vaidya, *History of Mediaeval Hindu India*, vol I, p. 17.

ஆனால், அவருடைய குறிப்பில் காணப்படும் 'ஹர்ஷர் அதைக் கண்டு வணங்கக் காஷ்மீர அரசரிடம் இசைவு வேண்டினர்' என்ற குறிப்புதான் நமக்கு வேண்டுவது. ஹர்ஷரின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாமல் சுயேச்சை அரசாகக் காஷ்மீரம் விளங்கிற்று என்பதையே இது காட்டுகிறது. காஷ்மீரம் கைப்பற்ற இயலாத ஒன்றாக விளங்கிற்று என்பதையும் சீனப் பயணியின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம்.

ஆனால், அதைத் தொடர்ந்த நிகழ்ச்சிகள் ஹர்ஷர் புனிதப் பல்லைக் கொண்டுவந்த செய்தியை மட்டுமன்றி ஹர்ஷரின் மேலாண்மை காஷ்மீரிலும் திகழ்ந்தது என்பதைக் காட்டுகின்றன. ஹர்ஷரின் வேண்டுகோளை ஏற்க இயலாது பௌத்த சங்கத்தவர் புனிதப் பல்லை மறைத்து வைத்ததையும், ஹர்ஷரின் சிறப்புத் தன்மையினை உணர்ந்த காஷ்மீர் அரசர் அதனைத் தேடிக் கண்டு பிடித்து அவரிடம் அளித்ததையும் பயணியின் குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன. அப் புனிதப் பல்லைக் கண்ட சிலாதித்தியர் பக்தி மேலிட்டால் அப் பல்லைத் தம்முடன் எடுத்துச் சென்று உரிய அஞ்சலி செலுத்தினர் என்றும் அறிகிறோம்.

இதை யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்பின் அடிப்படையில் ஆராய்ந்த டாக்டர் முகர்ஜி காஷ்மீர் ஒரு வகையில் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டது என்று குறிப்பிட்டார். யுவாங் சுவாங்கின் குறிப்புகள் சரியாயின் டாக்டர் முகர்ஜியின் கருத்தும் சரியே. டாக்டர் திரிபாதி மேலே கூறப்பட்டுள்ள டாக்டர் முகர்ஜியின் விளக்கத்தினை ஏற்கவில்லை. 'சிலாதித்தியர் வலுவில் புனிதப் பல்லைக் கொண்டுசென்றார் என்ற குறிப்பு ஹர்ஷரைப் பார்ப்பதற்கும், வழிபடுவதற்கும்கூட அனுமதிக்காத காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு எதிராகவே ஹர்ஷர் அதனைக் கொண்டு வந்தார்' என்பதைக் காட்டுகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். திரிபாதி ஹர்ஷர் 'வலிந்து எடுத்து வந்தார்' என்ற குறிப்பையும், 'ஹர்ஷரின் மேலாண்மையை ஒரு வழியாகக் காஷ்மீர் ஏற்றுக்கொண்டது' என்ற டாக்டர் முகர்ஜியின் குறிப்பையுமே கருத்தில் கொண்டாரேயன்றி, காஷ்மீர மக்கள் அப்புனிதப் பல்லின்பால் வைத்திருந்த சமயப் பற்றையும், ஆர்வத்தையும் கருத்தில் கொள்ளவில்லை எனத் தோன்றுகிறது.

அவர்கள் புனிதப் பல்லைக் காட்டவும், வழிபடவும் இசைவு அளிக்க மறுத்தல் செய்ததோடல்லாமல், ஹர்ஷரால் கவரப்படக் கூடாது என்பதற்காக அதனை மறைக்கவும்

செய்தனர். காஷ்மீர் அரசன் ஹர்ஷரின் பெரும்படை வலிமையைக் கண்டு அஞ்சி எதிர்த்து நிற்க இசையவில்லை. எனவே, மக்களின் விருப்பிற்கு எதிராகக் கொண்டுவந்தார் என்ற திரிபாதியின் கூற்றினை ஏற்க இயலவில்லை. பார்க்கக்கூட அவரை விடாத அம் மக்களின் விருப்பத்திற்கு விரோதமாகக் கொண்டுவந்தார் என்று எப்படி நம்புவது? ஹர்ஷரின் படைக்கு அஞ்சிப் பணிந்தனர் என்ற பதிலைக் கூறலாம். ஆனால், சமய உணர்வில் தீவிரமான மக்கள் பணிந்ததாகச் சான்று ஏதுமில்லை. சமயம் மக்களுக்கு அபினியன்றோ? சமய உணர்வைவிட வேறு எதையும் உயர்வுடன் ஒருநாளும் மக்கள் கருதியது கிடையாது. உயிரைக்கூடக் கருதியதில்லை. ஹர்ஷரின் காலம் தீவிர சமயப்பற்றுமிருந்த காலந்தான். ஹர்ஷர் புனிதப் பல்லைக் கவர்ந்து செல்லும்போது, கைகட்டி வாய்புதைத்து வாளாவிருந்திருப்பர் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? எனவே, எதிர்த்திருப்பர் என்றும், ஹர்ஷர் தம் வலிமையால் அவர்களை அடக்கியிருக்கக் கூடும் என்றும் நாம் நம்பிடும் கருத்திற்குச் சான்று பயணியின் குறிப்பே. தலைகள் உருளு வதையும் இரத்த ஆறு ஓடுவதையும் தவிர்க்க விரும்பி அதனைக் கண்டறிந்து காஷ்மீர அரசன் ஒப்படைத்திருக்க வேண்டும். ஹர்ஷரும் ஒரு பௌத்த சமய அரசர் தானே'என்று சமாதானம் கூறியிருக்கவேண்டும். ஹர்ஷர் காஷ்மீர அரசரின் பெருந்தன் மைக்குக் கைம்மாறாக முழு சுயாட்சி அளித்திருக்க வேண்டும். யுவாங் சுவாங் காஷ்மீரத்தை விட்டுச் சென்ற கி. பி. 663-லிருந்து கி. பி. 640-க்குள் இந் நிகழ்ச்சி யெல்லாம் நடைபெற்றிருக்க வேண்டும் எனவும் ஹர்ஷர் 640-ல் ஒரிஸ்ஸாப் படையெடுப்பினை மேற்கொண்டார் எனவும் கருதப்படுகிறது.

## காமரூபம்

ஹர்ஷர் குங்-யு-தா (Kung-yu-ta) என்னும் பகுதியின்மீது படையெடுத்துவிட்டுப் பேரவை ஒன்றினைக் கூட்டக் கன்னோசி திரும்பினர் என யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். காமரூபத்தின் அரசர் குமாரரிடம், சீனப் பயணி இருப்பதை அறிந்த ஹர்ஷர், அவரைத் தம்மிடம் அனுப்பிவைக்கம்படி கேட்டதாகவும், தலையைக் கொடுத்தாலும் கொடுப்பேனே தவிர விருந்தினரை அனுப்ப முடியாது என்று அவர் கூற, தலையைப் பெற முயல்வதாக இவர் சொன்னதாகவும், குமாரர் பணிந்ததாகவும் மிகைப் படுத்திக் கூறப்பட்ட கதை ஒன்றை யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார்.

சசாங்கனுக்கு எதிரான படையெடுப்பில் ஹர்ஷரின் நண்பராகக் குமாரர் விளங்கினர் என்பதையும், பிரயாகை, கன்யா குப்ஜம் ஆகிய இரண்டு அவைகளிலும் அவர் கலந்து கொண்டவர் என்பதையும் காணும் நாம் அவர் ஹர்ஷருக்கு அடிபணிந்தவர் என்ற உண்மையினைத் தெளிவாகக் உணர்கிறோம்.

இந்தப் படைபெடுப்புகளால் ஹர்ஷர் தென்னகம் தவிர்த்த வடபுலத்தின் பகுதிகளில் பேரரசராக விளங்கினர் என அறியலாம். ஹர்ஷரின் பேரரசு பரப்பைக் குறித்துத் தனியே காண்போம்.

ஹர்ஷரின் போர்க் காலம்

ஹர்ஷர் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவின் தலைவராக விளங்கிவருவதாகத் தம்மிடம் கூறினர் என்று யுவாங் சுவாங் உரைத்ததாகக் காட்டும் குறிப்பின் அடிப்படையில் டாக்டர் முகர்ஜி சில கருத்துகளைத் தெரிவிக்கிறார். அவர் கி. பி 612-க்குள் ஹர்ஷரின் படையெடுப்புகள் அனைத்தும் முடிந்தன என்றும், வலபி, புலிகேசி ஆகியோருடனை ஹர்ஷரின் போர் கி. பி. 612-க்குள் நடைபெற்றன என்றும் கூறினர். சக ஆண்டு 534-ல் வெளியிடப்பட்ட ஹைதராபாத் பட்டயத்தை டாக்டர் ஃபிளீட் கருத்தில் கொண்டிருந்தார். அதனையே முகர்ஜியும், வைத்தியாவும் பின்பற்றினர். டாக்டர் திரிபாதி, முகர்ஜின் கருத்தினை ஏற்க உடன்படவில்லை. அவர் காட்டிய மறுப்பரை, சசாங்கன் கி. பி. 619-ல் ஒரிஸ்ஸாவில் ஆட்சி செலுத்தினர் என்பதும், புலிகேசியின் ஆட்சி கி. பி. 609-610 அளவிலேயே தொடங்கிற்று என்பதுமாகும். யுவாங் சுவாங் குறிப்பிடுகின்ற, ஹர்ஷர் ஆறு ஆண்டுகளில் ஐந்து இந்தியாவை வென்றார் என்ற குறிப்பு 606-ல் தொடங்குகிறது என்பதனையும் அவர் ஏற்கவில்லை.

கி. பி; 619-ல் சசாங்கன் ஆட்சி செலுத்தினர் என்று பட்டயங்கள் காட்டுவதை அனைவரும் ஏற்கின்றனர். டாக்டர் மஜூம்தார் ஹர்ஷரின் போர்களைக் கி. பி. 606-612 காலத்தன என்றும், 612-642 காலத்தன என்றும் இருபிரிவுகளாகப் பிரித்து, ஒரிஸ்ஸா, கொங்கோடா முதலிய போர்கள் இரண்டாவது பிரிவில் அடங்கும் என்றார். இரண்டாம் புலிகேசியால் ஹர்ஷர் தோற்கடிக்கப்படவில்லை என்ற கருத்தினைக் கொண்டவர்கள் மேலே கூறப்பட்ட இரண்டாவது கருத்தினை ஏற்கவில்லை.

டாக்டர் சர்மா, ஹர்ஷர் 612 வரைப் போர் செய்தார் எனவும், அதன்பின் 30 ஆண்டுகள் ஆட்சி செலுத்திவிட்டுப் பின்னர் மறுபடியும் ஒரு சுற்றுப் போரினைத் தொடர்ந்தார் என்று கூறுகிறார்[1].

டாக்டர் ஃபிளீட் ஹர்ஷர்-புலிகேசிப் போர் கி. பி. 608-9-ல் நடைபெற்றிருக்க வேண்டும் என்று கூறியதை முகர்ஜி, சாலெடூர் முதலானவர்கள் ஏற்றபோதிலும் டாக்டர் திரிபாதி இதற்கு எதிராக வலுவான மறுப்புரைகளைக் கூறுகிறார். ஹைதராபாத் பட்டயத்தில் குறிப்பிடப்படாத ஹர்ஷ வர்த்தனரின் பெயர் ஐஹோல் கல்வெட்டிலும், பிற்காலப் பதிவுகளிலும் காணப்படுவது டாக்டர் ஃபிளீட்டின் கொள்கையைத் தவறு என்று காட்டுகிறது. யுவாங் சுவாங்கின் குறிப்புகள் தெளிவற்றவையாகவும், பீல்(Beal), வாட்டர்ஸ்(Watters) ஆகியோரின் உரைகள் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும் விளங்குவதைத் திரிபாதி சுட்டிக் காட்டினர்.

கி. பி. 618-லும், 628-லும் அரசில் பெருஞ் சிக்கல்கள் எழுந்தன என்றும், அரசர் சிலாதித்தியர், இதற்குமுன் இல்லாத அளவிற்குப் போர்களைச் செய்தார் என்றும் சீன தேசத்துக் கலைக்களஞ்சியக்காரர் மாத்வான் லின் குறிப்பிடுவதைக்கொண்டு ஹர்ஷர் முப்பதாண்டுகள் அமைதியாக ஆட்சி நடத்தியிருக்க முடியாது என மஜூம்தார் குறிப்பிட்டார். எனவே, ஹர்ஷரின் படையெடுப்புகள் குறித்து யுவாங் சுவாங் குறிப்பிடும் கால மரபு தவருகவே படுகிறது.

யுவாங் சுவாங் வரலாற்ருசிரியரோ உண்மையைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டவரோ அல்லர். ஆதலால், அவர் அரசியல் செய்திகள் பலவற்றை விட்டுவிடுதலும் இயல்போ . அவர் வந்த நோக்கம் சமய நோக்கமே என்பது குறிப்பிடத்தக்கது. ஹர்ஷர்-வலபி அரசருக்கிடையே நடைபெற்ற போரின் விளைவாகவே ஹர்ஷர்-புலிகேசிப் போர் நடைபெற்றதெனக் கண்டோம். இரண்டாம் புலிகேசியின் லோஹனர் பட்டயம் கி. பி. 630-ல் வெளியிடப்பட்டது, ஆனல், இப் பட்டயத்தில் ஹர்ஷர்-புலிகேசி போர் பற்றிக் குறிப்பிடப்படாததால் அவ் விருவருக்கிடையே கி. பி. 629-லிருந்து கி. பி. 634-5-க்குள் அப் போர் நடைபெற்றிருக்கவேண்டும் என அறியாலாம். இரண்டாம் தத்தாவின் காலம் கி. பி. 629 என்று அறியப்படுவதால் ஹர்ஷர்-வலபி அரசர் போர் கி. பி. 629-ல் நடைபெற்றிருக்கலாம். ஹர்ஷர்-புலிகேசி போர் கி. பி

1. Sharma B., *Harsa and his Times*, p. 196

634-க்கு முன்னர் நடைபெற்றிருக்கவேண்டும் என்பதால் ஹர்ஷருக்கும், இரண்டாம் துருவ சேனருக்கும் இடையேயான போர் அதற்கு முன்னதாகக் கி. பி. 620-ல் நடைபெற்றிருக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளில் ஹர்ஷர் இரண்டாம் புலிகேசி போர் நடைபெற்றிருக்கவேண்டும் என்பதைக் கொண்டு ஹர்ஷர் -இரண்டாம் புலிகேசி போர் கி. பி. 632-ல் நடைபெற்றதாகக் கருதலாம்.

# 7. ஹர்ஷப் பேரரசின் பரப்பு

ஹர்ஷரின் வரலாற்றினை ஆராய்கின்ற ஒருவர் சந்திக்கின்ற பல்வேறு பிரச்சனைகளில் ஹர்ஷப் பேரரசின் பரப்புக் குறித்த பிரச்சனையும் ஒன்று. பல்வேறு அறிஞர்களும் ஹர்ஷப் பேரரசு பரப்புக் குறித்துப் பல்வேறு வழிகளில் தங்கள் ஆராய்ச்சியினை மேற்கொண்டு கருத்துகளை அளித்துள்ளனர். அவ்வாறு அளிக்கப்பட்ட கருத்துகள் இருவகைப்பட்டன. முதலாவது வகையினை மிகையானவை என்று கருதுவது போல இரண்டாவது வகையினைப் போதுமானவையல்ல என்று கருத வேண்டியுள்ளது. ஹர்ஷரின் பேரரசு எவ்வளவு தூரம் பரவியிருந்தது, அதில் அடங்கியிருந்த பகுதிகள் யாவை என்பதை அறிந்துகொள்ளுதல் இன்றியமையாத ஒன்று.

எட்டிங் கௌசன் வட இந்தியா முழுமைக்கும் பேரரசராக ஹர்ஷர் திகழ்ந்தார் என்று பொதுவாகக் குறிப்பிட்டார். வின்சென்ட் ஸ்மித், ஹர்ஷர் தம்முடைய ஆட்சியின் பிற்காலத்தில் பெரும் பேரரசு ஒன்றை ஆண்டார் என்று குறிப்பிட்டார். ஸ்மித் கருத்துப்படி கங்கைச் சமவெளி முழுமையையும், நேபாளம் உள்பட இமயமலையிலிருந்து நர்மதைவரை உள்ள பகுதியினை அவர் ஆட்சி செய்தார். ஹர்ஷர் மாளவம், குஜராத், சௌராட்டிரம் முதலியவற்றினைக் கொண்டிருந்தார் எனவும், தூர நாடான அஸ்ஸாமின் அரசன் கிழக்கிலும், ஹர்ஷரின் மருமகன் வலபி அரசர் மேற்கிலும் ஹர்ஷருடைய பேரரசுக்கு அடங்கியிருந்தனர் எனவும் ஸ்மித் கூறிய கருத்தினைப் பணிக்கரும் ஏற்றார். பணிக்கர் ஹர்ஷரின் பேரரசு கிழக்கில் காமரூபத்திலிருந்து மேற்கில் காஷ்மீர்வரையிலும், வடக்கில் இமயத்திலிருந்து தெற்கில் விந்திய மலைவரையிலும் பரவியிருந்தது என்று குறிப்பிட்டார்.

ஹர்ஷப் பேரரசின் பரப்புக் குறித்து டாக்டர் முகர்ஜி என்ன கருத்தினைக் கொண்டிருந்தார் என்பதனைக் காண்போம். அவர் மிகவும் கவனமான நிலையை மேற்கொண்டார் என்றுதான் கூற வேண்டும். 'அவருடைய அதிகார மண்டலம் அவர்தம் செல்

வாக்கு அல்லது மேலாதிக்க மண்டலத்தைவிடக் குறைந்த பரப்புடையதே' என்றார் அவர். 'அக் காலத்தில் வட இந்தியாவில் இருந்த எந்தத் தனி ஓர் அரசினும் நிச்சயமாக ஹர்ஷரின் பேரரசு




படம் 12, ஹர்ஷரின் பேரரசு.

மிகப் பரப்புடையதே. அதில் உத்தரப்பிரதேசம் (முழுமையும்), பீகார், வங்காளத்தின் (கர்ண சுவர்ண தவிர) பெரும்பகுதி, ஒரிஸ்ஸா, பஞ்சாப், இராஜபுதனம், மத்திய மேற்கு இந்தியா,

யுவாங்சுவாங்கினால் குறிப்பிடப்படாதமற்றைய அரசர்களுடையவை' ஆகியவை அடங்கியிருந்தன என்றும் அவர் குறிப்பிட்டார். ஹர்ஷரைத் தென்னிந்தியப் பட்டயங்களில் உத்தர பாதம் முழுமைக்கும் தலைவர் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைக் கொண்டு, வட இந்தியா முழுமைக்கும் சிறந்த பேரரசர் என்று அவரைக் கருதுகிருர். 'உத்தர பாதம் முழுமைக்கும் தலைவர்' என அழைக்கப்பட்டது அக்கால இந்தியப் பொது மக்களின் கருத்து என அவர் ஏற்றுக்கொள்கிருர். ஆனால், கிழக்கில் நேபாளம் முதல் மேற்கில் காஷ்மீர் வரையிலும், பரவியிருந்ததாகக் கருத்துக் கொண்டிருந்தபோதிலும், தம் நூலில் இணைத்துள்ள வரைபடத்தில் (map) காஷ்மீரைச் சேர்க்காது விட்டுவிட்டார்.

'சிந்து, பஞ்சாப், காஷ்மீர் தவிர்த்த வடஇந்தியா முழுவதும் ஹர்ஷரின் பேரரசில் அடங்கியிருந்தது. ஆயினும், மேற்கூறப்பட்ட பகுதிகளின் அரசுகளின்பால் பெயரளவிலான மேலாண்மை கொண்டிருந்தார்' என்று ஸ்ரீ வைத்யா குறிப்பிட்டார்.

டாக்டர் திரிபாதி ஹர்ஷரின் பேரரசு பரப்புக் குறித்த சிக்கலை நன்கு ஆராய்ந்தார். அவர் 'காஷ்மீர் சிந்து வரையிலும், குஜராத் அதற்கு அப்பால் தெற்கிலும், காமரூபம் நேபாளம் வரையிலும் ஹர்ஷரின் இறைமை விளங்கிற்று அல்லது அரசியல் மேலாதிக்கம் காணப்பட்டது என்ற மிகையான எண்ணம் அனைத்தையும் விட்டுவிட இதுவே தக்க தருணம் என்று குறிப்பிட்டார். 'கிழக்குப் பஞ்சாப்பின் சில பகுதிகள், இக் கால உத்தரப் பிரதேசம் முழுமையும், (மதுரா, மடிப்புரா நீங்கலாக) பீஹார், வங்காளம், ஒரிஸ்ஸா கொங்கோடா அல்லது கஞ்சம் பகுதி உள்ளிட்டவையும் ஹர்ஷரின் பேரரசில் அடங்கியவை' என்று அவர் குறிப்பிட்டார். சாட்டர்ஜி, இதே போன்ற கருத்தையே கொண்டிருந்தாலும், வலபி, கிழக்கு மாளவம், சிந்து முதலியவற்றின்பால் ஹர்ஷரின் ஆதிக்கம் பரவியது என்றும் குறிப்பிட்டார்.

வடகிழக்கில் ஜலந்தரா வரையில் வடஇந்தியா முழுமையும், கிழக்கில் பிரம்மபுத்திராப் பள்ளத்தாக்கைத் தொட்டுக்கொண்டும், தெற்கில் வலபி அரசிலிருந்து ஒரிஸ்ஸாவில் கஞ்சம் மாவட்டம் வரையிலும் உள்ள பகுதிகள் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டன என என். ரே குறிப்பிட்டார்.

டாக்டர் மஜூம்தார் இக் கருத்துகளையும் எதிர்த்து வாதிட்டுத் தம் வாதங்களையெல்லாம் முன்வைத்தார். ஆனால்,

மஜூம்தார் தாம் ஏற்கெனவே கொண்டிருந்த வேறு ஒரு முடிவினை மனத்தில் கொண்டு அதனை உறுதிப்படுத்தவேண்டி அதற்கொப்ப வாதங்களை அடுக்கினர். அவர் 'பலவீனமான அடிப்படையில்லாத மிகையான மதிப்பீடுகளால் பண்டைய அறிஞர்களால் இப் பொருள் பற்றிய ஆய்வு கடினமான தாக்கப் பட்டது' என்று கூறியதோடு, 'இந்திய வரலாறு குறித்த ஆய்வு தொடக்க நிலையில் இருந்தபோது, பண்டைய இந்திய வரலாற்றுப் புள்ளி விவரங்களை மக்கள் ஆராய்ந்து அறிந்திடாத நிலையில், அறிஞர்கள் யுவாங் சுவாங், பாணர் முதலானவர்களின் தெளி வற்ற குறிப்புகளை அப்படியே ஏற்றதோடு, ஹர்ஷரைப் பெரும் பேரரசராகவும், இந்து இந்தியாவின் கடைசிப் பேரரசராகவும் காட்டினர் எனவும் இத்தகைய தவறான போக்கு தொடர்ந்து இன்றைய நாள்வரை நிலவிவந்துள்ளது' எனவும் குறிப் பிட்டார். இதுவரையில் தவருகக் கொள்ளப்பட்டிருந்த எண்ணத்தை முதன்முதலில் எதிர்த்து உரைத்தவர் என்றும் தம்மை அவர் அழைத்துக்கொண்டார்.

டாக்டர் மஜூம்தார் ஹர்ஷரையும் அவருடைய நடவடிக் கைகளையும் பாகுபாடற்ற முறையில் ஒரவஞ்சனை இன்றிக் கருதி நோக்கவில்லை என்றே தோன்றுகிறது. அவர் வங்காள அரசன் சசாங்கனிடம் கொண்டிருந்த மிகுந்த பற்று இதற்குக் காரணம் எனலாம். சசாங்கன் மகதம் முழுவதையும் பனரஸ் உள்பட வெற்றி கொண்டு தெற்குப் பீகார், ஒரிஸ்ஸா முழுமை யிலும் தம்முடைய அதிகாரத்தை விரிவுபடுத்தியதோடு வட இந்தியப் பேரரசை உருவாக்கத் துணிகர முயற்சி ஒன்றினை மேற்கொண்டார் என்று அவர் குறிப்பிட்டுள்ளது சசாங்கனை உயர்த்த வேண்டும் என்ற அவர்தம் எண்ணத்தைக் காட்டு கிறது. ஹர்ஷ வர்த்தனருக்குக் கிடைத்தது போலச் சசாங் கனுக்கும் ஒரு பாணர் அல்லது யுவாங் சுவாங் கிடைத்திருந்தால் ஹர்ஷ வர்த்தனரைப் போலவே அவரும் உயர்த்திப் பேசப் பட்டிருப்பார் எனக் குறிப்பிட்ட டாக்டர் மஜூம்தார் வரலாறு சசாங்கனை அவ்வாறு காட்டாது இராஜ்ஜிய வர்த்தனரைக் கொலை செய்தவராகவும், பௌத்த சமய அழிவுக்குக் காரணமான வராகவும் காட்டிவிட்டது என்று வருந்துகிறர்.

சசாங்கன் பாணரால் புகழப்படாததற்கும், யுவாங் சுவாங் கினல் சிறப்பித்துக் கூறப்படாமைக்கும் மஜூம்தார் குறிப்பிடும் காரணங்கள் பொருத்தமானவையல்ல. ஆனல், நாம் ஒன்றை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். பாணர் ஹர்ஷரைப் புகழ்ந் துரைத்தார் என்ருே அதை முழுவதும் மிகை என்ருே, அடிப்

படையில்லாதது என்றோ தள்ளிவிடுவதற்கில்லை. அதைப் போலவே யுவாங்-சுவாங்கின் பயணக் குறிப்புகளையும் மொத்தத்தில் நம்பத் தகுந்தவையல்ல என்றும் கூற முடியாது. ஏனென்றால், அவர் தாம் பார்வையிட்ட நாடுகளையும், சில சமயங்களில் அதன் அரசர்களையும் குறிப்பிடுகிறார். சில நேரங்களில் அரசர்களைப் பற்றியே குறிப்பிடாமல் விட்டுவிடுவதும் உண்டு. ஹர்ஷரைக் 'கன்யாகுப்ஜ' அரசர் எனக் குறிப்பிடுகிறார். ஆனால், ஹர்ஷர் கன்யாகுப்ஜத்திற்கு மட்டும் அல்லாமல் வேறு பகுதிகளுக்கும் அரசராய் விளங்கினார்.

இவ்வாறாக நாம் காணுகின்ற பல்வேறு அறிஞர்களின் கருத்துகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாக உள்ளன. எனவே, அடிப்படை ஆதாரங்களைக் கொண்டு ஓரளவிற்கு நாம் ஹர்ஷரின் பேரரசுப் பரப்பினைக் காண்போம்.

ஹர்ஷர் கால வட இந்திய நிலையை அறிய முற்படும் முன் ஹர்ஷரின் முன்னோர்கள் கொண்டிருந்த ஆட்சிப் பகுதிகள் யாவை என்று காணுதல் வேண்டும். பன்ஸ்கேரா, மதுபன் செப்பேட்டுப் பட்டயங்களிலிருந்தும், சோனெபெட் முத்திரையிலிருந்தும் பிரபாகர வர்த்தனரே இறைமைப் பட்டயங்களை முதன் முதலில் கொண்ட புஷ்ய பூதி வம்ச அரசராவார் என அறிகிறோம். ஆனால், அவருடைய வெற்றிச் சிறப்புகளைக் குறித்துச் சிறிதளவே அறிகிறோம். பாணரின் ஹர்ஷ சரிதமே ஓரளவிற்கு அவருடைய வெற்றிச் சிறப்பினைக் காட்டுகிறது. ஆனால், பாணரின் குறிப்பினை அப்படியே ஏற்றாலும், பிரபாகர வர்த்தனர் மேற்கொண்ட முயற்சிகள் வெறும் படையெடுப்புகளே தவிர அவை நிலையான வெற்றிகள் அல்ல.

பிரபாகர வர்த்தனர் இறக்குந்தறுவாயில் அவருடைய மூத்த மகன் ஹூணர்களுடன் போரிட்டுக்கொண்டிருந்தார். இந்நிலையில் மௌகாரியின் கடைசி அரசன் கிரக வர்மன் தோற்கடிக்கப்பட்டதும், இராஜ்ய ஸ்ரீ சிறைப்பட்டதும், தம் சகோதரிக்கு நேர்ந்த அவமானத்தைத் துடைக்கச் சென்ற இராஜ்ய வர்த்தனர் சசாங்கனால் கொல்லப்பட்டதும் அறிந்தவையே. இந்நிகழ்ச்சிக் கோவைகளிலிருந்து நாம் அறிவதென்ன? தானேஸ்வரமும் அதைச் சூழ்ந்த பகுதிகளும் தந்தை வழியில் ஹர்ஷருக்கு உரியவாயின. மாளவத்தின் சில பகுதிகள் இராஜ்ய வர்த்தனரால் வெற்றிகொள்ளப்பட்டன. தம் சகோதரரின் மறைவிற்குப் பின் ஹர்ஷர் அரியணையேறினார். ஆனால், ஹர்ஷர் அரியணையை ஏற்க மறுத்ததாகப் புதிய கதை ஒன்றை யுவாங் சுவாங் கூறினார். சி. வி. வைத்யா, என். இராய் முதலானவர்கள்

ஹர்ஷர் ஏற்க மறுத்தது தம் தந்தைவழி அரசு அன்று, கன்னோஜ் அரசையே என்று குறிப்பிட்டனர். ஹர்ஷர் தம் சகோதரனின் மரணத்திற்குப் பழிவாங்க விரும்பினர். பாணரும், யுவாங் சுவாங்கும் ஹர்ஷரின் வெற்றிகளைக் குறிப்பிடாது பொதுவான அறிக்கைகளை அளித்தனர். ஆனல், அவர் தாம் பயணம் செய்த நாடுகளைக் குறித்துப் பட்டியல் அளிப்பதைக் கொண்டு நாம் அவருடைய வெற்றிகளை அறிய இயலும். யுவாங் சுவாங் மத்திய இந்தியாவின் அரசர் எனக் குறிப்பிடுவது ஹர்ஷரையே என்று கருதப்படுகிறது. யுவாங் சுவாங் சீன தேசத்திற்குப் புறப்பட்டுச் சென்றபோது அவருடன் நான்கு வழிகாட்டிகளையும் கடிதங்களையும் ஹர்ஷர் அனுப்பிவைத்தார் எனவும், அவர்களை அக் கடிதங்களை எல்லா நாடுகளிலும் கொடுக்குமாறு பணித்தார் எனவும் அறிவதைக் கொண்டு, யுவாங் சுவாங் சீனதேசம் செல்லுகின்றவரை அந்நாடுகளின் அரசர்கள் தகுந்த போக்குவரத்து வசதிகளைச் செய்து தருமாறு பணித்தார் எனவும் அறிகிறோம். ஹர்ஷருடைய பேரரசு பரப்பினைக் குறித்த கட்டுரை ஒன்றினை 'Indian Historical Quarterly, Vol. III ல், (1957) நிகரஞ்சன் ரே ஆராய்ந்து எழுதியுள்ளார். நிகரஞ்சன் ரேயின் கருத்துகளை மறுத்து 'Journal of the Andhra Historical Reasearch Society, (Vol. VI)' என்னும் பருவ இதழில் ஏ. சி. பானர்ஜி கட்டுரை ஒன்றினை வரைந்துள்ளார். இதுவரை ஹர்ஷரின் பேரரசுப் பரப்பினைக் குறித்த ஆய்வினை மேற்கொண்ட அனைவரும் யுவாங் சுவாங்கின் குறிப்புகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளனர்.

எனவே, யுவாங் சுவாங்கின் குறிப்புகளைத் துணையாகக் கொண்டு ஹர்ஷரின் ஆட்சிப் பரப்பினைக் காண்போம்.

## இலம்பா

பண்டைய நாளில் வடமொழி இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலம்பாகம் என்பதையே யுவாங் சுவாங் இலான்-போ, (Lan-Po) என்று குறிப்பிட்டார் என வாட்டர்ஸ் கருதுகிருர். தாலமியினல் குறிப்பிடப்பட்ட இலாம்பாடியா என்பதே அது எனக் கன்னிங்ஹாம் கருதுகிருர். இது இக் காலத்திய இலக்மண் எனவும் அறியப்படுகிறது. யுவாங் சுவாங்கின் காலத்தில் கபீக்கள் அல்லது கபிசாவிற்கு இப் பகுதி அடங்கி இருந்தது. ஏ. சி. பானர்ஜி காஷ்மீருக்கு அடங்கிய பகுதியாக இதனைக் கருதுகிருர்.

**தட்ச சீலம் (த-ச-ஷி-லோ)**

தட்ச சீலம் அல்பெருணியின் குறிப்புகளில் 'மாறிக்கலம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டதாக அறிகிறோம். யுவாங் சுவாங்கும், பாஹியானும் காந்தாரத்திலிருந்து வேறுபட்ட ஒன்று என இதைக் கருதுகின்றனர். ஆனால், பௌத்த இலக்கியங்களில் காந்தாரத்தின் பகுதியாக இது விளங்கியதாக குறிப்பிடப்படுகிறது. ஹியூகல் என்பவர் இதனை இக் கால இராவல்பிண்டி எனவும், கன்னிங்ஹாம் ஷாதேரி எனவும் குறிப்பிட்டனர். கன்னிங்ஹாமின் குறிப்பே சரி என ஏற்றுக் கொள்ளப்படுகிறது. யுவாங் சுவாங் இதனை முன்னர்க் கபீசாவிற்கு அடங்கியிருந்தது எனவும், பின்னர்க் காஷ்மீருக்கு அடங்கியது எனவும் குறிப்பிட்டுள்ளார். எனவே, இந்த நாடு தனியாட்சி கொண்டது அன்று எனத் தெரிகிறது. யுவாங் சுவாங்கின் குறிப்புகளில் அரச வமிசம் முடிவுற்றது என்று குறிப்பிட்டுள்ளதால் பிரபாகர வர்த்தனருடன் தட்சசில அரசர் போரில் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும், அவருக்கு வாரிசு இல்லாமல் போயிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. ஆனால், ஹர்ஷர் காஷ்மீரைக் கைப்பற்றினர் எனின் காஷ்மீருக்கு அடங்கியவையும் ஹர்ஷரின் கீழ் வந்திருக்கலாம்.

**நகரா (ந-கி-லோ-ஹோ)**

இக் கால ஜலாலாபாத் மாவட்டத்தில் இப் பகுதி சேர்க்கப்பட்டிருந்தது. இதனை இக் கால நங்னேஹர் எனக் கருதுகின்றனர். ஜூலியன் இதனை நகரஹாரா என உரைக்கிறார். இங்கும் இலம்பாவைப்போல் அரசர் ஒருவரும் இல்லை என்பதோடு கபீசாவின் மாநிலமாக இது விளங்கிற்று எனவும் அறியப்படுகிறது.

**காஷ்மீர் (கியா-ஷி-மி-லோ)**

காஷ்மீரின் வரலாற்றை ஏற்கனவே கண்டோம். காஷ்மீரத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் காஷ்மீர அரசன் தீவிர பௌத்த சமயத்தவன் என்று டாக்டர் முகர்ஜி கூறியதைச் சுட்டிக்காட்டிய ஏ. சி. பானர்ஜி யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலும், கல்கணரின் இராஜ தரங்கினியிலும் காஷ்மீர அரசன் துர்லாப வர்த்தனன் தீவிர பௌத்த சமயத்தவனாகக் குறிக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினர். ஆனால், ஹர்ஷரின் படையெடுப்புகளைப் பற்றிப் படித்தபோது கன்னோசி அரசுக்குக் காஷ்மீர் கட்டுப்பட்டதாகவே இருக்கவேண்டும் என்ற டாக்டர் சர்மாவின் கருத்துரைகளைக் கண்டோம்.

**காந்தாரா (காங்-தோ-லோ)**

இலம்பா, நகரா போலவே இந் நாட்டிலும் அரச குடும்பம் அழிந்து நாடு கபீசாவிற்கு அடங்கியதாயிற்று எனவும், நகரங்களும், கிராமங்களும் ஆளில்லாமல் வெறிச்சோடிப் போயின எனவும் யுவாங் சுவாங் குறிப்பிடுவதிலிருந்து பிரபாகர வர்த்தனரால் காந்தாரா அரசன் தோற்கடிக்கப்பட்டுப் போர்க்களத்தில் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து மெய்ப்பிக்கப்படுகிறது.

இவ்வாறாக இலம்பா, நகரா காந்தாரா முதலியவை கபீசாவின் கீழ் இருந்தன எனக் கண்டோம். எனவே, கபீசாவின் அரசியல் பரப்பினைத் தீர்மானிக்கக் கபீசாவின் அரசியல் நிலையை அறிதல் வேண்டும். யுவாங் சுவாங்கின் குறிப்பில் பனி படர்ந்த மலை எனக் குறிப்பிடப்பட்டது காஷ்மீர் அல்லது நேபாளமாக இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. அக் குறிப்பு அவ் விரண்டையும் தவிரக் கபீசாவையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டுமென டாக்டர் சர்மா கருதுகிறார்.

அரசர் க்ஷத்திரிய வமிசத்தவர் என்ற குறிப்பும், அவ் வரசின் மக்கள் பௌத்தம், சமணம், சைவம் ஆகிய சமயத்தவர்களாக விளங்கினர் என்ற குறிப்பும் இப் பகுதி இந்திய எல்லைக்குள் விளங்கியிருக்க வேண்டுமென்று காட்டுகிறது. பாணர், பனி படர்ந்த மலைப்பகுதி அரசரிடமிருந்து நில வரியினை ஹர்ஷர் பெற்றதாகக் கூறும் செய்தியும் இப் பகுதி அரசன் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டான் என்பதனைக் காட்டுகிறது எனலாம்.

**உத்யான (ஊ-சங்-ந)**

உத்யான என்ற பகுதி பங்கோரா, இஸ்வத்ருனிர் ஆகிய இக் கால மாவட்டங்களைக் கொண்டது எனக் கன்னிங்ஹாம் கருதுகிறார். இப் பகுதியை ஆட்சி செலுத்தியதாக எந்த அரச வமிசத்தின் பெயரையும் சீனப் பயணி குறிப்பிடாமையால் இது ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. அதனுடைய சிறந்த நகரங்களில் ஒன்றாக மாங்கில் விளங்கியது. எல்லைப்புற பகுதிகளின் ஆட்சிமுறையினைக் கவனிக்கத்தக்க புறக்காவல் நிலையமாக அது விளங்கியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது,

**போலர் (போ-லு-லோ)**

இந் நாடு பனிபடர்ந்த பெருமலைப் பகுதியில் இருந்தது. இப் பகுதியின் அரசர் அல்லது அரச வமிசம் குறித்து யுவாங்

சுவாங் ஏதும் குறிப்பிடவில்லை. எனவே, இதுவும் ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டதாகவோ அவருடைய திறை அரசர்களில் ஒருவருடைய ஆட்சிக்குட்பட்டதாகவோ இருக்கலாம்.

சிங்கபுரா (சிங்-ஹா-பு-லோ)

தட்ச சீலத்தைப் போலவே இந் நாட்டிலும் அரசன் யாரும் இல்லை. இது காஷ்மீரத்திற்கு அடங்கிய நாடாக விளங்கிற்று. காஷ்மீரத்துடன் இப் பகுதியில் ஹர்ஷர் தம்முடைய ஆட்சிச் செல்வாக்கினைப் பயன்படுத்தியிருக்கவேண்டும்.

உரசா (ஊ-ல-ஷி)

வர்ஷாரிஜீயோ (Varsa-regio) எனத் தாலமியால் குறிப்பிடப்பட்டது இது. இக் காலத்தில் முஸாபர்பாத்திற்கு மேற்கே தண்டாவாரில் உள்ள இராஷ் மாவட்டமே எனக் கன்னிங்ஹாம் கருதுகிறார். ஆனால், இது இக் கால ஹசாரா எனவும் கருதப்படுகிறது. யுவாங் சுவாங் இந் நாட்டிற்கும் அரசர் யாருமில்லை எனவும், காஷ்மீரின் கீழ் இருந்த நாடு இது எனவும் குறிப்பிட்டார். யுவாங் சுவாங் நாம் மேலே கண்ட இடங்களிலெல்லாம் சிலவற்றில் அரசர்கள் இருந்ததாகவும், சிலவற்றில் அரசர்கள் இல்லையென்றும் குறிப்பிட்டதற்குக் காரணம் அவரால் தல ஆட்சியாளர்களுக்கும், ஆளுநர்களுக்கும் வேறுபாடு அறிய இயலாமையே. காஷ்மீரை ஹர்ஷர் வெற்றி கொண்ட போது இந்த அரசுகளும் ஹர்ஷரின் செல்வாக்கிற்கு உட்பட்டன. காஷ்மீரைப் பார்வையிட்ட பின்னர் யுவாங் சுவாங் காஷ்மீரின் கீழ் இருந்த மற்றொரு நாடான புனச் அல்லது புனட் என்பதற்குச் சென்றார். அவர் காஷ்மீரின் கீழ் இருந்த நாடாக இதனைக் குறிப்பிட்டார்.

இராஜபுரம் (ஹோ-லோ-ஷி-பு-லோ)

புனச் என்ற நாட்டைப்போலவே இராஜபுரமும் இறையரசர் தமின்றிக் காஷ்மீரின் கீழ் இருந்தது. இக் குறிப்பிலிருந்து மற்றச் சிற்றரசுகளைப் போலவே புனச்சும், இராஜபுரமும் காஷ்மீரத்தின் சிற்றரசுகளாக விளங்கி ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும் என அறிகிறோம்.

தெக்கா (செ-கா)

இராஜபுரத்திலிருந்து யுவாங் சுவாங் செ-கா நாட்டிற்குச் சென்றார். அவர் இந் நாட்டின் அரசர் பெயர் எதனையும் குறிப்

பிடாததால் இதுவும் ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. ஆனால், டாக்டர் திரிபாதி செ-கா நாடு ஹர்ஷரின் ஆட்சிக்கு உட்பட்டதன்று என்று கருதினார். வாட்டர்ஸ் இலம்பாவிற்கும், இந்தியாவிற்கும் இடைப்பட்ட அயல்நாடு என இப் பகுதியைத் தவறாகக் கூறினார் என்று டாக்டர் சர்மா கருதுகின்றார். மூலஸ்தானிபுரம் (மௌ-லோ-சான்-பு-லு), பர்வதா (போ-பா-தோ) முதலியவை தெக்காவின் கீழிருந்தவை. தெக்காவிற்கு ஏற்பட்ட விளைவுகள் இந் நாடுகளுக்கும் ஏற்பட்டிருக்கவேண்டும்.

### சீனபுக்தி அல்லது சீனபதி (சீ-ன-புஹ்-தி)

இங்கு வாழ்ந்த மக்கள் நிலையான தொழில்களையுடையவர்களாக விளங்கினர். அரசு பெரும் வருவாயைப் பெற்றது என்ற குறிப்பைத் தந்த யுவாங் சுவாங் அவ்வாறு வருவாயைப் பெற்ற அரசர் அல்லது ஆட்சியாளர் யார் என்று குறிப்பிடவில்லை. அத்தோடு சீனபுக்தி என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்ற கதையையும் கூறினார். கனிஷ்கரின் அவைக்குச் சீன அரசர் பிணையாகத் தம் மகனை அனுப்பினார் எனவும், அப் பிணையாக வந்தவன் தங்கக் குளிர்கால அரண்மனை இம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டது எனவும், அதனால்தான் சீனபுக்தி என்ற பெயர் ஏற்பட்டது எனவும் யுவாங் சுவாங் குறிப்பிட்டார். யுவாங் சுவாங்கினால் குறிப்பிடப்பட்ட இக் கதை பிற்காலத்தில் உருவாக்கப்பட்டதே.

### ஜலந்தரா (ஷி-லான்-த-லோ)

பெரும்பாலான அறிஞர்கள் ஜலந்தரா ஹர்ஷரின் பேரரசுக் குட்பட்டது என்றே கருதினர். டாக்டர் முகர்ஜி ஹர்ஷரின் பேரரசு சில நேரங்களில் வெற்றிகளினால் அல்லாமல் நட்பினாலும், கூட்டுறவினாலும் பரவியிருந்தது என்று குறிப்பிட்டார். ஜலந்தராவின் முந்தைய அரசர் பௌத்த சமயத்தவராக இல்லாமலிருந்து பின்னர்ப் பௌத்தரான துறவி ஒருவரைச் சந்தித்து அவரிடமிருந்து பௌத்தத்தைக் கற்றுத் தீவிரப் பௌத்த சமயத்தவராக விளங்கினார் என்று யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். மத்திய இந்தியாவின் அரசர் அவருடைய ஆர்வத்தைப் பாராட்டி இந்தியா முழுமைக்கும் பௌத்த சமயம் தொடர்புள்ள அனைத்திற்கும் பொறுப்புள்ளவராக அவரை ஆக்கினார் எனவும் எடுத்துரைக்கிறார்.

இவ்வாருகப் பௌத்த சமயத்தைக் காப்பவராக விளங்கிய அவ்வரசர் இந்தியா முழுமையும் பயணம் செய்து விஹாரங்களைப் புனித இடங்களில் அமைத்தார் எனவும் யுவாங் சுவாங்கின் வாழ்க்கைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. யார் அந்த அரசர் என அறிவதும், மத்திய இந்தியாவின் அரசர் என்று குறிப்பிடப் பட்டவர் யார் என்று கண்டறிவதும் கடினமாக உள்ளன. 'இந் நாட்டின் முந்தைய அரசர்' என்று பயணக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்ட அரசர் ஹர்ஷரின் தொடக்கக் காலத்தில் வாழ்ந்த அரசர் என்ருல், மத்திய இந்தியாவின் அரசர் ஹர்ஷ ராகவே இருக்கவேண்டும். 'மத்திய இந்தியாவின் அரசராக ஹர்ஷர் விளங்கினரோ, இல்லையோ, ஹர்ஷர் ஜலந்தராவின்மீது சிறிதளவேனும் ஆதிக்கம் செலுத்தினர்' என்பது மட்டும் உறுதி என்று டாக்டர் திரிபாதி குறிப்பிட்டார்.

யுவாங் சுவாங்கின் வாழ்க்கை நூல் உதிடோ என்ற அரசனுக்கு முந்திய அரசனையே குறிப்பிடுகிறது. எனவே, பஞ்சாப் அரசன் உதிடோ ஹர்ஷரின் திறையரசன் என்பதை ஏற்பதற்கில்லை. இவ்வாறு கருத்துக் கொண்ட நிஹாரஞ்சன் ரேயின் [1] கருத்து ஏற்புடைத்தாகாது என ஏ. ஸி. பாணர்ஜீ கருதியுள்ளதர். [2]

### குலுதா அல்லது குலு (கு-லு-தோ)

ஜலந்தராவிலிருந்து வடகிழக்கில் பயணம் செய்து மலை களைக் கடந்து குலுதா என்ற நாட்டினை யுவாங் சுவாங் அடைந் தார். பியாஸ் நதியின்மேல் சமவெளியில் உள்ள குல்லுவே யுவாங் சுவாங்கினுல் குறிப்பிடப்பட்ட குலுதா எனக் கன்னிங் ஹாம் என்னுகிருர். [3]

யுவாங் சுவாங் இம் மாவட்டத்தின் அரசு பற்றிக் குறிப்பி டாமையினுல் இதனையும் ஹர்ஷர் தம் நேரடி ஆட்சியில் கொண்டி ருந்தார் என எண்ணலாம்.

### சதத்ரு (ஷி-டோ-டு-லு)

யுவாங் சுவாங்கினுல் குறிப்பிடப்பட்ட இந் நாடு இக் காலச் சர்ஹிண்டு என்பது கன்னிங்ஹாமின் கருத்து. இதன் ஆட்சி யாளர் பற்றியும் சீனப் பயணி குறிப்பிடாததால் இதுவும் ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்குட்பட்டிருந்து என்று எண்ண வேண்டியுள்ளது.

[1] *I.H.Q. vol III, 1927, p. 780*
[2] *Jahrs, vol VI, p. 143*
[3] *Ancient Geography of India* p 63

பாரியாத்ரா (போ-லி-யே-த-லோ)

சதத்ருவிற்கு 800 லி தொலைவில் தென்மேற்கில் இந் நாடு அமைந்துள்ளது. சீனப் பயணி இதன் அரசர் வைசிய இனத்தவர் எனவும், துணிவும் படை ஆற்றலும் உடையவர் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷரையே 'பைஷி' என அவர் குறித்துள்ளார் என்று கருதவும் இடம் உண்டு. கன்னிங்ஹாம் 'பைராத்தே' இந்த அரசு என்று குறிப்பிடுகிறார்.

மதுரா (மோ-து-லோ)

மதுராவின் அரசர் பெயர் யுவாங் சுவாங்கினால் குறிப்பிடப் படவில்லை. இந்த அரசனும், அவனுடைய உதவியாளர்களும் சிறந்த பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்தனர். புஷ்ப பூதி வமிசத்திற்கு அடங்கிய திறையரசரே மதுராவை ஆட்சி செலுத்தினர். சூரசேனவை வெற்றி கொண்டவர் அவரேயாவர். ஸ்தானேஸ்வரம் (சா-த்-அ-நி-ஸ்ஸு-பா-லோ) என்ற அடுத்த அரசினைக் குறித்து ஏற்கெனவே கண்டோம். ஆனால், பயணி புஷ்ப பூதிகளைக் குறிப்பிடவில்லை.

ஸ்ருக்ன (சு-லு-கின்-ன)

இதன் ஆட்சியாளரைக் குறித்து யுவாங் சுவாங் ஏதும் குறிப்பிடாமையால் வழக்கம்போல இதனையும் ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்குட்பட்டதாகவே கருத வேண்டியிருக்கிறது. கன்னிங்ஹாம் 'சுக்' என்ற கிராமமே ஸ்ருக்ன என உரைக்கிறார். இதன் தலைநகரம் அழிவுற்ற நிலையில் இருந்தது எனவும் யுவாங் சுவாங் குறிப்பிட்டார்.

மடிப்புரம் (ம-டி-பு-லோ)

மேற்கு ரோஹில்கண்டிலிருந்த பெரிய நகரம் மடாவர் அல்லது மண்டாவர் என்பதே மடிப்புரம் என்று பெயர் பெற்றிருந்திருக்க வேண்டும் எனப் புனித மார்ட்டினும், கன்னிங்ஹாமும் தெரிவித்தனர். இந் நாட்டின் அரசர் சூத்திரர் எனவும், பௌத்த சமயத்தில் நம்பிக்கை கொள்ளாது தேவர்களை வழிபட்டார் எனவும் யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அறிய முடிந்தபோதிலும், அவர் சுயேச்சை அரசரா, அல்லரா எனத் தீர்மானிக்க முடியவில்லை. இந் நாட்டின் அரசர் பௌத்த சமயத்தில் நம்பிக்கை கொள்ளவில்லையாதலால் அவரைச் சூத்திரர் என்று யுவாங் சுவாங் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

**பிரம்மபுரம் (போ-லோ-ஹிம்-மோ-பு-லோ)**

பிரம்மபுரம் என்பது எது என்பதனைக் கண்டறிவது சிக்கல் மிகுந்த பிரச்சனையேயாகும். யுவாங் சுவாங் பிரம்மபுரம் 4000 லி சுற்றளவுடையது என்று குறிப்பிடுவதால், கார்வால், கோயான் மாவட்டங்கள் இணைந்த பகுதியையே அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பது கன்னிங்ஹாமின் கருத்து. பிருஹத் சமிதாவில் வடகிழக்கு மண்டலத்திலுள்ள நகரமே பிரம்மபுரம் என்று குறிப்பிடப்படுகிறது. இதனுடைய ஆட்சியாளர் பெயரும் அறியப்படாததால், ஹர்ஷரின் நேரடி ஆட்சியின் கீழ் இப் பகுதி இருந்திருக்க வேண்டும்.

**சுவர்ண கோத்ர நாடு**

பிரம்மபுரத்திற்கு வடக்கில் பெரும் பனிமலைப் பகுதியில் சுவர்ண கோத்ர நாடு இருந்தது என யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். இந் நாட்டில் கிடைத்த உயர்ந்த தங்கத்தினால் அப் பெயர் வழங்கப்பட்டது என்பர். பெண்களால் தொடர்ந்து ஆளப்பட்டமையால் இதனைக் 'கிழக்குப் பெண்டிரின் நாடு' என்று குறிப்பிட்டனராம்.

இந் நாட்டில் வழங்கிவந்ததாகப் பல விநோதப் பழக்கங்களைச் சீனப் பயணி குறிப்பிடுவதால் இந் நாட்டினை அடையாளம் காண்பது எளிதாயில்லை. அரசியின் கணவர் அரசராக விளங்கியபோதிலும், அரசை நடத்திச் செல்லவில்லை எனவும், ஆண்கள் கலவரங்களை அடக்குவதிலும், வயல்களைப் பயிரிடுவதிலுமே ஈடுபட்டனர் எனவும் அவர் குறித்துள்ளார். சீனப் பயணியினால் சுட்டிக் காட்டப்பட்ட பழக்கவழக்கங்கள் இன்றும் அஸ்ஸாமின் சில பகுதிகளில் நிலவுகின்றன. கெர்ன் (Kern) இது புராணக் கற்பனை நாடே என விளக்குகிறார். ஏனெனில் கிழக்கில் திபெத் வரையிலும், வடக்கில் கோடான் வரையிலும் மேற்கில் மலசா வரையிலும் பரவியிருந்ததாக அறிவிக்கப் படுவதால் சுமேரா என்ற கற்பனை நாடு என இதனைக் கருதுவர்.

**கோவிஸணா (கு-பி-சங்-ணா)**

காஷிப்பூர், இராம்பூர், பிலிபிடி ஆகியவற்றிற்கு அருகில் உள்ள மாவட்டங்களே என அடையாளம் கண்டறிகிறார் கன்னிங்ஹாம். உபைன் என்னும் காஷிப்பூருக்கு ஒரு மைல் தொலைவிலுள்ள கிராமமே தலைநகராக விளங்கிற்று என்பதும் அவர் கருத்து. இதனை ஹர்ஷர் தமது நேரடி ஆட்சியின்கீழ் வைத்திருந்தார் எனலாம். ஏனெனில், சீனப் பயணி இதன் ஆட்சியாளரைக் குறிப்பிடவில்லை.

**அஹிச்சத்திரா (ங்கோ-ஹி-சி-த-லோ)**

இப்பகுதி நிச்சயமாக ஹர்ஷரின் பேரரசில் அடங்கியிருந்தது எனப் பானர்ஜி குறித்துள்ளார். ரோஹில்கண்டின் கிழக்குப் பகுதியே அஹிச்சத்திரா என்பது கன்னிங்ஹாமின் கருத்து. வடக்குப் பாஞ்சாலத்தின் தலைநகரம் அஹிச்சத்திரா என்றும், பரெய்லி (உ. பி.) மாவட்டத்திலுள்ள கிராம் நகரமே வடக்குப் பாஞ்சாலம் எனவும் ஸ்மித் அறிவிக்கிறார். ஹர்ஷரின் பன்ஸ் கேராப் பட்டயத்தில் இது 'புக்தி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதனுடைய ஆட்சியாளர் பெயரைச் சீனப் பயணி குறிக்கவில்லை.

மேலே காணப்பட்ட சான்றுகள் யுவாங் சுவாங்கினால் அரசரின் பெயர் குறிப்பிடப்படாத பகுதிகளில் ஹர்ஷர் தம் நேரடி ஆட்சியைக் கொண்டிருந்தார் என்று நாம் கொண்டுள்ள கருத்தினை மெய்ப்பிக்கின்றன.

**விலாஸாண அல்லது பிலாஸாண (பி-லே-ஷன்-ந)**

அறிஞர்களால் வீரசாண, விலாசாண, பிலாசாண, பிலாதன என்றெல்லாம் குறிப்பிடப்படும் இப்பகுதியின் ஆட்சியாளருடைய பெயரைச் சீனப் பயணி குறிப்பிடாவிடினும் இது ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்குட்பட்டதே என அறிகிறோம். இதன் தலைநகரம் காளி நதியின் மேற்குக் கரையில் அமைந்திருந்தது.

**கபிதா அல்லது சாம்காஸ்யா (க-பி-தா)**

பிருஹத் சம்ஹிதாவில் குறிப்பிடப்படும் கபிஸ்தலமே கபிதா எனப் பொதுவாகக் கருதப்படுவதுண்டு. கன்னிங்ஹாம் சங்கீசா என இக் காலத்தில் வழங்கப்பட்டுவருவதே இது என்றார். டாக்டர் திரிபாதி கன்னோசிக்கு உட்பட்டதாகவே இதனைக் கருதுகிறார். இப் பகுதி அமைந்துள்ள சூழ்நிலையைக் கொண்டு இது ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்குட்பட்டது என அறிகிறோம். யுவாங் சுவாங் இதன் அரசருடைய பெயரையும் குறிப்பிடவில்லை.

**கன்யா குப்ஜம் (க-ஞோ-கு-ஷி)**

கன்னோசி வட இந்திய நகரங்களில் குறிப்பிடத்தக்க ஒன்று. ஹர்ஷரின் தலைநகராக இது விளங்கிற்று. ஹர்ஷர் கன்னோசி அரசர் எனத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

**நவதேவகுல (ந-போ-தி-போ-கு-லோ)**

கன்னோசியிலிருந்து அயோத்திக்குச் செல்லும் வழியில் 100 லி தொலைவில் இந் நகரம் இருந்தது. கன்னோசி அல்லது

அயோத்தியா மாவட்டத்தில் இது இணைந்திருந்தது. அயோத்தி ஹர்ஷரின் பேரரசில் அடங்கியிருந்தமையால் 'நவதேவகுல'வும் அவருடைய பேரரசுக்குட்பட்டதே எனலாம்.

அயோத்தியா (அ-யு-தே)

அல்பெருணி, அயோத்தியா கன்னோசியிலிருந்து தென் கிழக்கில் 150 மைல் தொலைவில் இருந்தது என்றார். ஆனால், யுவாங் சுவாங் நவதேவகுலத்திலிருந்து, அயோத்தியாவின் திசையினைச் சரியாகக் காட்டவில்லை என்றே தோன்றுகிறது. பிருஹத் சம்ஹிதா, சாகேதாவைப் பண்டைய அயோத்தியா எனக் காட்டுகிறது. யுவாங் சுவாங் ஆட்சியாளர் பெயரைக் குறிப்பிடவில்லை. பிரபாகர வர்த்தனருக்கும், ஹர்ஷருக்கும் உரியதெனக் கருதப்படும் பிரதாபசிலர், சிலாதித்தியர் காசுகளைக் கொண்டு, அயோத்தியா ஹர்ஷரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது எனக் கருதப்படுகிறது.

ஹாயா முகா அல்லது ஆபா முகா (ஆ-யே-மு-கா)

அயோத்தியாவையும், ஆபாமுகாவையும் அடையாளம் காட்டும் கன்னிங்ஹாமின் செய்திகளை வாட்டர்ஸ் ஏற்கவில்லை. 'இவை எவ்விதப் பயனும் விளைவிக்காத யூகங்கள்' என்று கருத்துத் தெரிவித்தார் அவர். இதன் ஆட்சியாளர் பெயர் குறிப்பிடப்படவில்லையெனினும், இது ஹர்ஷரின் ஆட்சிக்குட்பட்டதாகவே கருதப்படுகிறது.

பிரயாகை (போ-லோ-யா-கா)

யுவாங் சுவாங் இங்கு ஆட்சியாளர் பெயர் குறிப்பிடப்படாத, ஹர்ஷரின் ஆட்சிக்குட்பட்டதாகக் கருதப்படும் பிரயாகைக்கு ஹர்ஷர் சென்று அன்பளிப்புகளை வழங்கினர் என்ற செய்தி சமயச் சிறப்பு வாய்ந்த இடமாக இவ்விடம் விளங்கியதைக் காட்டுகிறது.

கோஸாம்பி (கிபாவ்-ஷங்-மி)

இது அலகாபாத்திலிருந்து தென் மேற்கில் சுமார் 38 கல் தொலைவில் உள்ள கோசாம் என்பதே எனக் கன்னிங்ஹாம் குறிப்பிட்டார். ஆனால், தூய மார்ட்டின் பிரயாகைக்கு வட மேற்கில் இருந்தது என உரைத்தார். டாக்டர் ஸ்மித் சாத்னா புகைவண்டி நிலையமே கௌசாம்பியின் சரியான இடத்தைக் காட்டுகிறது என்று குறிப்பிட்டது தவறு என்பதையும், கோசாமில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வு கன்னிங்ஹாமின்

குறிப்பே சரியானது என்பதையும் காட்டுகிறது. இப் பகுதி ஹர்ஷரின் நேரடி ஆட்சிக்குட்பட்டது என்று நாம் குறிப்பிடுவதே, யுவாங் சுவாங்கிறைல் ஆட்சியாளர் பெயர் குறிப்பிடப் படாததைக் காட்டும். 'பிரயாகையுடன், கோஸாம்பியின் நிலையும் இணைந்தே இருந்தது' என டாக்டர் திரிபாதி குறிப்பிட்டார்.

விஸோகா (பிங்-ஷோ-கா)

பாஹியானல் குறிப்பிடப்பட்ட ஷா-கி (ஷா-தி) என்பதே பி-ஷோ-கா எனக் கன்னிங்ஹாம் விளக்குகிறார். இது கோஸாம் பிக்கும், ஸ்ரவஸ்திக்கும் இடைப்பட்ட மாநிலம். மிக நன்கு ஆராய்ந்து விஸோகாவை சாகோதா அல்லது அயோத்தியா எனக் கன்னிங்ஹாம் குறிப்பிட்டபோதிலும் ஏதும் கூறுதற் கில்லை. இது ஹர்ஷரின் பேரரசில் நிச்சயமாகச் சேர்ந்தது எனச் சர்மா கூறுகிறார்.

ஸ்ரவஸ்தி (ஷ-லோ-பா-சி-தி)

இராப்தியின் தெற்குக் கரையில் சாஹேத் - மாஹேத் என அழைக்கப்படும் அழிவுபட்ட நகரமே இது எனக் கன்னிங் ஹாம் குறிப்பிடுவதை ஏற்காது, ஸ்மித் பல்வேறு மறுப்புரை களை அளித்து நேபாளத்தில் உள்ள கஜூரா மாவட்டமே ஸ்ரவஸ்தி என முடிவுகட்டுகிறார். ஆனால், இதை மறுத்தும் பல்வேறு மாறுபட்ட கட்டுரைகள் அவ்வப்போது வெளியிடப் பட்டன. பட்டயச் சான்றுகள் ஹர்ஷரின் பேரரசுக்குட்பட்ட மாநிலமாக (புக்தி) இது விளங்கிற்று என்பதைக் காட்டு கின்றன.

கபிலவஸ்து (கீ-பி-லே-ப-சு-து)

கபில வஸ்து நாடு அரசரின்றி இருந்தது எனவும், ஒவ்வொரு நகரமும் ஒரு தலைவரைக் கொண்டிருந்தது எனவும் யுவாங் சுவாங் குறிப்பிட்டார். அந்த மாவட்டம் ஹர்ஷரின் பேரரசுக்கு அடங்கிய ஒன்று எனவும், சுயேச்சைத் தன்மையுடன் அரசோச்சியவர்கள் நகரத் தலைவர்கள் எனவும், யுவாங் சுவாங்கின் காலத்தில் நகரம் ஆள்களின்றிக் காட்சியளித்தது எனவும் அறிகிறோம். இதைப் போலவே இராமா அல்லது இராம கிராமா என்பதும் ஆள் களின்றிக் காணப்பட்டதாகவும், இது கபிலவஸ்துவிற்கு 100 கல் கிழக்கில் இருந்ததாகவும் அறிகிறோம். கபில வஸ்துவைப் போல இராமாவும் ஹர்ஷரின் பேரரசுக்குட்பட்டதேயாகும்.

குஸிநாகரா (கௌ-ஷி-ந-க-லோ)

கோரக்பூர் மாவட்டத்தில் உள்ள காசியா என்பதே குஸிநாகராவாகும். புத்தர் பரிநிர்வாணம் பெற்ற இடமா

கையால் பௌத்த இலக்கியங்களில் இவ் விடம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. சீனப்பயணியின் வருகையின்போது அழிவுற்றுக் காணப்பட்ட இது ஹர்ஷரின் ஆட்சி எல்லேக்குட் பட்ட பகுதியேயாகும்.

வாரணசி (போ-லோ-ண-ஸி)

கபிலவஸ்து, இராமா, குஸிநாகரா முதலியவற்றைச் சுற்றிப் பார்த்த பின்னர்ச் சீனப் பயணி வாரணசியை வந்து அடைந்தார். இதன் அரசர் பெயர் அவரால் குறிக்கப்படவில்லை. எனவே, இது ஹர்ஷரின் பேரரசுக்குட்பட்ட பகுதியே என்பதில் ஐயமில்லை.

காஜிப்பூர் (சன்-சூ)

வாரணசிக்கு 600 லி தொலேவில் கிழக்கில் நிறைந்த மக்களேக் கொண்ட இந் நாடு இருந்தது என யுவாங் சுவாங் குறிப்பிடுகிருர். காஜிப்பூரே (உ. பி.) இந் நாடு எனக் கன்னிங்ஹாம் கருதுகிருர். இதுவும் ஹர்ஷரின் பேரரசுக்குட்பட்ட ஒன்றே. இதைப் போலவே வைசாலியின் அரசு (பெய்-ஷீ-லி) குறித்து யுவாங் சுவாங் ஏதும் குறிப்பிடாவிடினும் அந் நாடும் ஹர்ஷருடைய ஆட்சிக்குட்பட்டது என்றே கருதப்படுகிறது.

நேபாளம் (நி-போ-லோ)

நாம் ஹர்ஷரின் போர்களேக் குறித்த ஆய்வினே மேற்கொண்ட போது நி-போ-லோ என அழைக்கப்பட்ட நேபாளம் ஹர்ஷரின் செல்வாக்கு மண்டலத்தில் அடங்கியிருந்தது என்று கண்டோம். அஸ்ஸாமின் மேற்குப் பகுதியென்று கருதப்படும் காமரூபத்தின் அரசரும் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டதையும், ஓத்ரா அல்லது ஓட்ரா (வூ-டூ) எனப்பட்ட ஒரிஸ்ஸாவும் ஹர்ஷரால் வெற்றி கொள்ளப்பட்டுப் பேரரசுடன் இணேக்கப்பட்டது என்பதையும் அப்போது கண்டோம்.

மகதம் (மோ-கி-டோ)

நாளந்தாவில் கிடைத்த முத்திரைகள் மகதமும் ஹர்ஷரின் பேரரசில் அடங்கியது என்று காட்டுகின்றன. சிலாதித்தியர் செம்பு ஆலயம் ஒன்றினே அமைத்தார் என்று கூறப்பட்டது கன்னேசி அரசர் ஹர்ஷரையே ஆகும். சசாங்கனுடைய ரோடஸ்கார் முத்திரைகளிலிருந்து ஒரு காலத்தில் ஹர்ஷர் எதிரியின் ஆட்சிக்குட்பட்டதாக இது விளங்கிற்று என்பதனே நிரூபிக்கின்றன. தொடக்கக் காலத்தில் ஏற்பட்ட போராட்டத்

தில் சசாங்கன் தமக்குட்பட்டவற்றில் இப் பகுதியை இழந் திருக்க வேண்டும். சீன தேசத்திலிருந்து ஹர்ஷரிடம் வந்த தூதுவர்கள் அவரை மகத தேசத்து அரசர் என்று அழைத்ததை டாக்டர் மஜூம்தார் சுட்டிக் காட்டினர்.

கஜாங்கலா (க-சூ-வென்-கி-லோ)

யுவாங் சுவாங்கின் வருகையின்போது இந் நாட்டு அரச வமிசம் மறைந்தது என்றும், நாடு அண்டைநாட்டு அரசுக்கு அடி பணிந்தது என்றும் குறிப்பிடுகிறார். மேலும் ஹர்ஷர் நம்முடைய முகாம் ஒன்றினை அங்கிருந்த புற்களை வெட்டி அமைத்து அதை விட்டுச் செல்லும்போது எரித்துவிட்டுச் சென்றார். ஹர்ஷர் தம்முடைய கிழைப் பகுதிப் பயணத்தின்போது அவ்வாறு செய் திருக்கலாம். நிச்சயமாக இது ஹர்ஷரின் ஆட்சிக்குட்பட்ட பகுதியே என மஜூம்தார் கூறுகிறார். கங்ஜால் அல்லது இராஜ்மஹாலே கஜாங்கலா ஆகும் என்பது கன்னிங்ஹாமின் கருத்து.

புண்ட்ரவர்த்தன (புன்-ன-ப-தான்-ந, இரங்பூர்) சாமதாதா (சான்-மோ-தா-தா, ஜெஸோர்), தாம்ரலிப்தி (தான்-மோ-லி-தி, தும்லுக்) கர்ண சுவர்ண முதலியவற்றிற்கு அரசர் யாருமில்லை என்றே யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளார். அப் பகுதிகள் நான்கும் நிச்சயமாகச் சசாங்கனின் அரசில் இருந்தன. ஹர்ஷர் சசாங்கனை வென்றார். ஆனால், எப்போது தோற்கடிக்கப்பட்டார் எனத் தெரியவில்லை. அத் தோல்விக்குப் பின் ஹர்ஷரின் பேரரசில் சசாங்களின் பகுதிகள் இணைக்கப்பட்டதால் யுவாங் சுவாங்கினல் குறிப்பிடப்படாமல் போயிற்று.

சசாங்கனின் தீச் செயல்களை எடுத்துக் கூறும்போதெல்லாம் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லுபவர் சசாங்கனின் தலைநகரைக் குறிப்பிடுகையில் பெயரைக் குறிப்பிடாதது வியப்பாக உள்ளது. அவ்வாறு பெயரைக் குறிப்பிடாமல் போனதற்குக் காரணம் என்னவாக இருக்கமுடியும்? யுவாங் சுவாங்கின் வருகையின் போது அப் பகுதியை அவர் ஆட்சி செலுத்தாததே காரணம் என்று கூறலாம். பாஸ்கர வர்மனின் ஜெயஸ்கந்தாவாராவாகக் கர்ண சுவர்ண காட்சியளித்தது என நிதன்பூர்ச் செப்பேடுகள் அறிவிப்பதாலும், ஹர்ஷராலும், பாஸ்கர வர்மனலும் இரு பகுதி களிலும் நெருக்கப்பட்டதாலும் வங்க அரசன் சசாங்கன் ஒரிஸ்ஸாவில் சென்று தங்கினன் போலும்.

**விரிஜ்ஜி** (புலி-சி)

விரிஜ்ஜி பண்டைய காலம் தொட்டுப் பெயர் வழங்கிவரும் நாடு. பௌத்த சமய இலக்கியங்களில் கி.மு. ஆறாம் நூற்றாண்டின் இந்தியாவைக் குறிப்பிடுகையில் 16 நாடுகளின் பெயரைச் சுட்டிக்காட்டியுள்ளனர். அவற்றிற்குச் 'சோலாசா மஹாஜன பதாஸ்' என்ற பெயர் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் விரிஜ்ஜி அல்லது வஜ்ஜியும் ஒன்று. இப் பகுதி குடியரசாட்சி நிலவிய பகுதிகளில் ஒன்று. வைசாலியும், வஜ்ஜியும் இரு நிலவியல் பிரிவுகளாகச் சீனப் பயணியால் குறிப்பிடப்பட்டன. ஹர்ஷரின் காலத்தில் இப் பகுதியில் குடியரசு ஆட்சி நிலவியதாகவோ, ஆட்சியாளர் யாரும் இருந்ததாகவோ குறிப்பு இல்லாமையால் இதனை ஆட்சி செலுத்தியவர் ஹர்ஷரே ஆவார்.

**மாங்கிர்** (இ-லான-ன்-போ-வ-டோ)

மாங்கிர் என்னும் பகுதி இக் கால மாங்கிர் மாவட்டம் என மார்ட்டினும், கன்னிங்ஹாமும் கருதுகின்றனர். ஹர்ஷரால் சசாங்கன் வெற்றிகொள்ளப்படுவதற்கு முன் மாங்கிர் சசாங்கனால் ஆளப்பட்டுவந்தது என்றே ஹர்ஷரின் படையெடுப்பின் வாயிலாக அறியமுடிகிறது. சீனப் பயணி, இதனை வென்று கைக்கொண்டு பௌத்தர்களுக்கு வென்ற அரசன் அளித்ததாகக் குறிப்பிடுகிறார். மாங்கிர் அரசனை வெல்லக்கூடிய ஆற்றலோ வென்றபின் அதனைப் பௌத்தர்களுக்கு அன்பளிப்பாக அளிக்கக்கூடிய நிலையோ ஹர்ஷரைத் தவிர்த்து வேறு அரசர் எவருக்கும் இருக்க முடியாது. இப் பகுதியின் தலைநகரைப் பௌத்தர்களுக்கு அளித்துவிட்டு மீந்த பகுதிகளை ஹர்ஷர் தம் அரசுடன் சேர்த்திருக்க வேண்டும் என்று கருத வாய்ப்புள்ளது. டாக்டர் திரிபாதியும் அவ்வாறே கருதுகிறார்.

**சம்பா** (சான்-போ)

கன்னிங்ஹாம் சம்பா என்பது இக் காலப் பகல்பூர் என்று குறிப்பிட்டதை வாட்டர்ஸ், பெர்குஸன் முதலானவர்கள் சரியெனக் கருதுகின்றனர். ஆனால், இதன் அரசியல் நிலை குறித்துத் தெரியவில்லை.

**கொங்கோதா** (குங்-யூ)

சில்கா ஏரிக்கு அருகிலிருந்த பகுதியே எனக் கன்னிங்ஹாமும், பெர்குஸனும் கருதுகின்றனர். ஹர்ஷர் இதனை வென்று கைக்கொண்டதையும், இராணுவக் காவல் நிலையம் ஒன்று இங்கு அமைக்கப்பட்டிருந்தது என்பதையும் முன்னர்க் கண்டோம்.

ஹர்ஷர் கொங்கோதாவை வென்றதைப் போலவே, பிருகுகச்சா அல்லது பிருகச்சபா (போ - லு-கா-சே-போ) என அழைக்கப்பட்ட புரோச்சை ஆண்ட இரண்டாம் தத்தாவைத் தோற்கடித்து வென்றார் என்பதனை ஏற்கெனவே கண்டோம்.

## தெற்குக் கோஸலம்

கன்னிங்ஹாம் தெற்குக் கோஸலத்தைப் பண்டைய விதர்ப்பா மாநிலம் என்று குறிப்பிடுகையில் பெர்குஸன், கிரான்ட் முதலானவர்கள் சட்டிஸ்கார் பகுதி என்றனர். யுவாங் சுவாங் இதன் ஆட்சியாளர் என்று குறிப்பிடும் ஷ-டோ-போ-ஹா யார் எனக் கண்டறிய இயலவில்லை. யுவாங் சுவாங் அதன் பின்னர் ஹர்ஷரின் ஆட்சிக்குட்படாத ஆந்திரா (அன்-டோ-லோ,) தண்டகாதகா (தெ-ந-க-சே-கா) மாலகூடா (மோ-லோ-கூ-ட) கொங்கணப்பூர் (குங்-கின்), மகாராஷ்டிரம் (மோ-ஹ-ல-சா) முதலியவற்றிற்குச் சென்றுவிட்டு மஹாராஷ்டிரத்திலிருந்து ஹர்ஷரின் செல்வாக்கிற்குட்பட்ட பகுதிகளில் பயணம் செய்தார்.

## மேற்கு மாளவம் (மோ-ல-போ)

சீனப் பயணி தம்முடைய வருகைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் சிலாதித்தியர் என்ற பெயருடைய அரசர் ஆட்சி செலுத்தினர் என்பதையும், கலை அழகுடைய பௌத்த ஆலயத்தை அவ்வரசர் அமைத்தார் என்று குறிப்பிட்டுள்ளதைக் கொண்டும், அவ்வரசன் வலபியின் சிலாதித்திய தர்மாதித்தியரே என்று கருதினர்.

சிலாதித்திய தர்மாத்தியர் மேற்கு மாளவத்தை இணைந்தார் என்று டாக்டர் திரிபதி குறிப்பிட்டுள்ளார். பிரபாகர வர்த்தனர் மாளவத்தின் புகழ் என்ற செடியை வெட்டும் கோடரியாக அமைந்தார் என்று கண்டோம். பிரபாகர வர்த்தனரின் மறைவிற்குப் பின்னர் வலபி அரசர் மீண்டும் அதனை வென்று கைப்பற்றியிருக்க வேண்டும். ஹர்ஷர் வலபியை வென்ற பின் மாளவத்தையும் வென்று கைக்கொண்டிருக்கலாம். வலபியை வென்றதும் ஹர்ஷர் அட்லி எனப்படும் (யுவாங் சுவாங்கினால் அட்-அலி எனக் குறிப்பிடப்படும் இன்ன பகுதி என்று அறியப்படாத) பகுதியையும் வென்றிருக்கவேண்டும்.

மாளவத்தின் வளம் பொருந்திய மாவட்டங்களில் ஒன்று எனக் கச்சா அல்லது கேதா (கீ-தா)வை யுவாங் சுவாங் குறிப்பிடுவதால் இப்பகுதியும் ஹர்ஷரின் ஆட்சிக்குட்பட்டது என்று

Ms. V. INDRA BHAVANI, M.A., M.Phil.
Sel. Gr. Lecturer in Tamil
Sri Parasakthi College for Women
Courtallam - 627 802.


கருதவேண்டியுள்ளது. அகமதாபாத்திற்கும், காம்பேக்கும் இடையில் அமைந்துள்ள கைரா எனப்படும் குஜராத்தின் பெரிய நகரே இது எனலாம். மாளவத்தின்கீழிருந்த சூரத்தும் (சூ-ல-சா) மாளவ வெற்றிக்குப்பின் ஹர்ஷரின் ஆட்சிக்குட்பட்டது. ஆனந்தபுரம் (ஆ-னன்-தோ-பு-லோ) என்பதும் மாளவத்திற்கு அடங்கிய ஒன்று என யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். எனவே, ஹர்ஷரின் செல்வாக்கு இங்கும் பரவித் திளைத்தது என்று கருதலாம்.

வலபி(-பா-ல-பி)

ஹர்ஷர் வலபியை வென்றதையும், மண உறவினால் அதனை வலுப்படுத்திக்கொண்டதையும் ஏற்கெனவே கண்டோம்.

கூர்ஜரம்(கூ-சே-லோ)

கூர்ஜரம் வலபிக்கு வடக்கே 300 கல் தொலைவில், க்ஷத்திரிய மரபில் உதித்த வயதில் இளையவராக விளங்கிய அரசர் ஒருவரால் ஆளப்பட்டது. அதன் தலைநகரம் பிலமாலா ஆகும்.

உஜ்ஜயினி(வூ-ஷி-யென்-ஞ)

பிராமண வகுப்பு அரசரால் ஆளப்பட்ட உஜ்ஜயினி ஹர்ஷரின் திறையரசாக விளங்கியிருக்க வேண்டும். உஜ்ஜயினியைப் போலவே கஜுராஹோவைத் தலைநகராகக் கொண்ட ஜஜ்ஹோட்டியும் (சி-சி-டோ) பிராமண வகுப்பு அரசரால் ஆளப்பட்டுவந்தது. உஜ்ஜயினி அரசருக்கும் இவருக்கும் உள்ள வேறுபாடு இருவரும் பிராமணராக இருந்தபோதிலும் முன்னவர் பௌத்தர் அல்லவர், பின்னவர் பௌத்தரே என்பதே. மகேஸ்வரபுரம் (மோ-ஹி-ஸ்-ஸு-பா-லோ-பு-லோ) அரசரும் பிராமணராக இருந்தபோதிலும் பௌத்தர் அல்லர். நாம் மேலே குறிப்பிட்ட கூர்ஜரம், உஜ்ஜயினி, ஜஜ்ஹோட்டி, மகேஸ்வரபுரம் முதலானவை தல ஆட்சியாளர்களால் ஆளப்பட்டபோதிலும் அவர்கள் தங்கள் மேலாண்மை அரசராக ஹர்ஷரை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

சிந்து(சின்-து)

சிந்துவின் அரசர் சூத்திர வகுப்பினர் எனவும், பௌத்த சமயத்தில் உண்மையான பற்றுக்கொண்டிருந்தவர் எனவும் யுவாங் சுவாங் குறிப்பிட்டார். புஷ்ப பூதி வமிசமே சிந்து அரசரை வாட்டிய கொடிய காய்ச்சல் என்று குறிப்பிடப்பட்டது எனக் கண்டோம். சிந்துவை ஹர்ஷர் வெற்றி பெற்றிருந்தபோதிலும்

நீண்ட நாள்கள் அவரால் அதனைத் தம் கட்டுப்பாட்டினுள் கொண்டிருக்க முடியாது என டாக்டர் திரிபாதி கருதுவதை ஏற்று, தோல்வியுற்ற சிந்து அரசரை ஹர்ஷர் சுயேச்சையாக ஆள அனுமதித்திருக்கலாம் எனக் கருதலாம்.

சிந்து நாட்டின் மாநிலமாக அதும் பநிர (அ-டியன்-போ-சி-லோ) பாடாசிலம், விச்சலா முதலியன விளங்கின. அவற்றிற்கு அரசர் யாருமில்லை. அவை சிந்து அரசரின்கீழ் இருந்தன என யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். சிந்துவில் மேலாண்மை செலுத்திய ஹர்ஷர் இப் பகுதிகளிலும் மேலாண்மை செலுத்தியிருக்கலாம்.

இது வரையில் யுவாங் சுவாங் சென்று வந்த நாடுகளைக் குறித்த விளக்கத்தினைக் கண்டோம். யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து பெரும்பாலும் எல்லா அரசுகளையும் ஆய்வு செய்துள்ளார் எனத் தெரிகிறது. ஆனால், யுவாங் சுவாங்கின் குறிப்புகளைக் கவனமுடன் ஆராயவேண்டும். ஒருசமயம் ஹர்ஷரை ஐந்து இந்தியாவின் அரசர் என்று குறிப்பிடுகிறார். மற்றொரு சமயம் கன்னோசியின் அரசர் என்று அழைக்கிறார். யுவாங் சுவாங் தாம் சென்றுவந்த நாடுகளைக் குறிப்பிடுகையில் சிலவற்றின் அரசர்கள் பெயரைக் குறிப்பிடவேயில்லை என்று கண்டோம். 'ஹர்ஷரின் ஆட்சிப் பரப்பு அனைவரும் அறிந்த ஒன்றாதலால் அவர் குறிப்பிடாமல் விட்டுவிட்டார்' என டாக்டர் திரிபாதி குறிப்பிட்டார்.

சாளுக்கியப் பதிவுகளில் ஹர்ஷர் 'சகலோத்தரா பதேஸ்வரா' எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். வாக்கேரிப் பட்டயத்தில், 'சமரா-சம்ஸக்தா-சகலோத்தராபதேஸ்வரா, ஸ்ரீ ஹர்ஷவர்த்தன பராஜய-பட்டா-பரமேஸ்வரா சப்தாஸ் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது[1]. உண்மையிலேயே ஹர்ஷர் வட இந்தியாவின் தலைசிறந்த அரசரா என்ற கேள்வியினை ஏ. ஸி. பானர்ஜி எழுப்பினர்.

இக் கேள்விக்கு விடை காண வட இந்தியாவின் பரப்பினைக் கண்டறிய வேண்டும். வட இந்தியா என்றவுடன் நம் மனத்தில் உதிக்கின்ற எண்ணம், வடக்கில் காஷ்மீர் முதல் தெற்கில் விந்தியம் வரையிலும், அரேபியக் கடலிலிருந்து வங்கான விரிகுடா வரையிலும் உள்ள பகுதியே ஆகும். பண்டைய நாள்களில் வட இந்தியா என்ற சொற்கூறு காலந் தோறும் மாறுபட்டுவந்துள்ளது.

[1] E. I V p. 202

உத்தராபாதா என்ற சொற்கூறு முதன்முதலில் காரவேலனின் ஹதிகும்பா பட்டயத்தில் குறிப்பிடப்பட்டது. மகாபாரதம் காந்தாரரை மட்டுமன்றிக், காம்போஜர், கபிர்ஸ்தான், காபூல் பள்ளத்தாக்கினையும் சேர்த்துக் குறிப்பிடுகிறது. பஞ்சாப்பும், காஷ்மீரும் அதை ஒட்டிய குன்றுப் பகுதிகளும், கிழக்கு ஆப்கானிஸ்தானம் முழுமையும் கொண்டதே வட இந்தியா எனக் கருதினர் சீனர்கள் என்று கன்னிங்ஹாம் குறிப்பிட்டார்[1]. பாலர்களின் காலத்திய பட்டயத்தில் பேரரசர் தேவ பாலர் நகராஹாராவை 'உத்தரபாத விபூஷணு' என்று அழைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அஸ்ட்யுத்தராபாத விபூஷணு பூத பூமி
தேசோத்தம நகரஹார இதி பிரதிதா
தத்ரா துவிஜாதி குடிபோதித வம்ச ஜன்மா
நாமேந்திர குப்த இதி இராஜசாகா பாபுவா.[2]

பண்டைய நாளிலிருந்து ஆப்கானிஸ்தானத்தின் சில பகுதிகள் வட இந்தியாவில் சேர்த்துக் கருதப்பட்டன. இவ்வாறு வடக்கு எல்லை காலந்தோறும் மாறியதைப் போன்று தெற்கு எல்லையும் மாறிமாறி வந்துள்ளது. ஜாதகக் கதைகளில் சில குதிரை வியாபாரிகள் உத்தர பாகத்திலிருந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டனர். ஆனால், அவர்கள் பரோலிலிருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. காவிய மீமாம்சாவின் ஆசிரியரான இராஜசேகரன் என்பவர் பெஹோவாவிற்கு அப்பால் உள்ளதே உத்தராபாதா எனக் குறிப்பிடுகிறார். சாளுக்கியப் பட்டயங்களில் குறிப்பிடப்பட்டிருப்பது தங்களுடைய அரசரான இரண்டாம் புலிகேசி வட இந்தியா முழுமைக்கும் உரிய பேரரசரை வென்றார் என்றால் அவ்வளவு பலம் பொருந்திய எதிரியை வென்றவர் என்ற சிறப்பு தமது அரசருக்குக் கிடைக்கும் என்ற நோக்கில்தான்.

ஏ. சி. பானர்ஜி சந்துருது நதிக்கரையிலிருந்து தெற்கே நர்மதை வரையிலும் மேற்கு மாளவத்தின் எல்லைகளிலிருந்து கிழக்கில் இமயமலையின் சிறிய குன்றுப் பகுதிவரையும் பேரரசு பரவியிருந்தது எனக் குறிப்பிடுகிறார். ஹர்ஷ வர்த்தனர் அசோகர், கனிஷ்கர், சமுத்திர குப்தர் ஆகியோருடன் ஒப்பிடத் தக்கவரோ 'ஐந்து இந்தியப் பகுதிகளின் அரசர்' என்று குறிப்பிடத்தக்கவரோ அல்லர் என்பதும் அவருடைய கருத்தாகும்.

[1] Cunnigham, *Ancient Geography of India*, p. 12.
[2] *I. A.* XVII p. 30.

எனவே, ஹர்ஷரைப் புகழ்ந்தும், சற்றுக் குறைத்தும் மதிப்பிடப்படுள்ள கருத்துரைகளைக் கண்டோம். இனி, நாம் இரண்டிலும் உள்ளவற்றில் பொருத்தமானது யாது எனக் காண்போம். யுவாங் சுவாங்கைப் போலவே பாணரும் ஹர்ஷரைச் சிறப்பித்துக் கூறுகிறார். ஹர்ஷர் பல இடங்களில் பாணரால் மிகைபடப் புகழப்பட்டுள்ளார் என்பது நாம் அறிந்த ஒன்றே. பாணர் பிரபாகர வர்த்தனர், ஹர்ஷர் ஆகியோரின் அவைகளில் பல திறையரசர்களும், குறுநில மன்னர்களும் கலந்துகொண்டதாகக் குறிப்பிட்டுள்ளதோடு அண்டை நாட்டு ஆயிரக் கணக்கான அரசர்களின் மனைவிகளும் அரண்மனைக்கு வந்தார்கள் எனவும் பழைய திறையரசர்கள் ஓரிடத்தில் இருந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளார். இராஜ்ய ஸ்ரீயின் மண விழாவின்போது பல்வேறு திறையரசர்கள் கூடியதாக அறிகிறோம். இராஜ்ய வர்த்தனர் ஹூணர்களுக்கு எதிராகப் படை நடத்திச் சென்றபோது நட்புடைய திறையரசர்களும் சென்றனர் என்ற குறிப்பும், பிரபாகர வர்த்தனர் நோயுற்றகாலை தங்கள் பேரரசரின் உடல் நலமின்மைக்கு வருந்தி உடைமாற்றாது ஊணுறக்கம் கொள்ளாது அரண்மனை முற்றத்தில் தவித்துக்கொண்டிருந்தனர் என்ற குறிப்பும் ஹர்ஷ சரிதத்தில் காணப்படுகிறது. முடிசூட்டு விழாவின்போது குறுநில மன்னர்களின் மனைவியரும், திறையரசர்களும் புனித நீராட்டிய அந்த நன்னாளை ஹர்ஷரின் அன்னை நினைவு கூர்ந்தார் என்ற செய்தியும், பிரபாகர வர்த்தனரின் சவ அடக்கத்தின்போது பல நாள்கள் தங்கியிருந்து திறையரசர்கள் கலந்துகொண்டார்கள் என்ற செய்தியும், நமக்குக் கிடைத்துள்ளன. மாளவ அரசனுக்கும், சசாங்கனுக்கும் எதிரே இராஜ்ய வர்த்தனரும், ஹர்ஷரும் போர் நிகழ்த்திய போது போரில் பங்கு கொண்டனர். ஹர்ஷரின் முகாமைப் பாணர் அடைந்தபோது பல்வேறு சிற்றரசர்களை அவர் கண்டார். அத் திறையரசர்கள், குறுநில மன்னர்கள் வசந்த உற்சவம், கௌமுடி மஹோத்சவம் அல்லது சாரதோத்சவம் முதலியவற்றில் கலந்துகொண்டனர். ஆகவே, இதுவரையில் நாம் மேலே பார்த்த குறிப்புகளெல்லாம் என்ன தான் மிகைப்படுத்தப்பட்டவை என்றாலும் நிச்சயமாக ஹர்ஷரின் செல்வாக்கிற்குப் பல திறையரசர்கள் கட்டுப்பட்டிருந்தனர் என்பதனைக் காட்டுகின்றன.

ஹர்ஷரின் போர் முயற்சிகளை முன்னர்க் கண்டோம். அப்போது காஷ்மீர் மேலாண்மையை ஏற்றுக்கொண்டதையும், ஹர்ஷரின் செல்வாக்கு நேபாளத்தில் பரவியிருந்ததையும், காமரூப அரசன் பாஸ்கர வர்மன் ஹர்ஷருடன் நட்புப் பூண்டிருந்ததையும் கண்டோம். மகதம், வங்காளம், ஒரிஸ்ஸா

ஆகியவற்றின்மீது ஹர்ஷர் ஆதிக்கம் செலுத்தினர் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். வலபி, புரோச் ஆகியவற்றின்மீது, ஹர்ஷரின் செல்வாக்கினை யாரும் ஐயுற முடியாது. அவருடைய பேரரசு மேற்கில் அரபிக் கடலையும், தென் கிழக்கில் வங்காள விரிகுடாவையும் தொட்டுநின்றது. ஹர்ஷரை அரசர்களுக்கு அரசர், நான்கு கடல்களின் அரசர்' எல்லா அரசர்களுக்கும் தலைவர் என்று கூறும் பாணரின்' குறிப்புகள் தவருகா. அத்தகைய சிறப்புடையவெற்றியினுல் அவர் 'சகலோத்தரா, பாதநாதா' அல்லது 'சகலோத்தரா பாதேஸ்ரா' எனப் பல்வேறு தென்னிந்தியப் பட்டயங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கொண்டு டாக்டர் முகர்ஜி ஹர்ஷரை வட இந்தியா முழுமைக்கும் பேரரசர் எனக் குறிப்பிட்டார்.

ஆனல், டாக்டர் திரிபாதி அந்த அடைமொழி எவ்வித நிலவியல் சிறப்பும் கொண்டிருக்கவில்லை எனவும், பொருளற்ற தெளிவற்ற ஒன்ருகவே 'சகலோத்தரா பாதநாதா' பயன்படுத்தப் பட்டதெனவும் கருதுகிருர். ஆனல், தம்முடைய மதிப்பு வாய்ந்த ஆராய்ச்சிக் கட்டுரையில் டாக்டர் பி. சர்மா 'ஹர்ஷரை அவ்வாறு சிறப்பித்துக் கூறியவர்கள் பாணரோ யுவாங் சுவாங்கோ அல்லர்; தென் இந்தியப் பட்டயங்களில் தாம் அவ்வாறு கூறப்பட்டுள்ளது; தென்னிந்தியப் பட்டயங்களில் அவர் சிறப்புடைய அரசராக விளங்காமல் அவ்வாறு சாதாரணமாகக் குறிப்பிட்டிருக்க மாட்டார்கள்; எனவே, இதனை ஹர்ஷர் வட இந்தியாவின் சிறந்த பேரரசர் என்பதற்குச் சான்ருகக் கொள்ளலாம்' எனத் தெரிவிக்கிருர்.

ஹர்ஷர் வட இந்தியாவின் தலைசிறந்த அரசரே எனவும், அக்காலத்தில் அவருடைய அரசு சிறப்புடைய அரசு எனவும் டாக்டர் சர்மா கருதுவதோடு வடக்கில் காஷ்மீரும், நேபாளமும் தெற்கு எல்லையில் நர்மதையும், வடமேற்கில் பஞ்சாப் சிந்து ஆகியவற்றின் பெரும்பகுதிகளும், மேற்கில் புரோச் கடற்கரையையும் அரபிக் கடலும் தொட்டுச் சென்றது என்றும் வடகிழக்கில் பிரம்மபுத்திராச் சமவெளிவரை ஹர்ஷரின் மேலாண்மை ஏற்கப்பட்டது என்றும், கிழக்கில் வங்காளம் பேரரசிற்கு உட்பட்டிருந்தது என்றும் தென் கிழக்கில் ஒரிஸ்ஸா முழுமையும் வங்காள விரிகுடாவை ஒட்டிச் சென்றது என்றும் கருதுகிருர்.

எனவே, நாம் பண்டைய நாளில் கொண்டிருந்த பழமையான கருத்துகளை நீக்கி இன்றைய நாளில் தகுந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் தெள்ளிதின் எடுத்துக்காட்டுகின்ற டாக்டர் பைஜ்நாத் சர்மா அவர்களின் கருத்தினையே சிறந்தது எனக் கொள்வோம்.

# 8. சீன தேசத்துடன் ஹர்ஷரின் உறவு

சீன தேசத்துடன் ஹர்ஷர் கொண்டிருந்த உறவினை நமக்குச் சீன நாட்டு ஆதாரங்களே எடுத்துக் காட்டுகின்றன. ஹர்ஷர் சீன தேசத்துத் தாங் (Tang) பேரரசர் 'தாய் சங்குடன் கொண்டிருந்த இராஜ தந்திர உறவை அவை எடுத்துக் காட்டுகின்றன. ஹர்ஷருக்குப் பின்னர் நிலவிய குழப்பமான அரசியல் சூழ்நிலையை விளக்கவும் அவை உதவுகின்றன. இந்த ஆதாரங்கள் அளிக்கும் செய்திகள் அதிகார பூர்வமான வரலாறாகவும், பயணிகளின் குறிப்பாகவும், நிலவியல் குறிப்புகளாகவும் அமைந்துள்ளன.

சமீப காலம்வரை பதினான்காம் நூற்றாண்டின் படைப்பான 'வேன் சியன் துங் காவ்' (Wen Hsien Tung Kao) என்பதையே இந்திய வரலாற்றறிஞர்கள் பயன்படுத்தி வரலாற்றை அறிந்து வந்தனர். தேவ ஹூட்டி தம்முடைய நூலில் வேறு பல ஆதாரங்களை அளித்தார். அவர் பயன்படுத்திய ஆதாரங்களைக் காண்போம்.

1. சி கு சின் பா தாவ் லுன் ஹெங் (Chi Kuchin Fo Tao Lun Heng) என்பது சமயத்துறை சார்பான படைப்பாகும். இதை உருவாக்கியவர் தாவ் சுவான் (Tao Hsuam) என்ற துறவி ஆவார். இந் நூல் பௌத்தர்களுடைய தாய் சமயத்தவர்களின் பண்டைய, நவீன விவாதங்களையும், விளக்கங்களையும் கொண்ட நூல் ஆகும்.

2. பா யு வான் சு லின் (Fa Yuan Chu Lin) என்பதும் சமயத்துறை சார்பான ஒன்றே. இதனை உருவாக்கியவர் 'தாவ்ஷி' (Tao-Shih) என்னும் துறவி ஆவார். பௌத்த சமயப் புனித நூல்களில் காணப்படும் செய்திகளைத் தொகுத்து அளிக்கும் நூல் இது ஆகும்.

3. துங் டையன் (Tung Tien) என்னும் படைப்பு சயத்துறை சார்பற்ற ஒன்று ஆகும். இதனை உருவாக்கியவர் து யு (Tu Yu) என்பவர் ஆவார். இந் நூல் அரசியல், சமூக வரலாற்றை எடுத்து இயம்பக்கூடிய ஒன்று ஆகும்.

4. சியூ தாங் ஷூ (Ch'iu Tang Shu); இதுவும் சமயத்துறை சார்பற்ற படைப்பே. இந் நூலை உருவாக்கியவர் 'வூ தாய்' (Wu Tai) என்பவர் ஆவார். இந் நூல் தாங் வமிசத்தின் பழைய வரலாற்றை எடுத்து இயம்புகிறது. இந் நூல் தாங் வமிசத்தின் வரலாற்றை விளக்குகையில் இந்தியச் சூழ்நிலையையும் எடுத்துக் காட்டுகிறது.

5. தாங் ஹூய் யாவ் (Tang Hui Yao) என்ற சமயச் சார் பற்ற படைப்பை உருவாக்கியவர் வாங் பூ என்பவர் ஆவார். தாங் சங் பற்றிய அரசியல் வரலாற்றை அறிய உதவும் ஆதாரங் கள் பலவற்றை இந் நூல் கொண்டுள்ளது.

6. தாய்-பிங்-யூ-லன் (Tai Ping Yu Lan) என்பதும் மற்றொரு சமயச் சார்பற்ற படைப்பே ஆகும். இந் நூல் சியூ தாங் ஷூ என்ற நூலை முழுமையும் அடிப்படையாகக் கொண்ட ஒன்று ஆகும்.

7. தாய் - பிங் - ஹூ - வான் - யூ - சி - (Tai-Ping-Hua-Yu-Chi) என்பதும் சமயச் சார்பற்ற படைப்பே எனினும் துங் டியன் என்ற நூலை அடிப்படையாகக் கொண்டே இந் நூல் செய்தி களை அளிக்கிறது.

8. சே-பூ-யுவான்-குயீ (Tse Fu Yuan Kuei) என்ற சமயச் சார்பற்ற படைப்பு பேரரசர் அமைச்சர் ஆகியவர் களின் வாழ்க்கையைக் குறித்த செய்திகளை அளிக்கின்றது. இந் நூலில் சிலாதித்தியர் திறை செலுத்திய செய்தியும், போதி மரக் கிளை ஒன்றினை அனுப்பிய செய்தியும் காணப்படுகின்றன.

9. சின் தாங் ஷூ (Hsin Tamg Shu) என்னும் நூல் தாங் வமிசத்தின் புதிய வரலாற்றைக் கி. பி. 618 முதல் கி. பி. 906வரை எடுத்துக் கூறக்கூடியது ஆகும். யுவாங் சுவாங்கின் வருகை சிலாதித்தியரின் படையெடுப்பு முதலானவற்றையும், கி. பி. 648-ல் சீனப் பேரரசர் இந்தியாவிற்குத் தூதுக்குழு ஒன்றினை அனுப்பி யதையும் சிலாதித்தியரின் மறைவினால் அரசு குழப்ப நிலையினை அடைந்ததையும் இது எடுத்துக் காட்டுகிறது.

10. 'சூ-சி-துங்-சியன்' (Tzu Chih Tung Chien) என்னும் படைப்பிற்கு உரியவர் ஸ்ஸூ மா குவாங் என்பவர். இந் நூல் கி. மு. 403 முதல் கி. பி. 959 வரையிலான பொதுவான வரலாற்றை எடுத்து இயம்பக் கூடியது ஆகும். இந் நூலில் பேரரசரின் தூதுவராக வாங் கவான்ஸே இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட வரலாறு காணப்படுகிறது.

11. வென்-சியன்-துங்-காவ் என்னும் படைப்பு மா துவான் லின் என்பவரால் உருவாக்கப்பட்ட ஒன்று. இந் நூல் சின் தாங் ஷூவைத் தழுவி அமைக்கப்பட்ட ஒன்று. ஹர்ஷரும் சீனப் பேரரசர் தாய் சங்கும் பரிமாறிக்கொண்ட அரசியல் தூதுக் குழுக்களை குறித்து இது விளக்குகிறது. ஹர்ஷர் சீனப் பேரரசருடன் இராஜ தந்திர உறவு கொள்ள முயன்றார் என்பதை நமது ஆதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஹர்ஷர் கி. பி. 641-ல் 'மகதத்து அரசர்' என்ற பட்டத்தைக் கொண்டதையும் இவை விளக்குகின்றன. யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலோ, இந்திய ஆதாரங்களிலோ கி.பி. 641-ல் அவர் மகதத்து அரசர் எனத் தமமை அழைத்துக்கொண்டமை பற்றிய செய்தி காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஹர்ஷர், கன்னோஜ் அரசர் என்பதைவிட மகதஅரசர் என அழைக்கப்படுவதையே சிறப்பாகக் கருதினர்.

அறிஞர்கள் இதுவரை ஹர்ஷரின் முதல் தூதுக்குழு சீனவிற்கு அனுப்பப்பட்டமைக்கு அவர் யுவாங் சுவாங்குடன் கொண்டிருந்த தொடர்பே காரணமெனக் கருதினர். ஆனல், ஹர்ஷர் அதற்கு முன்னரே சீனப் பேரரசர் தாம் சங்கைக் குறித்து அறிந்திருந்ததோடு, தம்முடைய முதல் தூதுக் குழுவைச் சீனவிற்கு அனுப்பியுமிருந்தார். ஹர்ஷர் முதலாவது தூதுக் குழுவைக் கி. பி. 641-ல் சீன தேசத்திற்கு அனுப்பியிருந்தார். கி. பி. 642 வரை அவர் யுவாங் சுவாங்கைச் சந்திக்கவில்லை.

ஹர்ஷரும், சீனப் பேரரசரும் கி. பி. 641 முதல் கி. பி. 648 உள்ளிட்ட காலத்தில் ஆறு தூதுக் குழுக்களை அனுப்பியுள்ளனர் என்பதைப் பல்வேறு ஆதாரங்கள் வாயிலாக அறியலாம். ஒவ்வொருவரும் மூன்று தூதுக் குழுவினை அனுப்பினர். சீன தேசத்துத் தூதுவர்கள் சிறப்பு மிக்க பட்டம் பெற்றவர்கள். ஹர்ஷர் முதலாவது தூதுக் குழுவினை அனுப்பினர் என்ற செய்தி கிட்டியுள்ளபோதிலும், யார் அனுப்பப்பட்டார்கள் என்பது குறித்துத் தகவல் இல்லை. சீனப்பேரரசர் பதிலுக்கு லியங் ஹூவாய் சிங்கின் (Liang Huai Ching) தலைமையில் தூதுக் குழுவினை அனுப்பினர். சீனத் தூதுவருடன் ஹர்ஷர் ஒரு தூதுவரைச் சீன தேசத்து அவைக்கு அனுப்பினர்.

இரண்டாவது சீன தேசத்துத் தூதுக்குழு கி. பி. 649-ல் லி ஐ பியாவோ, (Li I Piao), வாங் யுவாங் சே (Wang Hieun Tse) ஆகியோர் தலைமையில் அனுப்பப்பட்டது. இத் தூதுக்குழுவுடன் ஹர்ஷ வர்த்தனர் அனுப்பியிருந்த பிராமணத் தூதுவரும்

வந்தார். வி ஐ பியாவோவின் தூதுக் குழு இராஜகிரகம், கிரிதிரிகூடம் வழியே திரும்பிச் சென்றது. வி ஐ பியாவோவின் தூதுக்குழுவைத் தொடர்ந்து வாங் சுவாங் சே சீனுவிற்குத் திரும்பிய உடனே மீண்டும் அவர் திரும்ப அனுப்பப்பட்டார். ஹார்ஷர் மற்றொரு தூதுக்குழுவை அனுப்பினூர். வாங் சுவாங் சேயைத் (Wang Hsuang Tae) தலைமைத் தூதுவராகக் கொண்ட சீன தேசத்து இறுதித் தூதுக்குழு கி. பி. 648 ல் இந்தியாவிற்கு வந்தது என எட்டிங் ஹாசன் குறிப்பிட்டார். இத் தூதுக்குழு இந்தியா வந்தபோது ஹார்ஷர் ஏற்கெனவே இறந்துவிட்டார் என அறிந்தது.

ஹார்ஷரின் மறைவு நீண்ட நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட ஒன்றாக இருந்திருக்க முடியாது. ஏனென்றால் இந்தியா, சீனு விடையே இக் காலத்தே நெருக்கமான தொடர்பு இருந்துவந்தது. ஹார்ஷரின் மறைவை முன்னரே அறிந்திருந்தால் சீனப் பேரரசர் தூதுக் குழுவினை அனுப்பியிருக்கமாட்டார். கி. பி. 648-9-ல் முதல் ஐந்து அத்தியாயங்களை 'லைப்' நூலின் ஆசிரியர் தொகுத்திருந்தார்.

'வாங் சுவாங் சே' இந்தியாவில் 'ஆலோ நாஷன்' என்ற 'நா பூ' வின் அரசருடன் மோதினூர். இவர் ஹார்ஷரின் அமைச்சர் என்றும், பதவியை வலிந்து கைப்பற்றியவர் என்றும் கூறப்படுகிறது. இந்த மோதலில் ஆலோ நாஷன் கைதியாகப் பிடிக்கப்பட்டுச் சீன அரசரிடம் அளிக்கப்பட்டார். இந்தியா, சீனுவிடையே காணப்பட்ட ஆறு தூதுக் குழுக்களைப் பற்றிய உண்மை வரலாறு இதுவாகும்.

இந்தத் தூதுகளை அனுப்பியதன் நோக்கம் என்ன?

ஹார்ஷர் சீனுவுடன் உறவு மேற்கொண்டபோது வல்லமையின் உச்சத்தில் திகழ்ந்தார். வட இந்தியாவின் ஒரு முனையிலிருந்து தெற்கில் நர்மதை வரையிலும் பேரரசு பரவியிருந்தது. சீனதேசம் பௌத்த சமயத்தின்பால் கொண்டிருந்த பற்று, பௌத்தரான ஹார்ஷரைக் கவர்ந்தது. உறவு ஏற்படத் தொடங்கியவுடன் அன்பளிப்புகள் இருதரப்பிலும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. மூன்றாவது தூதுக் குழு போதி மரக்கிளையைக் கொண்டுசென்றது.

சீன தேசத்திலிருந்து வந்த தூதுக் குழுக்களை ஹார்ஷர் நன்கு வரவேற்று உபசரித்ததைப் போலவே சீனப் பேரரசரும் இந்தியத் தூதுக் குழுவினை நன்கு வரவேற்றார். தெருவெங்கும்

விழாக்கோலம் காணப்பட்டது. தூதுவர்கள் அரசரின் உப்பரிகைகளிலேயோ சிறந்த உறைவிடங்களிலேயோ தங்குமாறு செய்யப்பட்டனர். மூன்றாவது சீன தேசத்துத் தூதுக் குழுபற்றி விளக்கமாக வரையப்பட்டுள்ளது.

ஹர்ஷரின் மறைவிற்குப் பின்னரே வாங் சுவாங் சேயின் தூதுக் குழு வந்தது என்றும், ஹர்ஷரின் அமைச்சர் ஆ லோ நா ஷன் என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினார் என்றும், சீன தேசத்திற்குக் கைதியாகக் கொண்டுசெல்லப்பட்டார் என்றும் கண்டோம். ஆ லோ நா ஷனுக்கும், வாங் சுவாங் சேவுக்குமிடையே மோதல் ஏற்பட்டதேன்.

ஆ லோ நா ஷன், தன்னை ஹர்ஷரின் வாரிசாக ஏற்று மரியாதை செலுத்துமாறு ஆணையிட்டிருக்கக் கூடும். ஆ லோ நா ஷன் கைதியாகக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் கௌரவமாக நடத்தப்பட்டார். இந்த வெற்றியைப் பெற்றமையால் வாங் சுவாங் சேவுக்குப் பதவி உயர்வு கிட்டியது எனவும் அறிகிறோம்.

ஹர்ஷருடைய சீன தேசத்து உறவிலிருந்து நாம் அறிவது என்ன? யுவாங் சுவாங் தம்முடைய தாய் நாட்டிற்குத் திரும்ப விருப்பம் தெரிவித்தபோது ஹர்ஷர், தென் பகுதிக் கடல் வழியைத் தேர்ந்தெடுத்தால் துணைக்குப் பணியாள்களை அனுப்பி வைப்பதாகக் கூறினார். அதிலிருந்து அச்சமற்ற கடற்பயண வசதிகளைச் செய்துதரும் அளவிற்கு ஹர்ஷர் நிருவாகத்திறன் கொண்டவர் என்பது வெளிப்படுகிறது. அது மட்டுமின்றிச் சீனாவிற்குச் செல்லும் கடல் வழியைப்பற்றி நன்கு தெரிந்தவராகவும் அவர் விளங்கினார்.

இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே வாணிகம் குடியேற்றம், பண்பாட்டுப் பணித்தொடர்பு முதலியன ஏற்படக் கடல்வழி குப்தர் காலத்திலும், ஹர்ஷர் ஆட்சிக் காலத்திலும், மிக அதிகமாகப் பயன்பட்டது. இந்தியா தன்னுடைய கொள்கைகளை இந்திய எல்லைகளுக்கு அப்பால் சீனத்திலும் பரப்பியது. ஹர்ஷரின் காலத்தில் நிலவிய பண்பாட்டுத் தொடர்பான விளக்கங்கள் யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்புகளில் காணப்படுகின்றன. யுவாங் சுவாங் சீனத்திலிருந்து இந்தியா வந்தபோதும் நிலவழி நெடுக அமைந்திருந்த நாடுகளில் இந்திய பண்பாட்டுக் கூறுகள் காணப்பட்டதாகக் கூறினார்.

ஹர்ஷர் சீன தேசத்துடன் கொண்டிருந்த தொடர்பு வரலாற்றுச் சிறப்புடைய தொடர்பு எனலாம். ஹர்ஷர் யுவாங் சுவாங்கைப் போற்றி ஆதரித்தார். யுவாங் சுவாங் என்ற தனி மனிதர் சீன தேசத்திற்குத் திரும்பிச் சென்றூர் என்று கருதுவதைவிட இந்திய பண்பாட்டுத் தூதரகம் அங்கே சென்றது என்று கூறலாம். தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் அவர் தொகுத்தளித்ததன் வாயிலாகத்தான் இன்றைக்கு நாம் ஹர்ஷ வர்தனரின் கால வரலாற்றை ஓரளவு நன்கு அறிய முடிகிறது. இந்தியா, சீனு ஆகிய இரு நாடுகளிடையே பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு அது வழி வகுத்தது என்றே கூற வேண்டும்.

# 9. ஹர்ஷரின் ஆட்சி முறை

## ஆட்சி அமைப்புக் கோட்பாடுகள்

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் அரசபதவிக் கோட்பாடு பண்டைய முறையில் அமைந்த ஒன்றே ஆகும். ஹர்ஷர் ஒரே மாதிரியான அமைப்புடைய ஆட்சி முறையினைப் பெறவில்லை. பல்வேறு அரசுகளை ஒருங்கிணைத்து ஆட்சியினை அமைக்க வேண்டியவராக இருந்தார். அது பொதுவாகப் பண்டைய முறையினைத் தழுவியே அமைந்தது. தானேசுவரத்தின் அரசர் என்ற நிலையிலிருந்து 'சகல உத்தர பாத நாதர்' அதாவது வடக்குப் பகுதி முழுமைக்கும் தலைவர் என்ற நிலைக்கு ஹர்ஷர் உயர்ந்தார். அரசியல் ஆட்சியியல் ஒற்றுமையை அவர் அளித்த போதிலும் ஒரே மாதிரியான தன்மையுடையதாக அதனை அமைக்கவில்லை.

ஹர்ஷரின் ஆட்சி முறையினை அறியத் துணைபுரிபவை சீ யூ சி (Hsi Yu Chi)யும், பாணரின் ஹர்ஷ சரிதமும் ஆகும். இவற்றுடன் பொதுவான அரசியல் கோட்பாடு அமைப்பு முதலியவற்றைத் தெளிவாக உணரக் காமாந்தகரின் நீதி சாரம், அலஹாயரின் நாரத ஸ்மிருதி விளக்கம், காத்யாயனர், தேவாலர் ஆகியோரின் ஸ்மிருதிகள் ஆகியவற்றையும் துணைக் கொள்கிறோம். ஆனால், அடிப்படை உண்மை ஒன்றை மறந்து விடக் கூடாது. இப் படைப்புகள் எல்லாம் நாம் காணுகின்ற ஹர்ஷருடைய காலத்தைச் சார்ந்தவை அல்ல என்ற உண்மையே அது.

இப் படைப்புகள் கி. பி. 400 முதல் 800 உள்ளிட்ட காலத்திற் குரியவை. ஆனால், அவை ஹர்ஷரின் ஆட்சியோடு நெருங்கிய தொடர்பு உடையவை. இவை புதிய கண்டுபிடிப்புகளோ மூலப் படைப்புகளோ அல்ல. இவை உரைகளே ஆகும். ஏற் கெனவே உருவாகிய படைப்புகளுக்கு உரைகாரர்கள் அளித்த விளக்கம் ஆகும். ஹர்ஷருடைய ஆட்சி முறையினைக் குறித்து அறியக் காசுகளும், செப்பேடுகளும் துணைபுரி

கின்றன. குப்தர்களுடைய ஆட்சி அமைப்பு இயந்திரம் பிற்கால ஆட்சிமுறை அமைப்பிற்கு அடிப்படையாக விளங்கிற்று என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும். எனவே, ஏழாம் நூற்றாண்டின் பொதுவான கோட்பாட்டை உணர அதற்கு முற்பட்ட காலக் கொள்கையை அறிந்து தெளிதல் இன்றியமையாததாகும்.

ஏழாம் நூற்றாண்டு அரசியலுக்கு அடிப்படையாகப் பண்டைய இந்திய ஆட்சி அமைப்புக் கோட்பாடு விளங்கியது. தொடக்கக் காலம் முதல் குப்தர் காலம்வரை வளர்ச்சிபெற்று அதற்குப் பின்னரும்கூட அனைவரையும் கவர்ந்த அரசியல் கோட்பாடுகளைக் கண்ணுறுதலும் இன்றியமையாத ஒன்றே எனலாம்.

பண்டைய இந்தியாவின் அரசியல், எண்ணம், செயல் முதலியவற்றின் அடிப்படையான இந்துத் தத்துவத்தின் அடிப் படைக் கோட்பாடுகள் பன்னெடுங் காலமாகப் பெயர் குறிப் பிடக்கூட முடியாத, பெயர் நினைவில் இல்லாத அறிஞர்களால் வளர்க்கப்பட்டன. வேத இலக்கியங்களிலும், காவியங்களிலும், புராணங்களிலும் அவை விரவியிருந்தன. அரசியல் அறிஞர்கள் எழுத்தாளர்கள் அல்லது ஸ்மிருதிகாரர்கள் அரசியல் எண்ணங் களுக்கு விளக்கம் அளித்து, ஆட்சி அமைப்புகளுக்குச் சட்டங் களின் பின்னணியில் அதனைப் பயன்படுத்திக் காட்டினர். அடிப் படைக் கோட்பாடான தர்மம் என்பது போர், பாதுகாப்பு, வரிமுறை முதலியவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டது. தர்மம் விவகாரம் சரித்திரம், இராஜாசனம் எனப்பட்டவற்றிலிருந்தே நீதி உருவாகிற்று. சட்டங்கள் மெல்ல மாறின. சில நேரங்களில் அரசியல், பொருளாதார, சமூக மாறுதல்களுக்கேற்ப விரைவாக வும், ஒட்டுமொத்தமாகவும் சட்டங்கள் மாறின. இதனால், புதிய ஸ்மிருதிகள் தோன்றலாயின.

ஆயினும், சட்டம் இயற்றுகின்ற அதிகாரம் அரசனிடத்து இல்லை. அரசனும், அவனுடைய அமைச்சர்களும், ஆலோசகர் களும் சட்டத்தைக் கவனமாகக் கற்றபோதிலும் அரசனின் முக்கியப் பணி செயல்துறையைச் சார்ந்ததாகவே இருந்தது. நீதி மன்றங்களில் குறித்த சூழ்நிலைகளுக்கு ஏப்ப நீதிபதிகள் நீதி வழங்கினர். அரசு அலுவலர் அதனைச் செயல்படுத்தினர்.

இந்தியச் சிந்தனையில் சிறப்பான இடத்தைத் தர்மக் கோட் பாடு பெற்றுள்ளது. 'தர்மா' என்பது நிலைநிறுத்து என்ற பொருளைத் தருகின்ற 'திரி' என்ற சொல்லின் அடிப்படையில்

எழுந்த ஒன்று. தர்மக்கோட்பாடு இருக்கு வேத காலத்திற்கும் முற்பட்ட ஒன்று என்பர். உபநிடதங்களில் பிரம்மனின் சிறப்பான படைப்பு எனத் தர்மம் கருதப்படுகின்றது. உபநிடதங்கள் தர்மத்தை ஒருவகைக் கடமையாக அல்லது எதிர்பார்க்கப்படுகின்ற நடவடிக்கையாகப் பொருள் கூறின. பகவத்கீதை ஒருவனுடைய கடமையே தர்மம் என வலியுறுத்தியது. பௌத்த சமயக் கோட்பாட்டிலும் தர்மம் புகுந்து மாறுதல் அடைந்தது. மகாபாரதம் தர்ம வழியிலேயே வெற்றி பெறவேண்டும் என்று அறிவுறுத்தியது,

அசோகருடைய தர்மவிஜயம் எனப்படும் போர் இல்லாமல் தர்ம வழியில் பெறும் வெற்றி புதிய கோட்பாடாக அமைந்தது. கௌடில்யரும் அசோகரும் மனித இயல்புகளில் நல்லியல்புகளை வலியுறுத்தினர். 'தேவனும்பிரிய' (இறைவனுக்கு உகந்தவர்) என்ற பதத்தை அசோகர் பயன்படுத்தினார். பிற்காலத்தில் அரசர்கள் விக்கிரம ஆதித்தியர், பால ஆதித்தியர் (வலிமைச் சூரியன், உதய சூரியன்) முதலிய பட்டங்களையும், பிரதாப சீலர் (வலிமையைக் கொண்டவர்) சீல ஆதித்தியர் (நல்லியல்புச் சூரியன்) முதலிய பட்டங்களையும் கொண்டனர்.

சமூக விதிகளையும், நீதி மன்றச் சடங்களையும் குறிப்பிடும் வகையில் தர்மக் கோட்பாடு மனுவால் பயன்படுத்தப்பட்டது. ஒன்றை ஒன்று சார்ந்துள்ள தர்மம், அர்த்தம், காமத்துடன் சமமான நிலையை அரசன் பெறவேண்டுமெனக் கௌடில்யர் உரைக்கிறார். தர்மத்திற்கு எதிரான அர்த்தமும் காமமும் விலக்கத் தக்கவை என்பது மனுவின் கோட்பாடு ஆகும்.

பண்டைய இந்திய அரசியல் கோட்பாட்டில் 'தண்டா' என்பதும் சிறப்பான கூறு ஆகும். தண்டா என்பதற்கு இலக்கியச் சார்பான பொருள் கோல் அல்லது குச்சி என்பதாகும். அரசியலில் பரந்த அடிப்படையில் அது அரசனின் அதிகாரத்தைக் கூறக்கூடியது. கௌடில்யரும் மற்றைய எழுத்தாளர்களும் 'தண்டா' என்பதனை அபராதம் எனப் பொருள் கொள்வர். தண்டா என்பது அரசன். அரசன் மனிதனே. ஓர் அரசன் தர்மம் அர்த்தம், காமம் ஆகியவற்றில் தேர்ந்தவனாயின் தண்டாவை முறையாகப் பயன்படுத்தவேண்டும். தண்டா சமுதாயத்தை முறைப்படுத்துகிறது. க்ஷத்திரிய அரசன் நீதி முறைப்படி சமுதாயத்தைக் காக்கவேண்டும். பிரஹஸ்பதியின் கூற்றின் படி தண்டாவை விலக்குகின்ற அரசன் துயரடைவான். அவ்வாறு துயரடைபவன் விளக்கில் விழுந்து மடியும் பூச்சிக்குச் சமமானவன் ஆவான்.

இதுவரை நாம் பார்த்த அரசியல் கோட்பாடுகள் கி. பி. 400-க்கு முந்தியவை. அதற்குப் பின்னர் நாளடைவில் பல்வேறு மாறுதல்கள் நிகழ்வுற்றன. கி. பி. 400-க்குப் பின் தோன்றிய அரசியல் படைப்புகளைக் காண்போம். அவை ஹர்ஷர் காலத்துடன் தொடர்புடையவை.

காத்யாயனரின் ஸ்மிருதி கி. பி. 400 முதல் கி. பி. 600 வரை உள்ள காலத்தில் வெளியான படைப்புகளில் குறிப்பிடத் தகுந்த ஒன்றாக விளங்குகிறது. இது ஹர்ஷரின் காலத்துடன் நெருக்கமான தொடர்பு உடையது. இது சமுதாயம் எவ்வாறு ஆளப்பட்டது, குப்தர்களுக்குப் பிற்பட்ட ஹர்ஷர், அவருடைய வாரிசுகளால் சட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்பட்டன என்பவைகளை அறிய உதவும் வழிகாட்டியாகும். இக் கால இந்துச் சட்டங்களிலும் காத்யாயனரின் ஸ்மிருதிக் கோட்பாடுகள் காணப் படுகின்றன. ஸ்மிருதி மரபுகளைக் காத்யாயனர் தம் முன்னோர்களான கௌடில்யர் முதலானோரிடமிருந்து பின் பற்றுவதால் அவருடைய பல சட்டங்கள் வழக்கிலிருந்தன என நாம் யூகிக்கலாம். கௌடில்யர், காமாந்தகர் ஆகியோரின் படைப்புகளைச் செயல்முறைக்கு உதவாதவையே என்று எண்ணிய கருத்தும் தவறானவையே என்று அது நிரூபிக்கின்றது.

மண்டலக் கோட்பாடு என்பது சிறிது விளக்கம் பெற வேண்டிய ஒன்று. ஹர்ஷரின் பேரரசு அதற்கு ஓர் எடுத்துக் காட்டு எனலாம். மண்டலம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைக் கௌடில்யரும் காமாந்தகரும் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றனர்.

1. விஜிகிஷு—வெற்றி பெற்றவர்.
2. அரி—எதிரி
3. மித்ரா—வெற்றியாளரின் நண்பர்.
4. அரிமித்ரா—எதிரியின் நண்பர்.
5. மித்ரா-மித்ரா—வெற்றியாளரின் நண்பருக்கு நண்பர்.
6. அரிமித்ரா-மித்ரா—எதிரியின் நண்பருக்கு நண்பர்.
7. பார்ஷ்ணிகிராஹ—பின் எதிரி.
8. ஆர்ரந்தா— பின் நண்பன்.
9. பார்ஷ்ணி கிரஹசாரா-எதிரியின் நண்பர் பின்னால் இருப்பவர்.
10. ஆக்ரண்டா சாரா—நண்பரின் நண்பர் பின்னால் இருப்பவர்.
11. மாத்யாமா—இடையீட்டாளர். வெற்றியாளருக்கும் அவரது எதிரிக்கும் இடைப்பட்ட நிலையிலிருப்பவர்.

12. உதாசினு—நடுநிலையாளர். மேலே குறிப்பிட்டுள்ள அனை வரின் ஆட்சிப்பகுதிக்கு மேலே உள்ளவர். வெற்றியாளரை, அல்லது எதிரியை, அல்லது இடையீட்டாளரைத் தனி யாகவோ ஒன்ருகவோ எதிர்க்கக்கூடியவர்.

காத்யாயன ஸ்மிருதி மேற்கோள் வடிவத்தில் சுமார் பன்னிரண்டு பிற்கால எழுத்தாளர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளது. அரசனின் நிலை, நீதி மன்றங்கள், நீதி நெறிமுறை குற்றவியல் சட்டம், பங்கு, வாரிசுரிமைச் சட்டம், கடன் சட்டம் முதலான பல்வேறு துறைகளைக் காத்யாயனரின் ஸ்மிருதி விளக்குகிறது. மனு யாஞ்ஞவல்கியர், நாரதர், பிரஹஸ்பதி முதலானேரின் கருத்துரைகளைப் பல்வேறு இடங்களில் மேற் கோளாகக் காட்டவோ விளக்கவோ காத்யாயனர் செய்கிருர். கௌடில்யரின் வழியில் காமாந்தக நீதிச் சாரம் குப்தர்களின் வீழ்ச்சியின்போது இருந்த அரசியல் நிலையை அளிக்கிறது. சாணக்கியாரைப் பின்பற்றுவோர் எனத் தம்மை காமாந்தகர் அழைத்துக்கொள்கிருர்.

காமாந்தக நீதிச் சாரத்தின் காலம் குறித்துப் பல்வேறு கருத் துகளை அறிஞர்கள் அளிக்கின்றனர். அவற்றை நாம் இங்கு விளக்க வேண்டுவதில்லை. காமாந்தகர் தம்முடைய நூலின் 36 அத்தியாயங்களில், ஆட்சி முறையின் பல்வேறு கூறுகளை விளக்குகிருர். அரசனின் முக்கியத்துவம், இளவரசனின் கல்வி, ஆண்டை, பணியாள் கடமை, குடிமக்கள் கடமை, நாட்டின் ஏழு அங்கங்களான அரசு, அமைச்சு, நாடு, கோட்டை, கருவூலம், படை, துணை ஆகியவற்றையும் மண்டலம் என்பது குறித்தும் விளக்குகிருர்.

ஹர்ஷரின் கொள்கைகளை இதுவரைக் கண்ட விவாதத்தின் அடிப்படையில் இனிக் காண்போம்.

### குப்தர்களுடன் ஒப்பீடு

குப்தர் காலத்தில் காணப்பட்ட நிலையினின்றும் மாறுபட்ட நிலையினை ஹர்ஷரின் காலத்தில் காண்கிருேம். பாதுகாப்பான சூழ்நிலை என்று சொல்லத்தக்க சூழ்நிலையில் சிறிது நெகிழ்ச்சி காணப்பட்டது. குப்தர் காலம் ஆட்சித்துறையில் உச்சநிலை யாதலால் அடுத்து வந்த இக் காலம் சற்று இறங்குமுகமானது என்றே குறிப்பிடவேண்டும்.

### யுவாங் சுவாங்கின் பொதுக் குறிப்புகள்

யுவாங் சுவாங்கின் குறிப்பிலிருந்து பொதுவாக நல்ல நிலையே ஹர்ஷரின் காலத்தில் காணப்பட்டது என அறிகிருேம்.

இந்தியாவைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஆட்சிமுறை நேர்மை யானதாகவும், மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்ததாகவும் யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளார். கொடியவர்களும், அரசருக்கு எதிராகச் சதி புரிந்தோரும், சட்டத்தை மீறியவர்களும், கண்டு பிடிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனரே அன்றிக் கடுந்தண்டனை எதற்கும் அவர்கள் உள்ளாக்கப்படவில்லை என்றும், அவர்கள் சமுதாயப் பிரிவினராகக் கருதப்படாது வாழவோ, மடியவோ அனுமதிக்கப்பட்டனர் என்றும் குறிப் பிடுகிறார். குற்றவாளிகளை விசாரிக்கும்போது அவர்களைக் கொடுமைப்படுத்தும் வழக்கமும் இல்லை.

### வரி முறை

வரி முறைகளைக் குறித்தும் யுவாங் சுவாங்கின் குறிப்புகள் வாயிலாக அறியலாம். மக்கள் அரசின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாது நிறைவுடன் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர் எனவும், நிலவரி மொத்த உற்பத்தியில் ஆறில் ஒரு பங்காக விளங்கியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் சாலைவரி ஏதும் செலுத்த வேண்டிய நிலை இல்லை என்று குறிப்பிட்ட அவர் பின்னர் வரிகள் எளிதாக இருந்தன என்றும் கூறினார்.

### மக்களின் இயல்பு

யுவாங் சுவாங் மக்களின் இயல்பைக் குறித்த பொதுவான விளக்கம் ஒன்றை அளிக்கிறார். மக்கள் கோபப்படக்கூடிய இயல்பு படைத்தவர்களாக விளக்கியபோதிலும் நேர்மை யாளர்கள்; பிறருடைய பொருள்களைக் கவருவதில்லை; கொடுத்த வாக்கினைக் காப்பாற்றும் விதத்தில் நடந்துகொண்டனர் என்று உரைக்கிறார்.

இந்தப் பொதுவான விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஹர்ஷரின் ஆட்சியினை விளக்கமாகக் காண்போம்.

## ஆட்சி முறை

ஹர்ஷருடைய ஆட்சி முறை அமைப்பு ஓரளவிற்குக் குப்தர் களின் ஆட்சி முறையினை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது. ஹூணர்களின் வருகை குப்தப் பேரரசைச் சிதைத்ததோடு பேரரசு அமைப்பையே அசைத்துக் காட்டியது. அதன் விளைவாகச் சிறிய முடியரசுகள் போரில் ஈடுபட்டன. ஆனால் முடியரசுகளுள் வலிமை வாய்ந்த அரசுகள்கூட அமைதியாக,

இருக்க இயலவில்லை. இத்தகைய கூறுகளின்மீதுதான் ஹர்ஷர் தம்முடைய பேரரசை நிறுவினர்.

குப்தப் பேரரசில் தொடங்கிய முற்போக்கும் சமயச் சார்பற்றதுமான ஒரு கருத்து மேலும் வளர்ச்சி பெற்றது. மௌரியப் பேரரசு சமயச் சார்புடையதாக விளங்கிற்று. நாட்டிலிருந்த பல்வேறு சமயங்களில் பௌத்தம் மட்டும் அரசின் நல்லாதரவு பெற்றது. இதன் விளைவால் பிராமண சமயத்திற்கும் பௌத்த சமயத்திற்குமிடையே பகை உணர்வு தோன்றியது. ஆனால், குப்தப் பேரரசர்களோ மௌரியர்களைப் போன்று ஒரு சமய ஆதரவாளர்களாக நடந்து கொள்ளவில்லை. ஹர்ஷரும் சமய ஆதரவிற்கு உட்பட மறுத்தார்; எல்லாச் சமயங்களையும் சமமாக நடத்த முயன்றார்; அதில் வெற்றியும் பெற்றார். இவ்வாறு அரசர்கள் கொண்டிருந்த இம் மனப்பான்மை அரசின் தனி மதிப்பை வலியுறுத்தியது. முன்னால் நடந்ததைப் போலல்லாமல், அரசு சமயத்தினால் இயக்கப்படுவதற்குப் பதிலாகச் சமயம் அரசினால் இயக்கப்பட்டது.

ஹர்ஷ வர்த்தனர் சுமார் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். ஹர்ஷ வர்த்தனரின் ஆட்சிப் பரப்பைச் சென்ற அத்தியாயத்தில் கண்டோம். ஆக அத்துணைப் பரந்த பகுதி ஒன்றினை ஆட்சி செலுத்தினர் என்றால் பெரிதும் அவருடைய ஆட்சித்துறை இயந்திரமே அதற்குக் காரணம் எனலாம். எனவே, அது மிகவும் திறமையாக அமைக்கப்பட்டிருந்தது. ஹர்ஷ வர்த்தனரின் ஆட்சி முறையினை அறிய இலக்கியச் சான்றுகள், பட்டயங்கள், காசுகள், சீனப் பயணி யுவாங் சுவாங்கின் குறிப்புகள், பாணரின் ஹர்ஷ சரிதம் ஆகியவை பெரிதும் உதவுகின்றன. அச் சான்றுகள் அளிக்கு செய்திகள் போதுமானவை என்ற விவாதம் எழுப்பப்பட்டது. டாக்டர் திரிபாதி, அவை போதுமானவையல்ல என்று குறிப்பிட்டார். பண்டைய இந்திய வரலாற்றை அறிய இலக்கியச் சான்றுகளும், பட்டயங்களும், காசுகளும் உதவுகின்றன. ஆனால், அவை ஒரு குறிப்பிட்ட கால ஆட்சிமுறையை அறிய உதவுபவை அல்ல என டாக்டர் பேணி பிரசாத் குறிப்பிட்டார். டாக்டர் சர்மா ஆட்சி முறை மட்டுமன்றிப் பண்டைய இந்தியாவின் முழு வரலாற்றையும் அறிய அவையே உதவுகின்றன என்று குறிப்பிட்டார்.

### மைய அரசு நிருவாகம்

வடமொழி இலக்கியங்களின் கருத்துப்படி இறைமை அதிகாரம் ஏழு உறுப்புகளைக் கொண்டது. அவையாவன:

அரசன் அல்லது அரசு, அமைச்சு, நாடு, அரண், கருவூலம், படை, நட்பு ஆகியவை. இதனைச் 'சப்தாங்கக் கோட்பாடு' என்று கூறுவர். ஹர்ஷரின் காலத்தில் இந்தச் சப்தாங்கக் கோட்பாடு வழக்கிலிருந்தது என்பதனை சம்மகச் செப்பேடு வாயிலாக அறிகிறோம். இதனை வெளியிட்டவர் மகாராஜா இரண்டாம் பிரவரசேனர் ஆவார். ஹர்ஷரின் காலத்தில் இக் கோட்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை காணப்பட்டது என்பதற்கு ஹர்ஷ சரிதம், காதம்பரி, ஹர்ஷரின் நாடகங்கள் ஆகியவை தக்கந்த சான்று பகர்கின்றன.

### அரசரின் நிலை

ஏழு அங்கங்களில் அல்லது உறுப்புகளில் முதலாவதாக இருப்பது அரசர். ஹர்ஷர் தம் ஆட்சியினைச் சிறந்த கொள்கைகளின் வழியே நடத்திச் சென்றார். மக்களின் மகிழ்ச்சியே மன்னனின் மாண்புமிகு வாழ்வு என்ற எண்ணத்தைக் கொண்டிருந்த நல்லரசர் அவர். சிறந்த அரசன் எப்படியிருக்க வேண்டும் என்பதனை ஹர்ஷர் தம் நாடகம் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

நாகானந்தா என்ற அவருடைய நாடகத்தின் தலைவன் குறிப்பிடுகிறான்: 'குடி மக்கள் நல்வழியில் நடத்தப்பட்டுவருகின்றனர். நல்லவர்க்குத் தக்கதோர் இடம் வழங்கப்பட்டிருக்கிறது. உறவினர்கள் சமமாக நடத்தப்படுகின்றனர். அரசில் பாதுகாப்பு உறுதியளிக்கப்பட்டுள்ளது. வேண்டுவோர்க்கு வேண்டுவன அளிக்கப்படுகின்றன. இவ்வாறு அவன் குறிப்பிடுவதைக் கொண்டு ஹர்ஷரின் அரசக் கோட்பாட்டினை நன்கு உணரமுடிகிறது. காதம்பரியிலும் ஹர்ஷ சரிதத்திலும் மேலே கூறப்பட்டுள்ள கருத்து வலியுறுத்தப்படுவதைக் காண்கிறோம்.

அரசர் மண்ணுலகில் வாழும் இறைவன் என்று நம்பிக்கை கொள்ளப்பட்டது. அரச பதவிக்குத் தெய்விகத் தன்மை சேர்க்கப்பட்டது. அரசர்களைப் பல்வேறு கடவுளர்களின் இயல்புகளைக் கொண்டவர்களாகச் சிறப்பித்துக் கூறுதல் உண்டு. பாணர் ஹர்ஷ சரிதத்தில் தெய்விக இயல்புகளை ஏற்றிப் புகழ்ந்துரைப்பதைக் காண்கிறோம். புஷ்பபூதியை, இந்திரன், மேரு, மந்தாரை, சமுத்திரம், நிலவு, வேதம், பூமி, குரு, பிருது, விசாலம், ஜனகன், சுயாத்ரா, சுமந்த்ரா, புத்தர், அர்ஜுனன், பீஷ்மர், நிசாதர், சத்ருக்கணன், ஆரன், தட்சன், என்றெல்லாம்

புகழ்ந்துரைப்பதைப் போலவே பிரபாகர வர்த்தனரையும் ஹர்ஷரையும் பாணர் புகழ்ந்து கூறுகிறார்.

பாணர் ஹர்ஷரை இந்திரன், வருனன், குபேரன், யமன் முதலானவர்களுடன் ஒப்பிட்டதோடல்லாமல், அவர்களுடைய அருஞ்செயல்களையும் விஞ்சியது ஹர்ஷரின் ஆற்றல் என்று கூறுகிறார். 'தர்மத்தின் மறுபிறப்பு' என்றெல்லாம் புகழ்ந்துரைப்பது சற்று எல்லை மீறியது என்பதை நாம் உணர்ந்த போதிலும், அரச பதவியின் இயல்பினைக் காட்டுவதாக இது அமைந்துள்ளது. ஹர்ஷர் அருஞ்செயல்களின் உறைவிடமாகத் திகழ்ந்தார். அதுமட்டுமன்றிப் பின்பற்றத்தக்க கோட்பாடுகளைக் கொண்டவராகவும் விளங்கினார். எதிரிகளுக்கு எமனாக விளங்கிய அவர், மனித சமுதாயத்திற்கு அறம் அளித்த வள்ளலாகவும் விளங்குகிறார். ஓர் உண்மையான இந்துப் பேரரசனை ஹர்ஷரிடத்துக் காணலாம்.

பிரிய தர்ஷிகாவிலும், இரத்தினாவளியிலும் உயர்ந்த அரசின் கோட்பாடுகளை அவர் எடுத்துரைக்கிறார் எனலாம். அவ்விலக்கியங்களிருந்து குடிமக்கள், அரசு, குடிமக்களின் நலன், பாதுகாப்பு, ஆகியவற்றுடன் சிறந்த ஆட்சிமுறை நிறுவுதலையே அவர் சிறந்த கோட்பாடாகக் கொண்டிருந்தார் என்பதும், தம்முடைய தனி இன்பங்கள், ஆசைகள் ஆகியவற்றை இரண்டாவதாகவே வைத்து எண்ணினார் என்பதும் வெளிப்படுகின்றன,

இரத்னாவளியில் 'இந்த அரசுக்கு இருந்த எதிரிகள் அழிந்தனர்; ஆட்சிப் பொறுப்பு தக்க அமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ளது; குடிமக்கள் துயர்களெல்லாம் நீக்கப்பட்டுத் தகுந்த பாதுகாப்பு பெற்றுள்ளனர்' எனவும், பிரியதர்சிகாவில், மக்கள் மன்னரிடத்துக் காட்டிய விசுவாச உணர்வும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. நாகானந்தத்தில் அரசரின் கடமைகள் நன்கு வரையறுத்துக் கூறப்படுகின்றன. அரசர் இந்த உலகம் முழுவதையும் காக்கும் ஆற்றல் பெற்றவராக விளங்கினர்.

**அரசரின் கடமைகள்**

இலக்கிய ஆதாரங்களிலிருந்து தர்மத்தை நிலைநிறுத்தித் தவறு செய்தோரை ஒறுப்பது அரசரின் முதல் கடமை என்பதை அறிகிறோம்.

சட்டத்தையும் ஒழுங்கையும் காத்து, உள், வெளி அபாயங்களிலிருந்து நாட்டைக் காத்து, எல்லாவிதமான அழிவுகளி

விருந்தும் மக்களைக் காப்பதும், மக்களின் மன, குண நலன்களைப் பெருக்க ஆவன செய்வதும் அரசரின் இரண்டாவது கடமையாயிற்று.

நடுவு நிலைமை வழுவாத நல்ல திறமை மிக்க நீதியினை அனைவருக்கும் சாதி, சமய, இன, அந்தஸ்து கருதாது வழங்குவது அரசரின் மூன்றாவது கடமையாக அமைந்தது.

அக்கடமைகளை அரசர் எங்ஙனம் நிறைவேற்றினார்? தனி ஒருவராக நின்று தாமே நிறைவேற்றினாரா, யாருடைய உதவியேனும் பெற்றுச் செயல்பட்டாரா என்பது அடுத்து எழும் கேள்வி. இக் கேள்விக்கும் விடை காண்பது எளிதாகும். மூன்று சக்திகள் மேலே கூறப்பட்ட மூன்று கடமைகளையும் செவ்வனே அரசர் நிறைவேற்ற உதவின. அந்த மூன்று சக்திகளையும் பிரபு சக்தி, மந்திர சக்தி, உத்ஸாக சக்தி என்று பெயரிட்டு அழைக்கின்றனர். அந்த மூன்று சக்திகளுமே இல்லையெனில் அரசரே இல்லையெனலாம். அந்த அளவிற்கு அவை சிறப்புத் தன்மை வாய்ந்தவை. பிரபு சக்தி என்று குறிப்பிடப்பட்டது அரசனின் இறைமை அதிகாரம். மந்திர சக்தி என்பது அரசருக்கு நல்ல கருத்துரை வழங்கிய அமைச்சர் குழுவினையும், உத்ஸாக சக்தி என்பது படையினையும் குறிக்கும். ஹர்ஷ வர்த்தனர் இந்த மூன்று சக்திகளின் வல்லமையை நன்கு உணர்ந்து அதற்கேற்ப அவற்றிற்குச் சமமான நிலையினை அளித்துவந்தார். பிரியதர்ஸிகாவில் அங்க நாட்டின் அரசரைச் 'சக்தி திரையஸ்யா' என, அதாவது மூன்று சக்திகளையும் கொண்டவர் எனப் புகழ்ந்துரைத்துள்ளார்.

இவ்வாறு மூன்று சக்திகளும் அக் கால அரசியலுக்குப் பெரிதும் துணையாக நின்றன. மூன்று சக்திகளாலும் விளைந்த பலனை அனுபவித்தவர்' எனப் பாணர் காதம்பரி நூலில் தாராபீடாவைக் குறிப்பிடுகிறார். ஆட்சியில் நடுவுநிலைமை வழுவாமலும், கடமையைச் செய்வதில் தவறாமலும், அதனை நிறைவேற்ற ஊண் உறக்கம் எதையும் கருதாமலும் இருந்தார் எனவும் யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். அரசரின் திறமையான நிருவாகத்தின் பயனை மக்கள் அனுபவித்து மகிழ வேண்டும் என்பதே, அக் கால இந்திய அரசர்கள் வழக்கமாகப் பின்பற்றி வந்த கொள்கையாகும். ஹர்ஷரும் அது போன்ற கொள்கையைப் பின்பற்றினார்.

மௌரிய அரசரான அசோகரைப் போல ஹர்ஷர் மிகவும் கடினமாக உழைக்கக் கூடிய அரசர். ஹர்ஷரின் தினசரி வாழ்க்கையினை மூன்று பிரிவுகளாகப் பிரித்து யுவாங் சுவாங் குறிப்

பிட்டுள்ளார். ஒரு பகுதி அரசு அலுவல்களைக் கவனிக்கவும், இரண்டாவது பகுதி சமயப் பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டன. சோர்வு அடையாத உழைப்புத்திறன் கொண்ட அவருக்கு நாள் மிகவும் குறுகியதாகக் காணப்பட்டது. அரசாங்க நிருவாகம் பெரும்பாலும் சமயச் சார்பற்றதாகக் குறிக்கப்பட்டாலும் பல வகையான அரசியல் அலுவல்கள் சமயத்தோடு ஒட்டியவையாகவே எண்ணப்பட்டன. மருத்துவமனை நிருவாகம், கல்வி நிலையங்கள், விடுதிகள், குடிநீர்ப்பந்தல் ஆகியவற்றை அமைத்தல் முதலாவையும் சமயத்தை ஒட்டிய அலுவல்களாகக் காணப்பட்டன. அரசரின் அன்றாட அலுவல்களைக் குறித்து இலக்கியச் சான்றுகளும் பட்டயச் சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், அரசு அலுவல்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டதாகச் செய்தி ஏதும் கூறவில்லை. அரசு அலுவல்களையும், மற்றைய பணிகளையும் ஆர்வத்துடன் நிறைவேற்றிய அரசராக ஹர்ஷர் விளங்கினார்.

அரசர் தம் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளைக் குறித்து நன்கு அறிந்துவைத்திருந்தார். ஹர்ஷர் காலத்தில் எழுதப்பட்ட குறிப்புகளிலிருந்து அடிக்கடி அரசாங்க முறையில் பயணங்களை மேற்கொண்டார் என அறியலாம். அதனால் அவருடைய நிருவாகத் திறமை அதிகரித்தது என்றும், பல்வேறு பகுதிகளின் புவியியல் அமைப்பு, மக்களின் வாழ்க்கை ஆகியவைபற்றிய அறிவு அப் பகுதிகளுக்குத் தக்க திறமையுடைய ஆளுநர்களைத் தேர்ந்தெடுக்க உதவியது என்றும் அறிகிறோம்.

சீனப் பயணி தம்முடைய பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து அவ்வாறு சுற்றுப்பயணம் செய்த இடங்களில் தாற்காலிகத் தங்குமிடங்களைக் கட்டிவைத்திருந்தார் எனவும், மழைக்காலங்களில் மூன்று மாதங்கள் அவர் எங்கும் வெளிச் செல்வதில்லை எனவும் குறிப்பிட்டார். இதற்குக் காரணம் மழைக்காலங்களில் அக் காலத்தில் இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்வது கடினமாக இருந்தது. ஹர்ஷர் மேற்கொண்ட பயணங்கள் ஏதோ பொழுதுபோக்காகவும், மகிழ்ச்சிக்காகப் பெறப்பட்ட பயணங்களாகவும் இல்லாமல், மக்களுடைய குறையினை அறிய மன்னர் மேற்கொண்ட செயல்களாகவே அமைந்தன. அவ்வாறு பயணம் செய்கின்றபோது நகர மக்களின் பழக்க வழக்கங்களில் ஒழுங்கீனம் ஏதும் காணப்பட்டால் அவர்களிடையே சென்று தீமை செய்தோரை ஒறுத்தலையும், நல்லவர்க்குச் சிறப்பு வழங்குதலையும் செய்தார்.

அரசை அண்டி மக்கள் தம் துன்பத்தையும், சிரமங்களையும் துணிவுடன் எடுத்துக் கூறினர் என்பதற்குப் பாணரின் குறிப்புகள் சான்றாக அமைகின்றன. ஹர்ஷர் சசாங்கனைப் போர்க்களத்தில் சந்திக்கச் சென்றபோது, மக்கள் அவரிடம் திரண்டு வந்து அன்பளிப்புகள் அளித்தனர் என்பதையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார். அவ்வாறு அன்பளிப்புகள் வழங்கும்போதே தங்கள் குறைகளைத் தெரிவித்தனர். அதைப் போலவே ஹர்ஷரின் அடிப்படை நோக்கம் கௌட அரசனைத் தண்டிப்பதாக இருந்தபோதிலும், அப் படையெடுப்பை மக்களின் குறையறியும் நல்வாய்ப்பாய்க் கொண்டார்.

குடிமக்கள் அரசரைக் காண்பதில் தனி ஒரு மகிழ்ச்சி கொண்டனர். குடிகள் கோனிடத்துக் கூறிய குறைகள் யாவை என்பதையும் சான்றுகள் வாயிலாக அறியலாம். சிலர் தம்முடைய பயிர்களுக்குத் தக்க பாதுகாப்பு வேண்டினர். சிலர் தாம் உழைத்து ஊதியம் பெற வேண்டிய நேரத்தில் தீயவர்கள் அதைப் பெற்றுச் சென்றுவிடுகின்றனர் என்று கூறினர். மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக அரசு அலுவலர்க்கு அஞ்சாது குறைகளை எடுத்துவைத்தனர். எனினும், மன்னரைக் காண வந்த மக்கள் கூட்டம் முழுமையுமே குறை தவிர்க்க வேண்டுகோள் விடுத்த கூட்டமன்று. அரசில் சிலருக்குக் குறைபாடு இருந்தது. சிலருக்கு நிறைவு இருந்தது.

மன்னரின் கோன்மையில் மனநிறைவு கொண்ட மக்கள் மன்னரைத் தர்மத்தின் மறுபிறப்பு என்று நெஞ்ச நிறைவோடு புகழ்ந்துரைத்தனர். குறைகளுடன் வந்து நின்றவர்களோ, 'எங்கே அரசன்? அரசனாக இருக்க அவனுக்கு என்ன உரிமை உண்டு? என்ன அரசன்?' என்று கேட்டனர் என்று பாணர் குறிப்பிடுவதிலிருந்து ஓர் உண்மையினை அறிகிறோம். அரசரிடத்து அச்சமின்றி மக்கள் குறைகளைக் கூறி நிறைவேண்டத் துணிவு பெற்றிருந்ததை அது காட்டுகிறது. அரசர் அளித்த உரிமையினாலேயே மக்கள் தங்கள் மகிழ்ச்சியினையும் துயரையும் வெளிப்படுத்தி அரசர் தமக்கு ஏற்பட்ட துயரைக் களைவார் என்ற நம்பிக்கையும், அமைதி, வளம், நேர்மை, நீதி அனைத்தும் அரசராலே காக்கப்படும் என்ற எண்ணமும் கொண்டிருந்தனர்.

ஹூணர்களுக்கு எதிரான படையெடுப்பினை இராஜ்யவர்த்தனர் மேற்கொண்டபோதே அவருடன் ஹர்ஷர் சென்று நேரடித் தகவல்களை அறிந்துகொள்ளத் தொடங்கினர். தூது

முதல் மக்களுடன் நேரடித் தொடர்பு கொள்வது மன்னருக்கு உரிய கடமை என்பதை உணர்ந்து பின்பற்றத் தொடங்கியிருக்கலாம். பல்வேறு படையெடுப்புகளைப் பின்னர் அவர் மேற்கொண்டதும் அந்த எண்ணத்தை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். யுவாங் சுவாங் தம்முடைய குறிப்புகளில் பேரரசின் பெரும்பாலான பகுதிகளுக்கும் அரசர் சென்றுவந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு சுற்றுப் பயணம் சென்றபோது அவர் பௌத்த அவை ஒன்றினைக் கூட்டியதையும், தாற்காலிகத் தங்குமிடங்களை அமைத்ததையும், அவ்வாறு அமைத்த (புல்லால் அமைக்கப்பட்ட) தங்குமிடத்தை அழித்துவிட்டுச் சென்றதையும் யுவாங் சுவாங்கின் குறிப்புகள் வாயிலாக அறியலாம். ஹர்ஷரின் சுற்றுப் பயணங்களைக் குறிப்பிடுகையில் குங்-யு-தா, கீ-சூ-வென்-கி-லோ, க-சு-வென் என்று சில குறிப்பிட்ட பகுதிகளைக் குறிப்பிட்டார். யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து மட்டுமல்லாமல், பாணரின் ஹர்ஷ சரிதத்தின் வாயிலாகவும் அத்தகைய பயணங்களைப் பற்றி அறிகிறோம்.

அரசருடைய முகாம் எப்படி இருந்தது என்பதைப் பாணர் படம் பிடித்துக் காட்டுகிறார். ஹர்ஷரைப் பாணர் சென்று கண்டபோது அவர் அஜிராவதி நதி தீரத்தில் மணிதாரா என்னுமிடத்தில் தம்முடைய முகாமை அமைத்திருந்தார். மேகாலகா என்ற அரசரின் தூதுவர் பாணரை அழைத்துச் சென்றார். பாணர் செல்லும் வழியில் ஹர்ஷருக்கு அடிபணிந்து நின்ற அரசர்களின் முகாம்கள் இருந்தன. அரசருடைய வாயிலை அடைந்ததும் ஒரே இருட்டாக யானைக் கூட்டங்கள் குதிரைகள், ஒட்டகங்கள் ஆகிய படைகள் அங்குக் காணப்பட்டன. மற்றொரு புறத்தில் வெண்கொற்றக் குடைகளும், வெண்சாமரங்களும் ஏராளமாக ஆயிரக்கணக்கில் காணப்பட்டன. ஒவ்வொரு பக்கத்திலும், வெற்றி கொள்ளப்பட்ட எதிரி அரசர்கள் தலைகளைத் தாழ்த்திக் காணப்பட்டனர். வெற்றிகொள்ளப்பட்ட அவர்கள் அரசரால் ஏற்கப்படாதவர்கள். அரசரால் ஏற்கப்பட்ட வெற்றி கொள்ளப்பட்ட அரசர்களில் சிலர் இருந்தனர். அவர்கள் தாம் பேறு பெற்றதாக எண்ணி மகிழ்ந்து நின்றனர். ஹர்ஷ வர்த்தனர் சமயப் பொறை உடையவராக விளங்கியதால் பல்வேறு சமயத்தவர்களும் முகாமில் கூடினர். அவர்கள் மட்டுமன்றி அந்தந்தப் பகுதிகளின் மக்களும், காடுகளில் வாழ்ந்த மக்களும் கூடினர். அந்த முகாம்களுக்குத் தூதுவர்களும் வந்தனர். ஹர்ஷரின் முகாமில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எவரும் அரசரை நேரடியாகத் தடையின்றிச் சென்று கண்டுவர

முடியாது. காவலர்கள் மூலமாகத் தகவல் அனுப்பி இசைவு பெற்றே உட்சென்றனர். அரசர் முகாம்களில் முத்தினை ஒத்த தெளிவான கல்லாலான அரியணைமீது அமர்ந்திருந்தார். அந்த அரியணை சந்தன நீரால் கழுவப்பட்டது. யுவாங் சுவாங் அரசருடைய முகாம்களைப் பயண மாளிகைகள் எனவும், பயண அரங்குகள் எனவும் குறிப்பிட்டார். அங்கு அரண்மனையில் இருக்கக் கூடிய அத்துணை வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. பிரயாகையில் ஹர்ஷர் அத்தகைய முகாம் ஒன்றினை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கொண்டிருந்தார். கன்னோசியிலிருந்து அங்குச் சென்ற அரசருடைய முகாமில் 18 அரசுகளின் அரசர்களும், சுமார் 5 இலட்சம் மக்களும் கலந்துகொண்டனர்.

அரசர் அவ்வாறு ஏற்படுத்திய முகாமில் மக்களின் வசதிக்காகக் கூரைக் கட்டடங்களும் நூற்றுக்கணக்கானத் தானியக் கிடங்குகளும், சிற்றுண்டிச்சாலைகளும், நூற்றுக்கும் மேற்பட்ட தங்குமிடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அரசர் தொடர்ந்து பயணம் மேற்கொண்டிருந்தார். வர்த்தமான கோட்டி, கப்தீகா முதலிய அரச முகாம்களிலிருந்தே பன்ஸ்கேரா, மதுபான் பட்டயங்கள் வெளியிடப்பட்டன.

### அரசரின் பட்டங்கள்

பரமபட்டாரகா, இராஜா, நிருபா, மகாராஜா, மகாராஜாதிராஜா, சக்கரவர்த்தின், பரமேஸ்வர தேவா, பரமதேவதா, சாம்ராட், ஐக்காதி ராஜ மகாராஜாதிராஜா, சர்வபௌன் முதலான பட்டங்களை வர்த்தனர்கள் கொண்டிருந்தனர். பிரபாகர வர்தனரின் காலம்வரை ஹர்ஷரின் முன்னோர்கள் இராஜா, நிருபா, மகாராஜா முதலிய பட்டங்களையே பயன்படுத்தினர் என்பதிலிருந்து அவர்கள் அன்றைய நாளில் பெற்றிருந்த அரசியல் நிலையை அறிகிறோம்.

பிரபாகர வர்த்தனராலும், ஹர்ஷ வர்த்தனராலும் மற்றைய பட்டங்கள் கொள்ளப்பட்டிருந்தன. பிரபாகர வர்த்தனரைப் பாணர் இராஜாதி ராஜா என்று குறிப்பிட்டார். ஆனால், பட்டயங்களில் அவர் மகாராஜாதிராஜா என்று அறியப்பட்டுள்ளார். அதே நேரத்தில் காமரூப அரசன் சுஸ்திர வர்மனைப் பாணர் மகாராஜாதி ராஜா என்று அழைப்பதைக் கொண்டு இந்த பட்டங்களெல்லாம் கடும் விதிகளுக்கு உட்பட்டோ குறித்த பொருளிலோ பயன்படுத்தப் படவில்லை எனத் தெரிகிறது. பாணரின் ஹர்ஷ சரிதத்தில் ஹர்ஷர் தேவா, பரமேஸ்வரா,

சக்கரவர்த்தின், பரம பட்டாரகா, மகா ராஜாதிராஜா என அழைக்கப்பட்டுள்ளார். ஹர்ஷர் நாகாநந்தம் நாடகத்தில் கதைத் தலைவனைச் சக்ரவர்த்தி எனக் குறிப்பிடுகிறார். இளவரசன் அப் பட்டம் சூட்டப்பட்டவுடன் சக்கரவர்த்தி என்ற அப் பட்டத்தைப் பெற்றதாக அறியப்படுகிறது.

நான்காம் தாரசேனர் மட்டுமே சக்கரவர்த்தி என்ற பட்டத்தைக் கொண்டதைக் அக் காலப் பட்டயச் சான்றுகளில் கண்கிறோம். சக்கரவர்த்தி என்ற பட்டத்தை வேறு யாரும் கைக்கொள்ளாததால் வேறு எவரும் அந்த அளவிற்கு வல்லமை பெற்றவராக விளங்கவில்லை என ஃபிளீட் கருதுகிறார்.

பிரபாகர வர்த்தனர், இரண்டாம் இராஜ்ய வர்த்தனர் முதலானவர்கள் பரமேஸ்வரா, பரம பட்டாரகா, மகாராஜாதி ராஜா என்ற பட்டங்களைப் பெற்றனர் எனப் பன்ஸ்கேரா, மதுபன் பட்டயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். டாக்டர், சர்மா, பரமேஸ்வரா என்னும் பட்டம் பரம பட்டாரகா, மகாராஜாதி ராஜா முதலிய பட்டங்களைப் போலவே பொதுவான பட்டங்களாகும் என்று கருதுகிறார். பரம பட்டாரகா, மகாராஜாதிராஜா முதலியவற்றுடன் பரமேஸ்வரா என்ற பட்டமும் சேர்த்தே குறிப்பிடப்படுகிறது.

ஹர்ஷ வர்த்தனர் பட்டயங்களில் மேலே கூறப்பட்டுள்ள மூன்று பட்டங்களும் குறிப்பிடப்படவில்லை எனினும் இரண்டாம் புலிகேசியாலும், நான்காம் தாரசேனராலும் அவை பயன்படுத்தப்பட்டன என அறிகிறோம். இரத்னவளி நாடகத்தில் ஹர்ஷர் சர்வ பௌமா என்ற பட்டத்தைப் பயன்படுத்துகிறார்.

## அரசர்களின் கல்வி

அரசர்களாகப் பொறுப்பேற்பவர்கள் தகுந்த கல்வியும், பயிற்சியும் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு அவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. இராஜ்ய வர்த்தனரும் ஹர்ஷரும் ஆட்சிமுறைகளையும், போர்ப்பயிற்சியையும் கற்றுத் தேர்ந்தனர். இளவரசர்கள் வழக்கமாகக் கற்றுத் தேரும் கலைகள் யாவும் கற்றுத் தேர்ந்து முன்னேறும் இளைஞராக ஹர்ஷரைப் பாணர் தம் ஹர்ஷ சரிதத்தில் எடுத்துக்காட்டுகிறார்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தொடக்கக் காலத்திலேயே அமைச்சர்கள் ஹர்ஷரிடம் நம்பிக்கை கொள்ளத்தக்க அளவிற்குத் திறமை பெற்றவராக விளங்கினர். இளவரசன் சந்திர பீடன் கல்வியின் அனைத்துத் துறைகளிலும் தேர்ந்தார் என்பதைக் கொண்டு அக்காலத்தில் இளவரசர்களுக்கு அனைத்துக் கலைகளும் பயிற்றுவிக்கப்பட்டன என்று முடிவுகட்டுகிறோம். இளவரசர்கள் முதியோர்க்கு மரியாதை தெரிவிக்கவும், பிராமணர்களைச் சிறப்பிக்கவும், மக்களைக் காக்கவும் அறிவுரை வழங்கப்பட்டனர். இவை அரசனுடைய இன்றியமையாத கடமைகளாகக் கருதப்பட்டன.

## முடி சூட்டு விழா

அரச பதவிக்கு வேதகாலம் தொடங்கி இன்றுவரையிலும் தொடர்ந்து இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வரும் வழக்கம் முடிசூட்டு விழாவாகும். இந்தியாவில் ஒவ்வொரு இந்து அரசனும் முடிசூடிக் கொண்டான். பிரபாகர வர்த்தனர் தெளிவான முறையில் முடிசூட்டப்பட்டதைப் பாணர் தெளிவாக விளக்குகிறார். ஹர்ஷரிடத்து அவருடைய அன்னை யசோமதி கூறியதாக அறியப்படும் குறிப்பு இதற்கு எடுத்துக்காட்டாகும். முடிசூட்டு விழாவின்போது எண்ணிறந்த திறையரசர்கள் புனித நீரைக் கொட்டியதாக அவர் குறிப்பிட்டார்.

ஹர்ஷரின் முடிசூட்டு விழாவினைக் கொண்டு அதற்கு உள்ள சிறப்பினை நாம் அறிகிறோம். ஹர்ஷ சரிதத்தின் வாயிலாக முடிசூட்டு விழாக் குறித்த விளக்கங்களைப் பெறுகிறோம். ஹர்ஷவர்த்தனர் உடனடியாகப் போர்க்கோலம் பூண்டு களம் புகவேண்டியிருந்ததால் முடிசூட்டு விழாவைப் பகட்டுடனும், ஆரவாரத்துடன் நடத்தப் போதிய நேரம் கிடைக்கவில்லை என்றபோதிலும் முடிசூட்டு விழா அவர் படையெடுத்துச் செல்வதற்கு முன்னர் நடைபெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

நான்கு திசைகளிலும் சென்று வென்று வெற்றிக் கொடியை நிலைநாட்டப் போருக்குப் புறப்படவேண்டிய புனித நாளை நூற்றுக்கணக்கான வானநூல் வல்லார்கள் கூடித் தெரிவுசெய்தனர். அந் நன்னாளில் அதிகாலையில் ஹர்ஷர் எழுந்து பயபக்தியுடன் திரிசடைக் கடவுளாம் விரிசடைச் சிவனை வணங்கிப் பிராமணர்களுக்குத் தான மளித்து, புலித்தோலாலான ஆசனத்தில் அமர்ந்து முதலில் அவர்தம் வில்லிற்கும், பின்னர் உடலுக்கும் சந்தனத்தினால் அபிஷேகம் செய்தார். பின்னர்ச் சடங்குகள் நிறை

வேறின. அவருடைய தலைமீது புனித நீர் தெளிக்கப்பெற்றது. கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஏராளமான அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

இந்த முடிசூட்டு விழா சடங்கு பூர்வமாக நடைபெற்றது என்பதனைத் தலைமை அரசியும் அதில் பங்கு கொண்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. பாணரின் காதம்பரியில் சந்திர பீடன் என்ற கதா நாயகனுக்கு இந்தியாவின் பல்வேறு திசைகளிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித நீரால் அபிஷேகம் நடைபெற்றது எனத் தெரிகிறது.

புனித நீராட்டு விழாவிற்குப் பின்னர் அவர் அவருடைய அன்னையாரால் அபிஷேகம் செய்விக்கப்பட்டார். அதன் பின்னர் அவைகூடும் மன்றத்திற்குச் சென்று அங்கே அரசருக்குரிய சிம்மாசனத்தில் அமர்ந்தார். பல்வேறு நாடுகளிலுமிருந்து வந்த திறையரசர் தங்களுடைய அன்புக் காணிக்கைகளை அளித்தனர். அவ்வாறு முடிசூட்டு விழா நடைபெற்றபோது முரசு முழங்கிக் கொண்டிருந்தது. நாம் முகாமின் வாழ்க்கையை முன்னர்க் கண்டோம். அதைப் போலவே அரண்மனையும் அனைத்து வசதிகளும் நிலையாக அமைக்கப்பட்டு விளங்கியது.

அவ்வாறாக நடைபெற்ற முடிசூட்டு விழாவிற்குப் பின்னர் ஹர்ஷர் போருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அரண்மனைப் பணியாளர்

அரசருக்கும், அரசிக்கும் தனித்தனி மாளிகைப் பணியாளர்கள் இருந்தனர். பல்வேறு பணிப்பெண்டிர் அங்கு இருந்தனர். மகா பிரதிஹாரி, பிரதிஹாரிஜன, சம்ரக்கிரகினிகள், தாம்பூலக்காரன், காவகினிகள் என்னும் பெயருடைய வாயிற் காப்போன், பிற பணியாளர்கள், சாமரம் வீசுவோர், அடைப்பைக்காரர்கள் முதலானவர்களும் வேறுபல பணியாளர்களும் இருந்தனர். அவர்களில் சிலர் குள்ளர்களாயும், கூனர்களாயும், ஊமைகளாயும் விளங்கினர். ஆண்களும், பெண்களும் அரண்மனைப் பணிக்கெனச் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் பெண்களாவர்.

வெண்சாமரம் வீசுவதும், வெற்றிலை மடித்துக் கொடுப்பதும் பெண்களின் பணி. அரசச் சின்னங்களில் வெண் சாமரமும், குடையும் இன்றியமையாதனவாகையால் அவற்றைச் சுமந்த பெண்டிர் மரியாதையுடன் நடத்தப்பட்டனர். அபோகா

என்ற பெயர்பெற்ற குடையொன்றினைக் காமரூப அரசன் பாஸ்கர வர்மன் ஹர்ஷரிடத்து அளித்தார் என்பதனை முன்னரே கண்டோம். அக் குடைக்குத் தெய்வத் தன்மை ஏற்றப்பட்டதை யும் கண்டோம். ஹர்ஷ வர்த்தனர் அக் குடையினைக் கண்ணுற்ற போது தாம் போருக்குச் செல்வதற்கு முன் கிடைத்த நல்ல குறியாக அதனைக் கருதினர். ஆனால், துயரச் சம்பவங்கள் நிகழ்ந்தபோது அரசுரிமைச் சின்னங்களைப் பயன்படுத்து வதில்லை.

அரசரின் அரண்மனையைத் தகுந்த பாதுகாப்புடன் தக்க வர்களைக் கொண்டு காவல் காத்தனர். பிரபாகர வர்த்தனர் நோயுற்றபோது மருத்துவர்கள், ஆலோசகர்கள், குலப் புரோகிதர்கள், பிராமணர்கள், வெண்சாமரம் வீசுவோர், தலைமை வாயில் காப்போன் முதலானவர்கள் மட்டுமே அனுமதிக்கப் பட்டதாகப் பாணர் குறிப்பிடுகின்றார். அரண்மனைக் கதவு எப் போதும் மூடிக் கிடந்தது என்றும் பாணர் குறிப்பிட்டார் என்றாலும் விழாக் காலங்களில் அத்தகைய தடை ஏதும் அரண் மனைக்குள் புகவில்லை என நம்பலாம். இராஜ்ய வர்த்தனர், ஹர்ஷ வர்த்தனர் முதலானவர்களின் பிறந்த நாள் விழாக்களில் தங்குதடையின்றி அரண்மனையில் மக்கள் வெள்ளம் பொங்கி வழிந்தது.

அரசரின் நாள் அலுவல்கள் மூன்று பங்குகளாகப் பிரிக்கப் பட்டன என்று கண்டோம். அரசரின் அன்றாட அலுவல்கள் இசை முழக்கத்துடனும், முரசு ஒலியுடனும் தொடங்கியது. சிறந்த இசைக் கலைஞர்களும், மந்திர முழக்கம் செய்வோரும் நிறைந்திருந்தனர். இசை முழக்கம் கேட்ட வேந்தர் எழுந்து தம் வயதை ஒத்தவர்களுடன் உடற்பயிற்சி செய்து குளிப்பதற் காகச் சென்றார்.

அரசர் நீராடச் சென்றபோது முரசும், இசைக் கருவிகளும் முழங்கின என யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். அதன் பின் அரசர் இறை வழிபாட்டில் ஈடுபட்டார். யுவாங் சுவாங்கின் குறிப்புகள் பாணர், ஹர்ஷர் முதலானவர்களின் குறிப்புகளுடன் ஒத்துள்ளன. வழிபாடு முடிந்தவுடன் அரசரின் உடலில் நறுமணப் பொருள்கள் தடவப்பட்டன. அதன் பின்னர் ஆடை மாற்றிக்கொண்டு அரசர் அன்றாட அலுவல்களைக் கவனித்தார். ஹர்ஷர் தமக்கு உட்பட்ட சிற்றரசர்களுடன் சீரான முறையில் உறவு கொண்டிருந்தார். அவர்களுக்குத் தகுந்த சிறப்பினை அவர் அளித்தபோதிலும் அவர்களை மிக நெருங்கிப் பழக அனுமதிக்க வில்லை. குமார குப்தர், மாதவ குப்தர் என்ற மாளவத்தின்

இளவரசர்களை ஹர்சர் மிகக் கண்காணிப்புடன் நடத்தினர். பக்கத்து நாட்டு அரசர்களின் வெறுப்பு உணர்ச்சியைத் தேடிக் கொள்ளாதவாறு சாதுரியமாக நடந்து ஒரு மூழுப்படையெடுப்பினல் ஏற்படும் வீண் அழிவை இராஜ தந்திரத்தால் தடுத்துக் கொண்டார்.

தம் மகளைத் துருவ பட்டருக்கு மணம் முடித்துக் கொடுத்து வலபியுடன் சீராய்த் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். தமது எல்லையை ஒட்டி அமைந்திருந்த மற்ற நாட்டு அரசர்களுடன் நட்புக் கொண்டிருந்தார். ஹர்ஷருடைய அவைகளில் சிற்றரசர்கள் பலரும் பங்கு கொண்டதும், குறுநில மன்னர்கள் அவையில் அறிவிக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறுபட்டு நடப்பதில்லை என அறிவித்ததும் ஹர்ஷர் தனித் தலைமை பெற்றவர் என்ற நிலையினைக் காட்டுகின்றன. அரசர் காலம் தவருமல் குறுநில மன்னர்களைக் கண்டார். அவ்வாறு அவர்களை அவர் கண்டது அரசு நிர்வாகத்திற்கு மிகவும் பயன் தருவதாக அமைந்தது. ஏனெனில், அந்தக் குறுநில மன்னர்கள் ஓர் அதிகாரம்மிக்க மத்திய அரசரால் நியமிக்கப்பட்ட ஆளுநர் பொறுப்பினை ஒத்த பதவி வகித்தவர்களே.

ஹர்ஷர் கி. பி. 643ஆம் ஆண்டில் மட்டும் 20-க்கும் அதிகமாக அவைகளைக் கூட்டியுள்ளார். குறுநில மன்னர்கள் பலர் சாமந்தா, மகா சாமந்தா முதலிய பட்டங்கள் பெற்றனர். மணிதாராக் கூட்டத்தில் பலவகைக் குறுநில அரசர்கள் கலந்து கொண்டதைத் தாமே நேரில் கண்டதாகப் பாணர் குறிப்பிட்டுள்ளார் என்பதையும், படையாற்றலால் வீழ்ந்த சிற்றரசர்கள் விசுவாசம் செலுத்தினர் எனவும், தோல்வியுற்றவர்கள் தவிர்த்த வேறுசிலர் அரசரின்மீது கொண்ட அன்பினாலும் பற்றினாலும் காணவந்தார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார் என்பதை முன்னரே கண்டோம்.

ஹர்ஷர் ஒரு நாட்டின் அரசர் பிற நாடுகளோடு நட்புக் கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

வர்த்தனர்களிடையே நிலவிவந்த அரசுரிமை குறித்துக் காண்போம். அரசுரிமை பொதுவாக மூத்த மகனுக்கே உரியது. வயது நிரம்பப் பெற்றவுடன் யுவராஜா என்று அழைக்கப்பட்டு அரசர் மறைவிற்குப் பின் பொறுப்பை ஏற்கும் உரிமை பெறுவார். சில சமயங்களில் மூத்த மகனைவிட இளைய மகன் ஆற்றலும், திறமையும் சிறப்பாகக் கொண்டிருந்தால், அரசின்

வாரிசாக இளைய மகனைத் தேர்ந்தெடுப்பதுண்டு. அரசருக்கு உடன்பிறந்தவர் யாரும் உயிருடன் இல்லையெனின் மூத்த சகோதரனின் மூத்த மகன் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வழக்கம் க்ஷத்ரபர்களிடம் காணப்பட்டது. அரச குடும்பத்தில் பெண்கள் அரசியல் பொறுப்புகளில் முக்கியப் பங்கு வகிப்பதில்லை. விதவையான தம் தங்கை இராஜ்ய ஸ்ரீக்கு உதவியாக ஹர்ஷர் நாட்டின் அரசியல் நிர்வாகத்தை கவனித்தார் என்ற செய்தி அக்காலத்தில் பின்பற்றப்பட்ட வழக்கத்திற்கு மாறுபட்டதாகும். அப்படி வேறு ஒரு நாட்டிற்காக ஹர்ஷர் பொறுப்பு ஏற்ற நிலை வேறு வழியின்றித் தங்கைக்கு உதவுவதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும்.

ஹர்ஷரின் மத்திய, மாநில அரசு நிர்வாக இயந்திரங்களைப் பற்றிய சிரான விளக்கங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, பரந்து சிதைந்து கிடக்கும் செய்திகளிலிருந்தும், வரலாற்றுச் சான்றுகளிலிருந்தும், ஏழாம் நூற்றூண்டில் அரசாங்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் குப்தர்கால நிர்வாக அமைப்பு முறைகளிலிருந்து பகுத்தும் தொகுத்துமே ஹர்ஷரின் நிர்வாகத்தை அறிகிறோம். அதிகாரிகளின் பெயர் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த பொறுப்புகள் பற்றிய பாணரின் விளக்கங்கள் மிகவும் இன்றியமையாதன. தொடர்பு விட்டுப் போய்ப் புதிராக விளங்கும் இடங்களை ஓரளவு நிறைவு செய்வதற்கு ஏற்ற அளவில் ஹர்ஷரின் நிர்வாக முறைகள் பற்றிய போதுமான செய்திகள் கிடைத்துள்ளன. அவற்றில் சில அரசாங்கப் பிரிவுகளையும், அதிகாரிகளையும் நன்கு விளக்குகின்றன. நமக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டும் குறிப்பாக அறியப்படுகின்ற நியாயமான முடிவுகளைக் கொண்டும் ஹர்ஷரின் காலத்தில் நிலவி வந்த அரசு நிர்வாக அமைப்புகளைக் காண்போம்.

### அமைச்சரவை

அரசர் மட்டும் தனியே ஆட்சி செலுத்த முடியாது. எனவே, அரசர்க்கு உதவ அமைச்சர்களும் பல்வேறு துறைச் செயலாளர்களும் இருந்தனர். ஹர்ஷரின் வரலாற்றைத் துவக்கும் சில சான்றுகள் அமைச்சர் அவையை 'மந்திரி பரிஷத்' எனக் குறிப்பிடுகின்றன. இன்னும் சிலவற்றில் மந்திரின், சச்சிவா, அமாத்தியா என அமைசர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். அமைச்சர்களைக் குறிக்கும் இச் சொற்களைத் தவிர காமந்தகியா என்ற சொல்லும் அமைச்சர்களைக் குறிக்க வழங்கியது. அமைச்சரவையின் எண்ணிக்கையும் எட்டிலிருந்து இருபது வரை நாட்டின் தேவைக்கேற்ப மாறுபட்டது.

தானே தனி ஒருவனாக இருந்து ஆட்சி செலுத்துபவனை மனு 'முட்டாள்' எனவும், அதற்கு இத் தகுதியற்றவன் என்றும் குறிப்பிடுகிறார். 'மனு' வின் நூலுக்கு விளக்கம் அளித்த காமாந்தகா அமைச்சர்களின் எண்ணிக்கை 12 அல்லது 16 அல்லது 20 ஆக இருக்கலாம் என விளக்கினர். அமைச்சர்கள் இன்றியமையாதவர்கள் என்று கருதிச் சாதாரணமான பணிகளைக்கூடத் தனி மனிதர் மேற்கொண்டால் கடினமாகத் தோற்றமளிக்கிறது என்று கூறி அப்படியிருக்கையில் அரசாங்கத்தை மட்டும் அமைச்சர்களின் உதவியும் கூட்டுறவுமில்லாமல் ஏன் நடத்த வேண்டும் என்று மனு வினவினர். அமைச்சர்கள் இன்றியமையாதவர்கள் என்பதனைக் கௌடில்யரும் எடுத்துரைக்கின்றார். ஒரே சக்கரம் மட்டும் வண்டியை இழுத்துச் செல்ல முடியாது. அது போலவே பிறருடைய உதவியின்றி அரசை நடத்த முடியாது. எனவே, அமைச்சர்களுடைய நல்ல கருத்துகளின்படி நடந்தால்தான் அரசன் வெற்றி பெற முடியும் என்று அவர் குறிப்பிட்டு அரசை நடத்திச் செல்லுகின்ற கண்கள் என அமைச்சர்களைக் குறிப்பிட்டார்.

ஓர் அரசர் 47 சச்சிவாக்கள், 4 பிராமணர்கள், 8 க்ஷத்திரியர்கள், 21 வைசியர்கள், 3 சூத்திரர்கள் ஒரு தேரோட்டி (சூதர்) ஆகியோரைத் துணைக்கொள்ள வேண்டும் எனப் பாரதம் கூறுகிறது. அரசர் குறைந்தது மூன்று அமைச்சர்களைக் கொண்டிருக்க வேண்டும் எனப் புராணம் கூறுகிறது. அரசின் கொள்கைகளை அரசர் எட்டு அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்தல் இன்றியமையாதது எனவும் கூறுகிறது.

நல்ல செயலை மேற்கொண்டபோதிலும் சிறந்த ஆலோசகர்களின் அறிவுரைகளைக் கேட்டே அரசர் செயல்படவேண்டும். அரசன் வழக்குகளைக்கூடத் தனி ஒருவனாக விசாரித்துத் தீர்ப்பு வழங்கக் கூடாது எனவும், அதனை அமைச்சர்கள் ஆலோசகர்கள் உரை கேட்டே செய்ய வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. அத்தகைய உண்மை அரசர்களே சுவர்க்கத்திற்குச் செல்வார்கள் எனவும் நம்பப்பட்டது.

அரசின் செயல்கள் எவையும் ஒருபோதும் அரசன் எவ்வளவுதான் ஆட்சிக் கலையில் வல்லவனும், அறிந்தவனும் இருந்தாலும் தானே மேற்கொள்ளக் கூடாது எனவும், புத்தியுள்ள அரசன் எப்போதும் அமைச்சர்கள் அல்லது அதிகாரிகளின் கருத்துரையின்படி நடக்க வேண்டும் எனவும், தன்னுடைய எண்ணப்படி நடக்கக்கூடாது எனவும் சுக்கிர நீதி

குறிப்பிடுகிறது. அவ்வாறு இல்லாமல் தானாக அரசன் செயல் படும்போது அழிவிற்குத் திட்டமிட்டவனாகிவிடுகிறான். இதனால், அவன் அரசை இழப்பதோடு, குடிமக்களையும் இழந்துவிடு வதாகச் சுக்கிர நீதி குறிப்பிடுகிறது.

இவ்வாறாகப் பண்டைய நாள்தொட்டு அமைச்சர்கள், ஆலோசகர்கள் முதலானவர்கள் அரசனுக்கு இன்றியமை யாதவர்கள் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுவந்துள்ளது. இது வரை பார்த்த பண்டைய ஆதாரங்களின் கருத்தே தொடர்ந்து நீடித்து வந்துள்ளது என்பதில் ஐயமில்லை. அரசன் அவ்வாறு ஆன்றோர் உரை கேட்டு அதன்படி நடக்காது தன்னிச்சை யாகச் செயல்பட்டபோது, அரசனுடைய தலையைத் துண்டிக் கவும் மக்கள் தயங்கினார்கள் இல்லை. அரசர்கள் தர்மக் கோட் பாட்டினை வழியொற்றி நடக்க வேண்டும் என எதிர்பார்க்கப் பட்டமையால் நாட்டின் அற நூல்களில் குறிப்பிடப்படும் அறச் சட்டங்களைப் பின் பற்றி நடந்தார்களே யன்றி எதிராக ஒரு போதும் செயல்படத் துணிந்ததில்லை.

குடிமக்களுக்கு மன்னர்கள் பொறுப்புடையவர்களாக விளங் கினர். அவர்களில் எவரும் அதை மீறத் துணிவு பெற்றதில்லை. ஆக, சட்டத்தின் ஆட்சி நடைபெற்றது. குப்தர்களுடைய ஆட்சியைப் போன்று சட்டத்தின் ஆட்சி எளியவர், ஆதர வற்றவர், தவ முனிவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின்பால் அன்பு செலுத்திய ஆட்சியாகவே ஹர்ஷரின் ஆட்சியும் விளங்கியது.

ஹர்ஷரின் காலத்தில் இருந்த 'மந்திரி பரிசாதத்தின் இயல்பு, அமைப்பு, அதிகாரங்கள், செயல்கள் குறித்து அறிய இயல வில்லை என்றபோதிலும் அரசர்கள் தமக்கென ஆலோசர்களை யும், அமைச்சர்களையும் கொண்டிருந்தனர் என்பதனை அக்காலச் சான்றுகள் வாயிலாக அறியலாம். 'பரிசாத' என்ற சொல் பல இடங்களிலும் வரலாற்று ஆதாரங்களில் அக் காலத்தில் காணப் பட்டது. 'பரிசாத' என்பதன் நேரடியான பொருளைத் தெரிந்து கொள்ள இயலவில்லை எனினும் இது ஒருவகையான 'குழு' என்பது தெரிகிறது. ஹர்ஷர் தம் நாடகங்களிலேயே அதைக் குறிப்பிட்டுள்ளார்.

யு.என். கோஷல் என்ற வரலாற்றறிஞர் ஹர்ஷரின் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் கன்னோசியில் பெரிய அல்லது சற்றுச் சிறிய மாநிலங்கள் இருந்திருக்கவேண்டும் எனக் கருதுகிறார். இவ்வாறு அவர் கருத்துக் கொள்ளக் காரணம் யுவாங் சுவாங்கின் பயணக்குறிப்புகளை மொழி பெயர்த்த வாட்டர்ஸ அந் நூலில்

அளித்துள்ள விளக்கமே ஆகும். வாட்டர்ஸ் தம் மொழி பெயர்ப்பில் ஸ்டேட்ஸ்மென் (States men) என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அவருடைய மொழிபெயர்ப்பில் 'மினிஸ்டர் ஆப் ஸ்டேட்' என்ற சொல்லும் காணப்படுகிறது.

கன்னேசியின் ஸ்டேட்ஸ்மென் பாணி அல்லது வாணி என்ற தலைவர் ஹர்ஷ வர்த்தனரை அரசராகும்படி வேண்டிக் கொண்டார் என்பதும், 'மினிஸ்டர் ஆப் ஸ்டேட்' பதவியினை வகித்தோர் ஹர்ஷரை வாரிசு பொறுப்பு ஏற்க வற்புறுத்தினர் என்பதும் வாட்டர்ஸின் விளக்கங்களில் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் மேலே கூறப்பட்ட கருத்துகளை யு. என். கோஷல் உருவாக்கியது தவறு என்பதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம்.

இனி யுவாங் சுவாங் பயன்படுத்தியுள்ள சொற்கள் யாவை என்று காண்போம். சீன மொழியில் லியோ-ஷு (Liao Shu), பூ சென்-சி-சி எனப் பெயர் கொண்ட இருவகையான அமைச்சர்களை யுவாங் சுவாங் குறிப்பிட்டார். இச் சொற்களுக்குச் சரியான சொற்கள் ஆங்கிலத்திலும் இல்லை. எனவே, சீன மொழியில் அவர் குறித்துள்ள சொற்கள்கூட இந்தியாவில் அன்று நிலவியதைச் சரியாகக் குறிப்பிட்டனவா என்பதே ஐயத்திற்கிடம் அளிப்பதாக உள்ளது.

நாம் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்ட ஸ்டேட்ஸ் மென், மினிஸ்டர் ஆப் ஸ்டேட் முதலானவற்றிற்கான பொருள் என்ன என்று காண்போம். முதலாவது 'ஸ்டேட்ஸ் மென்' என்பதனைக் காண்போம். ஸ்டேட்ஸ்மென் என்ற ஆங்கிலச் சொல் அதிகாரிகள் (Officers), பணியாளர்கள் (Subordinates), உடன்பணியாற்றுபவர்கள் (Colleagues), அரசியல் வல்லுநர் அல்லது இராஜதந்திரி (Diplamat) என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட 'மினிஸ்டர் ஆப் ஸ்டேட்' என்ற சொல் 'அமைச்சர்கள்' (Ministers) அலுவலர்கள் (Officers) அரசு பணிப் பொறுப்பாளர்கள் (Men in charge of affairs) முதலிய பொருள்களைக் கொண்டுள்ளது. தேவ ஹூட்டி என்னும் வரலாற்று ஆசிரியர், ஹர்ஷரின் அரசியல் வரலாற்றினை ஆராய்ந்தபோது ஸ்டேட்ஸ்மென் என்ற சொல் சாமந்தர்களையும், மினிஸ்டர் ஆப் ஸ்டேட் என்ற சொல் அமைச்சர்களையும் குறிப்பிட்டிருக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

கன்னேசி ஸ்டேட்ஸ்மென் அல்லது லியாயோஷு என்ற சொற்றொடர் சாமந்தர்களைத்தான் குறித்ததா எனக் காண்போம்.

ஹர்ஷரின் காலத்தில் சாமந்தர்கள் அரசவையில் ஒரு சிறப்பான பங்கு வகித்தனர். அரசர் இன்றியமையாத நேரங்களில் அவர்களுடைய அறிவுரையை நாடிப் பெற்றார். அரசர் அவர்களுடைய சொற்களை மீறுவதில்லை என ஹர்ஷ சரிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசர் துன்பமடைந்தபோது அத் துன்பம் நீங்கி நலம் பெற ஆர்வத்துடன் விழைந்தவர்களாகவும், வேறு சமயங்களில் அரசவைப் பிரதிநிதிகளாகவும் அவர்கள் விளங்கினர் எனப் பாணர் கூறுகிறார்.

சாமந்தர்கள் நிருவாக அலுவலர்களாகவும் விளங்கினர் என்பதனை ஹர்ஷரின் செப்பேடுகள் எடுத்துக் காட்டுகின்றன. சாமந்தர்கள் மன்னருடன் கலந்து ஆலோசனை நடத்தியும், நிருவாகப் பொறுப்பினை மேற்கொண்டவர்களாயும் நீடிக்கும் வழக்கம் ஹர்ஷரின் காலத்தில் காணப்பட்டது எனலாம். சாமந்தர், மந்திரின் என்ற நிருவாகப் பதவிகளைப்பற்றிப் பட்டான் பட்டயங்கள் குறித்துள்ளன. அவை பிற்காலத்தவை. உதய சுந்தரி கதையில் அமைச்சர்களுக்கும், சாமந்தர்களுக்கும் உள்ள வேறுபாடு சுத்தாலாவினால்(Sudchala) தெளிவுபடுத்தப் படுகிறது. நல்ல அரசர் ஒருவர் அமைச்சர்களுடன் அரசியல் விஷயங்களைக் கலந்து ஆலோசிக்கவேண்டும் என்பதும், அரசர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதும் அவரால் விளக்கப்பட்டுள்ளன. எனவே, வெளி நாட்டைச் சேர்ந்த ஒருவர் இவற்றையெல்லாம் தெளிவாகப் புரிந்து தம் தாய்மொழியில் குறிப்பிடல் என்பதிலுள்ள இடையூறுகளை நாம் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

அமைச்சரவையின் உறுப்பினர்கள் போர், வருவாய், பொது நலம் முதலிய துறைகளில் தலைவர்களாய் விளங்கினர். பிரபாகர வர்த்தனரைக் காட்டிலும் வயதில் மூத்தவரான சிம்மநாடர் தம் இளமைக் காலத்திலேயே சேனாதிபதி என்ற பட்டத்தைப் பெற்றுச் சிறப்புடன் விளங்கினாலும் பின்னாளில் தம் வயது, பயிற்சி முதலியவற்றினால் அமைச்சர் அவையில் கருத்துரை வழங்கும் பொறுப்பினை ஏற்றிருந்தார். அமைச்சரவையின் குறிப்பிட்ட துறைக்கு அமைச்சர்களாக விளங்கினாலும், போர்த் திறனும் பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. குப்தர்களின் காலத்தில் காணப்பட்ட நிலையே ஹர்ஷரின் காலத்திலும் நீடித்ததை இது காட்டுகிறது.

அமைச்சர்கள் பல்வேறு வகையான பணிகளையும் மேற்கொண்டிருந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் பண்டி. ஹர்ஷருடைய படையினைப் பல்வேறு சமயங்களில்

Mrs. V. INDRA BHAVANI M.A.
Sel. Gr. Lecturer in Tamil
Sri Parasakthi College for Women

பண்டி தலைமை வகித்து நடத்திச் சென்றார் என்பது நாம் அறிந்தே. பண்டி அரச குடும்பத்திற்கு மிக நெருங்கியவர். போர்த் திறமையும் மிக்கவராக விளங்கினர். அமைச்சர் குழுவிலும் பண்டி சிறப்பான பங்கு வகித்தார். யுவாங் சுவாங் தம் குறிப்புகளில் பண்டியைப் பெரிய அமைச்சர் எனக் குறிப்பிட்டுள்ளார். அமைச்சர்களில் ஆற்றல் மிக்கவர்கள் செலவாக்குடையோராகத் திகழ்ந்தனர்.

பண்டி அதிகாரம், புகழ் முதலியன பெற்றவராக விளங்கியதால் அவர் கருத்துகளுக்கு மதிப்பு இருந்தது. அதற்கு எடுத்துக்காட்டு கிரக வர்மனுக்குப் பின்னர்க் கன்னோசியின் அரசு பொறுப்பை ஹர்ஷரே ஏற்கவேண்டும் என முடிவு செய்தவர் பண்டியே. அவ்வாறு அவர் அறிவித்த முடிவினை அமைச்சரவையினர் ஏற்றுக்கொண்டனர். இருப்பினும் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். என்ன பதவியினைப் பண்டி வகித்தார் எனத் தெளிவாக விளக்க இயலாது என்பதே அது. பண்டி அமைச்சர் அல்லது 'மகா பாலாதிக் கிரிதா' (Maha Baladhi krita) என்ற நிலையினைப் பெற்றிருந்தார் என்று கருதலாம்.

ஹர்ஷரின் காலத்தில் அவந்தி என்பவர் மகா சாந்தி விக்கிர அதிகிரிதா என்றும் பதவி வகித்தார். அவர் படைகளை நடத்திச் செல்வதில் வல்லவராய்த் திகழ்ந்தார். இப் பதவி ஏற்கெனவே குப்தர் காலத்திலும் வழக்கிலிருந்தது. சமுத்திர குப்தர் அவையில் சாந்தி விக்கிரகா என்னும் பதவி வகித்த ஹரிசேனர், குமார அமாத்தியா, மகாதண்டநாயகா முதலிய பட்டங்களைப் பெற்றிருந்தார். மகாதண்டநாயகா என்ற பட்டம் போர்த்திறனுக்காக வழங்கப்பட்டது எனலாம். நான்காவது விக்கிரமாதித்தியரின் கார்க்குடாரிக் பட்டயம் படைத் தலைவரைத் தண்டநாயகா என்று குறிக்கிறது. மகா சாந்தி விக்கிர அதிகிரிதா பதவி வகித்த அமைச்சர் அமைதி, போர் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பு வாய்ந்த அமைச்சராகவும் போர்ப் பயிற்சி பெற்றவராகவும் விளங்கினர்.

ஹர்ஷர் பல பட்டங்களையும் பொறுப்புகளையும் ஒருவருக்கே அளிக்கின்ற பழக்கத்தைக் கொண்டிருந்தார். எல்லாத் துறையிலும் சிறப்பாகச் செயலாற்ற இயலாத நிலையிலும் திறமை மிக்க சிலருக்குப் பதவிகள் பல அளிக்கப்பட்டன. ஹர்ஷரால் தூதகா மகா பரமதாரா, மகா சாமந்தா முதலான பல பட்டங்கள் அளிக்கப்பட்டன. பன்ஸ்கேராச் செப்பேட்டில் குறிப்பிடப்படும் ஸ்கந்த குப்தரும், ஹர்ஷ சரிதத்தில் பாணரால்

'கஜ-சதன் அதிகிருதா' என்ற பதவியினை வகித்தவராகக் குறிப்பிடப்படும் ஸ்கந்த குப்தரும் ஒருவரே எனத் தேவஹூட்டி கருதுகிறார். எனவே, பல பொறுப்புகளின் இயல்பினைப் பற்றி அமைச்சர்கள் முற்றிலும் அறிந்துகொள்ளாதவர்களாக இருப்பினும், பொறுப்பு மிக்க பதவிகளை வகித்தல் இயலக் கூடியதாய் இருத்தல் வேண்டும்.

இப்படி ஒருவரே இரு பதவிகளை வகித்துவருவாராயின் சிக்கல் ஒன்று எழலாம். இக் கேள்வியையும் எழுப்ப வாய்ப்பு உள்ளது. ஆட்சித்துறையும், படைப் பொறுப்புகளும் ஒருவரிடமே இருக்குமானால் போர்க் காலங்களில் எப்படி அலுவல்கள் நடைபெறும்? போர்க்காலங்களில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஆட்சித்துறைப் பொறுப்புகள் நிறுத்திவைக்கப்பட்டன அல்லது வேறொருவரிடம் அளிக்கப்பட்டன. இதனால் நிருவாகத் திறமை சிறிது பாதிக்கத்தான் செய்யும்.

அமாத்தியர்களுக்கு அளிக்கப்பட்ட கடமைகளும் அவர்கள் சமுதாயத்தில் பெற்றிருந்த சிறப்புத் தன்மையும் அவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் அமைச்சர் பதவி வகித்தனர் என்பதைக் காட்டுகின்றன. ஹர்ஷரின் கால நாடகங்களில் பிரதானமாத்தியாயா, அமாத்தியா முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. அவை முதல் அமைச்சர் அல்லது தலைமை அமைச்சரையும், அமைச்சர்களையும் குறிப்பிடக் கூடியனவாகும். பல்வேறு அரசியல் ஆட்சித்துறை அமைப்புகள் அப் பொருளில்தான் அதனைக் கையாண்டுள்ளன. நாகானந்தாவில் அமைச்சருக்கு அடுத்த நிலை பிரதான அமாத்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இரத்னவளி நாடகத்தில் முதல் அமைச்சர் மற்றைய அமைச்சர்கள் பற்றிய ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன. வலபியின் அரசர் முதலாவது துருவ சேனர், மகாசமந்தா, மகாபாரதிக்கிர, மகாதண்ட நாயகா, மகாகார்த்த கிருத்திகா, மகாராஜா முதலான ஐந்து பட்டங்களைக் கொண்டிருந்தார். அரசாங்கம் செம்மையாக இயங்கச் சாந்தி விக்கிரகா என்ற அமைதியும் 'போர்த்துறைகளின் செம்மையான பணியுமே அடிப்படையாகும்.

அந்த இரண்டு பணிகளையும் செய்தவர் அலகாபாத் பட்டயத்தில் சாந்திவிக்கிரகிகா என்று குறிப்பிடப்பட்டுள்ளார். குப்தர்களின் காலத்திற்கு முன்னால் சாந்திவிக்கிரகிகா என்னும் பதவி இருந்ததாகத் தெரியவில்லை. குப்தர்கள் காலத்தில் அப் பதவியைத் தோற்றுவித்தனர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில்

அப் பதவி பெருமையின் சின்னமாகவும் கருதப்பட்டது. அவந்தி மகாசந்தி விக்கிரஹாதி காராதிபதி, மகாசந்தி விக்கிரஹாதிகிருதா என்ற பெயர்களால் அழைக்கப்பட்ட அவந்தி மிகவும் பொறுப்புடைய பதவி வகித்தார் என்பதை ஹர்ஷர் சூள் உரைத்த போது அவருக்கு அருகில் நின்றதும், அவரிடம் ஹர்ஷர் தம் ஆணையினைச் செதுக்குமாறு சொன்னதும் எடுத்துக்காட்டு கின்றன. ஹர்ஷரின் நாடகங்களிருந்து அமைதி, போர் தொடர்பானவற்றில் ஹர்ஷர் ஆலோசனை கலந்தார் என அறிகிறோம். அமைச்சர் அல்லது அமாத்தியா பதவி வகித்த ருமன்வந்த் என்பவரை ஹர்ஷர் அழைத்தார். அமாத்தியா பதவி தளபதி பதவியைவிட மதிப்பு வாய்ந்தது என அறிகிறோம்.

ருமன்வந்த் தளபதி விஜய சேனருடன் வந்தபோது அரச அமாத்தியாயரை அமரச் சொன்னர். ஆனால், விஜய சேனர் நின்று கொண்டிருந்தார். அமாத்தியாயர் தளபதியை ஹர்ஷருக்கு அறிமுகப்படுத்தியவுடன் தளபதி வணக்கம் தெரிவித்தார். அதன் பின்னர் அவரையும் அமரச் சொன்னர். பாணர் வாயிலாக அரசருக்கு அடுத்த நிலையினைத் தலைமை அமைச்சர் பெற்றிருந்ததையும், மிகவும் மதிப்பு வாய்ந்த மனிதராக அவர் விளங்கியதையும், அவருடைய அறிவுரைகள் பணிந்து கேட்கப்பெற்றுப் பின் பற்றப்பட்டன என்பதையும் அறிகிறோம். இளவரசன் சந்திர பீடனின் முடிசூட்டு விழாவின்போது தலைமை அமைச்சர் சுகநாசர் இளவரசருக்கு உரை ஒன்று ஆற்றினர். அந்த உரை சிறந்த அறிவுரையாகவும், வழிகாட்டும் கருத்துரையாகவும் விளங்கியது. அவ்வாறு அறிவுரை வழங்கியபோது எந்த எந்த தீமைகள் தலைதூக்கும் என்பதையும் அவற்றை எப்படி நசுக்க வேண்டும் என்பதையும் எச்சரிக்கையுடன் தெரிவித்தார். சுகநாசர் அரசு விவகாரங்களிலும், ஆட்சிக்கலையிலும் வல்லவராக விளங்கினர். அமைச்சர்கள் அறிவுடையோராயும், கற்றறிந்தோராயும் விளங்கினர் என்பதற்குச் சுகநாசர் எடுத்துக்காட்டாவார். அவர் ஸ்ருதிகள், ஸ்மிருதிகள், தர்ம சாத்திரம் முதலியவற்றில் தேர்ந்தவராக விளங்கினர்.

ஹர்ஷ வர்த்தனர் அரசராவதற்கு முயற்சி மேற்கொண்டவர்களில் பண்டி குறிப்பிடத் தகுந்தவராவரர். அமைச்சர்களுடைய ஆலோசனையும் ஒருவரை அரசராக்குவதற்கு இன்றியமையாதது என்பதனை இது காட்டுகிறது. ஒவ்வொர் அமைச்சரும் துணிவுடனும், தெளிவுடனும் அச்சமின்றித் தம் கருத்தினை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

## ஆட்சித்துறைப் பிரிவுகள்

### செயலகம்

தலைநகரத்தில் நன்கு ஒருமுகப்படுத்தப்பட்ட செயலகம் இருந்தது. போர், அயல் நாட்டு உறவுகள் முதலானவற்றைக் கண்காணிக்க அமைச்சர்கள் இருந்தனர். அதுபோலவே பல்வேறு அதிகாரிகளும் இருந்தனர். தலைநகரத்தில் பதிவேடுகளைப் பாதுகாப்பதற்கெனத் தனி அதிகாரிகள் இருந்தனர். மதுபென் பட்டயத்தில் பதிவேடுகளின் பாதுகாவலர் சாமந்த மகாராஜா, ஈஸ்வர குப்தர் என அழைக்கப்பட்டுள்ளார். பன்ஸ்கேராப் பட்டயத்தில் பதிவேடுகளின் பாதுகாவலர் 'பானு' என அழைக்கப்பட்டுள்ளார்.

### பிரிவுகள்

நாடு பொதுவாகத் தேசம், இராஜ்ஜியம், இராஷ்டிரம் என அறியப்பட்டது. ஹர்ஷர் இரத்னுவளியிலும், நாகாநந்தாவிலும் நாடு என்பதை இராஜ்யம் என்று குறிப்பிட்டுள்ளார். பாணர் பாரசீக நாட்டைக் குறிப்பிடுகையில் பாரசீகதேசம் என்று குறிப்பிட்டார். நாடு முழுமையும் தேசம் எனவும், நாட்டின் ஒரு பகுதி ஜனபாதம் எனவும், அதன் தலைநகர்ப் பகுதி ஜனபாத விசேஷம் எனவும் அழைக்கப்பட்டன. மண்டலம் என்பதற்குச் சமமாகத் தேசம் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது என அறிஞர் ஃபிளீட் குறிப்பிட்டது நாம் ஆராய்கின்ற இக் காலத்திற்குப் பொருந்தாது.

ஆட்சி வசதியின்பொருட்டு நாடு புக்திகள், விஷயங்கள், பதக்குகள், கிராமங்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு நாட்டை அமைச்சர் குழுவினரோ, அரசரோ நேரடியாக அரசோச்சுகையில், அரசருக்கு நேரடியாகத் தொடர்புடைய மாநில ஆளுநர்களின் பொறுப்பில் புக்திகள் விடப்பட்டன. ஹர்ஷரின் பேரரசு பல்வேறு புக்திகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததையும் அகிச்சத்திராவும், சிரவஸ்தியும் ஹர்ஷரின் பேரரசில் அடங்கிய இரண்டு புக்திகள் என்பதையும் அவருடைய மதுபென், பன்ஸ்கேராப் பட்டயங்கள் வாயிலாக அறிகிறோம்.

புக்திகள் பல விஷயங்களாகப் பிரிக்கப்பட்டன. டாக்டர் திரிபாதி விஷயம் என்பதனை மாவட்டம் என்பதற்குச் சமமான ஒன்றாகக் கருதுகிறார். விஷயத்தின் ஆட்சியினை நிருவகித்தவர் விஷயபதி ஆவார். விஷயபதியினுடைய பெயர் ஹர்ஷரின்

பட்டயங்களில் மட்டுமன்றி வேறுபல அக் காலத்திய பட்டயங்களிலும் காணப்படுகின்றன. விஷயங்கள் பதக்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கலாம். அவை விஷயங்களுக்கும் கிராமங்களுக்கும் இடைப்பட்டவை. பதக்குகளுக்கும், கிராமங்களுக்கும் இடைப்பட்டவை. பதக்குகளுக்கும், கிராமங்களுக்கும் இடையே சிறிய பிரிவுகள் ஏதும் இருந்தனவா எனத் தெரியவில்லை.

ஹர்ஷரின் காலத்திலும் மற்றைய காலங்களைப் போலக் கிராமமே அடிப்படை ஆட்சிப் பிரிவாக விளங்கியது. கிராமங்கள் சுயாட்சி பெற்றுத் தம் கடமைகளையும் பொறுப்புகளையும் தாமே நிறைவேற்றிக்கொண்டன. அரசு வருவாய், வரிவிதித்தல் முதலியவற்றில் மட்டும் பொறுப்புடையனவாகத் திகழ்ந்தன. கிராமங்கள் கிராம கட்ச பாடலிகா எனப்படும் கிராமத் தலைவரின் கீழ் இயங்கின. பும்ரா கல்தூண் பட்டயத்தில் கிராமத் தலைவர் கிராமிகா என அழைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹர்ஷர் தமது ஆணைகளை வெளியிட்டபோது அதிகாரிகளை எவ்வாறு வரிசைப்படுத்தி அறிவித்தார் என்பதனைப் பன்கேராப் பட்டயங்களிலிருந்து அறியலாம். 'மகாசாமந்தா, மகாராஜா என்ற பட்டம் கொண்ட சாமந்தாக்கள், தௌசாத நிகர்கள், தூதர்கள், இராஜஸ்தன்யர்கள் குமாரமாத்யாக்கள், உபாரிகாக்கள், மகாதாராக்கள், விஷபபதிகள், பட்டா, சட்டா, சேவகா, போகிகர்கள், கிராம கட்ச பாடலிகாக்கள்' எனச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளனர். மகாபிரதிகாரர்கள், மகாபிரதிகாரிகள் என்போர் வாயில் காப்போராகப் பணிபுரிந்தனர். ஆண்களும், பெண்களும் அப் பணிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்குக் கீழே பிரதிகாரர்களும், பிரதிகாரிகளும் இருந்தனர். அஞ்சல் கொண்டு செல்வோர் தீர்க்கத்வாகா, லேகஹாரகா என அழைக்கப்பட்டனர். காவலர்களைக் கொண்டு இரவில் காவல் பணியை ஹர்ஷர் எவ்வாறு மேற்கொண்டார் என்பதைக் குறித்த விளக்கத்தைப் பாணர் அளிக்கிறார். இரவில் காவல் காக்கும் அணியில் பெண்டிரும் பங்கு கொண்டனர். இரவில் காவல் காக்கும் பெண்டிரின் ஓசை கேட்டு காதலர் விழித்தெழுந்தனர் எனப் பாணர் குறிப்பிடுகிறார். இரகசியப் போலீஸ் பிரிவினர் சர்வகதாக்கள் எனப்பட்டனர்.

'குமார அமாத்தியா' என்ற பட்டங்களைக் கொண்டவர்கள் யார்? அவர்கள் என்ன பொறுப்பினை வகித்தனர் எனக் காண்போம். அப் பட்டங்களை வகித்தவர்கள் சில நிருவாகப்

பொறுப்புகளையும் கவனித்துவந்தனர். 'குமார' என்பதற்கு 'இளவரசன்' அல்லது 'சிறுவன்' எனவும், 'அமாத்தியா' என்பதற்கு அமைச்சர் எனவும் பொருள் கொண்டு அது இளவரசனின் ஆலோசகர் என்பதைக் குறித்து வழங்கிவந்ததாகக் கருதப்பட்டது. அரசர் இளையோனுயிருக்கையில் பணி செய்தவர் எனவும் கருதப்பட்டது. குமார அமாத்தியா பட்டங்களைக் கொண்டவர்கள் இளவரசர்களே எனவும், அவர்கள் உயர் குடியினர், குழுவின் உறுப்பினர்கள் எனவும் கருதப்படுகிறது. அரசர்கள் வேண்டிய வேளைகளில் அக் குழுவின் கருத்துரைகளைப் பெற்றனர் என்பதோடு அவர்கள் உயர் குடியினர், குழு உறுப்பினர்கள் என்ற கருத்தும் உள்ளது.

அரசர் ஆட்சி செலுத்தியபோதும் கருத்துரை வழங்கி வந்தார் என்று காட்டச் சான்றுகள் உள்ளன. எனவே, இளையோனுயிருக்கையில் அவர்கள் இளவரசனின் ஆலோசகர்களாக விளங்கினர் என்ற கருத்தினை மறுத்து உரைக்க வேண்டியுள்ளது. குமார அமாத்தியா என்ற சொல் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் 'அமாத்தியா' பொறுப்புகளை வகித்துவந்த வேளையில் கருதப்பட்டது. அச் சொல் இளவரசர்களையும், அரசக் குடும்பத்தவரையும் மட்டுமன்றி, உயர்நிலையிலிருந்த அமைச்சர்களையும் சுட்டிக் காட்டப் பயன் பட்டது. இளவரசர் அப் பதவியை வகித்தமையால் குமார அமாத்தியா எனப்பட்டார். காலப் போக்கில் அச் சொல் யாரைக் குறித்ததோ அது மறைந்து அப் பதவி வகித்த சாதாரண மானவர்களைக் குறிக்கலாயிற்று.

அமாத்தியா எனப்பட்டவர் உயர்அதிகாரிகள் வரிசையைச் சார்ந்தவர்கள் அல்லர் எனலாம். அமாத்தியா என்ற சொல் ஹர்ஷரின் காலத்தில் உயர் அதிகாரிகளைக் குறிக்கவில்லை. ஆனால், மௌரியர் காலத்திலும், சாதவாகனர் காலத்திலும் அமாத்தியர்கள் உயர்அதிகாரிகளாக விளங்கினர் என்பதையும், அவர்களிலிருந்தே அமைச்சர்கள் தெரிவுசெய்யப்பட்டனர் என்பதையும் ஈண்டு அறிதல் வேண்டும். அமாத்தியா என்பது கௌரவப் பட்டமே என்று கருதப்படுகிறது. குமார அமாத்தியாக்கள் அவர்களுக்கெனக் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் அதிகாரிகளாகவும் பணிபுரிந்தனர் எனச் செப்பேடுகள் அறிவிக்கின்றன. 'உபாரிகா' எனப்பட்டோர் குமார அமாத்தியாக்களின் கீழ்ப் பணியாற்றினர். மகாதண்ட நாயகர்களின் கீழ் அதிகாரிகளாகக் குமார அமாத்தியாக்கள் பணிபுரிந்தனர். மகா பல அதிகரிதாக்களுக்கும் கீழ் அதிகாரிகளாகவே குமார அமாத்

தியாக்கள் பணியாற்றினர். முதலாவது குமார குப்தரின் அமைச்சர் பிரிதிவி சேனர் முதலில் குமார அமாத்தியாவாகப் பணிபுரிந்து பின்னர்ச் சிறப்பான அவர்தம் சேவையினால் மகா பல அதிகரிதாப் பதவிக்கு உயர்த்தப்பட்டார் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. மகா பல அதிகரிதாப் பதவியினை வகித்த பிரிதிவி சேனர் மகா சாந்தி விக்ரகிகா என்ற அமைச்சர் பதவியினையும் வகித்தார்.

குமார அமாத்தியாக்களை ஆங்கிலேயரின் காலத்தில் நிருவாகப் பொறுப்பு வகித்த இண்டியன் சிவில் சர்விஸ் (ஐ. சி. எஸ்.) அதிகாரிகளுடன் அல்டேகர் ஒப்பிடுகிறார். அவர்கள் நிருவாகம் செய்தவை மாநில, மைய அரசின் செயலகங்களும், மாவட்டங்களும் ஆகும். சில வேளைகளில் அரசாங்கத்தின் அங்கத்தினராகவும் அவர்கள் இருப்பதுண்டு. அமைச்சர் களாகவும் தளபதிகளாகவும் கூட ஆங்கிலேயர்களால் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். குப்தர்களின் கால நிலைக்குப் பொருந்து வதுபோல ஹர்ஷரின் கால நிலைக்கும் இது பொருந்தும். நாம் முன்னர்க் கண்ட பிரிதிவி சேனர் மற்ற உயர் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டபோதிலும், குமார அமாத்தியா பதவியைக் கைவிடவில்லை. பல உயர் பதவிகள் குமார அமாத்தியாக் களுக்கே அளிக்கப்பட்டிருப்பதால் அப் பதவி வகித்தவர்கள் திறமை மிக்கவர்கள் என அறியலாம்.

## பிற அதிகாரிகள்

ரகசி நியுக்தா என்ற தனிச்செயலாளர் பதவி வகித்தோரைப் பற்றிய செய்திகளைக் குப்தர் காலக் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். போர், படையெடுப்பு முதலியவைகளின் பொருட்டு அரசர் அடிக்கடி பயணம் மேற்கொள்ளும்போது அரசின் நிருவாகப் பணிகள் செவ்வனே நடைபெற ரகசி நியுக்தாக்களின் மூலம் கட்டளைகளைப் பிறப்பித்தனர். நிலக்கொடைகளைப் பற்றிக் கூறி அனுப்பப்பட்ட ஆணைகளை அதற்குரிய நிருவாகப் பிரிவினருக்கு அவர்கள் கொண்டு சென்றதாகவும் செப்பேடு களின் காணப்படுகிறது. அத்தகைய அலுவலரின் தேவைகள் ஹர்சரின் காலத்திலும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஹர்ஷர் தாம் பயணம் மேற்கொண்டபோது ஆணைகள் பலவற்றை அனுப்பினர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. பாணர் முதலா வது படையெடுப்பின்போது, அளித்த கொடை பற்றிய ஆணை களைக் குறிப்பிடுகிறார். யுவாங் சுவாங் பற்றிக் காமரூபத்தின் அரசருக்கு அனுப்பிய இரண்டு ஆணைகளைக் குறித்து ஏற்கெனவே கண்டோம். குப்தர் காலத்தில் இருந்ததைப் போல அரசரின்

ஆணைகளைக் கொண்டுசெல்லும் அதிகாரிகள் இருந்தனர் என்று பூர்க்கக் காமரூபத்தின் அரசர் பாஸ்கர வர்மனின் கல்வெட்டுச் சான்று துணைபுரிகிறது.

பிரதிஹாரா என்னும் அதிகாரிகள் அரசர் பயணம் செய்யும் போது உடன் சென்றனர் என்பதற்கு ஹர்ஷ சரிதத்தில் சான்றுகள் உள்ளன. பிரதிஹாரா என்னும் அதிகாரிகள் ஹர்ஷரின் காலத்திற்குப் பின்னர் தனிப் பங்கு வகித்தனர். மகா பிரதி ஹாரா நீதிமன்ற நிருவாகத்திற்கும், அரசவை நடவடிக்கைகளுக்கும் பொறுப்பான அதிகாரியாக விளங்கினர். பிரதி ஹாரர்கள் இருவகையாக, பாஹ்ய (மன்றத்திற்கு வெளியே), அந்தர (மன்றத்திற்கு உள்ளே) எனப் பிரித்துக் குறிப்பிடப்படுகின்றன. பல பிரதிஹாரர்களுக்குப் பொறுப்பாளராக விளங்கியவர் மகாபிரதிஹாரர் ஆவார். மஹாபிரதிஹாரர்களுக்குத் தலைவராக விளங்கியவர் தவாரிகா என்பவர். பாணரின் ஹர்ஷ சரிதம் தவிர வேறு எங்கும் தவாரிகா பதவியைப் பற்றிய செய்தி இல்லை. பிரதிஹாரர்கள், ஸ்கந்த வாரா என அழைக்கப்பட்ட அரசரின் வாழ்விடத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் நிருவகித்தனர். அரண்மனையின் உட்புறத்தில் அவரது பல்வேறு பகுதிகளையும் ஒழுங்குபடுத்திப பணிபுரியும் பிரதிஹாராகள் இருந்தனர்.

அரண்மனையின் உட்பகுதிகளில் பல பிரதிஹாரர்கள் பணி புரிந்தனர். பிரபாகர வர்த்தனர் நோய் வாய்ப்பட்டிருந்தபோது அவருடைய அறைக்குச் செல்பவர்கள் படிக்கட்டுகளைச் சப்தமின்றிக் கடந்து செல்வதைப் பிரதிஹாரர்கள் கவனித்துக் கொண்டனர். அரண்மனைப் பணியாளர்கள் என்ற தலைப்பில், சாமர கிரஹி என்ற சாமரம் தாங்குபவர்கள், கஞ்சுகி என்ற வயதான அந்தப்புரக் காவல் பொறுப்பாளர்கள், அங்க ரக்ஷகா என்ற மெய்க்காப்பாளர்கள், சிரோ ரக்ஷகா என்ற மெய்க் காப்பாளர் தலைவர்கள் முதலானோர் அரண்மனையில் பணிபுரிந்தனர் எனக் கண்டோம்.

அரசருடைய நிலக்கொடை ஆணைகளை உள்நாட்டு நிர்வாக அதிகாரிகளுக்குக் கொண்டு சென்றவர்கள் தூதகா என அழைக்கப்பட்டனர். தூதகா பொறுப்பினை வகித்தவர்கள் மகா சாமந்தா, மகாராஜா முதலிய பட்டங்களைப் பெற்றிருந்தனர் போலும். தூதகா என்ற பதவி அவ்வப்போது வேண்டிய நேரங்களில் உருவாக்கப்பட்ட ஒன்று. எந்த அதிகாரியும் அப் பணியினை மேற்கொள்ளுமாறு செய்யப்பட்டிருக்கலாம்.

ஹர்ஷர் விலங்குகளைக் காக்க அதிகாரிகளை நியமித்திருந்தார். பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்தவும், நல்லொழுக்கத்தைப் போதிக்கும் நாடகங்களை அரங்கேற்றுவதற்கும் பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

துறைத்தலைவர்கள் என்று கருதப்படும் அத்தியட்சர்கள் என்பவர்களைப் பற்றிப் பாணர் குறிப்பிடுகிறார். அந்தத் துறைகளின் தலைவர்களாக அவர்கள் விளங்கினர். டாக்டர் திரிபாதி அவர்களைத் துறைக் கண்காணிப்பாளர்களின் கீழிருந்த பணி அலுவலர்கள் எனக் குறிப்பிடுகிறார். நாம் இங்கும் ஒரு கருத்தினை மனத்தில் கொள்ளவேண்டும். ஆட்சி அதாவது அமைப்பு முழுவதுமே அரசன் (தர்மகர்த்தா) மக்களை மகிழ்வித்து நேர்வழியில் நடத்துபவன் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதே அதுவாகும். ஆட்சித் துறை இக் காலத்தைப்போல் அன்றைய நாளில் சிக்கலானதாகவோ, எழுதப்பட்டு நன்கு வரையறை செய்யப்பட்ட சட்டங்களைக் கொண்டதாகவோ இல்லை. எனவேதான் ஸ்ருதிகள், ஸ்மிருதிகள், தர்ம சாத்திரங்கள் வழிகாட்டிகளாக விளங்கின.

## நீதி நிர்வாகம்

ஹர்ஷரின் கால நீதி நிருவாகத்தை அறிய அக் கால மனு இலக்கியமான காத்யாயரின் குறிப்புகள் உதவுகின்றன. காத்யாயரின் காலம் கி. பி. 400-600 எனக் கருதப்படுகிறது. ஹர்ஷருக்கு முந்திய காலத்திலேயே இந்துமதச் சட்டமும், நீதி நிருவாக முறைகளும் வளர்ச்சிபெற்ற நிலையில் இருந்தன. ஹர்ஷரின் கால நீதித்துறை சந்திர குப்த மௌரியரின் காலத்தைப் போலவே எளிதாக இருந்தது.

சந்திர குப்த மௌரியரின் காலத்தில் அரசரே மக்களுக்கு நீதி வழங்கும் உயர் அதிகாரியாகவும், மக்களின் குறைகளை விசாரிக்கும் உயர்நீதி மன்றமாகவும் விளங்கினர். சட்டங்கள் புதிதாக உருவாக்கப்படுவதற்கு மாறாகப் பண்டைய இந்திய இலக்கிய மரபின்படி உருவாக்கப்பட்டன. நெடுங்காலப் பழக்க வழக்கங்களும், உழவர் வாணிகர், கலைவல்லுநர் ஆகியோரின் மரபுகளும், அவையில் கற்றோர் அளித்த கருத்துகளும், பகுத்தறிவும் சட்டமியற்றுவதற்கு அடிப்படையாயின.

அரசர் அல்லது உயர்நீதிபதி தம்மிச்சையாகத் தீர்ப்பு வழங்க இயலாது. இன்றைய நாளில் எப்படிக் குற்றவியல்

சட்டத் தொகுப்பு (IPC) முதலியவற்றின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குகிறார்களோ அதுபோலத் தர்ம சாத்திரங்களில் விதிக்கப்பட்ட சட்ட திட்டங்களின்படி அன்றைய நாளின் தீர்ப்பு வழங்கப்பட்டது. அவை கிடைக்கப் பெறுவிடில் நாட்டில் வழக்கத்திலிருந்துவரும் பொதுவான பழக்கங்களை அடிப்படையாகக் கொள்ளவேண்டும். அரசர் ஏற்கெனவே வழக்கில் வழங்கிவரும் வழக்கங்களுக்கு மாறாகத் தம் இச்சைப்படி தீர்ப்பு வழங்கக் கூடாது எனவும், அப்படிச் செய்ய நேரிட்டால் அது வேறு வழியில்லாமையால் செய்யக்கூடிய கடைசி முடிவாக இருக்க வேண்டும் எனவும் காத்தியாயனர் உரைக்கிறார். பழக்க வழக்கங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில், ஆனால் சாத்திரத்தில் கூறப்பட்டபடி தர்மத்தின் விளைவான நல்லவை அழியும்படி தீர்ப்புகள் வழங்குதல் தவறு எனப் பிரகஸ்பதி கூறுவதால், தர்ம சாஸ்திரத்தில் கூறப்படாத நிலையில் நீதி நிருவாகம் அன்றாடப் பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்தது எனத் தெரிகிறது.

நீதி மன்றத்திற்குத் தர்மஸ்தான, தர்ம ஆசன என்ற பெயர்கள் காணப்பட்டன. குப்தர் காலத்திலும் ஹர்ஷர் காலத்திலும் நீதி மன்றத்துக்கு அதிகரண, அல்லது தர்மாதிகரண என்ற பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. வழக்கின் உண்மையை அதாவது வழக்குத் தோன்றியதற்கான காரணத்தைப் புனிதச் சட்டக் கோட்பாட்டின்படி ஆராயும் இடம் எனக் காத்தியாயன அதனைக் கூறுகிறது. ஹர்ஷர் காலத்தில் நீதிபதிகள் பிரத் விவாக (Prad-Vivaka), அல்லது தர்மாதிகாரின் அல்லது தர்மத் யக்ஷகா என வழங்கப்பட்டுவந்தனர். 'அக்ஷகக்ஷகா' என்பதும் 'பிறத் விவாக்'களுக்கு வழங்கப்பட்டுவந்த மற்றொரு பெயராகும். நீதிபதிகள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்குப் பண்டைய நூல்கள் விளக்கம் அளிக்கின்றன. நீதிபதி தன்னடக்கம் மிக்கவராயும், நற்குடியில் பிறந்தவராயும், நடுவுநிலைமை தவறாதவராயும், பண்புள்ளவராயும் நிலையான கருத்தைக் கொண்டவராயும் மறு உலகைப் பற்றிய அச்சம் இல்லாதவராயும், சமயப் பற்றுள்ளவராயும், அயராது உழைப்பவராயும் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

தலைநகரில் அமைக்கப்பட்டு அரசர் அல்லது தலைமை நீதிபதியால் நிருவகிக்கப்படும் நீதிமன்றங்களைத் தவிர அரசரின் முத்திரையுடன் நடைபெற்ற மற்றொரு வகையான நீதிமன்றங்களும் இருந்தன. நகரங்களிலும் கிராமங்களிலும் இயங்கும் நீதிமன்றங்கள் இருந்தன. பழங்கால இந்தியச் சட்டத்தில் வியவ

காரா என்ற சொல் ஸ்மிருதி, சூத்திரா முதலியவற்றில், கொடுக்கல் வாங்கல் பற்றிய தொடர்பினை அல்லது சிக்கலை அல்லது வழக்கைக் சட்டப்படி தொடுத்துக்கொள்ளும் உரிமை, பிரச்சினைகளுக்கு முடிவு காணும் வழி முதலியவற்றைக் குறிப் பிடும் பொருளில் பயன்படுத்தப்பட்டது.

காத்யாயனர் அச் சொல்லுக்கு ஐயப்பாடுகளைக் தீர்ப்பது, வழக்கு என இரண்டு பொருள் அளிக்கின்றார். வியவகாரபதா என்பது வழக்கின் கருப்பொருள் எனப் பொருள்படும். இவை ஊரியல் வழக்குகள், குற்றவியல் வழக்குகள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டபோதிலும் இவ் விரண்டு வகையான வழக்கு களுக்கும் ஒரே நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டன. தர்மம், சட்டபூர்வ அதிகாரம், வழங்கும் முறைகள், அரச கட்டளை என்ற நான்கு பாதங்களைக் கொண்டது வியவகாரா எனக் கூறப்படு கிறது. சிலர் அதனை வழக்கு, பதில், ஆதாரம், முடிவு என்று கூறுகின்றனர். இவ்வாறு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ள ஒவ்வொன்றும் மேலும் இருவகைப்படுகின்றது.

முதலாவதான தர்மத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவானது ஒரு குற்றத்தைச் செய்தவர் அக் குற்றத்தைத் தாம் செய்ததாக ஒப்புக்கொண்ட நிலையில் உள்ளது எனவும், சோதனை செய்து முடிவு கண்ட நிலையில் எடுக்கப்பட்டது எனவும் இரு வகைப்படும்.

இரண்டாவதான 'வியவகாரம்' எழுத்துச் சான்றுகளும், வாக்கு மூலமும், சட்டபூர்வ ஆதாரம் பெறும் நிலையில் உள்ளது எனவும், நீதி வேண்டுபவரின் பொய்யான பேச்சுகள் கண்டு பிடிக்கப்பட்டு அவருக்கு எதிரான முடிவெடுக்கும் நிலையில் உள்ளது எனவும் இருவகைப்படும்.

மூன்றாவதான 'வழங்கும் முறை', அனுமானமாக நம்பப் படும் நிலையில் உள்ளன எனவும், வேதம் ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றுக் கொள்ளாததாக வட்டார, கிராம அல்லது குடும்பப் பழக்க வழக்கங்களைப் பொறுத்த நிலையில் உள்ளன எனவும் இருவகையாகப் பிரிக்கப்பட்டது. மேலே கூறப்பட்ட மூன்று பாதங்கள் எதனாலும் தீர்வு காண முடியாத நிலையில் இறுதிக் கட்டத்தில் பயன் படுத்தப்படும் அரச கட்டளை அல்லது ராஜசாசனம் வேதத்திற்கு விரோதமானதாக இல்லாத தாகவும், பழக்கங்களுக்கு முரண்பாடு அற்றதாகவும் விளங்க வேண்டும். மேலே கூறப்பட்ட ஒவ்வொரு பிரிவிலும் இரண்டா வதாகக் கூறப்பட்ட முறைகள் பின்பற்றப்படும்போது அதற்கு

முன்னதாகக் குறிப்பிடப்பட்ட முறைகள் பொருளற்றதாகப் போகின்றன எனினும் அவை வழக்குகள் சிலவற்றிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகக் காத்தியாயனர் குறிப்பிட்டார்.

சட்டபூர்வ ஆதாரத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படும் வழக்குகளில் என்ன முறை பின்பற்றப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதற்குக் காத்யாயனு சான்று பகர்கிறது. முதலில் உடலுக்கு ஊறு விளைவிக்கப்பட்டவராகவோ, பெரும் செல்வத்தை இழந்தவராகவோ இருந்து நீதியை வேண்டி நிற்கும் ஒருவருக்குத் தம் நிலையை எடுத்துரைக்கும் இசைவு அளிக்கப்படும். அப்போது குற்றம் சார்த்தப்பட்டுள்ளவர் அதற்குப் பதிலளிக்க வேண்டும். குற்றவாளி குற்றத்தை மறுத்தல், ஒப்புக்கொள்ளுதல், வேண்டிக்கொள்ளுதல், முன்வழக்கு ஒன்றை மேற்கோளாகக் காட்டி வாதாடுதல் ஆகிய நான்கில் ஏதாவது ஒரு வழியினைப் பின்பற்றி வாதாடுவது வழக்கமாகும்.

அதன் பின்னர்க் குற்றம் சார்த்தியவரும் குற்றம் சார்த்தப்பட்டவரும் தத்தம் நிலையில் வலுப்படுத்தக் கூடிய ஆதாரங்களைக் காட்ட வேண்டும். ஆதாரங்களைப் பத்திரங்கள், சாட்சிகள் அனுபவ உரிமை என மூவகையாகக் காத்யாயனர் பிரிக்கிறார். இதனைப் பெரிய புராணம் ஆவணம், அயலார்தம் காட்சி, ஆட்சி எனப் பிற்காலத்தில் குறிப்பிடுகிறது. நீதிபதியினால் குறுக்குக் கேள்விகள் கேட்கப்பட்டு விளக்கங்கள் பெறப்பட்டு இறுதியில் தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பினையும் காத்யானர் வழக்கு முடிவுற்றபின் வழங்கப்படும் தீர்ப்பு, வழக்கு முடிவதற்குள் வழங்கப்படும் தீர்ப்பு என இருவகையாகப் பிரிக்கிறார்.

ஹர்ஷ வர்த்தனரின் கால நீதி நிருவாக முறையை அறிந்து கொள்ளும் நமக்கு ஒரு புதிய செய்தி ஒன்றை அறியும் வாய்ப்பு அக் காலத்தேதான் கிட்டியுள்ளது. 'வழக்கறிஞர்கள்' என்ற பிரிவினரின் தோற்றம் குறிப்பிடத் தகுந்ததில்லை எனலாம். நீதி அமைப்பில் வழக்கறிஞர்கள் என்ற பதவியை அப் பெயரில் வகிக்கவில்லை என்பது உண்மையேயாயினும், அப் பதவியின் தோற்றம் அக் காலத்தில்தான் தோன்றியது எனத் தேவஹூட்டி கருதுகிறார். நாரத ஸ்மிருதிக்கு அஸஹாயாவினால் அளிக்கப்பட்ட விளக்கத்தில் மூன்றாவது நபரின் வழக்கைத் தான் பெற்ற கூலிக்குச் கைமாறாக எடுத்துரைத்த பிராமணன் ஒருவனை நீதிபதி கண்டித்ததாக ஒரு நிகழ்ச்சி காணப்படுகிறது. பிராமண குலத்தின் ஒழுக்க நெறியின்படி அதுபோன்ற சேவைக்குக் கூலி பெறக்கூடாது.

ஹர்ஷரின் மதுபன் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மகா பிரமாத்ரா என்பது யாது என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை எழுந்துள்ளது. பிரமாத்ரி என்பது நீதி நிருவாகப் பொறுப்புகளைக் கொண்டிருக்கவேண்டும் எனத் திரிபாதி தம்முடைய நூலில் குறிப்பிடுகிறார். பியூஹிலர் அச் சொல் ஆன்மீக அறிவுரையாளர் என்ற பொருளுடையது எனக் கருதுகிறார். சில அளவு நிருவாகத்தின் பிரிவே அதுவென யு. என். கோஷால் கருதுகிறார். குப்தர்களின் காலத்தில் அது போன்ற பதவியிருந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை. மகா பிரமாத்ரா என்பது ஒரு நிருவாகப் பிரிவு என்பதுடன் பட்டமாகவும் இருந்திருக்கலாம் எனத் தேவஹூட்டி குறிப்பிடுகிறார். எபிகிராபிகா இண்டிகாவில் தர்ம சாஸ்திரத்தை அரசவையில் விளக்கிக் கூறுவதற்குப் பிரமாத்ரி அல்லது பிரமாத்ராவின் அலுவல் எனத் தோன்றுகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தர்ம விளக்கத்தைத் தரும் அதிகாரியாக இருத்தல் வேண்டும் அல்லது சட்ட விளக்கப் பொறுப்புடன் சில அளவுப் பொறுப்பையும் இணைத்து பெற்றிருக்கவேண்டும். குற்றவாளிகளை நிருவகித்தவர்களும், நீதிபதிகளாகவும் விளங்கியவர்களும் மீமாம்சகர்கள் என அழைக்கப்பட்டனர்.

'அரசு நேர்மையுடன் நடைபெற்றதால் மக்கள் நல்ல நிலைமையில் இருந்தனர். குற்றம் செய்வோர் குறைந்திருந்தனர். சில நேரங்களில் சட்ட மீறல்களும் அரசருக்கு எதிரான சதிவேலைகளும் நடந்தன. குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. ஆனால், கடுந்தண்டனைகள் வழங்கப்படவில்லை. உயிருடன் இருந்தாலும் இல்லாவிடினும் குற்றவாளி சமுதாயத்தில் ஓர் அங்கமாகக் கருதப்படவில்லை. சமூக ஒழுக்கக் கேடுகளுக்கும், நன்றிகெட்ட செயல்களுக்கும் மூக்கு, காது, கை, கால் இவற்றில் ஒன்றை வெட்டிவிடும் தண்டனை வழங்கப்பட்டுக் குற்றவாளி நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டார். அல்லது காட்டுக்கு அனுப்பப்பட்டார். பிற குற்றங்களுக்கு அபராதம் மூலம் மன்னிப்பு வழங்கப்பட்டது' என யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளவை ஹர்ஷரின் காலத் தண்டனைகள் குறித்த படப்பிடிப்பினைக் காட்டுகின்றன.

இனி, ஹர்ஷரின் காலத்திய சோதனை முறையினைக் காண்போம். சோதனைமுறை என்பது ஒருவர் குற்றவாளியா அல்லரா என்பதனை மெய்ப்பிக்க மேற்கொண்ட சோதனைக்கு உட்படுத்திக் கொண்ட முறை ஆகும். யுவாங் சுவாங்கின் குறிப்பின்படி

நீர்ச் சோதனை முறையில் குற்றவாளி எனச் சந்தேகப்பட்டவரைக் கோணி ஒன்றில் போட்டு அதனுடன் மற்றொரு கோணியில் கல் ஒன்றைப் போட்டுக் கட்டி இரண்டு கோணிகளையும் ஒன்று சேர்த்துக் கட்டி ஆழமான ஆற்றில் எறிவர். கல் உள்ள கோணி நீரில் மிதந்து, ஆள் உள்ள கோணி நீரில் அமிழ்ந்தால், அவருடைய குற்றம் நிரூபிக்கப்பட்டது என்று கருதினர் என யுவாங் சுவாங் குறிப்பிட்டார்.

இரண்டாவது சோதனை நெருப்புச் சோதனையாகும். குற்றம் சார்த்தப்பட்டவர் முழங்காலிட்டுப் பழுக்க காய்ச்சப்பட்ட இரும்புத் துண்டு ஒன்றைக் கையில் எடுத்து நாவால் நக்க வேண்டும். குற்றவாளி அல்லர் எனில் அவருக்குக் காயம் எதுவும் ஏற்படாதாம். உடலில் புண் ஏற்பட்டுவிட்டால், அவர் குற்றவாளியாம்.

மூன்றாவது சோதனை முறையையும் யுவாங் சுவாங் விளக்குகிறார். அது எடைச் சோதனை முறை. 'குறித்த கல் ஒன்றை தாாசில் ஒரு பக்கத்திலும், குற்றவாளியை மற்றொரு பக்கத்திலும் வைத்து நிறுப்பர். குற்றவாளியின் எடையைவிடக் கல்லின் எடை குறைவாக இருந்தால் குற்றமற்றவர் எனக் கருதப்படுகிறார்.

விஷச் சோதனைமுறை என்ற நான்காவது சோதனைமுறையினைக் குறிப்பிட்டு யுவாங் சுவாங் அளிக்கும் விளக்கத்தினையும் காண்போம். ஆடு ஒன்றினைப் பின் காலினை வெட்டி அதில் நஞ்சிட்டுக் குற்றவாளியைத் தின்னுமாறு செய்யப்பட்டது. குற்றவாளி இல்லையெனில் பிழைத்துக் கொண்டான். இல்லையெனில் நஞ்சு பழிவாங்கியது.

சோதனை முறை என்பது காலம் காலமாகத் தொடர்ந்து வருவது. இது ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்ததே. அறிவியல் முன்னேற்றம் பெற்ற நமக்கு இவையெல்லாம் வேடிக்கையாகத் தோன்றும். ஆனால், இன்றைய நாளிலும் இத்தகைய சோதனை முறைகள் வழக்கில் உள்ளன. குற்றமற்றவர் என்று கூறும் ஒருவர் எரிகின்ற கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்யும் பழக்கம் கிராமப்புறங்களில் காணப்படுகிறது. இது போன்ற சோதனை முறைகள் பல இருக்கின்றன. கொதிக்கும் எண்ணெயில் கைவிடச் செய்வது. நஞ்சுப் பாம்பைக் குடத்தில் போட்டுக் கையை உள்ளே விடச்செய்வது. இவையெல்லாம் சோதனை முறைகளே. யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ள சோதனை

முறைகள் உண்மையில் நடைபெற்றுவந்ததாக மற்றைய நூல்களில் குறிப்பிட்டுள்ளதற்கு மாறுபாடாகக் காணப்படுகிறது என வாட்டர்ஸ் குறிப்பிட்டாலும், அவற்றை அல்பெருணி பிற்காலத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

குற்றம் செய்தவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளைக் கண்டோம். அவற்றில் சிறைக்கோட்டம் அனுப்பும் தண்டனையும் உண்டு. தவறிழைத்தோரையும், குற்றம் செய்தோரையும் சிறையில் அடைத்தனர். குற்றவாளிகளுக்குக் கை விலங்கு இடப்பட்டது. விழாக் காலங்களில் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இராஜ்ய வர்த்தனர், ஹர்ஷர் முதலானோரின் பிறப்பு மகிழ்வைக் கொண்டாடக் கைதிகள் விடுவிக்கப்பட்டதைப் பாணரின் ஹர்ஷ சரிதத்திலிருந்து அறிகிறோம். அதைப் போலவே பேரரசர் திக் விஜயம் மேற்கொண்டு திரும்பி வருகையிலும் செய்யப்பட்டது.

### வருவாயும் நிதியும்

ஹர்ஷர் சிறந்த வருவாய் நிதிக் கொள்கையினைப் பின்பற்றினர். ஹர்ஷர் ஏராளமாகவும், கடுமையாகவும் வரிகளை விதித்துப் பொருள் திரட்டி அரசை நடத்திச் சென்றார் என எண்ணக் கூடாது. அவருடைய அறிவுத்திறம் வாய்ந்த அரசோச்சும் திறனே காரணம் எனலாம்.

அக் காலத்தில் வரி விதிப்பு குறைவாகவே காணப்பட்டது என்பதற்கு யுவாங் சுவாங்கின் குறிப்புகள் சான்று பகர்கின்றன. அரசு நிலங்களின் வருவாய் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது எனவும், ஒரு பங்கு அரசு செலவுகளுக்குப், அரச வழிபாட்டிற்குப், ஒரு பங்கு அரசு பணியாளர் ஊதியத்திற்கும், ஒரு பங்கு சிறந்த அறிஞர்கள் எனப்பட்டோரைப் போற்றுதலுக்கும், நான்காவது பங்கு பல்வேறு சமயத்தவருக்கு அன்பளிப்புகள் வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது என யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். 'வரி விதிப்பு' குறைவாக இருந்தது. கட்டாயச் சேவை எப்போதேனும் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய தாய் தந்தையரின் தொழில்வழி நின்றனர்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசுக்குக் கிடைத்த வருவாயில் பெரும் பங்கு உற்பத்திப் பொருள்களைப் பங்கிடுவதன் மூலமாகப் பெறப்பட்டது. அரசரின் குத்தகைக்காரர்கள் உற்பத்தியில் ஆறில் ஒரு பங்கினைச் செலுத்தினர். பண்டைய நாள்தொட்டுப் பெரும்பாலான

அரசுகள் ஆறில் ஒரு பங்கை தம் பங்காகப் பெற்றன. நில வருவாய்க்கு அடுத்த நிலையில் இருப்பது வாணிகத்தின் மூலமாகக் கிடைத்த வருவாயே ஆகும். யுவாங் சுவாங் அளிக்கின்ற வருவாய் இனங்களைப் பட்டயச் சான்றுகளும் எடுத்துக் காட்டுகின்றன.

உள்நாட்டு வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகளுக்குப் பொதுவாக அக் காலத்தில் அதிக இடையூறுகள் இல்லாமையால், வாணிகத்தினால் நாட்டின் வளம் பெருகியதோடு, அரசுக்கும் போதிய வருவாய் கிடைக்க ஏதுவாயிற்று. சுங்க வரிச் சாலைகள் இருந்ததையும் யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். கங்கை நதியை ஒட்டிப் பல வாணிக நிலையங்கள் இருந்தன. கடலை ஒட்டிய நகரங்கள் வாயிலாக அயல் நாடுகளுடன் வாணிகம் நடைபெற்றது. பஞ்சாபிலிருந்து, அஸ்ஸாம்வரை வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய தோலினால் செய்யப்பட்ட கவசமான கார்டா-ரங்காவைப் பற்றிப் பாணர் இருமுறை குறிப்பிடுகிறார். கார்டா ரங்கா என்ற பெயர் கொண்ட தீவு ஒன்று இந்தோனேஷியாவிலிருந்தது. தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் அவர் கொண்டிருந்த தொடர்பிற்கு இது எடுத்துக் காட்டு எனலாம். சீன தேசத்துடனும் தொடர்ந்து வாணிகம் நடைபெற்றது.

காடுகள் அரசுக்குச் செல்வம் சேர்த்தன. அடர்ந்த காடுகளில் மரங்களை வெட்டும் திருடர் அதிகாரிகள் பயத்துடனே வாழ்ந்தனர் என்பதிலிருந்து அதற்கென அதிகாரிகள் நியமிக்கப்பட்டதும் வனச்செல்வம் வளம் சேர்த்ததும் தெரிகின்றன.

இனி அரசின் செலவினங்கள் யாவை எனக் காண்போம். அரச நிருவாகச் செலவுகளும், படைச் செலவுகளும் குறிப்பிடத்தக்கனவாக விளங்கின. நெடுஞ்சாலையை ஒட்டிய நகரங்களிலும் கிராமங்களிலும் தங்குமிடங்களைக் கட்டிவைத்து அங்குத் தங்கிச் செல்லும் பயணிகளுக்கு உணவும், சுவை நீரும் வழங்கப்பட்டன. தேவையான மருந்துகளுடன் மருத்துவர் அங்கு இருந்தார். ஒவ்வோர் ஆண்டும் பல பகுதிகளிலிருந்தும் ஏழைகளை அழைத்து உணவு உடை, நீர், மருந்து ஆகியனவற்றை அவர் அளித்தார். கல்விக்கும் சமய வளர்ச்சிக்கும் பொருள் செலவிடப்பட்டது. கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் பேரவைகளில் சமயத் துறையைச் சேர்ந்தவர்களுக்குப் போருக்குத் தேவைப்படும் பொருள்களைத் தவிர மற்ற அனைத்தையும் அளித்தார். இவற்றின் வாயிலாக அரசுக்குச் செலவுகள் ஏற்பட்டன.

## படைத்துறை நிருவாகம்

போர்க்களத்தே எதிரியைப் புறங்காணச் செய்து புகழ் மாலை சூட்டி, வெற்றிக் கன்னியை அணைத்து வாழும் வாழ்வே வேந்தர்க்குச் சிறப்பைத் தருவது என்று அன்றைய நாளில் எண்ணப்பட்டது. ஓர் அரசு சிறப்புடன் அமைய இரண்டு வகையான அடிப்படைக் கொள்கைகள் இன்றியமையாதன. அவை உள்நாட்டுக் கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை என இரு வகைப்படும். உள்நாட்டுக் கொள்கையின் வெற்றிக்குச் சிறந்த ஆட்சியாளர்கள், முறையான ஆட்சிப் பகுப்பு முதலியன இன்றியமையாதவை. அதுபோல வெளிநாட்டுக் கொள்கை வெற்றி பெற அரசர் சிறந்த படை ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும். அப் படை சிறந்த முறையில் நிருவகிக்கப்பட்டால் தான் வெற்றிக் கனியைப் பறிக்கமுடியும், ஆகவே, படை அரசின் சிறப்பான பிரிவு ஆகும்.

சீனப் பயணி யுவாங் சுவாங் காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை என்ற அரசரின் நான்கு படைப் பிரிவுகளைக் குறிப்பிடுகிறார். இது மரபு வழியே குறிப்பிடப் பட்டுவருவது ஆகும். ஆனால், ஹர்ஷ வர்த்தனரின் காலத்தில் தேர்ப்படை இல்லை என்று எண்ணப்படுகிறது. தேர்ப்படை ஹர்ஷருக்கு முற்பட்ட குப்தர்கள் காலத்திலேயே புறக்கணிக்கப் பட்டுவிட்டது. இந் நிலையில் ஹர்ஷர் எவ்வாறு தேர்ப்படையைக் கொண்டிருக்க முடியும்? யுவாங் சுவாங்கின் கருத்தினைப் பாணரின் கருத்தோடு ஒத்துப் பார்த்தாலும் அவர் கூற்றுப் பொருந்தாக் கூற்றே எனக் கருதலாம். பாணர், அரண்மனை அல்லது கூடாரத்தைப் பற்றி விளக்குகையில், தேர்களைப் பற்றியோ, அவை நிறுத்தப்பட்டிருந்த இடங்களைப் பற்றியோ குறிப்புகளை அளிக்கவில்லை. ஹர்ஷர்கூடத் தம் நாடகங்களில் படையின் மூன்று பிரிவுகளையே குறிப்பிடுகிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது. அவர் அப் பிரிவுகளை 'அவை வெல்ல முடியாத யானை, குதிரை, காலாட்படை' என உரைக்கிறார். (அநேக கஜ துரக பதாதி துர்விஸகபல) படை ஆய்வுக்குச் செல்கையில், அரசர் யானைமீது அமர்ந்து சென்றதாகப் பாணர் குறிப்பிடுகிறார். ஹர்ஷரின் படைகளைக் குறித்துக் காண்கையில் படகுகளைப் பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும். படகுகள் பற்றிய செய்திகளைத் தேவஹாட்டி எடுத்துக் காட்டுகிறார்.

செப்பேட்டில், 'சிறப்பு மிக்க வெற்றிக் கூடாரம் யானை குதிரை, படகுகளைக் கொண்டிருந்தது' எனக் குறிப்பிடப்பட்டு,

ருந்தது. பன்ஸ்கேரா மதுபென் செப்பேடுகளிலிருந்து செய்திகளை அனுப்பவும், தொடர்பு கொள்ளவும் குதிரைகளைவிட வேறு எதுவும் விரைவாகச் சொல்ல முடியாத காலத்தில் ஆறுகள் போக்குவரத்திற்கும், வர்த்தகத்திற்கும், போரில் வெற்றியை ஈட்டித்தரும் வகையில் சிறப்பான பங்கை வகித்தன. கங்கை நதியில் அக்காலத்தே அரசாங்கப் படகுகளும் தனியார் படகுகளும் காணப்பட்டன. படகுகள் மட்டுமன்றிக் கப்பல்களும் பயன்படுத்தப்பட்டன.

### படை எண்ணிக்கை

யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து 5,000 யானைப்படை வீரர்கள், 2,000 குதிரை, 50,000 போர் வீரர்கள் கொண்ட படையின் உதவியினால் ஆறு ஆண்டுகளில் ஐந்து இந்தியாவையும் வென்றார் எனக் குறிப்பிடப்பட்டதிலிருந்து படையின் எண்ணிக்கையினை ஆரம்ப காலத்தில், அதாவது தானேஸ்வரத்தின் அரச பதவியினை ஏற்றுக்கொண்ட காலத்தில் அறிய முடிகிறது. ஹர்ஷர் பேரரசர் ஆனவுடன் படையின் எண்ணிக்கையும் அதிகரித்தது போலும். ஹர்ஷர் அரசான பின் 60,000 யானைப்படை வீரர்களும், 1,00,000 குதிரைப்படை வீரர்களும் இருந்ததாக யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். காலாட்படையின் எண்ணிக்கையும் அவ்வாறே உயர்ந்திருக்க வேண்டும்.

படை வீரர்கள் எங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதற்கும் யுவாங் சுவாங்கின் குறிப்புகள் உதவுகின்றன. படைத்தொழில் பரம்பரைத் தொழிலாக விளங்கிற்று. க்ஷத்திரியர்களே போர்த் தொழிலில் ஈடுபட்டவர் எனலாம். நிலையான பெரும்படை ஒன்று அரசரால் நிருவகிக்கப்பட்டுப் போர்க்காலத்திலும், அமைதிக் காலத்திலும் பணி புரிந்தது.

அரண்மனைக் காவலாள்கள், குதிரை இலாயத்தின் அதிகாரி, எல்லைப் படையினர், அரசரின் படைசெல்லும் வழியைக் காப்பவர்கள், குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை வீரர்கள் ஆகிய இவர்கள் அனைவரும், அரசரின் படை உறுப்பினர்கள் ஆவர். போரில்லாக் காலங்களில் படை வீரர்களுக்குக் குறிப்பிட்ட பணிகள் அளிக்கப்பட்டன. படையெடுப்பு நடைபெற்ற காலங்களில் தேவைக்கேற்பப் படையின் எண்ணிக்கை பெருகியது. சிற்றரசர்களும், திறைபரசர்களும் அவரவர் படையினை அனுப்பி உதவினர். பரிசு அளிப்பதாக வாக்குறுதி அளித்தும், குறிப்பிட்ட ஊதியம் அளித்தும், தேவைப்பட்ட அளவிற்குப் படை வீரர்கள் சேர்க்கப்பட்டனரே அன்றி

அனைவரும் கட்டாயச் சேவை புரிதல் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. போர் முடிந்த பின் படை கலைக்கப்பட்டு அரசர் அளித்த அன்பளிப்புகளுடன் ஊர் திரும்பிப் படை வீரர்கள் தங்களுடைய குடும்பத் தொழிலை மேற்கொண்டனர். ஆண்டுதோறும் படையின் எண்ணிக்கை பெருகியது.

### சேனாபதி

படையின் தலையாய தளபதியாக அனைத்துப் படைகளுக்கும் தலைவராக விளங்கிய அரசர் அன்றாடம் படை நிருவாகத்தினைக் கவனிக்கச் சேனாபதி என்ற பெயரில் அறியப்பட்டவரை அமர்த்தியிருந்தார். அரசரின் அவையில் சேனாபதிக்குத் தகுந்த மதிப்பளிக்கப்பட்டது. சேனாபதியே படைத் தலைவர்களில் உயர்ந்தவர் ஆவார். சிம்மநாடர் குறித்தும் அவர் வகித்த பதவி குறித்தும் ஏற்கெனவே கண்டோம். படையினைத் தலைமை வகித்து நடத்தியவர் சேனாபதி. சேனாபதி படையினைத் தம் ஆற்றல் மிகுந்த பேச்சினால் வயப் படுத்திச் சிறப்புடன் போர்புரியச் செய்தார். விஜயசேனர் என்ற சேனாபதி குறித்துப் பிரிய தர்ஸிகாவிலும், ரும்ணுவந்த் என்ற சேனாபதி குறித்து இரத்னாவளியிலும் குறிபிடப் பட்டுள்ளது. பெரும் போர்களில் மட்டுமே அரசர்கள் கலந்து கொண்டனர் என்பதற்குப் பட்டயம் சான்று பகர்கிறது. மகாசேனாபதியாக விளங்கியவர் அரசரே ஆவார்.

சிம்மநாடர் என்ற சேனாபதி பற்றிக் குறிப்பிடுகின்ற பாணர் ஹர்ஷரின் சேனாபதி குறித்து ஏதும் குறிப்பிடாதது ஏன் என்பது விளங்கவில்லை. சிம்மநாடர் தொடர்ந்து சேனாபதி யாக விளங்கியிருக்க வேண்டும் எனவும், வயது முதிர்ந்தவராக விளங்கியதால் படை நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவில்லை எனவும், எனினும் அரசருக்குத் தம் வயது முதிர்ந்த நிலையிலும் கடந்த காலப் பயிற்சி. அனுபவங்களை அளித்தார் எனவும் கருதலாம். சேனாபதியின் பதவியினைப் படைத் துறை அமைச்சராக விளங்கிய மகாசாந்தி விக்கிரஹாதி கிருதா என்ப வரே வகித்தார் என அறியப்படுகிறது.

சேனாபதி அல்லது தலைமைத் தளபதியின் கீழ்ப் பல்வேறு தளபதிகள் பணியாற்றினர். தளபதிகள் மகாபாலாதி கிருதா என அழைக்கப்பட்டனர். அவருடைய மற்றொரு பட்டம் மகாபாலாதியக்ஷா என்பதாகும். அதனை அமசு வர்மனின் பட்டயம் வாயிலாக அறியலாம். படைப்பிரிவு ஒன்றினுக்கு அவர் தலைவராக விளங்கியிருக்க வேண்டும். படையின் பெரும்

அலுவலராக விளங்கியவர் மகாபாலாதிகிருதர் என ஃபிளீட் கருதுகிறார்.

மகாபாலாதிகிருதாவின் கீழிருந்த அடுத்த படை வரிசையாளர் பாலாதிகிருதா ஆவார். முகாம்களின் கண்காணிப்பாளர்களாக அவர்கள் விளங்கியிருக்க வேண்டும் என எண்ணத் தக்க குறிப்பை அளிக்கும் பாணர் அவர்களைப் பாடிபதி என்கிறார். மகாபாலாதி யக்ஷா என அழைக்கப்பட்டது போலப் பாலாதியக்ஷா எனப் பாலாதிகிருதாக்கள் அழைக்கப் பட்டிருக்கலாம். பிற படை அலுவல் பிரிவினரைக் குறித்தும் பட்டயங்களிலிருந்து அறிகிறோம்.

குதிரைப் படையின் தலைவராக விளங்கியவர் பிருஹதாஸ்வவாரா என அழைக்கப்பட்டார். ஹர்ஷரின் குதிரைப் படைத் தளபதி குண்டலா என்பவர் ஆவார். அவர் அஸ்வபதி அல்லது அஸ்வபாலா என அழைக்கப்பட்டார்.

யானைப்படை முழுமைக்கும் தலைவராக விளங்கியவர் கஜ சாதனாதி கிருதா என அழைக்கப்பட்டார். அஸ்வபதி, அஸ்வபாலா என்று குதிரைப்படைத் தலைவர் அழைக்கப் பட்டது போலவே அவரும் கஜபதி, கஜபாலா என அழைக்கப் பட்டிருக்கலாம்.

பட சாதா என அழைக்கப்பட்டவர்கள் முறையாகப் படையில் பணிபுரிந்த தேவைக்கேற்பச் சேர்க்கப்பட்டவர்; படை அலுவலில் குறித்த வேலைக்குப் பயன்படுத்தப் பட்டவர்கள்; அவ் வேலை முடிந்தவுடன் திருப்பி அனுப்பப்பட்டவர். கௌட அரசன் சசாங்கனுடன் போர் புரிந்தபோது 'யானைப் பணியாளர், கழுதைப்படையினர், பணியாளர்கள்' என்ற பலவகையினர் ஹர்ஷரின் முகாமில் பணிபுரிந்ததாகப் பாணர் குறிப்பிட்டார். அவ்வாறு பணிபுரிந்த அவர்களைப் பற்றிய செய்திகளைப் பல்வேறு பட்டயங்களிலிருந்து அறியலாம். அவர்கள் 'பட சாதா' என்ற பெயரில் அறியப்பட்டிருந்தனர்.

யானைப்படை

ஹர்ஷர் படையில் குறிப்பிடத் தகுந்த ஒன்றாக யானைப் படை விளங்கிற்று. பண்டைய நாள் தொட்டு இந்திய வரலாற்றில் காணப்படும் போர் முனையில் யானைப்படை பங்கு வகித்து வந்ததை நன்கு அறிவோம். யானைப்படை ஓர் அரசரின் வெற்றிக்குக் காரணமாக விளங்கியதைப் போலவே தோல்விக்கும்

அது காரணமாக அமைந்தது என்ற வரலாறு அனைவரும் அறிந்ததே. நண்பரென்றும் பகைவரென்றும் பாராமல் யானைகள் தாக்கத் தொடங்கி யாருடைய வெற்றிக்காகக் களம் செலுத்தப்பட்டனவோ அவர்களுக்கே தோல்வியை அளித்திருக்கின்றன.

ஹர்ஷரின் படையில் பத்தாயிரம் யானைப்படை வீரர்கள் (அயுதா) இருந்தனர் எனப் பாணர் குறிப்பிடுகிறார். யுவாங் சுவாங் எண்ணிக்கையை அறுபதாயிரம் என உயர்த்திக் கூறுகிறார். ஹர்ஷருக்கு முன்பு ஆண்ட குப்தர்களின் காலத்தில் குதிரைப்படையே சிறப்பிடம் வகித்தது. ஆனால், ஹர்ஷரின் காலத்தில் யானைப் படையே சிறப்புடன் திகழ்ந்தது எனலாம். சிற்றரசர்களின் கோட்டைகளைத் தாக்கி வீழ்த்த யானைப் படையே சிறந்தது என ஹர்ஷர் கருதியிருக்கலாம். ஹர்ஷரின் விருப்ப மிக்க யானையாகத் திகழ்ந்தது தர்ப-சதா என்ற யானையாகும். அதனைக் குறித்துப் பாணர் சிறப்பான விளக்கம் அளிக்கிறார்.

அம்பாரம் நன்கு அலங்கரிக்கப்பட்டும், அம்புகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புப் பெற இரும்புக் கவசம் அணிவிக்கப்பட்டுமிருந்த தர்ப சதா குறித்த காலத்தில் தாக்கும் திறனுடன் நகரும் மலையென விளங்கிற்று எனப் பாணர் விளக்குகிறார். உயர்வான அம்பாரம் அணிவிக்கப்பட்ட யானைகள் ஒவ்வொன்றும் வலுமிக்க நகரும் கோட்டைகளாக விளங்கின எனவும், அம்பாரத்தில் அமர்ந்திருந்த வீரர்கள் பலவிதச் சுருக்குக் கயிறுகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்திப் போர் புரிந்தனர் எனவும் பாணர் குறிப்பிடுகிறார். ஹர்ஷரது யானைப்படையின் வல்லமைக்குச் சான்று பாணரின் ஹர்ஷ சரிதத்திலே காணக் கிடைக்கிறது. ஹர்ஷரின் விருப்பமான யானைகளைக் குறித்த ஒப்புவமைகள், யானைகள் போர்க்களத்தில் பல பணிகளுக்கு உதவின என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

எமனுடைய வலையைப் போல எதிரிகளைச் சூழ்வதிலும், காலனைப் போலத் தவறாது தாக்குவதிலும், இராகுவைப் போன்று இறுகப் பற்றுவதிலும், செவ்வாய் போல இடம் மாறித் தாக்குவதிலும், தீப் பந்தங்களைப் போலச் சுற்றி வந்து பகைவர்களைச் சிதறி ஓடச் செய்வதிலும் யானைகள் திறமை பெற்று விளங்கின எனப் பாணர் கூறுகிறார். எதிரிகளின் கூடாரங்களை முட்டித் தள்ளி வீழ்த்தவும், பகைவர்களை நசுக்கவும், வெறியுடன் பகைவர்களைக் கொன்று குவிக்கவும் அவைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஹர்ஷர் யானைப்படையைப் பெருக்கவேண்டும் என்ற கருத்துக் கொண்டதற்கு அவர் சாளுக்கிய மன்னர் புலிகேசியின் சிறப்பான யானைப்படை ஆற்றலே காரணம் எனலாம். எனவே, யானைகளைப் பெறுவதற்கு எல்லா வித வழிகளிலும் ஹர்ஷர் முயற்சிகளை மேற்கொண்டார். பரிசுகளாகவும், போரில் கைப் பற்றியவையாகவும், வரிப்பணத்திற்கு ஈடாகவோ, அபராதத் தொகைக்குப் பதிலாகவோ, அரசரைக் காண்பதற்குச் செலுத் தப்பட்ட கட்டணமாகவோ, பெறப்பட்டனவாகவும் வேற்று நாட்டுத் தூதுவர் அளித்த அன்பளிப்புகளாகவும், வித்தைக் கூடாரங்களிலிருந்தும், வனத்துறை அதிகாரிகளால் காடுகளி லிருந்தும் பிடிக்கப்பட்டவைகளாகவும் விந்திய மலைச் சுபாராக் களிடமிருந்து வழக்கமாகப் பெறுவதைத் தவிர அதிகமாகக் கேட்டுப் பெற்றவைகளாகவும், யானைகள் விளங்கின என்பதைப் பாணர் குறிப்பிடுகிறார்.

யானைக் கொட்ட நிருவாக அதிகாரிகளின் பட்டியல் நீண்ட ஒன்று. யானைப்படைக்கு அளிக்கப்பட்ட சிறப்பினை அது காட்டுகிறது. யானைப் பாகர்களில் பெரிய பொறுப்பு அதிகாரியாக விளங்கியவருக்கு மகா மாத்ரா எனப் பெயர் வழங்கப்பட்டது. யானைப் பாகர்களைக் குறிப்பிடும் மஹாவத் அல்லது மாஹுத் என்ற சொல் மகா மாத்ரா என்பதிலிருந்து வந்ததாகும். போர், நீதி ஆகிய துறைகளில் உயர் பதவி வகித்தவர்கள் மௌரியர் களின் காலத்தில் மகா மாத்ரா என அழைக்கப்பட்டனர். ஆனால், ஹர்ஷரின் காலத்தே இச் சொல் யானைகளின் பொறுப்பு அதிகாரிகளைக் குறிக்க வழங்கியது வியப்பைத் தருகிறது. யுவாங் சுவாங்குடன் பயணம் செய்த அதிகாரி 'மோ-ஹோ-தாலோ' அல்லது மஹாத்-தாரா என அழைக்கப்பட்டதாக அறிகிறோம்.

யானைகளுக்கு எப்படிப் பயிற்சி அளிக்கப்பட்டது என்ப தற்கும் சான்றுகள் உள்ளன. மாதிரிச் செயற்கை உருவங்களை உருவாக்கி அவற்றைத் தாக்கிப் பழகும் பயிற்சியை அளித்தனர். சவாரி செய்வதற்கு மட்டும் பயன்படுத்தப்படும் யானைகளுக்குப் பலவிதமாக நடப்பதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. அப் பயிற்சியினை அளித்தவர் அத் ஹோரண என்வும், யானைகளுக்குத் தீனி அளித்தவர்கள் கர்பதி, லிசிகா எனவும் அழைக்கப் பட்டனர். ஊர்வலத்திற்குப் பயன்படுத்தப்படும் அலங்கார யானைகளின் பாகர்கள் அரோஹாக்கள் என அழைக்கப் பட்டனர். யானைகளைப் பழக்கியவர் நிஷாதின் எனப்பட்டார். யானைகளின் மருத்துவர் இபா-பிஷாக்-வரா எனப் பட்டார். யானைப்படையின் வேறு சில அதிகாரிகளில் மூத்தவர் மகா

பிலுபதி என அழைக்கப்பட்டார். சிலர் பிலுபதி எனப் பட்டனர்.

குதிரைப் படை

குப்தர்கள் குதிரைப்படையின்மீது பெருவிருப்பம் கொண்டிருந்தனர். அதற்குக் காரணம் சாகர்கள் குதிரைப் படையின்மீது கொண்டிருந்த ஆர்வமே எனலாம். காளிதாசரின் இலக்கியங்களில் குப்தர்கள் வலுமிக்க குதிரைப் படையை நிருவகித்துவந்தது குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே குப்தர் களுக்குப் பின் வந்த ஹர்ஷரும் குதிரைப் படைக்குச் சிறப் பானதோர் இடமளித்ததில் வியப்பேதும் இல்லை. குதிரைகள் வனுபு, ஆரட்டா, காம்போஜம் முதலிய இடங்களிலிருந்தும், பரத்வாஜா, சிந்து, பாரசீகம் முதலிய பகுதிகளிலிருந்தும் பெறப்பட்டன.

அரசரின் குதிரை இலாயத்தில் ஆறு வெவ்வேறு வகை வண்ணக் குதிரைகள் இருந்தன. அதில் தங்கனு என்ற வகைக் குதிரைகள் மிருதுவான சருமமும், நீலையான ஓட்டமும் கொண்டவை. அவ் வகைக் குதிரைகள் வடக்குக் காட்டாலி லிருந்து பெறப்பட்டன என்ற செய்தியைப் பாணர் அறிவிக் கிறார். உயர்வகைக் குதிரைகளை அதன் உடற்கட்டு, பழக் கங்கள், இதர வகைக் குதிரைகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படும் சிறப்பான பண்புகள் ஆகியவை பற்றிச் சிறப்பான பண்புக் குறிப்புகளை அளிக்கிறார் பாணர் என்பதிலிருந்து பாணர் குதிரைகளைப் பற்றி நன்கு அறிந்திருந்தார் எனத் தெரிகிறது. ஹர்ஷரால் பெரிதும் விரும்பப்பட்ட வல்லபா என்ற குதிரை களைப் பற்றிப் பாணர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷரின் விருப்பத்திற்குரிய குதிரை அரண்மனை அல்லது கூடாரத்தின் உட்பகுதியிலும், சாதாரண வகையினக் குதிரை இலாயத்திலும் இருந்தன. குதிரை இலாயத்தின் அதிகாரிகளுக்கு ஸ்தன பாலா, வல்லப பாலா என்ற பெயர் இருந்தது என்பதனை ஹர்ஷரின் இராணுவ ஊர்வலத்தைப் பற்றிக் கூறும் பாணரின் குறிப்புகளிலிருந்து அறியலாம். குதிரை இலாயத்தின் காப்பாளர் களாக விளங்கியவர்கள் அஸ்வபதி, மகா அஸ்வபதி எனப் பட்டனர். அரசரால் விரும்பப்பட்ட குதிரைகளை ஊர்வலத்தில் அழைத்துச் செல்லுபவர்களுக்குப் பட்டி எனப் பெயர் இருந்தது. குதிரைகளில் சவாரி செய்தவர்கள் மத்திய பஞ்சாப்பின் காத்தாக்கள் என்ற பழங்குடியினர் என வி. எஸ். அகர்வாலா ஹர்ஷ சரிதம் என்ற தம் நூலில் குறிப்பிடுகிறார்.

ஒட்டகப் படை

ஹர்ஷரின் படையில் ஒட்டகப் படை இருந்ததா என்ற கேள்வி விவாதத்திற்குரியதாக உள்ளது. பாணரின் ஹர்ஷ சரிதத்தில் 'கிராமிலாகா குழை' என்ற சொல் காணப்படுகிறது. அதனைக் கவல், தாமஸ் ஆகிய இருவரும் ஒட்டகக் கூட்டம் என்று மொழிபெயர்த்தனர். ஆர்.எஸ். திரிபாதி அதற்கு மாறாகப் படையில் போரிடும் ஒரு பிரிவினையே அச் சொல் குறித்தது என்றார். எருது, கழுதை முதலானவைகளைப் போலச் சுமைகளை ஏற்றிச் செல்ல ஒட்டகங்களும் பயன்படுத்தப் பட்டன என்றும் கூறுவர்.

காலாட்படை

காலாட்படைக்கு வீரமிக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பெரிய கவசத்தையும் நீண்ட ஈட்டியையும், சில வேளைகளில் வளைந்த வாளையும், கத்தியையும் கொண்டு எதிரியின் முன்னணி அமைப்புகளைத் தாக்கினர். காலாட் படையினர், ஈட்டி, கவசம், வில், அம்பு, வளைந்த வாள், கத்தி, கோடரி, கூரான ஆயுதம் பொருத்தப்பட்ட மர ஈட்டி, கோடாரி பொருத்தப்பட்ட ஈட்டி, எறிஈட்டி முதலியவற்றைச் சரியான முறையில பயன்படுத்தத் தலைமுறை தலைமுறையாகப் பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர்களாக விளங்கினர் என யுவாங் சுவாங் குறிப்பிட்டார்.

ஹர்ஷரின் படையைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் படைவீரர்கள் சாரபட்டா என அழைக்கப்பட்டனர். ஹர்ஷ சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்தச் சாரபட்டாவும், பட்டயங்களில் குறிப்பிடப்படும் சட்டபட்டாவும் (பட்டசட்டா) ஒருவரையே குறிப்பிடக் கூடியனவாகும். எனினும், அச் சொல் பல காலங்களில் பல இடங்களில் பல வகையில பயன்படுத்தப் பட்டுள்ளது.

அறிஞர் பெருமக்களிடையே அச் சொற்கள் குறித்து விவாதமே எழுந்துள்ளது. அறிஞர் பகவன்லால் இந்திராஜி செப்பேடு ஒன்றினை ஆதாரமாகக் கொண்டு, காவல் படையுடன் தொடர்புள்ளவர் 'திருடர்களிடமிருந்து காக்கும் வீரர்கள் அல்லது காவல் படையினர்' எனக் குறிப்பிடுகிறார். ஜே. பி. வோகல் என்பவர் மாவட்ட வரிவசூல் செய்யும் பொறுப்பினையும், குற்றவாளிகளைப் பிடிக்கும் பொறுப்பினையும் பர்காணாவின் தலைவர் சட்டா கொண்டிருந்தார் எனக் கூறுகிறார். கீழ் அதிகாரி களாகவும், சாதாரணக் காவல் படையினராகவும் பட்டாக்கள

விளங்கினர் என அல்டேகர் கூறுகிறார். சார பட்டாக்களின் பணி, அவர்களுடைய வாழ்க்கை முதலானவை ஹர்ஷ சரிதத்தில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சாரபட்டாக்கள் உடலில் எண்ணெய் பூசிக்கொண்டிருந்தனர். தோலினாலான கவசத்தைக் கொண்டிருந்தனர். தோல் கவச உடைபற்றி முன்னரே கண்டோம். அதற்கு ஹோ-வா-லி என்ற பெயரினை யுவாங் சுவாங் சுட்டிக் காட்டுகிறார். முரட்டுத் தோலினால் செய்யப்பட்டிருந்த அக் கவசத்தின் உட்பகுதி மிருதுவாக இருந்தது என அறிகிறோம்.

தண்டதாரா, வெற்றிக் கிரஹி முதலான பணிப் பெயர்களைக் கொண்டவர்கள் அரசரின் ஊர்வலத்தின்போது முன்னே வழியமைத்துத் தரும் பணியினைச் செய்தனர். இவர்கள் கையில் கழிகள் காணப்பட்டன. அரசரைக் காணவரும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி, குறை கூற வருபவர்களும், உதவி வேண்டுவோரும் அரசரைச் சூழ்ந்துகொள்ளாவண்ணம் காத்தனர். அரண்மனையின் உட்புற வாயிலில் காவலர்கள் 'வெற்றி' என அழைக்கப்பட்டோர் ஆவர். அப் பதவி வகித்தவர்கள் அரண்மனையைக் காவல் காத்தும் போர்க்காலத்தில் முன்னணித் தாக்குதல் நிகழ்த்தியும் பணியாற்றினர் என்ற யுவாங் சுவாங்கின் குறிப்பிலிருந்து போர்களில் அவர்களுடைய காவல் பொறுப்புகள் மாற்றப்பட்டாலே அன்றிப் பங்கு கொள்வதில்லை எனத் தெரிகிறது.

## மாநில அரசு நிருவாகம்

ஆட்சிப் பிரிவுகள் என்ற தலைப்பில் அரசு எவ்வாறு பிரித்து ஆளப்பட்டது என்று கண்டோம். அதனை விளக்கமாக ஈண்டுக் காண்போம். குப்தர்கள் காலத்தில் மிகப் பெரும் பகுதிகளான சௌராஷ்டிரம், மாளவம் முதலானவை தேசங்கள் என வழங்கப் பட்டுவந்தன. எனினும், சிறிய நிலப்பரப்புகளுக்கும் அச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. யுவாங் சுவாங்கின் ஐந்து இந்தியாக்கள் அல்லது ஐந்து கௌடாக்களைக் குறித்த விளக்கமான குறிப்பை முன்னர்க் கண்டோம். அவருடைய குறிப்பில் உள்ளவை நிருவாக அடிப்படையில் ஹர்ஷரால் ஏற்படுத்தப் பட்டன அல்ல எனலாம்.

ஹர்ஷரின் பேரரசைக்குறிப்பிட்ட யுவாங்சுவாங்கின் கருத்துகளையும் நாம் ஏற்கெனவே விளக்கமாகக் கண்டோம். யுவாங்

சுவாங் கொண்டிருந்த பிரிவு என்ன என்று காண்பது கடினமே. விஷயாவிலிருந்து தேசம் வரையிலுள்ள பல அளவுகளாக இந்தியத் துணைக்கண்டத்தை எழுபது பிரிவுகளாகப் பிரித்து அவற்றை நாடுகள் என யுவாங் சுவாங் குறிப்பிட்டார்.

தேசம் என்ற பிரிவு ஹர்ஷரின் காலத்தில் இருந்தது என்பதை மெய்ப்பிக்கச் சான்றுகள் இல்லையாயினும் அவ்வாறு பேரரசைப் பிரிக்காமல் மாநில நிர்வாகத்தை நடத்தமுடியாது. குப்தர் காலத்தில் இருந்ததுபோலவே தேசங்களாகப் பிரித்து ஹர்ஷர் ஆட்சி செலுத்தி வந்திருக்கவேண்டும்.

தேசங்களின் ஆட்சிப் பொறுப்பினை ஆளுநர்கள் மேற்கொண்டிருக்க வேண்டும். ஆளுநர்கள் இராஜஸ்தானியர் என அழைக்கப்பட்டனர். ஆளுநர்கள் அரசரின் நம்பிக்கைக் குரியவராக விளங்கலும், பொறுப்புடையவர்களாகத் திகழ்தலும் இன்றியமையாததாயிற்று. இராஜஸ்தானியர் மக்களைப் பாது காத்து உறைவிடம் அளிக்கும் பொறுப்பினை வகித்தவர் என க்ஷேமேந்திரா எழுதிய 'லோக பிரகாசா' என்ற நூலில் கூறப் பட்டுள்ளது. இராஜஸ்தானியர்கள் என்ற சொல்லுக்கு அரசரின் பிரதிநிதிகள் என்பது பொருளாகும். அவர்கள் குமார அமாத்தியா[1] என்ற சிறப்புப் பட்டத்தினைக் கொண்டிருந்தனர்.

ஹர்ஷரின் பட்டயங்களில் குமார அமர்த்திய உபாரிகா விற்கு முன்னும், மகா பரமாதாராவிற்குப் பின்னும் இராஜஸ் தானியகர்களுக்கு இடமளிக்கப்பட்டிருப்பதிலிருந்து அவர் களுடைய சிறப்பினை உணரலாம். சிறப்புப் பட்டங்களை அதிகாரிகள் தாராளமாகவே பயன்படுத்தினர். புக்தியின் ஆளுநர் ஒருவர் ஆற்றலும் திறமையும் மிக்கவராயிருந்தால் அவருக்கும் இராஜஸ்தானியா என்ற பட்டம் வழங்கப்பட்டது. இளவரசர் இராஜஸ்தானியா பதவி வகித்தால் 'மகாராஜாபுத்ர தேவ பட்டாரக' (Maharaja putra Deva Bhattaraka) என அழைக்கப்பட்டார்.

மாநில ஆளுநர்களான இராஜஸ்தானியர் உள்நாட்டு நிருவாகத்தில் அதிக உரிமை பெற்றிருந்தனர். மாநிலத்தைப் பொறுத்தமட்டில் அரசருடைய நலனையும், அண்டை நாடுகளின் உறவினையும் பேணிக் காத்தல் அவர்தம் இன்றியமையாத பொறுப்பாக விளங்கிற்று. மைய அரசின் அனைத்து நிருவாகத் துறைகளைப் போலவே, மாநில அளவிலும் செயல்பட்டுவந்தன.

[1] 'குமார அமாத்தியா' பற்றிய விளக்கம் 'மைய அரசு' நிருவாகத்தைப் பற்றிய தலைப்பில் காண்க.

ஹர்ஷரின் மாநில அரசு நிருவாகம் குப்தர் கால மாநில நிருவாக முறைகளை முன் மாதிரியாகக் கொண்டே விளங்கியிருக்க வேண்டும். ஸ்கந்த குப்தரின் ஜூனாகாத் கல்வெட்டு மாநில நிருவாகம் பற்றிய தெளிவான விளக்கத்தை அளித்துள்ளது. அதனையே ஹர்ஷரின் காலத்தில் காணப்பட்ட நிலையெனக் கொள்ளலாம்.

இனி, அடுத்த பிரிவினைக் குறித்த விளக்கத்தினைக் காண்போம். ஹர்ஷரால் நியமிக்கப்பட்ட உபகாரிகாவின் நிருவாகத்தின் கீழே புக்திகள் இருந்தன. அதனால், அவர்கள் அரசருக்கு நிருவாகப் பொறுப்புகள் குறித்து விளக்கம் அளிக்கக் கடமைபட்டவர்கள். மதுபன், பன்ஸ்கேராச் செப்பேடுகளிலிருந்து புக்திகளின் ஆளுநர்கள் போகிகள், போகபதி, கோப்தா, உபாரிக மகாராஜா, இராஜஸ்தானியா முதலான பட்டங்களைக் கொண்டிருந்தனர் என அறிகிறோம். இதில் காணப்படும் சொற்றொடர்கள் புக்தியை ஆட்சி செலுத்தியவர்களின் பொது வருவாய்த் துறைப் பொறுப்புகளையும், கடமைகளையும் காட்டுகிறது எனலாம்.

புக்திக்கு அடுத்த பிரிவு விஷயா ஆகும். ஹர்ஷர் தாமே நேரடியாக விஷயபதிகளை நியமித்தார் எனலாம். அது குப்தர்களின் கால முறைக்கு மாறுபட்டதாகவே தோன்றுகிறது. எப்படியெனில் குப்தர்கள் காலத்தில் விஷயாவின் தலைமைப் பொறுப்பினை வகித்த விஷயபதிகளை அப் பதவிகளில் நியமனம் செய்தவர்கள் புக்தியின் ஆட்சியாளர்களே ஆவர். குப்தர் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அந்த ஏற்பாடு மத்திய அரசு பொறுப்புச் சுமையிலிருந்து தன்னைச் சற்றுத் தளர்த்திக் கொள்ளவும். புக்தியின் தலைமைப் பொறுப்பினை வகித்தவர்கள் தாங்களாகவே பொறுப்புடன் நடந்துகொள்ளவும் உதவிற்று. மைய அரசு வலுவுடன் விளங்கினால்தான் அக் கொள்கை வெற்றியைப் பெற இயலும். அரசர் வலுவற்றவராக விளங்கினால் விளைவுகள் விபரீதமே. குப்தர்களின் அரசைவிட ஹர்ஷரின் அரசு அளவில் சிறியதாக இருந்ததால் ஹர்ஷர் தாமே நேரடியாக விஷயபதிகளை நியமித்திருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

மகாராஜா, குமார அமாத்தியா, ஆயுக்தகா முதலான அரசரால் அளிக்கப்பட்ட பட்டங்களை விஷயபதிகள் கொண்டிருந்தனர். அரசரால் சிறப்புப் பட்டங்கள் அளிக்கப்படும் அளவிற்கு விஷயபதிகள் அரசரிடம் நேரடித் தொடர்பு கொண்டிருந்தனர் என்றாலும் தமக்கு உடனடியாக மேலாளர்களாக

விளங்கிய புக்தித் தலைவர்களின் நிலையும் குறைவுபடாத வகையில் நடந்துகொண்டனர். விஷயபதிகளின் செயலகம் அதிகரணு என அழைக்கப்பட்டு மாநிலத்தின் முக்கிய நகரத்தில் இருந்தது. இச் செயலகத்தில் அரசின் கணக்குப் பொறுப்பாளராக விளங்கியவர் புஷ்தபாலா என அழைக்கப்பட்டார். அவர் கொண்டிருந்த கணக்குப் புத்தகத்தில் பயிர் செய்யப்பட்ட அல்லது பயிரிடப்படாத நிலத்தின் சரியான அளவுகள் குறித்துவைக்கப் பட்டிருந்தன.

நிலத்தின் உரிமையை மாற்றுவதில் உள்ள சட்ட நுணுக்கங்களுக்குப் பொறுப்பான அலுவலர் அக்ஷபாடலிகா என அழைக்கப்பட்டார். கிராமங்களிலும், மாவட்டங்களிலும் அப் பொறுப்பினை வகித்தவர்கள் அக்ஷபாடலா என அழைக்கப் பட்டனர். அக்ஷபாடலா கணக்குக் கண்காணிப்புத் தணிக்கை அதிகாரிகளாகவும், நுணுக்கமான பொறுப்புகளை உடையவர்களாகவும், நிலம் விற்றல், வாங்கல் விவரங்களுக்குப் பொறுப்பாளர்களாகவும் விளங்கினர். அவர்களை இக் காலப் பதிவாளர்களாகக் (Registrars) கருதலாம்.

ஹர்ஷரின் பான்ஸ்கேராச் செப்பேட்டில் நில உரிமைப் பத்திரங்கள் மகாக்ஷ பதல் அதிகரண் அதிகிரிதா பானுவின் ஆணையின்படி எழுதப்பட்டதாகக் குறிப்பு ஒன்று காணப் படுகிறது. பல மாநில மாவட்ட அக்ஷ பாடலிகாக்களும், கிராமத்திலிருந்த கிராம அக்ஷ பதலிகாக்களும் பத்திரங்களைப் பாதுகாத்து வைத்து மைய அரசு தொடர்பு அதிகாரிகளாக விளங்கினர். அதிஷ்ஸ்தான் அதிகரணு என்ற நகராண்மைக் கழகத்தில் விஷய அதிகரணு என்ற மாவட்ட அலுவலகத்துடன் ஹர்ஷர் காலத்தில் மாவட்ட அதிகாரிகள் பணியாற்றினர்.

### நகரவைகள்

நகரவைகள் சிறப்புடன் பணியாற்றின. அதில் விஷய மகாதாராக்கள் எனப்பட்ட இருபது உறுப்பினர்கள் இருந்தனர். மகாதாராக்கள் யுவாங் சுவாங் சீனவிற்குத் திரும்புகையில் காவல் அதிகாரிகளாகப் பணியாற்றினர் என்று அவரது வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். அவர்களில் மிகச் சிறப்பானவர்கள் புரோகா என அழைக்கப்பட்டனர். புரோகா என அழைக்கப்பட்டவர்களில் தலைமை வங்கியாளர் (நகரஸ்ரேஷ்தின்), தலைமை வணிகர் (சார்தா வஹா) தலைமைக் கலை வல்லுநர் (பிரதம குலிகா), தலைமை எழுத்தர் (பிரதம காயஸ்தா) முதலானவர்கள் ஆவர்.

பிரதம குலிகா, பிரதம காயஸ்தா என்ற பதவிகளில் பிரதம அல்லது முதல் என்ற தொழிற்சிறப்புடன் அழைக்கப்பட்டிருப்பதிலிருந்து அவை குறிப்பிட்ட துறையின் நலனுக்காகப் பாடுபடும் தலைவர்களைக் குறித்தன என்று கருதப்படுகிறது. மன்றத்தில் அங்கம் வகித்தவர்களின் தொழிலைக் கருதுகையில் நாட்டுப்புற நலனைவிட நகர நலனுக்கே அதிகச் சிறப்புரிமை வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

## நீதி மன்றங்கள்

ஒவ்வொரு மாவட்டத்திலும் நீதி மன்றங்கள் இருந்தன. நாளந்தா, வைசாலி முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட நியாய அதிகரணு, தர்ம அதிகரணு, தர்ம சாசன அதிகரணு முதலிய நீதி மன்றங்களின் முத்திரைகள் கிடைத்துள்ளன. வணிகர்கள் தனி நீதி மன்றங்களை ஏற்படுத்தித் தங்களுக்குள் ஏற்பட்ட வழக்குகளைத் தீர்த்துக்கொண்டனர் என்று அறிவதால், முன்னர்க் கூறப்பட்ட நீதி மன்றங்களைத் தவிர வேறு வகையான நீதி மன்றங்களும் இயங்கிவந்தன என அறிகிறோம். வாணிகர்களைப் போல உழவர்கள், கலை வல்லுநர்கள், வட்டிக் கடைக்காரர்கள், நடனமாடுவோர், குறிப்பிட்ட சில சமயத் துறையினர் முதலானவர்கள் தங்களுக்கெனத் தனி நீதி மன்றங்களைக் கொண்டிருந்தனர். உயர்நீதி மன்றங்களில் மேல் முறையீடு செய்துகொள்ளுதல் காணப்பட்டது. தலைமை நீதிபதி நீதிபதியைவிட அதிகாரம் உடையவராக விளங்கினர்.

## கிராமம்

நிருவாகத்தின் அடிப்படைப் பிரிவு கிராமமே ஆகும். பண்டைய நாள்தொட்டு இன்றுவரை அந்நிலைமை நீடித்து வருகிறது. கிராமங்கள் ஒரே அளவுடையனவாக அமையாமல் மாறுபட்ட அளவுள்ளனவாக அமைந்திருந்தன. கிராமத்தில் அமைந்திருந்த வீடு, வீதி, அங்காடி, மயானம், கோவில், கிணறு, குளம், தரிசுநிலம், காடு, பயிர்நிலம் முதலானவை கிராம நிருவாக ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. கிராமங்களுக்கு எல்லை வகுக்கப்பட்டிருந்தது. எல்லைகளைச் சுவர் எழுப்பியும், பள்ளங்கள் தோண்டியும் அடையாளமிட்டனர். நிலங்களை அளந்தவர்கள் சிமகாராக்கள் ஆவர். கிராமத் தலையாரி கிராமியகா அல்லது கிராம அத்யக்ஷ எனப்பட்டார். கிராமத்தின் நிருவாகப் பொறுப்பினைக் கிராமியகா என அழைக்கப்பட்டவர் மேற்கொண்டார். யாரால் கிராமியகா நியமிக்கப்பட்டார் எனத் தெரியவில்லை. கிராம மக்களின் பொதுவான

கருத்துர், அரசாங்க ஒப்புதலும் கூட்டாகக் கிராமத் தலையாரி நியமனத்திற்கு வழிமுறைகளாக விளங்கியிருக்கவேண்டும் எனப் பேனி பிரசாத் கருதுகிறார்.

தலையாரிக்கு உதவ பல சிறிய அதிகாரிகள் இருந்தனர். ஹர்ஷ சரிதம் அவர்களில் இரண்டு வகை அதிகாரிகள் இருந்தனர் எனக் குறிப்பிடுகிறது. ஹர்ஷர் பயண வழியில் முதலாவது தங்கிய இருக்கையில், கிராம அக்ஷ பாடலிகா என்ற அதிகாரி, கரணி என்ற எழுத்தர், மற்றும் துணை அதிகாரிகளுடன் அரசரைக் கண்டு அவர் கைப்பட முத்திரை பெற்றுச் செல்ல அணுகினார். அது மாதிரியான ஒரு செப்பு முத்திரை சோனாபட் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டது. மகாதாராக்கள் என்பவர்கள் கிராமத் தலையாரிக்கு நிருவாகப் பொறுப்புகளில் உதவ அமைக்கப்பட்ட அதிகாரபூர்வமற்ற குழுவின் உறுப்பினர்கள் ஆவர். இந்தியாவில் தலையாரிக்கு உதவ அமைக்கப்பட்ட அதிகாரபூர்வமற்ற குழுவினர் குறித்த குறிப்புகள் குப்தர்களின் காலத்திலும் காணப்பட்டன. குப்தர் காலத்தில் பஞ்ச மண்டலி எனவும், பீகாரில் கிராம ஜனபதா எனவும் அழைக்கப்பட்டனர்.

கிராமத்தில் வயது, திறமை, குணநலன், செல்வம் இவற்றின் அடிப்படையில் மூத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வீடு, வீதி, அங்காடி, கோவில், கிணறு, குளம், மயானம், கால்நடை, புல்வெளி, காடு, விளைநிலம், தரிசு முதலியவற்றை நிருவகித்தனர். நாட்டியல் வழக்குகளையும் கிராம மூத்தவர்கள் துணையுடன் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் சிறப்பான பஞ்சாயத்து நீதி மன்றங்களும் இயங்கின.

### வனக்குடியிருப்பு நிருவாகம்

பாணர் தம் குறிப்புகளிலிருந்து, வனக்குடியிருப்புச் சமூகத்தைப் பற்றிய விரிவான விளக்கத்தைப் பெறுகிறோம். விந்தியமலைப் பகுதியில் வாழ்ந்துவந்த சபாராக் குடியிருப்பு ஒன்றைப்பற்றி ஹர்ஷ சரிதத்தில் பாணர் விளக்குகிறார். வனத்துறைச் சுற்றுப்புறக் குடியிருப்புகளுடன் தொடர்பு கொண்ட சில அதிகாரிகளைப் பற்றி பாணர் சில குறிப்புகளைத் தருகிறார். வனபாலா என்ற அதிகாரி காட்டுப் பகுதிகளில் அனுமதியின்றி மரம் வெட்டும் திருடர்களைத் தடுத்துக் காவல் புரிந்துவந்தார். சர்வ பள்ளிபதி என்ற கிராமங்களின் தலைவரைப் பற்றிக் குறிப்புக் காணப்படுகிறது. சபாராக்கள் சேனாதிபதியினால் நடத்தப்படும் ஒருவகைப் படையினைக் கொண்டிருந்தனர்.

அர்த்த சாத்திரத்தின் இரண்டாவது நூல் பகுதி மேலாண்மையைப்பற்றி மட்டுமற்றி வனத்துறையின் சிறப்பைப்பற்றியும் கூறுகிறது. மேலும் கண்காணிப்பு அதிகாரிகளை நியமித்து வனத்துறை இயங்குவதை அரசு மேற்பார்த்தும் அங்கிருந்து கிடைக்கும் வரி வருவாய்த் துறையை நிருவகித்தும் வந்தது எனக் குறிப்பிடுகிறது. அர்த்த சாஸ்திரத்தில குறிக்கப்படும் அவை பொதுவாக ஹர்ஷர் கால நடைமுறைகளை விளக்கும் என்று கருத வாய்ப்புள்ளது. ஏனெனில், அதில் கூறப்பட்டுள்ள கொள்கைகளும், விளக்கங்களும் பிற்காலத்திற்கும் பொதுவானவையாகவே காணப்பட்டன. ஹர்ஷரின் காலத்திற்குப் பின்பும் அவற்றில் கூறப்படும் பல விளக்கங்கள் சான்று பகர்கின்றன.

ஹர்ஷரின் ஆட்சி முறையைக் குறித்த விளக்கமான ஆய்வினை மேற்கொண்டோம். ஹர்ஷவர்த்தனரின் ஆட்சி ஓரளவிற்கு மரபு வழியிலான முறைகளைக் கடைப்பிடித்தே வந்துள்ளது என்பதையும், அவற்றில் சில ஹர்ஷரின் காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்தன என்பதையும் ஆங்காங்கே கண்ணுற்றோம். ஹர்ஷவர்த்தனர் ஆட்சி செம்மையாகச் சீராக நடைபெறச் சிறந்த ஆட்சி அமைப்பு வேண்டும் என்பதனை உணர்ந்து அதனைக் கைக்கொண்டபடியாலேதான் நாற்பது ஆண்டுகள் செவ்வனே ஆட்சி செலுத்த முடிந்தது. வர்த்தனர்களின் மரபு வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்ததற்கும் ஹர்ஷவர்த்தனரே பொறுப்பாவார்.

# 10. இலக்கியப் பணிகளில் ஹர்ஷரின் பங்கு

இந்திய வரலாற்றில் குப்தர்களின் காலம் பொற்காலம் என வழங்கப்பட்டது எனக் குறிப்பிடுவர். வேறு எந்தத் துறையில் பொற்காலமாக விளங்கிற்றோ இல்லையோ கலைத்துறையிலும் இலக்கியத்துறையிலும் அது பொற்காலம் என்பதில் ஐயமில்லை. எனவே, குப்தர்கள் ஏற்றிவைத்த ஞான தீபம் தொடர்ந்து சுடர் விட்டுப் பிரகாசித்தது. ஆட்சித்துறையில் மட்டும் குப்தர்கள் வர்த்தனர்களுக்கு முன்னோடிகள் அல்லர். இலக்கியத் துறையிலும் முன்னோடிகளே. வடமொழியின் சாகா வரம் பெற்ற நாடகங்கள் உயிர் பெற்றுத் திகழ்ந்தது அக் காலத்திலேதான். அதன் தொடர்ச்சியினை ஹர்ஷரின் காலத்தில் காண்கிறோம். இலக்கிய தீபங்களின் ஒளி எங்கும் பரவிற்று.

இந்திய வரலாற்றின் பக்கங்களை நிரப்பத் தக்க அளவிற்குச் சாதனைச் சிறப்பு மலர்களைக் குவித்தவர்கள் ஏராளமானவர் ஆவர். அவர்கள் போர்ச் செயல் வல்லமையாலும், புவியாளும் சிறப்பு மிக்க ஆட்சித் திறத்தாலும் சிறந்து விளங்கினர். போர்ச் செயலோடு இலக்கியப் பணியாலும் அரிய தம் படைப்புகளாலும் என்றும் இலக்கிய வானில் மட்டுமன்றி வரலாற்று வானிலும் மின்னிப் பிரகாசித்தனர். அவ்வாறு பிரகாசித்தவர்கள் சிலரே யாவர். வாள் பிடிக்கும் கையும் வேல் பிடிக்கும் கையும் எழுது கோல் பிடிக்கும் கையாகவும் விளங்கிற்று. வாள் கொண்டு எதிரிகளின் ஆணவத்தை ஒடுக்கியதோடு, எழுதுகோல் கொண்டு அன்பையும், அமைதியையும், சமத்துவத்தையும், சகோதரத் துவத்தையும் வலியுறுத்தினர். அத்தகைய அரசர்களில் ஒருவராக ஹர்ஷர் அனைவராலும் ஏற்கப்பட்டுள்ளார்.

இந்திய வரலாற்றில் ஹர்ஷர் என்ற பெயருடையவர்கள் அறுவரைக் காண்கிறோம். அந்த அறுவருள் வர்த்தன மரபில் வந்துதித்த சிறப்பு மிக்க ஹர்ஷ வர்த்தனரும் ஒருவராவார். ஹர்ஷ வர்த்தனர் பிரியதர்சிகா, இரத்னவளி, நாகானந்தம் ஆகிய மூன்று நாடகங்களையும் வடமொழியில் உருவாக்கியவர் என்று டாக்டர் எஸ். என். தாஸ்குப்தாவும், டாக்டர் எஸ். கே. டேயும்

குறிப்பிட்டனர்.[1] அவர்களுடைய கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொண்டிருப்போமானால் இச் சிக்கல் எழுந்திருக்காது. ஹர்ஷ வர்த்தனர் மூன்று நாடகங்களை எழுதியவர் அல்லர் என்ற கருத்தும் தோன்றியிருக்காது.

இந்திய வரலாற்றில் அறியப்பட்ட ஆறு ஹர்ஷருள் முதலாவது ஹர்ஷர் 'காவிய பிரதிபா' என்ற நூலை எழுதியவர். இரண்டாவது ஸ்ரீ ஹர்ஷர் எனப்பட்டவருக்கு நைஸாதிய சரித்திராவும், கண்டன கண்டகாத்தியாவும், மற்றும் ஏழு நூல்களும் உரியன. மூன்றாவது ஹர்ஷர் கல்ஹனரின் இராஜதரங்கினியில் குறிப்பிடப்பட்ட கி.பி. 1090 முதல் 1101 வரை ஆட்சி செலுத்திய காஷ்மீரின் கொடுங்கோலரசர் ஆவார். இந்தக் கொடுங்கோல் அரசரின் இராணியைக் கவரச் சோம தேவர் எனபவர் கதாசரித சாகரம் என்னும் நூலை உருவாக்கினர் என்பர். பரமார அரசன் போஜனின் பாட்டனும், மூஞ்சா என்பவனின் தந்தையுமானவர் நான்காவது ஹர்ஷர். ஐந்தாவது அறியப்பட்டவர் உஜ்ஜயினியின் ஹர்ஷ விக்கிரமாதித்தியர். அவரே மாளவத்தின் யசோதர்மன் என்பவர். ஆறாவது நமக்கு நன்கு அறிமுகமான ஹர்ஷ வர்த்தனர் என்ற வர்த்தன வமிசத்து அரசரும், பாணரின் காவிய-நாயகரும், நம் வரலாற்று நூலின் கர்த்தாவுமாவார்.

இந்த அறுவரைக் குறித்த செய்திகளை இங்கு அறிவது ஹர்ஷ வர்த்தனர் இலக்கியப் படைப்பாளரா அல்லரா என்ற கேள்விக்கு விடை காண உதவும். முதல் இரு ஹர்ஷர்களும் அரசர்கள் அல்லர். மீதமுள்ளவர்களில் அரசராகவும், கவிஞராகவும் விளங்கியவர்களைக் காண்போம். போஜாவின் பாட்டனான ஹர்ஷர் கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கொடுங்கோலரான காஷ்மீர் ஹர்ஷர் கி. பி. 1101-ல் வாழ்ந்தவர். எனவே, முதல் இருவருடன் இந்த இருவரையும் குறித்து நாம் அக்கறை கொள்ள வேண்டியதில்லை.

இறுதியில் எஞ்சுபவர்கள் இருவர். ஒருவர் உஜ்ஜியினி அரசரான ஹர்ஷ விக்கிரமாதித்தியர்; மற்றவர் ஹர்ஷ வர்த்தனர். ஹர்ஷ விக்கிரமாதித்திய கல்ஹணர் தம் இராஜதரங்கிணியில் ஹர்ஷ விக்கிரமாதித்தியருடைய இலக்கியப் புலமை குறித்தோ இலக்கியப் படைப்புகள் குறித்தோ ஏதும் குறிப்பிடவில்லை. டாக்டர் திரிபாதி விக்கிரமதித்தியர் என்பதே அவருடைய

[1]. Dr S. N. Dasgupta and Dr. S. K. De, *A History of Sanskri Literature Vol I*, p. 256.

சிறப்புப் பெயர் எனவும், ஹர்ஷர் என்பது இரண்டாவது பெயரே எனவும் குறிப்பிட்டதோடு, ஹர்ஷ விக்கிரமாதித்தியர் பௌத்த சமயத்தவர் அல்லர் என்பதையும், பௌத்த சமய நூலாகப் பெரிதும் தோற்றமளிக்கின்ற பௌத்த சமய நாகானந்தம் என்ற நூலை எழுதியிருக்க முடியாது என்பதையும் குறிப்பிட்டார். ஆகவே, இனிக் காலத்தில் கடைசியாக நிற்பவர் வர்த்தனர் மரபின் ஹர்ஷ வர்த்தனரே என்றாலும், மேலே காணப்பட்ட அல்லது நாம் முடிவிற்கு வந்த முறை எதிர்மறை முறையேயாகும். எனவே, வேறு ஏதேனும் நேரடிச் சான்றுகள் உள்ளனவா எனக் காண்போம். அவை மேலே கூறப்பட்ட மூன்று நாடகங்களின் ஆசிரியர் ஹர்ஷ வர்த்தனரே என்று தெளிவுபடுத்துகின்றன. அவற்றைக் காண்போம்.

பாணர் ஹர்ஷரை வானளாவப் புகழ்ந்தாலும் சரி, மிகைபடக் கூறியிருந்தாலும் சரி, ஹர்ஷரைப் பற்றிய ஐயம் எழுகின்ற வேளையில் ஆதார பூர்வமாகச் செய்தியை அளித்து நம் ஐயத்தைத் தீர்க்க உதவும் சான்றுகளில் அவருடைய ஹர்ஷ சரிதமும் ஒன்று என்பதால் முதலில் அதனைத் துணைக் கொள்வோம். பாணர் ஹர்ஷரின் அவைக்களப் புலவரும் கூட. தம் காவியத்தில் புலவர்களின் நீண்ட பட்டியல் ஒன்றினை அளித்துவிட்டு ஆத்யா ராஜாவின் வல்லமை பெரிது எனப் புகழ்கிறார். எட்டிங் காஸனும், பிஸ்செலும், ஆத்யாராஜா எனப் பாணர் குறிப்பிட்டது ஹர்ஷ வர்த்தனரையே என்று கருதுகின்றனர். ஹர்ஷரின் சிறப்புகளை விளக்குகையில் அவருடைய கவிபுனையும் ஆற்றலையும் புகழ்ந்துரைக்கிறார். அவ்வாறு பாணரால் புகழப்படும் இடங்கள் வேறு சிலவும் உள்ளன.

பாணருக்கு அடுத்தபடியாக ஹர்ஷரைப் பற்றி அறிய உதவுவது யுவாங் சுவாங்கின் குறிப்புகளே. ஆனால், யுவாங் சுவாங் ஹர்ஷ வர்த்தனரின் இலக்கியப் புலமையினைக் குறித்து ஏதும் விளம்பாதது வியப்பாக உள்ளது. ஆனால், அதே சமயத்தில் அவருக்குப் பின் வந்த சீனப் பயணி இட்சிங் சிலாதித்தியரின் இலக்கியப் புலமையினைப் புகழ்ந்துரைக்கின்றார். இட்சிங்கின் குறிப்புகள் அறிஞர் உலகத்தால் இன்றியமையாதவையாகவும், ஏற்றுக்கொள்ளத் தக்கனவாகவும் கொள்ளப்படுகின்றன.

இலக்கியச் சான்றுகள் பலவும் ஹர்ஷ வர்த்தனரின் புலமைக்குச் சான்றுகாட்டத் துணைபுரிகின்றன. கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சோத்கலா என்பவர், (உதயசுந்தரி கதாவின் ஆசிரியர்) விக்ரமாதித்தியர், முஞ்சா, போஜர் முதலான

அரச அறிஞர்களுடன் ஹர்ஷரின் பெயரினையும் சேர்த்துக் குறிப்பிட்டார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெய தேவர் ஹர்ஷரை பாஸர், காளிதாசர், பாணர், மயூரா, சோரா முதலானவர்களுக்குச் சமமாகக் கருதுகிறார். 'இமை நாட்டின் இப் பெருங் கவிஞர்கள் பாணரும், மயூராவும், கவிஞருக்கெல்லாம் தலைவரான மகாராஜா ஸ்ரீ ஹர்ஷரின் அவையில் இருந்தனர்' என மதுசூதன என்பவர் பாய போதினி என்ற நூலில் குறிப்பிடு கிறார். அபாசித ரத்ன பாண்டாகாரா என்ற வடமொழித் தொகை நூலில் மாகா, சோரா, மயூரா, முராரி, பாரவி, ஹர்ஷர், காளிதாசர், பாவபூதி, போஜராஜா, தண்டின், பல்லதா பாண பட்டா, சுபாந்து முதலான பெயர்கள் காணப்படுகின்றன. முஞ்சாவின் அவைக்களப் புலவர் தனஞ்சயன் பிரியதர்ஸிகா, இரத்னவளி, நாகானந்தம் முதலான மூன்று ஹர்ஷரின் நாடங் களையும் குறிப்பிட்டார்.

ஹர்ஷரின் புலமையினை எடுத்துக்காட்டப் பட்டயச் சான்றுகளையும் சான்றாகக் காட்டலாம். அவற்றில் ஹர்ஷரின் கையொப்பம் பன்ஸ்கேராச் செப்பேட்டிலும், மதுபன் செப் பேட்டிலும் உள்ளதைக் கொண்டு அவ் வாசகங்களை அமைத்தவர் ஹர்ஷர் என்றே கருதலாம். அன்றைய நாளில் அரசர்களே ஆணையிட்டுப் பட்டயங்களை அமைத்தனர். தென்னகத்தில் தஞ்சைப் பெரிய கோவிலில் இராஜ ராஜப் பெருமன்னன் 'நான் கொடுத்ததும், எனது தமக்கை கொடுத்ததும், மற்று முன்னோர் கொடுத்ததும் கல்லில் எடுப்பிக்கச் செய்தேன்' என்று குறிப்பிட்டுள்ளான். அதுபோலவே ஹர்ஷரின் செப்பேட்டு வரிகள் அவருடைய புலமைத் திறனையும், அதில் காணப்படும் கையொப்பம் ஹர்ஷரின் அழகொழுகும் கையெழுத்தையும் காட்டுகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள மூன்று நாடகங்களுக்கு மட்டு மன்றி, 'சுப்ரபாதஸ் தோத்ரா' என்ற இருபத்து நன்கு பத்திகளைக் கொண்ட புத்தரின் பெருமைதனைச் சிறப்பித்துக் கூறும் பாடல் நாலும், ஐந்து பத்திகளைக் கொண்ட 'அஷ்ட மஹா ஸ்ரீ சைத்ய சம்ஸ்கிருத ஸ்தோத்ரா' என்ற பாடலும் ஹர்ஷருக்கு உரியன என்று கருதப்படுகின்றன. சீன மொழியில், 'சிலாதித்தியர்' என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது. பௌத்த இலக்கியங்களில் ஹர்ஷர் சிலாதித்தியர் என்றே அழைக்கப்படுகிறார். (காஷ்மீரின் சிலாதித்தியராக இருக்கலாம் என்றும் கருதுவர்)

ஹர்ஷர் அப் படைப்புகளை உருவாக்கியவரா அல்லரா என்று அறிய அப் படைப்புகளில் காணப்படும் குறிப்புகளையே ஆதாரமாகக் காட்டலாம். நாடகத்தின் தொடக்கத்தில் ஒவ்வொரு நாடகத்திலும் சூத்திரதாரி எனப்பட்டவன் மேன்மை தாங்கிய நமது மன்னர் ஹர்ஷர் இரத்னாவளி அல்லது நாகானந்தம் அல்லது பிரியதர்ஸிகா என்ற நாடகத்தை இயற்றியுள்ளார் என்று கூறுவான்.

மூன்று நாடகத்திலும் ஹர்ஷரால் அவை உருவாக்கப் பட்டன என்று காட்ட மற்றுமொரு சான்று உள்ளது. சூத்திரதாரி "ஸ்ரீ ஹர்ஷர் சிறந்த கவிஞர்" என்று தொடங்கி அவரைப் புகழ்ந்துரைப்பது போல எழுதப்பட்டுள்ளது. மக்கள் முன்னிலையில் நாடகம் தொடங்கும் முன் அவ்வாறு இல்லாமல் சிறப்பித்துக் கூறியிருக்க முடியாது.

'பாரத வாக்யம்' என்ற பாடல் அடிகள் பிரியதர்ஸிகாவையும், இரத்னாவளியையும் ஒத்துள்ளன என்பதோடு மிகச் சிறிதளவே வேறுபாடு கொண்டுள்ளன. நாகானந்தத்தின் பாரத வாக்யம் இரத்னாவளி, பிரியதர்ஸிகா ஆகியவற்றினின்றும் சிறிதே மாறுபாடாய் உள்ளது. எனினும் அவை ஒரே கருத்தையும், விளக்கத்தையும் கொண்டுள்ளன.

நாடகங்களின் பாடல் அடிகளும் ஒன்றையொன்று ஒத்துக் காணப்படுகின்றன. பிரியதர்ஸிகாவில் வரும் பாடல் அடிகளை நாகானந்தத்திலும் காணலாம். பிரியதர்ஸிகாவின் மூன்றும் அங்கத்தின் மூன்றும் பாடல், நாகானந்தத்தின் நான்காம் அங்கத்தின் நான்காம் பாடலும் ஒன்றே போல்வன. அதைப் போலவே, பிரியதர்ஸிகாவின் மூன்றும் அங்கத்தின் பத்தாம் பாடல் இரண்டும் ஒன்றையொன்று ஒத்துள்ளன. அவ்வாறு ஒத்திருத்தல் இயலக் கூடியதே. ஏனெனில், அவற்றில் ஒன்று முன்னதாக எழுதப்பட்டு அது மற்றவற்றில் பின்பற்றப் பட்டிருக்கலாம் என்ற வாதத்தை மறுப்பதற்கில்லையாயினும், மற்றைய கூறுகளின் துணைகொண்டு அவ் வாதத்தையும் முறியடிக்கலாம். பாடல்களின் அமைப்பு, கவிநயம், சொல்நயம், வாக்கிய அமைப்பு முதலானவைகளைக் கொண்டு ஆராய்ந்த அறிஞர்கள் ஒருவராலேயே அம் மூன்று நாடகங்களும் எழுதப் பட்டிருக்க வேண்டும் என முடிவு கட்டுகின்றனர்.

ஹர்ஷரும் அவர் தம் முன்னோர்களும் சிவனையும் பகலவனையும் வழிபடும் சிந்தையோர். அந் நாடகங்களில் அக்

கருத்து காணப்படுகிறது. இரத்னாவளி, பிரியதர்ஸிகாவில் முதலாவது அங்கத்திலேயே சிவனும், கௌரியும் புகழப் பட்டுள்ளனர். நாகானந்தத்தில் சூரியனை மிக உயர்வாகப் பாராட்டியுள்ளனர். நாடக ஆசிரியர் சிவன்பாலும், சூரியன் பாலும் கொண்ட பற்று ஹர்ஷரே பிரியதர்ஸிகா, இரத்னாவளி, நாகானந்தம் முதலானவற்றின் ஆசிரியர் என்பதனை மற்றைய சான்றுகளுடன் மெய்ப்பிக்கின்றன.

நம் மனத்தில் அடுத்து எழும் கேள்வி ஒன்று உள்ளது. ஹர்ஷரே மேற்கூடிய மூன்று நாடகங்களின் ஆசிரியர் என்று காட்ட இலக்கிய, பட்டய ஆதாரங்கள் எவ்வளவு இருந்த போதிலும், ஹர்ஷவர்த்தனர் அவற்றின் ஆசிரியர் அல்லர் என்று எண்ணவைத்தவை எவை? ஏதனால்? என்பனவே அக் கேள்விகள். அதனையும் இங்குக் காணுதல் இன்றியமையாத தாகும்.

கி. பி. 11 ஆம் நூற்றாண்டில், காஷ்மீர ஆசிரியர், மம்மதா என்பவர் காவியப் பிரகாசம் என்ற நூலை எழுதினார். கவிபுனை வதனால் பெறுகின்ற சிறப்பினைக் குறிப்பிட்டு மம்மதா விளக்கு கிறார். காளிதாசரைக் குறிப்பிட்ட அவர் தாவகா ஹர்ஷரிட மிருந்தும் மற்றைய அரசர்களிடமிருந்தும் செல்வச் சிறப்பினைப் பெற்றார் என்று கூறுவதிலிருந்து, அம் மூன்று நாடகங்களை இயற்றியதற்காகவே செல்வம் பெற்றார் என்றும், ஹர்ஷரை அவற்றின் ஆசிரியர் எனக் கருதச் செய்தார் என்றும் கருதப் படுகிறது.

காவியப் பிரகாசச் சுவடிதானு என்ற உறுதிப்படாத சுவடிகளிலிருந்தே அக் குறிப்புப் பெறப்பட்டது என்பதனை முதலில் நினைவில் கொள்ளுதல் வேண்டும். காவியப் பிரகாசாவின் எல்லா ஓலைச் சுவடிகளுமே, தாவகாவிற்குப் பதிலாகப் பாணரின் பெயரைக் குறிப்பிடுகின்றன. சோத்தலாவின் குறிப்பிலிருந்து பாணர் பொருள் பெற்றார் எனக் கண்டோம். இதனை அடிப் படையாகக் கொண்டு பாணரே அவற்றிற்கு ஆசிரியர் எனவும், ஹர்ஷரிடம் பணத்திற்காக விற்றுவிட்டார் எனவும் டாக்டர் பிட்ஸிட்வார்டு ஹால் என்பவர் குறிப்பிட்டார்.

இந்த விவாதத்தில் டாக்டர் திரிபாதி தக்க விளக்கத்தை அளித்தார். பாணர்தாம் அவற்றை ஆக்கியவர் என்ற கேள்விக்கே இடமில்லை என்றார் அவர். ஹர்ஷரின் நாடகங் களையும், பாணரின் காதம்பரியினையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே ஹர்ஷரின் நாடகங்கள் மொழி அமைப்பிலிருந்து மாறுபட்ட னவாக உள்ளதை உணரலாம். பாணருக்குப் பணம் தேவை

யென்றால் காதம்பரியை அவ்வாறு அரசரிடத்து விற்றிருக்கலாமே? இப்படியும்கூடக் கூறலாம். காதம்பரியைவிடச் சிறப்பில் குறைந்தவையான அந் நாடகங்களை ஹர்ஷர் வாங்கியிருக்க முடியாது. பண்டைய அறிஞர்கள் பணத்தையோ, புகழையோ பெரிதும் விரும்பவில்லை என்பது உண்மையே.

காவியப் பிரகாசத்தில் காணப்படும் 'ஸ்ரீ ஹர்ஷதர் தாவகா (பாணர்) தீட்சமிவ தனம்' என்ற சொற்றொடர் ஹர்ஷர் புலவரைப் போற்றும் புரவலர் என்று காட்டுகின்றதே யன்றித் தங்கள் படைப்புகளை அரசர்களிடம் காட்டிப் புலவர்கள் பொருள் பெற்றனர் என்று காட்டவில்லை. அவ்வளவு சீரோடும் சிறப்போடும், வாளேந்திப் போர்க்களம் புகுந்து புவியாண்ட சிறப்புடைய மன்னர் ஒருவர் அத்தகைய இழிவான வழியில் சிறப்பும் புகழும் பெறச் செய்வார் என்பதை யாரும் ஏற்க மாட்டார்கள்.

அறிஞர்கள் சிலர் நாகானந்தம் நூலை எழுதி அஹிம்சையைப் பௌத்தத்தின் தலையாய கொள்கையாக விளக்கும் நூலாசிரியர் சிவனையும், கௌரியையும் வழிபட்டுள்ள குறிப்பைக் கொண்ட இரத்னாவளியையும், பிரியதர்ஸிகாவையும் உருவாக்கியிருக்க முடியாது என்று வாதாடினர் எனினும் அது பொருத்தமான வாதமாகாது. அஹிம்சைக் கோட்பாடு அனைத்து இந்திய மதங்களுக்கும் உரிய ஒன்றுதான். சமய ஒற்றுமையை வலியுறுத்தும் அந்த உயர்ந்த பண்பினைப் போற்றக் கடமைப்பட்டவர்கள் நாம். ஹர்ஷ வர்த்தனர் சமயப் பொறை உணர்வுடைய வேந்தர். தம் முன்னோர்களின் வழியில் சிவனை வழிபட்ட அவர் தொடர்ந்து பௌத்தத்தின்பால் ஈடுபாடு கொண்டார்.

இதுவரை கண்ணுற்ற விவாதங்களின் அடிப்படையில் இரத்னாவளி, பிரியதர்ஸிகா, நாகானந்தம் ஆகிய மூன்று படைப்புகளுக்கும் ஆசிரியராக விளங்கியவர் ஸ்ரீ ஹர்ஷரேயன்றி வேறு யாருமல்லர் என்று துணிந்து கூறலாம்.

இராஜசேகரன் என்பவரின் கவி விமர்ஸாவின் அடிப்படையில் ஹர்ஷரால் அந் நாடகங்கள் எழுதப்படவில்லை என்று சிலர் கூறியதும் தவறான அடிப்படையில் எழுந்ததே. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாகோஜி என்பவர் தாவகா, இரத்னாவளியை இயற்றி ஹர்ஷரிடமிருந்து பணம் பெற்றார் என்று கூறியதைப் போலவே, மற்றொரு உரைகாரர் பரமானந்தாவும் கூறினார். பிஸ்செல்லும் அவ்வாறே கூறினர். அறிஞர்

பெருமக்கள் அக் கருத்துத் தவறு என நிரூபித்தனர். தாவகா வடமொழிப் புலவர் என்ற வரலாறே ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. ஆனால், பியூஹிலர் முதலானோர் பாணரை அவற்றின் ஆசிரியர் என்றனர்.

எஸ். எம். பராஞ்சிபே அந் நாடகங்களில் உள்ள குறிப்புகள் சிலவற்றின் அடிப்படையிலும், இலக்கிய அடிப் படையிலும் ஆராய்ந்து அந்த மூன்று நாடகங்களும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு உரியன எனவும், அவற்றின் ஆசிரியர் பாஸரே எனவும் கூறிய கருத்துக்கு வலுவான ஆதாரம் ஏதுமில்லை. அத்தகைய ஆராய்ச்சி வேறு மாறான விளைவு களையும் ஏற்படுத்திவிடும். பாஸரின் காலத்தில் வாழ்ந்தவரே ஹர்ஷர் என்று முடிவு கட்டவேண்டிவரும்.

அறிஞர்களில் பெரும்பாலானவர்கள் ஹர்ஷ வர்த்தனரே இரத்னவளி, பிரியதர்ஸிகா, நாகானந்தம் ஆகிய மூன்று நாடகங்களின் ஆசிரியர் என்ற கருத்தினை ஏற்றுக்கொள் கின்றனர். அவை கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட படைப்புகளே எனவும் கருதுகின்றனர். ஹர்ஷரே இம் மூன்று இலக்கியங்களையும் படைத்தவர் என டாக்டர் தேவஸ்தாலி, 'Classical Age' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

இதுவரையில் ஹர்ஷ வர்த்தனரின் இலக்கியப் படைப்புகள் எனப்பட்டவை அவருக்கு உரியனவா? அல்லவா? என ஆராய்ந் தோம். இனி, ஹர்ஷரின் இலக்கியப் புலமையின் சிறப்புகள் குறித்துக் காண்போம்.

ஹர்ஷ வர்த்தனரின் நாடகங்களில் பிரியதர்ஸிகாவே முதலாவது படைப்பு எனவும், நான்கு அங்கங்களையுடைய நாடகம் எனவும் அறிகிறோம். கதைத் தலைவியின் பெயராலேயே பிரியதர்ஸிகா என அந் நாடகம் அழைக்கப்பட்டது.

**பிரியதர்ஸிகா**

பிரியதர்ஸிகா காதலும் நகைச்சுவையும் கலந்த ஒரு நாடகம். அரசனுக்கும், மாறுவேடத்திலிருந்த அரசிக்கும் இடையேயான காதலையும், பட்டத்து அரசி அதனால் பொறாமை கொள்வதையும், இறுதியில் இளமையில் காணாமல் போன தன் ஒன்று விட்ட சகோதரியே அந்த அரசனால் விரும்பப்பட்ட பெண் என்று அறிந்து மனம் மாறுவதையும் அந் நாடகம் எடுத்துரைக்கிறது.

நாடகச் சுருக்கத்தினைக் காண்போம். அங்க நாட்டு அரசன் திருத வர்மன் தன் மகள் பிரியதர்ஷிகாவைக் கௌஸாம்பியைத் தலைநகராகக் கொண்ட, வத்ச நாட்டின் அரசன் உதயணனுக்கு மணம் முடித்துத் தர வாக்குறுதி அளிக்கிறார்.

அவ்வாறு அங்க நாடும் வத்ச நாடும் மண உறவு கொள்ள முயன்றதைக் கலிங்க அரசன் விரும்பவில்லை. பிரியதர்ஷிகாவை மணக்க அவரும் எண்ணம் கொண்டார். எனவே, அங்க நாட்டின் மீது படையெடுத்து அதனைத் தோல்வியுறச் செய்து திருத வர்மனைக் கைதியாக்கியபோதிலும், விநையவசு என்பவனால் பிரியதர்ஷிகா காப்பாற்றப்பட்டார். விநையவசு பிரியதர்ஷிகாவை விந்தியமலைப் பகுதிக்குக் கொண்டு சென்று விந்திய அரசனின் பாதுகாப்பில் விட்டுவிட்டுப் பயணம் புறப்பட்டார். விதி பிரியதர்ஷிகாவிற்குத் தொடர்ந்து பாதுகாப்பினை அளிக்கவில்லை. மீண்டும் விளையாடியது.

விந்திய அரசன் விந்திய கேதுவும் போர்க்களத்தில் கொல்லப் பட்டார். பயணம் சென்று திரும்பிய விநையவசு அரசியைக் குறித்த செய்தியை அறிய முடியவில்லை. விந்திய கேதுவைப் போர்க்களத்தில் தோற்கடித்தவன் வத்ஸராஜாவின் சேனாதிபதி விஜயசேனன் என்பது தெரியவந்தாலும் விந்திய கேதுவிற்கு எதிர்ப்பாக ஏன் இப் போர் நடைபெற்றது என்ற காரணம் தெரியவில்லை. போரில் கிடைத்த வெற்றிப் பொருள்களுடன் கன்னி ஒருத்தியையும் விஜயசேனன் அரசரிடம் சேர்ப்பித்தார். அக் கன்னி பிரியதர்ஷிகா எனினும் தான் யாரென்று கூறிக் கொள்ளவில்லை. வத்ச அரசன் உதயணன், தலைமை அரசி வாசவதத்தாவிடம் அப் பெண்ணை அளித்துக் கலை கல்வி, முதலியன பயிற்றுவிக்கச் செய்தார்.

பிரியதர்ஷிகா வனத்திலிருந்து வந்த கன்னியாதலால் 'ஆரண்யகா' என்ற பெயராலேயே அழைக்கப்பட்டாள். விந்திய கேதுவின் மகள் என்றே கருதப்பட்ட ஆரண்யகா வனத்தில் வழிபாட்டிற்கு மலர் பறிக்க வந்தபோது அரசனின் பார்வையில் பட்டாள். அப்போது மலர் பறித்த மங்கையை மது அருந்த வந்த தேனீ கொட்டிவிட உதவிக்கு வந்த பணிப் பெண்ணை அழைத்தாள். தூரத்தில் இருந்தமையால் பணிப்பெண் உதவிக்கு வர இயலவில்லை. விதூஷகன் சொல்கேட்டு அரசன் உதவ ஓடிச் சென்று தாமரையை ஒத்த அவள் அழகைப் புகழ வாய்ப்புக் கிடைக்கப் பெற்றான். ஆடவரின் தரிசனம் கண்ட அவள் மீண்டும் பணிப்பெண்ணைக் குரல் கொடுத்து அழைத்தாள்.

(தன் தந்தையால் தனக்கு நிச்சயிக்கப்பட்ட மன்னவரே தனக்கு உதவியவர் என்று அறிந்து நாணம் மேலோங்கக் காதலில் கனிந்து மீண்டும் அம் மன்னவனைக் காண விழைந்தாள்.)

அதன் பின் அரசியின் தோழி உதயணன்-வாசவதத்தாவின் காதலை விளக்கும் நாடகம் ஒன்றை அமைத்தாள். அந் நாடகம் நடைபெற்றபோது ஆரண்யகா வாசவதத்தையாகவும் அரசியின் பணிப்பெண் உதயணனாகவும் பங்கு பெற்றனர். அரசன் இரகசியமாகப் பணிப்பெண்ணுக்குப் பதில் தன்னுடைய வேடத்தில் தானே தோன்றி ஆரண்யகாவிடம் கொண்ட காதலை வெளிப்படுத்தினார். இந்தச் செய்தி பட்டத்து அரசியின் காதுகளுக்கு எட்டியதால் அரசனுக்கு இவ் விஷயத்தில் உதவியாய் இருந்த விதூஷகனையும், ஆரண்யகாவையும் உடனடியாகக் கைது செய்ய அரசியின் ஆணை பிறந்தது. அரசர் அரசியிடம் நேரடியாக மன்னிப்புக் கேட்டும் அவள் கோபம் தணியவில்லை. விளைவு ஆரண்யகா சிறைக்கூடத்திற்கு அனுப்பப்பட்டாள்.

தன் தாயின் உடன்பிறந்த சகோதரியின் கணவர் திருதவர்மன் கலிங்க அரசனின் கைதியாக இருக்கின்ற செய்தியை வாசவதத்தை கேள்விப்பட்டாள். ஆனால், உதயணனின் தளபதி திருதவர்மனை மீட்டுக் கொண்டுவந்தார். இளவரசி பிரியதர்ஸிகாவின் இருப்பிடம் எங்கே என்ற செய்தி தெரியவில்லை என்ற நிலை அரசியை வருத்தியது. ஆரண்யகாதான் பிரியதர்ஸிகா என்பதும் அரசிக்குத் தெரியவில்லை. எனினும், ஆரண்யகாவை விடுவிக்க ஆணையிட்டாள். ஆனால், அதற்குள் ஆரண்யகா நஞ்சு உண்ட செய்தியறிந்து ஆரண்யகாவைத் தன்முன் கொண்டுவரச் சொன்னாள். ஆரண்யகாவின் நிலை மிகவும் மோசமாயிற்று. (திருதவர்மனின் அந்தரங்கப் பணியாளர் ஆரண்யகாதான் பிரியதர்ஸிகா என்று கண்டு அறிவித்தார். விஷமுறிவு வைத்தியத்தில் தேர்ந்த உதயணன் அதனைப் பயன்படுத்திப் பிரியதர்ஸிகாவை உயிர் பிழைக்கச் செய்தார்.) காணாமல் போன தங்கை கிடைத்ததில் வாசவதத்தை மகிழ்ந்தாள். பிரியதர்ஸிகா வத்ஸராஜா உதயணனின் சட்டபூர்வ மனைவியானாள். இவ்வாறாக மகிழ்ச்சியான முடிவைக் கொண்ட நாடகமாகப் பிரியதர்ஸிகா அமைந்தது.

## இரத்னவளி

பிரியதர்ஸிகாவின் பாணியில் எழுதப்பட்ட நாடகம் இது வாகும். கௌசாம்பியின் உதயணனுக்கு இலங்கை அரசன்

விக்ரம பாகுவின் மகள் இரத்னவளி நிச்சயம் செய்யப்பட்டாள். அரசனின் தலைமை அரசி வாசவதத்தா. இரத்னவளி கப்பல் விபத்தில் சிக்கி உதயணனின் அரண்மனைக்குக் கொண்டுசெல்லப் பட்டாள். வாசவதத்தாவிடம் இரத்னவளி யார் என்பதையும், உதயணனுக்கு நிச்சயிக்கப்பட்டவள் என்பதையும் கூறாமல் இரத்னவளியைத் தலைமை அமைச்சர் ஒப்படைத்தார். நாடகம் முழுமையும் அவள் சாகரிகா என அழைக்கப்பட்டதற்குக் காரணம் கடல் விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதே.

சாகரிகாவை ஒருநாள் அரண்மனைத் தோட்டத்தில் கண்டார். முதல் சந்திப்பிலேயே காதல் அரும்பு மலர்ந்து விட்டது. தொடர்ந்து மணம் வீசவும் தொடங்கியது. வாசவதத்தா அதனை அறிந்து சாகரிகாவைச் சிறையில் அடைத்தாள். அரசனின் அரண்மனையில் ஏற்பட்ட தீ விபத்திலிருந்து சாகரிகாவைக் காத்தார். அப்போது கடல் விபத்திலிருந்து அரசியைப் போலவே தப்பிப் பிழைத்த விக்ரம்புவின் அமைச்சர் வசுபூதி அங்குத் தோன்றிச் சாகரிகா யார் என்ற உண்மையினை எடுத்துரைத்தார். வாசவதத்தா தனக்கு ஒருவகையில் தங்கை என உணர்ந்து இரத்னவளியைத் தன் கணவரின் மற்றொரு மனைவியாக ஏற்றார். இந்த நாடகமும் மகிழ்ச்சியான முடிவைக் கொண்டதாக அமைந்தது.

**நாகானந்தம்**

வடமொழி இலக்கியங்களில் சிறந்தவற்றில் ஒன்றாக நாகானந்தம் இலக்கிய விமர்சகர்களால் கருதப்படுகிறது. இந் நாடகத்தின் நாயகனான வித்தியாதர அரசன் ஜீமுத வாகனன் தம் அமைச்சர்களின் பொறுப்பில் ஆட்சியை ஒப்படைத்து விட்டுக் கானகத்தில் வானப்பிரஸ்த வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்துவந்த தம் பெற்றோர்களுக்குப் பணிபுரியச் சென்றார். அப்போது அவருடன் விதூஷகர் என்ற நண்பரும் சென்றார். அவ்விருவரும் மலேயா மலைக்குச் சென்று அங்குத் தகுந்த இடத்தைத் தங்குவதற்குத் தேடினர். அம் மலையின் இயற்கை அழகில் வயப்பட்ட ஜீமுத வாகனன் அங்கேயே தங்க விரும்பினான். அப்போது எங்கிருந்தோ ஓர் இனிய குரல் வந்தது. குரல் வந்த இடம் நோக்கிச் சென்ற போது மலையவதி என்ற பெயர் கொண்ட அழகுக் கன்னியைக் கௌரி அன்னையின் ஆலயத்தில் கண்டார். ஒருவரை ஒருவர் கண்டு காமுற்றனர். அப்போது அங்கு முனிவர் ஒருவர் வரவே மலையவதி தம் இருப்பிடம் நோக்கிச் சென்றார். இவர்கள் இருவரும் தம் இடம் சென்றடைந்தனர்.



படம் 13.
ஜப்பானில் நடைபெறும் பகாரு ரையோ-ஓ நிகழ்ச்சியில் ஹர்ஷர் இயற்றிய நாகானந்தம் நாடகமாக நடிக்கப்படுதல்

(மலையவதியும் அவளுடைய பணிமகள் சதூரிகாவும் இருந்த இடத்தை ஜீமூதவாகனரும், விதூஷகரும் அடைந்தபோது அவ் விருவரும் மறைந்துகொண்டனர்.) அப்போது மலையவதியின் சகோதரன் தன் தங்கையைத் தலைவனுக்கு மணம் முடித்துத்தர முன்வந்தபோது மலையவதிதான் தன்னால் காதலிக்கப்பட்ட மித்திரவசுவின் தங்கை எனத் தெரியாமல் அந்த வேண்டுகோளை மறுத்துவிட்டார். ஜீமூதவாகனரின் தந்தையுடன் மித்திரவசு மணம் பேசச் சென்றபோது மலையவதி தற்கொலை செய்து கொள்ள முயன்றார். அதனைக் கண்ட சதூரிகா குரல் எழுப்ப ஜீமூதவாகனன் ஓடிவந்து மலையவதியைக் காப்பாற்றினார். அப்போது ஜீமூதவாகனன் தந்தையின் இசைவு அத் திருமணத் திற்குக் கிடைத்தது. அன்றே இருவரின் திருமணமும் நடைபெற்றது.

திருமணம் முடிந்தபின் தலைவனும், தலைவியும் மகிழ்வுடன் வாழ்ந்துவந்தனர். மித்திரவசு மாதங்களின் படையெடுப் புச் செய்தியைச் சொல்லி அப்படையெடுப்பிற்குத் தான் ஆயத்த மாக இருப்பதாகக் குறிப்பிட்டபோது ஜீமூத வாகனன் போரையும் மக்கள் கொலை செய்யப்படுவதையும் தாம் விரும்ப வில்லை என்று குறிப்பிட்டார்.

கடற்கரைக்கு ஒருமுறை ஜீமூத வாகனர் சென்றிருந்த போது பாம்புகளின் எலும்புக் குவியல்களைக் கண்டார். எப்படி அங்கு எலும்புக் குவியல்கள் சேர்ந்தன என்பதை மித்திர வசு விளக்கினார். கருடனும், நாகதேவன் வாசுகியும் ஓர் உடன் படிக்கை செய்துகொண்டனர் எனவும், அதன்படி தினமும் ஒரு பாம்பு கருடனுக்கு அனுப்பப்பட்டுவருகிறது எனவும் குறிப் பிட்டார். ஒரு பாம்பின் உயிரையேனும் காப்பற்ற விரும்பிய ஜீமூத வாகனன் தம்மை ஒரு நாள் கருடனுக்கு அர்ப்பணித்துக் கொள்ள முடிவு செய்தார். இந் நேரத்தில் மித்திரவசு தம் தந்தை யினால் அழைக்கப்படவே சென்றுவிட்டார். அப்போது அங்கு சிங்குசூடன் என்ற பாம்பும், அப் பாம்பின் தாயும் கருடனுக்கு பலியாவதை எண்ணி அழுதபடி வந்தன. ஜீமூத வாகனர் அவர் களுக்குப் பதிலாகத் தம் உயிரைக் கொடுத்தார். இச் செய்தியினை அறிந்த ஜீமூத வாகனரின் பெற்றோர்களும் மலையவதியும் மனம் நொந்து நெருப்பை வளர்த்து உயிர் துறக்க மலேயா மலைக்குச் சென்றனர்.

நேர்மையான அரசன் ஒருவனைத் தவறுதலாகத் தான் உண்டதை யெண்ணி வருந்திய கருடன் இந்திரனிடமிருந்து

அமிர்தத்தைப் பெற்று ஜீமூத வாகனனுக்கு மீண்டும் உயிர் கொடுக்கப் பறந்து சென்றது. மலையவதியும் ஜீமூத வாகனரின் பெற்றோர்களும் நெருப்பில் குதிக்க இருந்தபோது கௌரிதேவி தோன்றி ஜீமூத வாகனனை உயிர் பெற்றெழச் செய்தாள். அப்போது கருடன் அமிர்தத்தைக் கொண்டு வந்து தெளிக்க அனைத்து நாகங்களும் உயிர் பிழைத்தன. கௌரி அன்னை ஜீமூத வாகனனை வித்தியாதரர்களின் பேரரசராக்கினர். மாதங்களும், மற்ற எதிரிகளும் அவரைத் தம் பேரரசராக ஏற்றுக் கொண்டனர். அத்துடன் நாடகம் முடிவுற்றது.

இனி, ஹர்ஷர் எந்த அளவிற்கு நாடக இயல்புகளை அறிந்தவராகவும், நாடக ஆசிரியராகவும் விளங்கினர் என்பதனை விளக்கமாகக் காண்போம். நாடக இலக்கணத்தில் வகுத்துள்ள முறைகளில் ஒரு சிறிதும் குறைவுபடாமல் வெற்றிகரமாக அந் நாடகங்களை அவர் உருவாக்கியுள்ளார். பிரியதர்சிகா, இரத்னவளி இரண்டும் ஒன்றேபோல் அமைந்துள்ளன. இவ் விரு நாடகங்களின் நடை, கதை, கரு, கொள்கை, சூழ்நிலைகள், கோட்பாடுகள், பொருளைக் கைக்கொள்ளும் முறை ஆகியவையும் ஒன்ருக அமைந்துள்ளதைப் போல அவ் விரண்டிலும் பொதுவான கதாபாத்திரங்களையும் காண்கிறோம். வத்ஸராஜா உதயணரும் அவருடைய பட்டத்தரசி வாசவதத்தையும் அவ் விரு நாடகங்களிலும் காணப்படுகின்றனர். வசந்தகன் என்ற விதூஷகன் அவ் விரண்டிலும் கதைத் தலைவனின் நண்பன் ஆவான். அதைப்போலவே வாசவதத்தையையும் பணிப்பெண் காஞ்சன மாலையையும் காண்கிறோம்.

நாடகப் பாத்திரங்கள் மட்டுமன்றிக் கதையும், அதைக் கொண்டுசெல்லும் முறையும் பெரும்பாலும் ஒத்துள்ளன. கதைத்தலைவன் தலைவியைச் சந்திக்கின்ற வாய்ப்புகள் அவ் விரண்டிலும் ஒத்துள்ளன. அவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களும் ஒத்துள்ளன. பிரியதர்ஸிகாவில் தளபதி விஜயசேனன் விந்திய கேதுக்கு எதிராக மேற்கொண்ட படைபெடுப்பின் வெற்றியைக் குறிப்பிடுவதைப் போல இரத்னவளியில் கோசலத்திற்கு எதிராக அனுப்பப்பட்ட தளபதி அத்தகைய சூழ்நிலையைக் காட்டுகிறர். போர்கள் குறித்த விளக்கமும் ஒன்ருகவே அமைந்துள்ளன. ஸ்வத்தி வசனச் சடங்குகள் பிராமணர்களின் வழிபாட்டின்போதும் சமயச் சடங்குகளின்போதும் ஒன்ருகவே நாடங்களில் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாருகப் பிரியதர்ஸிகாவிலும், இரத்னவளியிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு வகைகளில் ஒத்துள்ள பல

குறிப்புகளைக் காண்கிறோம். ஆனால், நாகானந்தம் இவ்விரண்டினின்றும் வேறுபட்ட சூழ்நிலையைக் காட்டுகிறது.

ஹர்ஷர் தம்முடைய நாடகங்களில் காட்டுகின்ற குறிப்புகளிலெல்லாம் அவை புதிய நாடகங்கள் போல் குறிப்பிடுகிறார். பாண்டவர்களின் வழியில் வந்தவரான உதயணனைப்பற்றி நமக்குப் புராண ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஹர்ஷரின் நாடகங்களான பிரியதர்சிகா, இரத்தினாவளி இரண்டிலும் கதாநாயகனாகக் காட்டப்பட்டிருப்பவர் உதயணனே. உதயணன் ஆற்றல் மிகுந்த அரசராக விளங்கியதால் அவருக்குப் பல்வேறு மரபுகளிலும், இலக்கியப் படைப்புகளிலும், மரபுவழிக் கதைகளிலும், குறிப்பிடத் தகுந்த இடம் வழங்கப்பட்டிருக்கிறது. (புத்தர் பிறந்த நாளில் பிறந்தவர் எனவும், புத்தருக்குச் சமகாலத்தில் வாழ்ந்தவர் எனவும் உதயணன் குறிப்பிடப்பட்டுள்ளார்.)

(ஏராளமான பௌத்த சமண மரபுகளில் உதயணனைக் குறித்தும், அவருடைய வீரச் செயல்களைக் குறித்தும் எழுதப்பட்டுள்ளன. ஹர்ஷர் உதயணனைத் தம்முடைய நாடகங்களில் தலைவனாக்குவதற்கு முன்னரே பாசா, சுவப்னவாசவதத்தா, பிரதிக்ஞாய யுகந்தராயணா முதலிய நாடகங்களில் சிறப்பான பங்கை அளித்துள்ளார். கௌடில்யரும் உதயணனைக் குறிப்பிடுகிறார். உதயணனும், வாசவதத்தாவும் பதஞ்சலி முனிவராலும் நன்கு அறியப்பட்டவர்கள். உதயணனின் வெற்றியைப் பற்றிச் சூத்ரகர் குறிப்பிடுகின்றார். காளிதாசர் தம் மேகத்தூதத்தில் அவந்தியின் மூத்தோர் குபேரனின் கதையினை அறிந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார். உதயணன் வாசவதத்தா கதை க்ஷேமேந்திராவின் பிருஹத்கதா மஞ்சரியிலும், சோம தேவரின் கதா சரித சாகரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. க்ஷேமேந்திராவும், சோமதேவரும் காஷ்மீரத்தைச் சார்ந்தவர்கள். எனவே இலக்கிய மரபுகளிலும், மரபுவழிக் கதைகளிலும் காணப்படுகின்ற பாத்திரங்களை ஹர்ஷரின் நாடகங்களிலும் காண்கிறோம். (ஹர்ஷர் தம்முடைய நாடகங்களில் செய்த மாறுதல் என்ன என்று ஆராய்கின்றபோது கதையானது கதைத்தலைவனை மையமாகக் கொண்டு அமைக்கப்படாமல் கதைத் தலைவியை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது.) வத்ச அரசன் உதயணனையும் அவருடைய ஆளுமை ஆற்றலையும் எடுத்துக் காட்டக்கூடிய இலக்கிய மரபுகள் எண்ணிறந்தன உள்ளன. எனவே, அவற்றில் எதனை அடிப்படையாகக் கொண்டு ஹர்ஷர் தம் நாடகங்களை உருவாக்கினார் என்று குறிப்பிட்டுக் காட்டுவது கடினமேயாகும்.)

காளிதாசர், பாசா முதலானவர்களின் இலக்கியப் போக்கு எந்த அளவிற்கு ஹர்ஷரின் படைப்புகளில் பிரதிபலித்தது என்பதனைக் காண்போம். காளிதாசரின் மாளவிகாக்கினிமித்திரத்தின் நிழல் ஹர்ஷரின் பிரியதர்சிகாவில் படிந்துள்ளது. தலைவி ஆடல் பாடலில் பங்கு கொள்ளுதல், தலைவன் தலைவியைச் சந்திக்குமிடம் முதலானவை பிரியதர்சிகாவிலும், மாளவிகாக்கினிமித்திரத்திலும் எதிரொளித்தன. காளிதாசரின் நாடகமான மாளவிகாக்கினிமித்திரம் போன்று அவருடைய விக்கிரம ஊர்வசியம் ஹர்ஷரின் பிரியதர்சிகாவை ஓரளவிற்கு ஒத்ததாகக் காணப்படுகிறது. விக்கிரம ஊர்வசியத்தில் காட்டப்படும் மதியக் காட்சியும், அவற்றால் மயில்களுக்கும் தேனீக்களுக்கும் ஏற்படும் விளைவுகளும் பிரியதர்சிகாவில் காணப்படும் காட்சியினை நினைவூட்டுகின்றன.

விக்கிரம ஊர்வசியம், மாளவிகாக்கினிமித்திரம் ஆகியவை போல காளிதாசரின் சாகுந்தலமும் சில காட்சிகளை நம் நினைவிற்குக் கொண்டுவருகின்றது. காளிதாசரின் படைப்புகள் எப்படி ஹர்ஷ வர்த்தனரின் நாடகங்களில் பிரதிபலித்தனவோ அதுபோலப் பாசாவின் நாடகங்கள் சிலவற்றின் கருத்துகளும் எதிரொளிப்பதைக் காண்கிறோம். ஹர்ஷர் நாடக ஆசிரியராக விளங்கியதால் காளிதாசர், பாசா முதலானோரின் நாடகங்களையும் அவர்களுக்கு முற்பட்டவர்களின் நாடகங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்திருக்க முடியும்.

ஹர்ஷரின் நாடகங்கள் அனைத்துமே அவ்வாறு ஏற்கெனவே காணப்பட்ட மரபு வழியிலான நாடகங்களை அடிப்படையாகக் கொண்டனவா என்றால் ஹர்ஷரின் மூன்றாவது நாடகமான நாகானந்தம் அவர்தம் கற்பனையில் எழுந்த ஒன்றே என்று கூறலாம் என்று கூறப்பட்டது. ஆனால், ஹர்ஷ வர்த்தனர் அத்தகைய குறிப்பு எதனையும் அளிக்கவில்லை. அவருடைய மற்ற இரு நாடகங்களின் கதையைப் போல ஜீமுத வாகனனின் கதையும் குணாதியாவின் பிருகத் கதாவில் காணப்படுகிறது.

ஹர்ஷர் எழுதிய நாடகங்கள் எப்போது எழுதப்பட்டன? அவற்றில் காலத்தால் முந்தியது எது? மூன்றில் எது முன்னர் எழுதப்பட்டது? இவற்றிற்கு விடை காணுவது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை எனினும் அம் முயற்சியினை மேற்கொண்டு ஓராவிற்குச் சில விளக்கங்களைப் பெறுதல் வேண்டும். பிரியதர்ஸிகா, இரத்னவளி ஆகிய இரண்டில் பிரியதர்ஸிகாவை அதன் எளிமை, கருத்து, பொதுவான அமைப்பு முதலியவற்றால்

முதலில் எழுதப்பட்டது என்று கருதலாம். ஆனால், இரத்னாவளி, நாகானந்தம் ஆகிய இரண்டில் எது முன்னர் எழுதப்பட்டது எனக் கூறுதல் கடினமான பணியேயாகும். இரண்டுமே பிரியதர்ஸிகாவைவிட உயர்ந்த படைப்புகள்தாம். இரத்னாவளியின் இலக்கியச் சிறப்பினைக் கருதிப் பராஞ்சிபே முதலானவர்கள் நாகானந்தம் இரண்டாவதாகவும், இரத்னாவளி மூன்றாவதாகவும் எழுதப்பட்ட நூலாகக் கொள்வர். ஆனால், ஹர்ஷரின் தனிப்பட்ட வாழ்க்கைக் கண்ணோட்டத்தில் பார்த்தால், நாகானந்தமே இறுதியில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகிறது. ஹர்ஷர் தம் வாழ்க்கையின் இறுதிப் பகுதியிலேதான் பௌத்த சமயத்தின் பால் பற்று மிகக் கொண்டார். ஆக, பிரியதர்ஸிகாவை முதலாவதாகவும், இரத்னாவளியை இரண்டாவதாகவும், நாகானந்தத்தை மூன்றாவதாகவும் படைத்தார் எனலாம்.

ஹர்ஷரின் நாடகப் பாத்திரங்கள் பேசும் மொழி குறித்துக் காண்போம். எல்லாப் பாத்திரங்களும் ஒரே மொழியைப் பேசவில்லை. சூத்திரதாரி, ஆண் பாத்திரங்கள் ஒன்றிரண்டு தவிர மற்றைய அனைத்தும் அழகிய இலக்கிய அமைப்புடைய வடமொழியில் (சமஸ்கிருதம்) பேசின. மற்றைய பாத்திரங்கள் பிராகிருத மொழியில் பேசின. நாகானந்தத்தில் மாகதி மொழி பேசப்பட்டதைக் காண்கிறோம். பணியாள் ஒருவன் அம் மொழி பேசியதை ஏ. பி. கீத் எடுத்துக் காட்டினார். இலக்கிய விமரிசகர்கள் ஹர்ஷரால் பயன்படுத்தப்பட்ட சமஸ்கிருதம், உயர்ந்த நடை கொண்டது எனவும், அவருடைய பிராகிருத மொழி அறிவு பாராட்டுதற்கு உரியது எனவும் குறிப்பிடுகின்றனர். வடக்கிலும், தெற்கிலும் வெளியிடப்பட்ட பதிப்புகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

பண்டைய நாளில் அரசர்களின் அவையில் சிறந்த புலவர்கள் இருந்தனர். புலவர்களைப் போற்றும் பெருமை மிகு வாழ்வினைக் கொண்டவர்களாகவே அரசர்கள் திகழ்ந்தனர். புலவர்களால் பாராட்டப்பெறும் வாழ்வு பெருவாழ்வு என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர். தமிழகத்து மன்னர்களுள் பாண்டியன் நெடுஞ்செழியன் 'புலவர் என்னைப் பாடாது வரைக' என்று குறிப்பிட்டதைப் புறப்பாடல் எடுத்துக் காட்டுகிறது. ஹர்ஷர் தாமே பெரும்புலவராயும் நாடக ஆசிரியராயும் விளங்கியமையால் 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்ற முதுமொழிக்கேற்பக் கற்றோரைப் போற்றினர்.

தம் செல்வத்தைக் கற்றோரைச் சிறப்பிக்க அன்பளிப்பாக வழங்கினர். பாணர், மயூரா, மாதங்கா, திவாகரர் முதலானவர்கள் அவர்தம் அவைக்களப் புலவர்களாய் விளங்கினர். குறிப்பிடத் தகுந்த மேலே கூறப்பட்ட அறிஞர்களைத் தவிரப் பல அறிஞர்கள், சிந்தனையாளர்கள், தத்துவ ஞானிகள் முதலானோரும் ஹர்ஷரின் அவையினை அலங்கரித்தனர். ஹர்ஷரின் காலத்தில் மட்டுமன்றி அவர்தம் தந்தையின் காலத்திலும் அவைக்களப் புலவர்கள் இருந்தனர் என்பதைப் பாணர் குறிப்பிடுகிறார். ஹர்ஷரின் அவைக்களப் புலவர்கள் பற்றிய குறிப்பினைக் காண்போம்.

### மாதங்க திவாகரர்

பாணர், மயூரா ஆகியோரின் காலத்தில் வாழ்ந்த கவிஞரே மாதங்க திவாகரர் என்பவர். இராஜசேகரன் என்ற கவிஞர் குறிப்பிட்டதைப் போல ஸ்ரீ ஹர்ஷரின் இலக்கிய வட்டத்தில் பாணர் மயூராவிற்குச் சமமானவராக வைத்து எண்ணப்படுபவர் ஆவார். ஆனால், சமண மானதுங்காச்சார்யரின் பக்த மாரஸ்தோத்திரரின் உரைகாரர்கள், மானதுங்கர் (மாதங்கார) உஜ்ஜயினியின் அரசன் போஜரின் அவையில் வாழ்ந்தவர் என்றும், பாணர் மயூராவின் காலத்தவர் என்றும் குறிப்பிட்டனர். ஆனால், கால மரபு வரிசைப்படி அவை அடிப்படை ஏதும் இல்லாதவை. 'அவருடைய இலக்கியப் புலமையும், சிறப்புகளும் அரசரின் ஆதரவையும் பாராட்டையும் அளித்தன' என டாக்டர் ஆர். எஸ். திரிபாதி குறிப்பிட்டார்.

### மயூரா

இக் கவிஞரைப் பற்றி நமக்குக் கிடைத்த செய்திகள் மிகவும் குறைவானவையே. மயூரா பாணரின் மைத்துனர் அல்லது மாமனார் என்று நம்பப்படுகிறது. டாக்டர் வெங்கட சுப்பையா அவ்வாறு மயூராவிற்கும், பாணருக்குமிடையே மண உறவு கற்பிப்பது உண்மைக்குப் புறம்பானது என எடுத்துக் காட்டினர்.[1] பீட்டர்சன் என்பவர் பாணரின் ஹர்ஷ சரிதத்தில் காணப்படும் மயூரா தவறான கருத்து எனவும், மயூரா பாணரின் காலத்தில் வாழ்ந்த பாம்புக்கடி நோய்தீர்த்த ஜங்கூலிகா என்பவரே அவர் எனவும் கூறிக் குழப்பினர். மயூரகா என்ற பெயரை மயூரா எனத் தவறாக அவர் எண்ணிக்கொண்டார். ஜங்கூலிகா, மயூரகா என அழைக்கப்பட்டார் என்பதற்கு

1. *JORM, Vol ix, pp. 81-82*

ஹர்ஷ சரிதம் சான்று பகர்கிறது. ஐங்கூலிகாதான் பீட்டர்சன் குறிப்பிடும் மயூரா எனினும், அவர் புலவர் அல்லர் என்று கூற ஆதாரம் ஏதும் இல்லை. பாணரின் சகோதரி அல்லது மகளால் சபிக்கப்பட்டமையால் தொழு நோயராக அவர் ஆனார் என்பர். மயூர சாதகா என்ற நூலில் அவருடைய அழகை மயூரா வர்ணித்தமையால் அவ்வாறு சபித்தாள் என்பர். அப்போது சூரியனை வழிபட்டு நோய் நீக்கம் பெற்றதால் சூரியனின் அருளால் மகிழ்ந்து சூரிய சாதகம் என்னும் நூலை யாத்தார் எனவும் குறிப்பர். அறிஞர்களில் சிலர் சூரிய சாதகம், மயூர சாதகம் ஆகிய இரண்டும் வேறு வேறு நூல்கள் அல்ல; பெயர் இரண்டாயினும் நூல் ஒன்றே என்றனர். ஆனால், அக் கருத்துத் தவறானது.

அவ்வாறு சூரியனால் நோய் தீர்க்கப்பட்டார் என்ற நம்பிக்கை தோன்றக் காரணம், அந் நூலின் ஆறாம் பாடலில் நோய் தீர்க்கும் வல்லமை படைத்தவராகச் சூரியனை அவர் புகழ்ந்து பாடியதே எனலாம். சூரிய சாதகாவை மயூரா எழுதியதால் பொறாமை கொண்டு துர்க்கா தேவியைப் புகழ்ந்து தம் ஆற்றலை வெளிப்படுத்தச் சாந்தி சாதகா என்றும் நூலை எழுதினர் என்பர். மூன்றாவது நூல் கந்தபிரசஸ்தி என்பது அவருக்குரியது எனப்படுகிறது. 'கோஸா' என்றும் படைப்பினையும் உருவாக்கியவர் அவரே என்பர். ஆரியமுக்தமாலா என்னும் நூலினையும் மயூராவே ஆக்கியவர் எனக் கூறப்படுகிறது.

### பாணர்

ஹர்ஷரின் அவையில் மின்னிய நட்சத்திரங்களில் ஒளி பொருந்திய நட்சத்திரமாக விளங்கியவர் பாணரே. பாணருடைய நூல் ஹர்ஷரின் வரலாற்றை அறியச் சான்றாகப் பயன்பட்டது என்பதனை அறிவோம். இலக்கிய அடிப்படையில் அந் நூல் எவ்வகையில் சிறப்பு மிக்கது என்பதனையும், அது தொடர்பானவற்றையும் இங்குக் காணலாம். வடமொழி இலக்கிய வல்லவர் என்று அவரைக் குறிப்பிடலாம். தாமஸ், 'பாணர் வடமொழி இலக்கியப் பேரறிஞர்' எனக் குறிப்பிடுகிறார். ஹர்ஷ சரிதமும், காதம்பரியும் மொழிபெயர்ப்பு வாயிலாகப் படிக்கும்போதே பெருஞ்சுவையுடன் விளங்குகின்றன. எனவே, அவற்றின் மூலத்தை வடமொழியில் படிப்பவர்கள் மெய்ம்மறந்து போவார்கள்.

வடமொழி அறிஞர்களின் தனி வாழ்க்கையையும் அவர்தம் படைப்புகளையும் குறித்த செய்திகள் மிகக் குறைவாகவே

கிடைத்துள்ளன என்பது உண்மையே. காளிதாசரைப் பற்றிக்கூட வரலாற்றுப் பூர்வமான மறுக்க வொண்ணுச் செய்திகள் குறைவாகவே கிடைத்துள்ளன. ஒரு சிலரே தம்மைப் பற்றிய செய்திகளை அளித்துள்ளனர். பாணரின் சொந்த வாழ்க்கை குறித்த செய்திகள் கிடைத்துள்ளன.

காதம்பரியிலும், ஹர்ஷ சரிதத்திலும் பாணரின் முன்னோர்கள் வாழ்க்கை, தம் வாழ்க்கை ஆகியனவற்றை அவர் குறித்துள்ளார். 'வத்சாயனு' எனப் பாணரின் வமிசத்தவர் பெயர் பெற்றிருந்தனர். பாணரின் தந்தை பெயர் சித்திர பானு எனவும், அன்னை பெயர் இராஜதேவி எனவும், பாணரின் இளமைக் காலத்திலேயே அன்னை மறைந்தார் எனவும் அறிகிறோம். மகனைச் சித்திரபானு பரிவோடும் பாசத்தோடும் வளர்த்தார்.

ஆனால், தந்தையின் பாசத்தையும் பரிவையும் பதினன்கு வயதிற்குமேல் பெறும் பாக்கியம் தொடர்ந்து பாணருக்குக் கிட்டாமல் போனதற்குத் தந்தையின் மறைவே காரணம் எனலாம். போற்றி வளர்த்த பெற்றோர்களும் போய்ச்சேர்ந்து விட்ட நிலையில் பாணரின் வாழ்க்கையில் சோதனைதான் மிஞ்சியது. அலைந்து திரியும் பொறுப்பற்ற வாழ்க்கையை மேற்கொண்டார். அப்போது பல்வேறு மனிதர்களுடன் கொண்ட தொடர்பினால் பயிற்சியும் அறிவுத் திறனும் பெற்றார்.

அரசர் ஹர்ஷ வர்த்தனரின் வாழ்க்கை வெற்றிகளைக் காவியமாகப் படைக்குமாறு சகோதரர் சியாமளன் கூறினர். ஹர்ஷரின் சுயசரிதம் அத்துடன் முற்றுப் பெற்றுவிடுகிறது. பூசணபட்டா என்ற பாணரின் மகன் காதம்பரியின் பிற்பகுதிக்குரிய முன்னுரையில் அக் காவியத்தை முற்றுப் பெறச் செய்யாமலே மறைந்துவிட்டார் என்று கூறினர்.

யுவாங் சுவாங் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே பாணர் இறந்துவிட்டார் என்றே கருதவேண்டியுள்ளது. யுவாங் சுவாங் பாணரைப் பற்றியும், பாணர் யுவாங் சுவாங்கைப் பற்றியும் குறிப்பிடாததால் அம் முடிவிற்கு வருகிறோம். பாணர் ஆறும் நூற்றுண்டின் பின் அரையிறுதிப் பகுதியிலும், கி. பி. ஏழாம் நூற்றுண்டில் முதல் அரைப்பகுதியிலும் வாழ்ந்தவர் ஆவார்.

உரைநடை இலக்கியங்களில் தலைசிறந்தனவாகக் கருதப்படுபவை ஹர்ஷ சரிதமும், காதம்பரியும் ஆகும். இவை தவிரச்

சில படைப்புகளையும் அளித்தவர் எனப் பாணர் கருதப்படுகிருர். துர்க்கையைப் புகழ்ந்து பாடிய சாந்தி சாதகா என்பதும் அவர் இயற்றியதே எனப்படுகிறது. ஆனல், சிலர் பாணரை அதன் ஆசிரியர் என்று ஏற்க உடன்படவில்லை. சரஸ்வதி காந்தா பரணம் (காவியபிரகாசப்) என்பதில் சாந்தி சாதகாவின் சில பாடல்கள் காணப்பட்டதைக் கொண்டு அவ்வாறு கூறியதை அறிஞர் பி வி. கேன் ஏற்கவில்லை. துர்க்கையைப் புகழும் உரைகள் சாந்தி சாதகாவிலும், காதம்பரியிலும் ஒன்ருகவே அமைந்துள்ளன. பார்வதி பரிணயம் என்ற நாடகம் ஒன்றையும் அளித்தவர் பாணர் என்பர் காளிதாசரின் குமார சம்பவத்தின் பொருளைக் கொண்டதாக அது அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

பாணர் காளிதாசரிடத்துக் கொண்ட மயக்கத்திஞல் தம்மையறியாமலேயே அவருடைய பாணியில் தம் நூலை அமைத்திருக்கலாம். காளிதாசர்கூடப் பாரதத்திலிருந்தும், பகவத்கீதையிலிருந்தும் சில அடிப்படைக் கருத்துகளைக் கொண்டிருக்கிருர். பாணர் அந்த நாடகத்தைத் தம் வாழ்வின் தொடக்கக் காலத்தில் எழுதியிருக்கவேண்டும் என டாக்டர் சர்மா கருதுகிருர். உரைநடையில் சிறப்புடன் திகழ்ந்த அளவிற்குப் பாடலில் அத் துணைச் சிறப்புக் காணப்படவில்லை என்றே தோன்றுகிறது. 'முகுடதாடிதகா' என்னும் மற்ருெரு நாடகத்தையும் பாணர் எழுதினர் என்று கருதப்படுகிறது.

முன்னர்க் கூறப்பட்ட நூலைப் போலவே இந் நூலையும் எழுதியவர் யார் என்பது பிரச்சினைக் குரியதாக விளங்குகிறது. விக்கிரம பட்டாவின் நளசம்பு பாணர் அந் நாடக நூலை எழுதினர் என்று குறிப்பிட்டார். காதம்பரியைப் பாணர் கவிதையாகவும், உரைநடையாகவும் யாத்தார் என்பர். பாணரின் நூல்களிலிருந்து பாணர் கூர்த்த மதியுர், எதையும் விரைந்து கற்கும் அறிவும் பெற்றவர் என அறிகிருேம். கற்க வேண்டும் என்ற அவருடைய ஆர்வம் மிக அதிகம். அப்படிக் கற்றவற்றை என்றும் அவர் மறந்தாரில்லை. பல நாடுகளைச் சுற்றிப் பலவகை மனிதர்களுடன் பழகிப் பலவகை அனுபவங்களை அவர் பெற்ருர். குருகுலம் மட்டும் அவருக்கு அறிவுப் பயிற்சி அளிக்கவில்லை. சூதாடிகளும், நடனமாடுவோரும் அவருக்குப் பயிற்சியை மறைமுகமாக அளித்தனர்.

ஒரு காவியத்தை உரைநடையில் எழுத முயற்சி மேற்கொண்டதற்கு எடுத்துக் காட்டு ஹர்ஷ சாதமே ஆகும்.

ஹர்ஷரின் காலத்திய சமுதாய, பொருளாதார வாழ்க்கையை விளக்கும் சான்ருக அமைந்துள்ள நூலாகும் அது. பாணரின் ஹர்ஷ சரிதம் ஹர்ஷரின் வாழ்க்கையைச் சிறிது மிகைபடக் கூறும் நூல். ஆனல், காதம்பரி முழுக்க முழுக்கக் கற்பனையில் எழுந்த படைப்பு. ஹர்ஷ சரிதம் எப்படி நிறைவுபெருமல் போய்விட்டதோ அது போலவே காதம்பரியும் முற்றுப் பெற வில்லை. அதன் பிற்பகுதியினைப் பாணரின் மகன் பூசணபட்டா முடித்து வைத்தார்.

'ஸ்பென்சர் என்ற அறிஞரைப் போலப் பாணர் மிகப் பெரும் திட்டம் கொண்டிருந்தார். ஆனல், அத் திட்டம் நிறை வேற அவருக்கு ஆயுள் இல்லை' டாக்டர் தாஸ் குப்தாவும், எஸ். கே. டேயும் இவ்வாறு குறிப்பிட்டனர். பாணரின் உரை நடையில் காணப்படும் வருணனை மிகவும் சுவைத்து உரைத் தக்கதாக அமைந்துள்ளது.

ஹர்ஷர் புலவர்களைப் போற்றிய புலவர், அறிஞர்களை ஆதரித்த அறிஞர். அவருடைய கொடை நிழலில் இலக்கியப் பயிர் செழித்து வளர்ந்தது. இலக்கியச் சுவை உணர்ந்தோரே, கலை உள்ளம் கொண்டோரே ஒரு நாட்டின் பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றைக் காக்க முடியும். ஹர்ஷ வர்த்தனர் சிறந்த கலைஞர்; ஆக்கக் கலைஞர். ஹர்ஷர் ஆட்சி பண்பாடு காத்து நின்ற ஆட்சி. அவ் வாட்சியில் மொழி வளர்ச்சியும், கலை வளர்ச்சி யும் பெருகி நின்றன. அதை மறுத்துரைக்க யாராலும் இயலாது என்றே கூறவேண்டும்.

ஹர்ஷரைச் சிறந்த போர் வீரராக மட்டுமன்றிப், புவியாளும் மன்னராக மட்டுமின்றி, நாடக ஆசிரியராக, கவிஞராக, கலைஞராக, புரவலராக, இலக்கிய வித்தகராக, உரைநடை இலக்கியத்திற்கு ஊக்க மளித்தவராக, மனிதாபிமானம் மிக்க வராகக் காண்கிருேம். ஆட்சியாளர் ஒருவரிடம் அத்தனையும் ஒருங்கிணைந்து வரலாற்றில் எப்போதாவது மட்டுமே காணப் படும்.

# 11. சமூக வாழ்க்கையும் பொருளாதார வாழ்க்கையும்

ஹர்ஷ வர்த்தனரின் காலத்திய சமூக வரலாற்றை அறிய முற்படுவோர் முதலில் ஓர் உண்மையை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும். அக் காலச் சமூகம் புதிதாகத் தோன்றியதோ, அயல் நாட்டுக் கலப்பு ஏதும் ஏற்பட்டு மாறுதலுக்கு உள்ளானதோ அன்று. ஹர்ஷரின் காலத்தில் மட்டும் புதிய மாறுதல்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏதும் ஏற்பட்டு விடவில்லை. (குப்தர்களின் காலச் சமுதாயப் பொருளாதார வாழ்வில் காணப்பட்ட கூறுகள் ஹர்ஷரின் காலத்திலும் தொடர்ந்தன.)

இந்தியச் சமுதாயம் நீண்டதொரு பின்னணியினைக் கொண்டது. பன்னெடுங்காலமாக அடிப்படை அச்சு ஒன்றின் மேலே இயங்கிவருவது. (இந்தியச் சமுதாய அமைப்பில் காணப்படும் இயல்புகள் தனித் தன்மை வாய்ந்தவை. தனித்து நின்று அடையாளம் காட்டக்கூடிய இந்தியச் சமுதாயக் கூறுகள் உலக வரலாற்றில் புதுமை என்றே கூறவேண்டும்.)

இச் சமுதாயம் வருண அடிப்படையில் இயங்கக் கூடியதாய் விளங்கிற்று. இந்துச் சமுதாயத்தின் வருண முறைக்குச் சமமான கூறுகளை வேறு எங்குமே காண முடியாது. வருணம், ஆஸ்ரமம் ஆகிய கூறுகளின் அடிப்படையில் இயங்குகின்ற இச் சூழ்நிலை முழுமையும் இந்திய இயல்பையும், இந்தியத் தன்மையையும் கொண்டது என்றே கருதலாம். என்றும் ஐரோப்பிய அறிஞர்களும், சமூக நூல் வல்லார்களும், ஐரோப்பியச் சமுதாயத்திலும் வருணமுறை உள்ளது என்று சுட்டிக் காட்டியது பொருத்தமாகப் படவில்லை.[1] ஒப்பீடுகளும், சமக்கூறுகளும் காணப்படுகின்றன என்னும் வருணாஸ்ரம வியாவஸ்தா' இந்தியர்

[1]. L. F. Ward's article: 'Social classes and Sociological Theory" in *American Journal of Sociology Vol. VII*, pp 617-627 of Ralph Lincoln. *The Study of men*, pp 127-28.

களுக்கு மட்டும் உரியது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, காரூபம் முதல் குஜராத் வரை வருணாஸ்ரம தர்மம் முதன்மை பெற்றுத் திகழ்கிறது. பொதுவாகக் கூறவேண்டுமானால், பல்லாண்டுகளாக வருணாஸ்ரம தர்மம் மாறுதலின்றி விளங்கி வருகிறது. வருணாஸ்ரம தர்மம் என்ற சொற்கூறு இந்து சமயத்திற்கே உரியது. சமுதாய அமைப்பிற்கு வலுவான அடிப்படையாக அது விளங்கியது. இந்தியச் சமுதாயப் பண்பாட்டுத் தத்துவச் சமய எண்ணங்கள் பரவவும், தொடரவும் வருணாஸ்ரம தர்மம் குறிப்பிடத் தகுந்த பங்கை வகித்தது. இந்த அடிப்படையை மனத்தில் கொண்டு ஹர்ஷரின் காலச் சமுதாய அமைப்பைக் காண்போம்.

## வருணாஸ்ரம தர்மம்

நாம் காண்கின்ற இக்காலம், வருணாஸ்ரம தர்மக் கோட்பாடு ஏற்றம் பெற்ற காலம். இந்துச் சமுதாய மறுமலர்ச்சிக்குக் குப்தப் பேரரசர்கள் வழிவகுத்ததன் விளைவாக ஆறு, ஏழாம் நூற்றாண்டிலும் இந்து சமயத்தில் புத்துயிர்ப்பு நிலைபெற்றது. அசோகரின் காலத்திலும், கனிஷ்கரின் காலத்திலும், பெற்றிருந்த சிறப்பு நிலையை மீண்டும் பௌத்தம் பெற இயலாமல் போனது இக் காலத்திய குறிப்பிடத் தகுந்த நிலையாகும். வருணாஸ்ரம தர்மத்திற்கு அறைகூவலாய் அமைந்த பௌத்தம் இக் காலத்தில் ஒன்று மில்லாமல் போயிற்று என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.

வருணாஸ்ரம தர்மம் அழுத்தமான அடிப்படையில் உறுதியாக வேரூன்றியிருந்தது என்பதனை எல்லாப் பட்டயச் சான்றுகளும் தெளிவாக மெய்ப்பித்துக் காட்டுகின்றன. பரமபட்டாரக மகாராஜாதிராஜா பிரபாகர வர்த்தனர் வருணாஸ்ரமக் கோட்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் என்று கூறப்படுகிறது. எல்லாப் பட்டயங்களிலும் பரமபட்டாரக மகாராஜாதிராஜா 'வருணாஸ்ரம வியவஸ்தபன் பிரவரியாத்தா' என்றே அழைக்கப்பட்டார். சோனுபட் செப்பு முத்திரையும், நாளந்தா முத்திரையும், மதுபன் பட்டயம், பனஸ்கேராப் பட்டயம் முதலியனவும் அதற்கு எடுத்துக்காட்டுகள். வருணங்கள், ஆஸ்ரமங்கள் முறையாகச் செயல்பட அரசர்களும், ஆட்சியாளர்களும் தீவிரமாக முயன்றனர் எனப் பல்வேறு அக் காலத்திய பட்டயங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்து அரசர்கள் தாங்கள் அரசர்களாகப் பணியாற்றுகையில் மேற்கொண்ட கடமைகளில் வருணாஸ்ரம தர்மத்தைக்

காத்தல் அவற்றில் ஒன்றாக விளங்கியது. பண்டைய இந்துச் சமூகப் பண்பாட்டு அமைப்புகளைக் குறித்த விதி முறைகளின் படி அரசர்கள் செயல்பட்டனர். எனவே, அரசர்கள் எல்லா வருணத்தவர்களும் அவரவர்களுடைய வருணச் சட்டங்களையும், விதிமுறைகளையும், ஒழுங்காகப் பின்பற்றும்படி செய்தனர், மக்கள் தங்களுடைய கடமைகளிலிருந்து வழுவாவல் காத்தலும், அரசனுடைய கடமையாயிற்று.

சீனப் பயணி யுவாங் சுவாங் இந்தியாவில் பதினைந்து ஆண்டுகள் தங்கி நேரில் சமுதாய அரசியல் நிலைமைகளைக் கண்டறிந்தார். நான்கு வருணங்களைப் பற்றியக் குறிப்பை அவர்தம் செய்திகளிலிருந்து அறிகிறோம். பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகிய நான்கு வருணப் பிரிவுகளைக் குறிப்பிட்ட சீனப் பயணி அவர்களுடைய தொழில் பகுப்புகளையும் எடுத்துக் காட்டுகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. நால்வகை வருணங்களையும் ஆஸ்ரமங்களையும், விதிமுறை வகுத்து அதற்கேற்ப ஹர்ஷர் நடத்தினர் என ஹர்ஷ சரிதத்தில் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ காந்த ஜனபாதாவைக் குறிப்பிடுகையில் அவற்றின் சமூகப் பண்பாட்டு வாழ்க்கையைத் தெளிவுபடுத்துகையில், பாணர் வருணங்களில் சட்டங்கள் அங்கு மீறப்படவில்லை என்று குறிப்பிடுகிறார். பாணரின் நூல்களிலும், ஹர்ஷரின் நாடகங்களிலும், அக் காலத்திய இலக்கியங்களிலும், சமுதாயம் நான்கு வருணமாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்ற உண்மை தெளிவாகத் தெரிகிறது. எனவே, ஹர்ஷரின் காலச் சமுதாயத்தில் வருணப் பாகுபாடு காணப்பட்டது என்பதை பட்டயச் சான்றுகளும், யுவாங் சுவாங்கின் குறிப்புகளும், பாணருடைய இலக்கியங்களும், ஹர்ஷரின் இலக்கியங்களும், அக் காலத்திய பிற இலகயியங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

இனி நான்கு வருணத்தவர்களுடைய நிலையும் வாழ்க்கை முறையும் ஹர்ஷரின் காலத்தில் எங்ஙனம் அமைந்திருந்தன எனக் காண்போம்.

**பிராமணர்கள்**

பண்டைய நாளில் இருந்தது போலவே அக் காலத்திலும் பிராமணர்கள் சமுதாய அமைப்பில் முதன்மை நிலையினைத் தொடர்ந்து வகித்துவந்தனர். அவர்கள் வாழ்ந்த தூய வாழ்க்கை, கல்வி உயர்வு, சமயத் துறையில் வகித்த பங்கு ஆகியவைகளினாலேயே அவர்களுக்குச் சமுதாயத்தில் சிறப்பிடம் கிடைத்தது. அவர்கள் குடிமக்களில் உயர்நிலை வகித்தவர்களாக விளங்கினர்.

பிராமணர்களுக்குப் பிற வருணத்தவர்கள் அன்பளிப்புகளை வழங்கியது சிறப்பித்துக் கூறப்பட்டது. அன்பளிப்பு என்றாலே அது பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பே என மனு சுட்டிக் காட்டுகிறார். கலி காலத்தில் ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ளவேண்டிய தலையாய கடமை என அதனைக் குறிப்பிடுகிறார். பிராமணர்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட நிலை மட்டுமன்று அது; அக் கால மக்களாலும் விரும்பி மேற்கொள்ளப்பட்ட கடமை ஆகும். பிராமணர்களுக்கு உணவளித்துப் போற்றுவது இறையியல் கடமைகளில் ஒன்று எனவும், அதனால் கடவுளின் அருளாசி பெறலாம் எனவும் அவர்கள் நம்பினர். அவர்கள் அதன்பொருட்டு ஸ்வஸ்திவாச்சன சடங்கினைப் பிராமணர்களைக் கொண்டு செய்தனர். அச் சடங்கின்போது பிராமணர்கள் மந்திரங்களை ஓதினர். அவ்வாறான சடங்குகளின் போது பிராமணர்கள் அன்பளிப்புகள், பரிசுப் பொருள்கள் முதலானவற்றைப் பெற்றனர். அத்தகைய சடங்குகளைக் குறித்த சான்றுகளை ஹர்ஷரின் நாடகத்திலும், பாணரின் நூல்களிலும் காணலாம். அரசவையிலும் பிராமணர்களுக்கு அன்பளிப்புகள் பல அளிக்கப்பட்டன.

பிராமணர்களுக்கென ஏராளமான பட்டயங்கள் அளிக்கப்பட்டன. அவை ஏராளமாக இருப்பதால் அவற்றையெல்லாம் எடுத்துக்காட்டல் என்பது கடினமேயாகும். ஹர்ஷர் இரண்டு பட்டயங்களைப் பிராமணர்களுக்கு அளித்தார். ஹர்ஷர் தம் திக்கு விஜயத்தின்போது பிராமணர்களுக்கு ஆயிரம் உழவுகளைக் கொண்ட நூறு கிராமங்களை அளித்தார் என அறிகிறோம். பிரபாகர வர்த்தனருடைய தனிப்பட்ட உடைமைகள் அனைத்தும் பிராமணர்களுக்கு அளிக்கப்பட்டன. அவ்வாறு அளித்ததன் மூலமாக மறைந்த அரசரின் ஆன்மா சாந்தியடையும் என நம்பினர்.

பிராமணர்கள் புரோகிதர்களாகவும், போதகர்களாகவும், வழிகாட்டிகளாகவும் விளங்கினர். தொட்டில் முதல் சுடுகாடு வரையிலான மனித வாழ்வில் ஏற்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளுக்குமான அச் சடங்குகளைப் பிராமணர்கள் நிகழ்த்தினர். அச் சடங்குகளை நிறைவேற்றுவதற்குக் காணிக்கைகளையும் நன்கொடைகளையும் பெற்றனர். இலக்கிய, பட்டயச் சான்றுகளில் அத்தகைய சடங்குகள் நடைபெற்றதற்கான குறிப்புகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. பிராமணர்களாகப் பிறந்ததனால் மட்டுமே அவர்கள் சமுதாய உயர்வு நிலையைப் பெற்றிருக்கவில்லை. அவர்களுடைய உயர்ந்த கல்வி நிலையாலும்,

சமயச் செல்வாக்கினாலுமே அத்தகைய நிலையினை அடைந்தனர் என்று கூறலாம். பட்டயங்கள் நாம் மேற்கொண்டுள்ள அக் கருத்தினுக்கு ஆதாரமாக அமைகின்றன.

பிராமணர்களுடைய வாழ்க்கையைப் பற்றி யுவாங் சுவாங் என்ன செய்தியை அளிக்கிறார் என்று காண்போம். அவர்கள் தூய வாழ்க்கை வாழ்ந்தனர். அவர்கள் தங்கள் கொள்கை வழி நிறைவுடன் வாழ்ந்து சடங்கு பூர்வமான தூய்மையைக் காத்தனர் என்றெல்லாம் குறிப்பிடும் அவர் மற்றோரிடத்தில் பல்வேறு வகுப்புப் பிரிவுகளிடையே நாட்டில் பிராமணர்களே தூய வாழ்வினர் எனவும், பெரிதும் மதிக்கப்பட்டனர் எனவும் கூறுகிறார். அதனாலேதான் சீனர்கள் இந்தியாவைப் பிராமண நாடு (போ-லோ-மென்-குவா) என்ற பெயரிலேயே நன்கு அறிந்திருந்தனர். அவர்கள் கல்வியில் செலுத்திய ஆர்வம் சீனப் பயணி யுவாங் சுவாங்கினால் பெரிதும் விரும்பப்பட்டது.

யுவாங் சுவாங்கின் மேற் கூறப்பட்ட குறிப்புகளை ஆராய்கின்றவர்களும் ஏற்றுக்கொள்ளுபவர்களும் பாணரின் கருத்து மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என நிச்சயமாகக் கருதமாட்டார்கள். பிராமணர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'பிரம்மமுகா' என்ற வடமொழிச் சொல்லைப் பாணர் பயன்படுத்துகிறார். பிரம்மமுகா என்ற சொல்லுக்கு இரண்டு வகைகளில் பொருள் கூறலாம். ஒன்று வேதங்களைத் தங்கள் உதடுகளில் கொண்டவர்கள் (பிரம்மவேதா முகேயேசாம்) என்பது. மற்றொன்று பிரம்மாவைத் தங்கள் தலைகளில் கொண்டவர்கள் (பிரம்மா முகம் யேசாம்) என்பது. பிராமணர்கள் வேதங்களை மனப்பாடமாகக் கொண்டிருக்க வேண்டுவது இன்றியமையாததாயிற்று (நாகானந்தத்தில் பிராமணன் என்பதை மெய்ப்பிக்க விதூஷகன் வேதத்தை ஒப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டான்.) வேதங்கள் எத்தனை அறிந்திருந்தாரோ அதற்கேற்றவாறே பிராமணனின் தகுதி எண்ணப்படும் எனப் பிரியதர்ஸிகாவில் அரசன் குறிப்பிட்டான்.

(எந்த வேதத்தை நன்கு கற்றுத் தேர்கின்றனரோ அவ்வேதப் பெயராலேயே சில சமயங்களில் பிராமணர்கள் அழைக்கப்பட்டனர். பட்டா பாலசந்திரா என்பவருக்கும், பட்டா பத்ரஸ்வாமி என்பவருக்கும் பன்ஸ்கேராப் பட்டயம் வழங்கப்பட்டது. பட்டா பாலசந்திரா இருக்குவேத பிராமணர் எனவும், பட்டா பத்ரஸ்வாமி சாமவேத பிராமணர் எனவும் அறியப்பட்டனர். இவ்வாறான அடைமொழிகள் அவர்கள் வேத வித்தகர்களாக

விளங்கினர் என அறிவிக்கின்றன. ஆறு அங்கங்களுடன் வேதங்களைக் கற்றதாகப் பாணர் கூறுகிறார். பிரபாகர வர்த்தனரின் இறப்பிற்குப் பின்னர் ஹர்ஷரை ஸ்ருதி, ஸ்மிருதி, இதிகாசம் முதலியவற்றில் தேர்ந்த வயது முதிர்ந்த பிராமணர்கள் கவனித்துக்கொண்டனர் எனப் பாணர் கூறுகிறார். பிராமணர்கள் ஆசிரியர்களாகவும், மக்களுக்கு வழிகாட்டிகளாகவும் விளங்கியதால் மக்களின் மதிப்பைப் பெற்றனர். பிராமணர்களின் இல்லங்களில் வேதக்கல்வி பயின்ற மாணவர்களின் வேத ஒலி கேட்டுக்கொண்டிருந்தது.

வீடுகளின் முன்பகுதியில் 'சோமாச்' செடிகள் முளைத்துக் கிடந்தன. பலிக்குரிய பொருள்கள் அங்கே காணப்பட்டன. ஏராளமான வேள்வித் தீயினுக்கு உதவும் இலைகளும், அறுகம் புல் கட்டுகளும் காணப்பட்டன. சாணமும் எரிபொருள்களும், ஏராளமாக இருந்தன. கமண்டலங்களைச் செய்வதில் தவசிகள் ஈடுபட்டிருந்தனர். பலியிடுவதற்கென வெள்ளைப்புள்ளி கொண்ட ஆடுகள் கொண்டுவரப்பட்டிருந்தன. பிராமணர்கள் ஆண்களும், பெண்களும் யக்ஞோபவீதம் அல்லது பிரம்ம சூத்திரம் எனப்பட்ட பூணூல் அணிந்திருந்தனர். பிராமணர்கள் அவர்களுடைய கல்விக்காகவும், நேரிய நடத்தைக்காகவும் மட்டும் மதிக்கப்படாமல் அவர்கள் பிராமணக் குலத்தில் பிறந்தவர்கள் என்பதற்காகவே மற்ற வருணத்தவரைவிட உயர்வானவர்களாகக் கருதப்பட்டனர். சடங்குகளால் முழுமை பெற்ற பிராமணர் ஆகாதவர்களும் மதிப்புப் பெறத்தக்கவர் என ஹர்ஷ சரிதத்தில் குறிப்பு உண்டு. இளவரசன் சந்திர பீடன் பிராமணர்களை மதித்து நடக்குமாறு அறிவுறுத்தப் பெற்று வாழ்வின் இறுதிவரை பிராமணர்களிடம் மதிப்புடையவராக விளங்கினர்.

**க்ஷத்திரியர்கள்**

சமுதாயப் படிநிலையில் இரண்டாவது இடத்தை வகித்து வந்த அடுத்த வருணத்தவர் க்ஷத்திரியர்கள் ஆவர். யுவாங் சுவாங் கருத்தின்படி க்ஷத்திரியர்கள் ஆளும் இனத்தவர்கள்; பல்வேறு தலைமுறைகளாக ஆட்சி நடத்திபவர்கள் ஆவர். சீனப் பயணியின் வருகையின்போது இந்தியா முழுமையிலும் க்ஷத்திரிய அரசர்களே ஆட்சி செலுத்தினர் என்ற போதிலும் சில விதி விலக்குகளும் இருந்தன என்பதை யுவாங் சுவாங்கும் குறிப்பிட்டுள்ளார். மடிபுர அரசன் சூத்திர வகுப்பினன் ஆவான். காமரூபத்தின் அரசன் பிராமண வகுப்பினன். நாராயண தேவரின் வாரிசு எனக் காமரூபப் பாஸ்கர வர்மனைக்

கருதுவர். மேலும் சில அரசர்கள், க்ஷத்திரிய இனத்தவர்கள் அல்லாதவர்களாக இருந்தனர். எனினும், பெரும்பான்மைக் கண்ணோட்டத்தில் பார்க்கின்றபோது க்ஷத்திரிய அரசர்களின் எண்ணிக்கையே அதிக அளவில் இருந்தது.

மேலே கூறப்பட்டுள்ள கருத்தினை அடிப்படையாகக் கொண்டு, க்ஷத்திரியர்கள் அனைவரும் ஆட்சியாளர்களாக விளங்கினர் என்று முடிவு கட்டிவிடக் கூடாது. யுவாங் சுவாங் பெரிதும் க்ஷத்திரியர்களுடனேயே தொடர்பு கொண்டிருந்ததால் க்ஷத்திரியர்களை ஆளும் இனத்தவர் என்றார் போலும்.

க்ஷத்திரியர்களைப் பாணர் சூரிய வமிசத்தவர், சந்திர வமிசத்தவர் என இரு பிரிவுகளாகப் பிரித்துப் பேசுகின்றார். ஹர்ஷ சரிதத்தில் இதனை எடுத்துக்காட்ட நேரடியான குறிப்பு இல்லையெனினும், ஹர்ஷருக்குப் பிற்பட்ட காலத்திய பட்டயங்களில் அத்தகைய குறிப்புகள் உள்ளன. க்ஷத்திரியர்கள் பிராமணர்களுக்குத் தகுந்த மரியாதை செய்தனர்; ஏராளமான அன்பளிப்புகளையும், நிலக் கொடைகளையும் வழங்கினர். ஹர்ஷரின் கொடையுணர்வையும், பிராமணர்களுக்கு அறம் செய்ததையும் யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார்.

க்ஷத்திரியர்கள் வீரம் மிக்கவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும், நாட்டுப்பற்று மிக்கவர்களாகவும் விளங்கினர். அவர்கள் சிறந்த போர் வீரர்கள் என்பதோடு, பெரும் போர்கள் பலவற்றிலும் கலந்துகொண்டனர். ஸ்தானேஸ்வரத்தின் ஜனபாதாவை க்ஷத்திரியர்கள் சிறப்புடையோரின் நிலம் எனக் கருதினர் எனப் பாணர் குறிப்பிடுகிறார். க்ஷத்திரிய வீரர்கள் தங்களுடைய புகழுக்குப் பெருமை சேர்த்த வாள் முதலிய ஆயுதங்களை வழிபடுதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பிரபாகர வர்த்தனர் தம்முடைய அட்ட ஹாசா என்ற வாளை வழிபட்டதாகப் பாணர் குறிப்பிட்டார்.

மூன்றாவது வருணத்தவரான வைசியர்கள் வாணிகப் பிரிவினர் ஆவர். யுவாங் சுவாங் பொருள்களை விலை பேசி வாங்கி விற்று அவர்கள் இலாபம் பெற்றனர் என்கிறார். வாணிகம், வர்த்தகம் பற்றிய பல்வேறு உதாரணங்களை ஹர்ஷரின் நாடகங்கள் கொண்டுள்ளன. இலங்கைவரை சென்று வைசியர்கள் வாணிகம் செய்தனர். குப்தர் காலம் முதல் சமுதாயத்தில் செல்வாக்குடன் திகழ்ந்த பிரிவினர் வைசியர்களே ஆவர். அவர்கள் செல்வாக்குடைய சமூகப் பிரிவினராகச் செல்வத்

துடன் விளங்கியதால், அரசியல் உலகிலும் தங்கள் செல்வாக்கை செலுத்த முடிந்தது. எல்லா வைசியர்களும் வாணிகத் தொழிலைச் செய்து வாழவில்லை. எல்லா க்ஷத்திரியர்களும் எப்படி அரசர்கள் அல்லரோ அதுபோல எல்லா வைசியர்களும் வாணிகர்கள் அல்லர். பெரும்பாலானவர்கள் வாணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். மீதமுள்ளவர்கள் வேளாண்மைத் தொழிலையும் பிற தொழில்களையும் மேற்கொண்டனர்.

## சூத்திரர்

நான்காவது வருணத்தவர் சூத்திரர் என அழைக்கப்பட்டனர். சூத்திரர்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். ஆனால், அவர் கூற்று பொருந்தாத கூற்றே. பெரும்பாலான மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், சூத்திரர்கள் பெரும்பான்மையானவர்கள் அல்லர். பிற வருணத்தார் வேளாண்மையில் ஈடுபடக் கூடாது என விதி முறையேதும் இல்லை. நால் வருணத்தவர்களில் உயர் வருணத்தவர்களாகக் கருதப்பட்ட பிராமணர்களும் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். யுவாங் சுவாங் பிராமணர் ஒருவர் நிலத்தை உழுதுகொண்டிருந்ததைத் தாம் பார்த்ததாகக் குறிப்பிட்டார்.

## தீண்டப்படாதோர்

தீண்டப்படாதோர் எனச் சமுதாயத்தில் சிலர் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் சமுதாயத்தின் மற்றப் பிரிவினரிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டு, மூன்று உயர் வருணத்தவருடன் கலக்கக் கூடாது என்று கூறப்பட்டனர். கசாப்புக் கடைக்காரர், மீனவர், கொலைபாளிகள், துப்புரவாளர்கள், பொதுப்பணி புரிவோர், ஆகியோர் தனிக் குறிப்பிடப்பட்ட இடங்களில் நகரங்களுக்கு வெளியே வாழ்ந்தனர். (வெளிச்செல்லும் போது சமுதாயத்தில் அவர்களின் கலப்பினால் தீட்டுப் பட்டு விடும் என்பதால் தங்கள் வருகையை அறிவிக்கும் அடையாளத்துடன் சென்றனர். சண்டாளர் எனப்பட்ட இனப்பெண் கையில் கோல் ஒன்றினைக் கொண்டு அதைத் தட்டி அரசனின் கவனத்தை ஈர்த்ததாகப் பாணர் குறிப்பிட்டார். இவளைத் தொடக்கூடாத தீண்டப்படாத இளம்பெண் எனப் பாணர் குறிப்பிட்டார்.)

## பிற கலப்பு இனத்தவர்கள்

பாணர், யுவாங் சுவாங் ஆகியோரின் குறிப்புகளிலிருந்து, மேலே கூறப்பட்ட இனத்தவர்களைத் தவிரப், பிற கலப்பு

இனத்தவர்களும் அக்காலச் சமுதாயத்தில் அங்கம் வகித்தனர் என அறிகிறோம். அவர்கள் எண்ணிறந்தோர் ஆகையால் அவர்களை இனம்பிரித்தலோ, வகை பிரித்தலோ இயலாத ஒன்று. அக் கலப்பு இனத்தவரை யுவாங் சுவாங் சுருக்கமாகக் குறிப்பிடுகிறார். ஆனால், பாணர் அத்தகைய கலப்பு இனத்தவரைப் பற்றி விளக்கமானதொரு குறிப்பினை அளிக்கிறார்.

தொழில் அடிப்படையிலான பல்வேறு பிரிவினர் அல்லது வகுப்பினர் பற்றிப் பாணர் குறிப்பிடுகிறார். இந்தப் பிரிவினரில் பல நணபர்கள் அவருக்கு இருந்தனர். அவர்களுள் கீழ்க்கண்டவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர்.

1. பாணரின் இரண்டு ஒன்றுவிட்ட சகோதரர்கள் பாரஸவா என அழைக்கப்பட்டனர். அச் சொல் எந்தச் சாதியைக் குறிப்பிட்டது எனத் தெரியவில்லை. மனு, பாரஸவர் எனப்பட்டோர் பிராமணத் தந்தைக்கும், சூத்திரத் தாய்க்கும் பிறந்தவர்கள் எனக் கூறுகிறார். அவ்வாறு பிறந்த மகன் சவத்திற்கு ஒப்பானவன். ஒரு மகன் ஆற்ற வேண்டிய சமய அடிபடையிலான கடமையினை அவன் ஆற்ற இயலாது என்பதாலேயே அவ்வாறு கருதப்பட்டான். பாணரின் சிற்றப்பா மக்களே மாத்திர சேனன், சந்திர சேனன் ஆகிய இருவரும் ஆவர். அவர்கள் இழிந்த பிராமணர்களிலிருந்து தோன்றியவர்களாய் இருந்திருக்கலாம்.
2. பாஸாகவி ஈஸான என்பவர் பாடல் இயற்றுபவர்களின் மரபில் தோன்றியவர் எனக் கூறப்படுகிறது.
3. வேணி பாரதா என்பவரும் மற்றொரு கவிஞரே. திருமணம், பிறந்தநாள் முதலிய விழாக்களில் பல்வேறு குலத்தவரைப் புகழ்ந்து பாடும் தொழிலைச் செய்த குலத்தவர் அவர்.
4. பண்டிக்கள் ஒரு பிரிவினராக விளங்கினர்.
5. விற்பனை செய்யும் பிரிவினர் ஆவர். அத்தகைய மனிதர் ஒருவரை மயூரகா எனப் பாணர் குறிப்பிடுகிறார். நஞ்சைப் போக்குவதில் தேர்ந்தவர் ஜாங்கூலிகா ஆவர்.
6. தாம்பூலதாயகா எனப்பட்டோர் அடைப்பைக்காரர்கள் அல்லது தாம்பூலம் அளித்தவர்கள்.

7. புஸ்தகவாசகா எனப்பட்டோர் வாசிக்கும் தொழிலைச் செய்தனர். அவர்களுடைய தொழிலின் இயல்பினைத் தெளிவாகக் கூற இயலாது. மக்கள் முன்னிலையில், சமயம், இலக்கியங்கள் ஆகியன வற்றை வாசிக்கப் பயன்பட்டிருக்கலாம். சுத்ரிஸ்தி என்ற புஸ்தக வாசகா பற்றிப் பாணர் குறிப்பிடு கிறார். வாயு புராணத்தில் சில பகுதிகளை அவர் வாசித்தார் என ஹர்ஷ சரிதம் வாயிலாக அறிகிறோம்.

8. பொற்கொல்லர்களைப் பாணர் காலாதா அல்லது சுவர்ணகாரா அல்லது ஹேமகாரா என்று குறிப் பிடுவதிலிருந்து பொன் அணிகலன்களை உருவாக் கும் தொழிலில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர் எனலாம்.

9. ஹைரிகா என்ற சொல்லை அறிஞர் பெருமக்கள் பல வகைகளில் மொழிபெயர்க்கின்றனர். பொற் கொல்லர்களை மேற்பார்வையிட்டவர் எனவும், மேற்பார்வையாளர் எனவும் கூறுகின்றனர். அச் சொல் வைரம் அறுப்பவரைக் குறிக்கும் என்றனர். அச் சொல் வைரங்களைப் பற்றிய அறிவுடை யோரை உணர்த்தும் எனலாம்.

10. சித்திரகிரிதா எனப்பட்ட ஓவியர்கள்.

11. பொம்மை செய்வோர் அல்லது. புஸ்தகிருதாக்கள்.

12. மார்த்தங்கிகா எனப்பட்ட முரசறைவோர்.

13. வான்சிஹா எனப்பட்ட குழல் ஊதுவோர்.

14. கதகா எனப்பட்ட கதை சொல்வோர்.

15. சார்மகாரா எனப்பட்ட தோல் தொழில் செய்வோர்.

16. பாணர் தச்சர்களைக் குறிப்பிடச் சூத்திரதாரா என்ற சொல்லைப் பயன்படுத்தினர். அதற்கு முற்பட்ட காலங்களில் அச் சொல் வழக்கிலில்லை.

17. கொல்லர்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட தொழில் செய்தவர்கள் தொழிலின் அடிப்படையில் பிரிந்திருந்தார்களா சாதி வேறுபாடு அல்லது அடிப்படை ஏதுமின்றித் தொழிலை மட்டும் செய்துவந்தனரா

என்பது குறித்து உறுதியாக ஏதும் கூற இயலாது. யுவாங் சுவாங் குறிப்பிட்ட சிலரை முன்னர்க் கண்டோம்.

இன்றுபோல் அன்றும் தொழில் அடிப்படையிலான சாதிப் பிரிவுகள் இருந்தன. இருக்கு வேதத்தில் அத்தகைய தொழி லடிப்படையிலான சாதிப்பிரிவுகளைக் காண்கிறோம். இந்தியச் சமுதாயம் சமுதாயப் பிரிவுகளாகவும், துணைச் சாதியாகவும் பிரிந்திருந்தது என்பது புதுமையான ஒன்று ஆகாது. பல்வேறு துணைச் சாதிகளோ சமூகக் குழுக்களோ காணப்படுவது பல்வேறு தொழில்களினுல் உருவான ஒன்று எனலாம்.

அவ்வாறு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? திருமண விதிமுறைகள் மீறப்பட்டதும், பொது விதிகள் மீறப்பட்டதுமே அதற்கு அடிப்படையாகும். சமுதாயத்தில் அனுலோமா திருமண முறைகள் ஏற்கப்படாத நிலையிலும் வருணங்களின் தூய்மைக்கு அதிகச் சிறப்பு அளிக்கப்பட்ட நிலையிலும், சமூகத் திஞல் ஏற்றுக்கொள்ளப்படாத பல புதிய சமூகப் பிரிவுகள் அத்தகைய திருமண உறவுகளினுல் உருவாயின. அவ்வாறு சமூகத்தின் விதிமுறைகளுக்கு மாருக மணம் செய்துகொண்ட வர்களுக்குப் பிறந்த பிள்ளைகளைச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளா மையால் அவர்கள் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்டுத் தமக்கெனத் தனி ஒரு சமுதாயப் பிரிவினைக் கொண்டனர். ஆனுல், இந்நிலை சமுதாய அமைப்பில் குழப்பத்தை ஏற்படுத் தவோ, வருணத்தின் சிறப்புத் தன்மையைக் குறைக்கவோ இல்லை. இந்தியச் சமுதாயத்தில் தொடர்ந்து வருண முறை உயர் நிலையை வகித்தே வந்தது. இவ்வாருகச் சமுதாயம் நல்லதோர் அமைப்பைக் கொண்டிருந்தது.

பிராமணர்கள் உயர்ந்த மதிப்புடைய இடத்தைப் பெற் றிருந்தபோது க்ஷத்திரியர்களும், வைசியர்களும் செல்வாக்கு மிக்கவர்களாகவே திகழ்ந்தனர். ஆனுல், சூத்திரர்களின் நிலை மகிழ்ச்சி நிறைந்ததாகவும், எல்லா உரிமைகளும், கடமைகளும் உயர் வருணத்தவர் பெற்றிருந்தவைகளைப் பெற்றதாகவும் விளங்கவில்லை. ஆயினும், சமுதாயத்தில் அமைதி நிலவியது. மக்கள் சமூக விதியை, சமூகச் சட்டத்தை ஏற்றுப் பணிந்து செயல்பட்டனர். சமூகச் சட்டங்கள், ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள் பொதுவாக மீறப்பட்டதாகச் சான்று ஏது மில்லை. வேற்றுமையில் ஒற்றுமை அங்கே நிலவியதோடு, அனைத்து வருணத்தவர்களும் சமூகப் பிரிவினரும் ஒன்றுபட்டு

வாழ்ந்தனர். சமூக, இன வேறுபாடுகள் காணப்பட்டபோதி லும் சமுதாயத்தின் இணைந்த பிரிக்க முடியாத பகுதி என ஒவ்வொரு பிரிவும் கருதப்பட்டது.

ஒவ்வொரு வருணமும் அல்லது குழுவும் மகிழ்வுடன் எவ்வித எதிர்ப்புணர்வையும் காட்டாமல் தமக்கென விதிக்கப்பட்ட கடமைகளையும், செயல்களையும் செய்தது. சமூக உயர்வு, சமுதாயத்தில் உயர்ந்த பங்கு வகிக்கவேண்டும் என்ற ஆசையோ, ஆர்வமோ கொள்ளாமல் வாழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சூத்திரர்கள்கூடத் தம் தொழிலில் நிறைவு பெற்றனர் எனில் அச் சமுதாய அமைப்பு நிலையை உணரலாம். எதிர்ப்புக் கிளர்ச்சிகளோ, மக்களின் இயக்கங்களோ எதிர்ப்பை வெளிக் காட்டவில்லை. வர்க்க பேதம் இருந்தது. ஆனால் வர்க்கப் போராட்டம் இல்லை.

சமுதாயம் ஒவ்வொருவருக்கும் ஓரிடத்தை அளித்திருந்தது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவனுக்குரிய இடத்தைச் சுட்டிக் காட்டியது. மொத்தத்தில் சமுதாயம் முழுமையும் வேறு எங்கும் காண இயலாப் புதுமையாக, அதே நேரத்தில் நன்கு அமைக்கப்பட்டதாக விளங்கியது. ஒருவருடைய பொருளியல் வளர்ச்சிக்கும், மன இயல் வளர்ச்சிக்கும் வேண்டிய உதவியினை அளித்து உடன்பாடான போக்கினையும் மனிதனுக்கு மனிதன் புரிந்துகொள்ளத்தக்க நிலையையும் ஏற்படுத்தியது. எல்லாச் சமூகப் பிரிவுகளும் மொத்தத்தில் பொதுப் பண்பாடு, பொது மரபு, பொதுப் பாரம்பரியம் ஆகியவற்றைக் கொண்டவைகளாக அமைந்தன.

## ஆஸ்ரம அமைப்புமுறை

இந்திய வாழ்க்கையைப் பற்றிய சரியான படப்பிடிப்பை அறியவேண்டுமாயின் வாழ்க்கையின் நான்கு பிரிவுகளான 'ஆஸ்ரம்' முறையினை அறிந்துகொள்ளுதல் இன்றியமையாத ஒன்று. வருணமுறை வளர்ச்சி பெற்ற நேரத்தில் வழிபாடும், சமயப் பழக்கங்களும வேரூன்றின. தன்னல வேள்வியும், மன இயலும் நன்கு வேரூன்றித் தத்துவ ரீதியான வாழ்க்கைக்கு உதவிவந்தன. வேத காலங்களிலும், உபநிடதக் காலங்களிலும் மேலே கூறப்பட்ட போக்குகளினால் ஆஸ்ரம அமைப்புமுறை வளரத் தொடங்கியது.

ஆஸ்ரம அமைப்பு என்பது என்ன? என்பதை முதலில் காண்போம். தனி மனிதன் வாழ்க்கை நான்கு பிரிவுகளாகப்

Ms. V. INDRA ... M.A., M.Phil.
Sri ... For Women



பிரிக்கப்பட்டு ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்ல வேண்டும் எனக்கூறப்பட்டது. ஆஸ்ரமக் கோட்பாட்டின்படி ஒருவர் வாழ்தலே தூய தெய்வீக வாழ்க்கை வாழ்வதாகக் கருதப்படும். நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஒருவர் வாழ்க்கையில் முதலாவது வாழ்க்கைப் பிரிவினைக் குருவினுடைய வீட்டிலும், இரண்டாவது பிரிவினை இல்லறத்திலும், மூன்றாவது பிரிவை கானகத்திலும் நான்காவதாக உலகப் பற்றைத் துறந்து சன்னியாச வாழ்க்கை எனும் பற்றற்ற வாழ்க்கையினை மேற்கொண்டும் வாழ வேண்டும் என மனு குறிப்பிட்டார். இந்துச் சமுதாய அமைப்பிற்கே அடிப்படையாக விளங்கியது இந்த ஆஸ்ரம வாழ்க்கை அமைப்பே எனலாம். இந்த ஆஸ்ரம வாழ்க்கை மேற்கொள்வதன் அடிப்படை நோக்கம் முத்தி பெறுதல் எனலாம். இது தனி மனிதனின் விருப்பத்தைப் பொறுத்ததே அன்றிச் சமுதாயம் இதனை ஒருபோதும் வலியுறுத்த வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஹர்ஷரின் காலத்திய ஆஸ்ரம வாழ்க்கை முறையைப் பற்றி அறிய இலக்கியங்களிலும் பட்டயங்களிலும் ஏராளமான குறிப்புகள் உள்ளன.

நான்கு ஆஸ்ரம வாழ்க்கையினைப் பிரம்மச்சரியம் கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் எனக் குறிப்பிட்டனர். அவை ஒவ்வொன்றும் எங்ஙனம் மேற்கொண்டு ஒழுகப்பட்டன என்பதைக் காண்போம்.

### பிரம்மச்சரியாஸ்ரமம்

உபநயனம் என்ற பூணூல் அணிவிக்கும் சடங்கு முடிந்த பின்னரேயே ஆண்மகன் ஒருவனின் வாழ்க்கையில் பிரம்மச்சரியாஸ்ரம வாழ்க்கை தொடங்கியது. நல்ல கற்றறிந்த பிராமண குருவின் இல்லத்தில் தங்கிக் குருகுல முறையில் பிரம்மச்சாரிகள் கல்வி பயின்றனர். குருகுல வாழ்க்கையை ஏற்ற சிறுவர்களுக்குக் குறிப்பிட்ட வாழ்க்கை நியதிகள் வகுக்கப்பட்டிருந்தன. அவற்றின்படி ஒழுகுதல் இன்றியமையாதது. பாணர் தம் இளமைக் கால வாழ்க்கையையும், உபநயனச் சடங்கையும் எடுத்துரைக்கின்றார்.

பிரம்மச்சாரிகள் நெற்றியில் திருநீறும், சந்தனமும் துலங்கக் காட்சியளித்தனர். பிரமச்சாரிகள் எரி பொருள், இலைகள், பச்சைக் 'குசா', பசும்புல் முதலானவற்றைக் கொண்டிருந்தனர். கையில் கமண்டலத்தைக் கொண்டு சென்றனர். கட்டுப்பாடான மன ஒழுக்கம் வலியுறுத்தப்பட்டது. மஹாஸ்வேதா என்ற பெண், புண்டரீகன் என்ற பிரமச்சாரியிடம் கொண்ட காதலைக்

காதம்பரி எடுத்துக் காட்டுகிறது. "காதலின் விளைவை நீ உணர்ந்தால் மூடத்தனமாக இளமையை வீணாக்கியது குறித்து வருந்துவாய்' என்று மஹாஸ்வேதா கூறியதாக அறிகிறோம். அவ்வாறு கட்டுப்பாடான ஐம்புலன்களையும் ஒடுக்கி வாழ்கின்ற வாழ்க்கை சமூக வாழ்க்கையின் முக்கியக் கூறாகக் கருதப் பட்டது.

## கிரஹஸ்தாஸ்ரமம்

ஆஸ்ரம வாழ்க்கையின் இரண்டாம் நிலை கிரஹஸ்தாஸ்ரம் எனப்பட்ட இல்லற வாழ்க்கை ஆகும். அது சமுதாய அமைப் பில் மிகவும் மதிப்பு வாய்ந்த ஒன்றாகும். ஸ்மிருதிகளும், தர்ம சாஸ் திரங்களும் இல்லற வாழ்வே சமுதாய அமைப்பிற்கு அடிப்படை என்று அறிவிக்கின்றன. 'எவ்வாறு உயிரினங்கள் அனைத்தும் காற்றைக் கொண்டு வாழ்கின்றனவோ அதுபோல எல்லா ஆஸ்ரமங்களும் இல்லறத்தானை மையமாகக் கொண்டுள்ளன' என மனு கூறுகிறார். கிருஹஸ்தாஸ்ரமத்தின் இன்றியமையா மையை மகாபாரதம் வலியுறுத்துகிறது.

கல்வி கற்ற பின் இல்லற வாழ்வில் ஈடுபட வேண்டும் என வாத்சயயானர் கூறுகிறார். இல்லறம் வாழ்வின் ஒரு பகுதி எனக் காம சூத்திரம் உரைக்கிறது. ஹர்ஷரின் காலத்தில் நன்கு நிலை பெற்ற அமைப்பாக இது விளங்கிற்று. பாணர் மணம் முடிந்தது முதல் தாம் இல்லற வாழ்வில் ஈடுபட்ட இனிய நினைவுகளை நினைவு கூர்ந்தார். ~~அவ்வாறு இல்லற வாழ்வில் ஈடுபட்ட இனிய நினைவு களை எண்ணினார்.~~ அவ்வாறு இல்லற வாழ்வில் ஈடுபட்ட வர்கள் தமக்கெனச் சமுதாயம் விதித்துள்ள சமய, சமூகக் கடமைகளைக் குறைவின்றி நிறைவேற்றினர். தர்ம சாஸ்திரங் களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படி வாழ்க்கை நடத்து வதும், வழிபாடுகள், வேள்விகள் முதலியவற்றை உறுதியோடு கடைப்பிடித்தலும் அவர்தம் கடமையாயின. அது மட்டு மன்றிக் கடவுளையும், முன்னேயோர் கடவுளையும் வழிபடுவது, விருந்தினரை உபசரிப்பது, ஏழை எளியவர், இயலாதோர் ஆகியோருக்கு உதவுவது, ஸ்மிருதிகளும், ஸ்ருதிகளும் காட்டிய வழியில் வாழ்வை நடத்துவது ஆகியவையும் அவர்தம் கடமையாயின. ஹர்ஷவர்த்தனரும் தம் குடிமக்களைப் போலத் தாமும் அக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றினார்.

## வானப் பிரஸ்தாஸ்ரமம்

வானப் பிரஸ்தாஸ்ரமம் என்பது இல்லற வாழ்விற்கும், துறவற வாழ்விற்கும் இடைப்பட்ட ஒரு நிலை. இந்த ஆஸ்ரம

வாழ்க்கை துறவு வாழ்க்கைக்குப் பயிற்சி அளித்தது. உற்றார் உருவினரைப் பிரிந்து அர்த்தம் எனப்படும் பொருளையும், காமம் எனப்படும் இன்பத்தையும் துறந்து கானகத்திற்குச் சென்று, வாழ்க்கையிலிருந்தும், உலகப் பற்றுகளிலிருந்தும் முற்றும் துறந்து முழுமைத் துறவியாகக் பயிற்சி பெறுவது இது.

ஹர்ஷரின் காலத்திலும் அத்தகைய வாழ்வுமுறையை முதியவர் பலர் மேற்கொண்டனர் என்பதற்கான ஆதாரங்களைக் காண்கிறோம். நாகானந்தம் நாடகத்தில் நதி என்பவர் சூத்திர தாரியிடம் தம் மாமனாரும் மாமியும் வானப் பிரஸ்தம் மேற் கொண்டதாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம். வாழ்க்கையில் அதிர்ச்சி தரும் நிகழ்ச்சிகள் ஏற்பட்டபோதும் வானப் பிரஸ்தம் மேற்கொள்வது உண்டு போலும். இராஜ்ய வர்த்தனர், ஹர்ஷர் ஆகியோர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் அதற்கு எடுத்துக்காட்டு.

காடுகளில் கிடைத்தவற்றைக் கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்தினர். பாணர் மணவாழ்க்கையை வெறுத்துக், குடும்ப வாழ்விலிருந்து விடுபட்டுக் காடு சென்றவர்கள் அங்குக் கிடைத்த காய்கனிகளைத் தின்று உயிர் வாழ்ந்தனர் என்கிறார்.

**சன்னியாசம்**

சன்னியாசம் என்பது தன்னை உணர்ந்த நிலை. பற்றுகள் எல்லாவற்றையும் துறந்த ஒருவன் ஒரே பற்றில் அதாவது இறைவனுடைய பற்றில் திளைத்து வாழும் வாழ்க்கையே அத் துறவற வாழ்க்கை எனலாம். உலக இன்பங்களையும் உலகப் பற்றுகளையும் அறுத்துப், பேரின்பத்தையே பெரிதாக கொண்டும் இறைவனுடைய பாதாரவிந்தங்களே உறவு எனக் கொண்டும் வாழும் வாழ்வாகும் அது. ஹர்ஷரின் காலத்தில் அந் நிலையை அடைந்த எத்தனையோ துறவிகளைக் குறித்து அறிகிறோம்.

துறவறம் மேற்கொண்ட அவர்களுக்குப் பொன்னும் ஒன்றுதான்; மண்ணும் ஒன்றுதான். செல்வத்தையே வாரிக் கொடுத்தாலும் அதை ஒரு பொருட்டாக எண்ணமாட்டார்கள். புஷ்பபூதியைக் காணப் பைரவாச்சாரியார் என்ற துறவி வந்தபோது அவருடைய காலடியில் தம் உடைமைகள் அனைத்தையும் ஒப்படைத்தபோது அத் துறவி சிரித்தவாறு 'நாங்கள் காடுகளில் வாழும் பிள்ளைகள் எங்களுக்கு அதிகாரமும் செல்வமும் என்ன பயனை விளைவிக்கப்போகின்றன' என்று குறிப்பிட்டார்.

துறவு வாழ்வு என்பது ஆடவர்க்கு மட்டும் உரியதாக அல்லாமல் மகளிர்க்கும் உரியதாக விளங்கிற்று. பரிவிராஜிஹா, ஸ்ரமாஹ, சபரிகா, தாப்சி, பிக்ஷுஹி முதலான பெண் துறவிகளைக் குறித்துக் காமசூத்திரம் அறிவிப்பதைப் போலப் பாணரும் தம் குறிப்புகளில் பெண் துறவிகளைக் குறிப்பிடுகிறார். காதம்பரியில் தாரபீடா என்ற அரசனின் தேவியை வயது முதிர்ந்த பெண் துறவிகள் சூழ்ந்து பல்வேறு சமய நூல்களிலிருந்து புராணக் கதைகளை எடுத்துரைத்தனர் எனவும், நெற்றியில் நீறணிந்த பெண் துறவிகள் காதம்பரியைச் சூழ்ந்து கொண்டனர் எனவும் அறிகிறோம். இந்த நால்வகைப் பிரிவிலான ஆசிரம முறை (ஆஸ்ரம வியாவஸ்த்தா) கட்டாயமாகப் பின்பற்றப்படவேண்டிய ஒன்று என்பது கிடையாது. தாமாகவே அதனை விரும்பி ஏற்றுக்கொண்டனர். சிறுபான்மையோரே அதனை பின்பற்றியவர்களாவர்.

## பெண்டிர் நிலை

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பெண்கள் சமூக வாழ்க்கையில் வகித்துவந்த பங்கினை, இல்லற வாழ்க்கையினைக் குறித்து அறிந்தபொது கண்டோம். எனினும், ஹர்ஷரின் காலத்தில் பெண்களின் வாழ்க்கைமுறை பொதுவாக எப்படிக் காணப் பட்டது என்பதனைக் காணுதல் இன்றியமையாததாகும். அக் காலத்திய இந்துக்கள் பெண்மகவு பிறந்தால் அதனை அத்துணை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வதில்லை. அப் பெண் திருமண வயது அடைந்துவிட்டால் அவர்களுடைய பரபரப்பும் துயரமும் மிகுதியாயின. மணமான பின் மங்கை மணமகன் இல்லம் செல்லும் துயரைப் பெற்றவர்கள் தாங்க முடிவதில்லை இதற்குக் குடிமக்கள் மட்டுமன்றி அரசனும் விலக்கல்லன். பிரபாகர வர்த்தனர் தம் மனைவியிடம் தம் மகள் இராஜ்ய ஸ்ரீயைப் பிரிவதைக் குறித்து வருந்திக் கூறியவை இவை: 'அவளுடைய நினைவுகள் ஒரு சிறிது நேரமும் என் நெஞ்சைவிட்டு அகலவில்லை. பெண்கள் பருவமடையத் தொடங்கியதும் பெற்றவர்கள் துன்பம் எனும் நெருப்புக்கு எரிபொருளாகி விடுகின்றனர். நம் உடலில் உதித்த குழந்தைகள், நம் மார்பில் தவழ்ந்த செல்வங்கள் யாரோ நம்மால் அறியப்படாதவர்களால் அழைத்துச் செல்லப்படுகின்றனர்' என்று கூறிவிட்டு, 'நல்ல மனிதர்கள் மகள் பிறந்ததை எண்ணி வருந்துகிறார்கள். ஆனால், உயர்ந்த மனிதர்களோ பெண்கள் பிறந்தவுடனேயே நீர் தெளித்துவிடுகிறார்கள்' என்று குறிப்பிட்டார்.

அதனாலேதான் பாணரின் ஹர்ஷ சரிதத்தில் இராஜ்ய வர்த்தனர் ஹர்ஷர், பிறந்ததற்கான மகிழ்ச்சி விழாக்களைக் காணு

கின்ற நாம் இராஜ்ய ஸ்ரீயின் பிறப்பின்போது அத்தகைய விழா ஏதும் கொண்டாடப்பட்டதைக் காண முடிவதில்லை. பாணரின் ஹர்ஷ சரித்திரத்தில் பெண்களைப்பற்றிய மூன்று குறிப்புகளை நாம் பெறுகிறோம்.

முதலாவதாக, பெண் குழந்தை பிறப்பதைப் பெற்றோர்கள் விரும்பவில்லை என்பதோடு அப்படிப் பிறந்த பெண் மகவு பருவமடைந்ததும் அவர்களுடைய துயரம் மேலும் அதிகரித்தது என அறிகிறோம். இரண்டாவதாக, அப் பெண்ணுக்கு நெருங்கிய உறவினர் இல்லங்களில் மணம் முடித்துக் கொடுக்கப் பெறாது வெளியாள்களுக்கே மணம் முடித்துத் தந்தனர் என அறிகிறோம். மூன்றாவதாக, அருமை மகள் மணம் முடித்துக் கணவன் இல்லம் செல்லும்போது அதனால் ஏற்படும் பிரிவு தாங்கமுடியாததாகக் கருதப்பட்டது.

பெண்கல்வி பற்றியும் அறிகிறோம். கல்வி பெண்களுக்கு மன வளர்ச்சியை அளித்தது. அக் கல்வியையும், பயிற்சியையும் அவர்கள் பெற்றதனால் சிறந்த இல்லத்தரசிகளாத் திகழ்ந்தனர். வாத்சயாயனர் பெண்கள் கற்றுக்கொண்ட 64 கலைகளையும் பட்டியில் போட்டுக் காட்டுகிறார். இராஜ்ய ஸ்ரீ இசை, நடனம் முதலியவற்றைப் பயின்றதாகப் பாணர் குறிப்பிடுகிறார். பெண்களுக்குக் கல்வி என்பது அக் காலத்தில் பெரும்பாலும் இசை, நடனம் முதலியன பயிற்றுவித்தலே எனத் தோன்றுகிறது. காதம்பரியில் கதைத் தலைவி அத்தகைய பயிற்சி பெற்றாள். விந்திய கேதுவின் மகள் எனக் கருதப்பட்டவள், கீதம், (இசை) நிருத்தியம், நடனம், வாத்யா (வாத்திய இசை) முதலியவற்றைப் பயின்றதாகவும் அறிகிறோம்.

அக் காலப் பெண்டிர் கணவனுக்குப் பணிந்த உண்மையான துணைவியராக விளங்கினர்; கணவனின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டனர். பலதார மணம் அவர்களுக்குச் சிறிது துன்பத்தை அளித்திருக்கக் கூடும். பிரபாகர வர்த்தனருக்கு மனைவியர் பலர் இருந்தபோதிலும், மூத்த அரசியே சமுதாய அந்தஸ்து பெற்றிருந்தாள். தோல்வி கண்ட அரசர்களின் மனைவியர் அந்தப்புரங்களில் தள்ளப்பட்டு அங்கே ஆசை நாயகிகளாக வாழ வேண்டியதாயிற்று. சாதாரண மக்களின் மனைவியர் ஓரளவிற்கு நல்ல சமூக நிலையினைப் பெற்றிருந்தனர் எனலாம்.

கணவன் விரும்பிய பெண்ணை மணந்துகொள்ள மனைவியர் உடன்பட்டனர். ஆனால், அவ்வாறு கணவனால் மணக்க

விருக்கின்ற பெண் தன் உறவினளாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டனர். கணவன்மார் இன்றியமையாத பிரச்சினை களில் தங்கள் துணைவியரை ஆலோசனை கலந்தபோதிலும் இறுதி முடிவை அவர்களே எடுத்தனர். இராஜ்ய ஸ்ரீக்குக் கிரகவர்மனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்த பிரபாகர வர்த்தனர் யசோமதியிடம் கிரகவர்மன் பொருத்தமான கணவன்தானா என்று கேட்டபோது யசோமதி, 'பெண்களைப் பெற்ற தாய் அவர்களுக்குத் தாதியைப் போன்றவர்களே தவிர வேறொன்று மில்லையென்றும், அவர்களைப் பொறுத்தமட்டில் தந்தையே அனைத்து அதிகாரமும் பெற்றவர்' என்றும் குறிப்பிடுவதிலிருந்து கணவனுடைய முடிவே இறுதி முடிவு எனத் தீர்மானிக்கப் பட்டதை அறிகிறோம். கணவன் மனைவியிடையே ஆழ்ந்த அன்பு காணப்பட்டது.

கணவனுடைய சொல்லை மீறிப் பெண்கள் நடந்துகொள்வ தில்லை. பெண்ணைவிட ஆண்மகனே உயர்வானவன் என்ற சூழ்நிலையில் பெண்கள் கணவனுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்றே பயிற்றுவிக்கப்பட்டனர். கடமை தவறாத மனைவி, என்றும் தொடர்ந்து பணி செய்வதையும் கணவனுக்குப் பணிந்து கிடைப்பதையும் தலையாய கடமையாகக் கருதினர். அந்நிலை எல்லாக் காலங்களிலும் பொதுவாகக் காணப்பட்ட ஒன்றே. பெண்களுக்கு ஓரளவிற்குச் சமுதாயத்தில் உயர்நிலை காணப்பட்டது என அறிகிறோம். யுவாங்-சுவாங் மகாயான பௌத்தக் கருத்துகளை விளக்கியபோது அவற்றை ஆர்வத் துடன் கேட்டுப் பயன்பெறும் அளவிற்கு இராஜ்ய ஸ்ரீ உயர்கல்வி பெற்றிருந்தாள். அக்காலப் பெண்டிர் ஓவியக் கலையை விரும்பிப் பயின்று அதில் சிறந்து விளங்கினர். இரத்னாவளி நாடகத்தில் கதைத் தலைவி, சமுத்ரகறா என்ற வண்ணக் கலவைகள் கொண்ட பெட்டியையும் வார்டிகா என்ற வரைகோலையும் கொண்டு சித்திரப் பலகையில் காதலனை ஓவியமாகத் தீட்டும் காட்சி விளக்கப்பட்டிருப்பதிலிருந்து இதனை நன்கு அறியலாம். ஹர்ஷரின் பிரியதர்சிகாவில் தம் அரசியை நடனம், பாட்டு, இசைக் கருவிகளை இயக்குதல் முதலியவற்றில் பயிற்சி பெறப் பணித்தார் எனக் குறிப்பிடப்படுகிறது.

பெண்கள் தாய்மையடைந்து 'தாய்' எனப் பெருமையுடன் திகழ்வதை விரும்பினர். அவர்கள் மக்களைப் பெறத் துன்பங்கள் அனுபவித்ததையும் வேள்விகள் பல நிகழ்த்திய தையும் பாணர் குறிப்பிடுகிறார். கணவனுக்குப் பின் தம்மைக் காக்கின்ற காப்பாளனாக மகனைக் கருதினர். தாய் தம் பிள்ளை

களைக் கண்டிப்புடனும், கட்டுப்பாட்டுடனும் அன்பினுலே வளர்த்துவந்தாள். அதனுல், பெண்டிர் இல்லற வாழ்விலும், சமுதாய வாழ்விலும், சமய வாழ்விலும் உரிய இடத்தைப் பெற்றிருந்தனர்.

பெண்கள் பர்தா எனப்படும் திரையிட்டு முகத்தை மறைத்துக்கொள்ளும் பழக்கம் இல்லை. காட்டு மலர்கள் நிரம்பப்பெற்றக் கூடைகளை தலையில் சுமந்தவாறு கிராமப் பெண்டிர் பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்றனர் எனப் பாணர் குறிப்பிடுகிறுர். உயர் குடும்பத்துப் பெண்டிரும்கூடப் பர்தா அணிந்திருக்கவில்லை. கன்னேசியிலும், பிரயாகையிலும் கூடிய சமயப் பேரவைகளில் இராஜ்ய ஸ்ரீ பங்குகொண்டதாக யுவாங்-சுவாங் காட்டும் குறிப்புக் குறிப்பிடத் தகுந்தது. (யசோமதி தம் கணவருடன் சென்றதாகவும், அரசின் அமைச்சர்கள் உயர் அதிகாரிகள் முதலியோர் நோயுற்ற பிரபாகர வர்த்தனரைக் காண வந்தபோது அரசி அமர்ந்துகொண்டிருந்தார் எனவும் காணப்படும் குறிப்புகளிலிருந்து பர்தா எதனையும் அவர்கள் அணியவில்லை என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது) அவ்வாறு கருதிய சி. வி. வைத்யாவின் கருத்துகள் தவருகப் படுகின்றன.

ஆனல், பெண்கள் பர்தாவே அணியவில்லை என்று முழுமையாக மறுத்துக் கூறவும் முடியாது. சிலர் பர்தா அணிந்திருந்தனர். பாணரின் குறிப்பிலிருந்து பர்தா முறை இருந்ததாக அறிய முடியவில்லை. (சிலர் தம் கணவனுடைய முகத்தைத் தவிர வேறு யாருடைய முகத்தையும் பார்ப்பதில்லை எனச் சூளுரைத்தனர்) என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து அவ்வாறு பர்தா இருந்தது எனக் கருதமுடியாது.) அரசரின் குடும்பத்தவர் திரையிடப்பட்ட மாடிமுகப்பில் (Balcony) தங்கியிருந்தனர் என்ற பாணரின் குறிப்பு அவர்கள் தனி இடங்களில் இருந்தனர் என்பதைக் காட்டுகிறதேயன்றி அவர்கள் பர்தா அணிந்திருந்தனர் என்று காட்டவில்லை. பர்தா முறை என்பதே இஸ்லாமியரின் வருகையினுல் ஏற்பட்ட ஒன்று என்பது டாக்டர் சர்மாவின் கருத்து. சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்னும் பழக்கம்பற்றி ஹர்ஷரின் காலத்திலும் ஏராளமான சான்றுகளைக் காண்கிறேம். இந்த உடன்கட்டை ஏறுதல் என்னும் பழக்கம் தொடக்கக் காலத்தில் இருந்து பின்னர் மறைந்து குப்தர் காலத்தில் மீண்டும் உயிர்பெற்றது.

(கன்னேசி நகரிலிருந்த இராஜ்ய ஸ்ரீ கணவன் இறந்த பின், மனைவி தானுக முன்வந்து உடன்கட்டை ஏறுதல் என்ற சாவைத் தழுவும் பழக்கத்தை மேற்கொள்ள விரும்பிச்

சிதையில் விழப்போகும் சமயம் ஹர்ஷவர்த்தனரால் காப்பற்றப் பட்டாள். ஹர்ஷரின் தாய் யசோமதியின் முடிவு அவ் வழக்கம் அக் காலத்தே இருந்தது என்பதற்கு எடுத்துக் காட்டாகும். பாணர் ஹர்ஷ சரிதத்தில் அந் நிகழ்ச்சியை விளக்கிக் காட்டியுள்ளார். பிரபாகர வர்த்தனரின் உயிர் பிரிந்துகொண்டிருந்த வேளையில் சுமங்கலியாகவே உயிர் நீப்பேன் என யசோமதி அறிவித்தார். கணவனை இழந்த பின் வாழும் வாழ்வு உண்மையான வாழ்வு அன்று என்று கருதிய அவர் தம் மகனைத் தழுவி உச்சியில் முத்தமிட்டுச் சாவைத் தழுவச் சென்றார். அரண்மனையின் அந்தப்புரத்திலிருந்து புறப்பட்டு நேராகச் சரஸ்வதி ஆற்றின் கரைக்கு நடந்து சென்று தீயைச் சுற்றி வந்து வணங்கி, 'கணவரின் கால்தூசு போல விண்ணுலகிற்கு விரைந்து சென்று கணவரின் வருகையை அறிவிக்க அதில் குதித்தார்' என ஹர்ஷ சரித்திரம் கூறுகிறது.

பிரியதர்சிகா என்ற நாடகத்தில் விந்திய கேதுவின் இறப்பிற்குப் பின்னர் அவருடைய மனைவி உடன்கட்டை ஏறினாள் என்ற செய்தியினை ஹர்ஷர் விளக்குகிறார். காதம்பரியிலும் சந்திர பீடனின் மனைவி அவ்வாறு உயிர்துறக்கச் செய்த முடிவு குறிப்பிடப்பட்டுள்ளது. பிரபாகர வர்த்தனரின் மறைவிற்குப் பின்னர் அவருடைய மற்ற மனைவியரும் உயிர் துறந்தனர். கணவனுடன் இறக்க விரும்புகிற பெண்கள் சுமங்கலியாக இறக்க வேண்டி ஆபரணங்கள் பூண்டு அலங்கரித்து அதற்கெனத் தனியாக அமைக்கப்பட்ட சிதைகளிலோ கணவனைக் கொளுத்துகின்ற சிதையிலோ விழுந்து உயிர் துறந்தனர். அதற்கு முன்னர்க் கணவரின் உடமைகள் அனைத்தும் மரியாதையுடன் கண்ணில் ஒற்றி வழிபடப்பட்டன.

### திருமணங்கள்

திருமணம் என்பது ஒருவருடைய வாழ்வில் நடைபெற்ற புனிதக் கடமையாகக் கருதப்பட்டது. வேத காலம் முதலே ஆணும் பெண்ணும் சமூகத்தவரின் முன்னிலையில் கணவன் மனைவியாகின்ற சடங்கிற்குத் தெய்விகச் சிறப்பு அளிக்கப் பட்டிருந்தது. திருமணம் என்பது தனி மனிதன் ஒருவனுக்கு மட்டுமன்றிச் சமுதாயம் முழுமைக்குமே இன்றியமையாதது என்று கருதப்பட்டது. சமய விதிப்பினாலும் சமுதாய கடமைகளினாலும் ஒவ்வொருவரும் திருமணம் என்ற வேள்வியை நிகழ்த்த வேண்டுமெ ன எண்ணப்பட்டது. திருமணம் ஆகாதவர்கள் அபத்தினிகா எனவும் வேள்விகள் நிகழ்த்தாதவர் என்ற பொருளில் அயக்ஞா எனவும் கருதப்பட்டதோடு மனைவி

இல்லாதவன் அரை மனிதன் என்றும் கூறப்பட்டது.) இவ்வாறாகச் சமூக அமைப்பில் இந்துச் சமுதாயத்தில் திருமணம் சிறப்புத் தன்மையும் புனிதத் தன்மையும் வாய்ந்ததாகக் கருதப் பட்டது.

ஆன்மக் கோட்பாடு ஏற்பட்டபோதே திருமணமும் இன்றியமையாதது என்ற நிலை உருவாயிற்று. ஸ்மிருதிகள், சூத்திரங்கள் தோன்றிய காலத்தில் திருமணம் மேலும் உறுதி பெறலாயிற்று. (யஞ்ஞ வல்கியர் ஒரு மனிதன் பிராமணனாயிருந்தாலும், க்ஷத்திரியனாய் இருந்தாலும், வைசியனாய் இருந்தாலும் அல்லது சூத்திரனாய் இருந்தாலும் மனைவி இல்லாதவனாயின் சமயக் கடமைகள் ஆற்றுவதற்குத் தகுந்தவனாகமாட்டான் என்று குறிப்பிட்டுள்ளதும் திருமணத்தின் இன்றியமையாமையைத் தெள்ளென எடுத்துக் காட்டுகின்றது.) (திருமணம் மேற்கொண்டு ஒரு மகனைப் பெறுவதன் மூலமாகவே இந்து ஒருவனின் சமுதாய சமயப் பொறுப்புகள் நிறைவுபெறுவதாகக் கருதப்பட்டது.)

பண்டைய ஸ்ருதிகளும், ஸ்மிருதிகளும் எட்டுவகையான திருமண முறைகளைக் காட்டுகின்றன. ஆனால், அவ்வாறு எட்டுவகையாகப் பிரிக்கப்பட்ட சூழ்நிலையில் திருமண உறவுகள் ஹர்ஷரின் காலத்தில் முறைப்படி காணப்படவில்லை. ஆனால், அந்த எட்டு வகைகளைச் சார்ந்தன என்று கூறத்தக்க திருமண முறைகள் நடைபெற்றதற்கான ஆதாரங்களை நாம் காண்கிறோம். அந்த எட்டுவகைத் திருமணங்கள் முறையே பிரம்மம், தெய்வம், ஆரிடம், காந்தர்வம், பிரஜாபத்தியம், அசுரம், ராட்சசம், பைசாசம் என்பன ஆகும்.

பிரம்ம மணந்தான் சாதாரணமாக எங்கும் நடைபெற்று வந்தது. அதன்படி தந்தை ஒருவன் தன் மகளைத் தக்க அணிகலன் முதலானவற்றுடன் தனது வகுப்பைச் சார்ந்த இளைஞனுக்குத் தாரை வார்த்து மணம் முடித்துக் கொடுப்பான். இதற்கு எடுத்துக்காட்டு இராஜ்ய ஸ்ரீயைக் கிரக வர்மனுக்கு மணம் முடித்துக் கொடுத்ததாகும். அத் திருமண முறையே பெரிதும் உயர்ந்ததாகவும் கருதப்பட்டது.

தெய்வ மணம் என்பது வேள்வி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அவ் வேள்வியை ஆற்றுகின்ற புரோகிதருக்கு ஒரு தந்தை தனது மகளை அனைத்து ஆடை அணிகலன்களுடன் தத்தம் செய்துவிடுவது ஆகும். அத் திருமணம் ஹர்ஷரின் காலத்தில் நடைபெற்றதாகச் சான்று எதும் இல்லை.

ஒரு பசுவையோ காளையையோ பெற்றுக்கொண்டு ஒருவர் தம் புதல்வியை இளைஞன் ஒருவனுக்குச் செய்து வைக்கின்ற ஆரிடத் திருமணமோ 'நீவிர் இருவரும் ஒன்று சேர்ந்து கடமைகளைச் செவ்வனே செய்வீர்களாக' என வாழ்த்தி ஒரு தந்தை தனது மகளை இளைஞன் ஒருவனிடம் ஒப்படைக்கின்ற பிரஜாபத்தியம் என்ற திருமண முறையோ ஹர்ஷரின் காலத்தில் காணப்படவில்லை.

அடுத்த திருமண முறை காந்தர்வம். அதன்படி ஓர் இளைஞனும், இளம் பெண்ணும் களவு முறையில் காதலித்து மணம் செய்து கொள்வர். அத் திருமண முறை எல்லாக் காலங்களிலும் இருந்துவருகிறது. ஹர்ஷரின் காலத்திலும் அத் திருமண முறை வழக்கிலிருந்தது என்பதற்கு ஏராளமான சான்றுகளைக் காட்டலாம். ஜீமுத வாகனன் மலையவதியை மணம் செய்துகொண்டது காந்தர்வ முறையிலேதான். அது போன்ற திருமண முறையினை இரத்னாவளியிலும், பிரியதர்சிகாவிலும் காண்பது போலப் பாணரின் காதம்பரியிலும் காணலாம். காந்தர்வ மணத்தைச் சட்ட பூர்வமான மணமாக ஏற்றுக்கொண்டபோதிலும் அத் திருமண முறைக்குச் சமுதாயத்தில் அவ்வளவு ஆதரவு இல்லாமையால் அத் திருமணத்திற்குப் பின்னர்ச் சடங்குகள் நிகழ்த்தப் பெற்றன.

சுயம்வரம் என்ற திருமண முறையினைக் காண்போம். அதன்படி ஒரு பெண்ணின் வீட்டில் அவளை விரும்பும் இளவரசர்கள் அனைவரும் வந்து கூடுவர். அவர்களிடையே தான் விரும்பும் ஒருவனை மணமகள் தேர்ந்தெடுத்து மாலையிட்டு மணப்பாள். ஒரு மனிதன் தனக்கு மனைவி ஆகப்போகும் பெண்ணை அவளின் தந்தையிடமிருந்து விலை கொடுத்து வாங்கித் திருமணம் செய்து கொண்டால் அது அசுர மணமாகும்.

(ஒரு பெண் உறங்கிக்கொண்டிருக்கும்போதோ உணர்வற்ற நிலையில் இருக்கும்போதோ அவளைக் கூடி அதன்பின் திருமணம் செய்துகொண்டால் அது பைசாசத் திருமணம் என அழைக்கப் பெறும்.) மணமகன் மணமகளைக் கடத்திச் சென்று அதன் பின் திருமணம் செய்துகொண்டால் அதனை இராட்சசத் திருமணம் என அழைத்தனர்.

எல்லாக் காலங்களிலுமே இந்த எட்டுத் திருமணங்களும் நடைபெற்றதாகக் கருதமுடியாது. அதுபோல ஹர்ஷ வர்த்தனர் காலத்தில் அவை எல்லாமே நடைபெற்றதெனக் கூறமுடியாது. யுவாங்-சுவாங் அல்லது பாணர் அல்லது ஹர்ஷர் ஆகிய யாருமே

சுயம்வரம் பற்றியோ ஏனைய திருமண முறைகளைப் பற்றியோ குறிப்பிடாததால் அவை வழக்கில் இல்லை என்றே கருத வேண்டியுள்ளது. அப்படி இருந்திருப்பின் இலக்கியங்களிலேனும் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால், அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

மணமகனின் பெற்றோர்களே திருமணத்திற்கு இசைவு கேட்டுச் சென்றனர். திருமண உறவுகள் மேற்கொள்ளுகின்றபோது நல்ல குடும்பம், நல்ல பண்புடையோர் ஆகிய இயல்புகளை உற்று நோக்கியே மண உறவு கொண்டனர். தந்தை இறுதி முடிவுசெய்யும் உரிமை பெற்றவராக விளங்கினாலும் தம் மனைவியையும், மக்களையும் கலந்துகொண்டுதான் முடிவு செய்தார். அவ்வாறு மணம் பேசி முடித்த பின்னர் நல்லதொரு நாளில் திருமண விழா உறுதி நடைபெற்றது.

அக் காலத்திய திருமண உறுதிவிழாச் சடங்கு பற்றிய செய்திகளைப் பாணரின் ஹர்ஷ சரிதத்திலிருந்து அறிகிறோம். கிரக வர்மனிடமிருந்து பிரபாகர வர்த்தனருடைய அவைக்கு வந்து சேர்ந்த தூதுவரின் கைகளில் திருமண உறுதியின் அடையாளமாக நீரைக் கொட்டினர். இராஜ்ய ஸ்ரீயின் திருமணத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் பாணர் அப்போது நடைபெற்ற சடங்குகளை எடுத்துக்காட்டுகின்றார். அவர் அளிக்கின்ற விளக்கத்திலிருந்து இராஜ்ய ஸ்ரீயின் திருமணம் பற்றியும், அதுபோது நடைபெற்ற சடங்குகள் பற்றியும் அறிகிறோம். (பாணர் திருமணம் செய்யத் திட்டமிட்ட சமயம் இராஜ்ய ஸ்ரீ முற்றிலும் பெண்மையடையாத சிறுமி என்பதனை உணர்த்துகிறார். இராஜ்ய ஸ்ரீயின் திருமண விழாவைப் பாணர் வர்ணிப்பதிலிருந்து அன்றைய இந்தியாவின் சமூகப் பழக்க வழக்கங்களை நாம் தெரிந்துகொள்கிறோம். சிற்றரசர்களும் அவர்களின் அரசிகளும் விழாச் சிறப்பாக நடப்பதற்கு உதவி புரிந்தனர். அவ்வரசர்கள் வரிந்து கட்டிக்கொண்டு அலங்காரப் பொருள்களைக் கொண்டு அரசர் பணித்த வேலைகளைச் செய்வதில் ஈடுபட்டிருந்தனர் எனப் பாணர் குறிப்பிடுகின்றார்.)

திருமணத்திற்குச் சமுதாயத்தின் உயர் நிலையில் இருந்தவர்கள் ஏராளமான பொருளைச் செலவழித்தனர் என யுவாங்-சுவாங் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். வசதி படைத்தவர்கள் போட்டி போட்டுக்கொண்டு திருமண விழாவைச் சிறப்பிக்கச் செய்தனர். திருமண விழாவின்போது உறவினர்களும் நண்பர்களும் வந்து கூடினர். புனித இசை முழங்கப்பட்டது; எங்கும்

அலங்காரம் பளிச்சிட்டது; சுவர்களுக்கு வண்ணம் பூசப் பட்டது; மக்கள் தங்கள் சக்திக்கேற்றவாறு திருமணத்திற்குச் செலவிட்டனர் எனத் தெரிகிறது. திருமணம் தர்ம சாஸ்திரங் களில் கூறப்பட்டுள்ள விதி முறைகளுக்கும், வழக்காற்றுக்கும் ஏற்ப நடைபெற்றது. திருமணத்திற்குத் தகுந்த நல்ல வேளை குறிக்கப்பட்டது. அவ் வேளையில் மணமகனின் இல்லத்திற்குத் தகவல் அனுப்பப்பட்டு அவர்கள் வந்ததும் மண விழா குறித்த வேளையில் நடைபெற்றது.

எண்ணிறந்த யானைகள், குதிரைகள் மண ஊர்வலத்தில் கலந்துகொண்டன. மணமகனை மணமகளின் தந்தை, மைத்துனர்கள் கட்டி அணைத்து வரவேற்றனர். மணமகள் அழகிய சிறந்த ஆடைகளுடன் அலங்கரிக்கப்பட்டு மண மேடைக்கு வர அதைத் தொடர்ந்து மணமகனும் வந்தான். மணமேடையில் நெருப்பு வளர்க்கப்பட்டது. அந் நெருப்பில் வேள்விப் பொருள்களை இட்டனர். மணவிழா முடிந்ததும் மணமகனும் மணமகளும் மணமகளின் பெற்றோர்களை வணங்கினர். திருமணச் சடங்கு முடிந்ததும் அவர்கள் இருவரும் நன்கு அலங்கரிக்கப்பட்ட ஆலாச கிரகம் என்னும் மாளிகையில் பத்து நாள்கள் தங்கினர். அதன் பின் மணமகனின் ஊர் நோக்கிச் சென்றனர்.

அக் காலத்தில் இளம்வயதிலேயே திருமணம் நடை பெற்றது என அறிகிறோம். இராஜ்ய ஸ்ரீயைப் பற்றிப் பாணர் அளிக்கின்ற விளக்கத்திலிருந்து அவளுக்குத் திருமணம் நடக் கின்றபோது 11 அல்லது 12 வயதே ஆகியிருக்க வேண்டும் என அறிகிறோம். பிரபாகர வர்த்தனர் காட்டுகின்ற விளக்கத்தி லிருந்து இராஜ்ய ஸ்ரீ மணம் செய்யும் பருவத்தை அடைந்தவள் என்பது தெரிகிறது. பிரபாகர வர்த்தனர் தம் மனைவியிடம் இராஜ்ய ஸ்ரீ வயது வந்த பெண் என்றும், மார்பு பருத்த பெண் (பயோதரண்மாண) என்றும் குறிப்பிடுகின்றார்.

இனிக் கலப்புத் திருமணங்கள் நால்வகை வருணத்தவ ரிடையே நடைபெற்றனவா என்பதனைக் காண்போம். பொதுவாக அதே வருணத்தவரிடையே மண உறவு கொள் ளுதல் ஏற்கப்பட்டது. ஆனால், கலப்பு மணம் அவ்வளவாக ஏற்கப்படவில்லை. யுவாங்-சுவாங் ஒரே சாதியில் மட்டுமே மணம் செய்துகொண்டனர் என்று கூறும் கருத்துச் சரியாகப் படவில்லை. ஹர்ஷரின் காலத்தில் நிச்சயமாக அனுலோமா, பிரதிலோமா திருமணங்கள் நடைபெற்றன என அறிகிறோம்.

(மேல் ஜாதியைச் சேர்ந்தவர்கள், கீழ் ஜாதியைச் சேர்ந்த பெண்களை மணந்துகொள்ள அனுமதிக்கப்பட்டது. ஆனால், கீழ் ஜாதியைச் சேர்ந்த ஒருவன் மேல் ஜாதியைச் சேர்ந்த பெண்ணை மணம் செய்துகொள்வதை ஏற்றுக் கொள்வதில்லை. அதனைப் பிரதிலோமா என்று குறிப்பிட்டனர்.) 6, 7 ஆம் நூற்றாண்டுகளில் அவ்வாறான திருமணங்கள் பல நடைபெற்றன என்பதற்கு ஏராளமான ஆதாரங்களைக் காட்டலாம். பார்கவா எனப் பிராமண தந்தைக்கும், சூத்திர மனைவிக்கும் பிறந்த தம் இரண்டு ஒன்று விட்ட சகோதரர்களைப் பாணர் குறிப்பிட்டார். க்ஷத்திரியப் பெண்ணை அரிச்சந்திரா என்ற பிராமணர் மணந்துகொண்டதும், இரவி கீர்த்தி என்ற பிராமணர் வைசியப் பெண்ணை மணந்துகொண்டதும் வரலாற்றில் காணப்படுகின்றன. அவ்வாறு திருமணங்கள் நடைபெற்றன என்றாலும் அவைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் யுவாங்-சுவாங் ஒரே சாதியில், ஒரே இனத்தில் மண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர் என்கிறார்.

அடுத்து மணவாழ்க்கை குறித்துக் காண்போம். ஒருவருக்கொருவர் இறுதிவரை அன்பு செலுத்தி வாழும் வாழ்க்கையே கணவன் மனைவி மேற்கொள்ள வேண்டிய தர்மம் என மனு குறிப்பிடுகின்றார். ஒரு முறை அவர்கள் இருவரும் பிணைக்கப்பட்டபின் இறுதிவரை வேறுபாடு இன்றி வாழ வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. நிலையான, பிரிக்க முடியாத கூட்டு வாழ்க்கையே இந்துச் சமுதாயத்தின் அடிப்படை அமைதியானதும், உடன்பாடானதும், மகிழ்ச்சியுடையதுமான வாழ்க்கையே திருமண வாழ்க்கைக்கு அடிப்படை என வலியுறுத்தப்பட்டது.

அக் கால இலக்கியங்களில் படைக்கப்பட்டுள்ள பெண் கதாபாத்திரங்கள் எல்லாம் திருமண வாழ்க்கையின் உயர்ந்த கோட்பாட்டுடன் காணப்படுகின்றன. கணவன் மனைவியிடையே உண்மையான அன்பு நிலவியது. அக் காலத்தில் கணவன் காதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது மனைவியர் அசற்று உடன்படவில்லை எனக் குறிப்பிடும் டாக்டர் சர்மா எல்லா வகுப்பிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா நாட்டிலும் பெண்களிடையே காணப்படுகின்ற நிலைதான் அது எனவும் குறிப்பிட்டார். அதற்கான எடுத்துக்காட்டுகளை இரத்னாவளியிலும், பிரியதர்சிகாவிலும் காணலாம். (கணவனுக்கு முன்னர்த் தம் உயிர் கூட்டை விட்டுச் செல்லவேண்டுமென எண்ணி வாழ்ந்தனர் என்பதற்கு யசோமதியின் இறப்பு

எடுத்துக்காட்டாக அமைகிறது. யுவாங்-சுவாங் ஒரு பெண் இரண்டாவது முறை மணம் செய்துகொள்வதில்லை எனக் குறிப்பிடுவதிலிருந்து எவ்வித முடிவும் கொள்ள இயலவில்லை. ஆயினும், உயர் வருணத்தவர் விதவை மணத்தை ஏற்கவில்லை என அறிகிறோம். எனினும், விதவை வாழ்க்கைதான் வாழ வேண்டும் என்று வற்புறுத்தப்பட்ட நிலை இருந்ததாகத் தெரியவில்லை.

திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் மணமகனுக்குப் பெண்ணின் பெற்றோர் ஸ்ரீதனம் எனப்படும் வரதட்சணை அளிக்கின்ற முறை இருந்தது. யுவாங்-சுவாங் தம் குறிப்புகளில் வரதட்சணை பற்றி எதும் குறிப்பிடவில்லை. ஆனால், இராஜ்ய ஸ்ரீயின் திருமணத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்ற பாணர் அவ்வாறு வழங்கப்பட்டிருக்கலாம் என்று கருத இடமளிக்கிறார். ஆயினும், அதைப் பற்றிய விளக்கமான குறிப்பினை அறிய முடியவில்லை. சந்திர பீடனுக்குக் காதம்பரியின் தந்தை தம் மகளை மணப்பதற்காகத் தம் அரசையே அளித்தார். அவ்வாறு வரதட்சணை வழங்குவது என்பது கட்டாயப்படுத்தப்பட்ட ஒன்றாக அமையவில்லை என்றே தோன்றுகின்றது. தாமாகவே தம்முடைய நிலை தம்முடன் மணம்புரிந்துகொள்வோருக்குத் தெரியவேண்டும் என்று அவ்வாறு செய்வதுண்டு. எதிர் காலத்தில் தம் மகளுக்கு ஏதேனும் விரும்பத் தகாத விளைவுகள் ஏற்பட்டால் அப்போது உதவும் என்ற நோக்கத்தில் வரதட்சணை வழங்கப்பட்டது.

## உணவு

யுவாங்-சுவாங்கின் குறிப்பிலிருந்து மக்கள் பால், நெய், சர்க்கரை, கடுகு எண்ணெயினால் தயாரிக்கப்பட்ட உணவு ஆகியவற்றைப் பொதுவாக உண்டனர் என்று அறிகிறோம். மக்கள் சைவ, அசைவ உணவு அருந்தினர். அவர்கள் மீன், மாமிசம் முதலியவற்றைச் சேர்த்துக்கொண்டனர். எல்லா வருணத்தவரும் ஒன்று சேர்ந்து உணவருந்துகின்ற சமபந்தி போஜன முறை காணப்படவில்லை. மூன்று மேல்வருணத்தவரிடையேகூட அம்முறை காணப்படவில்லை. மக்கள் மற்றவர்களுடைய வற்புறுத்தலுக்காக அல்லாமல் தாங்களாகவே விரும்பித் தூய்மையான வாழ்க்கையை மேற்கொண்டனர். உடலைத் தூய்மையாக வைத்துக்கொண்டனர். ஒவ்வொரு முறையும் உணவு உட்கொள்ளுவதற்கு முன் நீராடினார்கள். நிறைவில்லாதனவும் எஞ்சி இருப்பனவுமான பொருள்களை

உணவில் பரிமாறுவதில்லை. உணவுப் பாத்திரங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவதில்லை. அவை பெரும்பாலும் மண்ணாலும், மரத்தாலும் செய்யப்பட்டனவாதலால் பயன் படுத்தியபின் தூர எறிந்தனர்.

ஆனால், யுவாங்-சுவாங்கின் குறிப்பை முழுமையாகச் சரி என்று கூறிவிட முடியாது. மட்பாண்டங்களைத் தூர எரிந்து விட்டு மரத்தினால் ஆனவற்றை மட்டும் கழுவிப் பயன்படுத்தி இருக்கலாம். தங்கம், வெள்ளி, செம்பு அல்லது இரும்பு முதலிய உலோகங்களினால் செய்யப்பட்ட பாத்திரங்கள் துலக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. பாஹியானைப்போலவே யுவாங்-சுவாங்கும் இந்திய உணவின் தூய்மையைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வெங்காயமும் வெள்ளைப்பூண்டும் உணவு சமைப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை. அதை உண்ட மக்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர் என அவர் குறிப் பிடுகிறார். மான், ஆடு, ஆகியவற்றின் இறைச்சியைத் தவிர வேறு உயிர்களின் இறைச்சி உண்ணுவது தடுக்கப்பட்டது. பிராமணர்களிடையேயும் விலங்குகளை உயிர்ப் பலியிடுவது உண்டு என்பதை பாணரும் யுவாங்-சுவாங்கும் குறிப்பிடு கின்றனர். மக்கள் நோயுற்ற வேளை தவிர மற்றைய நேரங் களில் தங்கள் கைகளில் உணவுப் பொருள்களை எடுத்து உண்டனர். மலைப்பகுதிகளில் வாழ்ந்த முனிவர்களும் ரிஷி களும் கிழங்குகள், பழங்கள், இலைகள் முதலியனவற்றை உண்டு வாழ்ந்தனர்.

போதை தரும் மதுவினை அருந்துகின்ற வழக்கம் இருந்தது என அறிகிறோம். மக்களுடைய மதுப் பழக்கத்தை எடுத்துக் காட்டக்கூடிய ஏராளமான சான்றுகள் உள்ளன. மது அருந்து தல் மக்களிடையே காணப்பட்ட பொதுவான பழக்கமே என்று கருதலாம். யுவாங் - சுவாங் பௌத்தத் துறவிகளும், பிராமணர்களும் மது அருந்தவில்லை எனவும், கருப்பஞ்சாறு அல்லது திராட்சை ரசமே அருந்தினர் எனவும் குறிப்பிட்டார். க்ஷத்திரியர்கள் கரும்பு, திராட்சை முதலியவற்றிலிருந்து எடுக்கப் பட்ட மதுவினை அருந்தினர். வைசியர்கள் நன்கு வடிகட்டப் பட்ட மதுவினை அருந்தினர். சூத்திரர்களும், கலப்பு இனத்த வரும் எவ்வித வேறுபாடுமின்றிக் குடித்தனர். யுவாங்-சுவாங் திராட்சை ரசம் அளிக்கப்பட்டபோது ஏற்றுக்கொண்டு மதுவினை அருந்த மறுத்துவிட்டார் என்று குறிப்பிடப்படுவதி லிருந்து மதுவுடன் மற்றப் பானங்களும் அருந்தப்பட்டன எனத் தெரிகிறது.

ஆபான மண்டபம் எனப்பட்ட பொது இடத்தில் மக்கள் கட்டுப்பாடின்றி மது அருந்தினர் எனப் பாணர் குறிப்பிடுகிறார். காமரூப அரசன் பாஸ்கர வர்மன் அன்பளிப்பாக அனுப்பியவற்றில் மிக இனிமையான திராட்சை மதுவும் இருந்தது. ஹர்ஷ சரிதத்தில் விழாக் கால அரண்மனைப் பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுகையில் அங்குப் பலரும் மாறுபாடின்றியும், வேறுபாடின்றியும் மதுவருந்திக் களித்திருந்ததைப் பாணர் எடுத்துக் காட்டுகின்றார். அவ் விழாக்களில் அரசர் கட்டுப்பாடற்ற இன்பங்களை நுகர்வதற்கு இசைவு அளித்துவிட்டார் எனத் தெரிகிறது. ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் மதுவருந்தினர்.

'அடிமைப் பெண்கள் குடித்துவிட்டுத் தங்களுடைய துணைவர்களுடன் ஆடிக்கொண்டிருந்தனர். சிற்றரசர்களும் குடிபோதையில் அலங்கோலமாக நடனமாடிக்கொண்டிருந்தனர். அடிமைகள் குடி வெறிகளில் பாடிய பாட்டுகளில் அமைச்சர்களின் காதல் இரகசியங்கள் வெளிப்பட்டன. அடிமைகள் கீழான வசைமொழி பேசிக்கொண்டும் அரச குலப் பெண்களுடன் சண்டைகளிட்டுக்கொண்டும் இருந்தனர். இளைஞர்கள் மதுவருந்திவிட்டுக் குதூகலமாக ஆடிக்கொண்டிருந்தனர்' எனப் பாணர் விளக்குகிறார்.

மது மயக்கத்தில் வயது முதிர்ந்த பெண்கள்கூட வெறி பிடித்தாற்போலக் கத்திக்கொண்டிருந்தனர். கிழவர்களும் மது அருந்தி வெட்கத்தை விட்டு மாயத்தால் கட்டுண்டவர்கள் போல ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இதே போன்ற விளக்கமொன்றை இரத்னவளியில் ஹர்ஷர் விளக்கியுள்ளார். 'குடி வெறியுடன் பெண்கள் நடனமாடினர். சிவப்பு வண்ணக் கலவையை அவர்கள் உடல் முழுவதும் பூசிக்கொண்டிருந்தனர். பாம்பின் படத்தைப்போன்ற நுனி கொண்ட பீச்சாங் குழல்களால் பீச்சப்பட்ட நீரில் குளித்து, நல்ல உடைகளை அணிந்திருந்த நண்பர்களைக் கட்டித் தழுவிக்கொண்டு ஆடினர். அப்போது நெடுஞ் சாலைகளின் கடைகள்வரை எதிரொலிக்கும்படி கையைக் கொட்டி ஆடினர்.' மேலே காணப்பட்ட விளக்கங்கள் சற்று மிகைப்படுத்திக் காட்டப்பட்டவையாயிருக்கலாம். ஆனால், அவற்றில் உண்மை பெரிதும் காணப்படுகிறது. இராஜ்ய ஸ்ரீயின் திருமணத்தின்போது தோல் தொழிலாளர்களுக்கு மது வழங்கினர் என்று அறிவதிலிருந்து அரசாங்கமே மதுவருந்தலை ஊக்குவித்தது எனத் தெரிகிறது.

வெற்றிலை போடுகின்ற பழக்கம் நீண்ட நாள்களாக இந்தியாவில் காணப்பட்டுவருகிறது. வெற்றிலை, தாம்பூலம் என அழைக்

கப்பட்டது. பிரகத்ஸமிதா வெற்றிலை காதல் உணர்வைத் தூண்டுகிறதெனவும், உடலுக்கு அழகூட்டுகிறது எனவும், வாயை மணக்கச் செய்கிறதெனவும், உடலை வலுப்படுத்தி நோயி லிருந்து காக்கிறது எனவும் குறிப்பிடுகிறது. ஹர்ஷரின் காலத்தில் வெற்றிலை சுவைத்தல் பொதுவாகக் காணப்படும் பழக்கமாகும். அன்பு, மதிப்பு, கௌரவம் முதலியவற்றின் அடையாளமாக விருந்தினர்க்கு வெற்றிலை அளிக்கப்பட்டது. காலை முதல் மாலை வரை எவ்வித நேரக் கட்டுப்பாடுமில்லாமல் எல்லா நேரங் களிலும் மக்கள் வெற்றிலையைப் பயன்படுத்தினர்; துயர நேரங் களில் பயன்படுத்துவதில்லை. பிரபாகர வர்த்தனர் இறந்தபின் ஹர்ஷர் வெற்றிலையைச் சுவைக்கவில்லை எனக் குறிப்பிடப்படு கிறது.

ஆண்களும் பெண்களும் வெற்றிலை அளிப்பவர்களான அடைப்பைக்காரர்கள் அல்லது தாம்பூலக்காரர்களைப் பணியில் அமர்த்தினர். ஆண் தாம்பூலக்காரர்கள், 'தாம்பூலத் தாயகா' எனவும், பெண் தாம்பூலக்காரி 'தாம்பூலக்காரங் காவாகினி' எனவும் அழைக்கப்பட்டனர். கிரக வர்மனின் தாம்பூலத் தாயகாவின் பெயர் பாரிஜாதகா எனவும், பாணரின் தாம்பூல தாயகாவின் பெயர் சாந்தகா எனவும் அறிகிறோம். தாம்பூலத் தாயகாக்கள் அரசர்களைப் போர்க்களத்திலும் நிழல் போல் தொடர்ந்தனர்.

தாம்பூலக் காரங்காவாகினிகள் மிகவும் நம்பிக்கைக்குரிய மதிப்புடைய அரண்மனைப் பணிப்பெண்டிராக விளங்கினர். அவர்கள் இரகசியச் செய்திகளைத் தலைவியிடத்திலிருந்து தலைவ னிடத்துக் கொண்டு செல்லுவதுமுண்டு. வெற்றி கொள்ளப்பட்ட அரசர்களின் பெண்டிரும் தாம்பூலம் எடுத்துச் செல்கின்ற பணி யையும் கவரி வீசுதலையும் செய்தனர். இராஜ்ய ஸ்ரீயின் வெற்றிலைக்காரப் பெண் பத்ரலதா எனப் பெயர் பெற்றிருந்தாள். அவள் இராஜ்ய ஸ்ரீயின் தோழியாக விளங்கினாள். ஹர்ஷ வர்த்தனரின் காதில் எதைச் சொல்ல விரும்பினாளோ அதனைப் பத்ரலதாவிடமும் கூறினாள். யுவாங்-சுவாங் இந்தியர்களுடைய வெற்றிலை போடுகின்ற பழக்கத்தைக் குறிப்பிடாவிடினும் 'இந்தியர்கள் தங்கள் பற்களைக் கறுப்பு சிவப்பினால் கறைப்படுத் திக் கொண்டனர்' என்று குறிப்பிட்டார். தொடர்ந்து வெற்றிலை பயன்படுத்தியதால் பற்கள் அவ்வாறு மாறியிருக்கக்கூடும்.

**ஆடை அணிகலன்கள்**

மக்களின் ஆடை அணிகலன்கள்பற்றிய மாறுபட்ட கருத்து களை யுவாங்-சுவாங்கும் பாணரும் அளிக்கின்றனர். ஆடைகளை

மக்கள் தைத்து உடுத்தவில்லை என்ற பொருளில் யுவாங்-சுவாங் குறிப்பிட்டதைச் சிலர் சரியெனச் கொண்டு ஹர்ஷரின் காலம் வரை இந்தியாவில் தைக்கப்பட்ட ஆடையினை அணியவில்லை என்று தவருகக் கருதினர். ஹர்ஷ வர்த்தனருக்கு முன்பே இந்தியாவில் தைத்த ஆடைகள் அணியப்பட்டன என்பதற்கு நம்மால் சான்று காட்ட இயலும். காளிதாசர் பல்வேறு தைத்தே உடுக்கப்படவேண்டிய ஆடைகளைக் குறிப்பிடுகிறார். மகாபாரதத்திலும் அதற்கான குறிப்புகள் உள்ளன. இன்னும் சிலவற்றை இங்குக் காட்டலாம்.

பாணருடைய குறிப்பில் தைத்தே உடுத்தப்பட வேண்டிய ஆடைகளைக் குறிப்பிடுகிறார். கால் சட்டைகள் ஸ்வஸ்தானு, பிங்கா, சதுலா என மூவகைப்பட்டன. மேல் சட்டைகள் கஞ்சுகம், சீனசோளகம், வாரபாணம், கூர்பாஸகம் என நான்கு வகைப்படும். சிறந்த தையலின்றி இந்த ஆடைகளைக் கற்பனை செய்யவும் இயலாது. அஜந்தா ஓவியங்களிலிருந்து தைத்த ஆடைகளைப் பற்றி அறிகிறோம். 'வட இந்தியாவில் குளிர் அதிகமாக இருந்ததால், கழுத்தை ஒட்டிய ஆடைகளை அணிந்தனர்' என யுவாங் சுவாங்கே குறிப்பிடுகிறார். அப்படியிருக்கையில் தையல் மேற்கொள்ளாமல் கழுத்தை ஒட்டிய நெருக்கமான ஆடையை அணிவது எப்படி?

வெள்ளை நிற ஆடைகளை மக்கள் பெரிதும் விரும்பி அணிந்தனர் என யுவாங்-சுவாங் குறிப்பிடுகிறார். பாணரும் குறிப்பில் மற்றைய வண்ணங்களைவிட வெண்மை ஆடைகளையே மக்கள் விரும்பியதாகக் கூறியுள்ளார். பாணரின் குறிப்புகளிலிருந்து மேலும் சில காட்டலாம். முடி சூட்டு விழாவின்போது சந்திரபீடன் வெள்ளைப் பட்டு அங்கியையும் வெள்ளை மலர்களையும் அணிந்திருந்தார். அவருடைய படையெடுப்பின்போது உடன் வந்த வைசாம்பியானு வெள்ளை ஆடையை அணிந்திருந்தார். புண்டரிகனின் முகத்தை வெள்ளைத் திலகம் அலங்கரித்தது. துறவறப் பெண்டிர் நெற்றியில் வெண்ணீறணிந்தனர். ஹர்ஷரைக் காணச் செல்லும்முன் பாணரும் வெள்ளை ஆடை அணிந்திருந்தார். பாணரை வரவேற்ற பாரியாத்ரா என்ற தலைமைக் காவலாளியின் தலைப்பாகை நிறமும் வெள்ளையே. ஹர்ஷரின் பிறப்பின்போது வெள்ளைக் கலை உடுத்திய பிராமணர்கள் அரண்மனைக்கு வந்தனர். பிரபாகர வர்த்தனரின் இறப்பின்போ வர்ணிக்கையில் வெள்ளை ஆடையில் பூமியே புகுந்தது போலிருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், வண்ணம் தோய்த்தல் பற்றிய விளக்கமான குறிப்பினைப் பாணர் எடுத்துக் காட்டுகிறார். ஐந்து வண்ணங்களைப் பாணர் குறிப்பிடுகிறார். ஆண்கள் இடுப்பைச் சுற்றித் துணியைச் சுற்றி இடப்பக்கத் தோளில் அணிந்து வலப்பக்கத் தோளினை மூடவில்லை. இரண்டு தோள்களையும் உடலையும் மறைக்கும்படியான அங்கியை அணிந்தனர். உடலில் மாலையணிந்தனர். ஆறு வகையான துணிகளைப் பற்றி யுவாங்-சுவாங்கும் பாணரும் குறிப்பிடுகின்றனர். அவையாவன:

1. கௌஷேயா (கியாவ் - ஷே-யே) : இலாஜாங்தகா பத்ரோறு எனவும் அழைக்கப்பட்ட இது விலை உயர்ந்த பட்டு ஆகும். பணக்காரக் குடும்பத்தவர்களிடையே காணப்பட்ட இப் பட்டு காட்டுப் பட்டுப் பூச்சியிடமிருந்து பெறப்பட்டது.
2. ஷௌமா (சூ-மோ) : லினன் வகையைச் சேர்ந்த துணி இது. இத் துணி லினனைப் போலத் தோற்றம் அளித்தாலும், மிகவும் மிருதுவாகவும் அழுத்தமாகவும் இருந்தது.
3. மஸ்லின் (டியே): டியே என யுவாங்-சுவாங் குறிப்பிடும் இவ் வகையை அம்சுகா எனப் பாணர் குறிப்பிடுகிறார். இந்த வகைத் துணி செல்வர்களிடையேயும் அரச குலத்தவரிடையேயும் மிகுதியாகக் காணப்பட்டது. பாணர் சீனாவிலிருந்து கொண்டு வரப்பட்டது என்ற பொருளில் சீன சுகா என இதனை உரைத்தார்.

மற்ற மூன்று வகைத் துணி வகைகள் காலிகோ (பூ), கம்பாலா (ஹன்-போ-லோ), ஹோ-லா-லி (இரால்) ஆகும்[1]. கடைசியாகக் குறிப்பிடப்பட்டது காட்டு விலங்கின் ரோமத் திரால் செய்யப்பட்டது என வாட்டர்ஸ் கருதி, இரல்லாகா கம்பாலா இரண்டும், சிறந்த கம்பளித் துணிகள் என்று குறிப்பிட்டார். பாணர் துகூலா, நேத்ரா, ஸ்தாவரகா என்ற பெயரை அளிக்கிறார்.

யுவாங்-சுவாங் பௌத்தர்கள் அல்லாதவரின் ஆடைகள் மாறுபட்டவை என்று கூறிச் சில சமணர்கள் மயில் தோகையை அணிந்திருந்தனர் எனவும், சிலர் கழுத்தில் மண்டை ஓட்டு மாலை அணிந்திருந்தனர் எனவும், சிலர் நிர்வாணர்கள் எனவும், சிலர் தங்கள் உடலைப் புல்லால் மறைத்தனர் எனவும்,

[1] இதற்கு இணையான வடமொழிச் சொல் யாது எனத் தெரியவில்லை.

சிலர் தலையையும் மீசையையும் இணைத்தனர் எனவும், சிலர் சுருட்டையான தலைமுடியினர் எனவும் இந்திய நாட்டின் பல்வேறு பிரிவினைப்பற்றிக் கூறினர்.

அணிகலன்கள் அணிவதில் வேறு எந்த நாட்டவரையும் விட இந்தியப் பெண்கள் பெரு விருப்புடையவர்கள். காலில் அணிகலன்கள் அணிந்திருந்ததை நாகானந்தம், இரத்னாவளி, காதம்பரி முதலியன காட்டுகின்றன. ஹர்ஷரின் நாடகங்களிலும் பாணரின் நூல்களிலும் காணப்படும் குறிப்பைக் காண்போம்.

பிரியதர்ஸிகாவில் காலில் சிலம்பும், மார்பில் நெக்லஸும், காதுகளில் குண்டலமும், கைகளில் அணிகலன்களும், தலையில் ஸ்வஸ்திகாவும் பெண்கள் அணிந்திருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நாகானந்தத்தில் வரும் அழகிய உரை ஒன்றை மலயவதியின் தோழி கூறுகிறாள். 'உன்னுடைய பருத்த திரண்ட மார்பகங்களையே உன் இடை தாங்காதிருக்கையில் நெக்லஸின் சுமை வேறு எதற்கு? பருத்த நின் தொடைகளைத் தாங்குவதே கடினமாகத் தோன்றும் கால்களுக்குக் காலணி கலன்கள் எதற்கு? கால்களே உனக்கு அணிகலன் போலத் தோன்றும்போது இன்னும் அணிகலன் எதற்கு?'

பௌத்தத் துறவிகள் அண்டாரவாசகா, சம்கடி, உத்தர சங்கா எனப் பெயர் வழங்கிய மூன்று வித அங்கிகளை அணிந்தனர்.

செல்வமிக்க வணிகர்கள் மட்டுமே கைகளில் காப்பு அணிந்தனர். கழுத்தில் வழக்கமாக நெக்லஸ் அணிந்தனர். முத்துக்களாலும் பொன்னாலும் அவை செய்யப்பட்டிருந்தன. சில புனித அணிகலன்களைப் பெண்கள் அணிந்து கணவரின் மறைவிற்குப் பின்னர் அவற்றை துறந்தனர். பாணர் திரிகந்தகம், தந்த பத்திரங்கள், லாலாதிகா, புலகபந்தா, திலக பிந்து முதலானவற்றைக் குறிப்பிட்டார்.

பெண்கள் உதடுகளுக்குச் சாயமிட்டுச் செம்மை சேர்த்தனர். காட்டுத் தீயைப் பெண்களுடைய சாயம் பூசிய உதட்டுச் செம்மைக்கு ஒப்பிடுகிறார் பாணர். பெண்கள் பாதங்களிலும் வண்ணம் தோய்த்தனர். பெண்களது கால்களின் செம்மை அரக்கு வண்ணத்தில் இருந்தது. மலயமலையில் நடக்கும்

சித்தர் பெண்டிரின் சிவப்புப் பாதச் சுவடுகளை நாகானந்தம் குறிப்பிடுகிறது. மக்கள் தங்களை அலங்கரித்து அழகுபடுத்திய தோடல்லாமல் தங்கள் வளர்ப்புப் பிராணிகளையும் அழகு படுத்தினர். யானைகளையும், குதிரைகளையும், ஒட்டகங்களையும் அலங்கரித்து அவற்றின் வாய்ப்புறத்தில் சோழிகளைக் கொண்டு வரிசையாக அழகு செய்தனர். காளைகள், பசுக்கள் ஆகிய வற்றின் கழுத்தில் மணிகள் கட்டப்பட்டிருந்தன.

மக்களின் தூய்மையான வாழ்க்கையைப் பாணரும் யுவாங் சுவாங்கும் குறிப்பிட்டுள்ளதை முன்னமே கண்டோம். ஒவ்வொரு தனி மனிதரும் தங்கள் உடல் தூய்மையைக் கருத்தாகக் கொண்டனர். மக்கள் சந்தனம், கற்பூரம், குங்குமப் பூ முதலிய வாசனைப்பொருள்களைப் பயன்படுத்தினர். தங்களுடைய இயற்கைக் கடன்களை முடித்த பின்னர்தான் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். சிறுநீர் கழித்ததும் குளித்தனர்.[1] கட்டுப்பாடுகளுக்காக அல்லாமல் தாங்களாகவே தூய்மை வாழ்வு மேற் கொண்டனர்.

### பொழுதுபோக்குகள்

வாழ்க்கையில் உழைக்கும் மனிதனின் உள்ளத்திற்கும் உடலுக்கும் ஓய்வு தேவை. அந்த ஓய்வு, எல்லா நேரத்திலும் உறக்கத்தினால் மட்டுமே பெற முடியாது. இனிய இசையைக் கேட்டல், இசைக் கருவிகளை இயக்குதல், வளர்ப்புப் பிராணிகளுடன் களித்தல், விளையாடுதல், வேட்டையாடுதல், சூதாடுதல், கேளிக்கை நிகழ்ச்சிகளைக் கவனித்தல் முதலியனவும் பொழுது போக்குகளே.

இன்றைய நாளைப் போலவே அன்றைய நாளிலும் கிளி, மைனா, குரங்கு, நாய், பூனை முதலியவற்றை வீடுகளில் வளர்த்தனர். காதம்பரி நாடகத்தின் தலைவி, காளிந்தி என்ற கிளிக்கும் பரிஹாசா என்ற கிளிக்கும் மணம்முடித்து விளையாடினாள். காதம்பரி தன் வளர்ப்புப் பிராணிகளை விடுவித்து விடும்படி தோழியிடம் கேட்டுக்கொண்டாள். பெரும்பாலும் வயதில் இளையோரின் பொழுதுபோக்கே மேலே கூறப்பட்டது.

தந்திரக் காட்சிகளை (Magic) கண்டு இரசிப்பது வட இந்திய மக்களின் பொழுதுபோக்குகளில் ஒன்று. தந்திரக்கலை பெரிதும் அக் காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்தது. பாணரின்

[1] Dr. B. Sharma. *Harsha and his Times*. p. 382.

நண்பர்களில் காராளா என்பவன் தந்திரத்திலும் (மந்திரசாதகா), சகோரக்ஷா என்பவன் ஜாலவித்தையிலும் தேர்ந்தவர்கள். இரத்னவளியில் உஜ்ஜயிலிருந்து வந்த தந்திரக்காரன் காஞ்சன மாலாவினால் அரசரிடம் அறிமுகம் செய்யப்பட்டான். அந்த வித்தைக்காரன் தனக்குத் தன் குருவினால் அவ் வித்தை பயிற்றுவிக்கப்பட்டதாகக் கூறினான். கடவுள்களை அரசருக்குக் காட்டினான். செயற்கையாக நெருப்பை வளர்த்தான்.

பொழுதுபோக்குகளில் அனைவராலும் வெறுக்கப்பட்டதும் நீதி முறைக்கு ஒத்து வாராததும், வெறுத்து ஒதுக்கப்பட்டதும் சூதாட்டமே ஆகும். இது இருக்கு வேத காலத்திலும் வெறுக் கப்பட்டது; இன்றும் வெறுக்கத்தக்கது. இருக்கு வேத காலத்தில் சூதாடிமகனின் கண்களையே தந்தை குருடாக்கி விடுகிறார். கௌடில்யர், காமாண்டகர் முதலானவர்கள் சூதாட்டத்தினால் பண இழப்பு, நேர்மையான சடங்குகளை நிறைவேற்றாமை, நல்லவர்கள் நட்பிழப்பு, தீராத பகை, கடமையில் கருத்தின்மை ஆகியவை ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டனர். அக் கருத்தே ஹர்ஷரின் காலத்திலும் நிலவியது. செல்வர்கள் பிறரால் ஏமாற்றப்படாமலிருக்கச் சூதாட்டம் பயிற்றுவிக்கப்பட்டனர். சூதாட்டத்தில் நேர்மையில்லை எனவும், தீய வழிகளில் வெற்றி பெற முயன்றனர் எனவும் அறிகிறோம்.

சதுரங்க விளையாட்டும் பொழுது போக்கே. சதுரங்கம் பாணரின் ஹர்ஷ சரிதத்தில் முதன் முதலாக ஏழாம் நூற்றாண்டில் குறிப்பிடப்படுகிறது. எனவே அப்போதுதான் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம். இந்தியாவிலிருந்து தான் அராபியர்கள் மூலமாக ஐரோப்பாவிற்குச் சென்றது என எச். ஜி. இராவின்சன் கருதினர். வடமொழியில் சதுரங்கம் என்றும், பாரசீகத்தில் ஷதரஞ்சா என்றும் இது வழங்கப்படுகிறது. அதில் வரும் 'செக்மேட்' (Checkmate, ஷாமாட் = அரசர் இறந்து விட்டார்) ரூக் முதலானவை பாரசீக அடிப்படையைக் கொண்டவையாகும்.

வேட்டையாடுதல் அரசர்களின் பொழுதுபோக்கு ஆகும். பாணர் ஹர்ஷரின் வேட்டையாடுதலையும், காதம்பரியில் சந்திர பீடனின் வேட்டையாடுதலையும் குறிப்பிட்டார். அரசர்கள் வேட்டையாடுதலை மேற்கொண்டபோதிலும் அதனை இழிந்த பொழுதுபோககாகவே கருதினர். கௌடில்யருக்கு முற்பட்ட காலத்திலேயே நான்கு வகைத் தீமைகளில் ஒன்றென அதனைக்

கருதினர். ஹர்ஷரின் காலத்திலும் வேட்டையாடுதலும் தீய வற்றில் ஒன்றெனஅறிவுடைய பிராமணர்களால் வெறுக்கப் பட்டது. சந்திரபீடன் வேட்டையாடுதலில் மகிழ்வடையக் கூடாது என அறிவுறுத்தப்பட்டதைக் காதம்பரி காட்டுகிறது. வேட்டையாடுதல் என்பது எளிய மக்களால் இயலக் கூடியது அன்று. அரச குலத்தவரும் உயர் குடியினருமே அதனை மேற் கொண்டனர். வேட்டையாடுதல் பொழுதுபோக்காக அவர் களுக்கு விளங்கிய அதே வேளையில் காட்டு வாசிகளுக்கு வாழ்க்கை வசதியாக அமைந்தது. அவர்கள் உயிர் வாழ உதவியது அதுவே எனலாம்.

### விழாக்களும், பண்டிகைகளும்

இந்துக்களின் வாழ்வு பண்டிகை பலவற்றினால் நிரம்பியது. ஆண்டுதோறும், பருவங்கள்தோறும் விழாக்கள் பல நடை பெற்றன. விழாக்களில் மதனோத்சவம் குறிப்பிடத்தக்க ஒன்று. சித்திரைத் திருநாளில் முழு நிலவு பூத்த வேளையில் இவ் விழாவினைக் கொண்டாடினர். இது இந்துக்களின் 'ஹோலிப்' பண்டிகை என்று கருதப்படுகிறது. மன்மத விழா என்று இதனைக் கூறலாம். மதனோத்சவத்தை வசந்தோத்சவம் என்றும் குறிப்பிடுவர். இவ் விழாவின்போது இன்னிசை முரசுடன் முழங் கிற்று. மக்கள் வாசனைப் பொடியை ஒருவருக்கொருவர் தூவினர்; நீரூற்றுகளிலிருந்து நீர் விசிறப்பட்டது. மதனலீலை என்னும் காதல் விளையாட்டு நாடகம் அரங்கேற்றப்பட்டு அரசனால் பாராட் டப்பட்டது. காமதேவனை மகரந்தத் தோட்டத்தில் அரசி வழி பட்டாள். இரத்னவளியில் முதல் அங்கம் 'மதனமஹோத்ஸவ நாமபிரதமோ அங்கா' எனப்படுகிறது. வசந்தோத்சவத்தின் போது நாடகம் ஒன்றும் நடிக்கப்பட்டது. பிரியதர்ஸிகா நாடகம் வசந்தோத்ஸவ விழாவின்போது அரங்கேற்றப் பட்டதாக அந் நாடகச் சூத்திரதாரி அறிவித்தார்.

கௌமுடி மகோத்சவம் என்பது இரண்டாவது குறிப்பிடத் தகுந்த விழாவாகும். அதனை இப்போது சாரதா-பூர்ணிமா விழா எனக் கூறுகின்றனர். இவ் விழா செப்டம்பர் அக்டோபர் மாத காலத்தில் வரும் ஆஸ்வின மாதத்து முழு நிலவில் கொண்டாடப் பட்டது. பிரியதர்ஸிகாவிலும் இவ் விழாக் குறித்த செய்திகள் காணப்படுகின்றன.

உதயனோத்ஸவா என்ற மற்றொரு விழா இரத்னவளி, பிரிய தர்ஸிகாக் கதைத் தலைவர்களுடன் தொடர்புடைய ஒன்று. எப்படி

இராமன் இராவணனுக்கு எதிராகப் பெற்ற வெற்றியைத் தசரா என்று கொண்டாடுகிறோமோ அதுபோல உதயணனின் நினைவாக அவ் விழாக் கொண்டாடப்பட்டது. இந்திரனைச் சிறப்பித்துக் கொண்டாடப்பட்ட விழா இந்திர விழாவாகும். காளிதாசரின் இரகுவம்சத்திலும் இவ் விழாக் குறித்த செய்தியைக் காண்கிறோம். பொதுவாக இவ் விழாவின்போது நாடகங்கள் நிகழ்த்தப்பெற்றன எனலாம்.

## சமுதாயத் தீமைகள்

விபசாரத் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்களைக் குறித்தும், அடிமை முறை குறித்தும் அறிகிறோம். விபசாரப் பெண்டிரைப் பாணர் வைஸ்யாபி என்று குறிப்பிட்டதோடு காமனின் இருப்பிடம் என ஸ்தானேஸ்வரத்தைக் கூறினார். அரண்மனையிலும் பொருள்வழிப் பெண்டிரான அவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். கௌடில்யரின் காலத்தில் அவர்கள் அரண்மனையில் பெற்றிருந்த நிலையை அவர்தம் குறிப்புகளிலிருந்து அறியலாம். பிரபாகர வர்த்தனரின் அரண்மனையிலும் அதுபோலப் பலர் பணிபுரிந்தனர். யார் பொருள்வழிப் பெண், யார் உயர்ந்த பெண் எனக் கண்டறிய முடியவில்லை எனப் பாணர் தம் குறிப்புகளில் கூறினார். சமய ஈடுபாடு மிக்கவரான ஹர்ஷர் அத்தகையோரைத் தம் அரண்மனையில் கொண்டிருக்கவில்லை என்று நம்பப்படுகிறது. ஹர்ஷரின் காலத்தில் விபசாரப் பிரிவு இருந்ததா, இல்லையா என்பதை உறுதியாகக் கூற முடியாது.

அடிமை முறை என்பது சமுதாயத்தில் காணப்படும் அடுத்த தீமை எனலாம். பாணரின் நூல்களிலும், ஹர்ஷரின் நாடகங்களில் தாஸ்யபுத்திரா, தாஸ்யா, அண்டபுர தாஸ்யா, தாசிகள் முதலான சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது அடிமை முறையைக் குறிப்பது என்று கருதினர். ஆனால், அவ்வாறான குறிப்புச் சரியெனப்படவில்லை. இந்தியாவில் மனிதனை மனிதன் அடிமைகொள்வது விரும்பப்படாத ஒன்று.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே மெகஸ்தனிஸ் இந்தியர்கள் சுயேச்சையாக வாழ்ந்தனர் என்றும், யாரும் எவர்க்கும் அடிமையில்லை என்றும் குறிப்பிட்டார். தாசர்கள் என்ற சொல்லை அடிமைகள் என்று கொண்டால் அவர்கள் இல்லப் பணியாள் போலத்தான் பணிபுரிந்தனர் என முடிவு செய்ய வேண்டும். யுவாங் சுவாங் அடிமை முறை குறித்த குறிப்புகளை நேரடியாகக் குறிப்பிடவில்லை. தனி மனிதர்களிடமிருந்து கட்டாய உழைப்பைப் பெறவில்லை. அரசாங்கத்தில் பணிபுரிந்த

வர்கள்கூட உழைப்பிற்குத் தக்க ஊதியம் பெற்றனர். எனவே, ஹர்ஷரின் காலத்தில் அடிமை முறை இல்லை என்று கூறலாம்.

### மக்களின் பழக்க முறைகள்

மக்களின் ஒழுங்கு முறைகளை நேரில் கண்டவர் யுவாங் சுவாங். அவர் ஒன்பது வகையான வணக்க நிலைகளைக் காட்டுகிறார். அன்புடன் நலம் விசாரித்து, வாழ்த்துத் தெரிவித்தல் முதலாவது முறை. மரியாதையுடன் தலை குனிந்து வணங்குகின்ற முறையே பொதுவான முறையாகும். இது இரண்டாவது முறை தலைக்குமேல் கையை உயர்த்தி உடலைச் சாய்ந்து வணக்கம் தெரிவித்தல் மூன்றாவது முறை. கால்களில் வளைந்து சிலர் வணக்கம் தெரிவித்தது நான்காவது முறை. குவிந்த கரங்களுடன் வணங்குதல் ஐந்தாவது முறை. இரு கால்களும் முழங்காலிட்டு வணங்குதலும் ஐந்தாவது முறை. இரு முழங்கால்களையும் ஊன்றி வணங்குதல் ஆறாவது முறையாகும். மக்கள் முழங்காலிட்டுக் கையைக் குவித்து வணங்குவதும் ஆறாவது முறையாகும். நடக்கும்போது முழங்கால்களாலும் கைகளாலும் பணிந்தவாறே வணக்கம் தெரிவிப்பது ஏழாவது முறையாகும். முழங்காலும் கையும் நெற்றியும் தரையில் படப் பணிந்து வணங்குதல் எட்டாவது முறை. முழுவதுமாக உடல் முழுவதும் தரையில் படியச் சாஷ்டாங்க வணக்கம் செலுத்துவது கடைசி முறையாகும். அம் முறைகளெல்லாம் அரண்மனையில் மேற்கொள்ளப்பட்ட முறைகள். பிரபாகர வர்த்தனர்முன் முழங்காலும் நெற்றியும் படியக் குமார குப்தரும், மாதவ குப்தரும் வணக்கம் தெரிவித்ததை ஹர்ஷ சரிதம் அறிவிக்கிறது. முழங்காலிட்டு வணங்கும் முறை சிறந்த முறையாகக் கருதப்பட்டது.

ஸ்கந்த குப்தர் என்ற யானைப்படைத் தளபதி சற்றுத் தூரத்திலிருந்து கைகளைத் தரையில் ஊன்றிப் பூமியைத் தலை தொடுமாறு செய்து வணங்கினர். யுவாங் சுவாங் மேற்கூறப்பட்ட ஒன்பது முறைகளும் மரியாதை தெரிவிக்கும் முறைகளே என்று காட்டினர். சைகைளால் வணக்கம் தெரிவிப்பதோடு, வாயினலே 'வணக்கம்' என்று குரல் கொடுத்துத் தெரிவிப்பதும் உண்டு. வணக்கம் தெரிவித்தல் என்பது சமுதாயத்தில் காணப்பட்ட ஒரு பண்பு வழிப்பட்ட செயலாக விளங்கிற்று.

ஆண்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது பத்ரா, தேவா என்ற சொற்களைக் கூறிக்கொண்டனர். வணக்கம் தெரிவிப்பதைப் போலவே பெரியவர்கள், அரசர்கள் முதலானோர் எதிரில் யார் அமர்வது என்பதற்கும் விதிமுறைகள் வகுக்கப்பட்

டிருந்தன. முனிவர்களும் துறவிகளும் பெருஞ் சிறப்பும் அன்பும் தரப்பட்டனர். அரசர்கள்கூட அவர்களிடத்துப் பணிந்து சமமாக அமராமல் தரையில் அமர்ந்தனர். அரசனுடன் வேட்டையாடச் சென்றபோதுகூட வரிசை முறை மாறாது அமர்ந்தனர். பிரபாகர வர்த்தனருடன் சரி சமமாக அமரக் கிரக வர்மனுக்கு மட்டுமே இடமளிக்கப்பட்டது எனப் பாணர் குறிப்பிட்டார். வெறும் வார்த்தைகளால் தெரிவிக்கும் மரியாதை ஸ்வஸ்தி வசனம்' எனப்பட்டது. ஆண்கள் பெண்களைத் தேவி எனவும், பெண்கள் ஆண்களை 'ஆர்யா' எனவும் அழைத்தனர். ஹர்ஷ வர்த்தரைக் காணவந்த பாணர் தகுந்த மரியாதை செலுத்தாததால் அவரது ஒழுங்கற்ற நடவடிக்கையைத் தெரிவிக்க எண்ணிப் 'புஜாங்கர்' என ஹர்ஷர் அழைத்தார்.

## கடற்பயணம்

ஹர்ஷரின் காலத்தில் கடற்பயணம் சாதாரணமாகக் கருதப்பட்டது. ஹர்ஷரின் இரத்னவளி நாடகத்தில் ஒரு கடற்பயணம் குறிப்பிடப்பட்டுள்ளது. பல அரசு தூதுவர்கள், வணிகர்கள், பணிக் குழுவினர், பபணிகள் முதலானோர் சீனவுடன் மட்டுமன்றிப் பல்வேறு நாடுகளுக்கும் சென்றுவந்தனர். இதனல் பிற நாட்டுச் சமூகப் பண்புகளும், சாயல்களும் இந்தியச் சமூகத்தில் படிந்தன. அதைப் போலவே இந்திய நாட்டுப் பண்பாடும் அயல் நாடுகளில் பரவியது. இந்திய நாடு 'பரந்த இந்தியா' வாக உருவாக ஹர்ஷரின் கால அரசும், சமுதாயமும் வழிவகுத்தன என்பதை மறுப்பதற்கில்லை. இதனல் சமுதாயப் பழக்கங்களில் மட்டுமன்றி வாழ்க்கை முறையிலும் மாறுதல்கள் தோன்றின. ஹர்ஷர் கொண்டிருந்த சீனத் தொடர்பைத் தனிப் பிரிவில் காண்போம்.

## அளவைகள்

இந்தியாவில் வழங்கி வந்த நீட்டலளவுகளை யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அறியலாம். நீட்டலளவையின் பெரிய பிரிவு 'யோசனை'. ஒரு யோசனை என்பது அரசரின் படை ஒரு நாளில் கடக்கும் தூரமாகும். அதற்கு நேரடியான சீன அளவு நாற்பது லி (5 லி = ஒரு மைல் = 1.6 கி. மீ.) ஆனல், இந்தியர்கள் அதை முப்பது லி எனவும், பௌத்த நூல்கள் 16 லிக்குச் சமமானவை எனவும் கொண்டனர். ஒரு யோசனையின் அளவு இடத்துக்கு இடம் காலத்திற்குக் காலம் மாறுபட்டிருந்தது. ஒரு யோசனை என்பது எட்டுக் 'குரோஸா' ஆகவும், ஒரு 'குரோஸா' ஐந்நூறு 'பௌ' ஆகவும், ஒரு பௌ

நான்கு 'கூபிட்கள்' ஆகவும், ஒரு கூபிட் 24 விரற்கிடை தூர மாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒரு விரற்கிடைத் தூரம் ஏழு கோதுமை மணிகளின் அளவாகும். எருதில் உரோமப் பருமனளவு, ஆட்டு ரோமப் பருமனளவு, முயல் ரோமப் பருமனளவு, நுண்ணிய நீர் அளவு ஆகியவையும் வழக்கத்தி லிருந்தன. நீட்டலளவையின் கடைசி அளவு நம் கண்களால் காண இயலாத சிறிய அளவு ஆகும். அச் சிறிய அளவு அணு அல்லது தூசி ஆகும். இச் செய்திகளை அறிய லலித விஸ்தாரம் என்ற நூல் துணைபுரிகிறது.

**கால அளவு**

க்ஷணம் என்ற கால அளவை யுவாங் சுவாங் குறிப்பிட்டு விளக்குகிறார். ஒரு க்ஷணம் என்பது மிகக் குறைந்த கால அளவாகும். நூற்றிருபது க்ஷணங்கள் ஒரு தட்க்ஷண ஆகும். அறுபது தட்க்ஷண ஒரு லாவா. முப்பது லாவா ஒரு முகூர்த்தம். ஐந்து முகூர்த்தம் ஒரு காலமாகவும், ஆறு காலம் ஒரு நாளாகவும் கணக்கிடப்பட்டன. பௌத்தர்கள் கோடைக் காலத்தை கிரிஷ்மா என்றும், மழைக்காலத்தை வர்ஷ என்றும், குளிர் காலத்தை ஹேமந்த என்றும் அழைத்தனர்.

**காட்டுப்புற மக்களின் வாழ்க்கை**

நகர்ப்புற மக்களின் வாழ்க்கை முறையினின்றும் காட்டுப் புற மக்கள் வாழ்க்கை வேறுபட்டிருந்தது. பாணர் காதம்பரி என்ற நூலில் உஜ்ஜயினியைப் பற்றி விளக்குகையில் நகர மக்களின் வாழ்க்கையையும், ஹர்ஷ சரித்திரத்தில் விந்திய மக்களின் குடும்ப வாழ்க்கையையும் நுணுக்கமாக விளக்குகிறார். இப் பகுதியின் மக்கள் அடர்ந்த காட்டுப் பகுதியின் நடுவே கடுமையாக உழைத்து வாழ்ந்தனர். பரவலான விவசாயம், வேட்டையாடுதல், உலோகப் பணி முதலிய வேலைகள் ஒருங்கே நடைபெற்றன.

ஆனால், வேட்டையாடுதலே மக்களின் முக்கியத் தொழிலாக விளங்கியது. அவர்கள் பெரிதும் ஓரிடத்தில் நிலையாகத் தங்க வில்லை. இடம் விட்டு இடம் பெயர்ந்து சென்றுகொண் டிருந்தனர். வில், அம்பு முதலியன பயன்படுத்தப்பட்டன. அம்புகளின் முனையில் நஞ்சு தடவப்பட்டது. தோல் கேடயத் தைப் பயன்படுத்தினர். யானைத் தந்தங்களைச் சேகரித்தனர். தண்ணீர், தேன் முதலியவற்றைக் கொள்ளப் பாத்திரங்கள்

வைத்திருந்தனர். சிங்கத்தின் தோல்களை அலங்கரிக்கப் பயன் படுத்தினர். மயில்களின் தோகைகளைச் சேகரித்தனர். அவர்களுடைய வாழ்க்கை தூய்மைக் குறைவான வாழ்க்கையாகவே அமைந்தது. கூரையால் அமைக்கப்பட்ட குடிசைகளில் வாழ்ந்தனர். மூட நம்பிக்கை கொண்டவர்களாக விளங்கினர். சில நேரங்களில் நரபலி அளிக்கப்பட்டது. யுவாங் சுவாங் காட்டுவாசிகளிடம் ஒரு முறை சிக்கிக்கொண்டார். அவர் காட்டுவாசிகளின் கடவுளுக்குப் பலியாக்கக் கொண்டுசெல்லப் பட்டார். நல்ல வேளையாகக் கடைசி நேரத்தில் தப்பிக்கச் செய்யப்பட்டார். துர்க்கை அல்லது சண்டி அவர்களது தலையாய தெய்வமாக விளங்கிற்று.

## மக்களின் பொது வாழ்க்கை முறை

இந்திய நாடு என்பது கதம்ப மாலையைப் போன்றது. பல்வேறு வண்ணங்கொண்ட வகைவகையான மலர்கள் சேர்த்துத் தொகுக்கப்பட்டிருப்பது போலப் பல்வேறு இன மக்களைக் கொண்டது. அவர்களின் பழக்கவழக்கங்களும் உணவும் உடையும் வேறுபட்டிருப்பது இயற்கையே. ஆனாலும், அந்த வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகள் ஒரு பொதுவான 'நார்' கொண்டு கட்டப்பட்டுள்ளன. யுவாங் சுவாங், பாணர் ஆகிய இருவரும் மக்களின் பொதுவான மன இயல்புகளை எடுத்துக் காட்டுகின்றனர்.

பொதுவாக மக்கள் அன்பும் தயையும் கொண்டவர்கள் என்றாலும் வட இந்தியாவில் எல்லாப் பகுதியிலும் அத்தகைய நிலை காணப்படவில்லை என்பதை அவர்கள் இருவரும் சுட்டிக் காட்டுகின்றனர். சில பகுதியின் மக்கள் நயவஞ்சகர்களாயும், குறுகிய மனப்பான்மை படைத்தவர்களாயும், தீய பண்புடையவர்களாயும், முரட்டுத்தனமான இயல்பு கொண்டவர்களாயும் விளங்கினர். நகர், தட்சசீலம், மடிப்பூர், அஹிச்சத்திரா, கன்யா குப்ஜம், பிரயாகை, வாரணாசி, கௌசாம்பி, வைசாலி, மகதம், காமரூபம் முதலானவற்றின் மக்கள் நல்லியல்பு, வீரம், இலக்கியம், கலை ஆர்வம், அற உணர்வு, முதலியன கொண்டவர்களாகத் திகழ்ந்தனர் என்றும் கல்விச் சிறப்புப் பெற்று விளங்கினர் என்று குறிப்பிடப்படுவதிலிருந்து ஆரியவர்த்தம் அல்லது மத்திய தேசத்து மக்களே பெரிதும் ஒழுக்க சீலர்களாய் விளங்கினர் என அறிகிறோம்.

சீனப் பயணி யுவாங் சுவாங்கின லம்பா, காந்தாரா, சிம்ஹபுத்ரா, ஜலந்தரா நேபாளம் முதலான பகுதி மக்கள் சரிவர

நடத்தவில்லை. அவர்களே முதலில் குறிப்பிட்ட இயல்புடைய மக்கள். இந்திய மக்களின் விரைந்து செயல்படும் வாழ்க்கையையும், ஒழுக்க இயல்புகளையும் புகழ்ந்து உரைக்கச் சீனப் பயணி தயங்கினரில்லை. பாவம் செய்தால் தண்டனை பெறுவோம் என்று கொண்டிருந்த இந்திய நம்பிக்கையையும் அவர் எடுத்துக் காட்டினர்.

இந்திய நாட்டு மக்களின் வாழ்க்கை அக் காலத்தே பொதுவாக நிறைவு தருகின்ற ஒன்ருகவே அமைந்திருந்தது. அரசு நேர்மையாக நடத்தப்பட்டமையால் மக்கள் நல்லிணக்கத்துடன் செயல்பட்டனர். குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. சமுதாயத்தில் நல்லொழுக்கம், நற்பண்புகள் முதலானவற்றிற்குச் சிறப்புமிக்க ஓர் இடம் அளிக்கப்பட்டிருந்தது பாராட்டிற்குரியது. ஒழுக்க நெறியைவிட வேறு எதற்கும் சிறப்பு அளிக்கப்படவில்லை என்பதனைப் பாணரின் குறிப்புகள் தெரிவிக்கின்றன. பாணரும் தம் குறிப்புகளில் அத்தகைய நிலையைக் காட்டுகிருர். நன்கு பண்படுத்தப்பட்ட நல்லியல்புடைய மக்கள் நிரம்பியிருந்த சமுதாயமே ஹர்ஷரின் காலச் சமுதாயமாகும்.

## வாழ்வின் முடிவு

இறந்தவர்களையும் நோய்வாய்ப் பட்டவர்களையும் எப்படி நடத்தினர் என்பதனை யுவாங் சுவாங்கின் குறிப்புகள் வாயிலாக அறியலாம். நோய் வயப்பட்டவர்கள் ஏழு நாள் உணவு உட்கொள்வதில்லை. அக் காலத்திலேயே பொதுவாக நோயாளிகள் குணமடைந்து விடுதல் உண்டு. யாரேனும் இறந்து விட்டால் உறவினர்கள் தலையை முடியாது மார்புமீது அடித்துக் கொண்டு அழுவார்கள். அவ்வாறு அழுவதற்கு நேரம் காலம் பார்ப்பதில்லை.

எரித்தல், ஓடையில் விட்டுவிடல், வனவிலங்குகளுக்கு அளித்தல் ஆகிய மூன்று முறைகளில் இறந்தவர்களின் உடலை மக்கள் அகற்றினர். மக்கள் இறந்த வீட்டிற்கு உண்ணுவதற்குச் செல்வதில்லை. இறுதிச் சடங்குகளுக்குப் பின் உணவு உட்கொண்டனர். இறப்பு நிகழ்ச்சிகளின்போது ஊருக்கு வெளியே குளித்துவிட்டு வீடு திரும்பினர்.

மக்கள் தற்கொலை செய்துகொண்டு இறப்பதும் உண்டு. மிக அதிக வயதாகிச் சாவை நெருங்கிக்கொண்டிருப்பவர்களும், தீராத

நோயாளிகளும், வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேறிவிட்டது என எண்ணுபவர்களும் உற்றார் உறவினர்களிடத்து விடை பெற்றுக்கொண்டு சிறிய படகில் அமர்ந்து கங்கை நதியின் நடுவே சென்று மூழ்கி இறப்பார்கள். அவ்வாறு விடைபெறும் நிகழ்ச்சி இசை முழக்கத்துடன் நடைபெற்றது. அவ்வாறு இறக்க விரும்புவதாக அறிவிக்கும் பத்துப்பேரில் ஒருவரே இறுதி நேரத்தில் பின்வாங்கினர் என யுவாங் சுவாங் குறிக்கிறார். பௌத்தத் துறவிகள் இறக்கும்பொழுது மற்றத் துறவிகள் ஓலமிட்டு அழுவதில்லை. மகிழ்ச்சி மிக்க வேறு உலகு ஒன்றிற்குச் செல்லும் பேறு இறந்தவர்க்குக் கிடைத்தது என எண்ணினர்.

## பொருளாதார நிலை

நல்லதொரு சமுதாய வாழ்விற்குச் சிறந்த பொருளாதார அமைப்பு அடிப்படையாக விளங்கிற்று. பொருளாதார வலுக் குறைந்திருந்தால் அது சமுதாயத்தை மட்டுமன்றி அரசியலையும் பாதிக்கும். அப்போது நடைபெறுகின்ற ஆட்சி நல்லாட்சியாக அமையாது மக்களின் வெறுப்பிற்கு ஆளாக நேரிடும். போர்கள், அயல் நாட்டவர் படையெடுப்பு முதலியன நாட்டின் பொருளாதாரத்தை வற்றச் செய்ததைப் போல, இயற்கைச் சோதனைகளும் பொருளாதார வாழ்விற்குச் சோதனைகளாக அமைவது உண்டு.

குப்தர்களின் காலத்தில் பொருளாதாரம் ஏற்றம் பெற்றுத் திகழ்ந்தது. அதன் விளைவாகக் கலையும், கல்வியும் வளர்ச்சி பெற்று நாடு சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தது. அச் சிறப்பு நீடித்ததா எனில் நீடிக்கவில்லை. அதற்குச் சோதனையாக அமைந்தது ஹூணர்களின் படையெடுப்பு. அதன் விளைவால் குப்தர்கள் அமைத்திருந்த கோட்டையில் விரிசல் ஏற்பட்டது; கோபுரத்தில் சரிவு ஏற்பட்டது. எனவே, நூறு ஆண்டுகள் ஹூணர்களின் தாக்குதல்கள் அழிவுப் பணியைச் செய்துவிட்டன. ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஒளி பிறந்தது. அமைதியும் ஒழுங்கையும் ஹர்ஷ வர்த்தனர் உருவாக்கிக் காட்டினர். அவருடைய வலுவுள்ள ஆட்சியினுல் வேளாண்மை, தொழில், வாணிபம், முதலியவை பெருவளர்ச்சி பெற்றன. அவ் வளர்ச்சி நிலையைக் காண்போம்.

ஹர்ஷ வர்த்தனர் மேற்கொண்ட முயற்சிகள் ஏற்கெனவே பாழ்பட்டிருந்த சூழ்நிலையை மாற்றச் செய்வதாகவே

அமைந்தன. அந்த மாற்றம் சீர்திருத்தம் செய்கின்ற மாற்றமே அன்றிப் புதிதாக உருவாக்கிய மாற்றம் அன்று.

**வேளாண்மை**

அன்றும் இன்றுபோல் வேளாண்மையே சிறப்பான தொழிலாக விளங்கிற்று. பெரும்பாலான மக்கள் வேளாண்மையைத் தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர். வேளாண்மையே இந்தியப் பொருளாதார வளத்திற்கு வளம் சேர்த்தது. லம்பா, நகர், காந்தா முதலிய இடங்களில் நெல், கரும்பு, தானியங்கள், பழங்கள், மலர்கள் முதலிபவற்றை விளைவித்தனர். காஷ்மீரத்தில் குங்குமப் பூவும், ஏராளமான கனிகளும், மலர்களும் விளைந்தன. மதுராவைச் சுற்றியுள்ள பகுதிகளில் பருத்தி விளைவிக்கப்பட்டது. ஸ்தானேஸ்வரமும், ஸ்ருக்னவும் நல்ல விளைநிலங்களைக் கொண்டவைகளாக விளங்கியபோதிலும், அம் மக்கள் வாணிகத்திலேயே சிறப்புடன் ஈடுபட்டனர்.

மடிப்பூர், கோவிசனு முதலியவை தானியங்களையும், பழங்களையும். மலர்களையும் விளைவித்தன. அஹிச்சத்திராவும் வேளாண்மைப் பகுதியே. கன்யா குப்ஜத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் மக்கள் செல்வச் சிறப்புடன் விளங்கினர் எனவும், அறுவடைக் காலங்களில் பணப் புழக்கம் தாராளமாக இருந்தது எனவும் சீனப் பயணி குறிப்பிடுகிறார். அயோத்தியாவில் மலர்களும், கனிகளும் நிறைந்திருந்தன. பிரயாகை, கௌசாம்பி மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர். கௌசாம்பியில் நெல்லும் கரும்பும் விளைந்தன. சீனப் பயணி கபிலவஸ்து, சிரவஸ்திக்கும் குஸிநாராவிற்கும் இடைப்பட்ட பகுதி, வாரணசி, மகதா, வங்காளம், காமரூபம் முதலியவையும் நன்கு வேளாண்மை செய்யப்பட்ட பகுதிகளாக விளங்கின என்கிறார். பலாப்பழம், கோக்கோ முதலியனவும் நெல், தானியங்கள் முதலியவற்றுடன் கடைசியில் குறிப்பிட்ட பகுதிகளில் விளைந்தன. இதனால் மேலே குறிப்பிடப்பட்ட பகுதிகள் அனைத்தும் வளம் மிக்க பகுதிகளாக விளங்கின. அச் செல்வம் பற்றியே சீனப் பயணி ஒவ்வொரு பகுதியைப் பற்றிக் குறிப்பிடுகையிலும் குறிப்பிட்டார்.

ஏராளமான பழவகைகள் பற்றிய குறிப்பினைச் சீனப் பயணியின் செய்தியிலிருந்து அறிகிறோம். அவ்வாறு பழவகைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர், எல்லாப் பழவகைகளையும் குறிப்பிடுதல் இயலாது என்றும் மக்கள் பெரிதும் விரும்பப்பட்டவற்றையே கூற இயலும் என்னும் உரைக்கிறார்.

பொதுவான பழங்களான பிளம்ஸ், பீச், ஆப்ரிகாட், திராட்சை முதலானவற்றை அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பயிரிட்டனர் என்கிருர். ஆனால், மாதுளம் பழத்தையும், ஆரஞ்சுப் பழத்தையும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பயிரிட்டனர்.

ஆம்ரா (மாம்பழம்), ஆம்லா (புளியம்பழம்), மாதூக், பதாரா, கபித்தா, (விளாம்பழம்), அமலா, திண்டுகா, உடும்பரா, மொச்சா (வாழை), நாரிகேலா (தேங்காய்), பணசா (பலாப் பழம்), ஆகியவை பல்வேறு பகுதிகளிலும் பயிரிடப்பட்டன எனத் தெரிகிறது.

வேளாண்மைத் தொழிலில் முறைப்படி எந்தெந்தக் காலங்களில் என்னென்ன செய்ய வேண்டுமோ அது செய்யப்பட்டது. உழுதல், விதைத்தல், நீர் பாய்ச்சல், அறுவடை செய்தல் முதலானவை தொன்றுதொட்டு முறைப்படி நடைபெற்றன. மக்களின் இன்றியமையாத பொருள்கள் நெல், கோதுமை, இஞ்சி, கடுகு, நீர்ப்பூசணிக்காய், பூசணிக்காய் முதலியனவாம். இன்றும் இப் பட்டியல் நீளம் அதிகம் என்றே கூறவேண்டும். அனைவரும் உழவுத் தொழிலில் ஆர்வமுடன் உழைத்தனர் என்று கூறிவிட முடியாது. சிலர் சோம்பேறிகளாகவும், வேலையில் ஆர்வமில்லாதவர்களாகவும் விளங்கினர். ஆக, வட இந்தியா முழுமையும் நன்கு பயிர் செய்யப்பட்டுச் செழித்திருந்தது. கங்கை-பிரம்மபுத்திராச் சமவெளி சிறந்த வளம் மிக்க பகுதியேயாகும். அங்கு வேளாண்மைப் பொருள்கள் நிறைந்து காணப் பட்டன.

யுவாங் சுவாங்கைப் போலவே பாணரும் உழவுத் தொழிலை எடுத்துக் காட்டுகிருர். பாணரின் குறிப்பிலிருந்து பானையில் வளர்க்கப்பட்ட பயிர்கள், வாழை மரங்கள், மாதுளைத் தோப்புகள் குறித்த செய்திகளை அறிகிறோம். சாலையில் செல்வோர் தென்னை இளநீரைப் பருகியதும், பேரீச்சம் பழங்களை இசைவு பெருமல் பறித்துத் தின்றதும் குறிப்பிடப்படுகிறது. இறைய நாளில் வட இந்தியாவில் தென்னையும், பேரீச்சை மரமும் பொதுவாகக் காணப்படுவதில்லை. ஆனால், அக் காலத்தில் ஸ்தானேஸ்வர மக்கள் அவற்றை வளர்த்திருக்க வேண்டும். மக்கள் வேளாண்மையின் சிறந்த நுணுக்கங்களை அறிந்திருந்தனர். பாரசீகச் சக்கரம் கொண்ட பானைகளை வைத்துப் பயிருக்கு நீர் பாய்ச்சினர் எனப் பாணர் குறிப்பிடுகிருர்.

அரசரே நாட்டிலிருந்த நிலம் முழுமைக்கும் உடைமையாளராக விளங்கினர் எனத் தோன்றுகிறது. அவர் தாம்

விரும்பிய யாருக்கும் எந்த நிலத்தையோ, ஊரையோ விருப்பப் படி கொடை அளிக்கக் கூடியவராக விளங்கினர். சில நேரங் களில் மக்கள் போலிச் சாசனங்களைக் கொண்டு அத்தகைய உரிமையினை வேண்டினர். அவ்வாறு போலிச் சாசனங்கள் ஹர்ஷரின் காலத்திலும் இருந்தன என்பது பியூஹிலரின் கருத்து. நில உடைமைக்கு வழக்குகள் இன்று போல் அன்றும் உண்டு. போலியாகச் சாசனம் கொண்டுவந்து ஒருவருடைய பொறுப்பில் உள்ளவற்றைத் தம்முடையவை என்பவர்களுக்கு, கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. ஒரு நிலம் அல்லது ஊரைப் பெற்றவருக்கே அதன் வருவாய் முழுவதும் சொந்த மாயிற்று. அரசருக்கெனத் தனியே சொந்த நிலங்களும் இருந்தன. அவற்றின் வருவாயை நான்கு பிரிவுகளாகப் பிரித்து முதல் பிரிவை அரசு செலவுக்கும், இரண்டாம் பிரிவை அரசு பணியாளருக்கும், மூன்றாம் பிரிவை அறிவுடையோர்க்கு அன்பளிப்பு வழங்கவும், மீதமுள்ளவை சமயப் பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டன என யுவாங் சுவாங் குறிப்பிட்டார்.

## தொழில்கள்

இந்திய நாடு வேளாண்மை நாடாக விளங்கியபோதிலும் தொழிலிலும் சிறந்து விளங்கியது. இந்தியத் தொழில் வளர்ச்சி அக்காலத்தே எங்ஙனம் இருந்தது என்பதை அறிய யுவாங் சுவாங், பாணர் ஆகியோரின் உதவியையே நாடவேண்டி யுள்ளது. முன்னர்ச் சமுதாய வரலாற்றைக் குறித்துக் கண்ணுற்றபோது பல்வேறு வகையான நெசவுத் தொழில் களைப் பற்றிய செய்திகளைக் கண்டோம். எனவே, வேளாண் மைக்கு அடுத்துச் சிறந்து விளங்கிய தொழில் நெசவுத்தொழிலே. நெசவுத் தொழில் வேளாண்மை போலச் சிறப்பித்துக் கூறத் தக்கது.

உழவன் வயிற்றுக்கு உணவளித்தான். ஆனால், நெசவுத் தொழில் செய்தவனோ மானம் காக்கும் ஆடையளித்தான். சமுதாய ஒழுங்கிற்கு அவ்வகையிலே மேலே குறிப்பிடப் பட்டுள்ள இருவரும் இன்றியமையாதவர்கள். மனிதனை மனிதனாக உருவாக்கியவர்கள் என்றுகூட இவர்களைக் கூறலாம்.

ஹர்ஷரின் காலத்தில் காணப்பட்ட பிற தொழில்கள் யாவை எனக் காண்போம். உலோக வேலைத்தொழில் சிறந்து விளங்கி யமையாலேயே செம்பு, பித்தளை தட்டுமுட்டுச் சாமான்களைக் கலை அழகுடன் அவர்கள் உருவாக்கினர். அவை மட்டுமன்றிப்

போருக்குத் தேவைப்படும் கருவிகளான வாள், ஈட்டி, கத்தி கோடரி, கேடயம், வில், அம்பு முதலியவற்றையும் செய்தனர். வாள் மிகவும் பளபளப்பாகக் கண்ணாடியைப் போல மின்னியது. வாளில் யசோமதி முகம் பார்த்தாள் என உரைக்கிறார் பாணர். வாரணாசியில் சிவலிங்கம் ஒன்றினை யுவாங் சுவாங் கண்டார் என்பர்.

செப்புத் திருமேனிகளைச் சீரான முறையில் உருவாக்கவும் கற்றிருந்தனர். எண்பதடி உயரமுள்ள புத்தர் சிலையினை நாளந்தாவில் யுவாங் சுவாங் கண்டதாக அவர் குறிப்பிலிருந்து அறிகிறோம். தங்கம் வெள்ளி முதலானவற்றால் அழகு மிக்க அணிகலன்களைச் செய்தனர். இராஜ்ய ஸ்ரீயின் மணவிழாவின்போது அணிகலன்கள் செய்யப் பொற்கொல்லர் வந்த செய்தியைப் பற்றிப் பாணர் கூறுகிறார். பாஸ்கர வர்மன் அனுப்பிவைத்த பொருள்களின் பட்டியலிலிருந்து அக் காலத் தொழில்களைப் பற்றி அறிகிறோம்.

அவர் தங்க இலைகள், அணிகலன்கள், பிரப்பு நாற்காலிகள், மாம்பழச்சாறு உள்ள மூங்கிற் குழாய்கள், சந்தனம், கற்பூரம், பெட்டிகள், தந்தம் முதலானவை அவற்றில் அடங்கும். பாணரின் குறிப்பில் காணப்படும் அணிகலன்களின் பட்டியலையே யுவாங் சுவாங்கின் குறிப்பிலிருந்தும் அறிகிறோம். வைரவேலையும், அணிகலன் செய்தலும் சிறந்து விளங்கின. வைரங்களையும் பிற விலை மதிப்புடைய கற்களையும் பரிசோதித்து அறிய அரசர்கள் வந்திருந்தார்கள்.

### வாணிகமும் வர்த்தகமும்

வாணிகமும் வர்த்தகமும் ஹர்ஷ வர்த்தனரின் காலத்தில் உயர்வான சிறப்பு மிக்க இடத்தைப் பெற்றிருந்தன. அவற்றின் சிறப்பான தன்மையினை எடுத்துக்காட்ட உறுதியான ஆதாரங்கள் உள்ளன. யுவாங் சுவாங் தகுந்த ஆதாரங்களை அளித்து, இந்தியாவின் வாணிக, வர்த்தகங்களின் சிறப்பை எடுத்துரைக்கிறார் அரசாங்கம் மிகவும் இலகுவான வரிகளையே விதித்தது என்றும் குறித்துள்ளார்.

அரிதான, எளிதில் கிடைக்கப்பெறாத, மதிப்பு மிக்க பொருள்கள் துறைமுகம் வழியே வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஸ்தானேஸ்வர மக்களில் பெரும்பாலானோர் வாணிகத்தில் ஈடுபட்டனர். வாணிகர்களுக்குத் தொட்டதெல்லாம்

கொடுக்கும் பூமியாகவும், இலாப பூமியாகவும் விளங்கியது தானேஸ்வரம். கன்யாகுப்ஜம், அயோத்தியா முதலியவற்றில் தொழில் விற்பன்னர்கள் நிறைய இருந்தனர். வாரணாசியில் வாழ்ந்த மக்களின் இல்லங்களில் விலைமதிப்பு மிக்க அரிய கலைப் பொருள்கள் நிறைந்து காணப்பட்டன. உள்நாட்டு வாணிகம் சிறந்து விளங்கியமையால் செல்வம் அதிகமாகப் புழக்கத்தில் காணப்பட்டது.

இந்திய நாட்டின் செல்வச் சிறப்பினை எடுத்துக் காட்டும் ஆதாரம் ஒன்று உள்ளது. யுவாங் சுவாங் தம் இந்தியப் பயணத்தை முடித்துச் செல்லுகையில் தங்கத் தட்டு, கிண்ணம், ஏழு நீர்க்குவளைகள், ஓர் ஊன்றுகோல், 3,000 பொற்காசுகள், உயர்ந்த பருத்தியாலான 3,000 உடைகள் ஆகியவற்றை ஹர்ஷர் அளித்தார் என்ற குறிப்பும் தங்கம், வெள்ளி சந்தனத்தாலான பல புத்தரின் உருவச் சிலைகள் ஆகியவற்றைக் யுவாங் சுவாங் கொண்டு சென்றார் என்ற குறிப்பும் அதற்கு எடுத்துக் காட்டு எனலாம். மேலும் தங்கம், வெள்ளி பச்சைக் கற்கள், பளிங்கு கள் முதலியன இந்தியாவில் மிகுதியாகக் காணப்பட்டன என்ற குறிப்பும் இங்குக் காட்டத்தக்கது.

உள் நாட்டு வாணிகம் மட்டுமன்றி வெளி நாட்டு வர்த்தகமும் சிறந்து விளங்கிற்று. சீனா, இலங்கை, பாரசீகம் முதலான நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு இருந்தது. கடல் வணிகர்களுக்கும், பயணிகளுக்கும் தங்குமிடமாகச் சரிதபுரம் விளங்கிற்று என யுவாங் சுவாங் குறிப்பிட்டார். தாம்ரலிப்தி கடல் வர்த்தகத்தில் சிறந்திருந்த இடமாகும். பாரசீக நாட்டிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன என்பதற்குக் காதம்பரி சான்றாகும்.

சீன தேசத்திலிருந்து பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. அப் பட்டு சீனன் சுகா எனப்பட்டது. சீனாவுடன் மட்டுமன்றி ஜப்பானுடனும் வர்த்தக உறவு வளர்ந்தது. ஐரோப்பிய நாடுகளில் இந்தியத் திரு நாட்டுக் கப்பல்கள் காணப்பட்டன என்ற குறிப்பு அதற்கு எடுத்துக் காட்டு.

**காசுகள்**

பண்டமாற்று முறையே பெரும்பாலும் கடைப்பிடிக்கப் பட்டாலும், தங்க வெள்ளிக் காசுகள், சங்குகள், முத்துகள் முதலானவையும் பண்டமாற்றிற்குத் துணைபுரிந்தன. ஆனால், டாக்டர் ஜான் ஆலன் இந்து அரசர்களில் ஒருவரான ஹர்ஷ

வர்த்தனர் காசுகள் ஏதும் வெளியிட்டதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டார். வட இந்தியா முழுமையும் ஒருசேர ஒரு குடைக்குள் ஆண்ட ஹர்ஷ வர்த்தனர் நாற்பதாண்டுகள் ஆட்சி செலுத்தியவர் காசுகள் வெளியிடவில்லை என்று கூறுவது தவறெனப் படுகிறது.

இந்திய நாட்டிற்கு வருகை புரிந்த யுவாங் சுவாங் காசுகள் பயன்படுத்தப்பட்டன எனத் தெளிவாகக் கூறினர். ஹர்ஷ வர்த்தனர் காசுகள் ஏதும் வெளியிடவில்லை, கிரக வர்மனல் வெளியிடப்பட்டவற்றை அவர் பயன்படுத்தியிருக்கலாம் என்று கூறப்பட்டது. அவ்வாறு கூறப்படும் கருத்து உண்மையின் வழி நிற்பதாகாது. ஏனெனில், ஒரு சிறிது காலம் ஆட்சி செலுத்துவதாயின் அவ்வாறு மட்டுமே செய்திருக்க வேண்டும். ஹர்ஷ வர்த்தனர் நாற்பதாண்டுக் காலம் ஆட்சி செலுத்தியிருக்கிறார். ஹர்ஷரின் அரசு மிகச் சிறிய பரப்பினை மட்டும் கொண்டதாக விளங்கியிருந்தாலும் அது இயலக் கூடியது. ஆனல், அது காஷ்மீரத்திலிருந்து நம்மதை வரை பரவியிருந்த ஒன்று.

ஹர்ஷரின் காலத்தில் உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புகளின் விளைவாக வாணிகமும், வர்த்தகமும் மிகுதியான செல்வாக்குப் பெற்று விளங்கியன. அத்தகைய சூழ்நிலையில் காசுகளின் உதவியின்றி, அல்லது காசுகளை வெளியிடாது பண்டமாற்று முறையிலேயே வர்த்தகத்தை நடைபெறச் செய்தல் என்பது இயலக் கூடியது அன்று. ஆலன் கூற்றினைத் தவறு என்று எடுத்துக்காட்டக்கூடிய செய்தி, ஹர்ஷ வர்த்தனர் காசுகளை வெளியிடவில்லை என்று 1914ஆம் ஆண்டுக்கு முன்னரே 1906-ல் வெளியிடப்பட்டது. ஆ. பர்ன், இராயல் ஒஷியாடிக் சொசைட்டி இதழில் 'Some Coins of the Maurias and the Thanesvara Line' என்ற தலைப்பில் 1906-ல் எழுதி விளக்கியதை ஆலன் அறிந்திருந்தால் அவ்வாறுன ஒரு கருத்தினை நிச்சயமாக அளித்திருக்க மாட்டார் எனலாம்.

பித்தௌரா என்னுமிடத்தில் 1904-ல் கண்டெடுக்கப்பட்ட காசுகளில் ஒன்று தங்கத்திலும், 522 வெள்ளியிலும், எட்டுச் செம்பிலும் வெளியிடப்பட்டன. அக் காசுகளை ஆராய்ந்த அறிஞர் பர்ன் அவற்றில் 284 சிலாதித்திய ஹர்ஷருக்கு உரியது என்று குறிப்பிட்டதை ஹோயர்ன்லே ஏற்கவில்லை. சிலாதித்தியர் என்ற பெயர் ஹர்ஷருக்கு மட்டும் உரியதன்று எனவும், சிலாதித்தியர் என்ற சிறப்புப் பெயரினைக் கொள்வது பொதுவாக அனுசரிக்கப்படும் வழக்கமே ஆகும் என்றும் வாதிட்டார்.

டாக்டர் பானர்ஜி பர்ன் வெளியிட்ட கருத்துகள் உண்மையின் வழி நிற்பதாகக் கருதினர். மௌகாரிகளின் அரசு ஹர்ஷருக்கு உறவுக்கார அரசராக அமைந்தமையால், ஹர்ஷ வர்த்தனர் அந்த அரசினைக் கைக்கொண்டதும் பிரதாப சீலர், சீலாதித்தியர் காசுகளைக் கொண்டிருக்கக் கூடும்.

அக் காசுகளில் காணப்படும் பிறை ஹூணர்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. பேராசிரியர் வாஜ் பாய், குப்தர்களின் மத்திய தேசத்துக் காசுகளை ஹர்ஷரின் வெள்ளிக் காசுகள் ஒத்துள்ளன என்று குறிப்பிட்டார். அவர் பொற்காசு ஒன்று இருந்ததை ஹர்ஷருக்கே உரியதெனக் கருதுகிறார். அப் பொற்காசில் உள்ள குறிப்பினைப் பரம பட்டாரக, மஹாராஜாதி இராஜ பரமேஸ்வர ஸ்ரீமகாரா(ஜ ஹ)ர்ஷதேவர் என வாசித்தார். தானேஸ்வரம், கன்னோசி ஆகியவற்றின் புஷ்பபூதி வமிசத்து அரசர் பிரபாகர வர்த்தனரின் மகனும், வாரிசுமான ஹர்ஷரையே குறிப்பிடுகிறது. ஏனெனில், பட்டங்களிலும் முத்திரைகளிலும் அத்தகைய பட்டங்களே காணப்படுகின்றன. மேலும், அவர் அக் காசுகளில் காணப்படும் பிராமி இயல்புகள் மதுபன், பன்ஸ்கேராப் பதிவுகளை ஒத்துள்ளன என்றும் சுட்டிக் காட்டினர். இவற்றையெல்லாம் நோக்கும் ஒருவர், முன்னர்க் கூறப்பட்ட வாதத்தை ஒன்று சேர்த்துப் பார்த்தால் நிச்சயமாக ஹர்ஷ வர்த்தனர் காசுகளை வெளியிட்டார் என்பதையும் அவை புழக்கத்தில் இருந்தன என்பதையும் உணர்வார்.

வாணிகச் சங்கங்கள் ஏதும் அக் காலத்தில் இருந்தனவா என்ற கேள்விக்கு நேரடியாக நாம் பதில் அறியத் தக்க ஆதாரம் இல்லை. ஆனல், அவ்வாறு யூகிக்கத் தக்க ஆதாரங்கள் உள்ளன. தர்ம சாஸ்திரங்களான நாரதர், பிருஹஸ்பதியினுடையவை அதற்குச் சான்றுபகர்கின்றன. அந் நூல்கள் வாணிகச் சங்கங்களுக்கு இருந்த சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றன. பொதுவான மக்கள் வாழ்க்கையினை நோக்குமிடத்து உயர்ந்த வாழ்க்கை முறை காணப்பட்டதாகவே கருதவேண்டியுள்ளது. யுவாங் சுவாங் ஸ்தானேஸ்வரம், கான்யாகுப்ஜம், வாராணசி முதலானவற்றைப் பற்றிக் குறிப்பிடுகையில், வளமான, ஆடம்பரமான, மகிழ்வான வாழ்க்கை காணப்பட்டதை எடுத்துக் காட்டுகிறார்.

நகரவாழ்க்கையின் தோற்றமும் ஹர்ஷரின் காலத்திய பொருளாதார வாழ்வில் காணப்பட்ட கூறு எனலாம். நகரங்கள் பல

வளமைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கின. கன்னோசி சிறப்பு மிக்கதாக உருவாயிற்று. கன்னோசி மக்கள் அரிய பொருள்களின் பால் அதிக ஆர்வம் கொண்டனர். பல்வேறு நாடுகளிலிருந்தும் அவற்றைப் பெற்றுச் சேர்த்தனர் எனில், அதற்கு அவர்கள் பெற்றிருந்த செல்வச் சிறப்பே காரணம் எனலாம். உஜ்ஜயினி யைப்பற்றிக் குறிப்பிட வந்த பாணர் கன்னோசியையும் வெகுவாக மிகைபடப் புகழ்ந்துரைக்கிறார். தட்சசிலம், ஜலந்தரா கௌசாம்பி மதுரா, ஸ்தானேஸ்வரம், மடிப்புரம், மாயூரா, அஹிச்சத்திரா, கபிதா, அயோத்தியா முதலியன சிறப்புமிகு வடபுலத்து நகரங்கள் ஆகும். பிரயாகையும் வாரணாசியும் நிறைந்த மக்கள் எண்ணிக்கையைக் கொண்டு விளங்கின என்பதோடு அவற்றி லும் செல்வம் சேர்ந்திருந்தது.

பீஹாரில் நாளந்தா, சம்பா, இராஜ் மஹால் முதலியன குறிப் பிடத்தக்க நகர்கள். கபிலவஸ்து, வைசாலி, சிராவஸ்தி ஆகியவை அழிவு நிலையினை அடைந்துவிட்டன. மேற்கு இந்தியாவில் சூரத், வலபி ஆகியனவும் வங்காளத்தில், புண்டர வர்த்தனு, தாம்ரலிப்தி சாமதாதா, கர்ண சுவர்ண முதலியனவும் குறிப்பிடத்தக்கன. காமரூபம் மலைப்பகுதியாக விளங்கியமையால் சிறப்புடைய நகர வாழ்வு ஏற்பட வழியின்றிப் போயிற்று.

டாக்டர் முகர்ஜி ஹர்ஷரின் காலப் பொருளாதாரச் சிறப்பி னுக்கு அவர் காலத்தில் எழுப்பப்பட்ட கட்டடங்களை எடுத்துக் காட்டு என்று குறிப்பிட்டு அவற்றைத் தம் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.[1] அவற்றைச் சற்றுக் காண்போம். பௌத்த சமயத்தின் நிலைக்களங்களாக ஒருகாலத்தில் விளங்கிப் பாஹியான் பயணம் செய்த காலத்தில் 98 பௌத்த மடங்கள் கொண்ட சிராவஸ்தியில் யுவாங் சுவாங்கின் பயணத்தின்போது ஒரு மடம் காணப்பட்டது. 1,000 மடங்களைக் கொண்ட பௌத்த மதத் தினரின் புனிதத் தலமான கபிலவஸ்து ஹர்ஷரின் காலத்தில் முப்பது துறவிகளை வாழ்ந்த ஒரே ஒரு மடத்தைக் கொண் டிருந்தது. பௌத்தக் கொள்கைகள் சிறந்து விளங்கிய வைசாலி யில் இடிபாடுகளையும், அதைச் சுற்றி மரம் செடி கொடிகள் வளர்ந்திருந்ததையுமே யுவாங் சுவாங் கண்டார்.

ஆனால், பௌத்த சமயத்தின் பழம்பெரு நகரங்கள் சிறப் பிழந்தபோதிலும், புதிய பௌத்த நிலையங்கள் இந்தியாவிற்கே பெருமை தேடித் தந்தன. ஹர்ஷரின் காலத்தில் கிழை இந்தியா வில் நாளந்தாப் பல்கலைக் கழகமும், மேற்கு இந்தியாவில் வலபி

[1] R. K. Mukerjee, *Harsha*, pp. 166 - 168.

யும் சிறப்புடன் விளங்கியன. தானேஸ்வரத்தில் சுமார் 100 ஆலயங்கள் காணப்பட்டன. பிஜ்னூருக்கு அருகில் மதிபுரத்தில் சுமார் 50 ஆலயங்கள் காணப்பட்டன.

கோவிசனாவில் 30 ஆலயங்களும், அயோத்தியில் 100 பௌத்த மடங்களும், 10 தேவன் கோயில்களும் இருந்தன. விசோகாவில் 20 பௌத்த விஹாரங்களும், 50 ஆலயங்களும் இருந்தன. வாரணாசியில் 100 வேலைப்பாடுகள் மிக்க கோயில்கள் இருந்தன. வங்காளத்தில் உள்ள புண்ணிய வர்த்தனாவில் 100 கோயில்களும், 200 விஹாரங்களும் காணப்பட்டன. சாமதத்தாவில் 30 பௌத்த மடங்களும், 100 கோயில்களும் வங்காளத்தின் துறைமுகமான தாம்ரலிப்தியில் 50-க்கும் அதிகமான கோயில்களும் இருந்தன. காமரூபத்தில் பல நூற்றுக்கணக்கான கோவில்கள் இருந்தன என யுவாங் சுவாங் குறிப்பிட்டார்.

மேலே கூறப்பட்டுள்ள விஹாரங்கள், கோயில்களின் ஆகியவற்றின் எண்ணிக்கை அடிப்படையில் முகர்ஜி கருத்து ஒன்றினை அளித்தார். அவர் நகரங்களில் காணப்பட்ட கட்டடங்களின் சிறப்பும், நகர் அமைப்புத் திட்டமும் அக்காலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்குச் சான்றுகளாகும் என்று குறிப்பிட்டது உண்மையே எனலாம். நாம் ஏற்கெனவே அந்நகரங்களிலெல்லாம் செல்வச் சிறப்புப் பெருகிநின்றது என்று கண்டோம். ஹர்ஷரின் காலம் பொருளாதாரச் செம்மையும் வளர்ச்சியும் பெற்றதாகவே விளங்கியது என்பதில் ஐயமில்லை.

# 12. கல்வி, மொழி, இலக்கியம்

சமஸ்கிருதம் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உயர்ந்த எண்ணங்களை வெளியிடும் மொழியாக விளங்கியது. இந்துக்களிடையே தேசிய ஒற்றுமையையும், இந்தியப் பண்பாட்டு இணைப்பையும் அது உருவாக்கிற்று. ஹர்ஷ வர்த்தனரின் காலத்தில் சமஸ்கிருதம் உயர்வானதோர் இடத்தை வகித்தது. இதனைப் பட்டயங்களும், இலக்கியங்களும், சீனப் பயணியின் குறிப்புகளும் சான்று பகர்கின்றன. மதுபன், பன்ஸ்கேராப் பட்டயங்களில் சிறந்த சமஸ்கிருதம் பயன்படுத்தப்பட்டிருப்பினும், பன்ஸ்கேராப் பட்டயத்தில்தான் மிக உயர்ந்த சமஸ்கிருதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சமஸ்கிருத மொழியினை உயர்வகுப்பினரும், நல்ல கல்வியறிவு பெற்றவர்களும் பயன்படுத்தினர் என்பதனைப் பல்வேறு இலக்கியங்களும், சமய நூல்களும் எடுத்துக்காட்டிய போதிலும், பாணினியின் சமஸ்கிருதம் வழக்கிலிருந்தது எனத் தவறாகக் கருதிவிடக் கூடாது. வடமொழி இலக்கணத்தில் யார் மிகுந்த தகுதி பெற்றவர்களோ அவர்களே சமஸ்கிருதத்தைப் பேசினர். சாதாரண மக்கள் கலப்படமான பிராகிருத மொழியினைப் பேசினர்.

ஹர்ஷரின் நாடகங்களில் சரியான, திருத்தமான சமஸ்கிருதத்தைச் சூத்திரதாரிகள் பேசியபோது விதூசகாவும், சம்கிருத்யாயணியும் தவிர்த்த எல்லாப் பெண்களும் பிராகிருத மொழியையே பேசினர். பிரியதர்ஷிகா நாடகத்தில் சம்கிருத்யாயனி சமஸ்கிருதப் புலமை பெற்றிருந்ததாகவும், அம் மொழியைப் பேசியதாகவும் அறிகிறோம். யுவாங் சுவாங், மத்திய இந்திய மக்கள் நல்ல, சிறப்பான, சரியான சமஸ்கிருதம் பேசினர் என்று குறிப்பிடும் குறிப்பு முழுமையாகச் சரியானது என்று கூற முடியாது. அவர் படித்துக் கற்றறிந்த மக்களிடையே தொடர்பு கொண்டிருந்ததனால் அவ்வாறு குறிப்பிட்டார் எனலாம். சாதாரணமான மக்களைப் பொறுத்தமட்டில் அவர் குறிப்புச் சரியானதன்று. அண்டை, அயல்நாட்டு மக்கள் அம் மொழி

யினைப் பேசும்போது பிழைகளைச் செய்தனர் என அவர் குறிப்பிட்டார். ஆகவே, படித்தவர்கள் எழுதவும் பேசவும் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தினர். பொதுமக்கள் கலப்பான இலக்கணச் சிறப்புக் குறைந்த மொழியினைப் பேசினர்.

வேதங்களை மக்கள் எந்த அளவிற்கு மதித்துப் போற்றினர் என்பதைச் சமுதாய வாழ்வினைப் பற்றிய விளக்கத்தில் கண்டோம். மகாபாரதமும், இராமாயணமும் மக்களிடையே நன்கு அறியப்பட்டுப் படிக்கப்பட்டன. புராணங்களையும் அதைப் போலவே போற்றினர். பாணர் தம் குறிப்புகளில் பல முறை அவற்றைச் சுட்டிக் காட்டுகிறார். உஜ்ஜயினி மக்கள் அவற்றில் கொண்ட ஈடுபாட்டையும், பிருஹத் கதாவில் கொண்ட ஆர்வத்தையும் அவர் காதம்பரியில் சுட்டிக் காட்டினார்.

அக் கால மக்கள் கதைகள் கேட்பதில் ஆர்வமுடனிருந்தனர் என்பதற்குப் பாணரே சான்றுவார். இராமாயணம், மகாபாரதத்தைப் பக்தி சிரத்தையோடு படித்ததுமட்டு மல்லாமல் அவற்றைப் பாடமாகவும் கற்றனர். சந்திர பீடன் இராமாயணம், மஹாபாரதம், இதிஹாசம் முதலியவற்றைக் கற்றான் என்பதற்குக் காதம்பரி ஓர் எடுத்துக்காட்டு. மகாபாரதம் கல்விச் சுரங்கம் எனலாம். மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் வளர்ச்சிக்கும், எண்ணத் தூய்மைக்கும் பயன்படுத்தினர். மகாபாரதத்தில் தேர்ந்தவர் என்ற பொருளில் சிலர் 'மகாபாரத பவிதத்மானு' எனப்பட்டனர்.

இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் பொதுவாக எங்கும் உரக்கப் படிக்கப்பட்டன. அதனைப் பக்தியுடன் கேட்பது வழக்கம். புராணங்களைப் படிப்பவர்கள் புஸ்தக வாசகர்கள் எனவும், கதாவாசகர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். பாணரின் முன் வாயு புராணத்தைப் பாணரின் நண்பர் சுத்ரிஸ்தி வாசித்தார். கதை இலக்கியங்களில் பிருஹத்கதா பெரிதும் புகழ் பெற்று விளங்கியது. ஆக்யாயிகாக்களும் மக்களிடையே பிரபலமாயிருந்தன. பௌத்தர்களிடையே பிரபலமாயிருந்தவை ஜாதகக் கதைகளாகும். மற்றொரு பிரபலமான நூல் சுபந்துவின் வாசவ தத்தாவாகும். சுபந்து ஹர்ஷரின் காலத்தவர் எனக் கருதப்படுகிறார். காளிதாசரின் நாடகங்கள் மக்களிடையே பிரபலமானவை. காளிதாசரைப் பாணர் புகழ்ந்துரைக்கின்றார். அக் காலத்தே புகழுடன் விளங்கியவர் பாஸா ஆவார். காளிதாசருக்கும் பாணருக்கும் அவர் முன்னோடி என இருவரும் குறிப்பிட்டனர். பாஸாவின் இலக்கியங்களுக்கு

ஹர்ஷரின் காலத்தில் ஆதரவு இருந்தது என்று அறிய இது ஒன்றே போதும். மகாகாவியங்களைப் படைத்தவர்களில் காளி தாசரின் பின் தோன்றியவர்களில் பாரவி குறிப்பிடத்தக்கவர் என்பதில் ஐயமில்லை.

சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் பட்டயத்தில் காளிதாசரின் பெயருடன் பாரவியின் பெயரும் குறிப்பிடப்படுகிறது. அக் காலத்தில் அவர் அத்துணைப் புகழ் பெற்றவராக விளங்கியிருக்க வேண்டும். ஏழாம் நூற்றாண்டில் பாரவி வாழ்ந்தவர். பாணருக்கும் அவர் முற்பட்டவர் என்று கருத இடம் உள்ளது. ஹர்ஷ சரிதம் எழுதிய பாணருக்குச் சம காலத்தவர் என்று கூறுவது பொருத்தமாகப் படவில்லை. பாணர் அவரைப் பற்றிக் கூறாதது தான் வியப்பைத் தருகிறது. பாரவியைப் பற்றிப் பாணர் குறிப்பிடாமைக்கு பாணருக்கு முன்னர் வாழ்ந்தவர் அல்லர் எனவும், அவருடைய புகழ் பரவ வில்லை என்பதே காரணம் எனவும் டாக்டர் கீத் குறிப்பிட்டார். அரிச்சந்திரன் ஹர்ஷரின் காலத்தில் இலக்கிய உலகிற்கு நன்கு அறிமுகமானவன் எனலாம். பிரவர சேனரின் நூலான சேது பந்த கிடைக்கவில்லை. அந் நூல் பிராகிருத மொழியில் எழுதப் பட்டு அனைவராலும் புகழப்பட்டதாக விளங்கிற்று. இந்த ஆசிரியர்கள் அனைவரும் ஹர்ஷ வர்த்தனரால் விரும்பப்பட்ட வர்கள் எனலாம். இதுவரை கண்டவை பொழுதுபோக்கு வகையிலான பக்தி இலக்கியங்களாகும்.

சமயக் கோட்பாடு பற்றிய எண்ணற்ற இலக்கியங்கள் மக்களிடையே நன்கு அறியப்பட்டவையாக விளங்கின. நியாயம் சாங்கியம், லோகாயதம், வைசேஷிகம் முதலான பிரிவுகள் இருந்தன. அஸ்வகோஷர், நாகார்ஜுனர், வாசுபந்து, சங்கபத்ரா குணமதி ஸ்திரமதி, சிலபத்திரா முதலானவர்களின் நூல்களை மக்கள் விரும்பிப் படித்தனர். சமய இலக்கியங்கள் மட்டுமன்றிப் பொதுமக்கள் இலக்கணம், வான இயல், ஆயுர் வேதம், இசை, ஓவியம், சிற்பம் முதலான கலைத் தொடர்புடைய நூல்களையும் கற்றனர். ஹர்ஷருக்கு இரு நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காமாந்தகரின் நீதிசாரம், வாத்சயாயனரின் காம சூத்திரம் ஆகியவை மக்களுக்கு நன்கு அறிமுகமாய் இருந்தன. இவை தவிர வேறு சிலவும் இருந்திருக்கக்கூடும். ஆனால், அவை குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை.

முன்னர் ஹர்ஷரின் பங்கினை இலக்கியத்துறையில் கண்டோம். இப்போது அவருடைய இலக்கியங்கள் தவிரச் சமுதாயத்திற்கு அறிமுகமாகியிருந்த இலக்கியங்களைக் கண்டோம்.

அவற்றில் பெரும்பாலானவை ஏற்கெனவே ஹர்ஷரின் காலத்திற்கு முன்பே இந்திய மக்களுக்கு அறிமுகமானவைதாம்.

ஹர்ஷரின் காலக் கல்விச் சிறப்பைக் காண்போம். கல்வியின் முன்னேற்றம் பற்றியும், முறைகள் பற்றியும் விளக்கமான குறிப்பைப் பாணர், யுவாங் சுவாங் ஆகியோர் நமக்கு அளிக்கின்றனர் அவ்விருவரும் பிராமணர்களே ஆசிரியர்களாக விளங்கினர் எனச் சுட்டிக் காட்டுகின்றனர். பிராமணர்கள் நான்கு வேதங்களிலும் வித்தகர்களாக விளங்கினர். பிராமண ஆசிரியர்கள் நன்கு கற்றவர்களாகவும் விளங்கினர்.

ஹர்ஷர் சமயத்துறை வளர்ச்சிக்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டதைப் போன்றே கல்விக்கும் ஊக்க மளித்தார். இந்திய அரசர்களில் கல்வியில் சிறந்தவர்களாக விளங்கிய சிலரில் ஹர்ஷரும் ஒருவர். மிகப் பெரும் நாடக ஆசிரியராகவும், கல்வியாளராகவும் விளங்கிய ஹர்ஷர் புலவர்களையும், கற்றோரையும், ஏழை எளியவரையும் ஆதரித்துப் போற்றிய கலைஞர் என்று முன்பே கண்டோம்.

ஹர்ஷர் கல்வியாளர்களுக்கு அளித்த ஆதரவிற்கும், அக்காலக் கல்வியாளர்களின் ஒழுக்கத்திற்கும் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கும் நிகழ்ச்சி ஒன்றினை இங்குக் குறிப்பிடல் வேண்டும். ஹிந்து வித்யா, சப்த வித்யா, போகசாஸ்திரம், நால் வேதங்கள், வான நூல், புவியியல், மருத்துவம், கணக்கு ஆகிய அனைத்திலும் தேர்ந்த சிறந்த புலமை கொண்டு விளங்கிய ஜெயசேனர் என்பவருக்கு எண்பது கிராமங்களின் வருவாயைக் கொடையாக ஹர்ஷர் அளித்தபோது ஜெயசேனர் பெற்றுக் கொள்ள மறுத்த நிகழ்ச்சிதான் அந்தக் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி. தம் சொந்த நில வருவாயில் நான்கில் ஒரு பங்கை அறிவாற்றல் மிக்கவர்களுக்கெனவும், மற்றொரு பகுதியைச் சமயப் பணிக்கெனவும் செலவழித்தார் ஹர்ஷர்.

இனி அக்காலக் கல்வி நிலையைக் குறித்துக் காண்போம். குருகுலமுறைக் கல்வி நடைபெற்றமையால் பதினைந்து வயது வரை ஆசிரியர் என்ற ஞானத் தந்தையிடம் அறிவுச் சுரங்கத்தைத் தேடிப் புதையலை எடுத்த மாணவன் உலகத் தந்தையிடம் சேர்ந்தான். சாமவர்த்தன என்ற சடங்கினைச் செய்ததும் மாணவப் பருவம் முடிவடைந்தது. ஆசிரியர்கள் ஞான குருவாகவும், நல்லறிவுடையோராகவும் விளங்கினர். மாணவப் பருவம் பதினைந்தில் முடிந்தது எனினும் இருபத்தைந்து வயதுவரை தொடர்ந்தது. யுவாங் சுவாங் முப்பது வயது என்று இதைக் குறிப்பிட்டார்.

சமுதயாத்தில் ஆசிரியனுக்குத் தகுந்த சமுதாய நிலை காணப்பட்டது. அவர்கள் மதிப்பு, மரியாதை, சிறப்பு ஆகியவற்றை கண்டு மயங்கிவிடுவதில்லை. மக்கள் ஆசிரியருக்கு மரியாதை செலுத்திப் பொதுநிகழ்ச்சிகளில் தக்க இடமளித்துச் சிறப்பித்தனர். ஆசிரியர்களுக்கென நிலையான ஊதியம் ஏதும் கிடையாது. மாணவர்களும், சீடர்களும் அளித்த அன்பளிப்புகளைக் கொண்டு வாழ்க்கையை நடத்திச் சென்றனர். அவர்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தனர். அவர்கள் பிச்சையெடுத்து அதாவது இரந்து உயிர் வாழ்ந்தனர்.

மாணவர்களுக்கெனச் சில சமுதாயக் கடமைகளும் வலியுறுத்தப்பட்டன. தம்மைப் பெற்ற தந்தையைப் போலவும், காக்கும் கடவுளைப் போலவும் ஆசிரியர்களை அவர்கள் கருதினர். குருகுலத்தில் பயின்ற மாணவர்களின் நடவடிக்கைகளில் பெற்றோர்கள் தலையிடுவதில்லை. ஆசிரியரின் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு, எதிர்ப்புரை ஏதும் தெரிவிக்காது பணிந்து செய்துமுடித்தனர். அவ்வாறு அவர்கள் ஆசிரியருக்குத் தாமே விரும்பிப் பணிந்தனர். அதற்குக் காரணம் ஆசிரியர்களின் அறிவுத் திறத்திலும், கல்விச் சிறப்பிலும் அவர்கள் கொண்ட ஈடுபாடே எனலாம். மாணவர்கள் குருகுலக் கல்வி முடிந்த பின்னரும் தம் ஆசிரியரிடத்துப் பணிவு செலுத்தத் தவறியதில்லை. ஆசிரியரின் காலில் பணிந்து வீழ்ந்து அவர்களுடைய நல்லாசியைப் பெற்றனர். மாணவனின் முதல் கடமையே ஆசிரியரின் அருளுக்கு நன்றி செலுத்துவதுதான் என யுவாங் சுவாங் குறிப்பிட்டார். ஆசிரியர்-மாணவர் உறவில் ஓர் இணக்கமான சூழ்நிலை காணப்பட்டது. கல்விப் பயிற்சி முடிந்து இல்லம் திரும்பிய பின்னுங்கூட மாணவர்கள் ஆசிரியரை அடிக்கடி சென்று கண்டு பணிந்தனர். பாணர் தாம் பயணம் புறப்படும் முன் ஆசிரியரை அடிபணிந்து வணங்கி ஆசி பெற்றுப் புறப்பட்டதாகக் கூறுகிறார்.

மாணவனின் அன்றாட வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது? அதிகாலையில் எழுந்து தன் காலைக் கடன்களை முடித்து வழிபாட்டில் திளைத்த பின் மலர் கொண்டுவருதல், குசாப்புல் கொண்டுவருதல், வேள்விக்கு வேண்டியவற்றைச் சேகரித்தல் முதலிய கடமைகளை மேற்கொண்டனர்.

மாணவர்களுக்கு எத்தகைய கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டது? அவர்கள் என்னென்ன பாடங்களைத் தம் ஆசானிடத்துக் கற்றுத் தேர்ந்து தெளிந்தனர்? இவற்றை யுவாங் சுவாங்கின் குறிப்புகள் வாயிலாக அறிகிறோம். ஏழு வயதை

அடையு முன்னரே மாணவன் பன்னிரண்டு அத்தியாயங்களைக் கற்க வேண்டும் என அவர் குறிப்பிடுவது என்ன என்று விளங்கிக்கொள்ள முடியவில்லை. இந்தியக் குழந்தைகள் கற்ற சமஸ்கிருத எழுத்துகளை அவர் குறிப்பிட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அதைக் கற்றபின் 'ஐந்து அறிவியல்களை'க் கற்றனர்.

முதலில் அவர்கள் சொற்களின் பிரிவு, விளக்கம் பற்றிய இலக்கணத்தைப் பயின்றனர். இரண்டாவதாகத் தொழில் கலைகளைக் கற்றுத் தேர்ந்தனர். மூன்றாவதாக மருத்துவத்தில் கற்களையும், ஊசியையும் பயன்படுத்துதலைக் கற்றனர். நான்காவதாகக் கற்ற கல்வி அளவையியல் ஆகும். இறுதியில் சமயக் கல்வி அளிக்கப்பட்டது. யுவாங் சுவாங் காட்டும் குறிப்பிலிருந்து மேலே கூறப்பட்ட ஐவகைப் பிரிவாலான கல்வி பௌத்த மடாலயங்களில் அளிக்கப்பட்ட ஒன்று எனத் தெரிகிறது.

பிராமணர்கள் கற்பித்தவற்றில் வேதக் கல்விக்கே முதலிடம் அளிக்கப்பட்டது. யுவாங் சுவாங் தம் குறிப்புகளில் 'பிராமணர்கள் நான்கு வேதங்களைக் கற்றனர்' என்று குறிப்பிடுவதும், பாணர்தம் குறிப்பில் காணப்படும் கருத்துகளுமே இதற்கு எடுத்துக்காட்டு எனலாம். பாணர் காதம்பரியில் எத்தனை வகையான கல்வி சந்திர பீடனுக்கு அளிக்கப்பட்டது என்று சுட்டிக் காட்டுகிறார். சொற்கள், வாக்கியம், அளவையியல், தர்ம சாத்திரம், இராஜ நீதி, உடற்பயிற்சி, வில், அம்பு முதலான அனைத்துப் படைக்கலங்களிலும் பயிற்சி, யானையேற்றம், குதிரையேற்றம், இசைக்கருவிகளை இயக்குதல், மனிதர்களைப் பற்றிய அறிவு, ஓவியம், வான இயல், இரத்தினப் பரிசோதனை, தச்சுக்கலை, கட்டடக்கலை, அரங்க இயல், நீச்சல், இந்திரஜாலக் கதைகள், நாடகங்கள், கவிதை, மகாபாரதம், இராமாயணம், வரலாறு, பிறநாட்டு மொழிகள், பலவகை தொழிற் கலைகள் ஆகியவற்றைக் கற்பித்ததாகக் கூறப்படும் குறிப்பு அக் காலப் பாடத் திட்டத்திற்கு எடுத்துக்காட்டு. ஒருவர் அத்தனையிலும் தேர்ச்சி பெறல் என்பது இயலாத ஒன்றே. சுகநாசரின் மகன் அனைத்து அறிவியலையும், கலையையும் கற்றுத் தேர்ந்திருந்தான் என்ற குறிப்பு அறிவியல் வேறு, கலை வேறு என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

மேலே கூறப்பட்ட பட்டியலில் காணப்பட்டவை தவிர நியாயம், மீமாம்சம், வைசேஷிகம் முதலானவையும் கற்பிக்கப் பட்டன. ஆனால், நாம் ஓர் உண்மையை மனத்தில் கொள்ள

வேண்டும். இந்தியா முழுமையும் ஒரே மாதிரியான கல்வி முறை, பாடத்திட்டம் எதும் இல்லை என்ற உண்மையே அது. மாணவர்கள் தக்க குருவைத் தாமே நாடிச் சென்றனர். ஆசிரியர்கள் தாம் எந்தக் கல்வியில் தேர்ந்தவர்களோ அதைக் கற்றுத் தந்தனர். அவ்வாறு மாணவர்கள் பலரிடமும் சென்று பயின்றனர்.

ஹர்ஷரின் கால உலகம் கல்வியின் சிறப்பை நன்கு அறிந்திருந்தது. பேரரசர் ஹர்ஷரே கல்வியைப் பரப்புவதிலும் கற்பதிலும் தீவிர ஆர்வம் செலுத்தினர். வருவாயில் நான்கில் ஒரு பங்கைக் கல்வி வளர்ச்சிக்குச் செலவழித்தார் எனில் கல்வியின்பால் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை நன்கு அறியலாம். கற்றோரை அனைவரும் போற்றினர். பாணரின் ஹர்ஷ சரிதத்திலிருந்து கிராமங்களிலிருந்த சிறுவர்களும் கற்றனர் என்பதையும், பெற்றோர்களும் தக்க கவனம் செலுத்திக் கல்வியை ஊட்ட முயன்றனர் என்பதையும் அறிகிறோம். கற்றவர்கள் தம்முள் ஒன்றுகூடிக் கல்விக் கருத்துப் பரிமாற்றம் செய்துக் கொண்டனர். அவர்கள் தம்முள் அறிவுக் கதிர்களைப் பரப்பிக் கொண்டனர். 'அவையியல் சங்கம்', 'இலக்கண வகுப்பார்', 'மீமாம்சத்தில் மிகுந்த ஆர்வம்' முதலான குறிப்புகளை அதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

பாணரின் நூல்களில் பல்வேறு வகையான கோஷ்திகள் (gosthis), வியாக்கியான மண்டலங்கள் (Vyakhyana mandabas) குறித்த குறிப்புகளைக் காண்கிறோம். அத்தகைய சமூக அமைப்புகளையும், சங்கங்களையும் பற்றிய செய்திகளைப் பட்டயங்களிலும் காண்கிறோம். கோஸ்தி என்றும், வியாக்கியான மண்டலம் என்றும் அழைக்கப்பட்டவை யாவை? அவற்றை இக் கால பட்டி மன்றங்களுடனும், சிந்தனையாளர் மன்றங்களுடன் முறையே ஒப்பிடலாம். இன்றைய நாளில் அவற்றில் அறிவு பூர்வமான ஆராய்ச்சி உரைகள் நிகழ்ந்தப்பெற்று நாகரிகமும், பண்பாடும் வெளிப்படுத்தப்படுகின்றன.

பாணரின் ஹர்ஷ சரித உரைகாரரான சங்கரர், கோஸ்தி என்பது அறிவு, செல்வம், வயது, சிந்தனை அத்தனையிலும் ஒத்தவர்கள் சந்திக்கும் இடம் என உரைக்கிறார். வாத்பாயனர் கோஸ்தி என்பது நாகரிகமானவர்கள் அத்தகையோருடன், அதாவது கல்வி, நல்லியல்பு, செல்வம், வயது ஆகியவை ஒத்தவர்களுடன் இணக்கமான உரையாடல் நிகழ்த்திய இடம் என்று குறிப்பிட்டார். அவ்விடங்களில் கூடியவர்கள் பாடல் இயற்றுதல், தம் புலமையை வெளிப்படுத்துதல் முதலியவற்றில்

போட்டியிட்டனர். ஹர்ஷ வர்த்தனரின் காலத்திலும் அத்தகைய கோஸ்திகள் இருந்தன என்பதற்கான குறிப்புகளைப் பாணர் வாயிலாக அறிகிறோம்.

வித்யா கோஸ்தி என்பதைப் பற்றி அவர் தெரிவித்துப் பிரர்ம வித்தையைக் குறித்தும், அறிவு குறித்தும் உரையாடல்கள் அங்கு நடைபெற்றன என்று எடுத்துரைத்தார். எனவே, கோஸ்திகள் விவாத அரங்குகளாக விளங்கின என்பது தெரிகிறது. இலக்கிய விவாதங்கள் நடைபெற்ற இடம் காவிய கோஸ்தி என அழைக்கப்பட்டது. பிரமாண கோஸ்தி எனப்படுவது பகுத்தறிவு, அளவையியல் விவாதச் சங்கம் ஆகும். பண்டைய வீரர்களின் போர்களையும், போராட்டங்களையும் பற்றிய உரையாடல்கள் கேட்ட அவை வீரகோஸ்தி ஆகும். பாணர் ஹர்ஷரின் அவையிலிருந்து திரும்பியதும் தம் நண்பர்களையும், இணக்கமானவர்களையும் பழைய அளவையியல் சங்கம் நடைபெற்றதா என வினவ, அது தொடர்ந்து நல்ல முறையில் நடைபெற்று வருவதாக அவர்கள் தெரிவித்தனர் என்ற செய்தியைக் காண்கிறோம். பாணர் கோஸ்திகள் பலவற்றில் கலந்து கொண்டமையால் அறிவு வளர்ச்சி பெற்றதாகக் குறிப்பிட்டார். ஏனெனில் கற்றறிந்தோரே அங்கு ஒன்றுகூடி விவாதத்தை நடத்தினர்.

பாணர் அளிக்கின்ற ஹர்ஷரின் அவையில் நடைபெற்ற கோஸ்தியில் கலந்து கொள்ளத் தமக்கு அறிவுத் திறம் போதாது என்ற அடக்கமான குறிப்பின் வாயிலாக அவை அரசவையில் நடைபெற்றன எனத் தெரிகிறது. கோஸ்திகளைப் போலவே குறிப்பிடத் தக்கன விபாக்கியான மண்டலங்களும், விதக்த மண்டலங்களும் ஆகும். அவை பாணரின் நூல்களில் உரைக்கப்படுகின்றன.

சிறந்த கல்வி நிலையங்கள் பல இருந்தன. கற்றறிந்தோர் பலரும் பலவிடங்களில் இருந்தனர். யுவாங் சுவாங், போ-ஹோ-லோ நாட்டில் இருந்த சங்கிராமாவில் பிரக்ஞகாரா என்பவரைச் சந்தித்து அவரிடம் விபாசா சாஸ்திரத்தைக் கற்றார். காஷ்மீரிலிருந்த இரு அறிஞர்களில் ஒருவரிடம் கோச சாஸ்திரம், நியாய சாஸ்திரம், ஹேது வித்யா சாஸ்திரம், முதலிய சாஸ்திரங்களையும் திரிபிடகத்தையும் கற்றார். யுவாங் சுவாங் சதசாஸ்திரம் என்பதையும், காஷ்மீர மடத்தில் கற்றதோடு, நாகார்ஜுனரின் மாணவரிடம் விளக்கம் பல பெற்றார். மடிப்புர சங்கிராமத்தில் அவர் தத்துவ சத்திய சாஸ்திரம், அபிதர்ம ஞான பிரஸ்தான சாஸ்திரம் முதலான சாஸ்திரங்களைக் கற்றார்.

கன்யா குப்ஜாவிலிருந்த பத்ர விஹாரத்தில் மூன்று மாதங்கள் தங்கி வர்மவிபாஸா-வியாகரணத்தைக் கற்றார். வாரணாசியில் முப்பது சங்கிராமங்கள் இருந்தன. அங்குச் சர்வாஸ்திவாதின் பிரிவினைப் பௌத்தர்கள் 2 000 பேர் பயின்றனர். ஹிரண்யா என்னுமிடத்தில் ததகாத குப்தா, க்ஷாந்திசிம்ஹா என்பவர்களுடன் விபாசம், நியாய அனுசாரம் முதலியவற்றையும் அவர் கற்றார். பௌத்தருடைய கல்விக்கூடங்களில் நாளந்தாப் பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்கது. அதனை இப்போது விளக்கமாகக் காண்போம்.

## நாளந்தாப் பல்கலைக்கழகம்

பல்கலைக்கழகம் என்ற பொருளைத் தருகின்ற 'university' என்ற சொல் universities' என்ற இலத்தீனியச் சொல்லின் அடிப்படையில் தோன்றியது. இதனை ஆசிரியர் மாணவர் சேர்ந்த கூட்டம் (Guild) என்ற பொருளில் இடைக்கால ஐரோப்பாவில் பயன்படுத்தினர். எனவே, பல்கலைக்கழகம் என்ற கருத்து இந்தியாவிற்குப் புதியது என்று எண்ணப்படுகிறது. முழுமையும் இந்திய எண்ணங்களாலே உருவான கல்விக் கூடத்தை மேலைநாட்டுப் பொருளில் அழைப்பது எவ்வாறு பொருத்தமாகும் என்ற கேள்வி எழுந்தது. நாளந்தாவின் வரலாற்றை நுணுகி ஆராய்ந்த பின்னர் அவ்வாறு அழைப்பது பொருத்தமே என உணர்கிறோம்.

இப் பல்கலைக்கழகம் ஏற்படு முன்னர் இந்தியத் திருநாட்டில் இத்தகைய இலக்கியச் சுடர் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்தது. இத்தகைய வளம் எந்த நாட்டின் பல்கலைக்கழகமும் தோன்றுவதற்கு முன் அந்த நாடுகளில் ஏற்படவில்லை. இந்திய நாட்டின் அறிவு வரலாற்றில் 'இருண்டகாலம்' ஏதுமில்லை. ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களான சாலெர்னோ, பெலோனா, பாரிஸ் முதலியன உருவாவதற்கு முன் அங்கு அத்தகைய இருண்ட கால நிலை காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் காணப்பட்ட சூழ்நிலை பல்கலைக்கழகம் உருவாக்கத் தக்கதாக அமைந்திருந்தது. இந்தியச் சிந்தனை உச்ச நிலையினை அடைந்திருந்தது.

கி. மு. 6, 7ஆம் நூற்றாண்டுகளில் பாணினியின் காலத்தில் கல்வி கற்கும் ஒருவர் நான்கு வேதங்களுடன், ஆறு வேதாங்காங்கங்கள், வித்யா, வாகோவாக்யா, இதிகாச புராணம், ஆக்ஞான, அனவாக்ஞான, அனுபாக்ஞானம், வியாக்ஞானம், காதா, நாராசம்ஸி, பிராமண சாத்திரவித்யா, இராஸி, நட்சத்திரவித்யா

முதலான இருபத்தைந்து வகைக் கல்வி நூல்களைக் கற்றனர் என டாக்டர் ஆர். கே. முகர்ஜி அறிவிக்கிறார். புத்தரின் மறைவிற்குப் பின்னர்த் தொகுக்கப்பட்ட சுத்த பிடாகம், வினை பிடாகம், அபிதம்ம பிடாகம் முதலியவை வழக்கில் வந்தன. பௌத்தம் மெல்லத் தலைதூக்கிய வேளையில் யோகம், நியாயம், வைசேஷகம் முதலியன வளர்ச்சிபெற்றன.

நாளந்தாப் பல்கலைக்கழகத்தில் அளவையியலார் புகழ் பெற்று விளங்கினர். இடைக்கால அளவையியலைத் தோற்று வித்தவர்கள் பௌத்தர்களே ஆவர் என டாக்டர் வித்யா பூடணம் குறிப்பிடுகிறார். பௌத்தர்களின் முதல அளவையியல் படைப்பு தர்க்க சாஸ்திரம் ஆகும். இது வாசு பந்துவினால் உருவாக்கப் பட்டது ஆகும். இடைக்கால அளவையியலின் தந்தை என அழைக்கப்படும் திண்ணுகர் முதன்முதலில் அளவையியலை முறைப்படுத்தித் தொகுத்தவர். நாளந்தாப் பல்கலைக்கழகம் ஏற்பட்ட காலத்திலேயே வாழ்ந்தவர் என வித்யா பூடணம் ஹிஸ்டரி ஆப் இண்டியன் லாஜிக் என்ற தம்முடைய நூலில் குறிப்பிடுகிறார். எனவே, சிறித்துவ ஊழியின் தொடக்கக் காலங் களில் புதிய பாடத் திட்டத்தை வேதங்கள் முதலானவற்றிற் குப் பதிலாகக் கற்றனர். இதுவே மாணவர்கள் பெருமளவில் பௌத்தக் கல்விக்கூடங்களில் குழுமியதற்குக் காரணம் எனலாம். நாளந்தா வளமான இலக்கியச் செல்வத்தை அது தோன்று வதற்கு முன்பே பெற்றிருந்தது.

பல்கலைக்கழகத்தின் பின்னணி

இந்தியச் சூழ்நிலை இப்பல்கலைக்கழகம் தோன்றக் காரண மாயிற்று என்று கண்டோம். இனி எவ்வாறு பௌத்த விஹாரம் பல்கலைக்கழகமென எழுந்தது என்று காண்போம். நாளந்தாப் பல்கலைக்கழகம் என்றும் சமயத்துறைக் கூடமாகவே விளங் கியது. வடமொழியில் 'சங்கராமா' எனப்படும் இறைப்பணிக் கூடம் அமைக்கப்பட்டது. சங்கராமா அல்லது விஹாரம் எனப் பட்டவை பொதுவாகப் பௌத்தத் துறவிகள் வாழ்ந்த இடங் களைக் குறிப்பிடுவனவாக அமைந்தன. ஆராமாக்கள் என்பவை பௌத்தர்கள் கூடிய பூங்காக்கள் ஆகும். சங்கத்தவர்கள் தங்கிய இடம் 'சங்காராமா' (சங்க + ஆராமா) என அழைக்கப்பட்டது.

மழைக்காலங்களில், அலைந்து திரிந்த பௌத்தர்கள் தங்க உதவியவை விஹாரங்கள் ஆகும். மற்றைய காலங்களில் காடு களிலும், மலைபடிவாரங்களிலும், மரங்களின் நிழலிலும் அவர்கள் தங்கினர். அரசர்களும், பணம் படைத்த வாணிகர்களும், பொது

மக்களும் விஹாரங்களை எழுப்பி, மலைகளில் இறைப் பணிக்கூடங்களை அமைத்தனர். இதற்கு எடுத்துக் காட்டு நாளந்தா விக்கிரம சீலா விஹாரங்கள், எல்லோரா, கார்லா, நாசிக் முதலியன எனலாம். இந்த விஹாரங்கள் நாளடைவில் கல்வி நிலையங்களாகவும், சிறந்த பேராசிரியர்கள் தங்குமிடங்களாகவும் அமைந்தன. விஹாரங்கள் பௌத்தர்களின் நிலையான தங்குமிடங்களாக நாளடைவில் மாறின.

விஹாரங்கள் இரண்டு அடிப்படைக் காரணங்களாலேயே உருவாயின. முதலாவது அமைதியாகவும், பாதுகாப்புடனும் பௌத்தர்கள் வழிபாடு நிகழ்த்தும் எண்ணம். இரண்டாவது கற்றறிந்தவர்கள் விஹாரங்களில் தங்கும் எண்ணம். மெல்ல இரண்டாவது எண்ணமே விஹாரங்கள் தோன்றியதற்கு அடிப்படையாயின. கற்றுத் தேர்ந்தவர்கள் விஹாரங்களில் தங்கியிருந்தமையால் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் கற்றவர்களை நாடி அறிவு பெற வேண்டி வந்தனர். இறைப்பணிக் கூடங்கள் கல்வி நிலையங்களாக மாறியவுடன் மாணவர்களைக் கட்டுப்பாட்டுடன் வழிநடத்தத் தலைவர்கள் தோன்றினர். இந்தியாவைப் போலவே, ஐரோப்பாவிலும் சமயப்பணிக் கூடங்களே கல்விக் கோவில்களாக விளங்கின. ஆனால், அங்கே சமயக் குருமார்களின் கையினின்று கல்வி பிரிக்கப்பட்டு, சமயத்துறையல்லாதவர்களின் பொறுப்பில் விடப்பட்டது. ஆனால், இந்தியாவில் அத்தகைய நிலை ஏற்படவில்லை. இதுவரை உலகைத் துறந்தவர்களுக்கு மட்டும் திறந்துவைக்கப் பட்ட விஹாரங்களின் வாயில்கள் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப அனைவருக்கும் திறந்துவைக்கப்பட்டன. இந்த மாறுதல்தான் நாளந்தாப் பல்கலைக்கழகம் தோன்றுவதற்கு வித்திட்டதைக் காண்கிறோம்.

## நாளந்தாவின் எழுச்சி

'நாளந்தா' என்ற பெயர் ஏன் ஏற்பட்டது? சீனப்பயணி யுவாங் சுவாங்கிற்கே நாளந்தா என்ற பெயர் எப்படி ஏற்பட்டது என்பது குறித்த செய்திகள் வியப்பை அளித்தன. "இங்கிருந்து வடக்கில் 30 லி (li) தொலைவு செல்லுகையில் நாம் நாளந்தா சங்காராமாவை அடைகிறோம். இந்தச் சங்காராமாவிற்குத் தெற்கே, மாஞ்சோலையின் நடுவில் குளம் ஒன்று இருந்ததாகப் பழைய குறிப்புகள் அறிவிக்கின்றன. இக் குளம் நாகா நாளந்தா என அழைக்கப்பட்டது. அதற்கு அருகில் கட்டப்பட்டது சங்காராமா. எனவே, நாகா என்ற பெயரைக் கொண்டிருக்கிறது" என யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார்.

யுவாங் சுவாங்கிற்குப் பின்னர் இந்தியாவிற்கு வருகைபுரிந்த இட்சிங் என்ற பெயர் கொண்ட மற்ருெரு சீனப் பயணி நாகாநந்தா என்ற பெயரிலிருந்து நாளந்தா என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிருர். மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்த பேராசிரியர் பீல், நா-அலம்-தா (கொடுப்பதற்குப் போதுமானது இல்லை) என்ற பொருளின் அடிப்படையில் உருவானதாகக் குறிப்பிடுகிருர்.



படம். 14
நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் இன்றைய தோற்றம்

பௌத்த சமய நூல்கள் பல புத்தரின் காலத்தில் நாளந்தா வளமிக்க ஊராக விளங்கிற்று என்று குறிப்பிடுகின்றன. நாளந்தா கல்வி நிலையமாக மாறுவதற்கு முன்னர்ச் சிறப்புடைய இடமாக விளங்கியது. புத்தருக்கு முன் மகாவீரர் கோசலையைச் சந்தித்ததும் இங்கேதான். நாளந்தா இராஜ கிரஹத்திற்கு அருகில், அதாவது ஏழுமைல் தூரத்தில் விளங்கியமையால் அசோகர் ஆலயம் ஒன்று அமைக்கவும், விஹாராம் கட்டவும் இதனைத் தேர்ந்தெடுத்தார். இட்சிங்கின் குறிப்பிலிருந்து 'இந்த இடம் வெப்பம் மிகுந்ததாக விளங்கியமையால், பிக்குகள் நிறைய உடைகள் அணிய வேண்டியிருக்கவில்லை; எனவே, மகதத்தில் இருந்த எல்லா இடங்களைக்காட்டிலும் நாளந்தா, பல்கலைக் கழகம் அமைக்க ஏற்றதாய் விளங்கிற்று' என அறிகிருேம்.

நாளந்தாவில் சங்காராமாவை அமைத்தவர் முதலாம் குமார குப்தர் என அறியப்பட்ட சக்ராதித்தியர். அதன் பின் புத்த குப்தராஜாவும், ததா கதா குப்த இராஜாவும் அதனை விரிவு படுத்தினர். அதற்குப் பின் பாலாதித்தியர் வடகிழக்கில் ஒரு சங்காராமாவை உருவாக்கினர்.

நாளந்தாவைப் பற்றிய இட்சிங்கின் குறிப்பு இது. 'இந்த அலாம் (நாளந்தா) பழைய அரசர் ஸ்ரீ சக்ராதித்தியரால் வட இந்தியாவைச் சேர்ந்த இராஜாபாஜா என்பவரின் பொருட்டுக் கட்டப்பட்டது. இதைக் கட்டத் தொடங்கியபின், மற்றவர்களால் இடையூறு ஏற்பட்டது. ஆனால், அவருடைய வாரிசுகள் அதனை முடித்தனர். ஜம்புத் தீபத்தில் அதனைக் கட்டிப் பெருமைப்படத் தக்கதாக அமைத்தார். இக் கட்டடம் நகரத்தைப் போல் நாற்சதுரமானது; நான்கு பெரிய வழிகள் கொண்டது. ஒவ்வொன்றிலும் மூன்று மாடிகள் உள்ளன. ஒவ்வொரு மாடியும் எட்டடி உயரம் உள்ளது. ஆகவே, யுவாங் சுவாங்கும், இட்சிங்கும் குறிப்பிடுவதிலிருந்து நாளந்தாவில் இறைப்பணிக் கூடத்தை அமைத்தவர் சக்ராதித்தியர் எனத் தெரிகிறது, இருவருமே கட்டட உருவாவதற்குப் பொதுமக்களின் இடையூறு ஏற்பட்டது என்று குறிப்பிடுகின்றனர்.

நாளந்தா உருவாவதில் பொறுப்புடைய அரசர்கள் யாவர்? யுவாங் சுவாங் அளிக்கும் குறிப்பு வருமாறு:

சக்ராதித்யர்—குமாரகுப்தர் I (கி. பி. 415 முதல் 455வரை)
புத்த குப்த ராஜா—ஸ்கந்த குப்தர் (கி.பி. 455)
ததா கதாகுப்தர்—புரு குப்தர் (கி. பி. 467)
பாலாதித்தியராஜா—பாலாதித்தியா—நரசிம்ம குப்தர் (கி. பி 470)
மத்திய இந்திய அரசர்—கன்னோஜி அரசர்.

யுவாங் சுவாங், சக்ராதித்திய் இப் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தினர் என்று குறிப்பிட்டபோதிலும், எப்போது ஏற்படுத்தினர் என்று குறிப்பிடவில்லை. கி. பி. 415 அல்லது 416-க்கு முன்னர் இப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப் பட்டிருக்காது என்றே கருதப்படுகிறது. ஹர்ஷர் நாளந்தாவில் பெரிய சங்காராமாவைக் கட்டியதோடு சுற்றிலும் உயர்ந்த மதில்களும், செப்புத் தகடுகளும் கொண்ட ஒரு விஹாரத்தையும் அமைத்தார்.

பிற வகைகளிலும் ஹர்ஷர் இப் பணியில் உதவினர். தினமும் நாற்பது பிக்குகளுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தார். ஹர்ஷர் நாளந்தாவின்மீது மிகுந்த பற்றும் மரியா

தையும் வைத்திருந்தார். நாளந்தாவின் கல்விச் சிறப்பை உயர்த்திப் பேசினர். ஹீனயான சமபத்தவராகிய அவர் ஒரிஸ்ஸாவில் பயணம் செய்தபோது, மஹாயான பௌத்தர்களை நாளந்தாவிலிருந்து அனுப்பிவைக்கும்படி நாளந்தாவிற்கு எழுதினர்.



படம் 15.
நாளந்தாவின் மூலைக் கோபுரமும், ஸ்தூபியும்

நாளந்தாவின் வளர்ச்சியில் பங்கு கொண்டவர்களில் கன்னோசியை ஆண்ட மௌகாரிகளும் குறிப்பிடத் தக்கவர் ஆவர். பூர்ணவர்மன் 80 அடி உயரமுள்ள புத்தரின் செப்புப் படிமத்தை அளித்தார் என யுவாங் சுவாங் கூறுகிறர். ஹர்ஷருக்குப் பின் நாளந்தாவின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அரசர் யாரும் வரலாற்றில் அறியப்படவில்லை. பாலர் அரசர்களில் தர்ம பாலதேவர் ஏதேனும் ஒரு வகையில் உதவியிருக்கக் கூடும் என்பதனைச் சமீப காலத்தில் கிடைத்த செப்புப் பட்டயம் ஒன்று மெய்ப்பிக்கிறது.

தேவ பாலதேவரின் நாளந்தாச் செப்புப் பட்டயத்திலிருந்தும் கோஸ்ரவாப் பௌத்தப் பட்டயத்திலிருந்தும் ஹர்ஷர் அளித்த உதவிகளை ஒத்த உதவிகள் தேவ பாலரின் காலத்திலும்

அளிக்கப்பட்டன என்ற முடிவிற்கு வருகிறோம். இந்திய அரசர்கள் மட்டுமன்றி அக்காலத்திய சுமத்திரா, ஜாவாவின் அரசனிடமிருந்தும் உதவி பெறப்பட்டது. முதலாம் மஹிபாலர் மகதத்தைக் கைப்பற்றி உதவினர். பாலர் வமிசத்தின் கடைசி அரசரான கோவிந்த பாலதேவரும் நாளந்தாவைப் போற்றிக் காத்தவர். இவர் கி. பி. 1161 முதல் 1197 வரை ஆட்சி செலுத்தினர் என்று கருதப்படுகிறது.

யுவாங் சுவாங்கின் குறிப்பிலிருந்து குறைந்தது ஆறு கல்லூரிகள் நாளந்தாவில் இருந்தன எனத் தெரிகிறது. முதலாம் குமார குப்தரில் தொடங்கி ஹர்ஷர்வரை ஒவ்வோர் அரசரும் நாளந்தாவில் ஒரு விஹாரமோ, சங்காராமமோ அமைத்துள்ளனர். சுவர்ண தீபாவின் அரசன் கட்டிவைத்த விஹாரத்தைச் சேர்த்தால் குறைந்தது ஏழு விஹாரங்கள் இருந்தன. பாலபுத்திரருக்குப் பின், நூறாண்டுகள் கழித்து இட்சிங் நாளந்தாவில் விஹாரம் ஒன்று அமைக்க எண்ணியபோது எட்டுக் கல்லூரிகள் (கூடங்கள் என இட்சிங் குறிப்பிடுகிறர்) 300 அறைகளுடன் விளங்கின.

சங்காராமக்கள் ஒரே வரிசையில் அமைக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை மூன்று முதல் நான்கு மாடி உயரம் கொண்டவை. திபெத்தியக் குறிப்புகளிலிருந்து நாளந்தாவில் தர்மகஞ்சா என அழைக்கப்பட்ட நூலகம் இருந்தது எனவும் இரத்தின சாகரம், இரத்திதைதி, இரத்தின ரஞ்சகா என மூன்று கட்டடங்கள் இருந்தன என்றும் அறிகிறோம். நாளந்தா முழுமையும் செங்கற் சுவர்களால் கட்டப்பட்டிருந்தன.

### நாளந்தாவில் அளிக்கப்பட்ட கல்வி

நாளந்தாவில் சேருமுன் ஒருவர் பழையன புதியனவற்றை ஆழ்ந்து கற்றிருக்க வேண்டும் என யுவாங் சுவாங் குறிப்பிடுவது வேதங்கள், உபநிடதங்கள் முதலியவற்றையும் பௌத்த சமய ஹீனயான, மஹாயானப் படைப்புகள் முதலியவற்றையும் குறிக்கின்றன என்பர். நாளந்தாவில் பயிலச் சேருமுன் பிற இடங்களில் கல்வி பயின்று வந்தவர்கள் நாளந்தாவில் தக்க முறையில் தேர்வு செய்யப்பட்டனர். வெளியிலிருந்து வந்தவர்கள் தேர்வில் தேறவும் நாளந்தாவில் பட்டம் பெறவும் ஆவலுடன் இருந்தனர் என்பதனை யுவாங் சுவாங், இட்சிங் ஆகியோரின் பதிவுகள் வாயிலாக அறிகிறோம்.

எப்படித் தேர்வுகள் நடத்தப்பட்டன என்பது சுவையான செய்தி. வாயிற்காப்பாளர்களே தேர்வு நடத்தினார்களாம். வாயிற்காப்பாளர் நன்கு கற்றறிந்தவர்கள். அவர்கள் மிகவும் கடினமான கேள்விகளைக் கேட்டார்கள். அவர்களுடைய வெற்றி வாயிற்காப்பாளரை நிறைவு செய்வதில்தான் இருந்தது. இத்தகைய முறை பிற பகுதிகளிலிருந்து வந்தவர்கள் அல்லது புதியவர்களுக்கே பின்பற்றப்பட்டது.

சில பாடங்களை அனைவரும் கட்டாயமாகப் பயில வேண்டியிருந்தது. நாளந்தா இறையியல் அமைப்பாக விளங்கியமையால் இறையியல் எல்லா மாணவர்களுக்கும் கட்டாயப் பாடமாக விளங்கியது. இறையியலும், தத்துவமும், அளவையியலுடன் தொடர்புடன் விளங்கின. பௌத்த, சமண, சாங்கியப் பிரிவினர் தமக்கெனத் தனித்தனி அளவை முறைகளைக் கொண்டிருந்தனர். நாளந்தாவில் பயிலும் மாணவன் அனைத்து அளவை முறைகளையும் கற்கவேண்டியிருந்தது. ஏனெனில் பிற முறைகளுக்கு எதிராகப் பௌத்த முறையை அவன் ஆதரித்து வாதிட வேண்டியிருந்தது.

கி. பி. 400 வரை அளவையியல், தத்துவத்துடனும் சமயத்துடனும் ஒன்றியிருந்தது. திண்ணாகரின் வருகைக்குப் பின் அளவையியல் சிறப்புப் பெற்றது. நியாயத்வாரா, நியாய பிரவேசா, பிராமணசமுச்சயா ஆகியவை அவருடைய குறிப்பிடத் தக்க படைப்புகளாகும். திண்ணாகரின் படைப்புகள் இவையென எட்டுப் படைப்புகளை இட்சிங் அளிக்கிறார். இறையியல், தத்துவம், அளவையியல், இலக்கணம் முதலானவை தொடர்பான கலைக் களஞ்சியங்களைத் தொகுப்பித்தலும் பல்கலைக் கழகத்தின் பணியாயிற்று.

நாளந்தா அளவையியலுக்கு அளித்த சிறப்பினைக் குறிப்பிடுகையில் சாந்த ரக்ஷிதா என்ற எட்டாம் நூற்றாண்டின் அளவையியலாரைக் குறிப்பிட்டாக வேண்டும். அவர் இருபத்தேழு வகைகளைக் குறித்து அறிந்தார். சாங்கியா, நியாயா, வைசேஷிகா, மீமாம்ஸா, ஜைன முதலானவற்றை அவர் உற்று நோக்கினார். மிக அழகிய நடையில் அவர் படைப்புகளை உருவாக்கியிருப்பது குறிப்பிடத் தக்கது.

கமலசிலா என்பவர் திபெத்தியர்களால் நாளந்தாவின் ஆசிரியர் என அறியப்பட்டவர். அவர் தத்துவ ஞானிகள், அளவையிலார் ஆகியோரின் முழுவரலாற்றை அளிக்கிறார். பதினொன்றாம் நூற்றாண்டில் தீபம்கார ஸ்ரீஞானர் என்பவர்

சாந்தரக்சிதர் போலச் சிறப்புடன் திகழ்ந்தவர். மாணவர்கள் வானநூல் கல்வியும் கற்றனர் என்பதனை யுவாங் சுவாங், இட்சிங் ஆகியோர் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். நாளந் தாவில் வானவியல் நிலையம் ஒன்று இருந்தது. நாளந்தாவில் இருந்த நீர்க்கடிகாரம் காலத்தைக் காட்டியது.

திபெத்தியப் படைப்புகள் அளிக்கும் குறிப்பிலிருந்து நாளந்தா தாந்திரிகக் கல்வி அளிக்குமிடமாக விளங்கியது என அறிகிறோம். தாந்திரிக முறையைப் பயின்றவர்கள் இந்துக் களும் பௌத்தர்களும் ஆவர். இதுவரை நாம் பார்த்த வற்றிலிருந்து நாளந்தாவில் அறிவுக் கலையின் அனைத்துப் பிரிவு களும் பயிற்றுவிக்கப்பட்டன என்று காண்டோம். நாளந்தாக் கல்வி புதிய கலை வளர்ச்சிக்கும் துணை புரிந்தது.

நாளந்தா அறிஞர்கள்

நாகார்ஜுனரும், ஆரிய தேவரும் நாளந்தாவுடன் தொடர் புடையோர் என்று கருதப்பட்டாலும், அவர்களுக்குப் பல்கலைக் கழகத்துடன் தொடர்பில்லை என்றே கருத வேண்டியுள்ளது எனச் சங்காலியா குறிப்பிடுகிறார். பாலாதித்தியர் தாம் பௌத்தராக மாறியதற்கு அறிகுறியாக நாளந்தாவில் பெரும் சங்காராமா ஒன்றினை அமைத்திருக்கக்கூடும். ஆசங்கர், வாசு பந்து ஆகியோர் நாளந்தாவில் பணிபுரிந்தனர். மற்றொரு சிறந்த அறிஞர் திண்ணாகர் ஆவார். சுதுர் ஐபாவுக்கும் நாளந்தா அறிஞர் களுக்கும் இடையேயான போட்டியினால் திண்ணாகரை வர வழைத்தனர். சீனரும், ஜப்பானியரும் திண்ணாகரைப் போற்றி னர். திண்ணாகருக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடத் தக்கவர் ஜெயதேவர். தாரநாத்தைத் தவிர யுவாங் சுவாங்கோ, இட்சிங்கோ ஜெயதேவர் பெயரைக் குறிப்பிடவில்லை.

ஜெய தேவருக்குப் பின் வந்தவர் சந்திர கீர்த்தி ஆவார். தர்மபாலருக்கு முன் குணமதி, ஸ்திரமதி, பிரபாமித்திரா, ஜினாமித்திரா ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். தர்மபாலர் தமிழகத்தில் காஞ்சித் திருநகரில் பிறந்த அறிஞர். காஞ்சிமா நகர் அறிஞர்களை உருவாக்கி அன்றும் உலகிற்கு அளித்தது. பின்னர் நாளந்தாவின் சிறப்புமிக்க அறிஞராக நாம் காண்பவர் சீலபத்திரர் ஆவார். சீலபத்திரர் பல்கலைக் கழகத் தலைவராக விளங்கியமையால் அப்போது தர்மபாலர் மறைந்திருக்க வேண்டும் என்று கருதவேண்டியிருக்கிறது.

சீலபத்திரர் ஆறும் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அல்லது ஏழாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில்

வாழ்ந்தார். தர்ம கீர்த்தி நாளந்தாவிற்கு அரும்பணியாற்றினார் என்று நம்பப்படுகிறது. தர்ம கீர்த்திக்கும், சங்கரருக்குமிடையே நடைபெற்ற விவாதத்தில், தர்மகீர்த்தி தோல்வி அடைந்தார் எனில் கங்கையில் அவர் விழ வேண்டுமெனவும், சங்கரர் தோற்றார் எனில் அவர் விழ வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. சங்கரர் தோற்றார். ஆனால் அவர் தம் சீடர் பட்டாச்சாரியாரைத் தொடரச் செய்தார்.

சாந்தி தேவர் என்பவர் எட்டாம் நூற்றாண்டின் அரை இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர். சாந்தரக்ஷிதா என்பவர், மற்றோர் அறிஞர். சாந்தரக்ஷிதாவைப் பின்தொடர்ந்தவர் பத்மசாம்பவா ஆவார். 'தந்திரா''வில் தேர்ந்தவராக நாளந்தாவில் விளங்கியவர் கம்லசிலர் ஆவார். அவர் கி. பி. 720-780-ல் வாழ்ந்திருக்கக் கூடும். சந்திரோ கோமின் என்பவரும் நாளந்தாவில் வாழ்ந்த அறிஞரில் ஒருவரே. சுமார் அறுபது நூல்களை எழுதியவர் அந்த அறிஞர். புத்த கீர்த்தி, நாளந்தாவின் புகழ்மிக்க அறிஞராக விளங்கியதோடு, முஸ்லீம்களால் அழிக்கப்படும்முன் வரலாற்றில் அறியப்பட்ட புகழ்மிக்க கடைசி நாளந்தா அறிஞராகவும் திகழ்ந்தார்.

ஹர்ஷ வர்த்தனர் நாளந்தா அறிஞர்களின் சிறப்பை உணர்ந்து போற்றியவர். நாளந்தா அறிஞர்கள் மஹாயானம், ஹீனயானம் ஆகிய பௌத்தப் பிரிவுகளில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தனர். அவரால் கூட்டப்பட்ட கன்யாகுப்ஜப் பேரவைக்கு நாளந்தாவிலிருந்து குறைந்தது 1,000 பண்டிதர்களாவது வந்து கலந்துகொண்டனர். நாளந்தா அறிஞர்கள் தக்கவர்களுக்குத் தக்க சிறப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைவழி நின்றவர்கள் ஆவர்.

நாளந்தா மாணவர்களின் வாழ்க்கையைக் குறித்து அறிய இட்சிங், யுவான் சுவாங் ஆகியோரின் குறிப்புகளே உதவுகின்றன. மாணவர்கள் வடமொழியில் தேர்ச்சி பெற வேண்டியிருந்தது. வடமொழி இலக்கணம் கற்பதைச் 'சபத வித்யா' என அழைத்தனர். இதுவே தலையாய கல்வியாய் முதலில் அமைந்தது. பின்னர்ப் பாணினியின் இலக்கணத்தைப் பயின்றார்கள், இட்சிங் இந்தியக் கல்வி முறைகளை ஆராய்ந்து குறிப்புகள் எழுதி வைத்துள்ளார். மாணவர்கள் முதலில் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் சித்திராஸ்து என்பார் அவர். நாற்பத்தொன்பது எழுத்துகள் கொண்ட அகர வரிசையையும், சுமார் 10,000 சொற்களையும், 300 ஸ்லோகங்களில் அமைத்து மாணவர்கள் கற்றுக்கொள்வர்.

பாணினியின் ஸ்லோகங்கள், தாட்டு (Dhatu), மூன்று கிலாக்கள் ((Khisal), ஜெயாதித்தியர் எழுதிய காசிகாவிர்த்தி (Kasikavirthi) என்ற இலக்கண விளக்கவுரை நூலில் உள்ள 18,000 ஸ்லோகங்கள் முதலியவற்றைக் கற்றனர். பின்னர் மாணவர்களுக்குக் கட்டுரை, உரைநடை, செய்யுள் முதலிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஹர்ஷர், காலக் கல்வி முறை சிறந்து விளங்கிற்று என்பதனை இதன் வாயிலாக அறிகிறோம்.

மாணவர்கள் கீழ்க்கண்ட ஐந்து வகைப் பாடங்களைக் கற்றனர். அவையாவன (1) சப்தவித்யா என்ற இலக்கணம், அகராதி நூல்கள் பற்றிய பாடம், (2) சில்பாஸ்தானவித்யா என்ற அறிவியல், கலைத்தொழில் பற்றிய கல்வி, (3) சிகித்ஸவித்யா என்ற மருத்துவக் கல்வி, (4) ஹேதுவித்யா என்ற அளவைக் கல்வி, (5) அத்யாத்மவித்யா என்ற பொருளியல் தத்துவம். இப் பாடங்களைப் பயில்வதற்கு உதவிய பாட நூல்களையும் இட்சிங் குறிப்பிட்டுள்ளார். ஹேதுவித்யாவிற்கு நாகார் ஜுனர் எழுதிய நியாய துவாரதாக் சாத்திரம் பாடநூலாக விளங்கியது. மேலே குறிப்பிட்ட ஐந்து பாடங்களிலும், மாணவர்கள் கற்றுத் தேர்ந்தபின் சிறப்புப் பாடத்தைத் தேர்ந் தெடுத்துத் தொடர்ந்து பயின்றனர். அவற்றுடன் வான நூல், கணக்கு, மருத்துவம், வழிபாட்டு நூல் ஆகியவற்றிலும் மாணவர் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்தனர்.

சிறப்புப் பாடங்களில் ஒன்றாக வியாகரணம் விளங்கியது. சூர்னியின் 24,000 ஸ்லோகங்கள் கொண்ட மகாபாஷ்யம், மகாபாஷ்யத்துக்குப் பார்த்திரிஹரியினால் எழுதப்பட்ட விளக்க உரையான 25,000 ஸ்லோகங்கள் கொண்ட பார்த்ரிஹரி சாஸ் திரம், வாக்யபாதியா, பைனு என்னும் 14,000 ஸ்லோகங்கள் கொண்ட சமஸ்கிருத வேதம், திரிபிடகம், அஸ்வகோஷரின் புத்த சரித காவியம், யோகா சாரிய சாஸ்திரம், அசங்காவில் எட்டுச் சாத்திரங்கள், ஜுனுவின் எட்டுச் சாத்திரங்கள், அபிதர்மாவில் ஆறு பதங்கள், ஆகமங்களில் நான்கு நியாயங்கள் முதலியன குறிப்பிடத்தக்க நூல்கள்.

நாளந்தாவில் இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வி அளிக்கப் பட்டமையால் பேராசிரியர் சங்காலியா அதனைப் 'பல்கலைக் கழகங்களின் பல்கலைக் கழகம்' என்று அழைக்கிறார். இன்றைய நாளில் ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் மாணவர்கள் பெறுகின்ற சிறப்பு அன்றைய நாளில் நாளந்தாப் பல்கலைக் கழக மாணவர் களுக்குக் கிட்டியது. எனவேதான், உலகின் பல பகுதி களினின்றும் மாணவர்கள் நாளந்தா வந்து சேர்ந்தனர்.

நாளந்தாவில் எங்ஙனம் கல்வி போதிக்கப்பட்டது? யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து ஆசிரியர் அருகமர்ந்து மாணவர்க்குப் பயிற்சி அளித்தனர் என அறிகிறோம். தனிப் பயிற்சிக் கல்வி மட்டுமன்றி மாணவர்கள் காலை முதல் மாலை வரை விவாதிப்பதன் வாயிலாக ஐயம் தெளிவு பெற்றனர். சில பாடங்களுக்கு விரிவுரை மட்டும் நிகழ்த்தப்பெற்றது. இந்த விரிவுரைகள்கூடப் பல்வேறு நேரங்களில் விவாதிப் பதற்குப் பயன்படுத்தப்பட்டன.

மாணவர்கள் ஏதேனும் எழுதப் பழகினர்களா எனில் படி யெடுத்தலைச் செய்தலே குறிப்பிடத்தக்க எழுத்து வேலை என்று கருதப்படுகிறது. இதற்குப் பட்டய ஆதாரங்கள் உள்ளன. நாளந்தாவில் படியெடுக்கப்பட்ட கையெழுத்துச் சுவடிகளை யுவாங் சுவாங்கும், இட்சிங்கும் இந்தியாவிலிருந்து கொண்டு சென்றனர். தேர்வு என்பது கேள்வி கேட்டு விடை பெறுத லாகவே விளங்கிற்று. பத்து மாணவர்களுக்கு ஏழு அல்லது எட்டுப் பேர்தான் தேறினர் என்பதிலிருந்து தேர்வு கடின மானதாக இருந்தது என அறிகிறோம். பௌத்த சமயத்திற்கு மாறியவர்கள் பல்கலைக் கழகத்தில் சேரத் தேர்வு எதிலும் கலக்க வேண்டியிருக்கவில்லை.

நாளந்தாவில் மாணவராகச் சேரக் குறைந்தது இருபது வயதாவது ஆக வேண்டும். பிக்குகள் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதில் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தனர். மாணவர்கள் ஆசிரியர்களைத் தந்தை எனவும், ஆசிரியர்கள் மாணவர்களை பிள்ளைகள் எனவும் கருதினர். ஆனால், ஆசிரியர் மாணவர் உறவு, ஆண்டை பணியாள் உறவை, உயர்ந்தோர் தாழ்ந்தோர் உறவை, நோயாளி செவிலி உறவை ஒத்திருந்தது.

பல்கலைக் கழக மாணவனின் உடை பிக்கு ஒருவரின் உடையை ஒத்திருந்தது. மாணவர்கள் ஒரு நாளைக்கு மூன்று முறை உணவு அருந்தினர். மாணவர்களுக்கு ஒழுக்கம் இன்றி யமையாததென வலியுறுத்தப்பட்டது. மாணவர்களுக்கு ஒழுக் கக்கேடு நேரிட்டால் மாணவர்கள் சங்கத்திலிருந்து விரட்டப் பட்டனர். மாணவர்கள் பொழுதுபோக்கிற்கு விளையாட்டுகள் விளையாட அனுமதிக்கப்பட்டனர். யானையேற்றம், குதிரை யேற்றம் முதலானவைகளில் தேர்ந்தனர். நாளந்தா மாணவர்கள் சூதாட்டத்திலும் தேர்ந்திருந்தனர். நாளாந்தாவில் இருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 4,000 என்று எண்ணப்படுகிறது. நாளாந்தா பௌத்தப் பல்கலைக் கழகமாயி னும், அது பிற சமயத்தவரையும் சேர்த்துக் கொண்டது. நாளந்

தாவில் குறிப்பிட்ட கல்வி என்றில்லாமல் அனைத்துக் கல்வியும் அளிக்கப்பட்டன. நாளந்தாவில் பயின்ற மாணவர்கள் வேலை வாய்ப்பின் பொருட்டுக் கற்கவில்லை. அவர்கள் அறிவு வளர்ச்சியின் பொருட்டே கல்வி பயின்றனர்.

ஆசிரியரின் தனி ஆளுமை மாணவரின் நோக்கில் மாறுதலை விளைவித்தது. நாளந்தாக் கல்வியில் நன்மை, தீமை ஆகிய இரு கூறுகளும் உள்ளன. நாளந்தாப் பல்கலைக் கழகம் அறிவுச் சுடரை ஏற்றியது. இச் சுடரொளி ஜாவா, சுமத்திரா, சீனு, ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்தும் மாணவர்களை ஈர்த்தது.

### நாளாந்தாவின் அழிவு

நாளந்தா முகம்மதியர்களால் கி.பி. 1199-ல் அழிக்கப்பட்டது என்பதற்கு நேரடியான ஆதாரம் ஏதும் இல்லை. ஆனால், முகம்மதியர்களால் அழிக்கப்பட்டது என்று கருதத்தக்க ஆதாரங்கள் உள்ளன. நெருப்பினுல் நாளந்தா அழிக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதனை அங்குச் சென்றபோது கிடைத்த சாம்பல் குவியல்கள் மெய்ப்பிக்கின்றன. முஸ்லிம் படையெடுப்பே அழிவிற்கான காரணமாம்.

# 13. ஹர்ஷரின் காலக் கலை

ஹர்ஷரின் காலக் கலையினைத் தனியே பிரித்துத் தனித்த ஒரு கூறாகக் குறிப்பிட்டுக் கூற முடியாது. ஹர்ஷரின் காலத்தில் இந்தியாவில் நிலவிய கலைகளும், அவற்றின் வளர்ச்சியும் குப்தர் காலக் கலைக் கூறுகளுடன் தொடர்புடையன. எனவே, குப்தர் கலைக்கும், ஹர்ஷரின் காலக் கலைக்கும் இடையே ஒரு கோடிட்டுப் பிரித்துக் காட்ட முடியாது. குப்தர்களின் காலம் கலை வளர்ச்சியில் உச்ச நிலை ஒன்றினை எட்டிய காலம். அக்காலத்தில் இலக்கியம் மட்டும் இல்லை; கலையும் இமயச் சிகரமளவிற்கு ஓங்கி உயர்ந்து காணப்பட்டது. 'இந்தியா' என்ற பெயரில் சிறு மாறுதல் நேரிட்டுப் 'பரந்த இந்தியா' என்று குறிப்பிடத்தக்க அளவிற்குப் பண்பாடு கடல் கடந்தும் பரவித் திளைத்தது.

குப்தர்களைப் போலவே ஹர்ஷ வர்த்தனரும் எல்லாச் சமயங்களையும் ஒன்றேபோல் நடத்தினர். எல்லாவற்றையும் ஆதரித்தார் என்று சுருக்கமாகக் கூறலாம். வைணவம், சைவம், சமணம், பௌத்தம் முதலான அனைத்தும் பெற்ற ஆதரவினால் சமயத்தை ஒட்டிக் கலைகளும் வளர்ந்தன.

### வீடுகளும் வாழுமிடங்களும்

யுவாங் சுவாங் மிகவும் பயனுள்ள வகையில் கட்டடங்கள், வீட்டுப் பயன்படு பொருள்கள் முதலானவை பற்றிய விளக்கம் ஒன்றை அளிக்கிறார். அதன் வாயிலாகக் கட்டடங்கள் அமைக்கப்பட்ட முறையினைப் பற்றி அறிய நமக்கு வாய்ப்புக் கிட்டுகிறது.

நகரின் நாற்புறங்களையும் சுற்றிப் பாதுகாப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. அவை உயரமாகவும், அகலமாகவும் விளங்கின. நகரச் சுற்றுச் சுவர்கள், வீடுகள் ஆகியவற்றை அமைக்கச் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. தாழ்வான ஈரம் மிக்கப் பகுதிகளில் மூங்கில்களையும் மரங்களையும் பயன்படுத்தினர். வீடுகள் பெரிய அறைகளையும் மேற்கூரைகளையும் கொண்டிருந்தன. அவற்றின்மேல் மரத்திலான தட்டையான கூரைகளை உடைய அறைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

தரையில் சுட்ட அல்லது சுடாத ஓடுகள் பாவப்பட்டிருந் தன. அவை அதிக உயரமின்றிச் சீனத்துப் பாணியிலிருந்தன. தரையைச் சாணமிட்டு மெழுகினர். பருவ கால மலர்களால் இல்லங்களை அலங்கரித்தனர். பௌத்த சமய மடங்களும் ஆலயங்களும் சிறப்புமிக்க அழகிய கட்டடக் கலையழகு மிக்கன வாக விளங்கின. மடங்களின் நாற்புறங்களிலும் உயரமான கோபுரங்கள் எழுப்பப்பட்டிருந்தன. சாதாரண மக்களுடைய வீடுகளின் உட்புற அறைகளின் அளவுகள் வேறுபட்டிருந்தன. கட்ட அமைப்பு, மாடிகள் கட்டுதல், அறைகள் அமைத்தல் முதலியவற்றிற்குக் குறிப்பிட்ட ஒழுங்கு முறைகள் எவற்றையும் பின்பற்றவில்லை. கதவுகள் கிழக்கு நோக்கி அமைக்கப் பட்டிருந்தன.

கயிற்றினால் கட்டப்பட்ட நாற்காலிகளைச் செல்வர்களும், உயர்குடியினரும் பயன்படுத்தினர். அரச குலத்தவரும், அதிகாரிகளும், உயர்குடியினரும் நாற்காலிகளை வெவ்வேறு முறைகளில் அலங்கரித்துக்கொண்டனர். சாதாரண அதிகாரிகள் தங்களுடைய விருப்பிற்கு ஏற்ப இருக்கைகளின் சட்டங்களை வேலைப்பாடு மிக்கதாக அலங்கரித்துக்கொண்டனர். வீடுகள், அங்குக் காணப்பட்ட அலங்காரப் பொருள்கள், அரசரின் அரியணை ஆகியவை பற்றி யுவாங் சுவாங் விளக்குவதைப் போலவே, பாணரும் குறிப்பிட்டுள்ளார்.

அரசரின் அரியணை வைக்கப்பட்டிருந்த மேடை சிறிய முத்து களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விலையுயர்ந்த துணியினால் அரியணையின் இருக்கை அழகு செய்யப்பட்டிருந்தது. அதன் அருகில் காணப்பட்ட தங்க வேலைப்பாடு மிக்க விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட சிறிய கால் வைக்கும் முக்காலி பற்றிப் பாணர் ஹர்ஷ சரிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் கட்டட அமைப்பு, அதன் கலைச் சிறப்பு ஆகியவற்றை யுவாங் சுவாங்கின் விளக்கத்தின் வாயிலாக அறிகிறோம். கட்டடங்கள் பல மாடிகளையும், சிறந்த வேலைப்பாடு மிக்க கோபுரங்களையும் கொண்டு விளங்கின. மேலே கட்டப்பட்டிருந்த அறைகளும், அவற்றின்மீது இருந்த கோபுரங்களும் வானை முட்டின. கட்டடங்களின் வெளிப் புறங்கள் மிக அதிக அளவில் சிறப்பான வேலைப்பாடுகள் கொண்டிருப்பினும், உட்புறம் மென்மையும் அழகும் கொண் டிருந்தன. தீ உமிழும் பிராணியின் உருவமும் வண்ணமிக்க அழகிய வளைவு ஓரங்களும், பழுப்புச் சிவப்பு வண்ணத் தூண்

களும் வேலைப்பாடு மிக்கவையாக விளங்கின. மிகவும் அழகு படுத்தப்பட்ட சிறு தூண்களை வரிசையாக அமைத்துக் கட்டப் பட்ட கைப்பிடிச் சுவர்களும், வெளிச்சத்தைப் பிரதிபலிக்கும் பளபளப்பான ஓடுகளால் அலங்கரிக்கப்பட்ட உட்புறக் கூரை அமைப்பும் முழுமையான சிற்பக் கலைச்சிறப்புக் கொண்டு விளங்கின என யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார்.

## ஓவியக்கலை

ஹர்ஷரின் காலத்தில் ஓவியக்கலை சிறப்புடன் திகழ்ந்தது. இலக்கியங்களில் ஓவியம் குறித்த செய்திகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. பாணரின் காதம்பரியில் சித்திரச் சாலைகள் அல்லது சித்திர சாலிகாக்கள் காணப்பட்டன என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. உஜ்ஜயினி நகரத்தைக் குறிப்பிட்டுக் கூறுகையில் அந் நகரத்திலிருந்த கூடங்களில் கடவுள்களின் வடிவம், பூதங்கள், சித்தர்கள், காந்தர்வர்கள், வித்யாதரர்கள், பாம்புகள் முதலானோர் வடிவும் தீட்டப்பட்டிருந்தன என்ற செய்தியினை அறிகிறோம். அழகு மிக்க உஜ்ஜயினிப் பெண்டிரைக் கவர்ந்து செல்ல வந்த இரத வரிசைகளென அக் கூடங்கள் தோற்றமளித்தன எனப் புலவரின் கற்பனை சிறகடித்துப் பறக்கிறது. மற்றொரு சந்தர்ப்பத்தில் ஓவிய மாளிகைகளில் இலைகள், பறவைகள் முதலானவற்றின் ஓவியங்கள் தீட்டப் பட்டிருந்தன எனப் பாணர் குறிப்பிட்டுள்ளார்.

ஓவியர்கள் நல்ல வேலை பார்த்தே ஓவியங்களைத் தீட்டினர். அத்தகைய நல்ல வேலைகளில் ஓவியர்கள் அழைக்கப்பட்டனர். புதிய சுவர்களில் புனிதமான ஓவியங்களின் சிறப்பில் தாரபீடா என்ற கர்ப்பமுற்ற அரசி மூழ்கியிருந்தாள் எனப் பாணர் கூறினர். இராஜ்ய ஸ்ரீயின் திருமணத்தின்போது, ஓவியர்களும் கலைஞர்களும் ஒன்றுகூடி அரண்மனைச் சுவரை அலங்கரித்தனர். காமதேவனின் ஓவியம் ஆண் பெண் இருபாலராலும் பெரிதும் விரும்பப்பட்ட ஒன்று எனலாம். வாசகிரஹத்தில் காமதேவன், அவனுடைய இரு தேவியரான பரீதி, இரதி ஆகியோரின் ஓவியங்கள் அமைக்கப்பட்டிருந்தன எனப் பாணர் குறிப் பிட்டார். காதம்பரியின் படுக்கை அறையில் காமதேவனின் ஓவியம் காணப்பட்டது. அவள் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் அளித்த ஆணை அப் படத்தை அழித்துவிடு என்பதே.

ஹர்ஷ சரிதத்திலிருந்து சாமரகிரஹினிகள் (சாமரம் வீசு வோர்), தோல்வியுற்ற அரசரின் அரசிகள் ஆகியோரின் ஓவியங் களும் தீட்டப்பட்டன என்று தெரிகிறது. ஓவியம் வரைய உதவும்

வண்ணம், தூரிகை முதலானவையும் குறிப்பிடப்பட்டுள்ளன. வண்ணங்களும் குறிப்பிட்டுக் கூறப்படுகின்றன. வீரவர்மன் என்ற பாணரின் நண்பர் சிறந்த ஓவியர். இதுவரைக் கண்ட வற்றிலிருந்து அக் காலத்தில் ஓவியம் சிறந்து நின்றது என அறிந்தோம்.

**இசை**

மனித சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் இசைக்கு இன்றியமையாத பங்கு உண்டு. இந்திய மக்கள் அன்றும், இன்றும், என்றும் இசையுணர்வுக் குருதியில் கலந்து வாழ்ப வர்கள். ஹர்ஷரின் காலத்தில் இசை நுண்கலைகளின் சிறப்பு மிக்க பிரிவுகளில் ஒன்றென விளங்கிற்று. உயர்குடும்பத்துப் பெண்கள் அனைவரும் இசையினைக் கற்றுத் தேர்ந்திருந்தனர் என்பதனைச் சமூக வரலாறு பற்றிய ஆய்வின்போது கண்டோம். இசை நிகழ்ச்சிகள் அரசவையில் அனைவருடைய கவனத்தையும் கவர்ந்தன. பெண்பாடகிகள் சந்திரபீடனை மகிழ்விக்கச் சென்றனர் எனக் காதம்பரியில் கூறப்பட்டுள்ளது. அவர் களில் வீணை வாசிக்கும் வீணுவாதினி, புல்லாங்குழல் வாசிக்கும் வேணு வாத்யானி புணுபாடகர்கள் (கீதகலாகுசலா, கிருதரங் கிணி?, அஷ்டபாதா?) முதலானர்கள் தேர்ந்த வல்லுநர்களாய் இருந்தனர்.

இசைக் கருவிகளில் புல்லாங் குழலே சிறப்பானதாகக் கருதப் பட்டது. மஹாஸ்வேதா என்பவள் இசைக்கருவியை ஆலயத் தில் வாசித்துக்கொண்டிருந்தபோது சந்திரபீடனைச் சந்தித் தாள். யசோமதி நெருப்பில் குதித்து உயிர் துறக்குமுன்னர் தன் உள்ளங் கவர்ந்த குழலை நெருப்பில் எறிய விழைந்தான்.

காஞ்சனமாலை பிரியதர்ஸிகாவில் குழல் வாசிப்பதில் தேர்ந்தவளாக விளங்கினுள் என்று கூறப்பட்டுள்ளது. மலைய வதியும் அக் கலையில்தேர்ந்தவளே ஆவாள்.

அரசரின் அன்றாடக் கடமைகள் இசை முழக்கம் கேட்ட பின்னர்தான் தொடங்கின. பல்வேறு விழாக்களையும் இசை முழக்கமின்றி நடத்தனர் அல்லர். இசையரங்கம் ஒன்று இருந்தது என்பதற்குப் பிரியதர்ஸிகா சான்று காட்டுகிறது. கல்வியில் இசைப்பயிற்சியும் சிறந்த பகுதியாக விளங்கிற்று. உதயணன் அவையில் 'காந்தர்வ சாலை' என்ற இசையரங்கு இருந்தது.

ஆடவரும் பெண்டிரைப் போல இசையில் ஆர்வம் செலுத் தினர். பாணருடைய நட்புக்குரியவர்களாக இரண்டு பாடகர்

கள் (சோமிலார கிரஹாதித்யன்), இரண்டு குழல் ஊதுவோர் (மதுகரன், பாராவதன்), மிருதங்கம் வாசிப்போன் (ஜீமூதா) இசை ஆசிரியர் (தார்தூரகன்) முதலானோர் இருந்தனர். காதம்பரியின் சிறப்புத் தூதுவர் வீணை வாசிப்பதில் சிறந்தவர். ஸ்தானேஸ்வரம், பாடகர்களுக்குக் காந்தர்வ நகரமாக விளங்கிற்று என்று பாணர் குறிப்பிட்டார்.

நடனம்

இசையைப் போலவே ஒரு நாட்டின் பண்பாட்டை எடுத்துக்காட்ட நடனமும் உதவுகிறது. நடனக்கலை தொன்று தொட்டு நடைபெற்று வரும் சிறப்புமிக்க கலை. அது இருக்கு வேதத்திலும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். கையில் மாலையுடனும் திறந்த மார்புடனும் அழகு செய்யப்பட்டு ஆடையணிந்த பெண்டிர் ஆடினர் என்று இருக்கு வேதம் கூறுகிறது. ஹர்ஷ வர்த்தனரின் காலத்திலும் நடனமாடுவோரைப் பற்றிய குறிப்புகள் பல கிடைத்துள்ளன. ஆடவரும் பெண்டிரும் நடனமாடினர். நடனப்பெண் 'நர்த்தகி' எனப்பட்டாள். ஆண் 'இலாசகயூவன்' என அழைக்கப்பட்டான்.

மணிதாராவிற்கு அருகிலிருந்த முகாமில் ஹர்ஷரைப் பாணர் சந்தித்தபோது எண்ணிறந்த நடனப் பெண்டிர் அங்கு இருந்தனர். அவர்களைப் பற்றிய ஒரு வர்ணனையைப் பாணர் அளிக்கிறார். நெற்றியில் அவர்கள் இட்டிருந்த திலகம் குனிந்து குனிந்து ஆடியதால் வியர்த்துக் கரைந்து, நெற்றியில் கறுப்புக் கறையாகியிருந்தது எனவும், அவர்களுடைய புருவங்கள் நெளிந்தும் வளைந்தும் ஜாடியை ஒத்து இருந்தன எனவும், அழகிய மார்பகங்கள் அசைந்து அழகூட்டின எனவும் பாணர் விளக்குகிறார்.

மாளவ அரசனை இராஜ்ய வர்த்தனர் வென்றபின், அவருடைய தளபதி பண்டியால் கைப்பற்றப்பட்டவற்றில் ஆடல் மகளிரும் இருந்தனர் என்று பாணர் கூறும் விளக்கமும் அக் காலத்தில் ஆடல் கலை சிறப்புடன் இருந்தமையைக் காட்டுகிறது. உயர்குலத்துப் பெண்டிரும், அரசவைப் பெண்களும் நடனம் கற்றனர். பெண்களின் கல்வியில் ஆடலும் ஒன்று. இதற்கு இராஜ்ய ஸ்ரீ, காதம்பரி, பிரியதர்சிகா ஆகியோரின் எடுத்துக்காட்டுகள் சான்றுகளாகும்.

நாடகக் கலை

நாடகம் நடித்தல் ஹர்ஷரின் காலப் பொழுதுபோக்குக் கலைகளில் ஒன்றாக விளங்கிற்று. ஹர்ஷரின் மூன்று நாடக

அரங்கேற்றங்களுக்கும் அனைவரும் அழைக்கப்பட்டனர். காண விரும்பிய மக்கள் கூட்டம் தலைநகரில் மொய்த்தது. வந்தோரை யெல்லாம் நாடகத்தின் தொடக்கத்தில் சூத்திரதாரி கட்டியம் கூறி வரவேற்றான், பாணருடன் இருந்தவர்களில் 'சிகந்தகா' என்ற இளம் கலைஞனும் ஒருவன். பெண்டிரும் நாடகங்களில் பங்கு கொண்டனர். சூத்திரதாரியாகப் பெண்டிரும் பணியாற்றினர். 'முக்திகா' என்ற பெண் அப்படிப்பட்ட சூத்திரதாரிகளில் ஒருத்தி ஆவாள்.

## சிற்பக் கலை

அஜந்தாவில் காணப்படும் சிற்பக்கலையும், ஓவியக்கலையும் கி. மு. 300 முதல் கி. பி. 624ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அமைக்கப்பட்டவை. அஜந்தாவில் காணப்படும் இருபத்தொன்பது குகைக் கோயில்களில் எது ஹர்ஷரின் காலத்தில் உருவாயிற்று என்று சுட்டிக் காட்டுதல் இயலாது. குப்தர்களின் காலத்தில் தொடங்கிய கலைப்பணி ஹர்ஷவர்த்தனரின் காலத்திலும் தொடர்ந்தது என்று பொதுவாகக் கருதலாம். ஆனால், நேரடியாக இவை ஹர்ஷருடைய சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டு என்று எதையும் சுட்டிக் காட்ட இயலாது.

இது வரையில் நாம் கண்ணுற்ற கலைத் தொடர்பான செய்திகளில் ஓர் உண்மையினை உணர்கிறோம். குப்தர்களின் கலைப்பணிக்குத் தெளிவான எடுத்துக் காட்டுகளைச் சுட்டிக் காட்டுகின்ற அளவிற்கு ஹர்ஷரின் காலத்தில் சுட்டிக் காட்ட முடியாத வகையில் கலைப்படைப்புகள் குறைவாய் இருந்தன. எனினும், சுபா என்று மிடத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட இலட்சுமணன் கோயில் ஹர்ஷர் காலத்திய கலைப்பணிக்கு எடுத்துக்காட்டு எனலாம். தொல்பொருள் ஆய்வாளர்கள் புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்து ஹர்ஷரின் காலக் கலைச் சிறப்பிற்குப் புதிய எடுத்துக்காட்டுகளை அளிப்பர் என நம்பலாம்.

# 14. சமயமும் கோட்பாடும்

அன்றைய நாள்தொட்டு இன்றுவரை இந்தியப் பண்பாடும் கலையும் சமயத்தைத் தழுவியே வளர்ந்தன. எல்லாம் சமயச் சார்பற்ற கலை என்பது இந்தியாவைப் பொறுத்தமட்டில் இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம். இந்தியச் சமயம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. இந்தியாவின் முத்திரை வெளிநாடுகளில் பதிந்தது. இந்தியச் சமுதாயத்தின் சமயமும் கோட்பாடும் பிறநாட்டு வாழ்க்கையில் படிந்தன என்பது நாகரிக வாழ்வில் நாம் பாராட்டத்தக்க கூறு எனலாம்.

அன்றைய நாளில் இந்து சமயம் எனப்படும் பிராமணிய சமயம் மௌரியர்களுக்குப் பிற்பட்ட காலத்தில்தான் அதிக வளர்ச்சி பெற்றுவந்தது. சுங்கர்கள் ஆட்சி இந்து சமயத்திற்கு ஏற்றம் அளித்ததோடு, குப்தர்களுடைய ஆட்சிக்கும் வழி காட்டியது எனலாம். இவ்வாறாக, இந்து சமயத்திற்கு ஏற்பட்ட உயர்வு பௌத்த சமயத்தின் அழிவிற்கு வழி வகுத்தது என்றும் கூறலாம். சமண சமயம் எவ்வித மாறுதலும் இல்லாமல் காணப்பட்டது.

ஹர்ஷ வர்த்தனரின் காலத்தில் இந்து சமயம், பௌத்த சமயம், சமண சமயம் ஆகியவை எந் நிலையில் இருந்தன என்று காண்போம்.

இந்துச் சமுதாயத்தில் வருணாஸ்ம தர்மம் வகித்த பங்கை முன்னர்க் கண்டோம். வேதச் சடங்குகளும், வேள்விகளும் இந்துக்களின் குருதியில் இரண்டறக் கலந்துவிட்டன. இந்துக்களின் தொடர்ந்த பக்திக்கும் மரியாதைக்கும் உரியதாக வேதங்கள் விளங்கின. இந்துக்கள் வேதங்கள், புராணங்கள், ஸ்ருதிகள், ஸ்மிருதிகள், இராமாயணம், மகாபாரதம் முதலியவற்றை நன்கு வாசித்து மரியாதை செலுத்தினர். தர்ம சாத்திரங்களிலும் இந்து இலக்கியங்களிலும் காட்டப்பட்ட வாழ்க்கைக் கோட்பாடுகளின்படி வாழ்ந்தனர். உண்மையான இந்து ஒருவரின் வாழ்க்கை எப்படி அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டு உள்ளது.

பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரர் முதலான கடவுள்களை இந்துக்கள் வழிபட்டனர். படைப்புக் கடவுள் என பிரம்மாவை இந்து சமய இக் கால இலக்கியங்கள் குறிப்பிட்டபோதிலும், சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்களிடத்துக் கொண்டிருந்த அளவிற்கு ஈடுபாடு செலுத்தவில்லை. சிவனை வழிபட்டவர்கள் சைவர்கள் என்வும், திருமாலை வழிபட்டவர்கள் வைஷ்ணவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

வைணவத்தைக் காட்டிலும் சைவமே சிறப்பு மக்க சமயப் பிரிவென விளங்கியது. பாணர் தம் குறிப்புகளில் ஸ்தானேஸ்வர மக்கள் சிவனை வழிபட்டதாகக் குறிப்பிட்டார். சிவனுடைய லிங்கத்தின் பெயரும் 'ஸ்தான்வீஸ்வரா' எனப்படுவதால், ஸ்தானேஸ்வரத்திற்கே அதன் அடிப்படையில் பெயர் சூட்டப் பட்டிருக்கலாம். பிரபாகர வர்த்தனர் சிவனிடத்துக் கொண்ட ஆழ்ந்த பக்தியினையும் பாணர் சுட்டிக் காட்டுவதோடு மூன்று உலகங்களிலும் உயர்ந்த முழுமுதற் கடவுள் சிவனே, வேறு கடவுள் யாரும் இல்லை என நம்பினர் என்றும் அவர் குறிப்பிட் டார். தென்னிந்தியாவிலிருந்து வந்த பைரவாச்சாரியார் என்ற மகாசைவரின் அருளாசியைப் பெற்றூர் என்ற குறிப்பும் அதனை உறுதி செய்கிறது. காமரூபத்தின் அரசன் இளமைக் காலம் தொட்டே சிவனையன்றி வேறு கடவுளை நினையாச் சிந்தையன் என்று குறிப்பிடும் பாணரின் குறிப்பும் சைவம் பெற்றிருந்த ஏற்றத்திற்கு எடுத்துக்காட்டு எனலாம்.

சிவன் முத்தொழிலையும், (படைத்தல், காத்தல், அழித்தல்) செய்ய வல்லவர். சிவனுக்கு அடுத்த நிலை திருமாலுக்கு வழங்கப்பட்டிருந்தது. பாணர்கூடத் தாம் பயணம் செல்லு முன் சிவனை வணங்கிய பின்னரே சென்றூர். சிவனைப் பல்வேறு வடிவங்களில், பல்வேறு பெயர்களில் மகாகாளர், திரியம்பகர், காளீஸ்வரர், பத்ரேஸ்வரர், ஆம்ராதகேஸ்வரர், மகேஸ்வரர், காபாலீகேஸ்வரர் என்றெல்லாம் கூறி வழிபட்டார்கள். அக் காலத்தில் மகாகாளர் ஆலயம் உஜ்ஜயினியில் பெருஞ்சிறப்புடன் திகழ்ந்தது. சிவனுடைய வழிபாடு பற்றிய ஏராளமான குறிப்புகள் உள்ளன. அவை அனைத்தையும் குறிப்பிடல் இயலாது. யுவாங் சுவாங் சிவ வழிபாட்டைப் பற்றிப் பல இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார். காந்தாராவிற்கு அருகில் மஹேஸ்வர தேவாவின் ஆலயம் இருந்ததாக அவர் குறிப்பிட்ட தோடு பாசுபத தீர்த்தகாவைப் பற்றிப் பல இடங்களிலும் எடுத்துரைத்துள்ளார்.

குப்தர்களின் காலத்தில்தான் வைணவ சமயம் ஏற்றம் பெற்றது. ஏறக்குறைய எல்லாக் குப்த மன்னர்களுமே வைணவ பக்தர்களாகவே விளங்கினர். வைணவ சமயம் அதனால் நாடு முழுவதும் பரவிற்று. ஆனால், ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் முதலாக வைணவம் அத்துணைச் சிறப்பு மிக்க நிலையினின்று இறங்கிவிட்டது என்றே கூற வேண்டும். அதற்குப் பின் சைவ சமயம் பற்றிய செய்திகளை அறிகின்ற அளவிற்கு வைணவ சமயச் செய்திகளை அறிய முடிவதில்லை. பாஸ்கர வர்மன் சிவனை மறவாச் சிந்தையன் எனினும், அவன் வைணவ வமிசத்தவன் எனப் பாணர் குறிப்பிடுகிறார்.

சிவன், திருமால் ஆகியோரைப்போலவே ஆதித்தனும் அனைவரின் வணக்கத்துக்கும் உரிய கடவுளாக வைத்து எண்ணப் பட்டான். ஹர்ஷரின் முன்னோர் அனைவரும் ஆதித்தனை வழிபட்ட வர்கள் என்பதனைப் பட்டயங்கள் காட்டுகின்றன. காதம்பரி யிலும், ஹர்ஷ சரித்திரத்திலும் நீராடி முடித்தவுடன் ஆதித்தனை வழிபடுகின்ற வழக்கம் இருந்தது என்பதற்கான ஆதாரங்களைக் காண்கிறோம். உஜ்ஜயினி மக்களும் ஆதித்தனை வழிபட்டனர்.

அக் கால மக்களின் சிறப்புடைய ஆழ்ந்த பக்தி நெறிக்குரிய கடவுளாகச் சிவன், திருமால், ஆதித்தன் ஆகியோர் அமைந்திருந்த போதிலும் அக் காலத்தில் வேறு கடவுளர்களையும் வழிபட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. இந்திரன், வருணன், குபேரன், அக்னி ஆகிய ஆண் கடவுளரையும், சரஸ்வதி, இலட்சுமி, உமையவள், துர்க்கை முதலிய பெண் கடவுளரையும் வழிபட்டனர். பெண் கடவுளரிடம் பெரும் பக்தி செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவனை வழிபட்டவர்கள் சைவர்கள் எனவும், திருமாலை வழிபட்டவர்கள் வைணவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். பாகவதர்கள் என்ற பிரிவினைக் குறித்தும் அறிகிறோம். பாகவதர்கள் தவிரக் கீழ்க்கண்ட சமயப் பிரிவினரைக் குறித்தும் அறிகிறோம்.

1. ஸ்வேதம்பரர்கள் எனப்பட்டோர் இருந்தனர். பாணர் அவர்களை 'ஸ்வேதபாதா' என அழைத்தார்.

2. கேசலுஞ்சனு எனப்பட்ட தலைமுடியினைத் தாமே களைந்திடுவோர் இருந்தனர். அவர்கள் திகம்பர சமயப் பிரிவினர்களாக இருக்கக் கூடும்.

3. கபிலர் என்பவரைப் பின்பற்றியவர்கள் 'கபிலாக்கள்' எனப்பட்டனர். அவர்களுடைய சமயப் பிரிவு சாங்கிய முறை என அறியப்படுகிறது.

4. சாரவாகா என்பவரைப் பின்பற்றியவர் லோகாயதிகர்கள் ஆவர். இவர்கள் ஓரளவிற்குப் பகுத்தறிவுடன் நாத்திகவாதச் சாயலைக் கொண்ட சமயப் பிரிவினர். இவர்கள் கொள்கையின்படி உலகத்தைப் படைத்தவன் எவனுமில்லை; ஆத்மா என்று ஒன்றுமில்லை; மறுபிறவி என்பதும் இல்லை.

5. வைசேஷிகர்கள் எனப்பட்ட காணடா பிரிவினர்களும் குறிப்பிடத்தக்கவர்களே.

6. அவுபனிசதாக்கள் என்ற பிரிவினர் உபநிடதக் கோட்பாடுகளின்படி நடப்பவர்கள்.

7. அயஸ்வரகாரணிகர்கள் ஒரே ஈஸ்வரன், அல்லது இந்த உலகத்தைப் படைத்தவர் ஒருவரே என்ற கருத்துடைய பிரிவினர். பி. வி. கேன் என்பவர் இவர்கள் மகேஸ்வர சமயப் பிரிவினராக இருக்கக் கூடும் எனக் குறிப்பிட்டார்.

8. தாதுவாதின்கள் அல்லது காரங்வமின்கள் என்ற பிரிவினரை இரஸவாதிகள் என்று கருதுகின்றனர். அப் பிரிவினர் இரசேஸ்வர தரிசனர்கள் என்றும் அறியப்பட்டனர்.

9. தர்ம சாஸ்திரின்கள் எனப்பட்டோர் பல்வேறு ஸ்மிருதிகள், ஸ்ருதிகள் அடங்கிய தர்ம சாத்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள்.

10. பௌராணிகர்கள் என்ற பிரிவினர் புராணங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள். புராணங்கள் அவர்களுக்குப் புனித நூல்களாக விளங்கின.

11. சாப்த தாண்டவர்க்கள் எனப்பட்ட பிரிவினர் வேள்விகளை நன்கு அறிந்தவர்கள். ஜெய்மினி என்பவரால் ஏற்படுததப்பட்ட பூர்வமீமாம்ச முறையினை அறிந்தவர்களாகவே இவர்கள் இருக்க வேண்டும். ஏனெனில் அதில் வேள்விக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும் பி. வி. கேன் கருத்து ஆகும்.

12. வியாகரணர்கள் என்ற பிரிவைச் சார்ந்தவர்கள் இலக்கணங்களைக் கற்பதன் மூலமாகவே மோட்சத்தை அடைய முடியும் என நம்பினர்.

13. பஞ்சராத்திரர்கள் என்ற பிரிவினர்கள் பஞ்சராத்திரக் கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டவர்கள். நாராயணரிடமிருந்து பஞ்சராத்திரக் கோட்பாட்டை நாரதர் கேட்டறிந்து பரப்பினார் என மகாபாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

14. பிரம்மவாதிகள் என்ற பிரிவினர் வேதாந்திகள் எனக் கருதப்படுகின்றனர். பிரபாகர வர்த்தனரின் மறைவிற்குப் பின்னர் அவர்கள் ஹர்ஷரைப் பின் தொடர்ந்தனர் என்று கூறப்படுகிறது. அவர்கள் அத்வைதப் பிரிவினர் ஆவர்.

இந்து சமயத்தில் காணப்பட்ட மேற்கண்ட பிரிவினர் தங்கள் தங்கள் கொள்கைவழி நின்றனர். இந்து சமயப் பிரிவினராக விளங்கிய அவர்கள் தனித்த சமயப் பிரிவாகப் பௌத்தத்தைப்போலவோ சமணத்தைப்போலவோ இயங்கவில்லை எனலாம். ஆனால், அவர்களை யானையைப் பார்த்த குருடர்களுக்கு ஒப்பிடலாம். ஒவ்வொரு பிரிவினரும் தாங்கள் நடந்து செல்கின்ற பாதை அல்லது தங்களை வழிநடத்துகின்ற கருத்துத்தான் உண்மையான இந்து சமயக் கோட்பாடு அல்லது தத்துவம் என்று நம்பினர். அவர்கள் அனைவருமே ஏதோ ஓர் இந்து சமய அடிப்படையினால் கட்டப்பட்டிருந்தனர் என்பது மட்டும் தெளிவாகிறது.

இனி, அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கதாக இந்து சமயத்திற்கு எதிராய் விளங்கிய பௌத்த சமயத்தைக் குறித்து அறிதல் வேண்டும். பௌத்த சமயம் ஆக்கம் பெற்றதா அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததா என்பதை ஈண்டு அறிதல் வேண்டும். அதற்கு யுவாங் சுவாங்கின் குறிப்புகளையே துணைக்கொள்ள வேண்டியுள்ளது. யுவாங் சுவாங் தாம் வருகைபுரிந்தபோது காணப்பட்ட சமயநிலையைக் குறித்த படப்பிடிப்பைக் காட்டுகிறார். பௌத்தசமயத்தவராகப் பௌத்த சமயக் கண்ணோட்டத்துடனேயே அவர் பயணம் அமைந்தபோதிலும், அவர்தம் குறிப்புகள் ஹர்ஷவர்த்தனரின் காலச் சமயநிலையை எடுத்துக் காட்டும் சான்றாகவும் அமைந்துள்ளன.

யுவாங் சுவாங் அளிக்கின்ற பௌத்த சமயப் படப்பிடிப்பைக் காணுமுன்னர்க் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பௌத்தம் என்ன நிலையில் இருந்தது என்பதனையும்

கண்ணுறுதல் வேண்டும் அவர் தாம் சென்று கண்ட நாடுகளை யும் அவற்றில் பௌத்தம் இருந்த நிலையினையும் தொகுத்துக் காண்போம்.



படம் 16.
புத்தரின் பிறப்பு

கபிசாவின் அரசன் பௌத்த சமயத்தைப் பின்பற்றினான். ஆண்டுதோறும் 18 அடி உயரமுள்ள வெள்ளியினால் செய்யப் பட்ட புத்தருடைய உருவை உருவாக்கினான். 100 பௌத்த

மடங்கள் அங்கு இருந்தன. 500 மகாயான பௌத்தர்கள் அங்கு இருந்தனர். பௌத்த மடங்கள் அளவில் பெரியனவாக நல்ல நிலையில் இருந்தன.

இலம்பாவில் பத்துப் பௌத்த விஹாரங்களும் பௌத்தத் துறவிகள் சிலரும் இருந்தனர். ஆனால், அங்குப் பௌத்தர்கள் அல்லாதோரின் ஆலயங்கள் எண்ணிறந்தன இருந்தன என்று குறிப்பிடுவதால் வடமேற்கு எல்லைப் பகுதியில் பௌத்தம் போதிய செல்வாக்குப் பெறவில்லை எனத் தெரிகிறது. ஆனால், நகர் என்னும் பகுதி மக்களோ அதற்கு நேர்மாறானவர்கள் போலும். அவர்கள் வேறு சமயங்களில் அதிகப் பற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அங்குப் பௌத்தத் துறவிகள் குறைந்த எண்ணிக்கையுடையவர்களாகவே இருந்தனர். பௌத்தம் அழிவு நிலையை அடைந்துகொண்டிருந்தது.

காந்தாராவிலும் பௌத்தம் அத்தகைய நிலையையே அடைந்துகொண்டிருந்தது என்பதனை அறிகிறோம். காந்தாராவில் 1,000 பௌத்த மடங்களும், ஆலயங்களும் இருந்தன எனினும், அவை அழிந்த நிலையில் காணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஹீனயானப் பௌத்தர்கள் சிலர் புஸ்கராவதியில் அழிவுற்ற நிலையில் இருந்த பழைய மடம் ஒன்றில் இருந்தனர். அதைப் போன்று பலுசா நகரத்தில் இருந்த பௌத்த விஹாரத்தில் ஐம்பது ஹீனயானப் பௌத்தர்கள் இருந்தனர். கிழக்கில் அந் நகருக்கு அருகில் இருந்த மடத்தில் ஐம்பது பௌத்தர்களும், தெற்கில் சிலரும் இருந்தனர். அவர்கள் மகாயான பௌத்தர்கள் ஆவர்.

மகாயானப் பௌத்தத்தைச் சேர்ந்த உதயணனின் மக்கள் ஆழ்ந்த பௌத்த சமயப் பற்றுளர்கள் ஆயினும், பௌத்தம் விரைவாக அழிவை நோக்கிச் சென்றது. தட்சசில மக்கள் பௌத்தர்களாக விளங்கியபோதிலும் அங்கும் பௌத்தச் சங்கம், அழிந்துகொண்டிருந்தது. ஏராளமான பௌத்த விஹாரங்கள் இருந்தபோதிலும் அவை அழிவுபட்ட நிலையிலிருந்தன. அங்கு இருந்த பௌத்தத் துறவிகள் மகாயானப் பிரிவினைச் சார்ந்தவர்கள். போலர் என்னும் பகுதியில் நூற்றுக்கணக்கான பௌத்த விஹாரங்களும், ஆயிரக்கணக்காக பௌத்தர்களும் இருந்தனர். அவர்கள் போதிய கல்வியறிவு இல்லாதவர்கள். சங்க விதி முறைகளைப் பின்பற்றுதலை அறியாதவர்கள். சின்ஹபுரத்தில் பௌத்த மடங்களின் எண்ணிக்கையை அவர் குறிப்பிடாவிடினும் அவர் அளிக்கின்ற விளக்கத்தின் வாயிலாக அங்கும் பௌத்தம் அழிவுற்ற நிலையில் இருந்தது என்பதனையும்



படம் 17.
புத்தர்

பல்வேறு பௌத்த மடாலயங்கள் சிதைந்துவிட்டன என்பதையும் அறிகிறோம். உரசா என்னுமிடத்தில் பௌத்தம் முழுவதுமாக அழிந்து மஹாயானப் பௌத்தத் துறவிகளைக் கொண்ட ஒரே ஒரு விஹாரம் மட்டும் காணப்பட்டது.

காஷ்மீரத்தில் செயல்பட்ட பௌத்த மடத்தை யுவாங் சுவாங் புகழ்ந்துரைக்கின்றார். சீனப் பபணி அங்குச் சென்ற போது அவருக்கு உதவுவதற்கெனக் காஷ்மீர அரசர் பதண்டா செங் என்பவரை அவருடைய மாணவர்களுடன் நியமித்தார். மேலும், அவருடைய தேவையை நிறை வேற்றும்பொருட்டு அரண்மனை நூலகத்திலிருந்து 20 எழுத்தர்களையும் தந்து பயணக் குறிப்புப் பிரதிகளை எடுக்க உதவினர். காஷ்மீரில் இரண்டு ஆண்டுகள் யுவாங் சுவாங் தங்கியிருந்தபோதுதான் பல சூத்திரங்களையும், சாத்திரங்களையும் கற்றுக்கொண்டார். காஷ்மீரில் 100 பௌத்த மடாலயங்களும், 5,000 பௌத்தர்களும் இருந்தனர்.

பௌத்த சமயத்தைப் பணிவுடன் பின்பற்றியவர்கள் புனச் அல்லது புனட் பகுதியினர். அங்கு இருந்த ஐந்து மடங்களும் அழிந்து சில துறவிகளே வாழ்ந்தனர்.

காஷ்மீரத்தைச் சுற்றியிருந்த இராஜபுரம் என்னும் நாட்டில் பௌத்த மடங்கள் பத்தும், பௌத்தத் துறவிகள் சிலரும் இருந்தனர் என்ற யுவாங் சுவாங்கின் குறிப்பின் வாயிலாகக் காஷ்மிரத்தைச் சுற்றிய பகுதிகளில் பௌத்தம் வீழ்ந்துபட்ட நிலையைக் காண முடிகிறது. ஏனென்றால், பெரும்பாலான மடங்கள் அழிவுற்று ஆங்காங்கே சில துறவிகளை மட்டும் அவை கொண்டிருந்தன. தக்கா என்னும் நாட்டிலும் பௌத்தம் அழிவுநிலையில் இருந்தது. அங்கு வாழ்ந்த மக்களில் சிலரே பௌத்த சமயப் பற்றுக் கொண்டிருந்தனர். இந்து சமயம் ஏற்றம் பெற்றிருந்தது.

சீன புக்தியில் பத்துப் பௌத்த மடங்கள் இருந்த போதிலும் அங்கு இந்து சமயமும் வளர்ச்சி பெற்றிருந்ததால் அனைத்துச் சமயங்களும் சமமான நிலையில் வைத்து எண்ணப்பட்டன. ஆயினும், அதற்கு 500லி தொலைவில் சீனபுக்திக்குத் தென்கிழக்கில் ஹீனயானப் பௌத்தர்களைக் கொண்ட தமஸவண (Tamasavana) மடம் இருந்தது. ஜலந்தராவில் ஐம்பது மடங்களும் 2,000 ஹீனயான, மஹாயானப் பௌத்தர்களும் இருந்தனர். அந்த மௌரியர்களுக்குப் பின் சுங்கர்களின் காலத்தில் ஏராளமான பௌத்தர்கள் கொல்லப்பட்டனர் எனக் கருதப் படுவதால் அந்த எண்ணிக்கை தவறு என்று கருதப்படுகிறது

குல்லு அல்லது குலுதாவில் 20 பௌத்த மடங்களும், 1,000 துறவிகளும் இருந்தனர். சிலர் மஹாயானப் பிரிவினர். சிலர் ஹீனயானப் பிரிவினர். சதத்ரு என்ற நாட்டின் மக்களும் பௌத்த சமயத்தில் ஈடுபாடு கொண்டவர்களே. அங்குப் பத்துப் பௌத்த மடங்கள் அழிந்த நிலையில் காணப்பட்டன. இந்து சமயம் ஏற்றம் பெற்றிருந்தது. பார்யாத்ராவில் அழிவுற்ற நிலையில் எட்டுப் பௌத்த மடங்களும், குறைந்த எண்ணிக்கை யுடைய பௌத்தர்களும் இருந்தனர். ஹீனயானம், மஹாயானம்



படம் 19
புத்தரின் அஸ்தி அடங்கிய கலசம்.

ஆகிய பிரிவைச் சேர்ந்த 2,000 துறவிகளைக்கொண்ட இருபது பௌத்த மடாலயங்கள் இருந்தன. மதுரா நாட்டில் இந்து சமய மும் வேறு பல சமயங்களும காணப்பட்டன.

மதுராவில் மட்டுமன்றித் தலைநகரமாக விளங்கிய தானேஸ் வரத்தில் மூன்று பௌத்த மடங்களும், 700 பௌத்தர்களும் மட்டுமே இருந்தனர் என்று குறிப்பிடுவதிலிருந்து பௌத்த சமயம் செல்வாக்கு இழந்த நிலையில் விளங்கியதைக் காண்கிறோம்.

அதனால்தான் அங்கு எண்ணிறந்த பௌத்தர் அல்லாதோர் காணப்பட்டனர். ஸ்ருக்னாவில் (சுருக்னா) ஐந்து மடங்களும், 1,000 புத்த சமயத்தவரும் காணப்பட்டனர். மடிப்புரத்தில் பௌத்த சமயத்தைப் பின்பற்றியவர்கள் பிற சமயத்தைப் பின்பற்றியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருந்தனர் என்ற யுவாங் சுவாங்கின் கருத்து ஏற்புடைத்தாக இல்லை. ஹீனயானர்கள் 800 பேர் அங்கு இருந்தனர். பௌத்த ஆலயங்கள் ஐம்பது இருந்தன எனவும் அவர் உரைக்கின்றார்.

பிரம்மபுரமும், மயூராவும் இந்து சமயம் செல்வாக்குப் பெற்றிருந்த இடங்கள் எனினும் பிரம்மபுராவில் ஐந்து பௌத்த மடங்களும், கோவிசனாவில் இரண்டு மடங்களும் இருந்தன. அஹிச்சந்திராவில் பத்து மடங்கள் இருந்தன. விலாசனாவில் வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் இந்துக்களே. எனினும் இரண்டு பௌத்த மடங்களும், 300 மஹாயானர்களும் இருந்தனர். கபிதாவில் நான்கு மடங்களும், 1,000 பௌத்தர்களும் இருந்தனர்.

கன்னோசியும் மேலே குறிப்பிட்ட சில பகுதிகளைப் போல இந்து சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட எண்ணிறந்தோரைக் கொண்டு விளங்கிய பகுதி ஆகும். யுவாங் சுவாங் தம் குறிப்புகளில் 100 பௌத்த மடங்களும், 10,000 துறவிகளும் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். யுவாங் சுவாங்கின் காலத்திற்குப் பின் பௌத்தம் இப் பகுதியில் அழிந்துவிட்டது என்பதற்கு அவருக்கு முன் வந்த பாஹியான் காலத்திலேயே இரண்டு பௌத்த மடங்கள் மட்டுமே இருந்தன என்ற குறிப்பே எடுத்துக் காட்டு ஆகும். அவருக்குப் பின் பௌத்தம் சிறப்பு நிலையை அடைந்ததாகத் தெரியவில்லை. நவதேவகுலாவில் மூன்று பௌத்த மடங்கள் இருந்தன. அயோத்தியாவில் பௌத்த சமயம் ஓரளவிற்கு உயிர் பெற்று விளங்கிற்று என்றே தோன்றுகிறது. அங்குப் பௌத்த மடங்கள் 100 இருந்தன எனவும், பௌத்த ஆலயங்கள் 10 இருந்தன எனவும் குறிப்பிடுகிறார். ஐந்து பௌத்த மடங்களும், 1,000 பௌத்தர்களும் ஹயமுகாவில் இருந்தனர். கௌசாம்பியில் இருந்த சுமார் 10 மடங்களும் அழிவுற்ற நிலையில் இருந்தன எனினும், அங்கு 300 பௌத்தர்கள் இருந்தனர் என்றும் யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். அவர்கள் ஹீனயானப் பிரிவினர் ஆவர். விசோகாவில் 20 பௌத்த மடங்களும் 3,000 பௌத்தர்களும் இருந்தனர்.

சிரவஸ்தியில் இந்து சமயமே ஏற்றம் பெற்றிருந்தது போலப் பிரயாகையிலும் இந்து சமயமே ஏற்றம் பெற்றிருந்தது. அங்கெல்லாம் பௌத்தர் அல்லாதோரின் எண்ணிக்கை அளவிறந்தன

என்று அவர் குறிப்பிட்டார். யுவாங் சுவாங்கின் வருகையின் போது கபில வஸ்துவிலும் பௌத்தம் சீரழிவு பெற்றிருந்தது. அங்கு ஆயிரம் மடங்களுக்குமேலாக இருந்த இடத்தில் ஒரே ஒரு மடம் மட்டும் 30 பௌத்தர்களைக் கொண்டதாக விளங்கிற்று என்றால் அதன் அழிவை உணரலாம் அல்லவா! பௌத்த சமயத்தோடு நெருங்கிய தொடர்புடைய இராமாக்கிராம என்பதும் அவர்தம் வருகையின்போது அழிந்து காணப்பட்டது. குசிநாகராவும் அதே நிலையில்தான் இருந்தது.

வாரணாசியில் 30 பௌத்த மடங்களும் 3,000 பௌத்தர்களும் இருந்தனர். வாரணாசியைப்பற்றிய செய்திகளை அறிவித்த யுவாங் சுவாங் சாரநாத்தைப் பற்றிய விளக்கத்தினை அளிக்கிறார். காஜிப்பூர் என்னுமிடத்தில் 10 பௌத்த மடங்களும், 1,000 பௌத்தர்களும் இருந்தனர். வைசாலியில்பௌத்தம் மொத்தமாக அழிந்து இந்து சமயம் பெருவளர்ச்சியை நோக்கி நடைபோட்ட நேரம் அது எனலாம். விரிஜ்ஜியில் 10 பௌத்த மடங்களும் 1,000 பௌத்தர்களும் இருந்தனர். அங்கும் பௌத்தர் அல்லாதோர் எண்ணிறந்தவர் இருந்தனர்.

மகத நாட்டில் 50 பௌத்த விகாரங்களும், 30,000 பௌத்தர்களும் இருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் மஹாயானப் பௌத்தப் பிரிவினர் ஆவர். சசாங்கன் பௌத்த சமயத்தவருக்கு இழைத்த தீமைகளையெல்லாம் யுவாங் சுவாங் சுட்டிக்காட்டினார். அவர் போதி மரத்தை வேரோடு வெட்டி எரித்து வளரவிடாமல் செய்துவிட்டதாகச் சீனப்பயணி குறிப்பிட்டார். பௌத்தருடைய படிமத்தையே எடுத்துவிட்டு அந்த இடத்தில் சிவனுடைய திருமேனியை வைக்க முயன்ற முயற்சி பலிக்கவில்லை என்று யுவாங் சுவாங் கூறினார். மாங்கீரில் பத்துப் பௌத்த மடங்களும், 4,000 ஹீனயானப் பிரிவினரும் காணப்பட்டனர்.

சம்பாவில் பௌத்தம் அழிந்து பத்து மடங்களும், 200 ஹீனயானர்களும் இருந்தனர். கஜங்கலாவில் ஆறு அல்லது ஏழு பௌத்த மடங்களும் 300 பௌத்தர்களும் இருந்தனர். புண்ட்ரவர்த்தனவில் 20 பௌத்த மடங்களும், ஹீனயானர், மஹாயானம் ஆகிய இருபிரிவினரும் சேர்ந்து 3,000-க்கும் மேற்பட்டவரும் இருந்தனர்.

பௌத்த சமயமே இல்லாமலிருந்த பகுதி காமரூபம் ஆகும். சாமதாதாவில் 30 பௌத்த மடங்களும், 2,000 பௌத்தர்களும் இருந்தனர். தாம்ரலிப்தி மக்கள் பௌத்த சமயத்தையும் பிற சமயங்களையும் ஏற்றுக்கொண்டனர். பத்துக்கு மேற்பட்ட

பௌத்த விஹாரங்களும் ஆயிரம் பௌத்தர்களும் அங்கும் இருந்தனர். அதே நிலைமைதான் கர்ண சுவர்ணவிலும் காணப்பட்டது. எண்ணிறந்த பௌத்தர்களும், நூறு பௌத்த மடங்களும் ஒட்ராவில் காணப்பட்டன. கலிங்க மக்கள் முரட்டுத் தன்மை வாய்ந்தவர்களாக விளங்கியதால், அங்குப் பௌத்தம் அவ்வளவாக வளர இயலாமல் போயிற்று.



படம் 19.
போதிசத்துவர்

தெற்குக் கோசலாவின் அரசன் க்ஷத்திரிய வமிசத்தவனுயினும் பௌத்த சமயப் பற்றுமிக்கோனுகையால், 100 பௌத்த மடங்களும் 10,000 பௌத்தர்களும் அவனுடைய ஆட்சிக்குட்பட்டிருந்தனர். மஹாயானமே அங்கு நிலவிய பௌத்தமாகும். ஆந்திர நாட்டில் 20 பழைய பௌத்த மடங்களும், 3,000 பௌத்தர்களும் இருந்ததாக யுவாங் சுவாங் குறிப்பிட்டார். தனகடகாவில் 20 பௌத்த மடங்களும், 1,000 பௌத்தர்களும் இருந்தனர். சுல்யாவிலிருந்த பௌத்த விஹாரங்கள் அழிந்திருந்தன. திராவிட நாட்டில் 100 பௌத்த மடங்களும் 10,000 பௌத்தர்களும் இருந்தனர். மாலகூடா' என்னும், பகுதியில் பௌத்தம் இருந்தமைக்கான சான்றுதான் காணப்பட்டதே தவிர எத்தனை மடங்கள் இருந்தன, எத்தனை துறவிகள் இருந்தனர் என்ற எண்ணிக்கை தெரியவில்லை.

கொங்கணப்பூரில் 100 பௌத்தத் துறவிகள் மடமும், 10,000 பௌத்தர்களும் இருந்தனர். மகாராஷ்டிரத்தில் 100-க்கு

மேற்பட்ட பௌத்த மடங்களும், 5,000-க்கு மேற்பட்ட பௌத்தர்களும் இருந்தனர். பரோச்சில் வாழ்ந்த மக்களைப் பற்றிய இழிந்த குறிப்புகளை மட்டும் யுவாங் சுவாங் அளிப்பதிலிருந்து அவர்கள் பௌத்தத்தை அவ்வளவாக ஏற்காதவர்கள் என்பது தெரிய வருகிறது. மாளவ நாட்டைக் குறித்துப் பெரிதும் யுவாங் சுவாங் மகிழ்ச்சி தெரிவிப்பதிலிருந்து அங்குப் பௌத்தம் ஓரளவிற்குச் சீரான நிலையிலிருந்திருக்க வேண்டும் என்று கருதவேண்டியுள்ளது.

மாளவத்தில் நூற்றுக்கணக்கான பௌத்த மடங்களும், 20,000 துறவிகளும் இருந்தனர். அங்கு ஹீனயானம் செல்வாக்குப் பெற்று விளங்கிற்று என்று கருத வேண்டியுள்ளது. அட்லி நாட்டு மக்களை யுவாங் சுவாங் இழித்துரைப்பதிலிருந்து அங்குப் பௌத்த சமயத்தைப் பின்பற்றுவோர் யாரும் இல்லை என்ற முடிவிற்கு வருகிறோம். கச்சா நாட்டில் பத்துப் பௌத்த மடங்களும், 1,000 பௌத்தர்களும் பௌத்தத்தின் இரு பெரும் பிரிவைச் சார்ந்தவர்களாக விளங்கினர். வலபி நாட்டில் 100 பௌத்த மடங்களும், ஹீனயானப் பிரிவினைச் சேர்ந்த 6,000 பௌத்தர்களும் இருந்தனர். ஆனந்தபுரத்தில் 10 பௌத்த மடங்களும், 1,000 ஹீனயானர்களும் இருந்தனர்.

சூரத்தில் 50 மடங்களும், 3,000 ஹீனயான, மஹாயானப் பிரிவினரும் இருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் மஹாயானப் பிரிவினரே ஆவர். ஒரு சிலர் மட்டுமே பௌத்தத்தில் ஈடுபாடு கொண்டவர் வாழும் பகுதியாகக் கூர்ஜர அரசு விளங்கிற்று. அங்கு ஒரே ஒரு பௌத்த மடமும் 100 பௌத்தர்களும் வாழ்ந்த அதே நேரத்தில் எண்ணிறந்த இந்து ஆலயங்கள் இருந்தன. ஜஜ்ஹோட்டியில் பெரும்பாலான மக்கள் இந்துக்கள். ஒரு சில மடங்களும், ஒரு சில பௌத்தர்களும் மட்டுமே அங்கு இருந்தனர். மஹேஸ்வரபுரத்தில் வாழ்ந்த மக்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றவில்லை. அங்குச் சில தேவ ஆலயங்களே இருந்தன. அங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் பாசுபத சமயம் எனப்பட்ட இந்துச் சமயத்தின் மற்றொரு பிரிவினர் ஆவர்.

சிந்துவில் வாழ்ந்த மக்களின் இயல்பைச் சுட்டிக் காட்டிய யுவாங் சுவாங் நூற்றுக் கணக்கான பௌத்த மடங்களும், 10,000 ஹீனயானர்களும் இருந்தனர் எனக் கூறி, அவர்களில் பெரும்பாலோர் பயனற்றவர்கள் எனவும், நல்லியல்புடையோர் அல்லர் எனவும், சிலரே உயர்ந்த பண்பாளர் எனவும் குறிப்பிட்டார்.

ஹரிஷரின் காலத்திய பௌத்தம் பற்றிய ஒரு தெளிவான படப்பிடிப்பினை யுவாங் சுவாங் நன்கு அளித்துள்ளார். அவர் அளிக்கின்ற குறிப்புகளிலிருந்து ஹர்ஷரின் காலத்தில் பௌத்தம் அழிந்துகொண்டிருந்தது என்ற உண்மையை அறிகிறோம். ஒவ்வொரு நாட்டிலும் எத்தனை பௌத்த மடங்கள் இருந்தன, அவற்றில் எவ்வளவு பௌத்தர்கள் இருந்தனர் என்ற குறிப்பினை யும் அவர் அளிக்கிறார். சில நாடுகளைப் பொறுத்தமட்டில் எண்ணிக்கையையும், சிலவற்றில் சில அல்லது சில பத்துகள் அல்லது பல ஆயிரங்கள் அல்லது மிக அதிக எண்ணிக்கை யுடைய துறவிகள் இருந்தனர் என்று எண்ணிக்கையைச் சுட்டிக் காட்டாமல் கூறுகிறார். சீனத்துப் பயணி சென்ற இடங்களில் வாழ்ந்த பௌத்தத் துறவிகளைப் பற்றிய எண்ணிக்கை மட்டுமே ஆகும் அது.

யுவாங் சுவாங் அளிக்கின்ற எண்ணிக்கையை அப்படியே சரி என ஏற்றுக்கொள்ள முடியாது என்று சிலர் வாதிடுகின் றனர். ஹர்ஷருக்கு முற்பட்ட காலங்களில் பௌத்தம் பெற்றி ருந்த சிறப்பையும், குப்தர்களின் சமயப் பொறை உணர்வை யும் நோக்குகின்றபோது இந்தியத் திருநாட்டில் இலட்சக் கணக்கில் பௌத்த சமயப் பற்றாளர் இருந்தனர் என்பதை மறுக்க இயலாது எனலாம்.

மஹாயான, ஹீனயானப் பிரிவினர்களைத் தவிரச் சுமார் 18 பௌத்தப் பிரிவுகள் இந்தியாவில் காணப்பட்டன. பௌத்தப் பிரிவுகளிடையே காணப்பட்ட பிளவுகள் ஏராளம். அந்தப் பதினெட்டுப் பிரிவினரும் தாங்கள் பின்பற்றும் கருத்துகளை உயர்ந்தன என்ற எண்ணங் கொண்டவர்களாகையால் அவர் கள் தனித்தனியே வாழ்ந்தனர். கன்னோசிப் பேரவையில் சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றதற்கும் அதுவே காரணமெனலாம். அப் பிரிவுகளில் சில தாங்கள் பின்பற்றிய கருத்துகளுக்குப், பழக்க வழக்கங்களுக்கும் இலக்கிய வடிவம் தந்து அவற்றைப் பரப்புவதற்கெனப் பல மடங்களை நிருவகித்து வந்தன. அவற்றின் எண்ணிக்கை சுமார் 5,000 இருக்கலாம். அவற்றில் தங்கியிருந்த உயர்கல்வி பயின்ற துறவிகளின் எண்ணிக்கை 2, 12, 190 எனப்படுகிறது.

அறிஞர் ரைஸ்டேவிஸ் கணித்த எண்ணிக்கையே அந்த 2, 12, 120 ஆகும்.[1] டாக்டர் முகர்ஜி அதனை அடிப்படையாகக் கொண்டு பட்டியல் ஒன்றை உருவாக்கினார். அதை அடிப்

[1] Rhys Davids, *Journal of Royal Asiatic Society*, 1891 pp 418-20.

படையாகக் கொண்டும், யுவாங் சுவாங்கின் குறிப்புகளை அடிப் படையாகக் கொண்டும் நாம் இப் பட்டியலை அமைக்கலாம். டாக்டர் முகர்ஜி, பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த துறவிகளின் எண்ணிக்கையையும் அவர்கள் வாழ்ந்த இடங்களின் பெயர்களை யும் மட்டுமே குறித்துள்ளார். அவருடைய குறிப்புகளில் யுவாங் சுவாங்கின் வருகையின்போது இருந்த மடங்களின் எண்ணிக்கை பற்றிய குறிப்பு இல்லை. இதனை அறிதல் வேண்டும். யுவாங் சுவாங்கிற்கு முன் நூற்றுக்கணக்கில் இருந்த மடங்கள் சிதைந்து ஒன்று இரண்டாகக் குறைந்துபோன நிலையையும் மேலே கண்டோம். எனவே அவற்றையும் இணைத்த பட்டியலாக இதனைக் கொள்வோம். பௌத்த மடங்களை மட்டு மன்றி இந்து ஆலயங்களின் எண்ணிக்கையையும் காண்போம்.

| நாட்டின் பெயர் | பௌத்த சமயப் பிரிவு | பௌத்த மடங்களின் எண்ணிக்கை | பௌத்தர்களின் எண்ணிக்கை | இந்துக்களின் தேவ ஆலயங்கள் |
|---|---|---|---|---|
| 1. கபிசா | மஹாயானம் (பெரும்பான்மை) | 100-க்கு மேல் | 500-க்கு மேல் | 10 |
| 2. இலம்பா | மஹாயானம் | 10-க்கு மேல் | சிலர் | 20 |
| 3. நகர் | குறிப்பிடவில்லை | பல | சிலர் | 5 |
| 4. காந்தாரம் | குறிப்பு இல்லை | 1,000-க்கு மேல் | 50-க்கு மேல் | 100-க்கு மேல் |
| 5. புஸ்கராவதி | ஹீனயானம் | இல்லை (நான்கு கல்லுக்கு அப்பால் ஒன்று) | இல்லை | ஒன்று |
| 6. பலுசா | ஹீனயானம் | ஒன்று | 50 குக் மேல் | ஒன்று |
| பலுசா | மஹாயானம் | இரண்டு (நகருக்கு அருகில்) | 50-க்கு மேல் | — |
| 7. உதயஞு | மஹாயானம் | அழிவு நிலையில் | சிலர் | 10 |
| 8. போலர் | குறிப்பு இல்லை | நூற்றுக்கணக்கில் | ஆயிரக் கணக்கில் | குறிப்பிடவில்லை |
| 9. தட்சசிலம் | மஹாயானம் | எண்ணிறந்தன | சிலர் | குறிப்பிடவில்லை |
| 10. சிங்ஹபுரம் | குறிப்பு இல்லை | எண்ணிறந்தன | சிலர் | — |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | உரசா | மஹாயானம் | ஒன்று மட்டும் | மிகச் சிலர் | குறிப்பு இல்லை |
| 12. | காஷ்மீர் | குறிப்பிடவில்லை | 100-க்கு மேல் | 5,000-க்கு மேல் | குறிப்பு இல்லை |
| 13. | புஞ்ச் | குறிப்பிடவில்லை | 5 | சிலர் | குறிப்பு இல்லை |
| 14. | இராஜபுரம் | குறிப்பிடவில்லை | 10 | சிலர் | ஒன்று |
| 15. | தக்கா | குறிப்பிடவில்லை | 10 | சிலர் | சில நூறுகள் |
| 16. | சீன புக்தி | இருபிரிவும் | 10 | சிலர் | 9 |
| 17. | தாம சவனம் | சர்வாஸ்திவாதின் | 1 | 300-க்கு மேல் | — |
| 18. | ஜாலந்தரா | மஹாயானம், ஹீனயானம் | — | 2,000-க்கு மேல் | 3 |
| 19. | குலுதா | மஹாயானம் | 20 | 1,000-க்கு மேல் | 15 |
| 20. | சதத்ரு | குறிப்பிடவில்லை | 10 | சிலர் | குறிப்பிடவில்லை |
| 21. | பாரியாத்ரா | குறிப்பிடவில்லை | 8 | சிலர் | 10 |
| 22. | மதுரா | மஹாயானம், ஹீனயானம் | 20 | 2,000-க்கு மேல் | 5 |
| 23. | ஸ்தானேஸ்வரம் | ஹீனயானம் | 3 | 700-க்கு மேல் | 100 |
| 24. | ஸ்ருக்ணு | ஹீனயானம் | 5 | 1,000-க்கு மேல் | 100 |

| நாட்டின் பெயர் | பௌத்த சமயப் பிரிவு | பௌத்த மடங்களின் எண்ணிக்கை | பௌத்தர்களின் எண்ணிக்கை | இந்துக்களின் தேவ ஆலயங்கள் |
|---|---|---|---|---|
| 25. மடிப்புரம் | சர்வாஸ்திவாதின், ஹீனயானம் | 10 | 800-க்கு மேல் | — |
| 26. மயூரா | இல்லை | இல்லை | இல்லை | ஒன்று |
| 27. பிரம்மபுரம் | குறிப்பிடவில்லை | 5 | சிலர் | 10-க்கு மேல் |
| 28. கோவிசனு | ஹீனயானம் | 2 | 100-க்கு மேல் | 30-க்கு மேல் |
| 29. அஹிச்சத்ரா | சம்மாதியா (ஹீனயானம்) | 10 | 1,000-க்கு மேல் | 300-க்கு மேல் |
| 30. விலாசனு | மஹாயானம் | 2 | 300-க்கு மேல் | 5-க்கு மேல் |
| 31. கபிதா | சம்மாதியா | 4 | 1,000 க்கு மேல் | — |
| 32. கன்யாகுப்ஜம் | ஹீனயானம், மஹாயானம் | 100 | 10,000-க்கு மேல் | 200-க்கு மேல் |
| 33. நவதேவகுலம் | ஸர்வாஸ்திவாதின் | 3 | 500-க்கு மேல் | — |
| 34. அயோத்யா | ஹீனயானம், மஹாயானம் | 100 | 3,000-க்கு மேல் | 10 |
| 35. ஹாயமுகா | சம்மாதியா | 5 | 1,000-க்கு மேல் | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | பிரயாகை | ஹீனயானம் | மிகக்குறைவு | சிலர் | எண்ணிறந்தன |
| 37. | கோஸாம்பி | ஹீனயானம் | 10 | 300-க்கு மேல் | 50 |
| 38. | விசோகா | சம்மாதியா | 20 | 3,000-க்கு மேல் | 50 |
| 39. | கபிலவஸ்து | சம்மாதியா | 1 | 30-க்கு மேல் | 2 |
| 40. | வாரணாசி | சம்மாதியா | 30 | 3,000-க்கு மேல் | 100 |
| 41. | காஜிப்பூர் | ஹீனயானம் | 10 | 1,000-க்கு மேல் | 20 |
| 42. | வைசாலி | குறிப்பிடவில்லை | எண்ணிறந்தன | மிகச் சிலர் | 10 |
| 43. | விரிஜ்ஜி | ஹீனயானம், மஹாயானம் | 10 | 10,000-க்கும் குறைவு | 10 |
| 44. | மகதம் | மஹாயானம் | 50 | 1000-க்கு மேல் | 10 |
| 45. | மாங்கிர் | சம்மாதியா | 10 | 4,000-க்கு மேல் | 20 |
| 46. | சம்பா | ஹீனயானம் | 10 | 200-க்கு மேல் | ஒன்று |
| 47. | கஜங்கலா | குறிப்பிடவில்லை | 6 அல்லது 7 | 300-க்கு மேல் | 10 |
| 48. | புண்ட்ரவர்த்தன | ஹீனயானம், மஹாயானம் | 20 | 3,000-க்கு மேல் | 10 |
| 49. | காமரூபம் | — | இல்லை | — | 100 கணக்கில் |
| 50. | சாமதாதா | ஸ்தவீரா | 30 | 2,000-க்கு மேல் | 100 |

| நாட்டின் பெயர் | பௌத்த சமயப்பிரிவு | பௌத்த மடங்களின் எண்ணிக்கை | பௌத்தர்களின் எண்ணிக்கை | இந்துக்களின் தேவ ஆலயங்கள் |
|---|---|---|---|---|
| 51. தாம்ரலிப்தி | சம்மாதியா | 10 | 1,000-க்கு மேல் | 50 |
| 52. ஒட்ரா | மஹாயானம் | 100 | எண்ணிறந்தோர் | 50 |
| 53. கொங்கோதா | இல்லை | இல்லை | இல்லை | 100 |
| 54. கலிங்கம் | ஸ்தாவிரா | 10 | 500-க்கு மேல் | குறிப்பு இல்லை |
| 55. தெற்குக்கோசலம் | மஹாயானம் | 100 | 10,000-க்கு மேல் | குறிப்பு இல்லை |
| 56. கர்ணசுவர்ண | சம்மாதியா | 10 | 2,000-க்கு மேல் | 50 |
| 57. ஆந்திரா | குறிப்பு இல்லை | 20 | 3,000-க்கு மேல் | குறிப்பிடவில்லை |
| 58. தனகடகா | மஹாசம்ஹிகா | 20 | 100-க்கு மேல் | 100 |
| 59. அல்யா | — | சில | சிலர் | — |
| 60. திராவிடம் | ஸ்தாவிரா | 100 | 10,000-க்கு மேல் | 80 |
| 61. மாலகூடா | — | சிலர் | சில | பல |
| 62. கொங்கணப்பூர் | மஹாயானம், ஹீனயானம் | 100-க்கு மேல் | 10,000-க்கு மேல் | குறிப்பிடவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 63. | மகாராஷ்டிரம் | மஹாயானம், ஹீனயானம் | 100 | 5,000-க்கு மேல | குறிப்பிடவில்லை |
| 64. | பரோச் | ஸ்தாவிரா | 10 | 300-க்கு மேல் | குறிப்பிடவில்லை |
| 65. | மாளவம் | சம்மாதியா | — | 20,000-க்கு மேல் | 100 கணக்கில் |
| 66. | அட்லி | இல்லை | இல்லை | இல்லை | பல |
| 67. | கச்சா | ஹீனயானம், மஹாயானம் | 10 | 1,000-க்கு மேல் | 10-க்கு மேல் |
| 68. | வலபி | சம்மாதியா | 100 | 6,000-க்கு மேல் | 100 கணக்கில் |
| 69. | ஆனந்தபுரம் | சம்மாதியா | 10 | 100-க்கு மேல் | குறிப்பிடவில்லை |
| 70. | சூரத் | மஹாயானம் | 50 | 3,000-க்கு மேல் | 100-க்கு மேல் |
| 71. | கூர்ஜரம் | சர்வாஸ்திவாதின் | 1 | 100-க்கு மேல் | 10-க்கு மேல் |
| 72. | உஜ்ஜயின் | ஹீனயானம், மஹாயானம் | 3 | 300-க்கு மேல் | 10-க்கு மேல் |
| 73. | ஜஜ்ஹோட்டி | குறிப்பிடவில்லை | 10-க்கு மேல் | சிலர் | 10-க்கு மேல் |
| 74. | மஹேஸ்வரபுரம் | இல்லை | இல்லை | இல்லை | குறிப்பிடவில்லை |
| 75. | சிந்து | சம்மாதியா | நூற்றுக்கணக்கில் | 10,000-க்கு மேல் | 30-க்கு மேல் |

**பேரவைகள்**

ஹர்ஷரின் காலத்திய பேரவைகள் பற்றி அறிதல் இன்றியமையாதது. ஹர்ஷரின் காலச் சமய வாழ்வை அப்போதுதான் முழுமையாக அறிந்தவர்களாவோம். ஹர்ஷரின் பேரவை பற்றிய விளக்கமான செய்தியினை டாக்டர் திரிபாதியின் Histury of Kanauj என்ற நூலில் விளக்கமாகக் காணலாம். அவர் அந் நூலில் சி-யூ-கி, யுவாங் சுவாங்கின் வாழ்க்கைக் குறிப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அச் செய்திகளைத் தொகுத்துள்ளார். பேரவைகள் பற்றிய சுருக்கமான மதிப்பீடு ஒன்றைக் காண்போம்.

ஹர்ஷவர்த்தனர் கன்னேசியில் சமயப் பேரவைகளை நடத்தினர். மஹாயான பௌத்தக் கருத்துகளைப் பரப்ப அவர் முயற்சி மேற்கொண்டார். யுவாங் சுவாங்கைக் கஜன் கலாக் கூடாரத்தில் ஹர்ஷர் சந்தித்தபோதே அவருடைய குறிப்புகளில் காணக்கிடைக்கும் சிறப்பை அறிந்துகொண்டார். அங்கிருந்து பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் பல சமயப் பிரிவினரான, ஸ்ரமனுக்கள், அறிஞர்கள், துறவிகள் அனைவரும் கன்யாகுப்ஜாவில் கூடவேண்டும் என்ற கட்டளை அனுப்பப்பட்டது.

கஜன்காலாவிலிருந்து ஹர்ஷர் அணிவகுத்துச் சென்றார். கஜன்கலாவிலிருந்து ஹர்ஷ வர்த்தனரிடம் விடைபெற்ற யுவாங் சுவாங் கங்கைக் கரையை ஒட்டிப் பயணம் செய்தார். காமரூப அரசன் பாஸ்கர வர்மனே ஹர்ஷரிடத்து யுவாங் சுவாங்கை அறிமுகம் செய்துவைத்தவர் ஆவார். அவர் கங்கையின் வடகரையை ஒட்டிப் பயணம் செய்தார். கங்கையின் இரு மருங்கிலும் பணியாள்களும் போர் வீரர்களும் படகுகளிலும், யானைகளிலும் பயணம் செய்தனர். அவர்களுடைய பயணம் மகிழ்ச்சியும், ஆரவாரமும் நிரம்பியதாக விளங்கிற்று என்பதனை அவர்கள் முரசு முழக்கியும், சங்கொலி எழுப்பியும், யாழிசைத்தும் குழல் ஊதியும் சென்றனர் என்ற குறிப்பு காட்டுகிறது.

அவர்கள் அவ்வாறு 90 நாள்கள் பயணம் மெற்கொண்டு கன்னேசி நகரை அடைந்தனர். கன்னேசி நகரில் 18 அரசர்களும், 1,000 மஹாயான, ஹீனயான பௌத்தத் துறவிகளும், 3,000 பிராமண நிர்கிந்தாக்களும், நாளந்தாப் பல்கலைக் கழகத்திலிருந்துவந்த 1,000 பௌத்த அறிஞர்களும் கூடினர். ஹர்ஷரும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் கன்னேசி வந்து முகாமில் தங்கியிருந்தார்.

கன்னோசியில் சுமார் 2,000 மக்கள் தங்கக்கூடிய அளவில் கூரை வேயப்பட்ட இரண்டு பெரிய கூடங்கள் அமைக்கப்பட்டன. அதன் கிழக்குப் பகுதியில் 100 அடி உயரமுள்ள ஒரு கோபுரம் எழுப்பப்பட்டு அங்குத் தங்கத்தால் செய்யப்பட்ட புத்தரின் முழு உருவச் சிலையும், அரியணையும் வைக்கப்பட்டிருந்தன.

ஹர்ஷர் பேரவைக்கு எப்படி வருகைபுரிந்தார் என்பது சிறப்புடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அவருடைய வருகை மிகவும் ஆடம்பரமாக அமைந்திருந்தது. ஹர்ஷர் சக்ரா என்ற கடவுளைப் போலவும், காமரூப அரசன் பாஸ்கர வர்மன் பிரம்மாவைப் போலவும் யானைமீது அமர்ந்து கொண்டு புத்தரின் சிலையை நோக்கிச் சென்றனர். அவர்கள் இருவரையும் 500 போர் யானைகள் பின்தொடர்ந்தன என யுவாங் சுவாங்கின் குறிப்பு அறிவிக்கிறது. இரண்டு யானைகள் அணிகலன்களையும், மலர்களையும், மற்றொன்று யுவாங் சுவாங்கையும் தலைமை அதிகாரிகளையும் தாங்கிச் சென்றன. 100 யானைகள் இளவரசர்களையும் அமைச்சர்களையும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்த வந்திருந்த சமயப் பெரியோர்களையும் தாங்கிச் சென்றன.

அவ்வாறு சென்ற ஊர்வலம் புத்தரின் தங்கச் சிலை அமைக்கப்பட்டிருந்த இடம்வரைச் சென்றது. முதலில் புத்தர் சிலையைக் கூடத்திற்குக் கொண்டுவந்து அரியணையில் அமர்த்தி அரசரும் யுவாங் சுவாங்கும் வழிபாடுகளை நிகழ்த்தினர். அதன் பின்னர் 18 அரசர்களும், மற்றையவர்களும் புத்தரைத் தரிசிக்க வரிசையாகச் சென்றனர்.

இப் பேரவையைத் தொடங்கிவைத்தவர் ஹர்ஷரே ஆவார். அவர் யுவாங் சுவாங்கை அழைத்து அவைத்தலைவர் இருக்கையில் இருக்கச்செய்து, விழாவைத் தொடங்கிவைத்தார். முதலில் யுவாங் சுவாங் மஹாயான பௌத்தத்தின் அருஞ் சிறப்புகளைக் குறித்துச் சிறப்புரையாற்றினர். மிங் ஹீன் (Ming hein) என்ற நாளந்தாப் பல்கலைக்கழகத் துறவியைக் கருத்தரங்கிற்குத் தலைவராக நியமித்தார். கருத்தரங்கிற்குத் தலைப்பு ஒன்றையும் யுவாங் சுவாங்கே அறிவித்தார். அத் தலைப்பு ஓர் அட்டையில் எழுதித் தொங்கவிடப்பட்டது.

அதன் பின்னர் அவர் கூடியிருந்த அவையோரை நோக்கித் தாம் அளித்த கொள்கை விளக்கத்தில் ஒரு சொல்லேனும் அறிவுக்குப் பொருந்தாதது எனக் கருதுபவர்கள் அல்லது அவருடன் வாதிட்டு வெற்றி பெறக் கூடியவர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் முன்வரலாம் எனக் கூறினர். அப்படி வருவார்களாயின் தம் தலையைத் தருவதாக அறிவித்தார்.

அன்று இரவு நேர நிகழ்ச்சிவரை எவரும் யுவாங் சுவாங்கின் கருத்திற்கு மாறாக எதுவும் கூற முன்வரவில்லை. பேரவை நிகழ்ச்சிகள் குறித்துப் பேரரசர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அன்றைய நிகழ்ச்சிகள் அன்றிரவே முடிவடைந்தன. அனைவரும் தங்கள் தங்கள் தங்குமிடங்களுக்குச் சென்றனர். மறுநாளும் முதல்நாள் போலவே அனைத்து நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இவ்வாறாக ஐந்து நாள்கள் பேரவை நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தன. அதனால் யுவாங் சுவாங் ஹீனயானப் பிரிவின் சிறப்பைக் குன்றச் செய்தார் என்ற எண்ணம் கொண்ட சிலர் யுவாங் சுவாங்கைக் கொலை செய்ய முயற்சி செய்தனர்.

எப்படியோ சதித்திட்டம் வெளிப்பட ஹர்ஷர் அதனை உணர்ந்து அவையில் எச்சரிக்கை ஒன்றை விடுத்தார். யாராவது சீனத்துப் பயணிக்கு ஊறு விளைவிக்க முயன்றால் அவ்விடத்திலேயே அவர்களுடைய தலை கொய்யப்படும் எனவும், எதிர்த்துப் பேசுபவர்களின் நாக்குத் துண்டிக்கப்படும் எனவும் அறிவித்தார். அவருடைய கருத்துகளைக் கேட்டுப் பயன்பெற விரும்புபவர்கள் இந்த எச்சரிக்கையைக் கண்டு அஞ்சத் தேவையில்லை எனவும் அறிவித்தார். இந்த அறிவிப்பு பகைவர்களை வெருண்டோடச் செய்தது. பதினெட்டு நாள்கள் தொடர்ந்து பேரவை நிகழ்ச்சிகள் எவ்வித இடையூறும் இன்றி நடைபெற்றன.

யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்புகளின் மூல நூலில் பேரவை இருபத்தோரு நாள் நடைபெற்றது என்று குறிக்கப்பட்டுள்ளது. அதே நூலில் பேரவை நிகழ்ச்சி சற்று மாறுபாடான வகையிலும் விளக்கப்பட்டுள்ளது. யுவாங் சுவாங்கின் கருத்துகளை அறிந்துகொள்வதற்காக மட்டுமன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்த பல்வேறுபட்ட சமயக் கருத்துகளையும், சமயப் பெரியோர்களின் சொல்லாற்றலையும் அறிந்துகொள்ளும் வகையில்தான் பேரவைக் கூட்டப்பட்டது என அறிகிறோம். யுவாங் சுவாங்கைக் கொலை செய்வது நாம் மேலே குறிப்பிட்ட சதித்திட்டத்தின் நோக்கமன்று, ஹர்ஷவர்த்தனரைக் கொலை செய்வதற்கே திட்டம் தீட்டப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பேரவை நிகழ்ச்சிகள் நடைபெற்ற இறுதி நாளில் அங்குத் தீ விபத்து ஏற்பட்டு ஹர்ஷரே தீயை அணைத்தார். அவர் மற்ற அரசர்களுடன் கோபுரத்தின் உச்சிக்குச் சென்று கீழே இறங்குகையில் ஒருவன் அவரை கத்தியால் குத்திக் கொலை செய்ய முயன்றபோது ஹர்ஷர் அவனைக் கைப்பற்றினார். ஹர்ஷரைச் சூழ்ந்து நின்ற மற்றைய அரசர்கள் அவனை அந்த இடத்திலேயே கொன்றுவிட

முயன்றனர். ஆனால், ஹர்ஷரோ அவர்களைத் தடுத்து அவ்வாறு செய்யாமல் விட்டுவிடச் சொன்னார். ஹர்ஷரின் பெருந் தன்மையைக் கண்ட அக் கொலைஞன் தான் மேற்கொண்ட செயல்களுக்கு மனம் வருந்தி அவ்வாறு தான் செய்ததற்குக் காரணம் பிறருடைய தூண்டுதலே என்று தெரிவித்தான். ஹர்ஷவர்த்தனர் உடனே 500 பிராமணர்களை நோக்கி கேள்விக் கணைகளைத் தொடுத்தார். அவர்கள் தாங்களே பந்தல் எரிந்ததற்கும், ஹர்ஷரைக் கொல்லக் கொலையாளியை நியமித்ததற்கும் பொறுப்பு என்று ஒப்புக்கொண்டனர். அப்போதும் அவையி லிருந்தோர் அவர்களைத் தண்டிக்கும்படி கூறியும் ஹர்ஷர் அவர் களுடைய தலைவரை மட்டிலும் தண்டித்துவிட்டு மற்றவர்களை மன்னித்து நாட்டை விட்டு வெளியேறும்படி செய்தார்.

யுவாங் சுவாங்கின் மதப் பற்றையும், திறமையையும் பாராட்டும் வகையில் அவருக்குப் பத்தாயிரம் பொற்காசுகளும், முப்பதாயிரம் வெள்ளிக்காசுகளும், நூறு பருத்தி ஆடைகளும் அளிக்கப்பட்டன. பேரவையில் பங்கு கொண்ட 18 அரசர்களும் தம் பங்காக விலையுயர்ந்த பொருள்களை யுவாங் சுவாங்கிற்குக் கொடுத்தனர். எனினும், யுவாங் சுவாங் அவற்றில் எதையும் ஏற்றுக்கொள்ளாது மறுத்துவிட்டார். ஹர்ஷர் அவரை அமைச் சர்களுடன் யானைமீது அமரச்செய்து சிறப்பான ஊர்வலம் ஒன்றை நடத்தி யுவாங் சுவாங் மறையான பௌத்தப் பிரிவை மற்றெல்லாவற்றையும்விடச் சிறந்து விளங்கச் செய்து நிலை நிறுத்தினார் என்று பெருமைப்படுத்தினார்.

யுவாங் சுவாங்கிடம் ஹர்ஷர் தாம் 5 பெரும் கொடைகளை அளித்ததாகக் குறிப்பிட்டார். ஆறாவது ஐந்தாண்டுக் கால நிறைவு விழாவைக் கங்கை யமுனை சங்கமப் பகுதியில் பிரயாகை யில் நடத்துவது என்ற முடிவை அறிவித்தார். ஹர்ஷர் வேறு ஆயிரம் இடங்களில் கொடை அளித்தாலும் பிரயாகையில் கொடையளித்த பயனைப்பெறமுடியாது என்ற நம்பிக்கையின் காரணமாகவே பேரவையை நடத்தப் பிரயாகையைத் தேர்ந் தெடுத்தார் என்று கூறப்படுகிறது. யுவாங் சுவாங் தம்முடைய தாய்நாடான சீன தேசத்திற்குத் திரும்பிச் செல்ல விரும்பிய போதிலும் ஹர்ஷ வர்த்தனர் கேட்டுக்கொண்டமையால் கன்னோசியிலிருந்து பிரயாகைக்குச் சென்று மோட்சம் என்ற கொடையளிக்கின்ற சிறப்பு நிகழ்ச்சியில் பங்குகொள்ள உடன் பட்டார்.

மன்னர் தம்முடைய அளவு கடந்த செல்வத்தை ஒரு பொருட்டாக மதிக்காது பிறருக்கு வாரி வழங்கும்போது சீனாவிற்குத் திரும்பும் பயணத்தைச் சிறிது நாள்கள் ஏன்

தள்ளிப் போடக்கூடாது என்று கூறிப் பிரயாகைக்குப் பயணம் செய்தார். ஹர்ஷருடன் யுவாங் சுவாங், 18 அரசர்கள் முதலா னோரும் வந்து சேர்ந்தனர். அக் கொடைவிழாவினை மகா மோட்சப் பரிசாதம் என்று பெயரிட்டு அழைக்கின்றனர். அவ் விழாவிற்கு ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்து கூடினர். அவர்களில் ஐந்து இந்தியாவிலும் வாழ்ந்த ஸ்ரமணர்க்கள், நிர்க்கிரந்தர்கள், துறவிகள், ஏழைகள், ஆதர வற்றோர் ஆகியோர் அடங்கியிருந்தனர். அவர்கள் தங்கு வதற்கும் உணவு அருந்துவதற்கும் தகுந்த இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கொடையளிக்கும் இடம் 5 மைல் சுற்றளவுள்ள பெரும் மணற்பரப்பில் சங்கமத்தின் மேற்குப் பகுதியில் அமைந் திருந்தது. இன்றும் புனிதத் தலமாக அவ் விடம் கருதப் படுவதோடு அங்குத்தான் கும்பமேளா நிகழ்ச்சிகளும் நடை பெறுகின்றன. ஆயிரம் நடை தூர நீள, அகலமுள்ள சதுரமான ஒரு பெரிய இடத்தில் சுற்றிலும் மூங்கில்களால் ஓர் அரங்கு அமைக்கப்பட்டது. அவ் விடத்தில் பல நூற்றுக்கணக்கான கூரைக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு அவற்றில் பொன்னும், மணியும், வெள்ளியும், முத்தும், பல விலையுயர்ந்த பொருள்களும், பட்டாடைகளும், பருத்தி ஆடைகளும் சேகரித்து வைக்கப் பட்டிருந்தன. ஹர்ஷ வர்த்தனர் கங்கைக்கு வடகரையிலும், வலபி அரசர் மேற்கு பகுதியிலும், அஸ்ஸாம் அரசர் தெற்குப் பகுதியிலும் கூட்டாரம் அமைத்துத் தங்கியிருந்தனர். வலபி அரசரின் இருப்பிடத்திற்கு மேற்குப் பகுதியில் கொடை பெறுபவர்கள் இருந்தனர்.

பிரயாகைப் பேரவையின் முதல் நாளில் புத்தரின் உருவச் சிலை ஒன்று கூரை வேயப்பட்ட அரங்கில் அமைக்கப்பட்டது. பேரவையின் முதல் நிகழ்ச்சி ஹர்ஷ வர்த்தனர் தம் படை பரிவாரங்களுடன் அணிவகுத்து அங்குச் செல்வதாகும். பாஸ்கர வர்மன் கப்பலிலும், துருவபட்டர் முதலான அரசர்கள் யானைகளிலும் அமர்ந்து பேரவையை அடைந்தனர். முதல் நாள் விழா புத்தரின் உருவச்சிலையை வழிபடுதலோடு தொடங் கிற்று. இரண்டாம் நாள் சூரியனின் வடிவமும், மூன்றாம் நாள் சிவனின் வடிவமும் அரங்கில் அமைக்கப்பட்டு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. நான்காம் நாள் கொடையளிக்கின்ற பணி தொடங்கிற்று. தேர்ந்தெடுக்கப்பட்ட 10,000 பௌத்தத் துறவிகளுக்கு அன்பளிப்பு வழங்கவே நான்காம் நாள் ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு துறவியும் நூறு பொற்காசுகளும், ஒரு முத்தும், பருத்தியாலான ஆடை ஒன்றும், வாசனைப்

பொருள்களும், மலர்களும், உணவும், பெற்றனர். அடுத்த 20 நாள்களுக்குத் தொடர்ந்து பிராமணர்களுக்கு கொடையளிக்கப் பட்டது. அதையடுத்து 10 நாள்களுக்குப் பிற சமயத்தைச் சார்ந்த துறவிகளுக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டது. தொலை தூரங்களிலிருந்து வந்தவர்கள் பத்து நாள்களும் தொடர்ந்து பொருள் பெற்றனர். தொடர்ந்து ஒரு மாதத்திற்கு ⅛ பங்குப் பொருள்களை ஏழை எளியவர்களுக்கு ஹர்ஷர் வாரி வழங்கினார். அந்த ஆறாவது விழாவின்போது தமக்குச் சொந்தமான நிலங்கள் நாட்டின் ஒழுங்கையும், அமைதியையும் காக்கத் தேவைப் படும் படைகள், யானைகள், குதிரைகள், போர்க்கருவிகள் தவிரத் தம்மிடம் இருந்த அணிகலன்கள், மற்றும் விலை மதிப்பில்லாப் பொருள்கள் அத்தனையையும் ஹர்ஷர் அன்பளிப்பாய் வழங்கினார்.

அவ்வாறு வழங்கிவிட்டமையால் தம் தங்கை இராஜ்ய ஸ்ரீ யிடம் ஆடை ஒன்றினை இரந்து பெற்றுப் பத்துப் பிரிவுகளில் இருந்த புத்தரைத் தரிசிக்கச் சென்றார். ஹர்ஷர் தம்முடைய பொருள்களை மட்டுமின்றித் தமக்குப் பிற மன்னர்களால் அளிக்கப்பட்ட பொருள்களையும் அன்பளிப்பாக வழங்கினார். வரலாற்றில் வாரி வழங்கிய எவ்வளவோ வள்ளல் பெருமக்களைக் கண்டிருக்கிறோம். ஹர்ஷ வர்த்தனரின் கொடை அவருடைய சமய உணர்விற்கும், வள்ளல் தன்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அவரைப் போன்ற கொடையாளி வேறு எவரையும் சுட்டிக் காட்டுதல் கடினம் எனலாம்.

ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பௌத்த சமயம் அழிந்துகொண்டிருந்தாலும், அவர் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளின் விளைவாகக் கன்னோசி நகரில் பௌத்தம் வளர்ந்தது. ஹர்ஷர் புலால் உண்ணுதலைத் தடுத்துச் சட்டமியற்றினார். உயிர்களைக் கொல்லுதலையும், சிலவகைப் பௌத்தப் பிரிவினர் புலால் உண்ணுதலையும் தடுத்துச் சட்டங்கள் இயற்றப்பட்டன. சட்டங்களை மீறுபவர்களுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின்படி கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. நடைமுறையில் அக் கோட்பாடுகள் எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்பட்டன என்பது தெரியவில்லை.

ஹர்ஷரின் பொற்காலத்தில் சமயம் தழைத்தோங்கிற்று. தீமைகள் யாகப் புகையில் மறைந்தன. வானத்தில் அவை அலைந்து திரிந்தன ; சொர்க்கத்தில் புனிதப்படுத்தப்பட்டன ;

வெள்ளைக் கொடி பறக்கும் அழகு மிக்க ஆலயங்களின் உயர்ந்த கோபுரங்களில் மழையாகப் பொழிந்தன. தர்மம் தழைத்தது. கிராமங்களில் அடர்த்தியான சோலைகள், தங்குமிடங்கள், தர்ம சாலைகள் நாடக அரங்குகள் முதலியன பெருகி நாட்டில் செல்வச் சிறப்பு ஏற்பட்டது. இவ்வாறு ஹர்ஷரின் ஆட்சி புகழ்ந்துரைக் கப்படுகிறது.

மஹாயானப் பிரிவின் வளர்ச்சி காரணமாக இந்துக்களைப் போல உருவச் சிலைகளை அமைத்து வழிபடும் வழக்கம் பௌத்தர் களிடையே பரவியது. புத்தரின் வாழ்க்கையோடு தொடர்புடைய இடங்களில் ஸ்தூபிகளும், ஆலயங்களும் தோன்றின. புத்தரின் சீடர்களுக்காகவும் சில இடங்களில் தூபிகள் அமைக்கப் பட்டன. யுவான் சுவாங் தம் குறிப்புகளில் சாரிபுத்ரா, மௌடு, கலபுத்ரா, உபாலி, ஆனந்தா, இராகுலன் ஆகியோரின் உருவச்சிலைகளுக்கு மதுராவில் வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் அடிப்படைக் கொள்கைகளில் மாறுபாடு காணப்பட்டபோதிலும் சிலைகளை அமைத்து வழிபடுவதில் இருபிரிவினரும் ஈடுபட்டிருந்தமையால் இந்தியா முழுமையும் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் எழுந்தன. மகதத்தில் இருந்த பௌத்த மடத்தினை யுவான் சுவாங் கீழ்க் கண்டவாறு விளக்கியுள்ளார். "ஆலயத்தின் நடுவில் 30 அடி உயரமுள்ள புத்தரின் உருவச்சிலை ஒன்று அமைக்கப்பட் டிருந்தது. அதற்கு இடப்பக்கம் தாரா போதி சத்துவரின் சிலை யும், வலப்புறம் அவலோக்யதீஸ்வரா போதிசத்துவரின் சிலையும் அமைக்கப்பட்டிருந்தன.

ஹர்ஷ வர்த்தனர் சமயப் பொறையுடைய மன்னராகவே விளங்கினர். அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலம் முதலே பௌத்த சமயத்தைத் தழுவியவராக விளங்க வில்லை. பின்னர் அவர் பௌத்த சமயத்தைத் தழுவிய போதிலும் வேறு சமயக் கொள்கைகளைப் புறக்கணிக்கும் குறுகிய மனப்பான்மை அவரிடத்துக் காணப்படவில்லை. ஹர்ஷரின் முன்னோர்கள் சைவத்திலும் தாந்திரிக வழிபாட்டிலும் நம்பிக்கை கொண்டவர்கள் என்பதையும், பிரபாகர வர்த்தனரின் காலத்தில் அரண்மனையில் குலதெய்வத்தை வணங்கும் மக்களின் எண்ணிக்கை மிகுதியாகக் காணப்பட்டது என்பதையும் அறிவோம்.

ஹர்ஷ வர்த்தனர் காலத்திலும் இந்துமதக் கோட் பாடுகளும், வழிபாட்டு முறைகளும் மிகச் சிறப்பாக மதிக்கப் பட்டன. ஹர்ஷ வர்த்தனர் தாம் எழுதிய இரத்னவளி, பிரிய

தர்சிகா ஆகிய நாடகங்களின் வாழ்த்துப் பாடல்களில் சம்போ, ஹரா என்றழைக்கப்பட்ட சிவனின் அடியார்களான கணங்கள், கௌரி அல்லது கிரிஜா, கங்கா, பிரம்மா, கிருஷ்ண முதலான இந்துக் கடவுள்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். பௌத்த சமய நாடகமான நாகானந்தத்தில் நாடகத்தின் முதலில் புத்த ஜினவை வாழ்த்தும் பாடல் காணப்பட்டாலும் கௌரி, கருடன் ஆகிய இந்துக் கடவுள்களுக்கும் ஹர்ஷர் சிறப்பான இடத்தை வழங்கியுள்ளார். நீலலோஹிதா என்ற உருத்ராவையும், சிவனையும் மனம் உருகி வழிபட்ட பின்னரே ஹர்ஷர் தம் படையெடுப்புகளை மேற்கொண்டார். ஹர்ஷரின் சோணபட் செப்பு முத்திரையிலும், மதுபான் செப்பேட்டிலும். பிரபாகர வர்த்தனர் சூரியனை வழிபட்டவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஹர்ஷ வர்த்தனர் எப்போது பௌத்தராக மாறினர்? ஹர்ஷரும் அவருடைய தங்கை இராஜ்ய ஸ்ரீயும் விந்திய மலைப் பகுதியில் அமைந்திருந்த ஆசிரமத்தின் தலைவரான திவாகர மித்திரரின் முயற்சியால் பௌத்த மதத்தைத் தழுவினர் எனப் பாணர் குறிப்பிட்டாலும், வர்த்தனர்களின் வேறு பட்டயங்களிலிருந்து இராஜ்ய வர்த்தனரே முதலில் பௌத்த சமயத்தைத் தழுவிய பரம சௌகதா அல்லது புத்தரின் பக்தர் என அறிகிறோம். யுவாங் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து ஹர்ஷரும், இராஜ்ய ஸ்ரீயும் பௌத்தர்களாக மாறி மஹாயானப் பிரிவைப் பின்பற்றுபவர்களாக விளங்கினர். ஹர்ஷர் மஹாயானப் பிரிவில் கொண்டிருந்த ஆர்வமே அவர் இரண்டு பேரவைகளைக் கூட்டக் காரணம் எனலாம்.

ஹர்ஷ வர்த்தனர் சமயப் பொறைபுணர்வுடன் நடந்து கொள்ளவில்லை என்று குறை கூறப்படுவதுண்டு. அதனையும் காண்போம். கன்னோசிப் பேரவையில் ஹர்ஷர் சற்றுக் கடுமையாக நடந்துகொண்டபோதிலும் அரசின் நிருவாகக் கொள்கைகளில் அக் கருத்துகளுக்கு அவர் இடமளிக்கவில்லை. ஹர்ஷரின் நிருவாகத் திறன், பரந்த மனப்பான்மை, கொடைத் தன்மை ஆகியவைகளுக்குப் பேரவை நிகழ்ச்சி ஒரு கறையென முகர்ஜி குறிப்பிட்டார். ஹர்ஷரின் செயல்கள் வேண்டுமென்றே இழிவு படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் நடைபெற்றவையென தெரியவில்லை. ஹர்ஷர் எச்சரிக்கை விடுத்ததுகூடக் கொலைச் சதியை அறிந்த பின்னர்தான். மேலும் அதற்குப் பின் அவர் எப்படி நடந்துகொண்டார் என்பதையும் கவனிக்க வேண்டும். 'பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே' என்ற வாக்கின்படி செயல்பட்டுக் கொலைஞனையும் மன்னித்தார் அவர். கன்னோஜ்

பேரவைக்கு அடுத்த பிரயாகைப் பேரவைக்கு ஸ்ரமனுக்கள், பிராமணர்கள், ஏழை, எளியவர் முதலான அனைவருக்குமே அழைப்பு அனுப்பப்பட்டது என்பதும் குறிப்பிடத் தக்கது.

இந்து மதக் கடவுள்களான சூரியன், சிவன் ஆகியோரின் சிலைகளுக்கும் புத்தரின் சிலைக்கு அளிக்கப்பட்டது போன்ற பெருமை அளிக்கப்பட்டது. இருக்கு வேதத்தையும், சாம வேதத்தையும் ஓதியவர்களுக்கு ஹர்ஷர் கொடையளித்தார் எனப் பாணர் குறிப்பிடுவதும் அவர்தம் சமயப் பொறை உணர் விற்கு எடுத்துக்காட்டு.

ஹர்ஷர் கிறித்துவர்களிடமும் தொடர்பு கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது. கி. பி. 639-ல் அலோபென் என்ற கிறித்தவரும் அவருடைய நண்பர்களும் ஹர்ஷரின் அவைக்கு வருகைபுரிந்ததாக டாக்டர் எட்கின்ஸ் கூறுகிறார்.

ஹர்ஷர் பௌத்த சமய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட் டுள்ளார். ஹர்ஷருடைய பௌத்த சமய ஈடுபாட்டிற்கு அவருடைய இரு பேரவைகளும், புத்தரின் பல் கொண்டுவந்த நிகழ்ச்சியும் சான்றாகும். ஆண்டுதோறும் கன்னோசியில் கூடிப் பௌத்தத் துறவிகளுக்கு வேண்டிய அனைத்தையும் ஹர்ஷர் அளித்து உதவினார். நாளந்தாப் பல்கலைக் கழகத்திலிருந்த சாகரமதி, பிரஜ்ஞரஷ்மிர சிம்மரஷ்மி, யுவாங் சுவாங் ஆகியோரை ஒரிஸ்ஸாவிற்கு அனுப்பினார். நாடெங்கிலும் வாழ்ந்த பௌத்தத்துறவிகளை ஒன்று கூட்டிக் கருத்தரங்குகள் நடத்துவதை விரும்பிய அவர், அங்குச் சிறப்புடன் விளங்கு பவர்களுக்குத் தகுந்த சிறப்புகள் அளித்தார். கங்கைக் கரையை ஒட்டிச் சுமார் 100 அடி உயரமுள்ள ஆயிரக்கணக்கான தூபிகளை அமைத்தார் என யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளார். பல மடங்களையும், வழிபாட்டுக் கூடங்களையும் கட்டிக் கொடுத்தார்.

ஹர்ஷருடைய சமயப் பணிகளை நோக்குகின்றபோது அவரை ஒரு பௌத்தர் என்று மட்டும் கருதிவிடுவோமேயாயின் தவறு செய்தவர்களாவோம். அவர் சமயத் தொண்டர் மட்டு மல்லர், சமூகத் தொண்டரும் ஆவார் எனலாம். நாள்தோறும் ஆயிரம் பௌத்தத் துறவிகளுக்கும், ஐந்நூறு இந்துக்களுக்கும் இலவச உணவு வழங்கியதோடு, நெடுஞ்சாலைகள் நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றில் இளைப்பாறும் இடங்களை அமைத்து உணவும், சுவைநீரும் பாகுபாடின்றி வழங்கியவர் அவர். ஹர்ஷ வர்த்தனர் ஏழை எளியவர்க்கு இலவச மருத்துவ உதவி

அளித்தார். ஹர்ஷரின் பொதுப் பணிகள் சிறந்து விளங்கின. பொதுப்பணிகளை நிறைவேற்றுகையில், அவர் அதைப் பெறுபவர்களை வேறுபாட்டுடன் நடத்தவில்லை என்பதும் குறிப்பிடத் தகுந்ததே எனலாம்.

**சமயச் சடங்குகள்**

சமயச் சடங்குகள் யாவை? அவற்றை எந்த அளவிற்குப் பின்பற்றினார்கள்? என்பனவற்றையும் அறிந்தால்தான் ஹர்ஷவர்த்தனரின் காலச் சமய வாழ்வினை முழுமையாக அறிந்தவர்களாவோம். இந்துவாகப் பிறந்துவிட்ட ஒருவனின் வாழ்க்கையில் அவன் பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் அதாவது தொட்டில் முதல் சுடுகாடுவரையிலும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் காணப்பட்டன. அவற்றைச் சம்ஸ்காரங்கள் என்று குறிப்பிட்டனர். பாணர், தாம் பதினைந்காவது வயதில் உபநயனம் செய்விக்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். சமயச் சடங்குகளைக் குறைவின்றிச் செய்வதில் பிராமணர் இப்பெருமை கொண்டனர். பிராமணர்கள் மட்டுமன்றி ஏனைய வருணத்தோரும் அவற்றைக் கைக்கொண்டனர். அவ்வாறு சடங்குகளைக் குறைவறச் செய்வதன் மூலமாகப் பிறந்த குழந்தை நீண்ட நாள் நல்வாழ்வு வாழுமெனப் பெற்றோர்கள் நம்பினர். அதனாலேதான் மகாஸ்வேதாவின் தந்தை அவன் பிறந்த பத்தாவது நாளில் சமய வழிச் சடங்குகளைச் செய்து அப் பெயரை அளித்தார். சமயச் சடங்குகளை மிகவும் கவனமாகக் குறைவின்றிச் செய்ய முயன்றனர்.

அந்தியேஸ்தி என்பது இந்து ஒருவனின் வாழ்க்கையில் செய்யப்படும் இறுதிச் சடங்காகும். இச் சடங்கு எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதைப் பாணர் குறிப்பிட்டுக் காட்டுகிறார். காதம்பரியிலிருந்து மூன்று வகையில் இறந்த உடலை அழித்தனர் எனத் தெரிகிறது. எரித்தல், நீரில் எறிதல், அப்படியே விலங்குகளுக்கு இரையாக விட்டுவிடுதல் ஆகியவையே அவை. இறந்த உடலை எரித்தலே பொதுவான வழக்கமாகும். ஈமச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் நீரில் குளித்துத் தூய்மைப்படுத்திக்கொண்டனர். இறந்தவர்களின் இல்லத்தவர்கள் மெத்தைகளில் உறங்குவதில்லை. பிணத்தை எரித்த இரண்டாம் நாள் அங்குச் சென்று நீரில் குளித்துவிட்டு இறந்தவர்கள் எரிக்கப்பட்ட இடத்தில் நீரைத் தெளித்து எலும்புகளைப் புனித இடங்களுக்குக் கொண்டுசென்றனர். இறந்தவர்கள் விட்டுச்சென்ற சொந்த உடமைகளைப் பிராமணர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினர். இறந்தவர்கள் மீண்டும் பிறப்பார்கள்

என்றும் அவரவாகள் செய்த நன்மை தீமைகளுக்கேற்பச் சொர்க்கமோ நரகமோ செல்வார்கள் என்றும் நம்பினர். சடங்குகள், ஸ்மிருதிகளில் கூறப்பட்டுள்ளபடி பிராமணர்களால் நடத்திவைக்கப்பட்டன. இவ்வாருகச் சடங்குகள், சம்பிரதாயங்கள் குறித்தவற்றையும் பாணரின் ஹர்ஷ சரிதத்தில் காண்கிரேும்.

ஹர்ஷரின் காலச் சமய வாழ்க்கையைக் கண்ணுற்ற நாம் பௌத்தம் வீழ்ச்சி அடைந்துகொண்டே சென்றதையும் இந்து சமயம் தலைதூக்கத் தொடங்கியதையும், அதன் விளைவாகச் சடங்குகள் ஆசாரங்கள் முதலியன சமுதாய வாழ்க்கையில் பிரதிபலித்ததையும் முன்னரே கண்டோம்.

# 15. ஹர்ஷர் - ஒரு மதிப்பீடு

ஹர்ஷரின் அரசியல் கோட்பாடுகளும், பின்பற்றிய கொள்கைகளும் மண்டல அமைப்பு முறையின் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டிருந்தன. மண்டல அமைப்பு முறையின் அடிப்படைக் கொள்கை யாது என்பதைக் காண்போம். பண்டைய நாளில் மன்னர்கள் தர்ம விஜயம், லோப விஜயம், அசுர விஜயம் ஆகிய மூன்று வகைகளில் போரிட்டு வென்றனர். தர்ம விஜயம் என்பது பிற அரசர்களை அடிபணியச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளை மட்டும் கொண்ட நெறியான படையெடுப்பு. பேராசை கொண்டு பகைவருடைய மண்ணையும் பெண்ணையும் கைப்பற்றுவது இரண்டாவது வகையிலான லோப விஜயம் ஆகும். பேய்ப்போன்று தாக்கிப் பகைவரின் உற்றார் உறவினர் அனைவரையும் கொல்லுதல் அசுர விஜயம் என்ற மூன்றாவது வகை ஆகும்.

தர்ம விஜயமே அனைவராலும் புகழப்பட்ட முறையாகும். இந்த மூன்றுவகைப் படையெடுப்புகளிலும் மண்டல அமைப்பு முறை எல்லா இந்திய அரசர்களிடையேயும் விளங்கிவந்துள்ளது. போரில் வெல்லும் ஆற்றல் படைத்த அரசன் ஒரு பகுதியிலிருந்தோ குடும்பத்திலிருந்தோ தோன்றாமல் நாட்டின் எப்பகுதியிலும் தோன்றக்கூடும் என்ற உண்மை வட்டார உணர்வைத் தோற்றுவித்தது. அவற்றில் ஆளும் அரசர்கள் தங்களுடைய ஆற்றலைப் பெருக்கி, நாட்டின் ஏனைய பகுதிகளில் மேலதிகாரத்தை நிலைநிறுத்த முயன்றனர். அவ்வாறு கொண்ட விருப்பந்தான் மண்டல அமைப்பின் வளர்ச்சிக்கு அடிப்படையாகும்.

ஒரு சில வேளைகளில் ஆற்றல் மிக்க மாநில அரசுகள் நாட்டின் இயற்கை எல்லைகளான மலைகள், கடல்கள்வரை ஆதிக்கத்தை விரித்து ஒரு வலிமை மிக்க அரசியல் அமைப்பைத் தோற்றுவிக்க முயன்றன. வென்றவர், தாம் வென்ற பகுதியின் தலைவரையே தொடர்ந்து அப் பகுதியில் தமக்குக் கீழ்ப்படிந்து ஆட்சி செலுத்த இசைவு அளித்தார்கள். இது பொதுவாக நிலவிவந்த முறையாகும். இதனால், வேற்றுமையில் ஒற்றுமை ஏற்பட்டது. அந் நிலையில் பல பிரிவுகளிலும் விளங்கிய

வெவ்வேறு அரசியல் அமைப்புகள் ஒன்றுபட்டு, இந்தியப் பேரரசில் உரிமையுடனும் அதே நேரத்தில் பேரரசின் ஓர் உறுப்பு என்ற உணர்வுடனும் விளங்கின. அதுவே மண்டல அமைப்பு முறையின் அடிப்படைக் கொள்கையாகும்.

ஹர்ஷருடைய போர் நடவடிக்கைகளையும், பேரரசு பரவியதையும் முன்னர்க் கண்டோம். அவர் நெறியான படையெடுப்பு மேற்கொண்டார். நாட்டை விரிவுபடுத்தும் நோக்கத்தினை நிறைவேற்றச் சசாங்கன், தேவகுப்தன் முதலானோர் அக்காலத்தில் மேற்கொண்ட மிக இழிந்த வழிகளை அவர் பின்பற்றவில்லை. ஹர்ஷர் அரசியல் முதிர்ச்சியும், வெற்றிகளினால் ஆணவம் அடையாத மனநிலையும் கொண்டு சமயப் பொறை உணர்வுடன் செயல்பட்டார். ஹர்ஷரின் அறிவாற்றலினாலேதான் நாற்பது ஆண்டுகள் அவர் அரசு செலுத்த முடிந்தது. அரசரிடத்தே அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட்ட அரசு முறையாக அமையாமல், கூட்டரசு முறையில் மாநிலங்களுக்கிடையே சீரான உறவைச் சமநிலையில் கொண்டதாக ஹர்ஷரின் அரசு அமைந்தது. ஹர்ஷர் தம் வாழ்வின் இறுதிவரை ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தும் கொள்கையினைப் பின்பற்றினார். அக்கொள்கையை நிறைவேற்றப் படையெடுத்தலைச் செய்ய வேண்டியதாயிற்று. அவ்வாறு பேரரசு விரிவடைந்தபோது, அதற்கேற்றாற்போல் கூட்டாட்சிக்குரிய நிருவாகத் திறமையும் ஹர்ஷரிடத்தே காணப்பட்டது.

ஹர்ஷரின் கீழிருந்த திறையரசுகளை ஐந்து அல்லது ஆறு வகைகளாகப் பிரிக்கலாம். ஹர்ஷர் தம்முடைய நேரடிப் பார்வையில் இருந்த பகுதிகளில் நல்லாட்சி நிலவ வழிவகுத்தார். ஹர்ஷர் அரசு அலுவலர்களுக்கு ஊதியம் வழங்காது நிலம் அல்லது நிலவரியினை ஒதுக்கியதால் காலப்போக்கில் அரசுநிலம் பிரிக்கப்பட்டுச் சிதறுண்டது. ஹர்ஷர் கடைப்பிடித்த இம் முறை குறைபாடுடையதேயாகும். இதனால் அரசின் கட்டுப்பாட்டிற்கு இடையூறு ஏற்பட்டது. அரசரின் ஆற்றல் குறைந்தபோது தாற்காலிக நில ஒதுக்கீடு பெற்றவர்கள் அதனைத் தமக்கு நிலையாக அளிக்கப்பட்ட உரிமை எனக் கொண்டு தவறான வழிகளில் பயன்படுத்த வழிகோலியது. நாடுகளை ஒன்றுபடுத்துகின்ற முயற்சிக்கு, அதாவது ஒருமைப்பாட்டுக்கு எதிரான விளைவை அந்நிலை ஏற்படுத்தியது. ஆனால், அவ் விளைவுகளெல்லாம் ஹர்ஷரின் காலத்திலேயே தோன்றவில்லை.

இந்திய வரலாற்றில் அதன் தொடர்ந்த போக்கினிடையே சில குழப்பமான சூழ்நிலைகள் நிலவுகின்றன. மௌரியர்களுக்குப் பின் குப்தர்களின் ஆட்சிவரையுள்ள காலம் குழப்பம் மிகுந்த,

பேரரசர் என்று யாருமில்லாத காலமாக அமைந்தது. அதை முறியடித்துக் குப்தப் பேரரசர்கள் நிலையான பேரரசு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால், குப்தர்களுக்குப் பின் குழப்பமான சூழ்நிலை ஹூணர்களின் படையெடுப்பினால் தோன்றியது. அப்போது வர்த்தனர்களின் மரபில் உதித்த ஹர்ஷர் பிளவுச் சக்திகளை முறியடித்து வென்றார். ஹர்ஷருடைய நாற்பதாண்டுக் கால ஆட்சியோடு மீண்டும் இந்திய நாட்டில் அன்னியப் படையெடுப்புகளின் குழப்பம் ஏற்பட்டது. அந் நிலை அக்பரின் காலம்வரை நீடித்தது.

ஹர்ஷர் தம் ஆட்சிக் காலத்தில் தோற்றுவித்தது வலுவற்ற மத்தியக் கூட்டரசு ஆகும். அது, பேரரசர் வலுவுள்ளவராக உள்ளவரை நீடிக்கக் கூடியது ஆகையால், நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய்,ஞான ஒளியாய் நெடுங் காலம் நீடிக்க இயலாமல் போயிற்று. ஹர்ஷர் புதிய முறைகளை அரசு துறையில் தோற்றுவிக்கும் திறமையற்றவர். ஆனால், அவர் உயிர் வாழ்ந்த காலம்வரையில் நாட்டின் நிலையை அப்படியே காக்கும் பணியைச் செவ்வனே நிறைவேற்றினார். நாம் அவ்வாறு குறிப்பிடுவதற்குக் காரணம் அப் பிரச்சினையை வெல்லப்பட்ட சிற்றரசர்கள் தங்களுடைய ஆட்சிப் பகுதிகளைத் தாங்களே அரசுபுரிந்துகொண்டு அதே நேரத்தில் பேரரசருக்கு உட்பட்டிருத்தல் என்ற வழக்கத்தின்படி சிந்திப்பதுதான்.

ஹர்ஷர் நிலக்கொடைகளைத் தாமும் வழங்கிப் பிறரையும், அதாவது தமது அலுவலர்களான சாமந்தர்களையும் கொடை வழங்கச் செய்தார். அதனால் தோன்றிய விரும்பத்தகாத விளை வுகளை ஹர்ஷருடைய காலத்தில் காணவில்லை எனினும், அவருக் குப் பின்னால் காண்கிறோம். நாட்டின் பொருளாதாரத்திற்கு அம் முறையானது தீங்கு பயப்பதாக அமைந்தது. அது போன்ற பொருளாதார இடையூறுகள் நாணயப் புழக்கத்திற்கும் முதலீட் டிற்கும் பெரும் ஊறு விளைவித்தன. குப்தர் காலத்தில் பேரரசிற் கும் அதன் உறுப்புகளுக்குமிடையே விளங்கிய நுட்பமான சம நிலை மறைந்தது.

இந்திய வரலாற்றில் சிறப்புடன் திகழ்ந்த அரசர்களின் வரிசையில் வைத்து ஹர்ஷர் எண்ணப்படுகிறார். அவருடைய வாழ்க்கை வரலாற்றிலிருந்து அடிப்படையான சில உண்மை களை அறிகிறோம். சந்திர குப்தருடைய படைஆற்றலையும், அசோகரின் அருட்டிறத்தையும், சமுத்திர குப்தரின் இராஜ

தந்திரத்தையும், இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்தியரின் நல்லியல்புகளையும் ஹர்ஷரிடத்தில் காண்கின்றோம். ஆனால், இந்திய அறிஞர்கள் ஹர்ஷரை அறிந்துவைத்திருக்கின்ற அளவிற்கு, மேலே குறிப்பிட்டோரை விளக்கமாகத் தெரிந்து கொண்டிருக்கமாட்டார்கள் என்றே கூறலாம். ஹர்ஷருடைய புகழ் பரவியதற்குக் காரணம் பாணர்தாம் என்றும், அவருடைய மிகுதியான எல்லை மீறிய புகழுரையினால் ஹர்ஷருக்கு வரலாற்றில் சிறப்பான இடம் கிடைத்துவிட்டது என்றும் கூறிச் சிலர் அவருடைய சிறப்பைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டனர்.

ஆனால், உண்மையிலேயே நாற்பதாண்டுக் காலம் அரசியல் வானில் மின்னுதல் என்பது எளிதான ஒன்றன்று. சிறப்புடைய பலர் வால்நட்சத்திரமாக வரலாற்றில் தோன்றி மறைந்திருக்கின்றனர். சிறிய பகுதி ஒன்றிலே அரசியல் வாழ்வினைத் தொடங்கிப் பேரரசு ஒன்றை உருவாக்கியவர் அவர். ஆயினும், அவருக்குப்பின் வர்த்தனர் மரபினைத் தொடர ஆண் வாரிசு இல்லாமல் போயிற்று. வர்த்தனருடைய ஆட்சியே முடிவிற்கு வந்துவிட்டது.

முடிவாகக் கூறுமிடத்துச் சமயப் பொறை உணர்வுடன், அக்கால மரபின்படி ஆயுதம் ஏந்திப் போரிட்ட அவருடைய கை, எழுதுகோலை எடுத்துப் படைப்பிலக்கியம் மூன்றினை உருவாக்கியுள்ளது. ஆட்சி நடத்துகிறவர்கள் கலை ஆர்வம் உள்ளவர்களாக விளங்கினால்தான் சமுதாயப் படப்பிடிப்பைச் சரியாக அமைக்க இயலும். அந்த வகையில் ஹர்ஷர் பொருத்தமானவரே.

## ஹர்ஷர் ஆட்சிக் காலச் சிறப்பு நிகழ்ச்சிகள்

| ஆண்டுகள் கி.பி. | நிகழ்ச்சிகள் |
|---|---|
| 586 | இராஜ்ய வர்த்தனரின் பிறப்பு |
| 590 | ஹர்ஷரின் பிறப்பு |
| 592 | இராஜ்யஸ்ரீயின் பிறப்பு |
| 600 | யுவாங் சுவாங்கின் வருகை |
| 600 | சசாங்கன் பௌத்தர்களைத் துன்புறுத்தல் |
| 603-604 | இராஜ்ய ஸ்ரீயின் திருமணம் |
| 605 | பிரபாகர வர்த்தனரின் இறப்பு; கிரக வர்மர் கொல்லப்படுதல்; இராஜ்ய வர்த்தனர் தானேஸ்வரத்தின் அரசராதல் |
| 606 | ஹர்ஷர் தானேஸ்வரத்தின் அரசராதல் |
| 606-612 | ஹர்ஷர் வட இந்தியாவை வெல்லுதல் |
| 612 | ஹர்ஷர் முடி சூட்டிக்கொள்ளுதல் கி.பி. 606 ஹர்ஷர் சகாப்தம் எனக் குறிக்கப்பட்டது. |
| 623 | வங்காளம் ஹர்ஷப் பேரரசுடன் இணைதல் |
| 628-629 | ஹர்ஷரின் பன்ஸ்கேராச் செப்பேடு |
| 629 | யுவாங் சுவாங் பயணம் மேற்கொள்ளுதல் |
| 630 | ஹர்ஷரின் வலபிப் படையெடுப்பு |
| 630-632 | ஹர்ஷரின் மதுபான் செப்பேடு |
| 633 | ஹர்ஷர்-இரண்டாம் புலிகேசிப் போர் |
| 635 | ஹர்ஷர் காஷ்மீரை வெல்லுதல் |
| 637-642 | ஹர்ஷரின் ஒரிசாப் படையெடுப்பு |
| 638 | ஹர்ஷரின் பிரயாகைப் பேரவை |
| 641 | ஹர்ஷர் சீனாவுக்குத் தூதுக்குழு அனுப்புதல் |
| 643 | கன்னோசி, பிரயாகைப் பேரவைகள் |
| 643 | யுவாங் சுவாங் சீனாவிற்குப் புறப்படுதல் |
| 643 | வாங் - யுவான்-ஸி (Wang - hiuen t'se) லி-ஐ - பியோ (Li-i-Piow) ஆகியோரின் சீனக்குழு இந்தியாவிற்கு அனுப்பப்படுதல் |
| 644 | யுவாங் சுவாங் சீனாவை அடைதல் |
| 646 | வாங் - யுவான் - ஸியின் இரண்டாவது குழு இந்தியாவிற்கு அனுப்பப்படுதல் |
| 647 | ஹர்ஷரின் இறப்பு |
| 647-648 | யுவாங் சுவாங்கின் பயணக் குறிப்புகள் வெளியிடப்படுதல் |

# மேற்கோள் நூற்பட்டியல்

## (BIBLIOGRAPHY)

### Original Sources on Harsa

*Bana's Harsacharita :* Ed. P. V. Kane, First Edn., Bombay, 1918.

*Bana's Harsacharita :* Ed. Jivananda Vidyasagar, Calcutta, 1892.

*Bana's Harsacharita :* Tr. by E. B. Cowell and F. W. Thomas, London, 1897.

*Bana's Kadambari :* Ed. Peterson, Bombay, 1900.

*Bana's Kadambari :* Ed. Parab, Bombay, 1896.

*Bana's Kadambari :* Tr. by Ridding, London, 1896.

*Priyadarsika :* 'A Drama in Four Acts by Sri Harsa': Ed. Jivananda Vidyasagar, Calcutta, 1874.

*Priyadarsika :* By Harshadeva with the Commentary of Nivasa Jagannath Svamin, Vizagapatam, 1880.

*Ratnavali by Harsa :* Ed. Parab and Joshi, Bombay, 1888.

*Ratnavali by Harsa, 2nd Edn. :* Ed. Godbole and Parab., Bombay, 1890.

*Ratnavali by Harsa :* Ed. Joglekar, Bombay, 1913.

*Ratnavali by Harsa, 2nd Edn. :* Ed. Chakravarti, Calcutta, 1919.

*Ratnavali by Harsa :* Ed. Joshi and Watue, Belgaum, 1953.

*Nagananda by Harsa :* Ed. Brahme and Paranjapa, Poona, 1893.

*Nagananda by Harsa :* Tr. Palmer Boyd, London, 1872.

*Naganandam :* Ed. and Tr. Toraskar and Deshpande, Bombay.

### Chinese Works

*Hsuan Chung Si-Yu-Ki, Buddhist Records of the Western World 2 Vol. :* Tr. S. Beal., London, 1906

*Hsuan Chung-Life of Hieun-Tsiang, New Edn. :* By Sharmah Hwui Li, Tr. S. Beal, London, 1911.

*On Yuan Chwang's Travels in India* (A. D. 629–645) *2 Vols.* : By Thomas Watters, London, 1904-05, First Indian Edn., 1961, New Delhi.

## Inscriptions

*Banskhera Copper Plate* : Ep. Ind., Vol. IV, pp. 208-211.

*Madhuban Copper Plate* : Ep. Ind., Vol. I, pp. 67–75.

*Nalanda Seals*, Ep. Ind. : Vol. XXI, pp. 74–76.

*Sonpat Seal* : C II., Vol. III, No. 52, pp. 231–232.

## Modern Works on Harsa

*Harsavardhana:* Chatterji, Gaurishanker (Indian Ed.), Allahabad, 1938.

*Harsa-Vardhana* : Ettinghausen, Maurice L., empereur et Poete de I' Inde Septentrionale, Louvain, 1906.

*Harsha* : Mookerji, Radha Kumud, Oxford, 1926.

*Sri Harsha of Kanauj* : Pannikar, K. M., Bombay, 1922.

*History of Kanauj* : Tripathi, R. S., Benaras, 1937.

*Harsa and his Times being Vol. 1* : Of his History of Mediaeval Hindu India, Vaidya, Chintamani Vinayaka, Poona, 1921.

## Journals

*The Empire of Harsa* : Banarjee, A. C., JAHRS, Vol., VI.

*Sasanga* : Basak, R. G., IHQ., III.

*Rajyavardhana and Sasanga* : Ganguly, D. C., IHQ., XXIII.

*Harsavardhana A Critical Study* : Majumdar, R. C. JBORS, IX.

*The Harsa Era* : Majumdar, R. C., IHQ, XXVII.

*Harsha and His Times* : Majumdar, R. C., G. A.

*Harshavardhan Siladitya – A Revised Study* : Ray, N. R., IHQ., III.

*On the Authenticity of Harsa's Authorship* : Sharma, B. N., Madhya Bharati, Vol. I.

*Dramas of Harsa, A Critical Study* : Sharma, B. N., Madhya Bharati, Vol. II.

*The Early Puspabhutis* : Sharma, B. N., Madhya Bharati, Vol. III.

*Evidence of the Nalanda Seals* : Sircar, D. C. IHQ., XIX.
*Harsa's Accession and Harsa Era* : Sircar, D. C. IHQ , XXVII.
*Harsha as Author and Patron of Letter?* : Tripathi, R. S., JBHU. I.
*On the Extent of Harsa's Empire* : Tripathi, R. S. JBHU., II.
*Harsa and His Times* : Vaidya, C. V., JBBRAS., XXIV.

## General Historical Works

*State and Government in Ancient India 2nd Edn* : Altekar, A. S., Benaras, 1955.
*Si-yu-ki, Buddhist Records of the Western World, 2 Vols.* : Beal, S., London, 1906.
*The Age of Imperial Guptas*: Banarjee, R. D., Benaras, 1933.
*History of Orissa, Two Vols.* : Banarjee, R. D., Calcutta, 1930-31.
*The State in Ancient India* : Beni Prasad, Allahabad, 1928.
*A Peep into the Early History of India* : Bhandarkar, R. G., Bombay, 1920.
*Vaishnavisms, Saivisms and Other Minor Religious Systems* : Bhandarkar, R. G., Ind. Edn., Poona, 1938.
*The Wonder that was India* : Basham, A. L., London, 1954.
*Social Life in Ancient India* : Chakladar, H. C., Calcutta, 1929.
*A History of the Guptas* : Dandekar, R. N., Poona, 1941.
*Glimpses of Kalinga History* : Das, M. N., Calcutta, 1949.
*Educational System of the Ancient Hindus* : Das, S. K., Calcutta, 1930.
*History of Sanskrit Literature, Vol. 1*: Dasgupta, S. N. and Dey, S. K., Calcutta, 1947.
*Hindu Administrative Institutions* : Dikshitar, V. R. R., Madras, 1929.
*Hinduism and Buddhism, 3 Vols* : Eliot, Sir Charles, London, 1921.
*Literary History of India* : Frazer, R. W., London, 1896.
*History of Hindu Political Theories* : Ghoshal, U. N., London, 1923.
*The Travels of Fa-hsien or Record of Buddhistic Kingdoms* : Giles, H. A., Cambridge, 1923.

*Early History of the Andhra Country:* Gopalachari, K., Madras, 1941.

*Studies in Pallava History:* Heras, H., Madras, 1933.

*The Religions of India:* Karamarker, A. P., Lonavala, 1950.

*History of India:* Jayaswal, K. P., Lahore, 1933.

*Hindu Polity, Third Edn.:* Jayaswal, K. P., Bangalore, 1955.

*Hindu Law in its Sources:* Jha, Ganganath, Allahabad, 1930.

*History of Dharmasastras, 5 Vols.:* Kane, P. V., Poona, 1930–62.

*History of Alamkara Literature, 2nd Edn.:* Kane, P. V., Bombay, 1923.

*History of Sanskrit Poetics, 3rd Edn:* Kane P. V., Bombay, 1951.

*Sanskrit Drama:* Keith, A. B., Oxford, 1924.

*History of Sanskrit Literature:* Keith, A. B., Oxford, 1928.

*Corporate Life in Ancient India, 2nd Edn.:* Majumdar, R. C., Calcutta, 1922.

*A Study in the Economic Condition of Ancient India:* Nath, P., London, 1929.

*Historical and Literary Inscriptions:* Pandey, R. B., Varanasi, 1962.

*Prachina Bharata:* Pandey, R. B., Varanasi, 1961.

*The Maukharis:* Pires, E., Madras, 1934.

*Political History of Ancient India, 6th Edn.:* Ray Chaudhari, H. C., Calcutta, 1952.

*History of Indian Buddhism:* Rhys Davids, T. W., London, 1897.

*Intercourse between India and the Western World:* Rawlinson, H. G., Cambridge, 1916.

*Economic and Political Conditions in Ancient India:* Subba Rao, N. S., Mysore 1911.

# கலைச்சொற்கள்

## A

| | | |
|---|---|---|
| Abbot | — | மடத்தலைவர் |
| Abdication | — | முடி துறப்பு, அரசு துறத்தல் |
| Absolute Government | — | முழு வல்லாட்சி அரசு |
| Abwabs | — | வரிகள், தீர்வைகள் |
| Academy | — | கலைக்கழகம் |
| Accession | — | பதவியேற்றல் |
| Administration | — | ஆட்சி |
| Aggression | — | ஆக்கிரமிப்பு |
| Ambassador | — | தூதர் |
| Anarchy | — | அரசியல் குழப்பம் |
| Annals | — | ஆண்டு வகை வரலாறு |
| Approximate | — | ஏறத்தாழ |
| Archaeology | — | தொல்பொருளியல் |
| Architecture | — | கட்டடக்கலை |
| Artisan | — | கலைவல்லுநர் |
| Appeal | — | முறையீடு (மேல்) |
| Assembly | — | சபை |
| Assessment | — | மதிப்பீடு |

## B

| | | |
|---|---|---|
| Balcony | — | முற்றம் |
| Besiege | — | முற்றுகை |
| Board | — | வாரியம், கழகம் |
| Boundary | — | எல்லை |
| Boycott | — | புறக்கணிப்பு |
| Bribe | — | கையூட்டு, இலஞ்சம் |
| Buddha | — | புத்தர், ஞானம் பெற்றவர் |
| Bureaucracy | — | பணித்துறை ஆட்சி |

## C

| | | |
|---|---|---|
| Cadre | — | தரம் |
| Capital punishment | — | தூக்குத் தண்டனை |
| Caste | — | சாதி, வகுப்பு |
| Chronicle | — | செய்திக்கோவை, வரலாற்றுக் குறிப்பு |

Chronology — கால மரபு வரிசை
Civil — ஊரியல், நாட்டியல்
Clan — வகுப்பு
Code — சட்டத் தொகுதி
Committee — குழு
Confederation — கூட்டிணைவு
Contemporary — சம காலத்திய
Convention — மரபுகள்
Copper plate — செப்பேடு, செப்புப்பட்டயம்
Courtier — அரசவைப் பிரதிநிதி
*Coup de tat* — வன்முறை ஆட்சி மாற்றம்
Culture — பண்பாடு

**D**

Darbar — அரசவை கூடுமிடம்
Democracy — மக்களாட்சி
Descendant — வழித்தோன்றல்
Despotism — வல்லாட்சி
Dig vijaya — திக்கு விஜயம்
Diplomacy — இராஜ தந்திரம், அரசியல் வல்லமை
Dynasty — மரபு, வமிசம்

**E**

Elephantry — யானைப்படை
Empire — பேரரசு
Epic — காப்பியம்
Epigraphy — பட்டயம், கல்வெட்டு
Era — சகாப்தம், ஊழி, காலம்
Espionage — ஒற்று
Executive — செயல்துறை
Expansion — விரிவாக்கம்
Expedition — படையெடுப்புகள்
Extra-territorial — நாட்டு எல்லைக்கு அப்பாற்பட்ட

**F**

Factors — கூறுகள்
Firman — அரசாணை
Federation — கூட்டரசு
Feudatory — மானியக்காரர்

| | | |
|---|---|---|
| Finance | — | நிதி |
| Fresco | — | சுவர்ச் சித்திரம் |
| Forest Settlement | — | வனக் குடியிருப்பு |
| | **G** | |
| Genealogical Tables | — | வம்ச வழி அட்டவணைகள் |
| Genesis | — | தோற்றம் |
| Governor | — | ஆளுநர் |
| Grant | — | கொடை |
| Guardian | — | புரவலர், பாதுகாவலர் |
| | **H** | |
| Harem | — | அந்தப்புரம், பெண்டிர் இருப்பிடம் |
| Heritage | — | மரபுரிமை |
| Homage | — | அஞ்சலி, வணக்கம் |
| Hostage | — | பணயம் |
| Huns | — | ஹூணர்கள் |
| | **I** | |
| Iconoclast | — | சிலை உடைப்பாளன் |
| Immigration | — | குடியேற்றம் |
| Imperialism | — | ஏகாதிபத்தியம் |
| Infantry | — | காலாட்படை |
| Inquiry | — | ஆய்வு |
| Inscription | — | பட்டயம் |
| Inspect | — | ஆய்வு |
| Inspector | — | ஆய்வாளர் |
| Invasion | — | படையெடுப்பு |
| | **J** | |
| Journal | — | பருவ இதழ் |
| Judicial Service | — | நீதித்துறைப் பணி |
| Jurisdiction | — | அதிகார எல்லை |
| | **K** | |
| King | — | அரசன், மன்னன் |
| Kingdom | — | அரசு |
| Kingship | — | அரச பதவி |
| | **L** | |
| Land Lord | — | நிலக்கிழார் |
| Law of Primogeniture | — | மரபுவழிச் சட்டம் |

'Lee' — 'லி', சீனநீட்டலளவு
Lions Throne — சிம்மாசனம்

M

Maritime Supremacy — கடல் ஆதிக்கம்
Mask — முகமூடி
Mediaevel — இடைக்கால
Military — படை
Monarchy — முடியரசு
Mortgage — அடைமானம்
Measure — அளவு, நடவடிக்கை
Ministers — அமைச்சர்கள்
Monastry — மடம்

N

Nation — நாடு
Neutrality — நடுநிலை
Nilapita — நிலப்பெட்டி, அரசாங்கக் குறிப்புகள் வைக்கப்படும் பெட்டி

O

Oath — உறுதிமொழி
Octroi — சுங்கவரி
Organization — அமைப்பு, நிறுவனம்
Ostracism — சமூகத்திலிருந்து ஒதுக்கப்படல்

P

Pact — ஒப்பந்தம்
Patriarch — தந்தைவழிச் சார்ந்த
Penetration — ஊடுருவல்
Persecution — துன்புறுத்தல்
Physical Education — உடற்பயிற்சிக் கல்வி
Pilgrim — பயணி
Plough — உழவு, நில அளவு
Policy — நடை முறை
Polity — அரசியல்

Q

Quinquennial — ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை

R

Race — இனம்
Raja Sasana — அரச கட்டளை, ஆணை
Regime — ஆட்சி முறை
Reign — ஆட்சிக் காலம்
Royal land — அரசு நிலம்
Rural — நாட்டுப்புறம்

S

Servitude — அடிமைத்தனம்
Sources — சான்றுகள்
Sovereignty — இறைமை
Statesmen — அரசியல் வல்லுநர்கள்
Stupas — தூபிகள்
Subordinates — சார்புடையாளர்கள்
Suzerainty — மேலாண்மை

T

Technicality — தொழில் நுட்பம்
Tent — கூடாரம்
Toleration — சகிப்புத்தன்மை
Trade and Commerce — வர்த்தகமும் வாணிபமும்
Tragedy — துயர நிகழ்ச்சி
Trial by ordeal — சோதனை முறை
Travelling Palace — பயணக்கால அரண்மனை
Tribute — திறை

U

University — பல்கலைக் கழகம்
Urban — நகர்ப்புறம்

V

Vedic Age — வேதகாலம்
Vehicle — மார்க்கம்
Vihara — மடம்
Vocational education — தொழில்முறைக் கல்வி

Y

Year, regnal — ஆட்சி ஆண்டு
Yojana — இந்திய நீட்டலளவு
Yuvaraja — இளையராஜா

Z

Zone — மண்டலம்